பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம்



முனைவர் **க.த.திருநாவுக்கரசு**
M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை - 600 085.
செல் : 9444453737

பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம்

முனைவர் க.த.திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30 இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்
சென்னை - 600 085.
செல்பேசி : 94444 53737

நூற் குறிப்பு

பெயர்	:	**பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம்**
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
முதல்பதிப்பு	:	மார்ச்சு 1984
2ம் பதிப்பு	:	அக்டோபர், 2024
நூல் அளவு	:	டெம்மி 1/8
படிகள்	:	25 பிரதிகள்
எழுத்துரு	:	டாம்.இளங்கோ, எழுத்தளவு 10.5
பக்கங்கள்	:	xxiv + 300 = 324
தாள்	:	80 GSM Maplitho
ஒளிஅச்சு	:	ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை. 9842293915
வெளியீடு	:	மணியகம் 3/30, இரண்டாவது பிரதான சாலை கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம் சென்னை – 600 085. செல்: 94444 53737
அச்சாக்கம்	:	அரசு ஆர்ட்ஸ், 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு இராயப்பேட்டை, சென்னை – 600 014 044 28351101, 28588056 E-mail : arasuarts@gmail.com www.arasuarts.com
உரிமை	:	பதிப்பகத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978-93-48345-74-5

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்கு 1978–இல் அளிக்கப்பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவம்

முதற் பதிப்புக்கு வழங்கப்பட்ட அணிந்துரை

பேராசிரியர் க.அன்பழகன் M.A., M.L.A.

உலகம் பலவிதம். மனித வாழ்க்கை பலவகை; பல நிலை மனிதனின் எண்ணம், முயற்சி, சூழ்நிலை, சுற்றம் முதலியவைகட்கேற்ப அவனுடைய வாழ்வு பயனும் விளைவும் காண்கிறது.

சமுதாய நிலை, காலத்தாலும் இடத்தாலும் அதன் வரலாற்றுக்கேற்ப எழுச்சியும் வீழ்ச்சியும் அடைகின்றது.

மனித வாழ்வின் தொகு நிலையே சமுதாய வாழ்வு. தனிமனிதன் முயற்சி, குடும்பத்தார், சுற்றத்தார், இனத்தார், நாட்டார் ஆகியோரின் இயல்பு, உழைப்பு, ஒற்றுமை நோக்கம், பொதுவான குறிக்கோள் – இவைகட்கேற்பவே சமுதாய வாழ்வு மலரும்.

குறைபாடுடைய மனிதனையும் ஒரு சமுதாயம் தாங்கும்; திருந்தவும் வாய்ப்பளிக்கும். ஓர் உயர்ந்த குறிக்கோள் உடைய மனிதன் ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் துணையாவான்.

குற்றமும் குறையும் உடைய மனிதன், சட்டப்படி – அறமுறையால் தண்டனை பெறாவிடினும், நாளடைவில் துன்பச்சூழலில் சிறைப்படுவான். நல்ல எண்ணத்துடன் கடமையாற்றும் மனிதன் வறுமை முதலான துன்பத்தில் உழலினும், அதைத் தாங்கி நிற்கவும், கடக்கவும் மனவலிமை பெறுவான். நன்னடையில் தேர்ந்தவன் கொடுந் துன்பத்தைத் தேடிக் கொள்ளமாட்டான். மாறாக, ஏற்படும் விளைவுகள் எவையாயினும், அவை ‘இயற்கையின் நியதி’ என

அவன் எண்ணுவான். சாலையில் ஓடும் வாகனங்களால் உண்டாகும் விபத்துகளில் சிலர் இறப்பதும், சிலர் உயிர் தப்புவதும் போன்றதே மனித முயற்சிக்கு அற்பாற்பட்டதாய் அமையும் 'இயற்கையின் நியதி'யுமாகும்.

எனவே, மனித வாழ்க்கை, மனிதனின் பல்வேறு இயல்புகளையும், நோக்கங்களையும் பொறுத்துப் பல்வேறு வண்ணங்களையும் வடிவங்களையும் பெறுகிறது. அவற்றைக் கூர்ந்து நோக்கி, கண்டுணரும் திறனுடையார்க்கு அவை விரிந்த கடலென, வியப்புறும் சுவை நல்கும். அதனைப் பிறர் உணரவும் தெளியவும் வாய்ப்பாக, தாம் பெற்ற சுவையைப் பிறர் சுவைத்திடுமாறு அளிக்கும். அவர்தம் உணர்வின் முறுகிய வெளிப்பாடே இலக்கியம்.

இலக்கியம் – கவிதை, காப்பியம், கதை, காதை (புதினம்) கடிகதம், கூத்து (நாடகம்) எனப்பல்வேறு வடிவினைப் பெறும். அவை ஒவ்வொன்றின் வகைகளும் திறன்களும் பலவாகும்.

ஒரு சமுதாயம் வாழ்ந்த வாழ்வினைக் காணவும், மேற்கொண்ட இலட்சியத்தை அறியவும், பழகிவந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் தெளியவும் அவர்களிடையே நெடுங்காலமாக வளர்ந்துள்ள இலக்கியமும் – கலைகளுமே பெரிதும் துணையாவன.

தாம் உணர்ந்து சுவைத்த படைப்பிலக்கிய உணர்வைப் படிப்பவரும் பெறுமாறு வழங்கிட வல்லவரே, சிறந்த இலக்கியப் படைப்பாளர் ஆவார்.

காதை (புதினம்) படைப்போரின் உள்ளத்தில், அது கருக்கொண்டு வளர்ந்து, வடிவங்கொண்டு பிறப்பது ஆகலின், அதன் தாயாம் படைப்பாளரின் எண்ணமும், இயல்பும், பண்பாடும், குறிக்கோளும் தழுவிய உயிர் ஓட்டமும் குருதி ஓட்டமும் உடையதாகவே – அவரது சாயலுடனேயே அது தவழும். படப்பாளரின் அகத்தோற்றம் அவருடைய புறத்தோற்றத்தில் முழுவதும் புலப்படாமற் போனாலும் வியப்பில்லை. ஆனால், அவரது படைப்பினில் அது விளக்கம் பெறும்.

அதனாலேயே, அது படிப்பவரின் மனத்தைத் தொடும் சிறந்த விருந்துமாகிறது. படைப்புக் கலைஞரின் உள்ளத்துடன் உறவு கொள்ளும் நிறைவான வாய்ப்பு, சுவைஞருக்கு ஏற்படுகிறது.

அன்பும் பண்பும், நெறியும் நிறைவும் கொண்ட மாந்தரின் படைப்பினில், நடமாடும் மாந்தர்களுள் சிலர் குற்ற நடத்தையுடையவர்களாகக் காட்டப்படினும், 'கயமையின்' முழு வடிவம் பெறுதல் அரிதாகும். நடமாடும் ஓரிரு பண்பிலிகளும்

கொடுமையின் எல்லையை எட்டமாட்டார்கள். மேலும், அவர்கள் திருந்தும் வாய்ப்பும் காணப்படும்.

சான்றாண்மையின் முடிபுனைந்த இளங்கோ அடிகள் வழங்கிய ‘சிலம்பினில்’ காணப்படும் மாதவியும், பாண்டியன் நெடுஞ் செழியனும் – மாண்பினை இழவாதவர்கள் அன்றோ? ‘சிலம்பு’ திருடுவதற்கு முற்பட்ட ஒருவனது செயலின் விளைவாக, நடக்கக்கூடாத விபரீதங்கள் தொடர்ந்தன. எனினும் அதற்குரிய ‘சூழ்நிலை’ (ஊழ்) உருவான தன் விளைவு அன்றோ, அது. எனவே, வாழ்க்கையை விளங்க வைக்கும் நோக்கத்தில் பிறக்கும் பண்பாளரின் எழுத்துக்கள் – கெடுமதியையும் கொடுமையையும் முழு வடிவம் தந்து நிலைபெறச் செய்துவிட விரும்புவதில்லை என்று துணியலாம்.

பேராசிரியர், டாக்டர் மு.வரதராசன் அவர்கள் இளமை முதலே கல்வியில் கருத்தூன்றி, தமிழில் தோய்ந்து ஆங்கிலத்தில் தேர்ந்து, இலக்கியங்களில் திளைத்து, அறநெறி ஓர்ந்து, சிந்தனையில் சிறந்து, உலகினை (மனித வாழ்வை)த் தெளிந்து, சமுதாயத்தை வாழ்விக்கும் நோக்குடன் மனிதனின் உரிமையைப் போற்றிக் கடமையை உணர்த்தும் ஆர்வத்துடன் பயன்மிகுந்த புதினங் (காதை)கள் பலவற்றைப் படைத்துள்ளார்.

பண்பின் திருவுருவாய், அறிவுச் செம்மலாய், முற்போக்காளராய், இலக்கிய மேதையாய், தேர்ந்த திறனாய்வாளராய், புதினப் படைப்பாளராய் விளங்கிய மு.வ.அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தன்னிகரற்ற தொண்டாற்றிய பெருமைக்குரியர்.

மக்களிடையே தமிழ் ஆர்வம் தழைத்திட தமது பணியால், உரையால், உரைநடையால் வழிகண்டவர் அவர். அவருடைய படைப்பு இலக்கியங்கள் மூலம், இலக்கியம் பயிலும் ஆர்வம் ஓங்கியது; தமிழ்வழிச் சிந்தனை மேம்பட்டது; உரைநடை புதுப்பொலிவு பெற்றது; தமிழர்தம் அறிவு நிலையும் – முற்போக்கு உணர்வும் சிறந்தது. இதைக் குறித்து இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மக்கள் சிந்தனையில், ஒரு பெரும் மாற்றம் தோன்றுவதற்குத் தந்தை பெரியாரும், தமிழர் உணர்வில் மறுமலர்ச்சி விளைவதற்குப் பேரறிஞர் அண்ணாவும், கவிதை உலகில் புதுமை பிறப்பதற்குக் கவியரசர் பாரதியும் – புரட்சி உணர்வு பொங்கிடப் பாவேந்தர் பாரதிதாசனும் – தமிழ் நெஞ்சங்களில் பொதுமை நாட்டம் மலர்ந்திட தமிழ்ப்பெரியார் திரு.வி.க.அவர்களும் வித்திட்டது போன்றே, தமிழ் மொழியில் ஒரு புத்தார்வமும் தெளிவாகச் சிந்திக்கும் திறனில் ஒரு வளர்ச்சியும் ஏற்பட வழிகண்ட பெருமை மு.வ.அவர்களுக்கு உண்டு.

மு.வ.வின் சிந்தனையில் அரும்பி, முகிழ்த்து, மலர்ந்து மணம் பரப்பிய கொள்கைகள் பல. பழமையினும் புதுமையினும் தனிப்பற்று கொள்ளாது, நன்மையினையே நாடித் தேர்ந்தவர் அவர். பழம்பெருமை ஒன்றையே பேசுவதில் பயனில்லை; புதிய நிலைக்கு ஏற்ப வாழும் வல்லமை பெற வேண்டும் என்று விரும்பியவர் அவர்.

பழமையில் விளைந்த பண்பாட்டு விளைவாம் சால்பினைக் கண்ணெனப் போற்றி, புதுமையில் மலரவேண்டிய பகுத்தறிவு நெறியினை ஒளியென விரும்பி ஏற்றவர் அவர்.

தமிழ் இனம் எப்படிப்பட்ட சிந்தனையும் குறிக்கோளும், முயற்சியும் ஒற்றுமையும் கொள்ள வேண்டுமோ, அவற்றை உணர்த்துவதற்குரிய மாந்தர்களைக் கொண்ட களனும் காட்சியும், கருவும் கருத்தோட்டமும் கொண்ட காதை (புதினங்களைப் படைத்து, சமுதாயம் வாழ வழிகாட்டியவர் அவர்.)

மு.வ. இயற்றிய புதினங்கள் யாவும், படிப்பவரின் சிந்தனையைத் தூண்டி, கருத்துவிளக்கம் செய்து, வாழ்வைத் தெளிந்திடத் துணைபுரிகின்றன.

வெற்றுரை, வீணான வருணனை, வரம்பற்ற கற்பனை, குழப்பமான சிந்தனை, தெளிவற்ற நடை இவைகட்கு இடமற்றுப் படிப்பவரின் உள்ளத்தில் ‘உண்மைகள்’ ஊன்றிப் படியச் செய்யும் ‘திறமான – நயமான – நடை’ அவருடைய நடை.

மு.வ.வின் நடை ஒரு நீரோடை. அதன் பளிங்குநீர் போன்ற அவரது சொல் – தொடர் – நடை – அதன் ஆழத்தில் கிடக்கும் சிறுகற்களையும் மணிகளையும், புல்லையும் பூண்டையும் துளங்கக் காட்டும் வகையில் அமைந்தது. அதனைப் படிப்போர் – படிக்கும்போதே எவ்வித முயற்சியுமின்றி, அதில் ஆழ்ந்து காணலாகும் நுண்பொருளை எளிதில் கண்டுகொள்ளலாம்.

கதை, கட்டுரை, காதை, மொழிநூல், திறனாய்வு போன்ற எத்துறையாயினும், அவருடைய நடைத்திறத்தால் சொல்லாட்சியால், நுண்பொருள் பெறும் தெளிவும், நுண்மாண் நுழைபுலம் அடையும் விளக்கமும் பெரிது எனலாம்.

> **“இறவாத புகழுடைய புதுநூல்கள்**
> **தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்**
> **திறமான புலமையெனில் வெளிநாட்டார்**
> **அதை வணக்கம் செய்தல் வேண்டும்!”**

என்னும் பாரதியின் பேரவாவினைக் கடமையாகக் கொண்டு வெற்றி நடை போட்டவர் மு.வ.

"மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்"

என்னும் அவலக்குரலை மாற்றிட வேண்டி, அவர் அயராது பாடுபட்டார்.

"எளிய நடையில் தமிழ்நூல்
எழுதிடவும் வேண்டும்"
'செந்தமிழைச் செழுந்தமிழாய்ச்
செய்வதுவும் வேண்டும்!"
'தமிழொ ளியை மதங்களிலே
சாய்க்காமை வேண்டும்!"

என்னும் பாவேந்தரின் வேணவாவினை நிறைவேற்றிக் காட்டிய வித்தகர் மு.வ.!

பல்கலைக்கழகத்தின் படிக்கட்டில் ஏறிப்பட்டை தீட்டப்படாமலே, பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்ற வருமுன்னரே, (முயற்சியால்) தனித்துப் பயின்று, தலைசிறந்த புலவராகி (வித்துவான்)ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே திறமான புலமையால் பட்டங்கள் பெற்று, தகுதிமிக்க ஆராய்ச்சியால் பண்டாரகர் (PH.D) *பட்டமும் பெற்று, (சென்னை) பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி அறிஞராகவும் பேராசிரியராகவும் பல்வேறு பாராட்டுக்களையும் பெற்றவர் மு.வ.! (மதுரை) பல்கலைக்கழகத்தின் முடிமணியாகவும் (துணைவேந்தர்) ஒளிபரப்பியவர் மு.வ.என்பதை எண்ணுவோர் வியப்புறுவர்!*

தமிழரின் சிந்தனை ஆற்றலுக்குச் சான்றாக விளங்கும் பொதுமறை வழங்கிய திருவள்ளுவருக்கும், செந்தமிழின் மறுமலர்ச்சிக்கு வழிகண்ட தமிழ் முனிவர் திரு.வி.க.அவர்கட்கும் வழித்தோன்றலாக வாழ்ந்தும், தொண்டுணர்வுடன் செயற்பட்டும், இளைஞர் பல்லோர்க்கு வழிகாட்டியாய் வாழ்ந்தும் உயர்ந்த செம்மல் மு.வ.!

பெருந்தகை மு.வ.அவர்களின் பலதுறை எழுத்தும் – கருத்தும், தமிழ் அறிஞர்கள் இடையேயும் – பிற மக்கள் இடத்திலேயும் ஏற்படுத்தியுள்ள சிந்தனைத் தாக்கம் பேரளவினதாகும். நல்ல தமிழும் – உயர்ந்த குறிக்கோளும் மு.வ.அவர்களால் உறுதிப்பெற்றன என்பதை வரலாறு மெய்ப்பிக்கும். மு.வ.அவர்களை முதல்வராகக் கொண்டு, அவரது வழியில் புதினப் படைப்பாளர்களாக, மொழியியல் ஆராய்ச்சியாளர்களாக – இலக்கியத் திறனாய்வாளர்களாகத் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டு வெற்றி பெற்றவர்கள் பலர்.

அவர்களுள்ளும், பச்சையப்பன் கல்லூரியில் பயில்வதற்கு வந்த நாள் தொட்டு மு.வ.வின் அறிவுரைபெற்று, அவரிடம் அன்பும்

மதிப்பும் கொண்டு, பயின்றும் பழகியும், ஐயம் வினவியும், கலந்துரையாடியும், கருத்தினில் தெளிவு கொண்டு அவரது அடியொற்றி நடைபோட முற்பட்டு, தொடர்ந்து தமிழ்த்தொண்டாற்றி வருவதுடன், மு.வ.வழியில் வெற்றி பெற்றுள்ள தகுதிமிக்கதொரு திறனாய்வாளர் டாக்டர் க.த.திருநாவுக்கரசு எனலாம்.

மு.வ.வின் மாணவர் பலப்பலர். அவருள்ளும் பலர் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டு நற்பணியாற்றுகின்றனர்; சிலர் இலக்கியம் படைத்திடும் ஆற்றலாளர்! சிலர் சிறந்த ஆராய்ச்சியாளர்! அவருள்ளும் பண்டை இலக்கியம், இக்கால இலக்கியம், அறவியல், வரலாறு, உலகப் பேரிலக்கியம், திறனாய்வு, மொழிபெயர்ப்பு முதலான துறைகளில் ஈடுபட்டு, அயராது உழைத்துத் தமிழ் அன்னையின் புகழொளி சிறக்கத் தொண்டாற்றிவரும் பெருமைக்குரியவர் பேராசிரியர் க.த.தி.அவர்கள்!

பண்டாரகர் பட்டம் பெறுதற்கான தகுதியையும் ஆற்றலையும் முன்னரே அவர் பெற்றவர் என்பதை, மு.வ.அவர்களே அறிந்திருந்தார். எனினும், பல்கலைக்கழக விதி முறைகள் தடையாக அமைந்தமையின் காலந்தாழ்ந்தது. எனினும், பண்டாரகர் (PH.D.) பட்டம் பெறுவதற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருளே, இந்த நூலாக வடிவு பெற்றுள்ளது.

காலத்தாழ்ச்சி ஏற்பட நேரிடினும், அவரது உள்ளம் இறும்பூது கொள்ளுவதற்கு அது ஏதுவாக அமைந்தது. அவருடைய வழிகாட்டியின் படைப்பு இலக்கியத்தையே, ஆராய்ச்சிப் பொருளாகக் கொள்ளும் நல்வாய்ப்பினை இதனால் அவர் பெற்றார் எனலாம்.

‘பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம்’ என்னும் இந்த நூல் ஆசிரியரின் உள்ள ஈடுபாட்டுக்கும் நுண்ணறிவுக்கும், ஆராய்ச்சி நோக்கிற்கும், விரிந்த புலமைக்கும் தெளிந்த துணிவுகட்கும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. ‘ஆராய்ச்சியில் மேற்கொள்ளும் பொருள் ஒன்றையே கற்றுத் தேர்ந்து, ஆய்ந்து, முடிவு செய்யும்‘ முறையினில் நில்லாது, தொடர்புடைய பொருள்பற்றிய நூல்கள் பலவும் பயின்றும், பயன் கொண்டும், அவற்றைத் தகுந்த முறையில் எடுத்தாண்டும் நிறைவான ஆராய்ச்சியை நிகழ்த்தியுள்ளார் இந்நூல் ஆசிரியர்.

ஒப்புநோக்குதற்குரிய வேறு பல புகழ்மிக்க படைப்பு இலக்கியங்களையும் பயின்று, அவற்றுடன் மு.வ.வின் எழுத்தை ஒப்பு நோக்கும் முறையால் கண்டு, அதன் தனிச்சிறப்பையும் புலப்படுத்தியுள்ள திறம் பாராட்டுக்குரியது.

பரந்துபட்ட படைப்பிலக்கிய அடிப்படைகளையும், அமைப்புகளையும், திறன்களையும், நோக்கங்களையும் விளக்கமாகக் கூறி, அந்த உத்திகள் மு.வ.வின் புதினங்களிலும் கதைகளிலும், நாடகங்களிலும் இடம்பெறும் வகையை விரிவான முறையில், ஆழமான பார்வையுடன் இந்த ஆசிரியர் ஆராய்ந்துள்ளார்.

மேல்நாட்டு அறிஞர்களான பெர்னாட்ஷா, சாமர்செட்மாம் போன்றோரின் படைப்புக்களில் ஈடுபாடு கொண்டவர் மு.வ.என்பது தக்க சான்றுகளுடன் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்தம் படைப்புக்களுடன் வேண்டுமளவில் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் மு.வ.வின் போற்றுதலுக்குரிய உலக சிந்தனையாளர்கள், மெய்யறிவாளர்கள், வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்கள் உரிய இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆராய்ச்சியாளரின் இந்த நூலில் சான்றுகள் காட்டப்படாத செய்தி இல்லை; விளக்கப்பபாத படைப்பிலக்கிய நுணுக்கமும் – திறனாய்வும் இல்லை! வேண்டப்படாத புனைந்துரை இல்லை! ஒவ்வொரு பகுதியிலும் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் – சான்றுகள் நிறைவானவை.

மு.வ.வின் படைப்பிலக்கியங்களை ஆராயும் முயற்சியில் – படைப்பிலக்கிய அடிப்படைகளையும், அமைப்புகளையும், பாத்திரங்களையும் கலைத்திறனையும் விவரித்துள்ள முறை, திறனாய்வுக்கலையை விளக்குவதாக அமைந்துள்ளமை இதன் சிறப்பாகும். டாக்டர் மு.வ.வின் கலைத்திறனை, படைப்பாற்றலை விளக்குவதுடன், அவரது உளப்பாங்கை, உயர்நோக்கத்தை, சமுதாய வாழ்வையும் குடும்ப வாழ்வையும் திருத்தி அமைத்திடும் ஆர்வத்தை, அறத்தையும் நீதியையும் தெளிவுபடுத்தும் திறத்தை, சமவுடைமைப் பொருளியல் நெறியை உருவாக்கும் வேட்கையைத் தெளிவாக்குகிறது இந்நூல்.

“கலை – கலைக்காகவே அல்ல! கலை – மனித வாழ்க்கைக்காகவே!”

“புதினம் பொழுது போக்குவதற்குப் பயன்பட்டால் போதாது; சிந்தனையைத் தூண்ட வேண்டும்; வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும்!” “இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரு பொழுதுபோக்கு... கட்சிவெறி, சமயவெறி இருந்தாலும் மேலானதே; இல்லையானால் இளமை சும்மா இருக்க முடியாது.. வெளியுலகம் அவனைக் கவர வேண்டும்.”

இப்படிப்பட்ட நோக்கத்துடனேயே, புதினங்களை இயற்றினார் மு.வ.எனலாம்.

மெய்யுணர்வு குறித்து மு.வ.அவர்கள், ‘உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் ஒன்றாகக் கருதுவதே மெய்யுணர்வு, வெவ்வேறாகக் கருதிப் பிரித்துவிட முயல்வதே அறியாமை – அஞ் ஞானம். அதுவே துன்பத்திற்கெல்லாம் அடிப்படை” என்பதற்கான விளக்கம் செய்ததுடன், சமய உண்மைகள், சடங்குகளால் – புறச்செயல்களால் மறைந்து, பகைவளர்ந்து, கேடுவளர்வதையும் கண்டித்துள்ளார்.

மனிதவாழ்வு தெளிவு பெறுவதற்கு வேண்டும் கருத்துக்களை, உளங்கொள்ளுமாறு உரிய மாந்தர் மூலம் வழங்குவதுடன், ‘தமிழ் இனம்’ வாழும் வழியையும் மு.வ.புலப்படுத்துகிறார்.

“தமிழர்களுக்கு இனப்பற்றும் இல்லை! மொழிப்பற்றும் இல்லை! அதனால்தான், அவர்கள் இருக்க இருக்கக் கீழே போகிறார்கள்” என்பது மு.வ.அவர்களது உள்ளக்குமுறல்!

அவர் எழுதிய ‘இளங்கோ’ எனும் நாடகத்தில், பாண்டியன் அவையிலிருந்து இளங்கோவடிகள் வெளியேறுவதாக ஒரு காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அவையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர், இளங்கோவடிகள் விடுத்த வேண்டுகோளாக மு.வ.வரைந்துள்ள கருத்தினைக் காண்போம்.

> **“தமிழகத் தலைவரே! தமிழரே ஒன்றுபடுவீர்!**
> **தமிழ்வாழ, தமிழகம் விளங்க ஒன்று படுவீர்! யான்**
> **போகிறேன்; மறைகிறேன்; தமிழ் போகாதிருக்க!**
> **தமிழ் மறையாதிருக்க! தமிழரே வேண்டுவது ஒன்று**
> **தான்! அது தான் ஒற்றுமை! ஒற்றுமை!! ஒற்றுமை!!!”**

என்னும் அறிவுரை, இளங்கோவடிகள் வாயிலாகத் தமிழினத்திற்குத் தமிழ்ப் பேரறிஞர் மு.வரதராசனார் விடுத்துள்ள நற்செய்தியாகும்.

மு.வ.வின் மூச்சும் பேச்சும், எழுத்தும் செயலும் – இந்த நோக்கத்துடன் தான் அமைந்திருந்தன என்பதை நான் அறிவேன்.

ஒரு பண்பாடுமிக்க நிறைமனிதனாக – உண்மைத்தமிழனாக – தமிழ்த்தொண்டனாக வாழ்வாங்கு வாழ்ந்தவர் மு.வ.

பேராசிரியர் க.த.திருநாவுக்கரசு அவர்கள், தமது வழிகாட்டியான மு.வ.அவர்களிடம் கொண்டுள்ள பேரன்பினையும் பெருமதிப்பினையும் அவர் இயற்றியுள்ள ‘அறிஞர் அறவாழி’ எனும் நூல் விளக்கும். கருத்தாழமும், திட்ப நுட்பம் உடைய கட்டுரைகளும், வரலாற்று நூல்களும், ஆராய்ச்சி உரைகளும், நாடகங்களும் க.த.தி. அவர்களால் இயற்றப்பட்டுள்ளதை நாடு நன்கறியும். அவற்றுள்ளும் ‘திருக்குறள்: நீதி இலக்கியம்’ என்னும் நூல்

தனிச்சிறப்புடையது; சாகித்திய அக்காதெமி பரிசினையும் பெற்றது! ‘திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடகநலனும்’, ‘திருக்குறளும் இந்திய அறநூல்களும்’ ‘சான்றோர் கண்ட திருவள்ளுவர்’ என்னும் நூல்கள் அறிஞர்களின் பாராட்டினைப் பெற்றவை.

டாக்டர் மு.வ.அவர்களைப் போன்றே, தமிழ்மொழிக்கும் – கலைக்கும் – தமிழ் மக்களுக்கும், நாட்டுக்கும் வரலாற்று நோக்குடனும், நுண்மாண் நுழைபுலத் திறத்துடனும், முற்போக்குக் கொள்கையுடனும் போற்றத்தக்க நற்றொண்டினை ஆற்றி வருபவர் க.த.தி.அவர்கள்!

இந்தநூல், அவரது சீர்மிகு ஆராய்ச்சித் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மற்றும் ‘டாக்டர்’ பட்டம் பெறவும் நிலைக்களனாக அமைந்தது அறிந்து, அவரைப் பாராட்டுகிறேன்.

மு.வ.வின் வழி வளர்கிறது!
அவர்தம் தமிழ்ப்பணி தொடர்கிறது!
தமிழ்வளம் பெறுகிறது!
தமிழில் சிந்தனை ஊற்றமும் சிறக்கிறது!

என்பனவற்றைக் கண்டு மகிழ்கின்றேன்! இதன் ஆசிரியரின் முயற்சியும் தொண்டும், பெருகவும் வளரவும், பேரும் புகழும் ஓங்கவும் வாழ்த்துகின்றேன்!

க.அன்பழகன்

சென்னை.
தி.ஆ.2013
மார்கழி, 4
(19.12.1982)

முதற்பதிப்பின் முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அறிஞர்கள் பலராவர். அவர்கள் இடையே பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார், அறிஞராகவும், படைப்பு இலக்கியப் படைப்பாளியாகவும் விளங்கியவராவர். அவருடைய படைப்பு இலக்கியங்களே, இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்நூல், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பண்டாரகர் (Ph.D.) பட்ட ஆய்வேடாக 1978இல் அளிக்கப்பட்டு, அப்பட்டத்திற்குரியதாக அறிஞர்களால் பரிந்துரைக்கப்பட்டதாகும்.

சிறப்பாக டாக்டர் மு.வ.அவர்களின் படைப்பு இலக்கியங்களே, இந்நூலில் ஆராயப்பெற்றுள்ளன. எனினும், பொதுநிலையில் பேராசிரியருடைய நூல்கள் அனைத்தும், முதல் மூன்று இயல்களில், அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு திறனாய்வு செய்யப்பட்டுள்ளன. பேராசிரியருடைய படைப்பு இலக்கியங்கள், அடுத்துள்ள ஐந்து இயல்களுள் சிறப்புநிலை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பேராசிரியரின் ஆளுமையும், நடைநலமும், இருபதாம் நூற்றாண்டின் தமிழ்வளர்ச்சிக்கு அவர் வழங்கியுள்ள அருங்கொடையும் ஒன்பதாம், பத்தாம் இயல்களில் கோடி, காட்டப்பட்டுள்ளன.

டாக்டர் மு.வரதராசனாரின் மணிவிழாவை ஏப்ரல், 1972இல் கொண்டாடுவது என்று அவருடைய மாணவர்களாகிய நாங்கள் திட்டமிட்டோம். "பேராசிரியரின் வாழ்வும் தொண்டும்" பற்றிய ஒரு நூலை மணிவிழாவின் பொழுது வெளியிடவேண்டும் என்று தீர்மானித்தோம். அந்த நூலை எழுதும் பணியை நண்பர்கள் என்னிடம் ஒப்படைத்தனர்.

இந்த எண்ணம் ஈடேறா வண்ணம், எங்கள் பேராசிரியர் மு.வரதராசனார் 'விழாவினைக் கொண்டாட வேண்டா' என்று எங்களுக்குத் தடைவிதித்தார். மற்றும், "நீயுமா திருநாவுக்கரசு என்னைப் புரிந்து கொள்ளவில்லை? வாழ்வாவது? தொண்டாவது? பிறந்தது எதற்கு? கடமையைச் செய்வதற்காக? உன்னுடைய முயற்சியை விட்டுவிடு?" என்று என்னிடம் தெரிவித்தார். மணிவிழா நாள்நெருங்கிய சமயம், ஒருமாத காலம் அவர் அமெரிக்காவிற்குச் சென்று, தங்கிவிட்டார்!

அப்பொழுது, பேராசிரியருடைய நூல்களைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் படித்துக் கொண்டு இருந்தேன்! நூல்களாகத் தொகுத்த, இதுவரையில் வெளியிடப்பெறாது பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் மறைந்துகிடந்த அவருடைய கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் நாடகங்கள், ஆய்வுரைகள் போன்றவற்றைத் தேடித்தொகுக்கும் பணியில் அப்பொழுதே ஈடுபட்டேன்.

அச்சமயத்தில் பேராசிரியரின் படைப்புக்களில் இருந்து, பல புதிய உண்மைகள் புலனாயின. அவருடைய சிந்தனைகள், அவரைத் தனிமனிதராகக் காட்டவில்லை. தமிழும், தமிழினமும், தமிழ்நாடும் வாழ, வளர, முன்னேற்றம் காண அயராது உழைக்கும் கவர்ச்சிமிகு நிறுவனமாகவே அவர், எனக்குக் காட்சி தந்தார். இத்தகையோரை அரசியலில் 'தலைவர்கள்' எனப்போற்றுகிறோம்; சமுதாயத் துறையில் 'சீர்திருத்தச் செம்மல்கள்' எனப் பாராட்டுகிறோம். இலக்கிய உலகில், இத்தகையோர் அத்திபூத்தாற்போல, அருகியே தோன்றுகின்றனர். பேராசிரியர் மு.வரதராசனார், தமிழின் மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் தலைவராகத் தோன்றினார்; வழிகாட்டும் முன்னோடியாக விளங்குகினார்; முன்னறிதிறன் வாய்ந்த முனைவராக நெறிப்படுத்தினார்; பாவேந்தர் பாரதிதாசனுக்கு 'வழித்தோன்றல்கள்' பலர் தோன்றி, 'பாவேந்தரின் மரபு வழியை' இந்நாட்டில் உருவாக்கியுள்ளதை நாம் அறிவோம். இதைப்போன்று, நம் பேராசிரியரின் எண்ணப்போக்கை இனம்கண்டு கொண்டவர்கள், சிந்தனைத் திறத்தை ஏற்றுப் போற்றுபவர்கள், படைப்பு இலக்கியப் பாணியைப் பேரார்வத்தோடு பின்பற்றுபவர்கள் உலகம் முழுவதிலும் அறுகெனப்படர்ந்து, ஆலெனத் தழைத்து அரும்பணியாற்றி வருகின்றனர். இது பேராசிரியருக்குப் பெருஞ்சிறப்பைத் தருவதாகும்.

தான் வாழும் காலத்திற்கு அடிமையாகாதவனே அறிஞன்! தான் வாழும் சமுதாயத்தின் சீர்கேடுகளைக் கண்டு அறிந்து, அவற்றைப் போக்குவதற்கு வழிகாண – புதியதோர் சமுதாயத்தைப் படைக்க – முயலுபவனே பேரறிஞன் என்பர். அந்த அறிஞர்களைத் தோற்றுவிப்பதும், அவர்களுடைய சிந்தனையை உருவாக்குவதும் அவர்கள் தோன்றிய காலச்சூழல் என்பதை நாம் மறக்கலாகாது.

இந்த நோக்கில், இந்நூலின் முதல் மூன்று இயல்களான 'காலச்சூழலும் சிந்தனைப்போக்கும்', 'இலக்கியப்பணி' ஒரு பொதுப்பார்வை, படைப்பு இலக்கியம் என்பன எழுதப்பட்டுள்ளன. இவை படிப்பாளியான டாக்டர் மு.வ.படைப்பாளியாக, சிறப்புமிகு சிந்தனையாளராக, பாரதம் போற்றும் பேராசிரியராகப் பெருவாழ்வு பெற்றமைக்குரிய பின்புலத்தைப் புரிந்துகொள்ள உதவும். இந்த மூன்று இயல்களின் பெரும்பகுதி, முன்குறிப்பிடப்பட்ட பேராசிரியரின்

மணிவிழா வெளியீட்டிற்காக எழுதப்பெற்றவை. அவற்றில் சிற்சில மாற்றங்களும் திருத்தங்களும் செய்து, ஆய்வேட்டில் சேர்த்துள்ளேன்.

நான்காம், ஐந்தாம் இயல்கள், பேராசிரியரின் புதினங்கள், புனைகதைகள் ஆகியவற்றின் அமைப்பையும் அழகையும், நோக்கையும் போக்கையும் இன்று வளர்ந்துள்ள புதினத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் தெளிவுறுத்த முயலுகின்றன.

இவற்றிடையே, டாக்டர் மு.வ.அவர்களால் படைக்கப்பட்டுள்ள "அறவாழி எனும் கதை மாந்தர் யாராக இருத்தல் கூடும்?" என்பதைக் கண்டறியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பக்.96–102); மற்றும் "மெய்கண்டாராக', 'மண்குடிசையில்' உலாவரும் 'மெய்ப்பொருள் கண்ட வித்தகர் யார்?' எனும் ஐயத்தைப் போக்க இந்த ஆய்வாளர் முயன்றுள்ளார் (பக்.115–118) . "நம் பேராசிரியரால், 'நம் குருநாதர்' என்று வணக்கத்துடன் போற்றப்பட்ட மௌனசாமிகளா மெய்கண்டார்? அல்லது பேராசிரியரை யோக நெறியில் ஈடுபடுமாறு வற்புறுத்திய சாது பரஞ்சோதியா? அல்லது பேராசிரியரின் சிந்தனைக்குத் தம் எழுத்துரைகளின் மூலம் உரமூட்டிய தத்துவமேதை இராம தீர்த்தரா? அல்லது இம் மூவருடைய ஒட்டுமொத்த வடிவமாகப் படைக்கப்பட்ட பாத்திரம்தானா (பக்.118) மெய்கண்டார்?" என்பதை அறிவதற்குத் தக்க ஆதாரங்களைக் கொண்டு, ஒரு சிறு ஆய்வு நடத்தப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

சமுதாயச் சிந்தனையாளராகவும் விளங்கியவர் தமிழ்ப்பேரறிஞர் டாக்டர் மு.வரதராசனார் என்பதை யாவரும் அறிவர். "சமுதாயத்தின் நோய்களை, ஓடும் திரைப்படமாக்கிக் காட்டும் ஆசிரியர் 'நோய்நாடி, நோயின் முதலை நாடி', அது தணிக்கும் முறைகளைக் கண்டு அறிந்து, அதற்கேற்ற சமுதாய மருத்துவத்தைச் செய்யவேண்டும்' எனும் எண்ணப்போக்கோடு, பேராசிரியர் படைத்தது 'கி.பி.2000, எனும் நூலாகும்.

அந்நூலினை உலகச் சமுதாயச் சிந்தனையாளர் பலர் படைத்துள்ள "புதிய உலகம்" பற்றிய நூல்களோடு ஒப்பிட்டு, பேராசிரியரின் சிந்தனைப் போக்கில் காணப்படும் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தும் பணி, "புனைகதைகளின் நோக்கும் போக்கும்" எனும் இயலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றோடு, 'புனைகதைகள்' எவ்வாறு 'புதினங்களில்' இருந்து வேறுபடுகின்றன என்பது மு.வ.அவர்களின் புனைகளைகளைக் கொண்டு தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆறாம் இயலான "கலைத்திறன்" எனும் பகுதியில் பேராசிரியர் மு.வ.அவர்களின் புதினங்களில் பொதிந்துள்ள கலைத்திறன்கள், நடுவுநிலையில் நின்று ஆராயப்பட்டுள்ளன. வளர்ந்துவரும்

இலக்கியத்திறனாய்வுக் கலையின் ஒளியினைக் கொண்டு, பேராசிரியரின் சிறுகதைகளும் நாடகங்களும் ஏழாம், எட்டாம் இயல்களில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. ஒன்பதாம் இயலில், டாக்டர் மு.வ. அவர்களைப் பொன்றாப் புகழ்வாய்ந்த சிந்தனையாளராகக் காட்டும், அவருடைய "கட்டுரைகள்" புதிய முறையில் ஆராயப் பெற்றுள்ளன. மேலும் 'இலக்கியக் கலையில்' கட்டுரைகளுக்கு இன்று தரப்படும் இடம் கவர்ச்சியற்றதாக இருப்பதற்குரிய காரணங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

'இருபதாம் நூற்றாண்டின் தமிழ்வளர்ச்சிக்கு மு.வ.வின் கொடை' எனும் இயலில் அவருடைய நடை நலத்தின் மாட்சி முதலிடம் பெறுகிறது. 'செந்தமிழ் நடை' 'இன்தமிழ் நடை', 'பழகுதமிழ் நடை' எனும் அவருடைய மூவகை நடைகளின் இயல்புகள் இப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளன.

புதுமைத் தமிழ் இலக்கியத்திற்குப் பேராசிரியர் மு.வ. அவர்களின் கொடையாகப் புதினத்தில் இடம்பெறும் பல வகை நோக்கு நிலைகளையும், கடித இலக்கிய மரபினைத் தொடங்கி வைத்தமையையும், உண்மைகாண முயலும் தற்சார்பற்ற ஆராய்ச்சி நெறியையும், இன்தமிழ் எழில் நடையையும் குறிப்பிடலாம். நடுத்தரவகுப்பு மக்களின் குடும்பச் சிக்கல்களைச் சித்திரிக்கும் அவருடைய புதினங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இவற்றோடு இலக்கிய மறுமலர்ச்சிக்கும், சமுதாய விழிப்புணர்ச்சிக்கும், தலைமுறை இடையீட்டைக் குறைத்துப் புத்துலக மனப்பாங்கினைப் புரிந்து கொள்வதற்கும் அவர் ஆற்றியுள்ள படைப்பிலக்கியப் பணியையும் சேர்த்து மதிப்பிடவேண்டும். முதன்முதலாகப் பண்டிதர்கள் இடையே, 'புதினம்' எனும் புதிய இலக்கிய வகைக்கு, ஒருவகை மதிப்பைத் தேடித்தந்தவர் மு.வ.என்பதை நாம் மறக்க இயலாது.

பொதுவாக இந்த நூல் 'ஒப்பிலக்கிய ஆராய்ச்சிப்' போக்கில் அமைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் மு.வ.வின் படைப்பு இலக்கியங்கள், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த / வாழும் படைப்பாளிகளின் படைப்புகளோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. நம் புத்திலக்கியப் படைப்பாளர்கள் இடையே, பேராசிரியர் மு.வரதராசனாருக்குரிய இடம் யாது என்பதும் கோடி, காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய ஆராய்ச்சி நூலாக, திறனாய்வுப் பெட்டகமாகத் 'தமிழ்கூறும் நல்லுலகில்', "மு.வ.வின் படைப்பிலக்கியம்" ஒளிர வேண்டும் எனும் எண்ணத்தோடு, தங்கள் கைகளில் இதனைத் தவழ விடுகிறேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பேராசிரியரிடம் நெருங்கிப் பழகிய மாணவன் இந்த ஆய்வாளன். பேராசிரியருடைய அருமை பெருமைகளை, அறிவாற்றலை, ஆராய்ச்சித்திறனை, இனிய பண்புகளை, முன்னரே, 'அறிஞர் அறவாழி' எனும் நூல்வாயிலாக இந்நூலாசிரியன் வெளியிட்டுள்ளான். அந்நூல் 'மனப்பதிவு' முறையில் அமைந்தது. இந்நூல் தற்சார்பற்ற, ஆராய்ச்சிநோக்கில் படைக்கப்பட்டது. இவ்விரண்டையும் ஒருங்கே படிப்பவர்க்குப் பேராசிரியர் மு.வரதராசனாரின் 'வாழ்வும் தொண்டும்' எத்தகைய சிறப்பு வாய்ந்தவை என்பது எளிதில் புலனாகும்.

பேராசிரியர் மு.வரதராசனார் தமிழ்ப் புலவராகத் திருப்பத்தூரில் பணியாற்றிய காலத்தில் (17.7.1936) எழுதிய கடிதம் ஒன்றும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பணியேற்ற பிறகு (1.8.1940) எழுதிய கடிதம் ஒன்றும், பல்கலைக்கக்கழகப் பேராசிரியராகப் பணிபுரியத் தொடங்கிய சில ஆண்டுகளுக்குப் பின்னர் (31.1.1965) எழுதிய கடிதம் ஒன்றும் இந்நூலின் பிற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. இம்மூன்று கடிதங்களும், இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள 'டாக்டர் மு.வ.வின் கடிதம்' எனும் நூல்களில் சேர்க்கப்பெறாதவை.

பேராசிரியர் பிறந்து, வளர்ந்து, ஆசிரியப் பணியைத் தொடங்கிய வட ஆர்க்காடு மாவட்டத்திற்குக் கள ஆய்வுப் பணிக்காக இவ்வாய்வாளர் சென்றார்; அங்குப் பல பெரியவர்களைக் கண்டு பேசிய பொழுது, அவர்கள் மனமுவந்து கொடுத்து உதவிய கடிதங்களே, இம்மூன்றும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் நேர்முகக் கலந்துரையாடலுக்கு இசைந்து, பேராசிரியர் மு.வ.அவர்களைப் பற்றிப் பல அரிய கருத்துகளைத் தெரிவித்த பெரியோர்களுக்கு நன்றி.

இந்தச் சிறு ஆராய்ச்சி நூலுக்கு உவகையோடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே 'அணிந்துரை' அளித்துச் சிறப்பித்த என்னுடைய பேராசிரியர் திரு.க.அன்பழகன் M.A.M.L.A. அவர்கட்கு என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன். பேராசிரியருடைய அணிந்துரையால், இந்த நூலின் கருத்துக்கள் வலிவும் பொலிவும் பெற்றுள்ளதைப் படிப்பவர் நன்குணர்வர்.

எழுத்தாளர் மு.வரதராசனார், பேராசிரியர் வரதராசனார், சிந்தனைச் சிற்பியாக மலர்ச்சியுற்ற காலத்தில் அவருடைய நெருக்கமான அன்பராகப் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் க.அன்பழகன் பணிபுரிந்தவராவர்; மு.வ.அவர்களோடு நெருக்கமாகப் பழகியதனால், தம்முடைய எண்ணத்தில் எழுச்சியும், இதயத்தில் மலர்ச்சியும் பெற்றவர்களுள் இப்பேராசிரியர் முன்னணியில்

நிற்பவராவர். இத்தகைய சான்றோரின் மாணவனாகக் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றவர்களுள் இந்த ஆய்வாளனும் ஒருவனாவான். பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்புகளைப் பற்றிய ஆராய்ச்சி நூலுக்கு, நாடு போற்றும் நம் பேராசிரியரிடம் அணிந்துரையைப் பெற முடிந்ததையே ஒரு பேறாகக் கருதுகின்றேன்.

என் ஆய்வேட்டைச் செம்மையாக அமைப்பதற்கு என்னுடைய இனிய நண்பர்கள் பலர் உதவிபுரிந்தனர். அவர்களுள் மறைமலை அடிகள் நூலகத்தின் தலைவரான திரு.இரா.முத்துக்குமாரசாமி M.A.B.Lib. அவர்களை என்றும் மறக்க இயலாது. என்னுடைய கள ஆய்வுப்பணிக்கு உறுதுணையாக அமைந்த டாக்டர் ஆ.நாகலிங்கம் அவர்கட்கு நன்றி கூறச் சொற்கள் இல்லை.

அவ்வப்போது என் சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தியும், ஆய்வுரையைச் செம்மையாகப் படைக்க அயராது அறிவுரை கூறிய என்னுடைய தோழர்கள் டாக்டர் அ.அ.மணவாளன், டாக்டர் இ.சுந்தரமூர்த்தி, திரு. K.R.சச்சிதானந்தம் M .A.B.Com.என்பவராவர். அவர்களுடைய உதவிகளை மறவாமல் போற்றும் கடப்பாடுடையேன்.

ஆய்வேடு உருவாவதற்கு முன்பே, அதனை நூலாக வெளியிட விரும்புவதாகத் தம் ஆர்வத்தைப் புலப்படுத்தியவர் பாரிநிலைய உரிமையாளரான திரு. க.அ.செல்லப்பனார்; இப்பொழுது நல்லதொரு நூலாக அதனை, அவர் வெளியிட்டுள்ளார். அவருக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூல் அச்சான பொழுது, என்னுடன் அச்சுப்படிகளைத் திருத்தியுதவிய புலவர்மணி திரு. தா.மு.சுப்பிரமணியன் M .A. அவர்கட்கு நல்லதொரு வாழ்க்கை அமைய இறைவனை வேண்டி, வணங்குகிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த 'நாவல் ஆர்ட்' அச்சகத்தின் உரிமையாளர் கவிஞர் நாரா.நாச்சியப்பன் அவர்கட்கும் நன்றியுடையேன்.

சென்னை. **க.த.திருநாவுக்கரசு**

6, பங்குனி தி, ஆ 2015

19–3–1984

உள்ளுறை

1. **காலச் சூழலும் சிந்தனைப் போக்கும்** *1*

மேற்கு நாட்டு எண்ணங்களின் தாக்கம் – நால்வகை நிலை – மறுமலர்ச்சி இயக்கத்தின் உந்துதல் – விளைவும் பயனும்.

2. **இலக்கியப் பணி: ஒரு பொதுப்பார்வை** *25*

நிலமானியச் சமுதாய அமைப்பின் நிலை குலைவு – இருவேறு நிலைகள் – புதிய தமிழகத்திற்கு வரவேற்பு – மு.வ.கண்ட மூவகைச் சமுதாயம் – சமுதாயமும் புதுமைப் பாங்கும் – சமுதாய மாற்றத்தை உண்டாக்கும் சக்திகள் – அறிவுத்துறை மாற்றத்திற்கு மு.வ.ஆற்றிய பணி – சமுதாய மாற்றத்தின் அறிகுறிகள் – தலைமுறை இடைவெளி – புதியதாகத் தோன்றிய நடுத்தர வகுப்பினர் – புதினங்களின் நோக்கும் போக்கும் – தலைமுறை இடைவெளியைக் குறைக்கும் பணி – புதுமைப்போக்குகளை அறிமுகப்படுத்தும் பணி – பண்பாட்டின் சிறப்பை உணர்த்தும் பணி – சமுதாய மாற்றங்களின் காலக்கண்ணாடி – மரபுவழித் தமிழ்ப் பணி – உரைநடை வளர்ச்சிக்குப் பன்முகப்பணி – தொடாத துறை – உரைநடையை வளர்க்க சிறந்த கருவி.

3. **படைப்பு இலக்கியம்** *45*

உரைநடை இலக்கியம் – இருவகை இலக்கியம் – படைப்பு இலக்கியம் – புனை கதையும் புதினமும் – புதினத்தின் வகை – படைப்பாளர் மு.வ. – எழுத்தாளரின் சிறப்பு – மு.வ.வின் புதினங்கள்: பொது நோக்கு – யாருக்காக எழுதினார்? – எதற்காக எழுதினார்? – பொதுப்பண்புகள் – நடுத்தரவகுப்பினர் – சென்னை நகரம் – சமூகப் புதினங்கள் – கருத்து விளக்கப் புதினங்கள் – தொடர்கதையா? புதினமா?

4. **புதினங்களின் அமைப்பு** *63*

பொது இயல்புகள்: கட்டுக்கோப்பு – கதைப்பின்னல் – கதைக்கரு – பாத்திரப்படைப்பு – செந்தாமரை – கள்ளோ காவியமோ? – பாவை – அந்த நாள் – மலர்விழி – பெற்ற மனம் – அல்லி – கரித்துண்டு – கயமை – நெஞ்சில் ஒரு முள் – அகல் விளக்கு – வாடா மலர் – மண்குடிசை.

5. புனைகதைகளின் நோக்கும் போக்கும் 126

புனைகதைகள்: (1) கி.பி.2000 – புத்துலகச் சிந்தனை – கற்பனையுலகம் – இருவகைக் கற்பனையுலகக் கதைகள் – தமிழில் கற்பனை உலகச் சிந்தனை – கற்பனையுலகச் சிந்தனையின் வரலாறு மு.வ.கண்ட கற்பனை உலகம். (2) பழியும் பாவமும் – அமைப்புமுறை

6. கலைத்திறன் 139

கதைமாந்தர் படைப்பு – விரும்பிய கதை மாந்தர் – கதைமாந்தரின் பெயர்கள் – குறையும் நிறையும் – கதைப்பின்னல் – செறிவுப் பின்னல் – நெகிழ்ச்சிப் பின்னல் – மரபுவழிப்பின்னல் – புதுமைப்பின்னல் – முடிவிலாக் கதைப்பின்னல் – ஆர்வநிலை – கதைகூறும் முறை – பதிப்புமுறை நோக்கு நிலை – படர்க்கைக் கூற்று முறை – முதன்மைக் கதைமாந்தர் கதையைச் சொல்லுதல் – தன்மைக்கூற்று நோக்கு நிலை – பன்முக நோக்கு நிலை – துணைமாந்தர் நோக்கு நிலை – முன் நிழலாட்டமும் பின்வீச்சும் – அகத்துறு – தனிமொழி – வழித்தோன்றல்கள் – தொகுப்புரை.

7. சிறுகதைகள் 177

ஒரு வரையறை – விடுதலையா? – குறட்டை ஒலி – சிறுகதைகளின் கலை நலம்

கதையின் தொடக்கம்: அறிமுகத் தொடக்கம் – உரையாடல் தொடக்கம் – நினைவு ஓட்டமுறைத் தொடக்கம்.

கதையின் முடிவு: செயல்பற்றிய கூற்றுடன் முடிவு – கதைமாந்தரின் எண்ணவோட்டத்தோடு முடிவு – கூற்றுமுறை முடிவு – வருணனை முடிவு.

கதைத்தலைப்புகள்: கதை மாந்தரின் பெயரைத் தலைப்பாக அமைத்தல் – கதைமாந்தரின் பண்பை வெளிப்படுத்தும் தலைப்பு – கதையில் எழும் சிக்கலைத் தலைப்பாக அமைத்தல் – நிகழ்ச்சியைத் தலைப்பாக அமைத்தல் – சூழலமைவைத் தலைப்பாக அமைத்தல் – மறைமுகமாகக் கூறுதல் – முடிவுகளில் இருந்து தலைப்பு அமைத்தல்.

சிறுகதையின் கூறுகள்: கதைக்கரு – கதைப்பின்னல் – கதைமாந்தரின் படைப்பு – கதை மாந்தரின் வடிவ வருணனை – மு.வ.வின் படைப்புலகம் – நோக்கு நிலை – முழு உரையாடல் முறை – சூழலமைவு: இடச்சூழல் – காலச்சூழல் – குறியீடு – அவலவுணர்வும் எள்ளலும்

8. **நாடகங்கள்** *201*

நாடகக் கூறுகள் – வடிவம் – சுவைக்கூறு – தமிழ் நாடக மரபு – கதைப்பின்னலின் செறிவு – மேற்கு நாட்டு நாடக அமைப்பு – ஓரங்க நாடகம் – மு.வ.வின் நாடகங்கள் – நாடகங்களின் அமைப்பும் அழகும் – பொது இயல்புகள் – பச்சையப்பர் – மனச்சான்று – கிம்பளம் – ஏமாற்றம் – பொது நலம் – காதல் எங்கே? – மூன்று நாடகங்கள் – இளங்கோ – திலகவதியார் – வீண்கனவு – நாடகக் கலை நலம்

9. **கட்டுரைகள்** *222*

தமிழில் 'கட்டுரை' – கட்டுரையின் பண்புகள் – கட்டுரைவகை – கட்டுரையாளர் மு.வரதராசனார் – சிறப்புமிகு கட்டுரை நூல்கள்.

10. **மு.வ.வின் கொடை** *232*

மு.வ.வின் ஆளுமை – நடைநலம் – கொடை

ஆய்விற்கு உதவிய நூல்கள் *240*

பேராசிரியர் மு.வரதராசனார் வாழ்க்கைக் குறிப்பு *262*

பேராசிரியர் மு.வரதராசனாரின் நூல்கள் *265*

டாக்டர் மு.வரதராசனாரைப் பற்றிய நூல்கள் *270*

புதினங்களில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர் *272*

பொருட்குறிப்பு அகராதி *273*

நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு *283*

ஆசிரியரின் நூல்கள் *285*

ஆசிரியரின் கட்டுரைகள் *288*

குறுக்க விளக்கம்

எ–ன.	– என்பன
ஐங்குறு.	– ஐங்குறுநூறு
சங்க.இ.	– சங்க இலக்கியம்
சிலப்.அடி.	– சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை
திருக்.	– திருக்குறள்
திருத்.புரா.	– திருத்தொண்டர் புராணம்
திருமந்.	– திருமந்திரம்
தொல்.	– தொல்காப்பியம்
தொல்.பொருள்.இளம்.	– தொல்காப்பியம், பொருளதிகாரம் இளம்பூரணர் உரை
தொல்.பொருள்.பேரா.	– தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை
பக்.	– பக்கம்
புற.நா.	– புறநானூறு
மணி.	– மணிமேகலை
முன்–இ.	– முன் குறிப்பிடப்பட்ட இதழ்
முன்–நூ.	– முன் குறிப்பிடப்பட்ட நூல்
மு–ன.	– முதலியன



"அன்பே சிவம்"

வித்வான் சிவ...
...
திருப்பத்தூர்...
17.7.36

அன்புடையீர்! வணக்கம்

தங்கள் கடிதம் கிடைத்தது. உபந்நியாசம் நடக்கும் தேதி முதலிய விபரங்களை அறியவாவுகின்றேன். தங்கள் விருப்பம் போல் வந்து பணியாற்றுவேன். விஷயங்கள் மூன்றையும் இங்கு குறித்துள்ளேன் (1) புலால் மனித உணவா? (2) நாகரீகமும் அறநெறியும். (3) "தெய்வ அ...

திருநாதர் மௌனஸ்வாமிகள் அவர்களுக்கு ... பின், அவர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கத்தை உரித்தாக்குமாறு வேண்டுகின்றேன். இங்ஙனம்

நிகழ்ச்சி நிரலை எதிர்நோக்குகின்றேன்.

அன்பன், சிவ...

கடிதம் : 1



மு. வரதராசனார் ...
பச்சையப்பன் கல்லூரி,
சேத்துப்பட்டு சென்னை ...

அன்புமிக்க ஐய!

வணக்கம். நலம்.

தங்கள் கடிதம் திருப்பத்தூரிலிருந்து திருப்பப்பட்டு இங்கு இன்றுதான் வந்தது. சென்ற ஆண்டு முதல் யான் இந்தக் கல்லூரியில் வேலை செய்து வருகின்றேன்.

தங்களை யான் என்றும் மறவேன். ஆனால் பணியான வேலையால், தங்கள் விருப்பம் போல் அங்கு ஒன்றும் ஏற்க முடியவில்லை. நகர வாழ்வில் செல்வமும் அமைதியும் இழத்தல் இயற்கை தானே! ஆகையால், யான் வர முடியாமைக்கு மன்னிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன். இவ்வவர் உயர்திரு. திரு. வி.க. அவர்களுக்கும் என் நிலைமை தெரியும். பெரியார் மௌன சுவாமியார் அவர்களும், உயர்திரு. பூ. ஸ்ரீ. ... அவர்களும் என்னை மன்னிப்பார்கள் என நம்புகின்றேன்.

இங்ஙனம், அன்புள்ள, ...

கடிதம் : 2



மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செனாய் நகர்,
சென்னை - 30
31. 1. 65

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் கடிதம் பெற்றேன். [illegible]

18.2.65-ல் தங்கள் விருப்பப்படியே யான் வருவேன். 17.2.65 காலை [illegible] சென்னையில் வேலை உள்ளமையால், 18.2.65 காலையில்தான் [illegible] புறப்பட்டு வருவேன்.

அன்புள்ள,
[illegible]

கடிதம் : 3

இயல் - 1

காலச் சூழலும் சிந்தனைப் போக்கும்

இருபதாம் நூற்றாண்டு, மக்களின் வரலாற்றில் பெருஞ்சிறப்பு வாய்ந்த ஒரு காலகட்டமாகும். இந்நூற்றாண்டில், இதுவரையில் மனித இனம் எட்ட முடியாத அறிவின் கொடு முடியை அளந்து பார்க்கும் வாய்ப்பை, மனித சிந்தனை பெற்றுள்ளது; இதைப் போன்றே, இதுவரை கண்டிராத இருபெரும் போர்களால் உலகம் தாக்குண்டு, சிதைந்து, சீரழிவுற்றது; மனிதம் (Humanism) எனும் மென்மைமிகு மலர், ஆதிக்கவாதிகளின் கால்களில் மிதியுண்டு, நசுங்கி, நலங்கெட்டு, அழியத் தொடங்கியது.

இவ்வின்னல்களுக்கு இடையே, மனித குலத்தின் வாழ்விற்காக, வளர்ச்சிக்காக – முன்னேற்றத்திற்காகத் தமக்கு உண்டாகும் இன்னல்களையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாது மனித இனத்தை அழிவுப் பாதையிலிருந்து மீட்க முயன்ற சான்றோர்கள், சிந்தனையாளர்கள், அறிவியல் அறிஞர்கள் பலராவர். அவர்களுடைய அறிவுத்திறனும். செயலாற்றலும், மனித இனத்தின் எண்ணத்தில் புதியதோர் எழுச்சியை உண்டாக்கின; புதுவாழ்வை நாடிச் செயல்படத் தூண்டின. இதன் விளைவாக, வெள்ளையரின் ஆதிக்கத்திற்குட்பட்டு அடிமைத்தளையால் அல்லற்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பல விடுதலையை வேண்டி, வீறு கொண்டு எழுந்தன.

அவற்றிற்கு நம் பாரதம் வழிகாட்டியாய், முன்னோடியாய் விடுதலைப் போரில் முனைந்து நின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, நெடுநாளைய உறக்கத்திலிருந்து இந்திய மக்களை விழித்தெழுமாறு இராசாராம் மோகன்ராய் தட்டி எழுப்பினார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் வீரமுழக்கமே, அடிமை விலங்கை உடைத்தெறியத் தூண்டும் போர்முரசாக அமைந்தது. இந்திய மக்களுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளில், இந்த விழிப்புணர்ச்சி காட்டுத் தீப்போல் பரவியது. இதன் விளைவே, இந்திய மறுமலர்ச்சி இயக்கமாகும். அவ்வியக்கத்தின் ஓர் அலை – பேர்அலை – தமிழகத்தில் வேகமாக வீசத் தொடங்கியது. அவ்வலையால் தமிழர் வாழ்வில் புதிய எழுச்சி உண்டாயிற்று.

வாழ்ந்து கெட்ட இனம், வீழ்ந்து வருந்திய இனம், மறுமலர்ச்சி இயக்கத்தின் உந்துதலால் வீறு கொண்டு எழுந்தது; 'புதியதோர் உலகு செய்வோம்!' என்று வீரமுழக்கம் செய்தது. அவ்வீரமுழக்கம்

தாய்நாட்டுப் பற்றையும் தாய்மொழிப் பற்றையும் மக்கள் உள்ளத்தே கிளர்ந்து எழச் செய்தது.

மேற்கு நாட்டு எண்ணங்களின் தாக்கம்

இத்தகைய விழிப்புணர்ச்சிக்கும், புத்துயிர்ப்புக்கும் மூலகாரணமாக மேற்கு நாடுகளின் பண்பாட்டுத் தாக்கம் அமைந்தது. கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியர், வாணிகத்தின் பொருட்டு, இந்தியாவிற்கு வந்தனர். அடுத்து அவர்களுடைய கருத்துத் தங்கள் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதில் திரும்பியது. எண்ணற்ற கிறித்துவ சமயத் தொண்டர்கள், இந்நாட்டில் 'இயேசுவின் நற்செய்தியை'ப் பரப்பக்கூட்டம் கூட்டமாக வந்தனர்.

அவர்கள் மூலம், மேற்கு நாடுகளின் சிந்தனை, இந்திய மண்ணில் பரவிற்று. இதனை அடுத்து, ஐரோப்பியக் கல்விமுறை இங்குப் புகுத்தப்பட்டது. இவ்விரண்டும் இந்திய மக்களிடையே, ஒருவகை விழிப்புணர்ச்சியை உண்டாக்கின. இவற்றின் விளைவாக, சமய சீர்திருத்த இயக்கங்களான பிரம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண நற்பணி இயக்கம் போன்றவை வட இந்தியாவிலும், இராமலிங்க அடிகளின் 'சமரச சுத்த சன்மார்க்க இயக்கம்' தமிழகத்திலும் தோன்றின.

இவை யாவும், சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த தீய பழக்கவழக்கங்களாகிய சாதி வெறி, தீண்டாமை, பெண்ணடிமை, உடன்கட்டையேறுதல், குழவிப் பருவமணம், சமயவெறி, சடங்குநெறிக்கு முக்கியத்துவம் தருதல் போன்றவற்றைத் திருத்தவும், மாற்றவும், ஒழிக்கவும் முயன்றன. முற்போக்கு எண்ணம் கொண்ட இந்தியர்களின் ஆதரவோடு ஆங்கிலேய அரசு, சில சீர்திருத்தச் சட்டங்களை இயற்றியது; செயல்படுத்தியது; ஆங்கிலமொழிக் கல்விக்குத் தன் கல்விமுறையில் சிறப்பிடம் அளித்ததோடு சமஸ்கிருதம் அல்லாத வட்டாரமொழிகளின் வளர்ச்சிக்கும் ஊக்கம் அளித்தது.[1]

இவற்றிற்கு இடையே, இங்குச் சமயப் பணியாற்ற வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள், இந்தியாவின் இலக்கியச் செல்வத்தையும், கலைக் கருவூலத்தையும் கண்டு வியந்தனர்; அவற்றின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்தினர். இவற்றை அறிந்த இந்திய மக்கள், ஒருவகைப் புத்துணர்ச்சியையும் அகத்து எழுச்சியையும் பெற்றனர். இவ்வுந்துதல் சக்தியால், இந்தியாவில் 'மறுமலர்ச்சி' இயக்கம் அரும்பியது.

மறுமலர்ச்சி இயக்கம்

இந்திய மக்களுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் மறுமலர்ச்சி இயக்க அலைகள் மோதத் தொடங்கின. அவற்றுள், இலக்கியத் துறையில்தான், மறுமலர்ச்சி இயக்கத்தின் தாக்கம் முதலில் வெளிப்பட்டது. ஐரோப்பியரின் வருகையும், தமிழ்மொழி, இலக்கிய ஆராய்ச்சியில் அவர்கள் காட்டிய ஆர்வமும் தமிழ் இலக்கிய வரலாற்றின் மறுக்க இயலாத முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இந்தக்கால கட்டத்தைத் தமிழ் மறுமலர்ச்சியின் தொடக்க நிலை எனலாம்.[2]

இந்நிலையில், 'மறுமலர்ச்சி' என்பதைப் பற்றி அறிந்து கொள்ளுதல் நல்லது.

> குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஓர் இடத்தில், குறிப்பிட்ட ஒரு பெயரைச் சூட்டி ஒவ்வோர் இயக்கம் இப்போது தொடங்குவதை நாம் பார்க்கிறோம். இது போன்றதன்று மறுமலர்ச்சி. வெகுகாலமாக வெளியில் புலப்படாதேயிருந்து அமைதியாய்ப் பரவி, சமுதாயத்தை உள்ளூர இயக்கி வரும் பல சக்திகள், சிற்சில காரணங்களால் திடீரென்று வேகங்கொண்டு எழுந்து முழுவன்மையோடு சிலர் வாயிலாக வெளிப்பட்டு, சமுதாயம் முழுவதும் அதிர்ந்து எதிரொலிக்கச் செய்து, மேற்கதியில் விரைந்து பாயும் நிலைமையே மறுமலர்ச்சி[3]

என்னும் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கதாகும்.

தமிழகத்தில் இத்தகையதொரு சிந்தனைச்சூழல், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாயிற்று. இதற்கேற்பத் தமிழ் மக்களின் சிந்தனையில் மாற்றமும் வளர்ச்சியும் உண்டாயின. இதைத்தமிழ் இலக்கிய வரலாற்றின் போக்கில், 1879ஆம் ஆண்டு உண்டான திருப்பத்தால் அறியலாம். மாயூரம் வேதநாயகம் பிள்ளை, முதன்முதலாகத் தமிழ்மொழியில் 'பிரதாப முதலியார் சரித்திரம்' எனும் புதினத்தைப் (Novel) படைத்தார்.[4] தமிழ் இலக்கிய வளர்ச்சியின் போக்கில், மேற்கு நாட்டுக் கல்வி முறையின் பயனாக முதன்முதல் உண்டான மாபெரும் திருப்பத்தை, இப்புதினம் புலப்படுத்துகிறது.

"மனிதர்களைக் கொண்டு உண்டாவதே சமூகம். மனிதர்களிடத்து ஏற்படும் மாறுதல்கள் சமூகத்திலும், சமூகத்தில் ஏற்படும் மாறுதல்கள் மனிதர்களிடத்தும் பிரதிபலிப்பது இயற்கை. வரலாற்றில் சில மனிதர்கள் ஒரு நாட்டின் கொள்கை, போக்கு போன்றவற்றை மாற்றி அமைத்திருக்கின்றனர்.. இப்பெரியோர்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்தால், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை, அவர்களுடைய கொள்கைகளுக்குக் காரணமாகவும், அவர்கள் உச்ச நிலையை

அடைவதற்கு ஏதுவாகவும் எப்படி இருந்தது என்பது தெளிவுபடும்.5 என்னும் உளவியல் அறிஞரின் கூற்று, வேதநாயகரின் புதினப் படைப்பிற்குரிய காரணத்தைத் தெளிவுறுத்துகிறது.

நால்வகை நிலை

தமிழில் முதன்முதல் புதினம் படைக்கப்பட்ட கி.பி.1879ஆம் ஆண்டு முதல், கி.பி.2000 வரையில் உள்ள காலகட்டத்தைத் 'தமிழின் மறுமலர்ச்சிக் காலம்' எனலாம். இந்த ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில், தமிழின் 'மறுமலர்ச்சி'யில் நான்கு நிலைகளைக் காணுகின்றோம். அவற்றைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்:

(1) கி.பி.1879 முதல் 1921 (பாரதியாரின் மறைவு) வரையில் உள்ள காலகட்டம். இதனைத் தமிழ்மொழியினுடைய 'மறுமலர்ச்சியின் தொடக்ககாலம்' எனக் கூறலாம்.

(2) கி.பி.1922 முதல் 1947 வரையுள்ள ஆண்டுகளைக் கொண்டது. இரண்டாவது காலகட்டம். இக்காலத்தைத் தமிழ் 'மறுமலர்ச்சியின் வளர்ச்சிக்காலம்' எனலாம்.

(3) கி.பி.1947க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தை, 'மறுமலர்ச்சியின் எழுச்சிக் காலம்' எனப் போற்றலாம்.

(4) கி.பி.1966 முதல் இன்று வரையுள்ள காலகட்டத்தைச் சமவுடைமை மெய்ம்மையக் (Socialistic Realism) காலம் எனலாம். இதனை 'மறுமலர்ச்சியின் முதிர்ச்சிக் காலம்' எனக் கொள்ளுதல் பொருந்தும்.

மறுமலர்ச்சி இயக்கத்தின் உந்துதல்

இம்மறுமலர்ச்சி இயக்கம் டாக்டர் மு.வரதராசனாரின் சிந்தனைப்போக்கு உருவாக்கியுள்ள முறையை அறிந்தால், அவருடைய படைப்புகளின் நோக்கினையும் போக்கினையும் எளிதில் உணர இயலும்.

மறுமலர்ச்சி இயக்கத்தின் தொடக்க காலத்தில், பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை வாழ்ந்தார். தமிழ்மொழியின் சிறப்பினைப் புலப்படுத்தும் வகையில், 'மனோன்மணீய' நாடகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தினை அவர் அமைத்துள்ளார். முதன்முதலாகத் தமிழ்மொழியை அன்னையாக, தாயாக, வழிபாட்டிற்குரிய சக்தி வடிவமாக அவர் உருவகப்படுத்தியுள்ளார்.[6] இவ்வாறு, இந்தியத் தேசியத்திற்கு இடையே, தமிழ்த்தேசிய எழுச்சிக்கு அவர் வித்திட்டார்.

இராபர்ட் கால்டுவெலின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூல், அவருக்குப் புதியதோர் அகத்தெழுச்சியை அளித்தது.

அவ்வெழுச்சி, தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகளை உலகிற்கு உணர்த்துமாறு செய்தது.

டாக்டர் கால்டுவெல், திராவிட மொழிகளைப் பற்றி உலகிற்கு உணர்த்திய உண்மைகளும், அவற்றிற்கு இலக்கிய வடிவம் கொடுத்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் கருத்துகளும் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளாகத் தமிழருடைய தமிழ்ப் புலவர்களுடைய – உள்ளத்தில் புதியதொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கியுள்ளன; தமிழ்மொழியின் தனித்தன்மைகளை வியந்து போற்றுவதன் மூலம், ‘தமிழுணர்வை’ ஊட்டியும் வந்துள்ளன.

> இவ்வுணர்வை உரமூட்டி வளர்க்கும் வகையில், தமிழ்நாடு இன்று புதிதாக அன்று, நெடுங்காலமாக, தலைமையொளி வீசி வருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்... ‘எம்மதமும் சம்மதம்’ என்றார் ராமலிங்க ஸ்வாமி... அது பற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தே தொடங்கும் என்கிறோம்.[7]

என்று தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் அறிவித்துள்ளார்.

பாரதியாரைப் போன்றே, வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா முதலியோரும் தமிழ் இனவுணர்ச்சியை எருவாக்கி, நாட்டுப்பற்று எனும் நீரைப் பாய்ச்சி, தேசியப்பயிரை வளர்த்தனர்.

தமிழ்ப் பண்டிதர்களே! தமிழ் மகா ஜனங்களே ஜாக்கிரதை! ஜாக்கிரதை! உங்களுடைய பாஷையைக் காப்பாற்றுங்கள். ஒரு ஜன சமூகத்திற்கு உயிர் அதன் பாஷைதான். தமிழ்ப் பாஷையழிந்து விட்டால், தமிழர்களின் சிறப்பும் சீரும் அழிந்துவிடும். தமிழ்ப் பாஷையில் தேவையான பதங்கள் இல்லையென்று வாய்க் கூசாமல் கூறுகின்ற பாரத புத்ரர்களுக்கு அப்பதங்களை ஆராய்ந்து கண்டுபிடித்துக் கற்றுக் கொடுங்கள். சரியான பதங்கள் இல்லையேல், தமிழ்வாணியின் கிருபை கொண்டு இன்னும் அனேக காரணப் பெயர்களையாக்கிக் கொடுங்கள்.

> உங்கள் நா தமிழே பேசுக! நீங்கள் கையிலேந்தும் இறகு தமிழே எழுதுக! உங்களுடைய ஹிருதயம் தமிழையே நாடுக! உங்களையெல்லாம் தமிழ் மாது தயையுடன் ரட்சித்திடுக![8]

எனும் சுப்பிரமணிய சிவாவின் வேண்டுகோள், தேசியயுணர்வின் வழிப்பட்ட மொழிப்பற்றைக் காட்டுகிறது.

இந்த முதல் கால கட்டத்தில், தமிழின் மறுமலர்ச்சி, சமயவுணர்வுடன் கூடிய மொழிப்பற்றாக அரும்பியது. கி.பி.1912ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்தைந்தாம் (பரி தாபிஆண்டு, சித்திரைப் பதின்மூன்றாம்) நாள், பேராசிரியர் மு.வரதராசனார் அவர்கள் பிறந்தார். அவருடைய பிள்ளைப்பருவத்தில், இக்காலகட்டத்தின்

தாக்கம் மிகுதியாக இருந்தது. இதனைப் பிற்காலத்தில், அவர் படைத்த நூல்களால் அறிகிறோம்.

தேவாரம், திருவாசகம் முதலிய சைவ சமய அருளாளர்களின் திருமுறைப் பாடல்களிலும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலும் அவருடைய உள்ளம் தோய்ந்து இருந்தமை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.[9] மற்றும், தாயுமானவரின் திருப்பாடல்களிலும், அவர் உணர்த்தும் சமரச மெய்யறிவுக் கோட்பாட்டிலும் பேரீடுபாடு பேராசிரியருக்கு இருந்ததை அவருடைய நூல்கள் அறிவிக்கின்றன.[10] தம்முடைய வாழ்க்கைக்குத் தாயுமானவரை வழிகாட்டியாகக் கொண்டு வாழ்ந்ததைத் தம்முடைய ‘அந்த நாள்’ எனும் புதினத்தில், ‘ஆறுமுகம்’ எனும் பாத்திரத்தின் வாயிலாகப் பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

> நான் கற்ற தாயுமானவர் பாட்டு, மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்லி, ‘நல்ல பொற்பொழிவாளன்’ என்று பெயர் எடுப்பதற்காக அல்ல தாயுமானவர் பாட்டிலுள்ள ஒவ்வொரு கருத்தையும் நம்புகிறவன் நான்...[11]

எனும் வாசகம், தாயுமானவரிடம் அவர் கொண்டிருந்த பற்றுறுதியைக் காட்டுகிறது.

கி.பி.1912 அளவில், கங்கையாற்றின் வெள்ளத்தில் கணிதப் பேராசிரியரும் மெய்யுணர்வாளருமான இராமதீர்த்தர் அடித்துச் செல்லப்பட்டார். அவருடைய அறவுரைகளைத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க, பேராசிரியர் மு.வ.அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அனைவரும் அறிவர்.[12] தம்முடைய நூல் ஒன்றில், ‘இராம தீர்த்தர் யார்?’ எனும் வினானவினை எழுப்பி, ‘அவர் ஓர் அறிஞர்; மெய்யுணர்வு பெற்றவர்; சமய உண்மைகளை விஞ்ஞான முறையில் உணர்ந்து விளக்கியுள்ளவர்”[13] என்று பேராசிரியர் விடையும் தந்துள்ளமை இங்கு நினைவு கூர்தற்கு உரியதாகும்.

இவற்றைப் போன்றே இராமகிருஷ்ண பரமஹம்சரின்[14] அறவுரைகளிலும், விவேகானந்தரின் போதனைகளிலும் டாக்டர் மு.வரதராசனார் பெரிதும் ஈடுபாடுடையவராக விளங்கினார். விவேகாநந்தரின் சீர்திருத்த நோக்கும், செயல்திறனும், மனிதநல நாட்டமும் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தன.[15]

மற்றும், இராமலிங்க அடிகளின் வாழ்வும் தொண்டும் பேராசிரியரின் சிந்தனைக்குச் சிறந்த விருந்தாக அமைந்தன. வள்ளலாரின் ‘திருவருட்பா’வினை ஓதியோதி, உள்ளங்குழைந்து உருகியவர் பேராசிரியர் மு.வ.அவர்கள். ‘அந்த நாள்’ எனும் தம்

புதினத்தில், "இராமலிங்க வள்ளலாரின் உண்மையான பெருமையைத் தெரிந்து கொண்டால் நலமாக இருக்குமே என்று வருந்தினேன்.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
... .

என்ற திருவருட்பா நினைவுக்கு வந்தது. அருட்பெருந் தலைவர் இராமலிங்க வள்ளலாரின் அன்புருவை நினைந்து உருகினேன்" என்று 'பொன்முடி' எனும் பெண் பாத்திரம் கருதுவதாகக் குறிப்பிடும் பகுதி, பேராசிரியருடைய மன வருத்தத்தையே புலப்படுத்துகிறது.[16] மேலும், பல்வேறு புதினங்களிலும், சிந்தனைக் கட்டுரைகளிலும் அடிகளாரின் 'உயிரிரக்க' நெறியின் சீரையும் சிறப்பையும் அவர் வியந்து போற்றியுள்ளார்.[17] இவை யாவும், அவருடைய உள்ளத்தில் சமய உண்மைகள் ஆழ வேரூன்றி இருந்தமைக்குரிய சான்றுகளாகும்.

இவற்றிற்கு மேலாக, நேரடியாக ஒரு துறவியின் சீடராகவும் பேராசிரியர் விளங்கினார். வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பல ஊர்களில், சமயத் தொண்டோடு சமுதாயப் பணியும் புரிந்து வந்த ஒரு துறவி இருந்தார். அந்த வட்டாரத்து மக்கள் அவரை, 'மௌன சுவாமிகள்' என்று போற்றினர். அவரிடம் மு.வ.அவர்களுக்குப் பேரீடுபாடு உண்டு. அச்சான்றோரைப் பேராசிரியர் அவர்கள், 17.7.1936ல் எழுதிய கடிதம் ஒன்றில், 'குருநாதர்' என்று குறிப்பிட்டுள்ளார்.[18] அப்பெரியார் 1965ஆம் ஆண்டு சனவரி மாதம், இரண்டாம் நாள் இறைவன் திருவடி நிழலை அடைந்தார். அப்பொழுது மு.வ.வெளிநாட்டில் இருந்தார். பின்னர் அடிகள் மறைவின்பொழுது தாம் தாயகத்தில் இல்லாமல் போனமைக்கு வருத்தம் தெரிவிக்கும் வகையில், மௌன சுவாமிகளின் தலைமைச் சீடரான கம்மவார் புதூர் சாது நாகரத்தினம் அம்மையாருக்கு, அவர் கடிதம் எழுதியுள்ளார். இவற்றிலிருந்து டாக்டர் மு.வரதராசனாருக்கு அந்தப் பெரியாரிடம் எத்தகைய ஈடுபாடு இருந்தது என்பதை அறிகிறோம்.

மேலும், பிலவங்க ஆண்டு, சித்திரை முதல் நாள் (14.4.1967) தினமணியின் சிறப்பு மலரில், அப்பெரியாரின் வாழ்வையும் தொண்டையும் விளக்கும் வகையில் 'ஒரு பெரிய வாழ்க்கை' எனும் கட்டுரையை மு.வ. அவர்கள் எழுதியுள்ளமையும் இங்குக் கருதத்தக்கது. அக்கட்டுரையில்,

> சாமி! நீங்கள் யோகம், தவம் எல்லாம் பழகி உயர்ந்து இருக்கிறீர்கள். என்னென்னவோ அறவுரையெல்லாம் சொல்லி இருக்கிறீர்கள். யோகம், தவம் பற்றி ஒரு நாளும் (என்னிடம்)

சொன்னதில்லையே: யான் வேறு யாரிடம் போய்ப் பெற்றுக் கொள்ளுவது? நீங்கள் தான் எனக்கு வழிகாட்ட வேண்டும்.[19]

என்று பேராசிரியர், தமக்கு யோகம், தவம் முதலியவற்றைப் பயிலுவதற்குரிய நெறிமுறைகளை வகுத்தளிக்குமாறு அப்பெரியாரிடம் வேண்டியதாகக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு, அச்சான்றோர், டாக்டர் மு.வ.அவர்களின் கையைப்பற்றி, அவர் உள்ளங்கையில்,

கடமையைச் செய்து கொண்டிரு! நல்வழியில் நட! இப்பொழுது போலவே எப்பொழுதும் நெறியாக வாழ்க்கையை நடத்து! அதுவே யோகம்; தவம்! வேறு ஒன்றும் வேண்டாம்[20]

என்று எழுதி, நல்லுரை வழங்கியதாகப் பேராசிரியர் தெரிவித்துள்ளார். இக்குறிப்பும், பேராசிரியர் மு.வ.அவர்களுக்குச் சமய நெறியில் இருந்த ஈடுபாட்டையும், அது எவ்வாறு கருமயோகியாக வாழுமாறு அவரைத் தூண்டியது என்பதையும் அறிய உதவுகின்றது.

கி.பி.1922க்கும் 1947க்கும் இடைப்பட்ட இரண்டாவது காலகட்டத்தின் மு.வரதராசனார் எனும் மனிதர் எண்ணத் தெரிந்து, அறிவை வளர்த்து, கருத்து வகையால் முன்னேற்றம் கண்டார்; அவர் அறிவு நலங்கனிந்த பேராசிரியர் எனும் புகழைப் பெற்றார்; சிந்தனையாளர் எனும் சிறப்பைப் பெற்றார்; படைப்பு இலக்கிய ஆசிரியராக உலகிற்கு அறிமுகமானார்! அவருடைய இனிய பண்புகள் விளக்கம் பெற்றன. அவருடைய ஆளுமை மலர்ச்சியுற்றது.

இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அவர் பெற்ற நூலறிவும், உலகியல் அறிவும் பேரளவினதாகும். பட்டம் பதவிகள் பல அவரைத் தேடிவந்தன. இக்காலகட்டத்தில் அவருடைய எண்ணப் போக்கினைச் செப்பம் செய்து, வளர்த்தவர்கள் பலர். நாடு எங்கும் தேசிய எழுச்சி பெருஞ்சூறாவளியாய் வீசிக்கொண்டிருந்த காலம் அது! விடுதலைப் போர் முரசு, வீட்டுக்கொரு வீரரை நாட்டின் விடுதலைப் போரில் கலந்து கொள்ள அழைத்த காலம் அது!

அக்காலத்தின் தொடக்கத்தில், முதன்முதல் அவருக்கு உடல்நலம் குன்றியது. மற்றும் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கமும் தொடங்கியது. ‘ஆப்க்கபாரி’ (மது உரிமம் வழங்கும்) எழுத்தர் பணியைத் துறந்து, பேராசிரியர் சொந்த ஊரில் ஓய்வாக இருந்தார். அக்காலத்தில் பல அரிய நூல்களைக் கற்பதைத் தவிர, அவர் வேறொன்றும் அறியார்.[21]

அச்சமயத்தில்தான் (1931ஆம் ஆண்டு தைப்பூசத்து அன்று), வள்ளிமலையில் நடைபெற்ற திருவிழாவில் தமிழ்முனிவர் திரு.வி.கலியாணசுந்தரனாரையும், அறவோர் மௌன சுவாமிகளையும் மு.வரதராசனார் முதன்முதலில் சந்தித்தார்.[22] அவருடைய கூர்த்த

அறிவினையும் இனிய இயல்புகளையும் கண்டு, திரு.வி.க.பெரிதும் வியந்தார்.

> கூட்டங்களில் யான் மு.வரதராஜனாரைப் பார்ப்பேன். அவர் என்னைக் கண்டதும் ஒதுங்கி, ஒதுங்கி நிற்பார். பின்னர் நாங்கள் நெருங்கிப் பழகினோம். வரதராஜர் முக அமைப்பு, என் மூளைக்கு வேலை அளித்தது. அதைச் சிந்திக்கச் சிந்திக்க என் மூளை அவர் மூளையை நண்ணியது. நுண்ணறிவுக்கேற்ற முகம் வடிந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தேன்.[23]

என்று பிற்காலத்தில் திரு.வி.க. மொழிந்துள்ளமை இங்கு நினைவு கூர்தற்குரியதாகும். இந்த முதல் சந்திப்பின் பொழுது, 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்', 'என் கடன் பணி செய்து கிடப்பதே', 'முருகன் அல்லது அழகு', 'பெண்ணின் பெருமை' எனும் திரு.வி.க. அவர்களின் நூல்களைத் தாம் படித்திருப்பதாக அவர் தெரிவித்தார். அவற்றில், தம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த பகுதிகள் சிலவற்றை மு.வ., திரு.வி.க.விடம் எடுத்துரைத்தார். இதைக்கேட்ட திரு.வி.க., "இளம் பருவத்தை வீணாக்கவேண்டாம்! தமிழ் நூல்களைப் பயில்க! வித்துவான் தேர்வினை எழுதுக! தமிழைப் படித்தால் நோய் நீங்கும்! உடல் நலமுற்று உரம் பெறும்!" என்று அவருக்கு அறிவுரை கூறியதை, அப்பொழுது உடனிருந்த சாது நாகரத்தினம் அம்மையார் இப்பொழுது தெரிவிக்கிறார்.[24] இதனால், பிற்காலத்தில், தமிழ்ப் புலமையில் சிறந்த பெரும்பேராசிரியராக விளங்கப்போகும் மு.வரதராசனாரைத், தமிழ்க் கல்வியைப் பயிலுமாறு தூண்டியவர் திரு.வி.க. என்பதை அறிகின்றோம்.

திரு.வி.க. அவர்களைத் தம் குருவாகவும் வழிகாட்டியாகவும், தலைவராகவும் மு.வரதராசனார் பிற்காலத்தில் போற்றி வழிபட்டதற்குரிய காரணங்கள் பலவற்றுள், தமிழைப் பயிலுமாறு அவரை ஆற்றுப்படுத்தியவை முதன்மையான காரணமாக இருத்தல் கூடும்.

> இந்நூற்றாண்டு கண்ட சான்றோர்களில் திரு.வி.க. ஒருவர். செல்வாக்குக் குறைந்த தமிழகத்தில் பிறந்து, தமிழரிடையே தமிழ் வாயிலாகத் தொண்டு செய்தமையால் அவர் புகழ் வெளியே பரவவில்லை. ஆயினும், அவர் தொண்டுகளை அறிந்தவர்க்கும் அவர் வாழ்வோடு நெருங்கியவர்களும் அவருடைய பேச்சுக்களைக் கேட்டவர்களும் அவர்தம் சான்றாண்மையை மறுத்தல் இயலாது.[25]

எனும் கருத்துரை, மு.வ.அவர்களை எத்துணை அளவிற்குத் திரு.வி.க.அவர்கள் கவர்ந்திருந்தார் என்பதை அறிவதற்குப் போதிய சான்றாகும்.

திரு.வி.க. அவர்களுடைய நூல்களாலும், தேசியவாதியும் விடுதலைப்போர் வீரரும் பன்முறை சிறை சென்றவருமான தம் தமக்கையின் கணவர் மூலமாகவும் அண்ணல் காந்தியடிகளின் அருமை பெருமைகளை மு.வ.நன்குணர்ந்தார். திரு.வி.க.அவர்களுடைய 'நவசக்தி' எனும் இதழும் பிற நூல்களும் காந்தியடிகளிடம் அவருக்குப் பேரீடுபாட்டை உண்டாக்கின.

காந்தியடிகளைப் பற்றி எண்ணியபொழுது எல்லாம் மு.வ.அவர்களுக்கு, அடிகள் ஓர் அறவோராகவே தோன்றினார்! அரசியல் தலைவராக அவரை எந்நாளும் மு.வ.அவர்கள் கருதியது இல்லை. இதனால்தான்,

> அறவோர் – அறத்தையே கடவுளாட்சி எனப் போற்றும் சான்றோர் – அறத்தின் பெருமை விளங்கக்கூடிய வகையில் தொண்டு செய்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள். புத்தரும், திருவள்ளுவரும், ஏசுவும், நபியும், திருநாவுக்கரசரும், காந்தியடிகளும் போன்ற அறவிளக்குகள் உலகத்தில் ஓயாமல் ஒளி பரப்பிக் கொண்டே இருக்கும்.[26]

என்று மு.வ., "அறவிளக்காக" அடிகளைப் போற்றுகின்றார்.

காந்தி அடிகளின் எளிய வாழ்க்கை, தூய வாழ்க்கை, தொண்டு வாழ்க்கை, அன்பு வாழ்க்கை மு.வ.அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. கதர் ஆடை[27] உடுத்துவது முதற்கொண்டு, இயற்கை மருத்துவமுறைகளைப் பின்பற்றுதல் வரை, பல துறைகளில் காந்தியடிகளின் சீடராகவே மு.வ.அவர்கள் விளங்கினார். அடிகள் மறைந்தபொழுது, அவருடைய வாழ்வையும் தொண்டையும் உலகிற்கு உணர்த்தும் வகையில் 'காந்தி அண்ணல்' எனும் நூலைப் பேராசிரியர் எழுதியுள்ளார்.

இக்காலத்தில் திருவள்ளுவருடைய திருக்குறளை ஆழக் கற்றதோடு அமையாது, குறள் நெறியை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் மு.வ. முயன்றார். திருக்குறளின் கருத்துகளை – திருவள்ளுவர் உலகிற்கு வழங்கும் நற்செய்தியை – உலகெங்கும் பரப்பவேண்டும் என்னும் பேரார்வத்தோடு அவர் பணிபுரிந்தார். திருக்குறளின் பொருளினை யாவரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில், 'தெளிவுரை' ஒன்றைத் திருக்குறளுக்கு அவர் எழுதலானார்.

மற்றும் இன்றைய வாழ்க்கைக்குத் திருவள்ளுவரின் கருத்துகள் எவ்வாறு பயன்படத்தக்கனவாக உள்ளன என்பதை, இன்றைய வாழ்க்கையோடு பொருத்திக் காட்டி விளக்கும் வகையில், 'திருவள்ளவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' எனும் நூலினை அவர் இயற்றியுள்ளார். வாழ்க்கை விளக்கமாகவே திருவள்ளுவர் விளங்குகிறார் என்பது அவருடைய முடிவு. இந்நூலின் தலைப்பு,

பெரிதும் திரு.வி.க. அவர்கள், தம் நூலிற்குத் தலைப்பு தந்துள்ள முறையினைப் பின்பற்றி அமைந்துள்ளதைக் காணலாம்.[28] மேலும், இந்நூலிற்குத் திரு.வி.க. அவர்களிடமே, அரியதோர் அணிந்துரையை அவர் பெற்றுள்ளார். தம் புதினம் மூன்றில் திரு.வி.க.வை ஒரு பாத்திரமாகவே சொற்பொழிவு ஆற்றுமாறு மு.வ.செய்துள்ளார்.[29] இவை யாவும் மு.வ.வின் சிந்தனை வளர்ச்சியில், திரு.வி.க.அவர்களின் தாக்கம் எவ்வளவு ஆழப் பதிந்துள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றன.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய இந்திய அறிஞர்களிடையே – சிறப்பாக மொழி இலக்கிய அறிஞர்களிடையே கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் செல்வாக்கினை அளவிட்டு உரைக்க இயலாது. தமிழ்நாட்டு அறிஞர்கள், எழுத்தாளர்கள் பலர், அவருடைய படைப்பு இலக்கியங்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ளனர். மற்றும், மேற்கு நாடுகளின் பண்பாட்டையும் கீழை நாடுகளின் பண்பாட்டையும் இணைக்கும் பாலமாக அவர் விளங்கியமை உலக அறிஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது; நம்நாட்டு மக்களின் சிந்தனையைத் தூண்டியது.

பேராசிரியர் மு.வரதராசனார் அவர்களும் தம் இளமைப்பருவத்தில் தாகூரின் கவிதைகளையும், புதினங்களையும், நாடகங்களையும் ஆர்வத்தோடு படித்துள்ளார். தாகூரின் கலையுணர்வையும், இயற்கையழகு ஈடுபாட்டையும், கல்விக் கொள்கையையும் அடிக்கடி வகுப்பு அறைகளில் பேராசிரியர் எடுத்தியம்பியுள்ளார். தம் நூல்களிலும் அவற்றைப் பரவலாக அவர் போற்றிக் குறித்தும் உள்ளார்.[30] இவை யாவற்றையும்விட, தாகூரின் வாழ்வையும் தொண்டையும் விளக்கும் வகையில், ‘கவிஞர் தாகூர்’ எனும் நூல் ஒன்றையும் அவர் எழுதியுள்ளார். அந்நூலில்,

> தாகூரின் வாழ்க்கையை உயர்த்திய பண்புகள் பல; ஆயினும் அவருடைய தனிப்பெரும் பண்பு என்று கூறத்தக்கது எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தும் பரந்த மனப்பான்மையே ஆகும்... அவருடைய அன்பின் மிகுதியால் அவர் எவரையும் வெறுக்கவோ பகைக்கவோ முடியவில்லை.[31]

என்று தாகூரின் ‘ஒப்பற்ற பண்பாக’ அன்புடைமையைப் பேராசிரியர் சுட்டுகிறார். தாகூரின் இவ்வரிய பண்பில் ஊறித்திளைத்த மு.வ.அவர்களும், இவ்விழுமிய பண்பின் நிலைக்களனாக விளங்கினார். தாகூரின் இயற்கையழகில் ஈடுபடும் பண்பும் பேராசிரியரிடத்தில் மிகுதியாக இருந்தது. இவ்வகையில், தாகூரின் தாக்கம் மு.வ.விடம் வெளிப்படையாகவே காணப்படுகிறது. தாகூரின் கீதாஞ்சலியில் பேரீடுபாடு கொண்டவர். மு.வ.இதனை எண்பிக்க அவருடைய ‘கரித்துண்டு’ எனும் புதினமே போதுமானது.[32]

வெளிநாட்டு அறிஞர்களுள் – சிறப்பாக ஐரோப்பிய நாட்டு அறிஞர்களுள் டாக்டர் மு.வரதரசனாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர் அறிஞர் பெர்னார்ட்ஷா ஆவார். அவரோடு நேரடியாகக் கடிதத் தொடர்பும் பேராசிரியர் கொண்டிருந்தார்.[33] *தம்முடைய நூலின் முன்னுரையில்,*

> *அறிஞர் பெர்னார்ட்ஷாவை நான் மதிப்பதற்குக் காரணம் வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் அதை மேற்போக்காகக் கண்டு மருந்திட்டுச் செல்லாமல், அடிப்படைக் காரணம் கண்டு திருத்தும் ஆற்றல் அவருடைய எழுத்துகளில் இருத்தலே ஆகும்.*[34]

என்று மு.வ.அவர்கள், தாம் ஷாவினிடம் கொண்ட ஈடுபாட்டிற்குரிய காரணத்தைத் தெளிவுறுத்தியுள்ளார். மற்றும் அவருடைய அரிய கருத்துக்களைத் தம்முடைய நூல்களில் எடுத்து விளக்கியுள்ளார்.[35]

அறிஞர் ஷாவை நேரில் கண்டு, கலந்துரையாடவும் பேராசிரியர் விரும்பினார். இதைத் தம் கதைப் பாத்திரம் ஒன்றின் வாயிலாகவும் வெளிப்படுத்தியுள்ளார். 'கள்ளோ காவியமோ?' எனும் புதினத்தின் தலைவியான 'மங்கை'.

> *லண்டன் நகரத்தில் நான், அவரை (தன் கணவன் பேராசிரியர் அருளப்பரை)க் கண்டிருந்தால் நம்பியிருப்பேன். பெர்னார்ட்ஷாவைக் காண்பதற்காக லண்டனுக்குப்போய் வர முடியுமானால் போய் வருவேன் என்று என்னிடமே சொல்லியிருக்கின்றார். அதனால், அந்த நகரத்தில் கண்டிருந்தால், சொன்னபடி வெறி பிடித்து வந்துவிட்டார் என்று நம்பியிருப்பேன்.*[36]

என்று நினைக்கிறாள். இங்குக் குறிப்பிட்டுள்ள 'வெறி' 1947அளவில் பேராசிரியரிடம் குடி கொண்டிருந்த உணர்வாகும். அக்காலத்தில் திரு.வி.க., பேராசிரியர் மு.வரதராசனாரைத் 'தமிழ்ப் பெர்னார்ட்ஷா' வென்று பாராட்டும் அளவிற்கு, மு.வ.அவர்களுடைய உள்ளம் ஷாவினுடைய சிந்தனையில் தோய்ந்து இருந்தது.[37]

1947–ஆம் ஆண்டு, முதன்முதலாகக் 'கள்ளோ காவியமோ' எனும் புதினம் வெளியிடப்பட்டது. அதில், "ஆனால், இதுவரையில் அரசியல், சமுதாயம், கல்வி, தொழில், பாட்டு, இசை, நாடகம் முதலான பலவற்றைப் பற்றி (ஷா) சொன்னவற்றை எல்லாம் பாராட்டி வந்தேன். காதலைப்பற்றி மட்டும் பெர்னார்ட்ஷா அறிவில்லாதவர் என்று எண்ணி வந்தேன். ஆனால் இப்போது காதலைப்பற்றி அவர் கூறியதும் உண்மைதான் என்று தோன்றுகிறது" என்று பேராசிரியர் அருளப்பர் உண்மையை உணர்ந்ததாக மு.வ.அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலாக, ஷாவின் காதல் பற்றிய கருத்தினை ஆங்கிலத்திலேயே மு.வரதராசனார் அவ்விடத்தில் தந்துள்ளார்.

> காதலும் ஒருவகையான சுவைநுகர் உணர்ச்சியே. மற்றச் சுவைநுகர் உணர்ச்சிகளைப் போன்று மனநிறைவு உண்டான அக்கணத்திலேயே, காதலும் அழிந்துபோகிறது. எனவே, அதன் செல்வாக்கிற்குட்பட்ட எந்தத் தொழிலும், உறுதிமொழியும், திட்டங்களும் யாரையும் கட்டுப்படுத்துவது இல்லை.[38]

எனும் ஷாவின் கருத்து பாராட்டப்படுகிறது.

டாக்டர் மு.வரதராசனாரின் புதினங்களில், பிச்சைக்காரர்களுக்குச் சிறுசிறு உதவியாகக் காசு கொடுத்து, அவர்களைச் சோம்பேறிகளாக்குவதை விட, அவர்களுக்கு உதவி செய்யாமல், உழைத்து வாழத் தூண்ட வேண்டும்; ஏழ்மையில் வாழ விட்டுள்ள சமுதாயத்தை எதிர்த்துப் புரட்சி செய்யுமாறு தூண்ட வேண்டும் எனும் கருத்துக்கள் இழையோடிச் செல்லுகின்றன.[39] இக்கருத்துக்களைப் பெர்னார்ட்ஷாவே, முதன்முதலாக உலகிற்கு அறிவித்துள்ளதைப் பேராசிரியர் மு.வரதராசனார், தம் கதைப் பாத்திரங்களின் உரையாடல் மூலம் உணர்த்தியுள்ளார்.

> ஓ! ஓ! நீ கொடுக்கும் காசு அவர்களைக் காப்பாற்ற முடியுமோ? ஊரே தீப்பற்றி எரியும்போது உன்னைப்போல் நாலைந்து பேர் சிறுசிறு குவளைகளில் தண்ணீர் கொண்டு போய் வேகிற மூங்கில்களை நனைப்பதால் பயன் என்ன? அதைவிட ஊர் நன்றாக எரிந்து சாம்பலாகட்டும். குடிசையும் அரண்மனையும் ஒன்றாகச் சேர்ந்து பொசுங்கட்டும். அந்தச் சாம்பலின் அடிப்படையின் மேல் புது வீடுகளை ஒரே ஒழுங்காகக் கட்டுவோம் என்று இருப்பவனே அறிவாளி.[40]

என்று 'சீராளர்' எனும் கதைமாந்தர் (பேராசிரியர்) கதை ஆசிரியரான மு.வ.வின் கருத்தையே எடுத்துரைப்பதாகத் தோன்றுகிறது.

அதைக்கேட்ட அவருடைய மனைவி 'தேமொழி', "இந்தக் கதையை நெடுங்காலமாகச் சொல்லி வருகிறீர்கள். ஏழையின் துன்பத்தை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?"[41] என்று வினவுகிறாள்.

உடனே அவளுடைய கணவர் கொதித்து எழுகிறார்.

> இப்படித்தான், இரண்டொரு ஏழைக்கு ஒரு சில காசுகளைக் கொடுத்துவிட்டு, நாடு நலம் பெற்றுவிட்டதாக எண்ணி என்னை நானே ஏமாற்றிக் கொள்ள வேண்டும். அல்லது நாளை வரும் மாறுதலை வரவேற்று, அதுவரையில் நடப்பது நடக்கட்டும் என்று பொறுத்திருக்க வேண்டும். அந்த மாறுதல்

> விரைவில் வருவதற்கு வழி தெரியுமா? பெர்னார்ட்ஷாவைப் போல், ஏழைகளுக்கு உதவி செய்யாமல், அவர்களைப் பொல்லாதவர்களாக்கித் தூண்டி விடுவதுதான்.[42]

என்று பெர்னார்ட்ஷா கடைப்பிடிக்கும் கொள்கையைச் சுட்டி, அதுவே சிறந்த வழியெனச் சீராளர் போற்றுகிறார். இங்கே, கதையாசிரியருடைய உள்ளக்குமுறலின் எதிரொலி கேட்கிறது.

இவை யாவும், தமிழ்ப்பேராசிரியர் மு.வரதராசனாரின் சிந்தனைப் போக்கை உருவாக்கியவர்களுள் அறிஞர் ஷாவும் ஒருவர் என்பதைப் புலப்படுத்துகின்றன.

புதினப் படைப்பாளர்களில் மு.வ.அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள் சிலர். அவர்கள் சார்லஸ் டிக்கன்ஸ், ஜார்ஜ் எலியட், தாமஸ் ஹார்டி, சாமர்செட் மாம், ஹெமிங்வே, ஆல்டவுஸ் ஹக்ஸ்லி, எச்.ஜி.வெல்ஸ் போன்றோர்களாவர்.[45] சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டி வாசகர்கள் அவற்றை உணரும் வண்ணம் செய்து, அவற்றைப் போக்குவதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ளுமாறு தூண்டும் வகையில், கதை எழுதிய எழுத்தாளர்களே பேராசிரியரின் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள் என்பதை அவருடைய பேட்டிகளில் இருந்து நாம் அறிய முடிகிறது.

மராத்தியப் புதினப் படைப்பாளரான வி.ஸ.காண்டேசர் டாக்டர் மு.வ.அவர்களுடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவராவர். 1973ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், முதல்வாரத்தில், காண்டேகர் வாழ்ந்த கோலாப்பூருக்குப் பல்கலைக்கழகப் பணியாகப் பேராசிரியர் சென்றிருந்தார். தம்முடைய உள்ளத்தைக் கவர்ந்த முதுபெரும் புதினப் படைப்பாளரான காண்டேகர் வீட்டிற்குச் சென்று, அவரைக்கண்டு பேராசிரியர் அளவளாவினார். அப்பொழுது, “கடவுளை மக்களிடத்தில் காண்பதுதான் என் மதம். மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் என் வழிபாடு. அதனால்தான் இன்றும் எழுத வேண்டும் என்று முயல்கிறேன்”[44] என்று காண்டேகர் கூறியதைத் தமிழகம் திரும்பியதும், இளைஞர் பலரிடமும் எழுத்தாளர் பலரிடமும் பேராசிரியர் தெரிவித்தார். பிறகு, ‘காண்டேகரைக் கண்டேன்’ எனும் கட்டுரையைக் கலைமகளில் அவர் வெளியிட்டார். நெடுங்காலமாகப் பேராசிரியர் மு.வ.அவர்கள், காண்டேகரிடம் கொண்டிருந்த மதிப்பையும் ஈடுபாட்டையும் இக்கட்டுரையால் அறிகிறோம்.

மூன்றாவது காலகட்டத்தில் (1947–1965), பேராசிரியர் மு.வ.அவர்கள் கனிந்த அனுபவமும், முதிர்ந்த அறிவும் வாய்க்கப் பெற்றவராக விளங்கினார். மு.வ.சமுதாயச் சிந்தனையில் மூழ்கித் திளைத்த காலம் இது! அவரே ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளதைப்

போன்று, இக்காலகட்டத்தின் இடைப்பகுதியில், அவருடைய நூல்களில், "சமூக, பொருளாதாரப் போராட்டங்களே முக்கியமாக இடம்பெற்றுள்ளன"[45] ஒருபுறம் தமிழ் வழிப்பட்ட பண்பாட்டைப் போற்றி வளர்ப்பதில் மு.வ.அவர்கள் கருத்தைச் செலுத்தினார். மற்றொரு புறம் "தமிழன் வாழ்ந்தால் தான் தமிழ் வாழும்! தமிழ்நாடு முன்னேற்றம் அடையும்" எனும் எண்ணத்தோடு, சமுதாயச் சீர்கேடுகளும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் அற்ற, புதியதொரு சமுதாயத்தை – உலகைப் படைப்பதற்குரிய வழிவகைகளை அவர் நாடினார். காந்தியமும் மார்க்சியமும் இணைந்த ஓர் இயக்கமே எதிர்கால உலகை, அன்பும் அமைதியும், வளமும், நலமும் வாய்ந்ததாகச் செய்யும் என்னும் எண்ணம், அவருடைய 'புத்துலகக்' கோட்பாட்டின் அடிப்படையாக அமைந்தது.[46]

இக்கருத்து பெர்னார்ட்ஷாவின் சோசலிசக் (Pabian Socialism) கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்த டாக்டர் மு.வரதராசனார் அவர்கட்குத் தமிழ்ப் பெரியார் திரு.வி.கலியாணசுந்தரனாரின் தொடர்பினால் தோன்றியிருத்தல் கூடும். 1948ஆம் ஆண்டு, பேராசிரியரின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' எனும் நூல் வெளிவந்தது. அந்நூலிற்குத் திரு.வி.க.அவர்கள் ஆராய்ச்சி நலங்கனிந்த ஓர் அணிந்துரையை அருளியுள்ளார். அவ்வுரையில்,

திருக்குறளின் உள்ளக் கிடக்கையைப் பலபடக்கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று. அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது...

> இவ்வாறு திருவள்ளுவர் கருத்துப் பெருகிப்பெருகி, இந்நாளில் விஞ்ஞானத்தில் விராவி மார்க்ஸியமாகவும் தெய்விகத்தில் கலந்து காந்தியமாகவும் பரவியுள்ளது. விஞ்ஞான மார்க்ஸியமும், தெய்விகக் காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக்கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நம்நாடு முற்பட்டால் உலகம் நலம்பெறும்.[47]

என்று திரு.வி.க.குறிப்பிட்டுள்ளார். இதனுடைய தாக்கத்தைப் பேராசிரியரின் சிந்தனையில் காணமுடிகிறது. இவ்வெண்ணம் உரம்பெற்று, ஆற்றல் மிக்க கருத்தாக வெளிப்படுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்ததுவும் திரு.வி.க.வின் நூலாகவே இருத்தல் வேண்டும். 1951இல் 'பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்' எனும் நூலினைத் திரு.வி.க.வெளியிட்டுள்ளார். அதில்,

> மார்க்ஸியத்தில் உயிர்நாடி பொருள், காந்தியத்தில் உயிர்நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று வருங்காலப் புது உலகத்தை நல்வழியில் அமைக்க வல்லதென்பது எனது கருத்து. அக்கருத்தை உரைநடையில் விரிந்த ஒரு நூலாக்க யான் எண்ணியதுண்டு.

அவ்வெண்ணம் ஈடேறவில்லை.. ஆகவே, இந்நூலைச் சுருங்கிய முறையில் அகவற்பாவால் இயற்றலானேன்.[48]

என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய எண்ணம் மு.வ.அவர்களின் உள்ளத்தில் நீறுபூத்த நெருப்பாக நெடுங்காலம் இருந்திருக்க வேண்டும். இக்கருத்தின் செல்வாக்கு அவருடைய புத்துலகச் சிந்தனையைப் புலப்படுத்தும். 'கி.பி.2000' எனும் புதினத்தில் வெளிப்படையாகத் தோன்றுகிறது.

மற்றும், 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்னும் நிலைமை போக வேண்டும். பொருள் பற்றிய பூசல் உலக அமைப்பில் இருக்கக்கூடாது. 'பொருளில்லார் இவ்வுலகில் இல்லை' என்று மாறிய நிலைமை வந்துவிட வேண்டும்" எனும் கருத்தினை, 1948ஆம் ஆண்டு அளவிலேயே பேராசிரியர் மு.வ.அவர்கள் கொண்டிருந்தமையும் புலனாகிறது.[49]

இவ்வகையில் டாக்டர் மு.வரதராசனார் தீவிரமாக புரட்சிக் கருத்துடைய தமிழகச் சிந்தனையாளர்களுக்கு முன்னோடியாக விளங்குகிறார். தமிழ்நாட்டு எழுத்தாளர்களில் கட்சி சார்பற்ற பெரும்பாலோர் சமவுடைமை, பொதுவுடைமைக் கருத்துக்களைத் தழுவி எழுதத் தொடங்கியது 1965ஆம் ஆண்டிற்குப் பிறகேயாகும். இதனால், 1965ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தைத் தமிழகத்தில் மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில் சமவுடைமை மெய்ம்மையம் (Socialist Realism) தனியாட்சி செய்து வரும் காலம் எனப் போற்றுகிறோம். மு.வ. இவ்வெழுத்தாளர்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக விளங்குகிறார்.

படிப்பாளியான மு.வரதராசனார் படைப்பாளியாக மலர்ந்த பொழுது, தம் நூல்களில் சில நெறிமுறைகளைப் பின்பற்றினார். தமிழரிடையே காணப்படும் வேற்றுமையைப் பெரிதுபடுத்தாமல், ஒற்றுமைகளைக் கண்டு அறிந்து, அவற்றைப் போற்றி வளர்க்க முன் வந்த தமிழ்ப் பேராசிரியர் மு.வ.எந்த அரசியல் கட்சியையும் சாராமல், 'தமிழ் தமிழினம், தமிழ்நாடு' ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும் தமிழன் 'சிறப்புமிகு உலகக் குடிமகன்' ஆவதற்கும் வழிகாட்டிய தமிழறிஞர் மு.வ.

மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில், பல துறைகளில் பேராசிரியர் மு.வ.அவர்கள் முன்னோடியாக விளங்குகிறார். புலவர் ஒருவர் – கல்லூரியில் காலடி எடுத்து வைக்காத ஒருவர் – தமிழை மட்டுமே சிறப்பாகப் பயின்ற ஒருவர் – பிற அறிவுத்துறைகளில் பட்டம் பெறாத ஒருவர் – பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும், துணை வேந்தராகவும் இவருக்கு முன்னர் தமிழகத்தில் விளங்கியதில்லை! கடித இலக்கிய மரபினைத் தனிப்பட்ட இலக்கிய வகையாகவும்

கற்பனைக் கட்டுரையாகவும் தமிழில் தொடங்கி வைத்தவர் வேறு யாரும் இல்லை. பண்பு நலன் பாராட்டும் திறனாய்வுக் கலையிலும், ஒரு பாட்டின் பொருளை விளக்கும் வகையில் சங்க இலக்கியத்திற்கு ஓர் அறிமுகமாக – விளக்கவியல் திறனாய்வு முறையைப் பயன்படுத்தி நூல் எழுதும் கலையிலும் மு.வ.அவர்களே முன்னோடி! இலக்கிய ஆராய்ச்சியை வாழ்க்கை விளக்கமாக அமையும் வகையில் ஆழமாகவும், விரிவாகவும் அமைத்தவர்கள் இவருக்கு முன்னர் வேறு யாரும் இல்லை! சங்க இலக்கியப் பாடல்களைத் தேர்ந்து எடுத்து, அவற்றை ஓரளவிற்குக் கல்வியறிவு உடையவர்களும் புரிந்து கொள்ளும் வகையில், ‘விருந்தும்’, ‘செல்வமும்’ முதன்முதலாகப் படைத்தவர் மு.வ.வேயாவர்.

இவற்றைப் போன்றே, எழுத்துத்துறையில் தமக்கென ஒரு தனிநடையை அமைத்துக் கொண்டவர் மு.வ. கட்சிசார்பற்ற முறையில் சோசலிசக் கருத்துக்களுக்குத் தம்முடைய நூல்களில் முதன்மை கொடுத்தவர் மு.வ. இவ்வாறு மு.வரதராசனார், தமிழக மறுமலர்ச்சி வெள்ளம் புத்தம் புதிய துறைகள் பலவற்றில் பாய்ந்து, தமிழை வளம்பெறச் செய்ய உதவினார்.

விளைவும் பயனும்

மறுமலர்ச்சி இயக்கத்தின் தாக்கத்தால், உலகில் பல்வேறு நாடுகளில் உண்டான விளைவுகளைப் பொதுவாக ஐந்து வகைப்படுத்திக் கூறுவது மரபு. அவை,

1) சமயச் சார்பற்ற மனப்போக்கு (Secularism)

2) அறிவியல் வளர்ச்சியும் கல்வித்துறைகளின் விரிவும்

3) கலைத்துறையில் புத்தாக்கப் போக்குகள் இடம்பெறுதல்.

4) மனித நலத்தை நாடும் உணர்வு மேலோங்கி நிற்றல்

5) தேசிய இலக்கியத்தில் எழுச்சி

என்பனவாகும்.[50]

மறுமலர்ச்சி இயக்கத்தால் உண்டாகும் இவ்வகை விளைவுகளும் டாக்டர் மு.வரதராசனாரின் படைப்புகளில் முதன்மையிடம் பெற்றுள்ளன. அவருடைய நூல்கள் அனைத்துமே, குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சார்ந்தன அல்ல. ‘சமய உண்மைகள் யாவை?’ என்பதை அவருடைய புதினங்கள் முதற்கொண்டு, சிந்தனைக் கட்டுரை நூல்கள் அனைத்தும் தெளிவுறுத்துகின்றன. அறத்தினைப் போற்றிப் பின்பற்றும் சமுதாய அமைப்பைப் பற்றியே அவருடைய நூல்கள் பேசுகின்றன.

தனிமனிதன் வாழ்க்கைக்கு உணவும் உறக்கமும் இருந்தால் போதும். மக்கள் பலர் கூடி வாழும் சமுதாய வாழ்க்கைக்கே அறம் கட்டாயம் வேண்டும். மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டமும் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ, அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும்.[51]

என்பது அறத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த நம்பிக்கையாகும். வாழ்க்கையில் அறத்தைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தும் பேராசிரியர், கடவுளின் இருப்பையும், அவருடைய பேராற்றலையும் பேரருள் திறத்தையும் போற்றுகிறார்.

கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்து, பொதுமையான, ஆட்சி புரியும் ஒரு பெருஞ்சக்தி என்று உணர வேண்டும்.. கடவுள் எங்கும் என்றும் உள்ள பெருஞ்சக்தியாய் எல்லாப் பொருளுமாய், எல்லா உயிருமாய் விளங்குதலை எண்ண வேண்டும்.[52]

என்று கடவுளுக்குப் பேராசிரியர் நல்லதொரு விளக்கத்தைத் தந்துள்ளார். மேலும்,

உடலுக்கு உயிர் எப்படியோ, அப்படிப் படைப்புக்குக் கடவுள் உடல் முழுதும் உயிர் இருப்பது போல் உலகெங்கும் கடவுளின் சக்தி உள்ளது.[53]

என்று கடவுளின் பேராற்றலையும், இன்றியமையாமையையும் மு.வ.எடுத்தியம்பியுள்ளார்.

இவற்றால், சமயச் சார்பற்ற நிலையில், கடவுளின் இருப்பையும், இயல்பையும் உணர்ந்து மனிதன் ஆன்மீகப் பண்பாட்டை வளர்க்க வேண்டும் எனும் கருத்துடையவர் மு.வ.என்பது புலனாகின்றது. இந்த நோக்கு உலகெங்கும் மறுமலர்சசி எழுத்தாளரிடையே காணப்படுவதாகும்.

அறிவியல் வளர்ச்சியும், கல்வித்துறைகளின் விரிவும் பேராசிரியருடைய சிந்தனைப் போக்கை மாற்றியுள்ளன. அவர் பழைமையைக் கண்டு மயங்கவில்லை; புதுமையைக் கண்டு மருளவும் இல்லை. ‘பழைய தமிழகத்திலிருந்து புதிய தமிழகம் தோன்றி வளர்ந்து வருகின்றது. பழைய தமிழகம் தாய்; புதிய தமிழகம் ஒரு சேய் தாயிடமிருந்து சேய் கற்க வேண்டியவை பல உள்ளன.”[54] எனும் கருத்துடையவர் மு.வ. ‘காலம் மாறிவிட்டதை தமிழர் நன்கு உணர்ந்து கொள்ளவில்லை”[55] என்று அவர் வருத்தத்தோடு குறிப்பிடுவதும் அவருடைய உள்ளப்போக்கினை உணர உதவுகிறது.

பேராசிரியரிடத்து, அறிவியல் மனப்பான்மையோடு அறிவியல் ஆய்வு முறைகளைப் பின்பற்ற வேண்டும் எனும் துடிப்பும் இருந்ததை அவருடைய நூல்கள் அறிவிக்கின்றன. மேற்கு நாட்டுக்கல்வி முறையின் தாக்கத்தால், பழந்தமிழ்க்கல்வி முறையைப் பல துறைகளாகப் பகுத்து விரிவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. மொழிக்கல்வி இலக்கண, இலக்கியக் கல்வியாகவே கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அது மொழியியல், திறனாய்வுக்கலை, வரலாறு, கல்வெட்டியல், ஒப்பாய்வியல் போன்ற பல துறைகளாக விரிந்து வளர்ந்தது. இத்துறைகளுள் வரலாறு, கல்வெட்டியல் துறைகளைத் தவிரப் பிற துறைகளில் எல்லாம், சிறப்புமிகு நூல்களை பேராசிரியர் படைத்துள்ளார்.

கலைத்துறையில் புத்தாக்கப் போக்குகள் பல மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவால் உண்டாகியுள்ளன. நுண்கலைகளான சிற்பம், ஓவியம், இசை, நாடகம், இலக்கியம் போன்றவற்றுள் எளிமையும் நேர்த்தியும், பயன்பாடும் மிக்க பல புதிய இயல்புகள், போக்குகள் இடம் பெறுவது இயற்கை. இந்த வகையில், இலக்கியக் கலைஞரான டாக்டர் மு.வ.அவர்கள், தமிழ் இலக்கியத்துறையில் புதினம், சிறுகதை, கட்டுரை, நாடகம், ஆராய்ச்சி நூல்கள் போன்றவற்றைப் படைத்து, இலக்கியக் கலையை ஏற்றமுறச் செய்துள்ளார்.

மனித நலம் நாடும் உணர்வு, இயல்பாகவே பேராசிரியர் மு.வ.அவர்களிடம் அமைந்திருந்தது. தாயுமானவரின் பாடல்களை ஓதியோதிப் பண்பட்ட உள்ளம் அவருடைய உள்ளம்.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!

எனும் தாயுமானவரின் பாடற்பகுதியும்,

தம்முயிர்போல் எவ்வுயிரும் தான்என்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவல்என்று செய்வேன் பராபரமே!

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்; பராபரமே:[56]

எனும் பாடற்பகுதிகளும் மு.வ.அவர்களின் எழுத்திலும் பேச்சிலும் இடம்பெற்றுள்ளன. மேலும் இராமலிங்கரின் உயிரிரக்க உணர்வும் அவரை ஆட்கொண்டிருந்ததை அவருடைய நூல்கள் வாயிலாக அறிகிறோம்.[57] இவை யாவும் மனிதநலக் கோட்பாட்டில் அவருக்கு இருந்த பற்றுறுதியை அறிவதற்குப் போதிய சான்றுகளாகும். திருவள்ளுவர்முதல் திரு.வி.க.வரை தமிழகத்தில் தோன்றிய சான்றோர்களின் சிந்தனையில் வெளிப்பட்ட மனிதநலக் கோட்பாட்டு

எண்ணங்களும், இந்திய அருளாளர்கள், உலகச் சான்றோர்கள் கொண்டிருந்த இத்தகைய சிந்தனையும் பேராசிரியரின் நூல்களில் இழையோடிச் செல்லுகின்றன.[55]

> பாடுபடும் உழைப்பாளிகளுக்குப் பட்டினியும் வறுமையும், பொன் வெள்ளித் தகடுகளைச் சேர்த்து வைக்கும் ஏய்ப்பாளிகளுக்குப் பெருமையும் வாழ்வும், ஒரு பக்கம் பட்டினி, ஒரு பக்கம் ஆடம்பரம், இது தலைவிதி என்பதா? அப்படியானால், அந்தத் தலைவிதியின் தலையைத் தட்டிப் பிளந்து எறிய உழைப்பாளிகளின் கையில் சம்மட்டிகள் இல்லையா? அறிவாளிகளின் கையில் எழுதுகோல் இல்லையா?[59]

எனும் உள்ளக் குமுறலில் வெளிப்படுவது, அவருடைய மனிதநலம் நாடும் உள்ளத் துடிப்பேயாகும்.

மறுமலர்ச்சி இயக்கத்தின் தாக்கத்தால் உலகின் பல்வேறு மொழிகளிலும் 'தேசிய இலக்கியம்' மறுமலர்ச்சியுற்றது இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஓர் அலை 'தேசிய உணர்வு' எனும் பேரலையாய்ப் பொங்கி எழுந்தது; 'விடுதலைப் போராட்டம்' எனும் சூறாவளியைத் தோற்றுவித்தது; மாநிலங்கள் தோறும் மக்கள் மொழிக்குப் 'புதுவாழ்வு' அரும்பியது. சுப்பிரமணிய பாரதியாரைப் போன்ற விடுதலைக் கவிஞர்களும், வ.உ.சி.' திரு.வி.க.வைப் போன்ற தேசிய எழுத்தாளர்களும், 'புதுமைப்பித்தன்', 'கல்கி', டாக்டர் மு.வ.வைப் போன்ற மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் தமிழகத்தில் தோன்றலாயினர். இதனால், தமிழ்ப்பண்பாட்டின் சிறப்பையும், இந்தியப் பாரம்பரியத்தின் பெருமையையும் எடுத்தியம்பும் இலக்கியங்கள் பல தமிழில் தோன்றின.

அவற்றின் ஒரு பகுதியே, பேராசிரியர் மு.வ.அவர்கள் பழைய தமிழ் இலக்கியங்களையும், பண்பாட்டையும் மக்களிடையே பரப்ப 'விருந்தை'யும், 'செல்வத்தை'யும் இயற்றியமையாகும். பழைய பண்பாட்டின் சிறப்பு இயல்புகளை உணருமாறு செய்வதன் மூலம் அவற்றிடத்து மக்களுக்கு ஈடுபாட்டை உண்டாக்குவதைத் தம்முடைய கடமையாக அவர் கருதினார். அவருடைய 'கடிதங்களும்', 'புதினங்களும்' 'தமிழ் நெஞ்சம்' போன்ற விளக்கவியல் திறனாய்வு நூல்களும் மொழிவழிப்பட்ட தமிழ்த்தேசிய உணர்வை வளர்ப்பனவாக அமைந்தன. 'புதினம்', 'சிறுகதை' போன்ற இலக்கிய வடிவங்கள் மேற்கு நாடுகளிலிருந்து கடன் வாங்கப்பட்டவை. எனினும், அவ்வடிவங்களை இந்தியப் பண்பாட்டைப் போற்றி வளர்க்க உதவும் கருவியாகப் பேராசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

இவ்வாறு மறுமலர்ச்சி இயக்கத்தின் உந்துதல் சக்தியால் எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் பேராசிரியர் மு.வரதராசனார் பெற்றுள்ளதைக் காணுகின்றோம். இதனால்தான், பழைமையில் அரும்பிப் புதுமையில் மலர்ந்த சிந்தனையாளராக அவர் விளங்குகிறார். திருவள்ளுவரின் அறவுணர்வும், காந்தியடிகளின் அகிம்சை உணர்வும், காரல்மார்க்ஸின் சமவுடைமை சமுதாய உணர்வும் இணைந்ததொரு புதுவகைச் சிந்தனை, அவருடைய படைப்புகளில் ஆற்றல்மிகு உயிரோட்டமாக அமைந்துள்ளது.

குறிப்புகள்

1. Humayun Kabir, The Indian Heritage, pp.135-136.
2. K.Meenakshisundram, The Contribution of the European Scholars to Tamil, p.1.
3. எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி, பக்.6.
4. S.Sivapatha Sundaram, 'Pioneers of the Tamil Novel; New Discoveries' Indian Literature, July 1978, p.26.
5. தா.ஏ.சண்முகம், சூழ்நிலையும் மனிதனும், பக்.1.
6. பெ.சுந்தரம்பிள்ளை, மனோன்மணியம், பாயிரம்.
7. சுப்பிரமணிய பாரதியார், மகாகவி பாரதியார் கட்டுரைகள், (3) மாதர் பக்.9.
8. சுப்பிரமணிய சிவா (பதி), ஞானபாநு, நவம்பர், 1915, பக்.3.
9. மு.வரதராசனார், கி.பி.2000, பக்.31; மண்குடிசை, பக்.137, 138, 199 முதலியன (மு.வ); கயமை, பக்.223; செந்தாமரை, பக்.140; அகல்விளக்கு, பக்.329 (மு–வ)
10. பேராசிரியர் மு.வ.அவர்கள் தாயுமானவரின் திருப்பாடல்களில் தோய்ந்தவர் என்பதை, அவர் இறப்பதற்கு முன்னர், திருச்சி வானொலியில் 'தாயுமானவர்' எனும் பொருள் பற்றி ஊனுருக, உயிருருக ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவினைக் கேட்டவர் யாவரும் நன்கு அறிவர்.
11. அந்த நாள், பக்.5.
12. ஈ.ச.விசுவநாதன், மு.வ.வின் கடிதங்கள், பக்.22; மு.வரதராசனார், அல்லி, பக்.188; அகல்விளக்கு, பக்.308; கயமை, பக்.149, 196 (மு.வ.)
13. கயமை, பக்.196.
14. அகல்விளக்கு, பக்.359; மண்குடிசை; பக்.149, 155, 166, (மு.வ.).

15. பெற்றமனம், பக்.81, 82, 283; மண்குடிசை, பக்.49, 66, 149, 268; கயமை, பக்.75, 139 (மு.வ); தம்பிக்கு, பக்.55–56; (மு–வ);

16. அந்தநாள், பக்.208–209.

17. அல்லி, பக்.93, 251; கயமை, பக்.138, 222, 273, (மு.வ.) பாவை, பக்.164; வாடாமலர், பக்.221; நெஞ்சில் ஒரு முள், பக்.311; மண்குடிசை, பக்.42, 138, 156, 244; நல்வாழ்வு, பக்.10, 67 நண்பர்க்கு, பக்.56.

18. இவ்வாய்வுரையில் இடம்பெறும் 'பேராசிரியரின் கடிதம் – 1' என்பதைக் காண்க.

19. தினமணி, 14.4.1967, சித்திரை முதல் நாள் சிறப்பு மலர், பக்.6.

20. மேற்படி

21. 12.6.1978 அன்று பேராசிரியர் செ.யோககசுந்தரம் இவ்வாய்வாளருக்கு அளித்த நேர்முகப் பேட்டியில் குறிப்பிட்ட செய்தி.

22. வட ஆர்க்காடு மாவட்டம், கரிகேரி கம்மவார்புதூரில் சாதுநாகரத்தினம் அம்மையார் வாழ்ந்து வருகிறார். அவர் மௌனசுவாமிகளின் தலைமைச் சீடர் ஆவார். இவ்வாய்வாளருக்கும், டாக்டர் அ.நாகலிங்கம் அவர்களுக்கும் 11.6.1978 அன்று, அவர் அளித்த நேர்முகப் பேட்டியில் தெரிவித்த செய்தி இது.

23. திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள், பக்.803.

24. சாது நாகரத்தினம் அம்மையாரிடம் நேர்முகப் பேட்டி.

25. திரு.வி.க.முன்னுரை.

26. காந்தி அண்ணல், பக்.7.

27. சி.பாலசுப்பிரமணியன், பெருந்தகை மு.வ., பக்.62. உலகம் உய்ய எனும் நூல் முழுவதிலும் காந்தியக் கொள்கைகளை மு.வ.அவர்கள் விளக்கியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

28. திரு.வி.க.அவர்களுடைய நூல்களுள் பல, இத்தகைய தலைப்புக்களைக் கொண்டுள்ளன.

எ–டு: முருகன் அல்லது அழகு

சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து

பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை

29. அந்த நாள், பக்.107; நெஞ்சில் ஒருமுள், பக்.315; வாடாமலர், பக்.221–225.

30. தம்பிக்கு, பக்.23, 46, 48; அந்த நாள், பக்.153, மண்குடிசை, பக்.149, 167; கரித்துண்டு, பக்.141; நெஞ்சில் ஒரு முள், பக்.69; உலகம் உய்ய, பக்.21.

31. கவிஞர் தாகூர் பக்.66.

32. மு.வ. அவர்களின் கரித்துண்டு எனும் புதினத்தில், பக்.199இல் கீதாஞ்சலியின் நான்கு பாடல்கள் தமிழில் தரப்பட்டுள்ளன. அவை,

'மரணம் உன் வாழ்வின் கதவைத் தட்டும்'

'ஓ மரணமே! என் மரணமே?...'

'நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.."

"கணக்கற்ற உருவங்கள் நிரம்பிய..."

எனும் தொடக்கத்தன. அவை 'கீதாஞ்சலி' எனும் மூலநூலில் முறையே 90, 91, 93, 96 எனும் பாடல்களின் பகுதிகளாகும். அவற்றைப் பேராசிரியரே தமிழாக்கம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கவிஞர் தாகூர் எனும் நூலில், இவற்றோடு 'எங்கே மனம் அச்சமற்றிருக்கிறதோ' எனத் தொடங்கும் 35ஆம் பாடலையும் இவர் தமிழாக்கம் செய்து தந்துள்ளார். இவற்றை வி.ஆர்.எம்.செட்டியார் மொழிபெயர்த்துள்ள கீதாஞ்சலிப் பாடல்களோடு ஒப்புநோக்குகின்ற பொழுது, பேராசிரியரின் தமிழாக்கம் சிறப்பாக உள்ளதை அறியலாம்.

33. பேராசிரியர் மு.வரதராசனாருக்கு அறிஞர் பெர்னாட்ஷா 1949இல் எழுதிய கடிதத்தை, இந்த ஆய்வாளருக்குப் பேராசிரியர் காட்டியுள்ளார். அதில், பாரதப்பிரதமர் ஜவகர்லால் நேரு தமக்கு அனுப்பிய மல்கோவா மாம்பழங்களைச் (வாழ்க்கையில் முதன்முதலாக) சுவைத்து, தின்று மகிழ்ந்ததைப் பற்றி அறிஞர் ஷா குறிப்பிட்டிருந்தமை இந்த ஆய்வாளரின் உள்ளத்தில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

34. அறிஞர் பெர்னார்ட்ஷா,முன்னுரை.

35. கரித்துண்டு, பக்.88; கள்ளோ காவியமோ, பக்.76, 77, 121, 185; நெஞ்சில் ஒரு முள், பக்.100; அன்னைக்கு, பக்.22; பெற்ற மனம், பக்.142; அல்லி, பக்.91, அந்த நாள், பக்.128.

36. கள்ளோ காவியமேம, பக்.185.

37. "வரதராஜனார் பேச்சிலும் எழுத்திலும் பெர்னார்ட்ஷாவின் கருத்துக்கள் ஆங்காங்கே பொதுளும், அவர் பெர்னார்ட்ஷா நூல்களைப் படித்துப் படித்து ஒரு 'தமிழ்ப் பெர்னாட்ஷா,

ஆனார் என்று கூறுதல் மிகையாகாது" – திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புகள், பக்.803

38. கள்ளோ காவியமோ, பக்.77.

39. மலர்விழி, பக்.50; விடுதலையா, பக்.84; குறட்டை ஒலி, பக்.44.

40. பெற்ற மனம், பக்.141–142.

41. பெற்ற மனம், பக்.142.

42. பெற்ற மனம், பக்.142; இங்குச் சுட்டப்படும் கருத்து, பெர்னார்ட்ஷாவின் 'Major Barbara' எனும் நூலின் முன்னுரையிலும், 'Intelligent Woman's Guide to Socialism Capitalism Sovietism & Fascism' எனும் நூலிலும் (பக்.42) காணப்படுகிறது.

43. நா.பார்த்தசாரதி, (பதி.), 'இலக்கியச் சந்திப்பு – பேட்டி; டாக்டர் மு.வரதராசன்', தீபம், மார்ச்சு 1972, பக்.54.

44. 'காண்டேசுரைக் கண்டேன்', கலைமகள், மார்ச்சு 1973; பக்.250–51.

45. நா.பார்த்தசாரதி (பதி.); முன்.இதழ், பக்.53.

46. க.த.திருநாவுக்கரசு, 'டாக்டர் மு.வ.வின் புதிய உலகம்', திறனாய்வுக் கட்டுரைகள், பக்.169–176.

47. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பக்.5–6.

48. திரு.வி.கலியாணசுந்தரனார், பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும், முன்னுரை, பக்.1.

49. அன்னைக்கு, பக்.26.

50. Arnold J.Toynbee, 'A Survey of Renaissance', A Study of History, Vol.2, pp.267-288.

51. அறமும் அரசியலும், முன்னுரை.

52. நல்வாழ்வு, பக்.10, 14.

53. நெஞ்சில் ஒரு முள், பக்.411.

54. அன்னைக்கு, முன்னுரை.

55. தம்பிக்கு, பக்.45.

56. நெஞ்சில் ஒரு முள், பக்.311.

57. பதினெட்டாவது குறிப்பில் சுட்டப்பட்ட நூல்களில் காண்க.

58. வாடாமலர், பக்.223.

59. அந்த நாள், பக்.190.

இயல் - 2
இலக்கியப்பணி - ஒரு பொதுப்பார்வை

நிலமானியச் சமுதாய அமைப்பின் நிலைகுலைவு

இந்நூற்றாண்டில், இந்தியாவின் சமுதாய அமைப்பில் மாபெரும் மாற்றங்கள் உண்டாகியுள்ளன. நிலமானிய அமைப்புமுறைச் சமுதாயமே, இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் இந்தியாவில் நிலைபெற்று விளங்கியது. இதனால், நிலமே, முதன்மையான செல்வமாகக் கருதப்பட்டு வந்தது. பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில், பணம், வாணிகவளம் முதலிய புதுமுறையான செல்வங்கள் இந்தியச் சமுதாயத்தில் புழக்கத்திற்கு வந்தன. அவை பையப்பைய நிலத்தின் மதிப்பைக் குறைக்கத் தொடங்கின. இதனால், பேரளவிற்கு நிலமானியச் சமுதாய அமைப்பு நிலைகுலையத் தொடங்கியது.

வாணிகப் பொருளாதாரமும், இயந்திரத் தொழில் வழிப்பட்ட பணப்பெருக்கமும் வளர்ச்சியுற்றமையால் பிறப்பு அடிப்படையில் அமைந்த சாதி வேற்றுமை, நிலவுடைமையாளர்களின் ஆதிக்கம், நிலக்கிழார்களுக்கு இருந்து வந்த மதிப்பு முதலியன செல்லாக் காசுகளாக மாறத்தொடங்கின. இவ்வாறு, இறுதிப்போன இந்தியச் சமுதாய அமைப்பில், ஆங்கிலேயரின் ஆட்சி ஒருவகை இயங்கும் ஆற்றலைப் புகுத்தியது.

இத்தகைய சமுதாயச் சூழல் வளர்ச்சியுறத் தொடங்கிய காலத்தில், பேராசிரியர் மு.வரதராசனார் பிறந்தார். அவர் இலக்கியப் பணிபுரியத் தொடங்கிய காலத்தில், பழைமைக்கும் புதுமைக்கும் இடையே கடுமையான போராட்டம் இந்திய மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இலக்கியமும் சமுதாயமும்

குறிப்பிட்ட கால கட்டம் ஒன்றில் ஒரு சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை அறிவதற்கு அச்சமுதாயம் படைத்த இலக்கியங்கள் பேருதவியாக உள்ளன. இலக்கியம் என்பது காலந்தோறும் மாறி வரும் மக்கள் உணர்ச்சிகளையும் அவர்கள் மதித்துப் போற்றும் பயன் மதிப்புகளையும் படம்பிடித்துக் காட்டுவதாகும். வேறுபட்ட

சமூகங்களில் உண்டாகும் மாற்றங்களின் இயல்புகளைச் சுட்டுவது இலக்கியம் மற்றும் தனிமனிதர், சமுதாய மாற்றங்களுக்குத் தக்கவாறு தங்கள் உணர்வுகளை எவ்வாறு ஊக்கப்படுத்திக் கொள்ளுகின்றனர் என்பதையும் இலக்கியம் புலப்படுத்தத் தவறுவதில்லை. மனிதனுடைய ஆவல்களையும், நம்பிக்கைகளையும் விழைவார்ந்த குறிக்கோள்களையும் இலக்கியம் எதிரொலிக்கின்றது. இலக்கியத்தின் இவ்வியல்புகளைக் கருத்தில் கொண்டு, "சமூக சக்திகளின் தாக்கத்தால் மனிதன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதைக் கண்டறிய உதவும் சமுதாயப் பாரமானி – 'பாராமீட்டர்' (Sociological Barometer) என இலக்கியத்தைப் போற்றுவோரும் உண்டு.[1]

இந்நூற்றாண்டில் இயற்றப்பட்ட தமிழ் இலக்கியங்கள், இக்காலத்திற்குரிய சிறப்பு இயல்புகளைப் பிரதிபலிக்கின்றன. தமிழ் இலக்கியத்தில், மேற்கு நாட்டுப் பண்பாட்டுத்தாக்கம் இந்நூற்றாண்டில் ஆழப்பதியலாயிற்று. மற்றும், நெடுங்காலமாகத் தமிழ் மக்கள் போற்றி வந்த பழைய பயன் மதிப்புகளுக்கும், இயந்திரப் பொருளாதாரத்தால் உண்டான புதிய பயன்மதிப்புகளுக்கும் இடையே மோதல்கள் உண்டாயின. புதுமையும் அயன்மையும் வாய்ந்த நோக்கங்களும், பயன் மதிப்புகளும் மரபு வழிப்பட்ட நோக்கங்களுக்கும் எண்ணங்களுக்கும் எதிராக அறைகூவல் விட்டன. எவை சிறந்தவை? பயன் தரத்தக்கவை?' என்பதைச் சிந்தனையாளர்கள் எளிதில் முடிவு செய்ய இயலாது திகைப்புற்றனர்.

இருவேறு நிலைகள்

சமயத்தின் நிழலில் தமிழ் இலக்கியம் இடைக்காலம் முழுவதும் தழைத்தோங்கி வந்தது. இந்நிலை, இந்நூற்றாண்டின் முதற்பகுதி (ஏறக்குறைய 1945) வரையில் நீடித்து வந்தது. மேற்கு நாட்டுக் கல்வியைப் பயின்றோரும் அதன் செல்வாக்கால் உந்தப்பட்டோரும் மேற்குநாட்டு முறையில், தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்திருத்த முனைந்ததோடு, புத்தம் புதிய இலக்கியங்களைப் படைப்பதிலும் பேரார்வம் காட்டினர். இத்தகைய சூழலில், ஒரு சாரார் 'தமிழில் எல்லாம் இருக்கிறது; நமக்குத் தெரியாதது – நாம் அறியாதது உலகில் இல்லை!' என்னும் நம்பிக்கையோடு 'புதுமையை' எதிர்த்துப் போர்முரசு கொட்டினர்[2] மற்றொரு சாரார் "தமிழில் என்ன இருக்கிறது? பழைய இலக்கியத்தில் கள்ளும் காதலும் தவிர வேறென்ன இருக்கின்றன. இடைக்கால இலக்கியத்தில் கடவுளும் காமமும் தவிர வேறென்ன இடம் பெற்றிருக்கின்றன? இவற்றைப் போற்றும் இலக்கியங்களை அழித்தொழித்தால்தான்' பகுத்தறிவுப்பயிர் இந்த மண்ணில் செழித்து வளர முடியும்' என்று பழைமையை எள்ளி நகையாடியதோடு அமையாமல் அழித்தொழிக்கவும் முயன்றனர்.[3]

காலப்போக்கிற்குகந்த வாழ்க்கை

இத்தகைய இரண்டாட்டத்திற்குட்ட – போராட்டத்திற்கு ஆளான தமிழ்ச் சமுதாயத்தில் பேராசிரியர் மு.வரதராசனார் ஒரு நடுநிலையாளராகத் தோன்றினார். 'பழமையிலே புது நினைவு பாய்ந்தெழுந்தாற் போல' அவருடைய எண்ணமும் எழுத்தும் விளங்கின. மாற்றம் என்பது வளர்ச்சியின் அறிகுறி. இதை உணர்ந்து போற்றியவர் பேராசிரியர் மு.வ.

> *காலம் செல்லச்செல்ல வாழ்க்கை படிப்படியே மாறி வருகிறது. வாழ்க்கையை ஒட்டி கருத்துக்களும் மெல்ல மெல்ல மாறி வருகின்றன. உண்பன, உடுப்பன முதலாய புறவாழ்க்கைப் பகுதிகள் மட்டும் அல்லாமல், மனிதன் எண்ணும் எண்ணங்களும், உணரும் உணர்வுகளும் ஆகிய அகவாழ்க்கைப் பகுதிகளிலும் மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய மாறுதல்களை உணர்ந்து அவற்றிற்கு ஏற்ப வாழ்க்கையை இயைத்து நடத்துகின்றவர்கள் வாழ வல்லவர்கள் ஆவர்.*[4]

என்று தமிழ் மக்களுக்கு அவர் அறிவுரை வழங்கியுள்ளார். தனிமனிதனுடைய வாழ்க்கையைப் பற்றி இவ்வாறு கருதியதோடு அவர் அமையவில்லை.

புதிய தமிழகத்திற்கு வரவேற்பு

தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் இவ்விதி பொருத்தமானது என்பதைப் பல இடங்களில், பல நிலைகளில் அவர் எடுத்துரைத்துள்ளார்.

> *காலம் என்பது மக்களின் தனி வாழ்க்கையை வரையறுப்பது போலவே, நாட்டின் வாழ்வையும் வரையறை செய்வதாகும். தமிழ்நாட்டின் வரலாறும் காலத்தின் பேராற்றலுக்குக் கட்டுப்பட்டு விளங்குகின்றது. இப்போது பலரும் காண்பது பழைய தமிழகத்தின் மறைவும் புதிய தமிழகத்தின் தோற்றமும் ஆகும்.*[5]

என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே (1948), புதிய தமிழகத்தின் அருணோதயத்தைப் பேராசிரியர் மு.வ.கண்டு, மக்களைத் துயிலெழுப்பியுள்ளார்.

இந்நிலையில், புதிய தமிழகத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, அவருடைய எண்ணப்போக்கை அறிவதற்கும், அவருடைய படைப்புகளின் ஆதார சுருதியாக அமைந்த உந்துதல் சக்தியை உணர்ந்து போற்றுவதற்கும் உறுதுணையாகிறது.

> பழைய தமிழகத்திலிருந்தே புதிய தமிழகம் தோன்றி வளர்ந்து வருகின்றது. பழைய தமிழகம் தாய்; புதிய தமிழகம் சேய்; தாயிடம் சேய் கற்க வேண்டியவை பல உள்ளன. புதிய தமிழகம் பலவகையில் வேறுபட்ட வளர்ச்சி உடையது. ஆனாலும், பழைய தமிழகமாகிய அன்னையின் அனுபவ அறிவுரைகளைப் புறக்கணிக்க முடியாது.[6]

என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டே, பேராசிரியர் மு.வரதராசனார் இலக்கியப்பணி ஆற்றத் தொடங்கியுள்ளார்.

மு.வ.கண்ட மூவகைச் சமுதாயம்

டாக்டர் மு.வரதராசனார் தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில் (1932), இந்தியச் சமுதாயம் மரபுவழிப்பட்ட சமுதாயமாகவே (Traditional Society) இருந்தது. அவர் எழுத்தாளராகச் சிறப்புறத் தொடங்கிய காலத்தில் (1916), இந்தியச் சமுதாயம் நிலைமாறுபாட்டுச் சமுதாயமாக (Transitional Society) மாறத் தொடங்கியது. அந்நிலையில் ஒருவகைக் குழப்பம். நம்பிக்கையின்மை மக்கள் வாழ்க்கையின் பல்வேறுதுறைகளையும் அலைக்கழித்தன. சுருங்கச் சொல்லுவதானால், தமிழ்ச் சமுதாயம் இடர்ப்பாடு வாய்ந்த முக்கியமான திருப்பு மையத்தில் திகைப்புற்று நின்றது எனலாம். அவருடைய இலக்கியப்பணி நிறைவுறும் சமயத்தில் (1947) தமிழ்ச் சமுதாயம் புதுமைப்பாங்குடைய சமுதாயமாக (Modern Society) மாற்றமுற்றுள்ளதைக் காணுகிறோம்.

நிலைமாறுபாட்டுக் காலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்டும் ஒளி விளக்காக அவர் விளங்கினார். இந்தியச் சமுதாயத்தின் முப்பெரும் நிறுவனங்களான சாதிமுறை, குடும்பஅமைப்பு, நாட்டுப்புறச் சமூகம் ஆகியவற்றின் அடிப்படை, ஆட்டம் கொடுக்கத் தொடங்கிய நிலையில் பேராசிரியர் மு.வ. தமிழ்ச்சமுதாயத்திற்கு வழிகாட்டத் தொடங்கினார். படிப்படியாகத் தம்முடைய நூல்களில் மூலம் எண்ணத்தளவிலானது புதுமைப் பாங்குடைய சமுதாயமாக மாற்ற அவர் முயன்றார்.

சமுதாயமும் புதுமைப்பாங்கும்

ஒரு சமுதாயம் புதுமைப் பாங்குடையதாக மாற்றமுற (Modernisation) வேண்டுமானால் சமுதாயத்தின் பல்வேறு பகுதிகளும் ஒரே சமயத்தில் ஒருமித்த நிலையில் மாற்றத்தை – புதுமைப் போக்குகளை – விரும்பி வரவேற்பனவாக அமைய வேண்டும். அதாவது ஒரு சமுதாயம்.

மனநிலையில் மாற்றம் அடைய வேண்டும்; நெறிப்படுத்தப்பட்ட மாற்றத்தால் முன்னேற்றத்திற்கு வழி உண்டு என்னும் நம்பிக்கையைப்

பெற வேண்டும்; தனி மனிதநிலை, சமுதாய வாழ்க்கை ஆகியவற்றின் பல்வேறு துறைகளிலும் நிலையான மேம்பாட்டிற்குரிய விதிமுறைகளை உணர்ந்து போற்ற வேண்டும்.[7]

அப்பொழுதுதான் புதுமைப்பாங்கு ஒரு சமுதாயத்தில் முழுநிறைவுடன் பொலிவுற இயலும். சமுதாயத்தின் உறுப்பினர்களான மக்கள் ஒவ்வொருவரும், மாற்றத்தை உண்டாக்கும் ஆற்றலும் தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தும் திறனும், சமுதாயத்தை முழுமையாக மாற்றும் சக்தியும் தங்களுக்கு உண்டு எனும் உணர்வினைப் பெற்றால்தான், ஒரு சமுதாயம் விரைவில் புதுமைப்பாங்குடையதாக மாற இயலும். தமிழ்ச்சமுதாயம் இந்தத் தன்னாற்றலைப் பெறுவதற்குரிய புத்துணர்ச்சியைப் பேராசிரியர் மு.வ.தம்முடைய படைப்புகளின் மூலம் ஊட்டி வந்தார்.

சமுதாய மாற்றத்தை உண்டாக்கும் சக்திகள்

ஒரு சமுதாயத்தைப் புதுமைப் பாங்குடையதாக்குதல் என்பது எளிய செயலன்று; திட்டமிட்டு, ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிக்கக்கூடியதும் அன்று அது. பன்முகப்பட்ட, சிக்கலான செயல் பல்வேறு சக்திகள் இணைந்தும் பிணைந்தும், முட்டியும் மோதியும் சமுதாய மாற்றத்தை உண்டாக்குகின்றன. அவற்றைத் தொகைவகைப்படுத்தினால், நான்கு வகைச் சக்திகள் முனைப்பாக உள்ளமை புலனாகும். அவை அரசியல், சமூகவியல், பொருளியல் (தொழில்நுட்பக் கருவிகள் உட்பட), அறிவுத்திறவியல் என்பனவாகும்.

இந்நால்வகைச் சக்திகளுள், தமிழ்ச்சமுதாயம் அறிவுத்திறத்தால் – எண்ணப்போக்கால், மன மாற்றத்தையும் வளர்ச்சியையும் அடைவதற்கு அறிஞர் மு.வ.அரும்பாடு பட்டுள்ளார். அறிவுத்திறத்தில் உண்டாகும் மாற்றமும், வளர்ச்சியும் இருதிறப்பட்டன. ஒன்று அறிவியல் முன்னேற்றத்தால் உண்டாகும் மாற்றமாகும்; மற்றொன்று பண்பாட்டு வளர்ச்சியால் உண்டாகும் மாற்றமாகும். இவற்றைத் தொழில்நுட்ப மாற்றம் எனவும், பண்பாட்டு மாற்றம் எனவும் கூறுவர்.[8] தொழில்நுட்ப மாற்றம் பொருளாதார மாற்றத்தோடு நெருக்கமான தொடர்புடையது. இதைப்போன்றே, பண்பாட்டு மாற்றம் அரசியல் மாற்றத்தோடு இணைந்து இயங்குவதாகும்.

அறிவுத்துறை மாற்றத்திற்கு மு.வ. ஆற்றிய பணி

ஒரு சமுதாயம் அறிவுத்துறையில் மாற்றமுறவும், வளர்ச்சியுறவும் வேண்டுமானால், அச்சமுதாயத்தில் தெளிவுமிக்க சிந்தனையாளர்களாகிய அறிஞர்கள் சிலராகிலும் சிறப்புற்று விளங்க வேண்டும். அவ்வறிஞர் பெருமக்கள், பல்வேறு துறைகளில் மதிநுட்பத்தோடு பரந்துபட்ட நூலறிவு வாய்ந்தவர்களாக விளங்க

வேண்டும் அவர்களை அறிவியல் அறிஞர், அரசியல் அறிஞர், சமூகவியல் அறிஞர், பொருளியல் அறிஞர், மெய்ப்பொருளியல் அறிஞர், கலைஞர், புலவர் எனப் பலவகைப்படுத்தலாம். அவர்களுள் பேராசிரியர் மு.வரதராசனார் கலையுணர்வு மிக்க புலவராக, மொழியியல் அறிஞராக, திறனாய்வாளராக, படைப்பு இலக்கிய ஆசிரியராக, இவை யாவற்றிற்கும் மேலாக சமுதாயச்சிந்தனை வாய்ந்த சமூகவியல் அறிஞராகச் சிறப்புற்று விளங்குகிறார்.

சமுதாய மாற்றத்தின் அறிகுறிகள்

மேற்கு நாட்டின் கல்வி முறையாலும், பண்பாட்டின் தாக்கத்தாலும் தமிழ்ச்சமுதாயத்தில் மாற்றங்கள் பல உண்டாயின. புகைவண்டி, கப்பல், வானவூர்தி போன்ற போக்குவரவு சாதனங்கள், செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, குடியாட்சிமுறை, தேர்தல்முறை போன்ற பலப் புதிய அமைப்புகள் இந்தியாவில் கால்கொண்டமை. தமிழ்ச்சமுதாயத்தில் உண்டான மாபெரும் மாற்றத்தை, அறிவிக்கிறது. இவற்றோடு, பழைய நிறுவனங்களில் அமைப்புகளில் மாற்றங்களும் வளர்ச்சியும் உண்டாகியுள்ளன. பள்ளிகளும், கல்லூரிகளும், நீதிமன்றங்களும் பண்டைக்காலத்திய இந்தியாவில் இருந்தன. ஆனால், ஆங்கிலேயர் ஆட்சியில், அவை பெருகின; புதியதொரு வலிவும் பொலிவும் பெற்றன பண்டைய கல்விநிலையங்கள் மேட்டுக்குடி மக்களுக்கும், உயர்சாதிக்காரர்களுக்குமே பயன்பட்டன; மரபுவழிப்பட்ட கல்வியை – சமயச்சார்புடைய கல்வியைப் போதித்தன. ஆனால் புதிய கல்விநிலையங்கள் சமயச் சார்பற்ற கல்வியை, சாதி வேறுபாட்டைப் பாராட்டாமல், கல்வி கற்க விரும்பியவர்களுக்கு எல்லாம் அடிப்படைக் கல்வியையும், உயர்கல்வியைப் பெற வசதிகளையும் செய்து கொடுத்தன. இதைப்போன்ற பலப் புதிய இயல்புகள் பழைய நிறுவனங்களின் அமைப்பிலும் செயற்பாட்டிலும் வெளிப்பட்டன.

தமிழ்ப்பண்பாடு தொன்மையானது; சிறப்புமிக்கது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை; ஆனால், இடைக்காலத்திலே தமிழ்ச் சமுதாயத்தில், பல தீய பண்புகளும் கொடிய பழக்கங்களும் புல்லுருவிகளாகப் புகுந்தன. இதனை,

> (தமிழகம்) இப்பொழுது எந்நிலையில் இருக்கிறது? அதைச் சொல்ல வேண்டுமா? நம் நாட்டவர் பெண்ணுரிமை கடிந்த தீவினையும், பிறப்பால் சாதி வகுத்த தீவினையும், மக்களுள் தீண்டாமை கொண்ட தீவினையும் இப்பொழுது மூண்டெரிந்து நாட்டை அரிக்கின்றன; எரிக்கின்றன.[9]

என்று திரு.வி.கலியாணசுந்தரனார் எடுத்தியம்பியுள்ளார் இவை சமுதாயத்தை அரித்துத் தின்னும் புல்லுருவிகள் எனும் எண்ணம்

மேற்கு நாட்டுக்கல்வியின் தாக்கத்தாலேயே பலரிடம் தோன்றிற்று. இதற்கு முன்னர், அருளாளர்களும் துறவோர்களுமே இத்தகைய எண்ணம் உடையோராக இருந்தனர்.

மனிதநலக் கோட்பாட்டின் அடிப்படை "எல்லோரும் வாழப் பிறந்தவர்கள்; வளமாகவும் நலமாகவும் வாழப் பிறந்தவர்கள். அவர்கள் இடையே பிறப்பால், பொருளால், தொழிலால், சமயத்தால் வேறுபாடு பாராட்டுவது அறிவுடைமையாகாது"[10] என்பதாகும். இக்கருத்து தமிழ்ச் சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருந்த சாதி வேற்றுமை, தீண்டாமை பாராட்டல் போன்ற கொடிய பழக்க வழக்கங்களுக்கு எதிராக, சமுதாய சீர்திருத்த எழுச்சியை உண்டாக்கிற்று. சமவுரிமைக் கொள்கையும், பிற உரிமைகள் பற்றிய எண்ணமும் மக்கள் இடையே எழுத்தாளர்களாலும், அரசியல்வாதிகளாலும், சமுதாயச் சிந்தனையாளர்களாலும் பரப்பப்பட்டன.

இவற்றோடு பொருளற்ற சமயச் சடங்குகள் வெறுத்து ஒதுக்கப்பட்டன; சமய உண்மைகளின் மீது படிந்திருந்த மாசுகளை அகற்றுவதற்கு அறிஞர்கள் முயன்றனர். இன்றைய வாழ்க்கைக்குப் பயன்தராத பழக்க வழக்கங்களை, 'மூடப் பழக்க வழக்கங்கள்' என்று வெறுத்து ஒதுக்கும் நிலையும் உண்டாயிற்று; பகுத்தறிவுச்சிந்தனை மக்களிடையே பெருகியது. சமயம் வாழ்க்கையில் ஒரு பகுதியேயொழிய 'சமயமே வாழ்க்கை' என்னும் நம்பிக்கை வலுவிழக்கத் தொடங்கியது.

தலைமுறை இடைவெளி

இப்புதுமை எண்ணங்களின் எழுச்சியால், தமிழ்ச்சமுதாயத்தில் மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையே கருத்து வேற்றுமையும் மோதல்களும் உண்டாயின. தலைமுறை இடையேயும் இந்த அவல நிலை உண்டாயிற்று. 'முன்னோர்கள் முட்டாள்களா? அவர்களை விட நாம் அறிவாளிகளா? அவர்கள் சென்ற வழியே சிறந்தது அல்லவா?' என்று இளைஞர்களுள் ஒருசாராரும் சிந்திக்கலாயினர்.

அவர்களுக்கு அறிவுரை கூறும் வகையில்

> முன்னோரின் வாழ்க்கையைக் கண்மூடிப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று நான் எப்போதும் சொல்லமாட்டேன். காலம் மாறிவிட்டது; ஏற்பச் சூழ்நிலையும் வாழ்க்கையும் மாறி அமைந்துள்ளன. அவற்றை உணராமல் பழையபடியே வாழ விரும்புதல் அறியாமை. பழமையில் நல்லவை எவை? வாழ்க்கைக்கு அடிப்படையானவை எவை? என்றும் பின்பற்றத் தக்கனவாக உள்ளவை எவை? இவ்வாறு ஆராய்ந்து, இன்றியமையாத நல்லவற்றை மட்டும் போற்றினால் போதும்[11]

என்று மு.வ. அறிவுறுத்தும் செய்தி, ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

புதியதாகத் தோன்றிய நடுத்தர வகுப்பினர்

இவ்வாறு பேராசிரியர் மு.வரதராசனார், மக்களுக்காக – தமிழ்ச்சமுதாயத்திற்காக எழுதத் தொடங்கினார். அப்பொழுது ஓரளவிற்குக் கல்வி கற்ற, யாதாகிலும் ஒரு தொழில் செய்து ஊதியம் பெறும் புதியதொரு வகுப்பினர், தமிழ்ச்சமுதாயத்தில் தோன்றி, வளர்ந்துவந்தனர் அவர்களைச் சமுதாயத்தின் மையப்பகுதியைச் சேர்ந்த, நடுத்தரவகுப்பினர் எனலாம். அவர்களிடையே அறிவுப்பசியும், புதுமைப்பாங்கினைப் போற்றி வரவேற்கும் பண்பும் மேலோங்கி நின்றன.

உலக நாடுகள் அனைத்திலும் இத்தகைய வகுப்பினரே சமுதாய மாற்றங்களுக்கும் முன்னேற்றத்திற்கும் கட்டியம் கூறியுள்ளனர். எனவே, அவர்களுடைய அறிவுப் பசிக்குத் தேவையான விருந்தினை நல்கும் வகையிலும், புதுமைப் பாங்கிற்கு ஏற்றதாக எண்ணப் போக்கினை மாற்றும் (Mode nisation) வகையிலும், பண்டைத் தமிழ்ப்பண்பாட்டின் சிறப்புமிகு பண்புகளுக்குப் புதுமெருகு கொடுத்து, புதுவாழ்வு அளிக்கும் வகையில் பேராசிரியர் மு.வரதராசனார் பல்வேறு வகையான நூல்களைப் படைத்து அளித்தார்.

புதினங்களின் நோக்கும் போக்கும்

அவருடைய புதினங்கள் “உயர்நிலைப் பள்ளிப் படிப்புள்ள இளைஞர்களும், குடும்பப் பெண்களும் விரும்பக்கூடிய முறையில் படைக்கப்பட்டன.[12] அவற்றில் குடும்ப வாழ்க்கையில் உண்டாகும் சிக்கல்களே சிறப்பிடம் பெற்றுள்ளன பழைய எண்ணங்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்றவையும், புதிய சிந்தனைகளாகிய ஆண்பெண் சமத்துவம், காதல் திருமணம், கற்பு, பெண்ணுரிமை, வாழ்க்கைப் போராட்டம்[13] போன்ற எண்ணங்களுமே முதன்மையிடம் பெற்றன.

இவற்றோடு கட்சியாட்சியின் கொடுமை.[14] தேர்தல் முறையால் உண்டாகும் தீமைகள்,[15] தமிழரிடையே காணப்படும் குறைபாடுகள்[16] கள்ள வாணிகம்,[17] கையூட்டு,[18] சுரண்டல்முறை,[19] இயந்திர நாகரிகக் கேடுகள்,[20] கிராம மக்கள் நகரை முற்றுகை இடுதல்,[21] பணநாயகம்,[22] ஆடம்பர ஆரவாரம்,[23] வன்முறை,[24] வறுமை,[25] வேலையில்லாத்திண்டாட்டம்,[26] பிச்சைக்காரர் பிரச்சினை,[27] மூட நம்பிக்கை,[28] ஆத்திகம், நாத்திகம்,[29] சமவுடைமைச் சமுதாயம் மலர வழி[30] போன்ற கருத்துக்கள் பேராசிரியரின் புதினங்களில் பொதுவாகவும், பிற நூல்களில் சிறப்பாகவும் இடம்பெற்றுள்ளன. இத்தகைய சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டி, அவற்றைப்

போக்குவதற்கும் நீக்குவதற்கும் உரிய வழிவகைகளைக் குறிப்பிட்டு, அவற்றைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்குமாறு படிப்போர் தம் சிந்தனையைத் தூண்டும் வகையில், தம் நூல்களை அவர் படைத்துள்ளார்.

புதினங்களிலும் சிறுகதைகளிலும் நாடகங்களிலும் "இப்பிரச்சினைகளைப் பற்றி அவருடைய கதைப் பாத்திரங்கள் கலந்து உரையாடுவர்; வழக்கும் எதிர் வழக்கும் ஆடுவர். இறுதியில், இன்றைய சமுதாயச் சூழலில், மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணத் தேவைப்படுவன யாவை என்பதை ஆசிரியரோ, அவருடைய பிரதிநிதியாக – வார்ப்பாக – வரும் கதைப்பாத்திரமோ சுட்டிக் காட்டுவது மரபாக அமைந்துள்ளது. அவருடைய சிந்தனைக் கட்டுரைகளுள் கற்பனைக் கடிதங்களில், நூலாசிரியரின் குரலை வெளிப்படையாகவே கேட்க முடிகிறது.

இத்தகைய புதிய சிந்தனைகளை, பல்வேறு நோய்களினால் நலிந்தும் மெலிந்தும் போன தமிழ்ச் சமுதாயத்திற்குத் தேவையான நன் மருந்துகளாகப் பேராசிரியர் மு.வரதராசனார் சுவை பயக்கும் கதைகள் வாயிலாக எடுத்து உரைத்துள்ளார். அவற்றை ஆராய்ந்த இங்கிலாந்து நாட்டுத் தமிழறிஞரான டாக்டர் ஆஷெர் வியப்புறுகிறார். "புனைகதைகள் வாயிலாகப் பண்டைத் தமிழ் அறநெறிக் கருத்துகளை, இன்றைய சமுதாயச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயன்படும் வகையில் எடுத்துரைத்துள்ளார். மரபு வழிப்பட்ட ஆர்வத்தோடு அவற்றை இன்றைய பிரச்சினைகளோடு தொடர்புபடுத்தி விளக்கும் பணியைத் தம்முடைய படைப்புகளில் மு.வரதராசனார் செம்மையாகச் செய்து வருகிறார். இம்முயற்சியால் பண்டைத் தமிழிலக்கியத்தில் ஒளிரும் அறத்துறைக் கொள்கைகள் புதுப்பொலிவும் புதுவாழ்வும் பெற்று இக்காலத் தமிழ் மக்களிடம் பரவி வருகின்றன"[31] என்று அவர் மொழிந்துள்ளமை இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்.

தலைமுறை இடைவெளியைக் குறைக்கும் பணி

அறிஞர் மு.வ.வின் கற்பனைக் கடிதங்களைக் கொண்ட அன்னைக்கு', 'தங்கைக்கு', 'தம்பிக்கு', 'நண்பர்க்கு' எனும் 'நூல்கள், எண்ணப்போக்கில் மூத்த தலைமுறைக்கும், இளைய தலைமுறைக்கும் இடையே உண்டான இடைவெளியைக் குறைப்பதற்குரிய வழிமுறைகளை வகுத்துள்ளன.[34] இளைஞர்களின் புதுமைப் போக்குகளை, முதியோர்கள் பரிவுடன் புரிந்து கொள்ளவும், தங்கள் பெரியோர்களின் பழமைப் பற்றிற்குரிய காரணங்களை, இளைய தலைமுறையினர் எளிதில் தெரிந்து கொள்ளுவதற்கும் உதவக்கூடிய கருத்துக்களை எடுத்தியம்புகின்றன.

புதுமைப் போக்குகளை அறிமுகப்படுத்தும் பணி

பேராசிரியரின் சிந்தனைக் கட்டுரைகளாலான 'அரசியல் அலைகள்', 'அறமும் அரசியலும்', 'உலகப் பேரேடு' 'கண்ணுடைய வாழ்வு', 'கல்வி', 'குருவிப்போர்', 'குழந்தை', 'நாட்டுப்பற்று', படியாதவர் படும்பாவி', 'பெண்மை வாழ்க', 'மண்ணின் மதிப்பு', 'மொழிப்பற்று' போன்ற நூல்கள் சமுதாயத்தில் உண்டாகிவரும் மாற்றங்களைப் புரிந்துகொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும், மக்கள் மனத்தைப் பண்படுத்த – பயன்படுத்த முயலுவனவாகும்.

பண்பாட்டின் சிறப்பை உணர்த்தும் பணி

பழந்தமிழ் இலக்கியங்களுக்கு ஓர் அறிமுகமாக 'குறுந்தொகை விருந்து', 'நற்றிணை விருந்து', 'நெடுந்தொகை விருந்து', 'குறுந்தொகைச் செல்வம்', 'நற்றிணைச் செல்வம்', 'நெடுந்தொகைச் செல்வம்', 'ஓவச்செய்தி' என்பன விளங்குகின்றன; கொங்குதேர் வாழ்க்கை', 'தமிழ் நெஞ்சம்', 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'மூன்று நாடகங்கள்', 'நல்வாழ்வு', 'உலகம் உய்ய' போன்ற கருத்து விளக்க நூல்கள் பழந்தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பு இயல்புகளை உணர்ந்து போற்றவும், பின்பற்றவும் தூண்டுகின்றன.

தமிழின் சிறப்பையும், தமிழ் இலக்கியத்தின் மாட்சியையும் புலப்படுத்துவதோடு, இலக்கிய இன்பத்தைச் சுவைக்கத் தூண்டுவன 'மணல் வீடு', 'நடை வண்டி', 'கண்ணகி', 'மாதவி', 'இளங்கோவடிகள்', 'புலவர் கண்ணீர்', 'இலக்கியக் காட்சிகள்', 'குறள் காட்டும் காதலர்', 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை', 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூல்களாகும்.

சான்றோர்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுவதன் மூலம் உள்ளவுரமும், அனுபவ அறிவும், தெளிவும் பெற உதவுவன வாழ்க்கை வரலாற்று நூல்கள். அவை 'காந்தி அண்ணல்', 'கவிஞர் தாகூர்', 'அறிஞர் பெர்னார்ட்ஷா', 'திரு.வி.க.', 'பச்சையப்பர்' (நாடகம்) என்பனவாகும்.

வெளிநாட்டுப் பயணத்தால் விளையும் பயன்களை 'யான் கண்ட இலங்கை' உணர்த்துகிறது.

பொதுவாக மொழியின் இயல்புகளையும், சிறப்பாகத் தமிழ்மொழியின் அமைப்பையும், அழகையும் அறிவதற்கு உதவுவன 'எழுத்தின் கதை', 'சொல்லின் கதை', 'மொழியின் கதை', 'மொழி நூல்', 'மொழி வரலாறு', 'மொழியியல் கட்டுரைகள் (முதற்பகுதி)' என்பனவாகும்.

இவற்றைப் போன்றே, இலக்கியத்தின் இயல்புகளை உணர்ந்து, அவற்றைச் சுவைக்கவும், இலக்கிய இன்பத்தில் மூழ்கித் திளைக்கவும் 'இலக்கிய ஆராய்ச்சி', 'இலக்கியத்திறன்', 'இலக்கிய மரபு' எனும் திறனாய்வு நூல்கள் உறுதுணையாக உள்ளன.

தமிழிற்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டிற்கும் பொன்றாப் புகழைத் தேடித் தந்துள்ள திருக்குறளை, ஓரளவிற்குக் கல்வியறிவு பெற்றோரும், தாமே படித்துப் புரிந்து கொள்ள உதவும் வகையில், பேராசிரியர் மு.வரதராசனார் 'திருக்குறள் தெளிவுரை' எனும் நூலை இயற்றியுள்ளார்.

சமுதாய மாற்றங்களின் காலக்கண்ணாடி

பேராசிரியர் மு.வரதராசனார் படைத்துள்ள இலக்கியங்கள், இயற்றியுள்ள நூல்கள் யாவும், அவருடைய காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக உள்ளன; கலையுணர்வோடு அழகுணர்ச்சியும் கைகோத்துச் செல்லுகின்றன; அவருடைய ஆளுமையின் தன் வெளிப்பாடாக அவை அமைந்துள்ளன.

மரபுவழித் தமிழ்ப்பணி

டாக்டர் மு.வரதராசனார் காலத்திற்கு முன்னர், புலவர்களும் பண்டிதர்களும் பெரிதும் பழைய இலக்கியங்களுக்குப் புது விக்கம் தரும் வகையில் உரைகள் எழுதுவதும், நயமிகு விளக்கங்கள் தருவதும், சொற்பொழிவுகள் செய்வதும் தங்கள் தமிழ்ப்பணியாகக் கருதி வந்தனர்; விரல்விட்டு எண்ணக்கூடிய சில அறிஞர்கள் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய ஆராய்ச்சியின் பெரும்பகுதி குறிப்பிட்ட ஒரு புலவர் அல்லது ஓர் இலக்கியத்தின் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகவே இருந்தது.

கவித்திறன் வாய்ந்த புலவர்கள் தலபுராணம் பாடுவதிலும் உலா, தூது, மாலை, சிந்து போன்ற பிரபந்தங்களை இயற்றுவதிலும் தங்கள் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி வந்தனர். மற்றும் சிலர், பள்ளிப் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் பாடநூல்களை எழுதுவதில் கருத்தைச் செலுத்தி வந்தனர். இத்தகைய தமிழ்ப்பணிகளைக் குறையாகக் கருதத் தேவையில்லை. பெரும்பாலான தமிழ் அறிஞர்கள் மரபுவழிப்பட்ட இலக்கியப் பணிகளைச் செய்து கொண்டிருந்த காலத்தில், பேராசிரியர் மு.வரதராசனார் மட்டும் ஏன் புதிய வழிகளை நாடினார் என்பதை அறிவதற்கே, அவருக்கு முற்பட்ட காலத்திலும் – ஓரளவிற்கு அண்மைக்காலம் வரையிலும், தமிழறிஞர்களின் – கல்விப்பணியில் ஈடுபட்ட தமிழறிஞர்களின் மனப்போக்கும் படைப்புத்திறனும் இருந்துவந்த நிலை கோடி காட்டப்பட்டது.

உரைநடை வளர்ச்சிக்குப் பன்முகப்பணி

உரைநடை இலக்கியம் ஆங்கிலக்கல்வி முறையால் ஆக்கமும் ஊக்கமும் பெற்றது. அத்துடன் அச்சு இயந்திரப் பயன்பாடு பெருகியது. அதன் விளைவாக உரைநடையில் எழுதுவது பெருவழக்கிற்கு வந்தது. இந்நிலையில், தமிழைத் திட்டமிட்டு வளர்க்க முன்வந்த மு.வ.அவர்கள், தளர்நடையிட்டுத் தத்தித் தத்தி நடந்த தமிழ் உரைநடைக் குழந்தைக்குப் பலவகையான ஊட்டச் சத்துக்களைத் தேடிக் கொண்டு வந்து, ஊட்டி வளர்க்கலானார். அதன் விளைவாகத் தமிழ் உரைநடைக் குழந்தை, புதினங்களையும், சிறு கதைகளையும், சிறு நாடகங்களையும் விளையாட்டுப் பொம்மைகளாகக் கொண்டு, விளையாடி மகிழ்ந்தது; கற்பனைக் கடிதங்களையும், சிந்தனைக் கட்டுரைகளையும் வானத்தில் பறக்க விட்டுச் சிரித்து மகிழ்ந்தது; வாழ்க்கை வரலாற்று நூல்களையும் திறனாய்வு நூல்களையும் கற்று, காளைப்பருவம் எய்தியது; மொழியியல் நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் கற்று அறிவு முதிர்ச்சியும், ஆராய்ச்சி மனப்போக்கும் பெற்று வளர்ந்தது.

தொடாத துறை

தமிழ் உரைநடையை வளர்க்க அவர் ஈடுபடாத ஒரு துறை உண்டு. அது பத்திரிகைத் துறையாகும். திரு.வி.க. போன்றவர்கள் பத்திரிகைத் துறையில் ஈடுபடுமாறு வற்புறுத்தியும், பேராசிரியர் அத்துறையில் ஈடுபடாதது வியப்பிற்குரியதாகும்.[33] அவர் பத்திரிகை ஆசிரியராக விளங்கவில்லையே தவிர, அவருடைய கட்டுரைகளை நாளிதழ்களும், வார, மாத இதழ்களும், ஆண்டு மலர்களும் சிறப்பு விழா மலர்களும் தவறாமல் தாங்கி வெளிவந்துள்ளன. அவருடைய கதைகள் சில இதழ்களில் வெளிவந்தன. அவருடைய எழுத்துரைகள், தம் பத்திரிக்கைகளில் இடம்பெற்றால், அவற்றிற்குத் தனிச்சிறப்பும், தனிமதிப்பும் உண்டாகும் என்று கருதிய பத்திரிகை ஆசிரியர்கள் மிகப் பலராவர்.

உரைநடையை வளர்க்க சிறந்த கருவி

தமிழ் உரைநடையை விரைவாகவும், வளமாகவும் வளர்ப்பதற்குரிய சிறந்த கருவியாக டாக்டர் மு.வரதராசனார், புனைகதைகளைக் கொண்டார். எளிதில் மக்கள் உள்ளத்தைக் கவரத் தக்க இலக்கியத்துறை, புனைகதைத் துறையே ஆகும். இது நெகிழ்ச்சி மிக்க இலக்கிய வகை, சிக்கலான கருத்துகளை, நீதிகளைக் கதைகளாகக் கற்பித்துக் கூறுவர். இது உலகம் முழுவதும் நெடுங்காலமாக வழக்கிலிருந்து வரும் இலக்கியத் திறனாகும். எனவே மு.வ.அவர்கள், தம் தமிழ்ப்பணிக்கு முதன்மையான துறையாகப் புனைகதையைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பு இல்லை.

ஆனால், 'தமிழாசிரியர்கள் கதை எழுதலாமா? ஆழ்ந்த புலமை உடைய புலவர்கள் கதைகள் எழுதுவதில் தங்கள் அறிவாற்றலையும் உழைப்பையும் வீணாக்குவார்களா?' என்று மரபுவழி வந்த தமிழ் அறிஞர்கள் ஒரு பக்கம் அங்கலாய்த்தனர். அதே சமயத்தில் கதை எழுதும் கலை, கடவுள் தங்களுக்கு மட்டுமே கொடுத்த 'வரப்பிரசாதம்', என்று எண்ணிய எழுத்தாளர்கள், 'கதை எழுதுவதற்குச் சில புதுமைப் பண்டிதர்கள் புறப்பட்டுள்ளார்களே; இவர்கள் கடையில் விற்கும் கத்திரிக்காய் என்று கதையை நினைத்துக்கொண்டார்களா? ஏதோ பழைய பாடல்களுக்கு அர்த்தம் எழுதுவதை – காண்டிகையுரை, விருத்தியுரை எழுதுவதை – விட்டுவிட்டு, இவர்கள் ஏன் இந்த வம்புக்கு எல்லாம் வர வேண்டும்? இதெல்லாம் இவர்களுக்குக் கைவரக்கூடிய கலையா?' என்று பேராசிரியர் மு.வ. அவர்களை எள்ளி நகையாடினர்.

இவ்விருசாராரின் போக்கையும் நேரில் கண்ட மற்றொரு தமிழறிஞரான டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்.

> "பண்டிதர்களாகவோ, அறிஞர்களாகவோ சிறப்புற முடியாமல் தோல்வியுற்றவர்களின் பொழுதுபோக்கிற்குரிய வழியே, புதினம் படைக்கும் கலையாகும் என்று பண்டிதர்கள் கருதிய காலம் ஒன்றுண்டு. அக்காலத்தில், இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியராக இருக்கும் மு.வரதராசன் புனைகதைகளைப் படைக்கத் தொடங்கினார். அவர், புதினங்களைப் படைக்கும் கலைக்கு, மதிப்பையும் சிறப்பையும் பண்டிதர் உலகிலும் தேடித்தந்துள்ளார்."[34]

என்று உண்மையை உணர்ந்து போற்றியுள்ளார்.

இவற்றால் மு.வரதராசனார், தம் இலக்கியப் பணியைத் தொடங்கிய காலத்தில் பலவகையான எதிர்ப்புகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளானார் என்பது புலனாகின்றது. ஆயினும், அவற்றைக் கண்டு அவர் மனம் சோர்வுறவில்லை. புதுமைப் பாங்கிற்கேற்பத் தமிழ் மக்களின் எண்ணப்போக்கினை மாற்றி ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்த அவர் விரும்பினார். அதற்காக அயராது தம் இலக்கியப் பணியைத் தொடர்ந்து அவர் செய்து வந்தார்.

இப்பணிகளால் பேராசிரியர் மு.வரதராசனார், புதுமைப்பாங்குக் காலத்துத் தலைசிறந்த தமிழ் உரைநடை ஆசிரியர்களுள் முதன்மை இடத்தைப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளார். அவருடைய படைப்புக்கள் பலதிறப்பட்டன. புதினமாக இருந்தாலும், நாடகமாக இருந்தாலும், கட்டுரையாக இருந்தாலும், மொழியியல் நூலாக இருந்தாலும், சிறுவர்களுக்குரிய பேச்சுரையாக இருந்தாலும், வாழ்க்கை வரலாறாக இருந்தாலும்.. அனைத்திலுமே ஒரே

வகையான வீறமைதியும், தெளிவும், சமநிலை அமைதியும், பகட்டு ஆரவாரமின்மையும் பேராசிரியர் மு.வரதராசனாருடைய உரைநடையின் சிறப்பு இயல்புகளாக அமைந்துள்ளன என்பர் டாக்டர் ஆர்.இ.ஆஷெர்,[35] அவருடைய கருத்து உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை மு.வ.வின் நூல்களை ஒருமுறை மேற்போக்காகப் படிப்போரும் எளிதில் உணர்வர்.

இவ்வாறு, பேராசிரியர் மு.வரதராசனாரின் நூல்களைப் பொதுவாக நோக்குகின்றபொழுது, இக்காலத் தமிழ் இலக்கியப் போக்குகள் சில புலனாகின்றன. அவை:

1) 'வாழ்வாவது மாயம்' எனும் வாழ்வு மறுப்புக்கொள்கை, தமிழ் இலக்கியத்திலிருந்து மறையத் தொடங்கிவிட்டது; 'வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாக, நலமாக, சிறப்பாக வாழ்வதற்கே!' எனும் கொள்கை, அதில் ஆழ வேரூன்றத் தொடங்கியுள்ளது.

2) சிறப்புமிகு சமவுடைமை சமுதாய அமைப்பை உருவாக்க, 'சேரவாரும் செகத்தீரே!' எனத் தமிழ் இலக்கியம் அழைப்பு விடுக்கிறது.

3) தனிமனிதனை மதித்துப் போற்றும் மனித நலக்கொள்கை பேராற்றல் பெற்று வருகிறது.

4) தனிநிலையில், ஆன்மிகச் சிந்தனை அடக்குமுறைக்கு ஆளாகாமல், வளர்ச்சியுற்று வருகிறது.

5) மனிதனுடைய உரிமை வேட்கை பல வழிகளில் வெளிப்பட்டு வருகிறது.

6) விரைவாக மாற்றமுறும் இயல்பு (Dynamism) மக்களிடையே வளர்ந்து வருகிறது.

7) இடையறாமல் புத்தம் புதிய பயன் மதிப்புகளைப் படைத்தளிப்பதில் சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வியல்புகள் யாவும், தமிழ் இலக்கியத்திற்குப் புதுமையானவை; அண்மைக்காலத்தில் தோன்றி வளர்ந்து வருபவை இத்தகைய புதுமைப் பண்புகளையும் அண்மைக்காலத்தின் போக்குகளையும் கொண்டதே புதுமைப்பாங்கு (Modernism) என்பதாகும். கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக, இப்புதுமைப் பாங்கினைத் தமிழ் மக்களிடையே பரப்பும் பணியினைப் பேராசிரியரின் நூல்கள் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்து வந்துள்ளன.

இவ்வகையில் பேராசிரியர் மு.வரதராசனாரின் தமிழ்ப்பணி, தனித்தன்மை வாய்ந்ததாகும். தமிழக மறுமலர்ச்சி இயக்கம்தந்த

பேராசிரியராகிய மு.வ.அவர்களின் இலக்கியப்பணி, தமிழிற்குப் புத்துணர்ச்சி ஊட்டியுள்ளது; புதுப்பொலிவைச் சேர்த்துள்ளது; புதியகாலச் சூழலுக்கேற்பத் தமிழ்மக்கள் வாழ்வும் வழிகாட்டி வருகிறது.

குறிப்புகள்

1. Diana Laurenson and Alan Swingwood, The Sociology of Literature, p.17.
2. V.V.Ramanan (ed.), The Light of Truth or Siddhanta Deepika, Vol.14; No.1; pp.1-24.
3. முன்னாள் கல்வி அமைச்சர் ஒருவர் இக்கருத்தை 1948இல் கூறியுள்ளார்.
4. உலகப்பேரேடு, பக்.126.
5. அன்னைக்கு, முன்னுரை.
6. மேற்படி
7. S.P.Aiyer, Modernization of Traditional Society, pp.4-5.
8. B.Kuppuswamy, Social Change in India, p.142.
9. திரு.வி.கலியாணசுந்தரனார், சமரச தீபம், முன்னுரை, பக்.15.
10. Radhakamal Mukerji, The way of Humanism, East and West, pp.VIII-IX.
11. தங்கைக்கு, பக்.22.
12. நா.பார்த்தசாரதி (பதி.), ‘இலக்கியச் சந்திப்பு’, தீபம், மார்ச்சு 1971; பக்.53–54.
13. (அ) ஆண் பெண் சமத்துவம்

    அந்த நாள், பக்.45, 71, 125; அல்லி, பக்.6, 11, 253; கயமை, பக்.119; கள்ளோ காவியமோ, பக்.25, 26, 48, 53, 95; காதல் எங்கே?, பக்.43, 49, 56; செந்தாமரை, பக்.63; தங்கைக்கு, பக்.10, 11, 22, 29, 32, 78; நெஞ்சில் ஒரு முள், பக்.22, 62, 185; பாவை, பக்.62; பெற்ற மனம், பக்.143, 147; மண்குடிசை, பக்; 46, 75, 240, 283; மலர்விழி, பக்.70, 217; மனச்சான்று, பக்.91; வாடாமலர், பக்.30, 33, 192, 239.

    ஆ) காதல்

    அகல்விளக்கு, பக்.60, 301; அன்னைக்கு, பக்.37; கயமை, பக்.216; கள்ளோ காவியமோ, பக்.34; காதல் எங்கே? பக்.12,

60; செந்தாமரை, பக்.75, 92, 93, 99, 113, 131, 136, 143, 159; தங்கைக்கு, பக்.17; நெஞ்சில் ஒரு முள், பக்.177; பாவை, பக்.141; மலர்விழி, பக்.137.

இ) திருமணம்

உலகப் பேரேடு, பக்.116; கரித்துண்டு, பக்.241; காதல் எங்கே? பக்.68; நெஞ்சில் ஒரு முள், பக்.25, 284; மண்குடிசை, பக்.456.

ஈ) கற்பு

அகல் விளக்கு, பக்.110; அந்தநாள், பக்.63, 65, 173, 189; அல்லி, பக்.88, 108, 252; கரித்துண்டு, பக்.123, 130, 221, 226, 230, 232, 233; கள்ளோ காவியமோ, பக்.98, 152; தங்கைக்கு பக். 23; நெஞ்சில் ஒரு முள், பக்.175, 271, 289; பழியும் பாவமும், பக்.20; பெற்றமனம், பக்.337; மண்குடிசை, பக்.41, 59; மலர்விழி, பக்.138, 195, 197.

உ) பெண்ணுரிமை

அந்த நாள், பக்.63; அல்லி, பக்.69; கரித்துண்டு, பக்.120, 232, 233; கள்ளோ காவியமோ, பக்.82; கி.பி.2000, பக்.37; தங்கைக்கு, பக்.12, 20, 26, 37, 42; நெஞ்சில் ஒரு முள், பக்.9, 63, 65; பாவை, பக்.68, 120; பெற்ற மனம், பக்.298; மலர்விழி, பக்.83, 129, 252; வாடாமலர், பக்.334, 335.

ஊ) வாழ்க்கைப் போராட்டம்

அகல்விளக்கு, பக்.2181 கி.பி.2000, பக்.36, 52; குறட்டைஒலி, பக்.26; செந்தாமரை, பக்.139; தங்கைக்கு, பக்.13, 23, 29, 43, 49, 66, 75, 80–82; நெஞ்சில் ஒரு முள், பக்.86;

14. *அரசியல் கலைகள், பக்.33, 51, 58, 102; அறமும் அரசியலும், பக்.16–18; 9–118; 126–128; அன்னைக்கு, பக்.18–19; 54–56; உலகப்பேரேடு, பக்.16; கயமை, பக்.134, 135, 232; கரித்துண்டு, பக்.43; கி.பி.2000, பக்.76; தம்பிக்கு, பக்.19; நண்பர்க்கு, பக்.73; நாட்டுப்பற்று, பக்.60, 79, 84, 92–94; 126; மண்குடிசை, பக்.205; மண்ணின் மதிப்பு, பக்.172, 186, 203, 204; மொழிப்பற்று, பக்.57; வாடாமலர், பக்.224.*

15. *உலகம் உய்ய, பக்.17; கயமை, பக்.227, 239, 325, 328, 330; கரித்துண்டு, பக்.52, 105, 107, 137; கி.பி.2000, பக்.19, 95, 59–61 66–79; தம்பிக்கு, பக்.9,33; பழியும் பாவமும், பக்.97, 103, 106; மண்குடிசை, பக்.73, 277; மண்ணின் மதிப்பு, பக்.151, 154, 162–164; 165–170; 189; வாடாமலர், பக்.161, 277, 279.*

16. (அ) உணர்ச்சிப் பிண்டங்கள்

தம்பிக்கு, பக்.10–14; நண்பர்க்கு, பக்.71–72.

ஆ) ஒற்றுமை இன்மை

இளங்கோ, பக்.14, 15; கரித்துண்டு, பக்.42; தம்பிக்கு, பக்.29, 30, 33, 51, 54; நண்பர்க்கு, பக்.74; நாட்டுப்பற்று, பக்.132–138; 139–141; பெற்றமனம், பக்.149.

இ) கடமை மறதியும் வினைத்திட்பம் இன்மையும்

அல்லி, பக்.273; அன்னைக்கு, பக்.27; கள்ளோ காவியமோ, பக்.165; தம்பிக்கு, பக்.17; நண்பர்க்கு, பக்.76–78; மூன்று நாடகங்கள், பக்.21.

ஈ) சாதிக்கொடுமை

கள்ளோ காவியமோ, பக்.25, 27; கி.பி.2000, பக்.92; குறட்டை ஒலி, பக்.53; செந்தாமரை, பக்.108; தம்பிக்கு, பக்.14; நண்பர்க்கு, பக்.44; நாட்டுப்பற்று, பக்.64, 65; நெஞ்சில் ஒரு முள், பக்.46; பாவை, பக்.19, 41, 57, 77, 124, 130; பெற்ற மனம், பக்.121; மண்குடிசை, பக்.54, 354; மண்ணின் மதிப்பு, பக்.55–60, 62–70, 138; மலர்விழி, பக்.27; மொழிப்பற்று, பக்.126–128; வாடாமலர், பக்.29; விடுதலையா? பக்.48.

உ) தற்காப்பு உணர்ச்சி இன்மை

அன்னைக்கு, பக்.11; கரித்துண்டு, பக்.43; தம்பிக்கு, பக்.16; மலர்விழி, பக்.104.

ஊ) தன்னலமும் பொறாமையும்

அந்த நாள், பக்.30; தம்பிக்கு, பக்.31, 34, 41.

எ) நல்லவர்கள் வல்லவர்களாக இல்லை.

கயமை, பக்.212; தம்பிக்கு, பக்.8, 31; நண்பர்க்கு, பக்.1;

ஏ) பிறர் சொல்லில் மயங்குபவர்

அன்னைக்கு, பக்.12; தம்பிக்கு, பக்.13, 15, 44.

ஐ) புகழ் ஆசை

இளங்கோ, பக்.44–45; மண்ணின் மதிப்பு, பக்.105.

ஒ) மானவுணர்வு பழம்பெருமை நாட்டமும்

தம்பிக்கு, பக்.37, 40, 44, 55; நண்பர்க்கு, பக்.71, 76; நாட்டுப்பற்று, பக்.98; பெற்றமனம், பக்.263.

ஓ) மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இல்லாதவர்

அன்னைக்கு பக்.10; தம்பிக்கு, பக்.39; மொழிப்பற்று, பக்.74; வாடாமலர், பக்.164.

17. அரசியல் அலைகள், பக்.87; நாட்டுப்பற்று, பக்.40; மலர்விழி, பக்.198; மனச்சான்று, பக்.16, 20, 26, 31, 38, 114; கிம்பளம், (நாடகம்), பக்.41–47.

18. அகல் விளக்கு, பக்.147; அந்த நாள், பக்.88, 141; அரசியல் அலைகள், பக்.88, 99, 101; அல்லி, பக்.253; கயமை, பக்.40, 206, 207, 241, 289; கரித்துண்டு, பக்.80; காதல் எங்கே? பக்.84; 'கிம்பளம்' (நாடகம்), பக்.4–77; தங்கைக்கு, பக்.36, 37; நாட்டுப்பற்று, பக்.37; நெஞ்சில் ஒரு முள், பக்.410; பழியும் பாவமும், பக்.39, 73, 93; மண்குடிசை, பக்.54, 347, 371; மண்ணின் மதிப்பு, பக்.47, 122, 127; மலர்விழி, பக்.160; மனச்சான்று, பக்.8, 63, 72, 76, 78, 122, 125; யான் கண்ட இலங்கை, பக்.82; வாடாமலர், பக்.163.

19. நண்பர்க்கு, பக்.73.

20. அறமும் அரசியலும், பக்.55–58; உலகம் உய்ய, பக்.7, 9, 13–17; மண்ணின் மதிப்பு, பக்.160.

21. அந்த நாள், பக்.162; அரசியல் அலைகள், பக்.31; உலகம் உய்ய பக்.13–17; கயமை, பக்.311; நண்பர்க்கு, பக்.11, 61, 93, 106 நாட்டுப்பற்று, பக்.10, 50 பழியும் பாவமும், பக்.44; மண்ணின் மதிப்பு, பக்.199; மனச்சான்று, பக்.119.

22. அல்லி, பக்.254, 255; அன்னைக்கு, பக்.37, 53; கயமை, பக்.154, 318, 432; கரித்துண்டு, பக்.125, 155; கள்ளோ காவியமோ, பக்.56 காதல் எங்கே? பக்.29, 33, 51, 67, 84; கி.பி.2000, பக்.54, 92 தங்கைக்கு, பக்.50, 53; நண்பர்க்கு, பக்.26, 67, 105; நாட்டுப்பற்று, பக்.31, 95, 96; நெஞ்சில் ஒரு முள், பக்.12, 22, 87, 109, 245, 345; பழியும் பாவமும், பக்.22, 23, 98; பெற்றமனம், பக்.244, 274; மண்குடிசை, பக்.411; மலர்விழி, பக்.45, 48, 58; மனச்சான்று, பக்.101, 107, 110; வாடாமலர், பக்.166, 267, விடுதலையா? பக்.71, 73, 74, 80, 155.

23. அல்லி, பக்.55; கரித்துண்டு, பக்.244, 250, 251, 253; காதல் எங்கே? பக்.59; செந்தாமரை, பக்.34; தம்பிக்கு, பக்.36, 39, 44; நண்பர்க்கு, 153; நாட்டுப்பற்று, பக், 14, 18; நெஞ்சில் ஒரு முள், பக்.35, 82, 93, 95, 115, 117; பழியும் பாவமும், பக்.5; பாவை, பக்.173; பெற்ற மனம், பக்.151, 152; மண்குடிசை, பக்.45, 257, 291; மலர்விழி, பக்.231; வாடாமலர், பக்.167, 168, 200, 203.

24. அன்னைக்கு, பக்.34; உலகம் உய்ய, பக்.10, 22; தம்பிக்கு, பக்.5; பழியும் பாவமும், பக்.9; பாவை, பக்.9, 69, 171; மண்ணின் மதிப்பு, பக்.136; விடுதலையா? பக்.42.

25. அன்னைக்கு, பக்.26, 42; கரித்துண்டு, பக்.24, 59, 60; கள்ளோ காவியமோ, பக்.55, 135; கி.பி.2000, பக்.10, 20, 51; குறட்டைஒலி, பக்.44, 51, 53, 54, 79; தங்கைக்கு, பக்.44; தம்பிக்கு, பக்.8; நண்பர்க்கு, பக்.97; நாட்டுப்பற்று, பக்.13–16; பழியும் பாவமும், பக்.69; பெற்ற மனம், பக்.238, 283, 293, 355; மண்குடிசை, பக்.142, 373; மலர்விழி, பக்.43, 50, 123; யான் கண்ட இலங்கை, பக்.35, 85; விடுதலையா, பக்.72, 83.

26. அகல்விளக்கு, பக்.331; அன்னைக்கு, பக்.50; உலகம் உய்ய, பக்.8–10; கரித்துண்டு, பக்.74; தம்பிக்கு, பக்.8, 54; நண்பர்க்கு, பக்.33, 34, 48, 100; நாட்டுப்பற்று, பக்.40; பெற்ற மனம், பக்.114, மலர்விழி, பக்.40; மனச்சான்று, பக்.116.

27. அந்தநாள், பக்.26; அல்லி, பக்.273; உலகப்பேரேடு, பக்.45; கயமை, பக்.212; கரித்துண்டு, பக்.49; கி.பி.2000, பக்.51, 56, குறட்டை ஒலி, பக்.44; செந்தாமரை, பக்.24; தங்கைக்கு, பக்.47; தம்பிக்கு, பக்.40; நண்பர்க்கு, பக்.66, 86; பழியும் பாவமும், பக்.22; பெற்ற மனம், பக்.101, 134, 141, 216; மண்குடிசை, பக்.83, 212; மலர்விழி, பக்.38; மனச்சான்று, பக்.58; வாடாமலர், பக்.211.

28. அகல்விளக்கு, பக்,33, 128, 130, 156, 196, 206, 210, 216, 265, 266, 380; அந்த நாள், பக்.143; அல்லி, பக்.123; அன்னைக்கு பக்.20; கயமை, பக்.222–245, 338, 340; கரித்துண்டு, பக்.39 கி.பி.2000, பக்.48, 91, 92; குறட்டை ஒலி, பக்.18; செந்தாமரை, பக்.31, 40, 41, 42, 140; நண்பர்க்கு, பக்.42, 45, 46, 50, 52, 81, 84; நெஞ்சில் ஒரு முள், பக்.265 பாவை, பக்.168; மண்குடிசை, பக்.40, 43, 46, 51–53; 60; மலர்விழி, பக்.112, 151, 152, வாடாமலர், பக்.319, விடுதலையா? பக்.44, 45, 47.

29. (அ) ஆத்திகம்

அகல்விளக்கு, பக்.359; அரசியல் அலைகள், பக்.102, 108; அறமும் அரசியலும், பக்.52, 53, 58, 59, 65; அன்னைக்கு, பக்.34; கள்ளோ காவியமோ, பக்.73; கி.பி.2000, பக்.31–34; நல்வாழ்வு, பக்.8; நெஞ்சில் ஒரு முள், பக்.311–312; பெற்ற மனம், பக்.9. மண்குடிசை, பக்.473; மூன்று நாடகங்கள், பக்.72; வாடாமலர் பக்.174; விடுதலையா? பக்.71.

(ஆ) நாத்திகம்

அகல்விளக்கு, பக்.407; அந்த நாள், பக்.204; அன்னைக்கு, பக்.34; கயமை, பக்.196, 242, 244, 274, 275; கரித்துண்டு; பக்.250; கள்ளோ காவியமோ, பக்.73; நல்வாழ்வு, பக்.8; நெஞ்சில் ஒரு முள், பக்.310; மண்குடிசை, பக்.104, 473; மொழிப்பற்று, பக்.133; வாடாமலர், பக்.174; விடுதலையா? பக்.79.

30. அகல்விளக்கு, பக்.55; அரசியல் கலைகள், பக்.42, 80, 91, அன்னைக்கு, பக்.50; கயமை, பக்.221; கரித்துண்டு, பக்.251; கள்ளோ காவியமோ, பக்.33, 35, 136; பெற்ற மனம், பக்.153; மண்ணின் மதிப்பு, பக்.143; மலர்விழி, பக்.26; மொழிப்பற்று, பக்.81; விடுதலையா? பக்.39, 42, 45;

31. R.E.Asher, (1) 'Modern Literature in Tamil', in the Proceedings of the Third International Conference Seminar, Paris, 1970 pp.236.

2) 'Social Comment in South Indian Prosefiction' in South Asian Review, April, 1972; Vol 5; No.3; P.213.

32. இவ்வாய்வாளர் வந்துள்ள இம்முடிவிற்கு, 'நண்பர்க்கு' எனும் இந்நூலைப்பற்றி டாக்டர் ம.ரா.போ.குருசாமி அவர்களும் வந்துள்ளார் காண்க; மு.வ.முப்பால், பக்.64.

33. திரு.வி.கலியாணசுந்தரனார், திரு.வி.க.வாழ்கைக் குறிப்புக்கள், பக்.804–805;

34. "Dr.M.Varadarajan, the Professor of Tamil, in the Madras University has given dignity and respectability to novel writing even in the world of pandits, who thought of this art as the hobby of those who failed to become pandits or scholars"

- T.P.Meenakshisundaran,

A History of Tamil Literature, pi 182.

35. R.E.Asher, Some Landmarks in the History of Tamil Prose, P.47.

இயல் - 3
படைப்பு இலக்கியம்

இலக்கியம் கடந்த காலத்தின் கன்னி; நிகழ்காலத்தின் மனைவி, எதிர்காலத்தின் தாய். கடந்த காலத்தை அது படம்பிடித்துக் காட்டுகிறது; நிகழ்காலத்தில் தன்னுடைய அனுபவங்களை மக்களோடு பகிர்ந்து கொள்ளுகிறது; எதிர்காலத்தை உருவாக்க புதிய செல்வங்களை ஈன்று உதவுகிறது. இவ்வகையில் இலக்கியம் கடந்த காலத்தின் கன்னியாகவும், நிகழ்காலத்தின் மனைவியாகவும் எதிர்காலத்தின் தாயாகவும் விளங்குகிறது.

உரைநடை இலக்கியம்

மனித இனத்தின் அனுபவத்தை, கலைநயத்துடன் எடுத்துரைப்பதே இலக்கியம். விரிந்ததும், பரந்துபட்டதும், சிக்கலானதுமான அனுபவங்களைப் புலவன் – எழுத்தாளன் – வெளிப்படுத்த முயலுகிறான். இம்முயற்சியில் ஈடுபடும் பொழுது, அவனுடைய அறிவும் அனுபவமும், உணர்வும் உள்ளப்பாங்கும் பல்வேறு வகையில் வெளிப்படுகின்றன. அண்மைக்காலம் வரையில் பாட்டே – கவிதையே – இலக்கிய உலகில் தனிப்பெருஞ் சிறப்புடையதாகத் திகழ்ந்தது. ‘இலக்கியம்’ என்னும் சொல் கவிதைகளையே சுட்டும் வகையில் வழங்கி வந்தது. எனினும், கவிதையைக் காட்டிலும் ‘இலக்கியம்’ என்பது விரிந்த பொருளுடையது. கலையழகு மிக்க நாடகங்களையும், கருத்தாழமிக்க தத்துவ நூல்களையும் பாட்டு வடிவில் இயற்றுவதே மரபாக இருந்து வந்தமையால், கவிதையும் இலக்கியமும் ஏறக்குறைய ஒரு பொருள் பயக்கும், இரு சொற்களாகக் கருதப்பட்டு வந்தன.

ஐரோப்பியரின் வருகையால், தமிழில் உரைநடை வளர்ச்சியுற்றமை முன்னர் விளக்கப்பட்டது. மேற்கு நாட்டுக்கல்வியின் தாக்கத்தால், புதிய இலக்கிய வகைகள் தமிழில் தோன்றத் தொடங்கின. அவை யாவும், உரைநடையைச் சிறப்புமிக்க கருவியாகக் கொண்டு வளர்ந்தன; கற்பனைவளமும் கலையழகும் வாய்ந்த நாடகம், புதினம் (Novel), சிறுகதை, போன்ற இலக்கிய வகைகள் தமிழில் தழைத்தோங்கத் தொடங்கின. இதனைப் பேராசிரியர் மு.வரதராசனார்.

இலக்கியம் என்னும் கலைக்குடும்பத்தின் மூத்த மகளாய்ப் பிறந்து விளங்கிய பாட்டு என்னும் செல்வி, தொடக்கத்தில் ஒரே செல்வ மகளாக விளங்கிய காலம் பழங்காலம். காவியம், நாடகம், அகம், புறம் முதலிய எல்லாக் குடும்பப் பொறுப்புக்களையும் அந்த மூத்த மகளே மேற்கொண்டு செம்மையாக நடத்தி வந்தாள். அவளை அடுத்துத் தங்கையர் பிறந்து வளர வளர, அப்பொறுப்புக்கள் ஒவ்வொன்றாய் அவள் கையைவிட்டு நழுவலாயின. இன்று அவளுடைய தங்கையர் தொடர்கதை, சிறுகதை, நாடகம், கட்டுரை முதலியன மேற்கண்ட தமக்கையை விட்டுப்பிரிந்து செல்வாக்குடன் வாழ்கின்றனர்.[1]

என்று தெளிவுறுத்தியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இருவகை இலக்கியம்

அறிவியல் வளர்ச்சியால் மனிதனுடைய சிந்தனை, இன்று அகன்றும், விரிந்தும், புதிய வடிவங்களைப் பெற்றும் வருகிறது. அதற்கேற்ப, அவன் படைக்கும் இலக்கியங்களைப் பற்றிய எண்ணமும் விரிவடைகிறது. இலக்கியத்தின் உயிர்நாடி உணர்ச்சி. அவ்வுணர்ச்சி, சுவையுணர்ச்சி, கலையுணர்ச்சி, அழகுணர்ச்சி எனப் பலவாறாகப் போற்றப்படுகிறது. படிப்போரின் உள்ள உணர்ச்சிகளைத் தூண்டி, நவில்தொறும் நயம் பயப்பது ஒருவகை இலக்கியமாகும். இதையே சிறந்த இலக்கியமாகப் போற்றுவர். மற்றொரு வகை இலக்கியம் மக்களுடைய அறிவைத் தூண்டி, சிந்திக்குமாறு செய்து, செயலில் ஈடுபடுத்துவது ஆகும். இவ்வகை இலக்கியத்தில் உணர்ச்சி முதன்மை இடம் பெறுவது இல்லை; கருத்தே சிறப்பிடம் பெறுகிறது. இதனால், சுவைபயக்கும் பண்பு – இன்புறுத்தும் இயல்பு – இவற்றில் குறைவாக உள்ளது. இக்காரணத்தால், இவ்வகை இலக்கியத்தில் அறிவுறுத்தும் பண்பே மேலோங்கி நிற்கிறது.

இவ்வியல்புகளைக் கருத்தில் கொண்டு, இலக்கியத்தை அறிவு இலக்கியம் (Literature of knowledge) எனவும், ஆற்றல் இலக்கியம் (Literature of power) எனவும் பாகுபடுத்துவர். “அறிவு இலக்கியம் அறிவுறுத்துவதை நோக்கமாகக் கொண்டது. ஆற்றல் இலக்கியம் மனித உள்ளத்தை நெகிழச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது; இன்புறுத்தும் இயல்புடையது”[2] என்பர். அரசியல், அறவியல், வரலாறு, தத்துவம் போன்றவை அறிவுறுத்தும் இலக்கியங்களாகும். கவிதை, நாடகம், புதினம், சிறுகதை முதலியன ஆற்றல் இலக்கியங்களாகும்.

படைப்பு இலக்கியம்

ஆற்றல் இலக்கியத்தை, இக்காலத்தில் ‘படைப்பு இலக்கியம்’ (Creative Literature) எனப் போற்றுகின்றனர். தன்னுடைய

அனுபவத்தில் உணர்ந்த உண்மைகளைப் புலவன் ஒருவன் கற்பனை வண்ணத்தில் தோய்த்து, உணர்ச்சி எனும் மெருகிட்டு, கலையழகு ஒளிருமாறு படைக்கும் இலக்கியமே 'படைப்பு இலக்கியம்' எனலாம். படைப்புக்கலைக்கு இன்றியமையாது தேவைப்படுவது கற்பனைத் திறனாகும். கற்பனைத் திறத்தால் உள்ளத்தே பொங்கி வழியும் உணர்ச்சியை ஒழுங்குபடுத்தி, ஒருமைப்பாடுடைய முழுநிறை வடிவமாகக் கலையழகு தோன்ற வெளிப்படுத்துவதே. இலக்கியம் படைக்கும் முறையாகும். இவ்வாறு படைக்கப்படும் இலக்கியங்களைக் 'கற்பனை இலக்கியம்' (Imaginative Literature) எனவும் கூறுவர்.[3]

இவ்வாறு உணர்ச்சியும் கற்பனையும் இணைந்து உருவாகாத இலக்கியங்களை – புதியதாகப் படைக்கும் இயல்பு இடம்பெறாத இலக்கியங்களை 'அறிவு இலக்கியம்' அல்லது 'சிந்தனை இலக்கியம்' எனப் பாகுபடுத்துவதும் உண்டு.[4]

இவ்விளக்கங்களிலிருந்து, படைப்பு இலக்கியம் கலையழகும், கற்பனை வளமும் வாய்ந்தது என்பது புலனாகின்றது. பாட்டு, நாடகம், புதினம், சிறுகதை, கட்டுரை என்பன படைப்பு இலக்கிய மாளிகையில் அழகுடன் விளங்கும் ஐந்து அறைகளாகும். இவற்றுள் 'கட்டுரை' எனும் அறை, சிறிதும் கவர்ச்சியில்லாத அறையாகும். எனவே, படைப்பு இலக்கியத்துள் கட்டுரை பெரிதும் ஒளி குன்றிய ஒன்றாகவே இருந்து வருகிறது. படைப்பு இலக்கியம் எனும் பெயர், பாட்டு வடிவிலும், உரைநடை வடிவிலும் இயற்றப்படும் கற்பனை வளமிக்க நூல்களைச் சுட்டப் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், பெரிதும் உரைநடையில் இயற்றப்படும் கதை இலக்கியங்களைப் புனைகதை (Fiction) எனப் போற்றுகின்றனர். கற்பனையாகக் கதை சொல்லும் நூல்களைப் புனைகதை இலக்கியம் என்பர்.[5] அது மனித வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையதாகும். 'இல்லது, இனியது, நல்லது' எனத் தான் உணர்ந்தவற்றை, கதையின் மூலம் எழுத்தாளன் ஒருவன் புனைந்துரைப்பதே, புனைகதையாகும். இதனுள் புதினமும் சிறுகதையும் அடங்கும்; கவிதையும் நாடகமும் அடங்கா. புனைகதை பார்ப்பதற்குரியதே ஒழிய கேட்பதற்கு உரியதன்று; நாடகம் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் உரியது. கவிதை பெரிதும் கேட்பதற்கேயுரியது. மேலும், அவை பாட்டாலும் உரைநடையாலும் இயற்றப்படுவன. இக்காரணங்களால் அவை புனைகதைகளாகக் கொள்ளப்படுவதில்லை.[6]

புனைகதையும் புதினமும்

புனைகதையின் சிறப்புமிகு வகைகளாகப் புதினமும், சிறுகதையும் விளங்குகின்றன. இன்றைய இலக்கியங்களுள் மனித வாழ்க்கையோடு நெருக்கமான தொடர்புடையது புதினம். கற்பனை கலந்து கதையின் மூலம் மனித வாழ்க்கையை அது விளக்கியுரைக்கிறது. சிறப்புமிக்க புதினங்களின் கதைக்கூறு, வாழ்க்கை விளக்கத்திற்கு உறுதுணையாக நிற்கிறது.

'புனைகதை' புதினத்தைவிட விரிந்த பொருளுடையது. கதையைக் கூறுவதில் உண்டான புதுமைப்போக்கினை உணர்த்துவது புதினம். புனைகதை என்பது நயம் தோன்ற எடுத்துரைப்பது. பொதுவாகக் கதைப் பின்னல் (Plot), கதைப்பாத்திரங்கள் (Characters), சூழலமைவு (Setting) போன்றவை இவ்விரண்டிற்கும் தேவைப்பட்டாலும், புனைகதையில் கதைப்பின்னல் முக்கியத்துவம் பெறுவது இல்லை. இக்காரணத்தால் புதினமும் சிறுகதையும் பெறும் சிறப்பினைப் புனைகதை பெறுவதில்லை.[7]

புதினத்திற்கு வரையறுத்து இலக்கணம் கூறுவது எளிய செயல் அன்று. அதனுடைய அமைப்பும் உள்ளீடும் விரைவாக மாறிக்கொண்டே இருக்கிறது; விரிபுபட்டு வளர்ந்து கொண்டே செல்லுகிறது. இதனால், ஓர் இலக்கண வரம்பிற்கு உட்படுத்தி, 'இப்படித்தான் இருக்கும் என்றோ, இவை தாம் அதன் பண்புகள் என்றோ' திட்டவட்டமாகக் கூற இயலாது எனினும், எளிதில் இனங்கண்டு கொள்ளத்தக்க வகையில், அதை நாம் விளக்க இயலும்.

புதினம் என்பது உரைநடையில் அமைவது; கதை ஒன்றைச் சொல்லுவது;[8] நடப்பியல் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது; கதைப்பின்னலையுடையது; கதைப் பாத்திரங்களின் பண்புநல வளர்ச்சியைச் சித்திரிப்பது; காரண காரியத் தொடர்புபடுத்திக் கதையை எடுத்துரைப்பது; கணிசமான அளவிற்கு நீண்ட வடிவினையுடையது என்று ஒருவாறு அதை விளக்க இயலும்.[9]

புதினத்தின் வகை

புதினங்கள் பல வகைப்படும். நிகழ்ச்சிகள் மிக்க புதினம் (Novel of Action), பாத்திரப் படைப்பின் சிறப்பை உணர்த்தும் புதினம் (Novel of Character), துணிச்சல்மிகு போக்கிரிகளின் கதையைக் கூறும் புதினம் (Picaresque Novel), நாடகப் போக்கினதாகிய புதினம் (Dramatic Novel) என்பன உள்ளீட்டையும் உணர்த்தும் முறையையும் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.[10]

சமுதாயத்திற்கும், மனித வாழ்க்கைக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் கருத்தில் கொண்டு சமூகப் புதினங்கள் (Social

Novels), வரலாற்றுப் புதினங்கள் (Historical Novels), கற்பனை உலகப் புதினங்கள் (Utopias) எனவும் வகைப்படுத்தப்படுவது உண்டு.

புதினம் எந்த நோக்கத்தோடு படைக்கப்படுகிறதோ, அந்த நோக்கத்தின் அடிப்படையில் பொழுதுபோக்குப் புதினங்கள் (Novels of Entertainment) கருத்து விளக்கப் புதினங்கள் (Novels of Ideas), அறிவியல் சார்புடைய புதினங்கள் (Scientific Novels) எனவும் பாகுபாடு செய்யப்படுகின்றன. இவை யாவும், காலப்போக்கில் உண்டான வளர்ச்சியைக் காட்டுகின்றன.

படைப்பாளர் மு.வ.

படிப்பாளியான மு.வரதராசனார், படைப்பாளியாகவும் விளங்கியமை அவருக்குரிய தனிச்சிறப்பாகும். காலத்தின் போக்கினை உணர்ந்து, காலப்போக்கிற்குகந்த வகையில் மக்களுக்குப் பயன்படும் முறையில், தமிழ்மொழியினைப் புதிய துறைகளில் போற்றி வளர்க்க அவர் முயன்றார். அம்முயற்சியின் பயனாகப் படைப்பு இலக்கிய வகைகளையும், சிந்தனை இலக்கிய வகைகளையும் தமிழ்மொழி பெற்றது; இலக்கிய வளம் வாய்ந்த மொழியாக வளர்ந்தது.

எழுத்தாளரின் சிறப்பு

மு.வ.சிறப்புமிகு எழுத்தாளராக – படைப்பாளராக விளங்கிய காலத்தில், ‘எழுத்தாளன் யார்?’ என்னும் வினாவிற்குப் பின்வரும் விடையினைத் தந்துள்ளார்.

> வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். வாழ்க்கையின் ஏடுகளைப் பார்த்தும் படிக்காமல் செல்கின்றவர்களும் மனிதர்களே. மேற்போக்காகப் படிக்கின்றவர்கள் வாழ்க்கையைப் பற்றி எண்ணத் தெரிந்தவர்கள். ஆழ்ந்து படிக்கின்றவர்களே எழுதத் தெரிந்தவர்கள். அவர்களே எழுத்தாளர் என்று குறிக்கப் படுபவர்கள்.[11]

என்பது அவருடைய விளக்கமாகும். இவ்விளக்கம் அவருக்கு முற்றிலும் பொருந்துவதாகும். புலவராக, பேராசிரியராக, ஆராய்ச்சி அறிஞராக, துணைவேந்தராகச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த மு.வரதராசனார்,

> “சிறந்த படைப்பிலக்கியங்களைத் தோற்றுவிப்பவர்களை இறைவனின் செல்லப்பிள்ளைகள் என்று நினைக்கத் தோன்றுகிறது. அவர்களைச் சமுதாயம் போற்றிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நான்கூடத் தொடர்ந்து துணைவேந்தராகப் பணி செய்வதைவிட, இந்தப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று, எங்காவது தனிமையை நாடிச் சென்று இன்னும்

சில நாவல்களை எழுத விரும்புகிறேன். அதில்தான் எனக்கு முழுமையான மனநிறைவு ஏற்படுகிறது."[12]

என்று குறிப்பிட்டுள்ளமை, பேராசிரியர் மு.வ.வைவிட, படைப்பாளி மு.வ.வின் மனப்போக்கினை அறிந்து கொள்ள உதவுகிறது.

உலகின் பல பகுதிகளில் தோன்றிய படைப்பாளிகளும் இத்தகைய உள்ளத்துடிப்பும் பெருமித உணர்வும் உடையவர்களாக இருந்து வருவதைக் காணுகின்றோம்.

"ஓர் அருளாளராக வாழ்வதைவிட, அறிவியல் அறிஞராகச் சிறப்புறுவதைவிட, மெய்யுணர்வாளனாகச் செம்பொருளைக் காண முயல்வதைவிட, கவிஞனாகக் கற்பனையுலகில் மிதப்பதைவிட, நான் ஒரு புதினப்படைப்பாளனாக மக்களுடைய வாழ்க்கைப் போராட்டத்தினை அழகுறச் சித்தரிப்பதில் பெருமிதம் கொள்ளுகிறேன். வாழ்க்கையின் ஒளிமிக்க ஒரு புத்தகமே புதினம். அதைப் படைப்பவன் நான். எனவே, செம்மாந்த உள்ளத்தோடு நான் உலகை நோக்குகிறேன்."

என்று டி.எச்.லாரன்சு (D.H.Lawrence), 'பிறதுறை அறிஞர்களையும் அருளாளர்களையும் விட, தாம் சிறந்தவன்' என்று கருதுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

பேராசிரியர் மு.வ., படைப்பு இலக்கிய ஆசிரியராகச் சிறப்புறக் காரணமாக அமைந்தவை அவருடைய புதினங்கள், புனைகதைகள், சிறுகதைகள், நாடகங்கள், கற்பனைக்கடிதங்கள் எனும் பலவகைப் படைப்புகளாகும்.[14] இவை யாவும் மக்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டவை; கற்பனை வளம் வாய்ந்தவை; கலையழகு உடையவை. அவருக்குப் பொன்றாப் புகழைத் தேடித் தந்தவை. அவற்றின் அமைப்பையும் அழகையும் இனி விரிவாகக் காண்போம்.

மு.வ.வின் புதினங்கள் - பொதுநோக்கு

பேராசிரியர் மு.வரதராசனார் புதினத்தைப் படைப்பதில் ஈடுபாடு கொண்டிருந்தார். அதற்குரிய காரணத்தை, பிறருடைய புதினங்களுக்கு அவர் வழங்கிய முன்னுரைகளிலும் திறனாய்வு நூல்களிலும் குறிப்பாகச் சுட்டியுள்ளார் இந்தக் காலத்தின் போக்கிற்கு, உகந்தது புதினம் என்பது அவருடைய முடிவு.

இந்த இரண்டு நூற்றாண்டுகளாக மிக வேகமாக வளர்ந்துவரும் இலக்கியவகை நாவல். இதன் வளர்ச்சியால், காவியம் மறைகிறது என்றும், நாடகம் குறைகிறது என்றும் கவலைப்படுவோர் உள்ளனர். எளிதாகவும் விரைவாகவும் படித்து நுகரக்கூடியதாக இருத்தலால் வேகம் என்னும் பண்பு மிகுந்த இக்காலத்திற்கு ஏற்ற இலக்கியமாக, இது செல்வாக்குப்

பெற்று வருகிறது. மற்றொரு காரணமும் கூறலாம். மற்ற இலக்கியங்கள் கட்டுப்பாடுகள் மிகுந்தனவாக இருக்க, இது காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு கட்டுப்பாடுகளைத் தளர்த்திக் கொண்டு, உரிமையோடு வளரும் கலைத்துறையாக உள்ளது. ஆதலின் இதன் வளர்ச்சி தடுக்க முடியாதது எனலாம்.[15]

எனும் எண்ணத்தால் உந்தப் பெற்றவர் மு.வ. என்பது அவருடைய படைப்புகளினால் புலனாகிறது. வேறோர் இடத்தில் "உணர்ச்சியனுபவம் மிக்க புலவர்கள். புதிய இலக்கியங்கள் படைத்துத் தர முன்வரும்போது, பெரும்பாலும் அவ்வக்காலத்தில் செல்வாக்காக உள்ள துறையையும் முறையையுமே மேற்கொள்ளுகின்றனர்[16] என்று கூறுவதனாலும், அவர் புதினங்களைப் படைத்தற்குரிய காரணத்தை அறியமுடிகிறது.

யாருக்காக எழுதினார்?

தமிழினை வளர்க்க விரும்பிய மு.வ.விற்கு, உரைநடையே பலருக்கும் பயன்படத்தக்க கருவியாகத் தோன்றிற்று. எனவே, உரைநடையின் மூலம், தமிழை வளர்ப்பதற்குப் புதினமே கவர்ச்சிமிகு துறையாக வளர்ந்து வருவதை அவர் நன்குணர்ந்தார். ஓரளவிற்குக் கல்வி அறிவு பெற்றோரும், எளிதில் படிக்கத்தக்க இலக்கியத் துறையாகப் புதினம் பெருவாழ்வு பெற்று வருவதை அவர் புரிந்து கொண்டார். முடியாட்சிக் காலத்திற்கு ஏற்றது காப்பியம், கவிதை முதலியன என்றும், குடியாட்சிக் காலத்திற்கு ஏற்றது உரைநடையால் அமைந்த காப்பியம் எனக் கருதப்படும் புதினமே என்றும் கூறுவர்.[17]

'அவர் யாருக்காகப் புதினங்களைப் படைத்தார்? கற்றறிந்த புலவர்களுக்கா? அறிவில் சிறந்த அறிஞர்களுக்கா? வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சிந்தனையாளர்களுக்கா?' என வினாக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். வெளிப்படையாகவே ஒரு பேட்டியில் உயர்நிலைப்பள்ளிப் படிப்புள்ள இளைஞர்களுக்கும், குடும்ப மகளிர்க்கும் பயன்பட வேண்டும் என்னும் நோக்கத்தோடு, தாம் புதினங்களை எழுதியதாக அவர் தெரிவித்துள்ளார்.[18] அவருடைய புதினங்கள் யாருக்காக எழுதப்பட்டன என்பதை இதனால் அறிகிறோம்.

அவரே மற்றொரு பேட்டியில் இதனை நன்கு தெளிவுறுத்தியுள்ளார்:

> "நாவல் எழுதும்போதெல்லாம் யாருக்காக எழுதுகிறேன் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. முதலிலே எழுதத் தொடங்கிய உடனே உள்ளத்திலே அமைந்த கற்பனைக்குக் கலைவடிவம் கொடுத்து எழுத வேண்டும் என்ற ஒரு

நோக்கம்தான் இருக்கும். எழுதி முடித்த பிறகுதான், யாருக்காக எழுதுகிறேன் என்று எண்ணிப் பார்க்கிறேன். தமிழ் மக்களுக்காக எழுதுகிறேன் எனப் பொதுவாகச் சொன்னாலும், சிறப்பாகத் தமிழ்நாட்டிலே சிந்தனை ஆற்றலுடன் கற்பனை வளத்துடன் வளர விரும்புகின்ற இளைஞர்களுக்காக எழுதுகின்றேன் என்று சொல்லலாம்.[19]"

என்னும் அவருடைய சொற்களே, அவர் யாருக்காகப் புதினங்களைப் படைத்தார் என்பதை அறிய உதவுகின்றன.

எதற்காக எழுதினார்?

பேராசிரியர் மு.வரதராசனார் படைத்துள்ள புதினங்கள் யாவுமே, சமூகப் புதினங்களாக (Social Novels) உள்ளன. அறிவியல் வளர்ச்சிக்கும், இயந்திரத் தொழில்மய நாகரிகத்திற்கும் ஏற்ப, பழமைப் பற்றுமிக்கதாக உள்ள தமிழ்ச் சமுதாயத்தின் மனப்போக்கை மாற்ற வேண்டும் என்பது அவருடைய முதன்மையான நோக்கம். இதைப் பற்றிய செய்திகள் சில முந்திய இயலில் சுட்டிக்காட்டப்பட்டன.

கடந்தகால நிகழ்ச்சிகளை நிலைக்களனாகக் கொண்டது வரலாற்றுப்புதினம். மாறிவரும் காலத்திற்கேற்ற மாற்றங்களை – புதிய வளர்ச்சி நிலைகளை அதன் மூலம் உணர்த்த இயலாது. மற்றும், பழம்பெருமையை அறிவிப்பதற்கே வரலாற்றுப் புதினம் பெரிதும் பயன்படும். பேராசிரியரோ 'பழம் பெருமையைப் பேசிப்பேசியே தமிழன் கெட்டான்: செயலாற்றும் திறன் குன்றிப் போய்விட்டான்'[20] எனும் எண்ணம் உடையவர். இதனால், வரலாற்றுப் புதினங்களைப் படைக்க அவர் முயலவில்லை!

இன்றைய தமிழ்ச் சமுதாயத்தினை நலிவுறச் செய்யும் சமுதாய நோய்களைக் கண்டு மனம் குமைந்தவர் மு.வ; அதை அரித்துத் தின்னும் கொடிய பழக்கவழக்கங்களைப் பார்த்து மனம் புழுங்கியவர் மு.வ.; பழமைப்பற்றால் முரட்டுப்பிடிவாதத்தால் முன்னேற மறுக்கும் சமுதாயம் வாழ்க்கைப் போராட்டத்தில் பின் தங்க நேருமே என்று மனம் நைந்து உருகியவர் மு.வ. இவற்றிற்குரிய மூலகாரணங்களை அறிஞர் பெர்னார்ட்ஷாவைப்போல, ஆழச் சிந்தித்து, நுட்பமாக ஆராய்ந்து, தெளிவு பெற்றவராக மு.வ.விளங்கினார். 'சமுதாய உணர்வுமிக்க ஒரு தமிழ்ப்பேராசிரியர் மு.வரதராசனார், எனக் கூறினால், அது தவறாகாது. ஏனெனில், அவர் பேராசிரியராகவும், ஆராய்ச்சி அறிஞராகவும் மட்டும் விளங்காமல், சிறப்புமிகு சிந்தனையாளராகவும் திகழ்ந்தார். சமுதாய விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதைத் தவிர வேறு வழியில்லை' என்பதை மு.வ.உணர்ந்தார். 'இதை எவ்வாறு செய்வது?' என்பது அவருக்கு உண்டான பெருஞ்சிக்கல் எந்த அரசியல் கட்சியையும் சாராமல்,

தனித்து நின்று, தமிழ் மொழிப்பற்றை ஊட்டி, அதன் மூலம் தமிழ் மக்களின் இன்றைய அவல நிலையையும் கடந்தகாலத்தின் பெருமித நிலையையும் நினைவுபடுத்தி, 'நாம் யார்? நம் பண்பாடு எத்தகையது? இன்று எத்தகைய நிலையில் உள்ளோம்? இதற்கு என்ன காரணம்? நம்மிடம் உள்ள குறைகள் யாவை? இவற்றைப் போக்க – நல்லதொரு எதிர்காலத்தை அமைக்க வழி என்ன?' என்பனவற்றைச் சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு தமிழ்மகனும் உணருமாறு செய்ய வேண்டும் என்பது அவருடைய அவா. இதனை அவருடைய கடித இலக்கியங்களால் அறிகிறோம்.

திரு.வி.க போன்ற தமிழ்ச்சான்றோர்கள் பல்லாண்டுகள் இக்கருத்துக்களை மேடைகளில் எடுத்துரைத்தும், எதிர்பார்த்த அளவிற்குப் பயன் விளையாமல் போனதை மு.வ. நன்குணர்த்தினார். தமிழ்மக்கள் வாய்ச்சொல்லில் வீரர்கள் என்பதை எண்ணியெண்ணி வருந்தியவர் மு.வ. இதனால்தான்.

> "மேடைப்பேச்சு நம்முடைய உணர்ச்சி வெள்ளத்திற்குப் பெரிய வாய்க்காலாக இருந்து ஆத்திரத்தைத் தணித்து வற்றச் செய்து, நம்மைச் சோம்பேறிகளாக ஆக்குவது.[21]"

என்று அவர் எச்சரிக்கை செய்துள்ளார். மற்றும் "மேடையில் முழங்குவதைக் கொஞ்ச காலம் நிறுத்தி வைத்தாலாவது, இதை (சமுதாயச் சீர்கேடுகளை) எண்ணிப் பார்க்க ஒரு வாய்ப்பு உண்டாகும்"[22] என்று சமுதாயச் சீரழிவைப் பற்றிச் சிந்திக்குமாறு தூண்டுவதற்குரிய வழிவகைகளைக் கூறுகின்றார்.

நலிவுற்ற தமிழ்ச் சமுதாயத்திற்கு, முதலில் அவர் ஊட்டச்சத்து நிறைந்த நன்மருந்தினைக் கொடுத்தார். அதனால், எதிர்பார்த்த பயன் உண்டாகவில்லை எனவே, தீரா நோயுற்ற பகுதிகளைக் கண்டு அறிந்து அறுவை மருத்துவத்தின் மூலம், அவற்றைச் சமுதாயத்திலிருந்து நீக்கினால், தமிழ்ச்சமுதாயம் அழிந்தொழியாது பிழைத்து வாழும் என்று அவர் நம்பினார். இதனை, "இப்பொழுது எல்லாம் மரபுவழிப்பட்ட தமிழ்ப் பண்பாட்டிற்கு முரணான – முற்போக்கான – இன்றைக்குத் தேவையான செய்திகளை எடுத்துரைத்து வருகிறேன்" என்று பலரிடம் பேராசிரியர் தெரிவித்துள்ளமையால் அறிகிறோம்.[23]

சமுதாயம் நோயுற்றுள்ளது என்பதையும், இந்நோயினைப் போக்குவதற்குரிய வழிகள் யாவை என்பதையும் பேராசிரியர் மு.வ.தம்முடைய 'கடிதங்களி'லும் கட்டுரைகளி'லும் வெளிப்படையாகவே – மனம் திறந்து – பேசியுள்ளார்; இந்தக் கருத்துக்களை, அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணினார். அதற்குப் புதினத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். கதைகளின் வாயிலாகப் படிப்பவர் 'உள்ளத்தில்

புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில், அவர் பல புதினங்களைப் படைத்தார்' நோயுற்ற சமுதாயத்திற்கு 'மருந்து' கொடுப்பதற்கும் புதிய முறையை அவர் கையாண்டார்.

தொல்காப்பியனார் 'வாயுறை வாழ்த்து' என்பதற்குத் தந்துள்ள விளக்கம், புதினங்களின் மூலம் சமுதாய நோய்களைப் போக்குவதற்கு மு.வ.மருந்து அளிக்க முயன்ற முறைக்குப் பெரிதும் பொருந்துவதாகும்.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிதனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே[24]

என்பது தொல்காப்பியனார் தரும் விளக்கமாகும். "வேம்பினையும் கடுவினையும் போன்ற கடுஞ்சொற்களைத் தன்னகத்துக் கொள்ளாது, வருங்காலத்திற் பெரும்பயன் விளைக்கு மென்ற நல்ல நோக்கத்துடன் பாதுகாவற் சொல்லால் மெய்யறிவித்தலையே 'வாயுறை வாழ்த்து' எனத் தொல்காப்பியம்" அறிவிக்கிறது.

பேராசிரியர் மு.வ. தம் புதினங்களில் சமுதாயத்திற்குத் தேவையான கசப்பு மருந்துகளை, சுவைபயக்கும் 'கதை' எனும் இனிப்பினைப் பூசி, நயமாகக் கற்பவர் உள்ளம் கொள்ளுமாறு எடுத்துரைத்துள்ளார். இதனை அவருடைய புதினங்களில் இடம் பெற்றுள்ள சிந்தனையைத் தூண்டும் சீரிய கருத்துகளால் அறியலாம்.

> இன்றுள்ள சமுதாயம் மண்குடிசை போன்றது. அதில் எலிகள் வளை தோண்ட முடிகிறது. பெருச்சாளிகள் கடைக்காலையே தோண்டுகின்றன. பலவகைப் பூச்சிகளும் குடிபுகுகின்றன. எல்லாம் சேர்ந்து குடிசையைப் பாழாக்க முடிகிறது. மண்குடிசையாக உள்ளவரையில் இவைகளைத் தடுக்க முடியாது. ஒன்று குடிசையை விட்டு, இயற்கையோடு இயற்கையாய்க் குகையில் தங்கி வெட்ட வெளியில் திரிய வேண்டும் அல்லது, ஒழுங்கான கல்வீடு கட்டி வாழ வேண்டும் அப்போது எலிகள் முதலியன தோன்றி வளர முடியாது.[25]"

என்று இன்றுள்ள சமுதாய நிலையைப் படம்பிடித்து அவர் காட்டியுள்ளார்; சமுதாயத்தைச் சீரழிக்கும் தீய சக்திகளிலிருந்து அதனைக் காப்பதற்குரிய சிறந்த வழி 'கல் வீடு, போன்ற வலிமையும், தற்காப்பும் நிறைந்ததாகச் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பதை அவர் நயமாகத் தெரிவிக்கின்றார்.

'சமுதாயத்தை எளிதில் மாற்றிவிட – திருத்திவிட இயலுமா?' எனும் எண்ணம் – ஐயம் எழுவது இயற்கை. இதற்கு, அவரே "நம்மால் உடனே மாற்றியமைக்க முடியாமற் போகலாம்;

மாற்றியமைக்க வேண்டும் என்று எண்ணுவது நம்மால் ஆகும்; எண்ணிய எண்ணத்தைப் பிறரிடம் பரப்ப நம்மால் ஆகும். திட்பமாக எண்ணிப் பிறர்க்கும் உணர்த்த முடிந்தால் அதுவே பெரிதுதான், இன்று எண்ணத்தை வெற்றியுடன் பரப்பிவிட்டால், நாளை அது எப்படியும் செயலாக உருக்கொள்வது திண்ணம், விதைத்த விதை முளைக்கத் தவறினாலும் தவறும்; பெரும்பாலோர் என்னும் எண்ணம் செயலாகத் தவறாது"[26] என்று விளக்கமும் தந்துள்ளார்.

இவை யாவும், எண்ணத்தின் வலிமையை உணர்ந்து, சிந்திக்கும் ஆற்றலை வளர்த்து நோய் தீர்க்கும் மருந்து போன்ற கருத்துகளைச் சமுதாயத்தில் பரப்பினால், என்றைக்காகிலும் ஒருநாள், அது பயன் தந்தே தீரும் எனும் நம்பிக்கையுடையவர் பேராசிரியர் மு.வ என்பதைப் புலப்படுத்துகின்றன. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே, அவர் சமூகப் புதினங்களைப் படைத்திருத்தல் கூடும். இதனால் சில நோக்கங்களுக்காகப் புதினங்களைப் படைத்த புதினப் படைப்பாளர் (Novelist with a purpose) என அவரைச் சுட்டுவது பொருத்தமாகும்.

இவ்வகையில், "பசிப்பிணி மருத்துவன் பண்ணனைப்"[27] போன்று, சமுதாயப் பிணிகளைத் தீர்க்க முயன்ற 'சமுதாய மருத்துவராக'ப் பேராசிரியர் மு.வரதராசனார் காட்சி தருகிறார்.

இதை, முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, திரு.வி.க. நன்கு உணர்ந்துள்ளார்.

> "வரதராசனார் தமிழறிஞரா? சீர்திருத்தக்காரரா? அவர் தமிழறிஞர் என்பது வெள்ளிடைமலை. சீர்திருத்தக்காரர் என்பது உள்ளிட்ட விளக்கு. அவரது சீர்திருத்தப் பேச்சுக்களை யான் பலமுறை செவிமடுத்துள்ளேன். அவர் வாழ்க்கைச் சீர்திருத்தக்காரர் – சமூகச் சீர்திருத்தக்காரர் – நாட்டுச் சீர்திருத்தக்காரர் – என்பதில் ஐயமில்லை."[28]

என்பது திரு.வி.க அவர்களின் துணிவாகும். இம்முடிவும் மேற்கண்ட கருத்தினை அரண் செய்கிறது.

பொதுப் பண்புகள்

டாக்டர் மு.வ.அவர்களுடைய படைப்பு இலக்கியங்களில் பொதுவான பண்புகள் சில காணப்படுகின்றன. முதலாவதாக அவை யாவும் சமுதாயச் சீர்கேடுகளைச் சித்திரிப்பனவாக உள்ளன. சமுதாயத்தின் அடிப்படை அலகாக உள்ளது குடும்பம். அந்தக்குடும்ப வாழ்க்கை இயந்திர மயமாக்கப்படும் நாகரிகத்தால், நிலைகுலைந்து வருகிறது. அதனால், குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும்

ஆடவர், மகளிர் இடையேயுள்ள பிணைப்புகள் தளர்ந்து, உறவுகள் முறிந்து போகின்றன.

மற்றும், பெண்களுக்கு உரிமைகள் சில முதன்முதலாகக் கிடைத்துள்ளன. அப்புதிய உரிமைகள், பெண்களின் மனப்போக்கை, வாழ்க்கையை எவ்வாறு பாதித்து வருகின்றன என்பன போன்ற செய்திகளை விளக்கும் வகையில் அவருடைய புதினங்கள் அமைந்துள்ளன.

நடுத்தர வகுப்பினர்

சமுதாயத்தின் இடைத்தட்டில் உள்ள மக்களுடைய வாழ்க்கைப் போராட்டங்களை, அவருடைய புதினங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. சமுதாயத்தின் அடித்தட்டில் உள்ள தொழிலாளிகள், வேலைக்காரர்கள், பிச்சைக்காரர்கள் போன்றவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை ஓரளவிற்கு மு.வ.அவர்கள் கோடிகாட்டியுள்ளார்.[29] எனினும், பேரளவிற்கு அவருடைய கதைகளில், புதியதாக உருவாகிக் கொண்டிருக்கும் நடுத்தர வகுப்பினரான எழுத்தர், ஆசிரியர், சிறு வாணிகம் செய்வோர், சிறு நிலக்கிழார், ‘டிக்கட்’ பரிசோதகர், வழக்கறிஞர், செவிலி (நர்சு)யர், எழுத்தாளர் போன்றவர்களே முதன்மையிடத்தைப் பெற்றுள்ளனர்.[30] செல்வமும் செல்வாக்கும் வாய்ந்த மேட்டுக்குடி மக்கள் மிகச்சிலராகவே காணப்படுகின்றனர். பேராசிரியராகப் பணிபுரிந்த மு.வ.அவர்கள், தம் புதினங்களில் பல பேராசிரியர்களைப் படைத்துள்ளதில் வியப்பில்லை.[31] மருத்துவத் தொழில் செய்வோர் (டாக்டர்), பொறியியல் வல்லுநர் (இன்ஜினியர்) போன்றோர் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலராகவே அவருடைய புதினங்களில் இடம்பெற்றுள்ளனர்.[32] இவையாவும், ஆசிரியரின் எண்ணம் எல்லாம், நடுத்தர வகுப்பினரை மையமாகக் கொண்டே பெரிதும் சுற்றிச் சுழன்றதை அறிவிக்கின்றன. பொதுவாகப் புதினத்தை ‘நடுத்தர வகுப்பினரின் காப்பியம்’ என்பர்.[33] மு.வ.வின் புதினங்கள் நடுத்தர வகுப்பினரின் ‘பெருங்காப்பியங்களாக’ப் பொலிவுறுகின்றன எனலாம்.

சென்னை நகரம்

தம் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் சென்னை மாநகரிலேயே பேராசிரியர் மு.வரதராசனார் கழித்தவராவர். இதனால், நகர வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை நன்கு அறிய அவருக்கு வாய்ப்புகள் கிடைத்துள்ளன. அவற்றை எல்லாம், தம்முடைய புதினங்களில் பல இடங்களில் அவர் சுட்டிச் செல்லுகிறார். மற்றும் சென்னை நகரத்தின் பல்வேறு பகுதிகளை நேரில் கண்டு அதன் நிறை குறைகளை உணர்ந்துள்ளதை அவருடைய புதினங்கள் காட்டுகின்றன. மக்கள் நெருக்கடி மிகுந்த கொத்தவால் சாவடியின்

ஆரவாரம், முட்டி மோதும் வழிப்போக்கர்கள் நிறைந்த சைனா பஜார், மாயவித்தைக்காரர் மக்களை மயக்கும் மூர் அங்காடிப்பகுதி, நெரிசல் மிக்க சூளை, சிந்தாதிரிப்பேட்டை போன்ற மக்கள் வாழும் பகுதிகள், நாற்றமடிக்கும் கூவம் ஆறு, சிறிது மழை பெய்தாலும் வெள்ளத்தில் மிதக்கும் ஏழை எளிய மக்கள் வாழும் தாழ்நிலப்பகுதிகள், கண்களுக்கு விருந்து அளித்து, மனத்திற்கு மகிழ்வூட்டும் அழகிய மெரினா கடற்கரை, தனிமைக்குப் பேர் போன அடையாற்றுக் கடற்கரை போன்ற சென்னை நகரின் பல்வேறு பகுதிகளை நுட்பமாகக் கூர்ந்துநோக்கி, அவற்றிற்கு, அழியாப் பெருவாழ்வைத் தம்முடைய நூல்களில் அவர் அளித்துள்ளார்.

சென்னை நகர வாழ்க்கைக்கு, அடுத்துத் தம் சொந்த மாவட்டமான வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வேலூர், திருப்பத்தூர், ஆர்க்காடு, சோழசிங்கபுரம், வாலாசா போன்ற பேரூர்களையும் சித்தூர் போன்ற பிற ஊர்களையும் தம் புதினங்களில் அவர் சுட்டிச்செல்லுகிறார், சென்னை நகருக்கு அருகில் உள்ள மாமல்லபுரம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் போன்ற ஊர்களைக் குறிப்பிடுகிறார். விழுப்புரத்திற்குத் தெற்கே அவர் வருணிக்கும் ஊர் திருச்சிராப்பள்ளி ஒன்றேயாகும். பெங்களூரும் நீலகிரியும் இடையிடையே தோன்றி மறைகின்றன.

வட இந்தியாவில் பம்பாயில் இருந்தாலும், காஷ்மீரைக் கண்டாலும் கங்கையில் நீராடினாலும், கல்கத்தாவில் உள்ளத்தைப் பறிகொடுத்தாலும், ஆக்ராவில் தாஜ்மகாலைக் கண்டு வியந்தாலும் அவருடைய பாத்திரங்கள், தமிழ் மண்ணை மறவாது ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்; சென்னை நகர வாழ்க்கையின் ஒளிமிக்க பகுதிகளையும், இருள் சூழ்ந்த இடங்களையும் நினைவுகூர்ந்து எண்ணி மகிழ்கின்றனர்.

இவ்வாறு, பேராசிரியருடைய எண்ணம் எல்லாம், சென்னை நகரையே சுற்றிச் சுழலுகின்றன. இதனால்தான் பேராசிரியர் மு.வரதராசனாரை, டாக்டர் சேவியர் தனிநாயகம், ‘சென்னை மாநகரப் புதினப்படைப்பாளர்’ (The Novelist of the city of Madras) என்று போற்றியுள்ளார்.[34]

சமூகப் புதினங்கள்

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழ்ச் சமுதாயத்தில் உண்டான மாற்றங்கள் பல. அம் மாற்றங்களால் மக்களுடைய வாழ்க்கை முறையிலும் மனப்போக்கிலும் பழையன கழிந்து புதியன பல புகுந்தன. இதனால், உண்டான வாழ்க்கைப் போராட்டங்கள் பல. எண்ணத் தெரிந்து, அறிவைப் பெருக்கி, பயன் மதிப்புகளைப் போற்றி வாழ்வோரின் உள்ளத்தில் எழுந்த போராட்டங்களோ

மிகப்பலவாகும். இவற்றுக்கு இடையே சமுதாய வாழ்வில் பல சிக்கல்கள் தோன்றலாயின. அவற்றின் அறைகூவலை ஏற்று, அவற்றிற்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு, அரசியல் அறிஞர்களையும், சமுதாயச் சிந்தனையாளர்களையும் தீவிரமாக சிந்திக்கத் தூண்டலாயிற்று.

இதனால், படைப்பு இலக்கிய ஆசிரியர்கள் 'சமுதாய உணர்வோடு' இலக்கியம் படைப்பதில் ஈடுபட்டனர். தங்கள் சமூகத்தையும், அனைத்துலக மனித சமூகத்தையும் தாக்கும் பல புதிய சக்திகளை அவர்களால் புறக்கணிக்க இயலவில்லை. எனவே, அவர்கள் படைப்புகளில் சமுதாய உணர்வுகளும் சமுதாயச் சிக்கல்களும், சமுதாய சீர்திருத்த எண்ணங்களும் முதன்மை இடத்தைப் பெற்றன. இத்தகைய இயல்புகளோடு படைக்கப்படும் புதினங்களையே 'சமூகப் புதினங்கள்' (Social Novels) என்பர். நம் சமுதாயத்தினுடைய சிறப்புமிகு ஒரு பகுதியின் இயல்பான தோற்றத்தைச் சமூகப் புதினங்கள் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன.

சமூகப் புதினங்களை மூவகையாகப் பாகுபடுத்தும் மரபு ஒன்று உண்டு. அவை குடும்ப வாழ்க்கையைச் சித்திரிக்கும் 'குடும்ப வாழ்க்கைப் புதினங்கள்', சமுதாயத்தினைச் சீரழிக்கும் அல்லது அச்சுறுத்தும் 'கொடுமைகளை' வெளிப்படையாகப் புரிந்து கொள்ளுமாறு செய்யும் 'தீர்வாய்வுப் புதினங்கள்', சமுதாயத்தின் நலிவைப் போக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களை விளக்கும் வகையிலும் சிறப்பித்துப் பேசும் வகையிலும் படைக்கப்படுவன 'சமுதாய சீர்திருத்தப் புதினங்கள்' என்பனவாகும்.

பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களில் இம்மூவகை இயல்புகளும் இழையோடுகின்றன. ஆயினும், 'சிதைந்துவரும் குடும்பவாழ்வைச்' செம்மைப்படுத்துவதற்குரிய நெறிமுறைகளைப் பின்னணியாகக் கொண்ட புதினங்களே, அவருடைய படைப்புகளில் மிகுதியாக உள்ளன. 'பழியும் பாவமும்' எனும் புனைகதை 'மதுவிலக்கு' நடைமுறைப் படுத்தப்பட்டதனால் எழுந்துள்ள சிக்கல்களைச் சித்திரிக்கின்றது. 'மண்குடிசை', 'கயமை' எனும் புதினங்கள் ஓரளவிற்கு மக்களாட்சியில் உண்டாகும் சிக்கல்களைக் கோடி காட்டுகின்றன. சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் தேவைப்படும் சீர்திருத்த எண்ணங்கள் பல, டாக்டர் மு.வ.அவர்களின் நூல்கள் அனைத்திலுமே முனைப்பாக இடம்பெற்றுள்ளன.

கருத்து விளக்கப் புதினங்கள்

இதனால் பொதுவாக மு.வ.வின் புதினங்கள் கருத்து விளக்கங்களைத் தந்து, படிப்போரின் உள்ளத்தில் வாழ்க்கையைப் பற்றிய தெளிவை உண்டாக்குகின்றன. பிச்சைக்காரர் பிரச்சினை முதல், கட்சியாட்சியின் கொடுமைவரையில் உள்ள இன்றைய வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்களையும் கதைப்பாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் அலசி, ஆராய்ந்து, உண்மையைப் புரிந்து கொள்ளுமாறு செய்கிறார். இவ்வாறு, கருத்து விளக்கங்களுக்குப் புதினங்களில் முதன்மையிடம் கொடுக்கின்றபொழுது அவற்றைத் தெளிவுறுத்த திருவள்ளுவர் முதல் திரு.வி.க.வரையிலும் வாழ்ந்த தமிழ்நாட்டுச் சான்றோர்களின் அறவுரைகளையும், கண்ணன் முதல் காந்தியடிகள் வரையில் வாழ்ந்த இந்தியப் பெரியார்களின் உபதேசங்களையும், மார்க்கஸ் அரேலியஸ் முதல் சாமர்செட் மாம் வரையில் சிறப்புடன் விளங்கிய மேற்குநாட்டு அறிஞர்களின் அறவுரைகளையும் இடையிடையே மேற்கோளாகக் கொடுத்து விளக்கியுள்ளார்.[35] இதனால், கதை நிகழ்ச்சிகளின் செறிவை விடக் கருத்துச் செறிவே மு.வ.வின் புதினங்களில் மேலோங்கி நிற்கிறது. இக்காரணத்தால், அவருடைய புதினங்களைக் ‘கருத்து விளக்கப் புதினங்கள்’ (Novels of Ideas) என்று இலக்கியத் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.[36]

தொடர்கதையா? புதினமா?

தமிழ்நாட்டின் புதினப் படைப்பாளர்களுள் பெரும்பாலோர் வார இதழ்களிலும் மாத இதழ்களிலும் தொடர் கதையாகப் பல மாதங்கள் தொடர்ந்து வெளியிட்டு, பிறகு அவற்றைத் தொகுத்து இங்கும் அங்கும் இரண்டொரு மாற்றங்களைச் செய்தோ, செய்யாமலோ புதினங்களாக, அவற்றை நூல் வடிவில் தருவது வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வாறு தொடர்கதைகளைப் புதினங்களாக வெளியிடுகின்ற பொழுது, அவற்றில் இறுக்கமான கட்டுக்கோப்பு அமைவதில்லை; ஆர்வத்தைத் தூண்டுவதற்காக இடையிடையே சேர்க்கப்படும் வருணனைகள், கிளைக்கதைகள், இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் கதையின் ஆற்றொழுக்கான போக்கிற்கு இடையூறாக அமைகின்றன.[37] இக்காரணங்களால் தொடர்கதையாக அவ்வப்போது சிறுகச் சிறுக எழுதி, பின்னர் முழுநூலாகச் செய்வதைவிட, முதலில் புதினத்தை முழுமையாகப் படைத்துவிட்டு, அதன் பின்னர்த் தொடர்கதையாக வெளியிட முயல்வதே சிறப்புமிகு செயலாகும். அப்பொழுதுதான், புதினங்கள் முழுநிறைவுடைய கலைப்படைப்புகளாகப் பொலிவுற முடியும் என்பது பெரும்பாலான திறனாய்வாளர்களின் கருத்தாகும்.[38]

பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்கள் யாவும், முதலில் நூல் வடிவில் எழுதப் பெற்றவை. அவற்றுள் 'பாவை' எனும் புதினமும், 'அந்த நாள்' எனும் புதினமும், அக்காலத்திய வார இதழகளில் வெளிவந்தவை. 'பாவை' எனும் புதினம் பரலி சு.நெல்லையப்பர் நடத்திய 'லோகோபகாரி' எனும் இதழில் ஆறு மாதங்கள் தொடர்ந்து வெளிவந்த கதையாகும். இதைப்போன்றே, சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்கள் நடத்திய 'தமிழ் முரசு' எனும் வார இதழில், ஏறக்குறைய ஓராண்டு வெளியிடப்பட்ட புதினமே, 'அந்த நாள்' என்பதாகும். இச்செய்தியை நூலாசிரியரான டாக்டர் மு.வ.அவர்களே, அந்த நூல்களின் முதற்பதிப்பில் இடம்பெற்ற முன்னுரைகளில் குறிப்பிட்டுள்ளார்.[39] அவை இதழ்களில் தொடர்கதையாக வந்தவை என்பது உண்மை. ஆனால், இதழ்களில் தொடர்கதையாக வெளியிடப்படுவதற்கு முன்பே, அவை நூல்களாக எழுதி முடிக்கப்பெற்றவை என்பது இங்கு நினைவுகூர்வதற்கு உரியதாகும்.

பேராசிரியரின் மற்றப் புதினங்கள் அனைத்தும், எழுதி முடிக்கப்பட்டதும், நூல்களாக வெளியிடப்பட்டவையாகும். இன்று புகழ்ப் பூத்து விளங்கும் புதின ஆசிரியர்கள் பலருடைய படைப்புகள், பெரும்பாலும் 'இரண்டாவது பிறவியில்தான்' நூல்களாக வெளிவருகின்றன.

இதைத் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூலின் ஆசிரியர்,

> "எப்படியானாலும் இந்தப் பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வெளிவந்த நாவல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தொடர்கதைகளாகவே வந்தவை. டாக்டர் மு.வ.போன்றவர்கள் இதற்கு விதிவிலக்கு அவரைப்போன்ற மிகச்சிலரே நாவலைத் தனியே எழுதி முடிக்கிறார்கள்."[40]

என்று ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்த கருத்து. இன்றும் பொருந்துவதாக உள்ளமை இங்குக் கருதத்தக்கது.

குறிப்புகள்

1. மு.வரதராசனார், இலக்கியத்திறன், பக்.53–54.
2. William K.Wimsatt and Cleanth Brooks, Literary Criticism, A Short History, P.426.
3. Rene Wellek and Austin Warren, Theory of Literature, P.227.
4. Richard Kuhns, Literature and Philosophy, p.221.
5. Marjoric Boulton, The Anatomy of the Novel, pp.1-2.
6. John Halperin (ed.), The Theory of the Novel New Essays pp.237-239.

7. Edward Wagenknecht, Cavalcade of the English Novel p.vi.

8. E.M.Forster, Aspects of the Novel, P.18.

9. Marjorie Boulton, op.cit., P.13.

10. Paul West, The Modern Novel, Vol.I, pp.1-2.

11. *நா.பார்த்தசாரதி (பதி.), மதுரைத்தமிழ் எழுத்தாளர் சங்க ஆண்டு மலர், 1957–58, பக்.3.*

12. *முத்துச்சண்முகம், சு.வேங்கடராமன் (பதி.), 'எழுத்தாளர் மு.வ.', மு.வ. நினைவு மலர், பக்.3.*

13. D.H.Lawrence, Selected Literary Criticism, P.105.

14. *காண்க 'ஆய்விற்குதவிய நூல்கள்' 1–1*

15. *மா.கி.தசரதன், தணலிலே தங்கம், முன்னுரை.*

16. *மு.வரதராசன், இலக்கிய மரபு, பக்.141.*

17. Miriam Allott, Novelists on the Novel, pp.49-50.

18. *நா.பார்த்தசாரதி (பதி.), 'இலக்கியச் சந்திப்பு: டாக்டர் மு.வரதராசன், தீபம், மார்ச்சு,1971.*

19. *இரா.தண்டாயுதம், டாக்டர் மு.வ., மேற்கோள், பக்.68–69.*

20. *நாட்டுப்பற்று, பக்.99–100.*

21. *தம்பிக்கு, பக்.11.*

22. *தம்பிக்கு, பக்.9.*

23. *மு.வ.அவர்களின் நண்பர் திரு.ம.சு.சம்பந்தன் கூறிய செய்தி.*

24. *தொல்.1369.*

25. *மண்குடிசை, பக்.477.*

26. *நண்பர்க்கு, பக்.26.*

27. *புறநா.173:11.*

28. *திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள், பக்.804.*

29. *(1) பெற்ற மனம், பக்.21–22; கரித்துண்டு, பக்.29–30; வாடாமலர், பக்.98.*

    (2) மலர்விழி, பக்.50; விடுதலையா, பக்.84; குறட்டை ஒலி, பக்.44; பெற்ற மனம், பக்.141–142.

30. *மலர்விழியில் வரும் அண்ணாமலை, கயமையில் வரும் வசீகரம், வேங்கடேசன், பிரகாசம், நல்லய்யன், மென்மொழி, அகல்விளக்கில் வரும் வேலய்யன், மண்குடிசையில் வரும் மெய்யப்பன் முதலியோர் எழுத்தராக உள்ளனர். கரித்துண்டில் வரும் குமரேசன் நகராட்சி 'ஓவர்சியர்' கள்ளோ காவியமோவில் வரும் முருகையா, வாடாமலரில் வரும் முருகய்யா,*

மலர்விழியில் வரும் மழைக்கண்ணர், மண்குடிசையில் வரும் பாண்டியன், அல்லியில் வரும் அறவாழி போன்றோர் ஆசிரியர்களாவர். பாவையில் வரும் பழனியப்பன் குடும்பம், வாடாமலரில் வரும் குழந்தைவேலின் குடும்பம், சிறுவாணிகம் செய்வன. அகல்விளக்கில் வரும் சாமண்ணா, நெஞ்சில் ஒரு முள்ளில் வரும் அகோர், கயமையில் வரும் மென்மொழியின் தந்தை போன்றோர் சிறுநிலக்கிழார்களாவர். மலர்விழியில் வரும் முத்தய்யன், மணி ஆகியோர் புகைவண்டியில் 'டிக்கட்' பரிசோதகர்களாகப் பணி புரிகின்றனர். அல்லியில் வரும் அஞ்சலாவின் காதலன் ஒரு வழக்கறிஞன். அல்லியில் வரும் லீலா, நெஞ்சில் ஒரு முள்ளில் வரும் சாமுவேலின் மகள் ஆகியோர் செவிலியராகப் பணிபுரிகின்றனர். செந்தாமரையில் வரும் மருதப்பன், பாவையில் வரும் கண்ணப்பர் ஆகியோர் பத்திரிகைகளில் பணிபுரியும் எழுத்தாளராவர்.

31. கள்ளோ காவியமோவில் வரும் அருளப்பர், பெற்ற மனத்தில் வரும் அருளப்பர், சீராளர், மண்குடிசையில் வரும் நரேந்திரர், செந்தாமரையில் வரும் மகாதேவன், கரித்துண்டில் வரும் கமலக்கண்ணர் ஆகியோர் பேராசிரியர்களாவர்.

32. அல்லியில் வரும் 'டாக்டர்' அல்லி, 'டாக்டர்' பரமேஸ்வரி, 'டாக்டர் சுந்தரி ஆகியோர் டாக்டர்களாவர்; அல்லியின் கணவர் சுப்புரத்தினம் ஒரு பொறியியல் வல்லுநராவர்.

33. Diana Laurenson and Alan Swingewood, Sociology of Literature P.30.

34. Xavier S.Thani Nayagam (ed.), 'The Novelist of the City of Madras', in Tamil Culture, Vol.10; No.2; 1963. pp.1-18.

35. இவ்வறிஞர்களின் தாக்கம் பற்றிய விளக்கம் முதலாவது இயலில் இடம்பெற்றிருக்கிறது.

36. மா.இராமலிங்கம், புனைகதை வளம், பக்.47.

37. Pearl S.Buck, 'In Search of Readers' in the Writer's Book, p.3.

38. க.நா.சுப்பிரமண்யம், விமரிசனக்கலை, பக்.137–138.

39. பாவை, 1948ஆம் ஆண்டுப் பதிப்பு, முன்னுரை. அந்த நாள், முதற்பதிப்பின் முன்னுரை.

40. கி.வா.ஜகந்நாதன், தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் பக்.46.

இயல் - 4
புதினங்களின் அமைப்பு

பேராசிரியர் மு.வரதராசனார் படைத்துள்ள கதை நூல்கள் பதினைந்து. அவற்றில், பதின்மூன்றையே புதினங்களாகக் கொள்ளலாம். 'கி.பி.2000', 'பழியும் பாவமும்' எனும் இரண்டு படைப்புகளும் புனைகதைகள் (Fiction) எனப் போற்றத்தக்கன. புதினத்தின் முதுகெலும்பாக அமைவது கதை. அக்கதைக்கூறு இவ்விரு நூல்களிலும் இடம்பெறவில்லை. நிகழ்ச்சிகள் சிலவற்றையும் காட்சிகள் சிலவற்றையும் சித்திரிக்கும் நிகழ்ச்சிக் கோவையாகவும், காட்சிக்கோவையாகவும் இவை உள்ளன. மற்றும், இவற்றில் பாத்திரப்படைப்பு வலிவும் பொலிவும் பெறவில்லை. இக்காரணங்களால், இவற்றைப் 'புனைகதை' என்பதே பொருத்தமாகும்.[1]

இவ்விரு புனைகதைகள் நீங்கலாக, பேராசிரியர் பதின்மூன்று புதினங்களைப் படைத்துள்ளார். அவற்றின் அமைப்பையும் அழகையும் அறிவதற்கு முன்னர், புதினங்களின் பொது அமைப்பையும், பண்புகளையும் காண்போம்.

புதினங்களின் பொது இயல்புகள்

புதினம் கதையைக் கூறும் இலக்கியமாகும். கதையைக் கூறும் முறையில், அதற்கு ஒரு வடிவம் அமைந்துவிடுகிறது. அந்த வடிவத்தின் அமைப்பு முறைகளை ஒட்டியே, கதையில் கவர்ச்சியும் கலைநயமும் இடம்பெறுகின்றன. வாழ்க்கையெனும் நெடுஞ் சாலையில் எடுத்துச் செல்லப்படும் முகம் பார்க்கும் கண்ணாடியே புதினம் என்பர். அது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் மெய்மையப் போக்குடையதாக இருக்க வேண்டும்; கற்பனையின் இலட்சியபுரிக்கு அழைத்துச் செல்லுவதாக அமைய வேண்டும்; அறநெறிப்பட்ட நோக்குடையதாகக் காட்சி தர வேண்டும்.[2] இம்மூவகைப் பண்புகளையும் கொண்டதாக விளங்க வேண்டுமானால், அதற்கு நல்லதொரு வடிவம் தேவைப்படுகிறது.

(1) கட்டுக்கோப்பு

இலக்கிய வகையில் மிகுந்த நெகிழ்ச்சியான வடிவம் உடையது புதினம். இதனால், அதற்கு நல்ல கட்டுக்கோப்பு (Structure)

அமைவதற்கு இடமில்லை என்பது பொருள் அன்று. கதையாசிரியன், தன் தேவைக்கேற்ப, எளிதில் மாற்றங்கள் செய்து கொள்ளத்தக்க அமைப்பு உடையது புதினம் என்பது இதனால் பெறப்படுகிறது. கதைக்கு ஒரு வடிவம் தேவை. அவ்வடிவமே கதைக்கு இடையில் 'தொய்வு' உண்டாகாமல், இறுதிவரை விறுவிறுப்பாக இயங்குவதற்கு உதவுகிறது.[3]

கதையினைச் செம்மையான வடிவம் பெறச் செய்வன அதில் இடம்பெறும் கதைப்பின்னல் (Plot) எனப்படும் கதைக்கோப்பு, கதைக்கரு (Theme), பாத்திரப்படைப்பு (Characterization) என்பன. கதைக்கும் கதைப்பின்னலுக்கும் இடையே நுட்பமான வேறுபாடு உண்டு. காலவரன் முறைப்படி அமையும் நிகழ்ச்சிகளே கதையாகும். 'கதைப்பின்னல்' எனப்படும் கதைக்கோப்பு காலவரன் முறைப்படி அமைந்த நிகழ்ச்சிகளின் இடையே அமையும் காரணகாரியத் தொடர்பினை விளக்குந் திறனுடையது.[4]

(2) கதைப்பின்னல்

இந்தக் கதைப்பின்னல் எனப்படும் கதைக்கோப்பு, புதினத்திற்கு மிக இன்றியமையாத உறுப்பு. புதினத்திற்கு வடிவ அழகைத் தருவது கதைப்பின்னல். மனித உடலுக்கு அழகிய வடிவத்தைக் கொடுப்பது, உள்ளே இருக்கும் எலும்புக்கூடாகும். இதைப் போன்று புதினத்திற்கு முழுநிறை வடிவத்தைத் தரும் சட்டகம் கதைப்பின்னல் பல்வேறு நிகழ்ச்சிகளை இணைத்து, அவற்றிற்கு ஒரு வடிவத்தைத் தருவது அது.

இதன் உயிர்த்தன்மையை அரிஸ்டாட்டில் நன்கு உணர்ந்திருந்தார். அவர்,

> .... ஒரு படைப்பில் ஒரு மைய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கதைப்பின்னல் அமைக்கப்பெறுதல் வேண்டும். இம்மைய நிகழ்ச்சி தன்னுள் முழுமையுடையதாய் அமைய அதைச்சுற்றிப் பிணைக்கப்படும் கிளைக்கதைகள், துணை நிகழ்ச்சிகள் முதலியனவெல்லாம் அதனோடு உயிர்த்தன்மை யுடையனவாக அமைய வேண்டும். அவற்றுள் ஒன்றோ, இரண்டோ இடம்மாறி அமையினும் அதன் முழுத்தன்மை சிதையும்; ஒன்றை நீக்கினும், பிறிதொன்றைப் புதிதாகச் சேர்ப்பினும் அதனுடைய கட்டமைப்பு குலையும்.[5]

என்று வெளிப்படுத்தியுள்ளார். இத்தகைப் பின்னலை (கதைக்கோப்பு), குறைகதைப்பின்னல் (Simple Plot), நிறைகதைப்பின்னல் (Complex Plot) என்று அவர் இருவகையாகப் பாகுபடுத்துவர். இவற்றுள் நிறைகதைப்பின்னலே கலைத்திறன் மிக்கதாகப் போற்றப்படுகிறது.[6]

இவ்விருவகைக் கதைப்பின்னலும் புதினத்தில் இடம்பெறுகின்றன. இக்காலத் திறனாய்வாளர் குறைகதைப்பின்னலை, நெகிழ்ச்சிப்பின்னல் (நெகிழ்ச்சி மிகு கதைக்கோப்பு – Loose Plot) எனவும், நிறைகதைப் பின்னலைச் செறிவுப்பின்னல் (செறிவுமிகு கதைக்கோப்பு - Organic Plot) எனவும் கூறுவர்.[7] வடிவ அமைப்பில் இறுக்கமும் காரணகாரியத் தொடர்பில் பொருத்தமிகு ஒருமைப்பாடும், கதையின் அமைப்பில் முழுநிறைவும் கொண்டது செறிவுப்பின்னல்; இத்தகைய இயல்புகள் அமையாத கதைப்பின்னலே, நெகிழ்ச்சிப் பின்னலாகும். கதைக்கு முழுநிறைவான வடிவத்தைத் தருவது செறிவுப் பின்னலாகும்.

புதினத்திற்கு முழுநிறை வடிவம் அளிப்பது கதைப்பின்னலின் செறிவும், அது உணர்த்தும் நோக்கமுமாகும். அந்த நோக்கம், வாழ்க்கையைப் பற்றிய அறவியல் விளக்கமாக[8] அமையும்.

(3) கதைக்கரு

ஒரு கதையின் மையக்கருத்தாக இருப்பது கரு; கதையின் பொது நோக்கினைப் புலப்படுத்துவது. இதனை ஐந்து வகையாகப் பாகுபடுத்துவர். அவை (1) பருப்பொருள் சார்புடையன (Physical), (2) உறுப்புகளால் அமைவன (Organic), (3) சமூகச் சார்புடையன (Social), (4) தனிமனிதத் தன்மையுடையன (Egoic), (5) ஆன்மிகச் சார்புடையன (Spiritual) என்பன.[9]

இக்காலத்தியப் புதினங்களில், மேற்கண்ட முதல் நான்கு கூறுகளும் ஒன்றோடொன்று இணைந்து இயங்குவதைக் காணலாம். ஐந்தாவது கூறு, உளவியல் சார்பான கதைக்கருவில் இடம்பெறுகிறது. இன்றைய புதினங்களில் எடுத்துரைக்கப்படும் கதைகளின் மையக் கருத்தை ஆராய்ந்தால், அவை யாவும் இத்தகைய இயல்புகளுள் யாதாகிலும் சிலவற்றின் கூட்டுத் தொகுதியாக உள்ளமை புலனாகும்.

(4) பாத்திரப் படைப்பு

கதைப்பின்னல் (கதைக்கோப்பு) புதினங்களின் எலும்புக்கூடாக அமைகின்றது என்றால், பாத்திரங்களும் சூழலமைவும் அவ்வெலும்புக்கூட்டின் மீது பொருந்தியுள்ள தசையும், நாடி நரம்புகளுமாக உள்ளன. படைப்பாளிகளின் சிறப்புமிகு சாதனையாகப் பாத்திரப்படைப்பு அமைகிறது. இக்கலையில், ஒரு சிலரே வெற்றி பெற்றுள்ளனர். அவர்களையே ‘சிறப்புமிகு படைப்பாளர்களாக’ உலகம் போற்றுகிறது. ஒரு புதினத்தின் சிறப்பு, பாத்திரப் படைப்பில்தான் நன்கு வெளிப்படும்.[10]

பொதுவாகக் கதைகளில், மனிதர்களின் இயல்புகளினாலேயே, கதை நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. பல்வேறு நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் மனிதர்களையே, ‘கதைப்பாத்திரம்’ எனக்கூறுவது

மரபாகும். இருவகையாகத் தம்முடைய பாத்திரங்களைப் புதினப் படைப்பாளர்கள் படைக்கின்றனர். மனிதர்களின் பண்புகளை, நேரடியாகச் சொல்லுகின்ற முறையில், படைப்பாளர்கள் பாத்திரங்களைப் படைப்பது ஒருமுறை மனிதர்களின் நடத்தை, செயல்கள் போன்றவற்றை விளக்குவதன் மூலம், பாத்திரங்களின் பண்பு நலனை வெளிப்படுத்துவது மற்றொரு முறையாகும். முதல்வகையைத் துணைப்பாத்திரங்கள் படைப்பதற்கே பெரிதும் பயன்படுத்துகின்றனர். தலைமைப் பாத்திரங்களைப் படைப்பதற்கு, இவ்விரு முறைகளையும் இணைத்துக் கையாளுவது வழக்கமாகும்.

ஒரு பாத்திரத்தின் பண்புகள் அனைத்தையும், ஒரு புதினத்தில் காட்டிவிட இயலாது; முதன்மையான பண்புகள் சிலவற்றையே வெளிப்படுத்த இயலும். 'வாழ்க்கையில் உள்ளதைப் போன்று' பாத்திரங்களைப் படைப்பது புகைப்படம் எடுப்பதைப் போன்றதாகும். இதைவிட 'உயிருள்ள'வர்களாக – உயிரோவியங்களாகப் – பாத்திரங்களைப் படைப்பதே சிறந்த முறையாகும். மனித வாழ்க்கை சிக்கல் நிறைந்தது. அதைப்போன்றே, மனிதரின் பண்புநலன்களும் அமைகின்றன. அப்பண்பு நலன்களைப் பிரதிபலிப்பதாகப் பாத்திரங்கள் அமைய வேண்டும்.

புதினங்களில் இடம்பெறும் சிறப்புமிகு பாத்திரங்கள், சிக்கல்மிகுந்த பண்புகளும், பேராற்றலும் உடையவர்களாகத் தோன்றுவர். இத்தகையோரைத் 'தலைமைப் பாத்திரங்கள்' எனலாம். துணைப்பாத்திரங்களும் கிளைப்பாத்திரங்களும் 'வார்ப்பு' வடிவங்கள் போன்று இருப்பர்; ஓரிரு முறைகளே இடம்பெறும். கிளைப் பாத்திரங்கள் கதைக்குக் கவர்ச்சியூட்டும் அணிகலனாக அமைவர்.[11]

பொதுவாகப் பாத்திரங்களை, அவற்றின் பண்புநல வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு முழுநிலைப் பாத்திரம் (Round Characters), ஒருநிலைப்பாத்திரம் (Flat Characters) என்று பாகுபாடு செய்வர்.[12] படிப்படியாகப் பண்புகளின் வளர்ச்சி அடைந்து, ஒரு முழுநிறைவான பண்போவியமாகத் தோன்றும் பாத்திரம் 'முழுநிலைப் பாத்திரம்' ஆகும். முதலிலிருந்து முடிவு வரையில், எத்தகைய மாற்றமும் வளர்ச்சியும் இல்லாமல் இயங்குகின்ற பாத்திரம், 'ஒருநிலைப்பாத்திர'மாகும். இவ்வகைப் பாத்திரம் அச்சில் வார்த்தெடுத்த அமைப்பாகத் தோன்றும். பெரிதும் துணைப்பாத்திரங்கள் இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.

பாத்திரங்களைப் படைப்பதற்குக் கதை ஆசிரியர்கள் பயன்படுத்தி வரும் உத்திகளைத் தொகைவகைப்படுத்திப் பார்க்கும்பொழுது, ஒன்பது வகையான முறைகள் புலப்படுகின்றன. அவை:

(1) புறத்தோற்றம், (2) இயக்கம், உணர்ச்சிக்குறிப்பு, நடத்தை, பழக்கம், (3) மற்றவர்களிடம் நடந்து கொள்ளும் முறை, (4) பேச்சு, (5) தனக்குத்தானே நடந்து கொள்ளும் முறை, (6) சூழல் அமைவின் தாக்கம், (7) பாத்திரத்தின் கடந்த கால வாழ்க்கை, (8) மனப்போராட்டம், (9) பாத்திரத்தின் பெயரமைதியும் அணிவகைகளும் என்பன.[13]

புதினங்களின் இப்பொதுவியல்புகளையும், படைப்பு முறையின் கலைத்திறன்களையும் கருத்தில் கொண்டு, பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களைக் காலவரன் முறைப்படி அடுத்துக் காண்போம்:

1. செந்தாமரை

(1946)

'செந்தாமரை' மு.வரதராசனாரின் முதல் புதினமாக வெளிவந்த சிறப்புக்குரியது. காதல் வாழ்க்கையின் பல நிலைகளையும், அதன் சிறப்பையும் இப்புதினத்தில் ஆசிரியர் சித்திரித்துள்ளார். செந்தாமரை எனும் பெண் பாத்திரம், இப்புதினத்தில் முதன்மையிடம் பெறவில்லை. எனினும் அப்பாத்திரத்தின் பெயரே, இப்புதினத்தின் பெயராக, அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் இப்புதினத்திற்கு முதலில் இட்ட பெயர் 'முருங்கை மரம்' என்பதாகும். இத்தலைப்பு கவர்ச்சியாக இல்லை எனும் காரணத்தினால், 'செந்தாமரை' எனும் பெயரிடுமாறு, அன்று பேராசிரியரின் மாணவராக இருந்த டாக்டர் ம.ரா.போ.குருசாமி வேண்டியதற்கு இணங்க, முருங்கைமரம் 'செந்தாமரை'யாக வெளிப்பட்டது. எனினும், "கதையின் அமைப்பிற்கு ஏற்ற பெயர் 'முருங்கை மரம்' தான்" என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[14]

இந்நூலில் முன்னுரைக்குப் பதிலாக 'படிப்பவர்க்கு, படித்தவர்க்கு' எனும் குறிப்புகளை ஆசிரியர் வழங்கியுள்ளார்.

இப்புதினம் அளவில் சிறியது; கதைப்பின்னலாலும், வடிவத்தாலும் மிகவும் எளிமை வாய்ந்தது. திலகம் எனும் கிராமப்பெண் ஒருத்தி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு முயலுகிறாள்; வீட்டைவிட்டுப் புறப்பட்டு எதிர்பாரா இடத்தில் தங்கிச் சென்னைப் பட்டணத்திற்குப் போகிறாள். அங்கே காதல்வயப்பட்டு, சில இடர்ப்பாடுகளைக் கடந்து, பின்னர்க் காதலில் அவள் வெற்றி பெறுகிறாள் என்பதே கதையின் அமைப்பாகும். அவளுடைய காதலனின் தங்கையாக வருபவளே செந்தாமரை.

செந்தாமரை கல்லூரியில் இடைநிலை வகுப்பில் படிக்கும் மாணவி. இளமைத்துடிப்பும் தெளிந்த உள்ளமும் கடமையுணர்வும்

வாய்க்கப் பெற்றவள்; கலையுணர்வு உடையவள். காதலை ஆராய்ந்து, தேடி அவள் அடைகிறாள்; திலகத்தின் ஒன்றுவிட்ட அண்ணன் இளங்கோவைக் காதலித்து, மணம் புரிந்து கொள்ளுகிறாள்.

இப்புதினத்தில் சித்திரிக்கப்பெறுவது மூன்று வகையான காதலர் வாழ்க்கை. அக்காதலர்கள் மூன்று வகையினர். 'சிலர் காதலை வளர்த்து வாழ்கிறார்கள்; சிலர் காத்திருந்து பெறுகிறார்கள்; சிலர் ஆராய்ந்து தேடி அடைகிறார்கள்' என்னும் கருத்தினைப் பேராசிரியர் மு.வ., இப்புதினத்தில் விளக்கியுள்ளார். மருதப்பனும் அவனுடைய மனைவியும் காதலை வளர்த்து வாழ்வதையும், திருநாதனும் திலகமும் காதலைக் காத்திருந்து பெறுவதையும், இளங்கோவும் செந்தாமரையும் காதலை ஆராய்ந்து, தேடி அடைவதையும் காட்டிக் காதலின் இயல்புகளையும், காதலரின் மனப்போக்கையும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தம் ஊர்ப்பக்கத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இப்புதினத்தின் கதைக்கருவாக ஆசிரியர் அமைத்துள்ளார். ஒரு பெண், ஆசிரியர் பயிற்சி பெற விரும்பி, அத்தையின் கொடுமையிலிருந்து விடுதலை பெற நினைந்து, சென்னையில் உள்ள உறவினர் வீட்டிற்குச் செல்ல முயலுகிறாள். அப்பொழுது வழி தெரியாமல், ஓர் அம்மையாரின் துணையோடு அவருடைய வீட்டிற்குச் சென்று தங்க நேரிடுகிறது. அந்த அம்மையாருடைய குடும்பம் பொதுமகளிர் சமூகத்தைச் சேர்ந்தது என்பதனால், ஊரார் அவளைப் பழிக்கின்றனர். அந்த அம்மையார் தக்க துணையோடு சென்னைக்கு அவளை அனுப்பி விடுகிறார்.[15] இதை மையமாகக் கொண்டு ஆசிரியரின் கற்பனையில் 'செந்தாமரை' எனும் புதினம் மலர்ந்தது.

இப்புதினத்தின் கதைப் பின்னல் கவர்ச்சியாக அமையவில்லை; கதைப் பாத்திரங்களும் கருத்தைக் கவரும் வகையில் படைக்கப்படவில்லை. திலகம், செந்தாமரை, இளங்கோ, மருதப்பன், திருநாதன் எனும் பாத்திரங்களே தங்கள் கதையைக் கூறும் முறையில் படைக்கப்பட்டுள்ளனர். இதனால், புதினத்தில் செறிவோ, இறுகிய கட்டுக்கோப்போ இடம்பெறவில்லை. இக்காரணங்களால் புதினத்திற்கு இருக்க வேண்டிய அழகிய கலைவடிவத்தைச் 'செந்தாமரை'யில் காண இயலவில்லை.

> ஆனால், ஒன்றை மறந்துவிடக்கூடாது. பத்திரிகை உலகிலே நுழைய முடியாத தமிழறிஞர் உலகத்தைச் சேர்ந்த தமிழாசிரியராகிய மு.வ., எழுத்துலகில் பீடு நடையிட்டு, இமாலய வெற்றி பெறுவதற்குக் கால்கோள் விழாவாக அமைந்தது 'செந்தாமரை' மலர்ந்த நிகழ்ச்சிதான்.[16]

என்பதை நினைவுகூர்தல் நல்லது.

2. கள்ளோ? காவியமோ?

(1947)

காதல் வாழ்வில் ஈடுபட்ட மங்கைநல்லாள், தன் கணவருடைய மதியை மயக்கும் கள்ளாக இல்லாமல், நிலைத்த – உயர்ந்த – இன்பத்தைத் தரும் நவில்தொறும் நயம் பயக்கும் – காவியமாக வாழ்வதை இப்புதினம் படம்பிடித்துக் காட்டுகிறது.

இதனை,

> மங்கையின் வாழ்க்கை கள் அல்ல; அவள் கள்ளாக இருந்திருந்தால் அன்று இரவே – பிணக்கு ஏற்பட்ட அன்று இரவே – அருளப்பனை மயக்கியிருக்க மாட்டாளா? அருளப்பனும் குடிகாரன் அல்லன். விலைமகள்தான் கள். அவள் காமுகனை அழிக்கிறாள். கள், குடிப்பவன் வாயில் நாறி அழிகின்றது. காவியமோ படிப்பவன் வாயில் புகழ்பெற்றுச் சிறப்படைகின்றது. மங்கையின் வாழ்க்கை காவிய வாழ்க்கை.[17]

எனும் விளக்கத்தால் தெளியலாம்.

இப்புதினத்தின் கதைப்பின்னல், ஓர் அளவிற்குச் செம்மையாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கிறது. மங்கை, அருளப்பன் எனும் இருவரின் இல்வாழ்க்கையில் எழுந்த போராட்டத்தின் விளைவுகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன பாத்திரப்படைப்பு பண்புநல வளர்ச்சியைக் காட்டுகிறது. மொத்தத்தில் இப்புதினத்திற்கு ஒரு கலைவடிவம் கிடைத்துள்ளது.

பேராசிரியர் மு.வ.இப்புதினத்திற்குக் கபிலரின் பாடல் (ஐங்குறு,295) ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, சமுதாயத்தை விளக்க முயன்றுள்ளார். அதனை நூலின் முன்னுரையாகக் ‘குறிப்பு’ எனும் தலைப்பில் அவர் தந்துள்ளார்.

> பறம்பு மலையில் பாரி வள்ளலோடு நெடுங்காலம் வாழ்ந்திருந்த கபிலர் ஒரு பழம்பாட்டில் தீட்டியுள்ள ஓவியம் இது. இதில் மயில் பந்தாடும் பெண்போல் காட்சி தருகின்றது. குருவிகளோ பந்துபோல் எழுந்து எழுந்து விழுகின்றன. காட்சி அழகாக இருந்தும், கபிலர் நெஞ்சம் குருவிகளின் வருத்தத்தை மறக்கவில்லை.[18]

என்று அப்பாட்டிற்குப் பேராசிரியர் விளக்கம் கொடுத்துள்ளார்; அக்காட்சியைக் காதலர் வாழ்க்கையில் பொருத்திக் காட்டுகிறார்.

> புறத்தில் நாகரிகம் மிகுந்து தோன்றுகின்ற உலகமே அந்தத்தினைப்புனம். சமுதாயம் ஒரு மயில். அதன்

சட்டதிட்டங்களே பெரிய உடலும் நீண்ட தோகையும் காதலர் நெஞ்சங்களே குருவிகள்.[19]

எனும் விளக்கம் ஆசிரியரின் சமுதாயப் பார்வையை வெளிப்படுத்துகிறது.

இந்நூலில் கதைத் தலைவராக வரும் பேராசிரியர்[20] அருளப்பர், 'பெற்ற மனம்' எனும் புதினத்தில், அமெரிக்காவில் திருக்குறளின் மாட்சியைப் பற்றி விரிவுரைகள் ஆற்றும் நிலையில் முதிர்ந்த அறிவும், கனிந்த அனுபவமும் வாய்க்கப் பெற்ற பேராசரியராகக் காட்டப்படுகிறார். அருளப்பரைத் 'தங்கைக்கு' எனும் நூலிலும் ஆசிரியர் சுட்டுகிறார்.[21] இப்புதினத்தில், சிறுமியாக வரும் அவருடைய மகள் தேமொழி, அப்புதினத்தின் தலைவியாகக் காட்சி தருகிறாள். இவ்வாறு ஒரு புதினத்தில் இடம்பெறும் பாத்திரங்களைப் பிற புதினங்களில் சிறப்புமிகு பாத்திரங்களாக்குவது மு.வ.அவர்களின் படைப்புக்கலையில் காணப்படும் தனிச்சிறப்பாகும்.

இப்புதினத்தில் வரும் ஆசிரியர் முருகையா, பேராசிரியர் மு.வ.அவர்களின் தமிழாசிரியராகத் திருப்பத்தூர் பள்ளியில் சிறப்புற்று விளங்கிய புலவர் முருகையா முதலியாரின் மறுபதிப்பு என்பர்.[22] தம் ஆசிரியரின் அரிய பண்புகளை நினைவு கூறும் வகையில், இப்பாத்திரத்தை மு.வ.படைத்துள்ளார் எனலாம்.

'தமிழே இந்தி மொழியின் தாய்'

எனும் மொழியாராய்ச்சி முடிவினை, கள்ளோ காவியமோ படைக்கப்படுவதற்கு முன்னர், கட்டுரை வாயிலாக ஆசிரியர் உலகிற்கு உணர்த்தினார் அக்கருத்தை, இப்புதினத்தில், பம்பாய் நகரில் நடைபெற்ற கீழ்த்திசை மொழிகளின் மாநாட்டில் அருளப்பர் எனும் பேராசிரியர் 'வட இந்திய மொழிகளின் அடிப்படை' எனும் ஆய்வுரை வழங்குவதாகக் காட்டுகிறார்.[23] 1937ஆம் ஆண்டு அளவில் நடைபெற்ற இந்தி மொழிப்போராட்ட காலத்தை ஒட்டி, பேராசிரியர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டார் என்பதைச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் அவர் வெளியிட்ட 'இந்தியின் தாய்' எனும் கட்டுரையால் அறிகிறோம்.[24] அக்கருத்தைப் புதினத்தின் வாயிலாகப் பெருவாரியான மக்களுக்கு உணர்த்த ஆசிரியர் விரும்பியதை இந்நூலால் அறிகின்றோம்.

இந்நூலினை அன்றைய சென்னை அரசு, 'சிறப்புமிகு புதினம்' என்று பாராட்டிப் பரிசு வழங்கிச் சிறப்பித்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

3. பாவை

(1948)

கதைத் தலைவியின் பெயரால் அமைந்த புதினம் பாவை தமிழ் இலக்கியத்தின் சிறப்புமிகு பகுதி அகப்பொருள் இலக்கியம். அதன் இயல்புகளை எடுத்துரைப்பது அகப்பொருள் இலக்கணம். ‘இவ்விரண்டிலும் காணப்பெறும் கருத்துக்களும் மரபுகளும் இக்காலத்திற்குப் பயன்படா, அவை அருவருக்கத்தக்கனவாக உள்ளன’ என்று யாரோ ஒருவர் தமிழ் அகப்பொருள் மரபின் சிறப்பை உணராது வெறுப்புடன் பேசினார்.[25] ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அகப்பொருள் மரபின் மாட்சியை அறிவிக்க, சங்ககாலச் சான்றோரரான கபிலர், ‘குறிஞ்சிப் பாட்டினை’ இயற்றினார் என்பது பத்துப்பாட்டால் தெரிய வருகின்ற செய்தியாகும். அதைப்போன்று, பேராசிரியர் மு.வ. ‘இருபதாம் நூற்றாண்டுப் பிரகதத்தன்’ ஒருவனுக்கு,

> “காலத்திற்கு உதவாத கருத்துக்கள் அல்ல; இக்காலத்திற்கு விளங்காத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இன்றும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில்தான் இருக்கிறது களவொழுக்கத்தின் தினைப்புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது. உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறி விட்டாலும், நாட்டுப்புறங்களில் பெரும்பாலும் அப்படியே இருக்கிறது” என்று கூறி, ஒரு கதையைப் புனைந்து.[26]

சொன்னார். அக்கதையே ‘பாவை’யாக வடிவம் பெற்றது.

நாட்டுப்புற வாழ்க்கையும் நகரவாழ்க்கையும் முரண்பாட்டு நிலையில் இப்புதினத்தில் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. மாறிவரும் சமுதாய அமைப்பில், உரிமைக்கும் கண்மூடிப் பழக்க வழக்கங்களுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தையும், இறுதியில், ‘உரிமை’ வெற்றி பெறுவதையும் இப்புதினம் விளக்குகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், தமிழகத்தின் சிற்றூர்களில் இளைய தலைமுறைக்கும் மூத்த தலைமுறைக்கும் இடையே எண்ணப்போக்கில் நடைபெற்ற போராட்டத்தைக் கதைக்கருவாகக் கொண்டு இப்புதினம் படைக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

இது வடிவத்தால் சிறியது; ஓரளவிற்குச் செறிவான அமைப்பும் உடையது; பாத்திரப்படைப்பு குணச்சித்திரமாக அமைந்திருக்கிறது. இதில் வரும் ஏகாம்பரச் செட்டியார் இன்றும் நம்மிடையே வாழ்ந்துவரும் ஒரு மனிதராகத் தோன்றுகிறார். பாவை ஒரு நல்ல பாத்திரப்படைப்பு இந்நூலின் பதினைந்து பகுதிகளுக்கும் நயமிகு தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்புதினம் ஒன்றில்தான் ‘பிள்ளை’, ‘செட்டியார்’ போன்ற சாதிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[27] மு.வ.அவர்களின் பிற புதினங்களில் சாதியைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற வில்லை என்பது சிறப்புமிக்க செய்தியாகும். சமூகப் புதினங்களைப் படைத்த மு.வ., இந்தியச் சமுதாயத்தில் புரையோடிப்போன சாதி வேற்றுமையைக் களைந்து எறிவதற்கு இப்புதுமுறையைப் பின்பற்றியுள்ளார் எனக் கூறலாம். அவருக்கு முன்னர் வேறெந்தப் புதினப்படைப்பாளரும் இம்முறையைக் கையாளவில்லை என்பது அவருக்கு முற்பட்ட காலத்தியப் புதினங்களில் இருந்து தெரியவருகிறது.

பாவை எழுதப்பட்ட காலம் 1944ஆம் ஆண்டாகும். அப்பொழுதே அது ‘லேகோபகாரி’ எனும் இதழில் தொடர்கதையாக வெளிவந்தது என்பதை முன்னரே கண்டோம். அந்நிலையில் மு.வ.அவர்கள் அதற்கு முன்னுரை ஒன்றை (12.3.1944) எழுதிவிட்டார். அக்கதை, நூலாக 1948இல் வெளியிடப்பட்டபொழுது, அம்முன்னுரையை நூலின் முகப்பில் சேர்த்து வெளியிட்டுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

4. அந்த நாள்

(1948)

பேராசிரியர் மு.வரதராசனார், முதன்முதலில் எழுதிய புதினமே ‘அந்த நாள்’, இது இரண்டாவது உலகப்போரை ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுவது, பர்மாவிலிருந்து போரின் கொடுமைக்கு இரையாகி, ‘கால்நடையாக’த் தாயகத்திற்குத் திரும்பி வந்த ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் அல்லற்பட்டு, ஆற்றாது அழுத கண்ணீர்க் காவியம் ‘அந்த நாள்’.

இக்கதைக்குரிய செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் மு.வ.அவர்களுக்கு, முறையாகக் கூறியவர் பாரிநிலையம் உரிமையாளர் திரு.க.அ.செல்லப்பன் ஆவார்கள். பர்மாவிலிருந்து கால்நடையாகத் தமிழகம் வந்த தமிழ்க் குடும்பங்களில் அவருடைய குடும்பமும் ஒன்று.[28] அவரும் அவருடைய குடும்பத்தினரும், அவர்களோடு வந்த ஆயிரக்கணக்கான தமிழர்களும் பட்ட துன்பங்களைக் கேட்டு உள்ளம் கசிந்துருகிய மு.வ., நாட்டு மக்கள் அவற்றை அறியும் பொருட்டு, ‘அந்த நாள்’ எனும் புதினத்தைக் கற்பனை வளம் தோன்றுமாறு படைத்துள்ளார்.

கதையில் வேறு சிறப்பு ஒன்றும் இல்லை; கட்டமைப்பும் செறிவாக அமையவில்லை. கதைப்பாத்திரங்களே, தங்கள் உள்ளவுணர்ச்சிகளையும் துன்பமயமான அனுபவங்களையும்

கொட்டிச் செல்லுகின்றன. நீலமேகம் எனும் பாத்திரப்படைப்பு நம் உள்ளத்தைத் தொடுவதாகும். தன்னலமே வடிவெடுத்த கொடியவனாக முதலில் தோன்றும் நீலமேகம்' பட்டறிவால் பண்பட்டு, சமுதாயத் தொண்டனாக இறுதியில் காட்சி தருகிறான்.

போரற்ற உலகத்தை – 'திருவில் அல்லது கொலைவில்' அறியாத – மக்கள் சமுதாயத்தை, அமைதி நிலவும் சமுதாயத்தை அமைப்பதற்குரிய வழிவகையினைச் சிந்திக்குமாறு தூண்டும் வகையில், இப்புதினத்தைப் பேராசிரியர் படைத்துள்ளார்.

இப்புதினம் ஆசிரியரின் கன்னிப்படைப்பு, ஆனால், மேலே கண்ட புதினங்கள் வெளிவந்த பிறகே, இப்புதினம் நூலாக வெளியிடப்பட்டது. "மு.வ.வின் நாவல்களில் முதலில் வெளிவந்தது 'செந்தாமரை' ஆனால், 'செந்தாமரை'க்கு மூத்தவள் 'பாவை'. பாவைக்கு முந்தியது 'அந்தநாள்', மு.வ.நாவல்களை ஆய்வு செய்வோர் இதைக்கருத்தில் கொள்ளுவது நலம்"[29] எனும் ஆய்வாளரின் கருத்து இதை உறுதிப்படுத்துகிறது.

இப்புதினம், நோக்காலும் போக்காலும் 'செந்தாமரை'யோடு பெரிதும் ஒத்திருக்கிறது. முதலில் தொடர்கதையாகத் 'தமிழ் முரசில்' இப்புதினம் வெளியிடப்பட்டது. இவ்வகையில், பாவையோடு இது ஒத்த இயல்பு உடையது.

இப்புதினத்தின் பெயர், அந்தக்காலத்திய பத்திரிகை உலகிலும், திரைப்பட உலகிலும் பெரும் தாக்கத்தை உண்டாக்கிற்று. அது ஒருவகைக் குறியீட்டுப் பெயராகப் பயன்படுத்தப்பட்டது. 1948 அளவில், இரண்டாவது உலகப் போரினை மையமாகக் கொண்டு ஜாவர் சீதாராமன் தயாரித்து வெளியிட்ட படம் ஒன்று வெற்றியுடன் பல மாதங்கள் ஓடியது. அத்திரைப்படத்திற்கு 'அந்த நாள்' என்பதே பெயராகும்.

5. மலர்விழி

(1950)

இதுவரை ஐந்து புதினங்களைப் (கி.பி.2000 உட்பட) படைத்து, பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற பேராசிரியர் மு.வரதராசனார் 'மலர்விழி' எனும் புதினத்தைக் கதைப்பின்னலில் இறுக்கமும், கதைக்கருவில் ஆழமும், பாத்திரப்படைப்பில் அழுத்தமும் உடைய, கலைநயம் வாய்ந்த படைப்பாகப் படைத்துள்ளார். நிகழ்ச்சிகளும், கதைப்பாத்திரப் படைப்பும் கதைக்கருவினை விளக்கமுறச் செய்யும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்புதினத்தில் வரும் 'மலர்விழி' எனும் பெண் பாத்திரத்தை, கதைத்தலைவி எனச் சொல்ல முடியாது கதையின் நடுவே, கல்லூரியில்

படிக்கும் காரிகையாக அவள் அறிமுகப்படுத்தப்படுகிறாள். அறிவும் அழகும், அன்பும் பண்பும் வாய்ந்த இளம்பெண் அவள்; நாகநாதன் எனும் இளைஞனுக்கு வாழ்க்கைப்படுகிறாள். இல்வாழ்க்கையில் புயல் வீசுகிறது; கணவனால் புறக்கணிக்கப்பட்டுத் தனித்து வாழ்கிறாள். துன்பத்தை மறக்க ஆசிரியப் பயிற்சிப் பெற்று, ஓர் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறாள்; மணிமேகலையைப் போல் வாழ முயல்கிறாள். இந்நிலையில் வாழ்க்கையில் தடம் புரண்ட அவள் கணவன், இறந்துவிட்டதாகச் செய்தி வருகிறது; கதையும் முடிகிறது.

இருநூற்று எண்பத்திரண்டு பக்கங்கள் கொண்ட இப்புதினத்தில், மலர்விழி பெறும் பங்கு இந்த அளவினதேயாகும். எனவே, அவளைக் கதைத்தலைவியாகக் கொள்ள இயலாது. இப்புதினத்தின் தலைவரான 'கலக்டர்' செல்வநாயகத்தின் மனைவி 'காஞ்சனை'யே முக்கியமான இடத்தைப்பெறும் பாத்திரமாகும். கதையின் கடைசிப்பகுதியில், நாகநாதன் இறப்பதற்கு முன்பு, அவள் இறந்துபோகிறாள். எனவே, அவளுடைய பெயரை, இப்புதினத்திற்குப் பெயராகக் கொடுப்பதே பொருத்தமானதாக இருக்கக்கூடும்.

எல்லா வகையான நற்பண்புகள் வாய்த்தும், பண ஆசை காரணமாகக் கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்தவள் காஞ் சனை. இத்தகைய கொடியவளுடைய பெயரை நூலிற்கு இடுவது, கொடியவரைப் போற்றி ஆதரிப்பதாக அமைந்துவிடக்கூடும் என்று பேராசிரியர் எண்ணியிருத்தல் கூடும். மேலும்,

> **'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை'**[30]

எனும் தமிழ் மரபிற்கிணங்க, நல்ல பெண்மணியான – பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய இயல்புகள் நிறைந்த – மலர்விழியின் பெயரையே புதினத்திற்கும் உரிய பெயராக ஆசிரியர் சூட்டியிருக்கலாம்.

நல்லவராக வாழும் 'கலக்டர்' செல்வநாயகம், வல்லவராக வாழவில்லை. எளிய வாழ்க்கையும் உயர்ந்த இலட்சியங்களும் கொண்ட செல்வநாயகத்திற்கு வாய்த்த மனைவி அறிவும், அழகும், கலையுணர்வும் உடையவள். அதே சமயத்தில் ஆடம்பர வாழ்க்கையில் பேரவாக் கொண்டவள். அதனால், 'எப்படியாகிலும் நிறைய பணம் சேர்க்க வேண்டும்; சொகுசான இன்ப வாழ்க்கை வாழ வேண்டும்' எனும் துடிப்பு உடையவளாகக் காணப்படுகிறாள். இவற்றோடு, அவள் எதிர்பார்த்த அளவிற்குக் கணவனிடம் இன்பத்தைப் பெறாமல், அதற்காக ஏங்கித் தவிப்பதைப்போல் தோன்றுகிறது. இளமையில் தீய வழிகளில் சென்று, தன் ஆண்மையை இழந்தவர் செல்வநாயகம் என்று ஆசிரியர் நயமாகச் சுட்டிச்செல்லுவது[31]

இங்குக் கருதத்தக்கது. இந்த நிலையில், தம் வீட்டில் வளர்ந்த கட்டிளங்காளையான நாகநாதனைக் கொண்டு, தம்முடைய இரு வேட்கைகளையும் அவள் தணித்துக்கொள்ள முயலுகிறாள். ஐயப்படத்தக்க வகையில் 'கலக்டர்' செல்வநாயகம் இறக்கிறார். அவளும் நாகநாதனும் இருவகை வியாபாரத்தில்' இன்பம் காண முயலுகின்றனர். கணவனுக்குத் துரோகம் செய்தவளை நாகநாதன் நட்டாற்றில் விட்டுவிட்டுச் செல்லுகிறான். அவள் தற்கொலை செய்து கொண்டு மடிகிறாள்.

இளமையில் தவறு செய்த செல்வநாயகம் தம் தவற்றையுணர்ந்து, திருந்தி அறவழியில் வாழ முயலுகிறார். இதனால், அவர் ஒரு முழுநிலைப் பாத்திரமாக விளங்குகிறார். ஆனால் கல்லூரியில் படித்துப்பட்டம் பெற்ற அவருடைய மனைவியோ, கலையுணர்வால் கருத்தழிந்து, அறத்தில் பற்று இல்லாமல், பகட்டாக வாழ நினைக்கிறாள். அதன் விளைவே அவருடைய அவல முடிவு.

இப்புதினத்தில் வரும் மற்றோர் குடும்பக் காட்சியில் நடுத்தர வகுப்பினர் இடம்பெறுகின்றனர். புகைவண்டியில் 'டிக்கட்' பரிசோதகராகப் பணிபுரியும் மணி, அவனுடைய மனைவி கலைவல்லி ஆகிய இருவர் வாழ்க்கையிலும் அமைதி நிலவுகிறது; அன்பு தழைக்கிறது. அதற்குக்காரணம், அவர்கள் பணத்திற்கு அடிமையாகவில்லை; பணம், வாழ்க்கைக்குத் தேவையான ஒருகருவி என்பதை உணர்ந்து, வாழ்க்கையில் அன்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இதனால், அவர்கள் வாழ்க்கைத்தேர் மேடுபள்ளங்களில் உருண்டோடினாலும், அச்சாணி முறிந்து விடாமல், பயணத்தை வெற்றி பெறச் செய்கிறது.

இவ்விரண்டு குடும்பக் கதைகளோடு 'முத்தய்யன் – சாவித்திரி' காதல் கதையும் இடையிடையே பின்னிப் பிணைந்து செல்லுகிறது. இம்மூன்று குடும்பத்தின் கதைகளும், கலையழகு குன்றாவகையில் பின்னப்பட்டுள்ளன. இதனால் கதைக்கருவோடு கதைப்பின்னல் இறுக்கமாக இணைந்து, நல்லதொரு கதைக் (கட்டுக்) கோப்பைக் கதைக்கு அளிக்கிறது. இதில் கிளைப்பாத்திரமாக வரும் முத்தய்யனே கதையைக் கூறிச் செல்லுகிறான்.

முந்தியப் புதினங்களில் 'காதலுக்கு' முதன்மையிடம் பேராசிரியர் தந்துள்ளார். இப்புதினத்தில் 'முத்தய்யன் – சாவித்திரி' எனும் காதலர் வருகின்றனர். ஆனால், அவர்களுடைய காதல், இரண்டு ஆண்டுகள் அமைதியாகக் காத்திருக்கச் செய்கிறது; கடைசியில் கனிகிறது. எனினும், இப்புதினத்தில் சமுதாயச் சீர்கேடுகளே முதன்மையிடம் பெறுகின்றன. பணவேட்டை மிகுந்த சமுதாயத்தில், பெருநிலையில் உள்ளவர்கள் எல்லாம், எவ்வாறு இழிசெயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதையும், வறுமை ஒழிக்கப்பட்டால் ஒழிய, மனித சமுதாயத்திற்குக்

கடைத்தேறவழி கிடையாது என்பதையும் விளக்கும் வகையில், இப்புதினம் படைக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். முந்தியப் புதினங்களில் காணப்படுவதைப் போன்றே, தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பும், பழந்தமிழ் இலக்கியத்தின் மாட்சியும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருக்குறளின் அனைத்துலகப் பண்பும், இப்புதினத்திலும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேலாக, சமவுடைமைச் சமுதாயம் பற்றிய எண்ணங்களும், பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனும் துடிப்பும் இளம் பாத்திரங்களின் வாயிலாக மட்டும் அல்லாமல், செல்வநாயகம் போன்ற உயர்நிலை அலுவலர் மூலமாகவும் இப்புதினத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பொதுவுடைமைச் சமுதாயம் அமையுமானால், பணவேட்டைக்கும் பகட்டு வாழ்க்கைக்கும் இடமிருக்காது என்பதைப் புதின ஆசிரியர் புலப்படுத்துந் திறன் சிறப்பாக அமைகிறது.

ஒரு நேர்முகப் பேட்டியில், "என் முந்தின நாவல்களில் காதலே முக்கிய இடம் பெறுகிறது. ஆனால் பின்னர் எழுதிய நாவல்களிலோ சமூகப் பொருளாதாரப் போராட்டங்களே முக்கியமாக இடம்பெற்றுள்ளன."[32] என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும். மலர்விழிக்கு (1950) முந்திய நாவல்களில் எல்லாம், காதலே முதன்மையிடம் பெறுவதைக் காணுகின்றோம். மலவிழிக்குப் பிந்திய நாவல்களில் எல்லாம் கருகிய காதல், நிறைவேறாத காதல், முறிந்த காதல் போன்ற நிலைகளையே காணுகின்றோம். ஆனால், சமுதாயச் சிக்கல்கள், பொருளாதாரப் போராட்டங்கள், அரசியல் கொந்தளிப்புகள் போன்றவையே மலர்விழிக்குப் பிறகு தோன்றிய எட்டுப் புதினங்களிலும் இடம்பெற்றுள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிலப்பதிகாரம் ஒரு திருப்பு மையமாக விளங்குகிறது. பழைய அகம் புறம் மரபுகளோடு கதைபொதி பாட்டாகவும், பிற்காலச் சமய வழிபாட்டுப் பாடல்களுக்கு முன்னோடியாக ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வேட்டுவ வரிப்பாடல்களைக் கொண்ட தோத்திர நூலாகவும் சிலப்பதிகாரம் காணப்படுகிறது. இதைப்போன்று, மலர்விழி, காதலர் வாழ்வையும், போராட்டத்தையும், இறுதியில் வெற்றியையும் காட்டுவதோடு சமுதாயச் சீர்கேடுகளைப் படிப்பவர் மனத்தில் ஆழப் பதியுமாறு சித்திரிக்கிறது. இவ்வகையில், பேராசிரியர் மு.வ.அவர்களின் புதினப்படைப்புகளில், 'மலர்விழி' ஒரு திருப்பு மையமாக அமைந்துள்ளது எனலாம்.

மக்கள் இறைவனுடைய குழந்தைகள். அவர்களுள் சிலரை நல்லவராகவும் வேறு சிலரைக் கொடியவராகவும் அவர் படைத்திருக்க மாட்டார். எனவே, பொல்லாதவர் கொடியவர் என்று

சிலரைச் சுட்டிக்காட்டி, எல்லாத்தீமைக்கும் அவர்களே காரணம் என்று பழியை அவர்கள் மீது சுமத்துவதில் பயனில்லை. 'அவர்கள் ஏன் கொடியவர்கள் ஆனார்கள்?' என்பதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து, உலக வாழ்க்கையைத் திருத்த முயலவேண்டும். திருத்த முடியாததனால், ஒரு சிலரை மட்டும் பொல்லாதவர்களாக்குவதால், உலகில் போரும் பூசலும் தொடர்ந்து ஏற்படுமாறு வழிகோலிவிட்டுச் செல்லுவதனால் என்ன பயன்?'[33] என்று படிப்வர்களைச் சிந்திக்குமாறு ஆசிரியர் தூண்டுகிறார்.

சாமர்செட் மாம் (Somerset Maugham) எனும், மேற்கு நாட்டுப்புதின ஆசிரியரின் 'திருமதி கிராடாக்கு' (Mrs.Craddock) எனும் புதினத்தின் கதையினை ஒத்ததாக, 'மலர்விழி'யின் கதையமைப்பும், கதைப்பின்னலும், பாத்திரப்படைப்பும் அமைந்துள்ளதாக ஒப்பீட்டு ஆய்வாளர் டாக்டர் வி.சச்சிதானந்தம் கருதுகிறார்.[34]

இங்கு ஓர் உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். 'நாகநாதன் – காஞ்சனை'யின் கதைக்கு அடிப்படை வேலூரில் 1942 அளவில், புகழோடு விளங்கிய பேராசிரியர் ஒருவருடைய வாழ்க்கையாகும். 'கலக்டர்' செல்வநாயகத்தின் பாத்திரப்படைப்புக்கு முன்மாதிரியாக அந்தப் பேராசிரியர் வாழ்ந்தார். இதைச் சென்னை, வேலூர்ப் பகுதிகளில் வாழும் அறிஞர்கள் நன்கு அறிவர்.[35]

ஒருமுறை, "உங்கள் கதாபாத்திரங்கள் சித்திரிக்கும் உண்மை நபர்களில் பிரபலமான சிலரைக் குறிப்பிட முடியுமா?" என்ற பேட்டி கண்ட ஒருவர் கேட்டார். அதற்குப் பேராசிரியர் மு.வ., "நான் இதை வெளியிட விரும்பவில்லை" என்று உடனே மறுமொழி பகர்ந்துள்ளார்.[36] எனவே, 'அறிஞர்கள் ஒத்த சிந்தனையுடையவர்கள்' எனும் முதுமொழிக்கு இணங்க இவ்விரு புதினப் படைப்பாளர்களும் தாங்கள் அறிந்திருந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு, தங்கள் கற்பனையாற்றலால் இத்தகைய புதினங்களைப் படைத்து இருக்கலாம்.

சாமர்செட் மாம் அவர்களுடைய 'திருமதி கிரடாக்கு' எனும் புதினத்தைவிட, அவர் படைத்துள்ள 'ஒழுக்கம்' (Virtue) எனும் சிறுகதையே[37] 'மலர்விழி'யோடு கதைக்கரு, பாத்திரப்படைப்பு போன்றவற்றால் பேரளவிற்கு ஒப்புமையுடையதாகத் தோன்றுகிறது.

6. பெற்ற மனம்

(1950)

கள்ளோ காவியமோவில் சிறுமியாக வரும் தேமொழி, இப்புதினத்தின் கதைத் தலைவியாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். சீராளர் எனும் பேராசிரியருக்கு வாழ்க்கைப்பட்ட அவளுக்கு,

மகப்பேறு வாய்க்கவில்லை. அதனால், சென்னையில் தோட்ட வேலை செய்யும் கந்தசாமியின் இரண்டாவது மகனைக் கைக்குழந்தையாக இருக்கும் பருவத்திலேயே, வேலூருக்கு எடுத்துச் சென்று அவள் வளர்க்கிறாள். அச்சமயத்தில் நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த அக்குழந்தையின் தாய் கணவனை ஒரு விபத்தில் இழக்கிறாள். பின்னர்த் தன்னுடைய குழந்தையைத் தேடிப் பல ஊர்களுக்குச் சென்று அலைந்து, மூத்த மகனையும் தவறவிட்டு, இறுதியில் வேலூருக்கு வந்து அவள் சேருகிறாள்; தேமொழியின் வீட்டு வேலைக்காரியாக அவள் அமர்கிறாள், அந்த வீட்டுப்பையனே தன்னுடைய இரண்டாவது குழந்தை என்பதைக் கண்டு கொள்ளுகிறாள். அந்நிலையில், அவளுடைய மூத்த மகன் அவ்வூரில் உள்ள அச்சகம் ஒன்றில் வேலை செய்து வருகிறான். ஒருநாள் தன் தாயாரை அவள் அடையாளங்கண்டு, தொடர்பு கொள்ளுகிறான்.

இதற்கு இடையில், 'நல்கூர்ந்தார் செல்வ' மகனாக வளர்ந்து வரும் முனியம்மாவின் இரண்டாவது மகன் மணிவண்ணன் செருக்கு உடையவனாகவும், ஆணவம் பிடித்தவனாகவும் காட்சி தருகிறான்; ஏழை எனிய மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்து வருகிறான். அவனுடைய தலைக்கிறுக்குத் தனத்தால், முனியம்மாவின் மூத்த மகனுக்கும் அவனுடைய காதலிக்கும், மணிவண்ணன் கொடுமைகள் பல செய்கிறான். தான் பெற்ற பிள்ளைகள் இருவரும் மோதிக்கொள்வதைப் பார்த்துக் கொண்டிருக்க இயலாமல், பெற்ற மனம் பதறுகிறது. இருவரையும் உண்மையை உணருமாறு செய்ய அப்பெற்ற மனம் முயலுகிறது. உண்மை வெளிப்பட்டபோது இளைய மகனுடைய மனம் குமுறுகிறது; ஒரு வேலைக்காரியின் மகன் என்று சமுதாயத்திற்குத் தெரிந்தால் மானக்கேடு உண்டாகும் என்று அவன் மனம் கூசுகிறது எனவே, மணிவண்ணன் முனியம்மாவைத் தன் தாய் என ஒப்புக்கொள்ள மறுக்கிறான். அந்நிலையில், தானும் "ஒரு வேலைக்காரியின் மகளே; தன் தாயை 'அம்மா' என்று அழைக்கத் தயங்கியதால் அந்தப்பெற்ற மனம், நோய் வாய்ப்பட்டு இறந்த துன்பக்கதையினை"த் தேமொழி, தன் வளர்ப்பு மகனுக்குக் கூறிப் புலம்புகிறாள்.

'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு' என்பது பழமொழி. இந்தப் பழமொழிக்கு நல்ல இலக்கியமாக விளங்கும் 'முனியம்மாள் – மணிவண்ண'னை நேரிலே காணுகின்றோம். ஒன்றும் அறியாச் சிறுமியாக இருந்த காலத்தில் தான் செய்த பிடிவாதத்தால், தன் தாயினுடைய உள்ளம் எவ்வாறு தவித்திருக்கும் என்பதை நினைந்து, நினைந்து நைந்துருகும் தேமொழியைக் காணுகின்றோம். அவளுடைய தாயான மங்கையின் 'பெற்ற மனத்தின்' உள்ளக் குமுறலை, மகப்பேறு வாய்க்காத மகளின் வாயிலாகக் கேட்கின்றோம்.

தாய்மையுணர்ச்சி அனைத்து உயிர்களுக்கும் இயற்கையாக அமைந்தது. அதை யாராலும் வெல்ல இயலாது. தப்பித்தவறி, அதை வெல்லுங்காலம் ஒன்று உலகில் தோன்றுமானால், மனித குலத்தின் அழிவு நெருங்கிவிட்டது என்பதை உணர வேண்டும் என்று ஆசிரியர் எச்சரிக்கை செய்கிறார். பின்னர், பெற்ற மனம், தன் பிள்ளைகளுக்காக எத்தகைய கொடிய துன்பங்களுக்கு ஆளானாலும், நெஞ்சில் தாய்மையுணர்ச்சி குன்றாமல், நிறைந்து விளங்கும் என்பதை இப்புதினத்தின் வாயிலாக அவர் உலகிற்கு உணர்த்துகிறார்.

வேலைக்காரி முனியம்மாளின் பாத்திரப்படைப்பும், உளநூல் பேராசிரியர் அருளப்பரின் திருமகளான தேமொழியின் பாத்திரப்படைப்பும் நடைச்சித்திரங்களாக விளங்குகின்றன. அருளப்பரை நேரில் பார்க்காமல் போனாலும், தம்முடைய மகளுக்கும், மருகருக்கும் அமெரிக்காவிலிருந்து அவர் எழுதிய கடிதங்களின் மூலம், அவர் எத்தகைய பண்பாளராக உயர்ந்து விளங்குகிறார் என்பதை எளிதில் உணர முடிகிறது. சில நிலைகளில் புதினப் படைப்பாளரான மு.வ.அவர்களையே நினைவுபடுத்தும் பாத்திரமாக அருளப்பர் விளங்குகிறார்.

நிகழ்ச்சிகள் நிறைந்தது ‘பெற்ற மனம்’, இந்நிகழ்ச்சிகள் கதைப்பின்னலைக் கவர்ச்சியுடையதாக்குகின்றன; புதினத்தின் கட்டுக்கோப்பிற்குப் பொலிவையும், வடிவத்திற்கு வலிவையும் தருகின்றன. புதினத்தின் கலைத்திறன்களை – உத்திகளை ஆசிரியர் திறமையாகப் பயன்படுத்தி, தமிழ்ப்புதின உலகில் தமக்கென்று ஓர் இடத்தை இப்புதினத்தின் மூலம், முதன்முதல் அமைத்துக்கொண்டார் என்பது நன்கு புலனாகின்றது.

இத்தகைய சிறப்பியல்புகள் வாய்ந்த இப்புதினத்தினை 1960ஆம் ஆண்டில் திரைப்படமாக்கினர். திருவாரூர் கே.தங்கராசு திரைக்கதை வசனம் எழுத, இயக்குநர் ஏ.பீம்சிங் படத்தினைத் தயாரித்துள்ளார். அப்படத்தில் சிவாஜி கணேசன், எல்.விஜயலட்சுமி, சந்திரபாபு, எஸ்.எஸ். இராஜேந்திரன் முதலியோர் நடித்துள்ளனர்.[38] இப்படம் தமிழ்நாட்டின் திரையுலகில் வெற்றிப்படமாகப் புகழ்பெறவில்லை. ஆனால், இப்படத்தைத் தெலுங்கில் ஒலிப்பதிவு செய்து, ஆந்திர மாநிலத்தில் திரையிட்டனர். அங்கு ஆறுமாதங்களுக்கு மேல் இப்படம் தொடர்ந்து திரையிடப்பட்டதாகத் தெரிகிறது.[39]

7. அல்லி

(1952)

பேராசிரியரின் பதின்மூன்று புதினங்களில் நான்கு,[40] பெண் பாத்திரங்களின் பெயர்களைக் கொண்டனவாகும். அந்த நான்கு

புதினங்களுள் இரண்டு மலர்களின் பெயரைக் கொண்ட பெண் பாத்திரங்களால் பெயர் பெற்றனவாகும். ‘செந்தாமரை’யை முன்னரே கண்டோம். அடுத்து ‘அல்லி’யை இப்பொழுது காணப்போகின்றோம். இவற்றுக்கிடையில் மலர் போன்ற விழியுடைய ‘மலர்விழி’யைப் பார்த்தோம். இவ்வாறு மலர்களைக் கதைப்பாத்திரங்களுக்குப் பெயராக இடும் பண்பு, மு.வ.அவர்கள், இயற்கை அன்னையின் ‘புன்முறுவலாக’ப் பூத்துக் குலுங்கும் மலர்களிடத்துக் கொண்ட ஈடுபாட்டை எடுத்துரைக்கிறது.

இப்புதினம் வாசகரிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கியது. ‘இப்படி எழுதலாமா?’ என்று ஒரு சாரார் வினவினர். ‘இதையெல்லாம் எழுதலாமா? இதைப்படிக்கும் இளைஞர்கள் கெட்டுவிட மாட்டார்களா?’ என்று மற்றொரு சாரார் குறை கூறினர். இவ்வாறு படித்தவரிடையே ‘சலசலப்பை’யும், பாமரரிடையே பாலியல் அறிவினைத் தெரிந்து கொள்ளுவதில் ஆர்வத்தையும் உண்டாக்கிய புதினம் ‘அல்லி’.

தம் இளமைக்காலத்தை நினைந்து ‘குறிக்கோள் இலாது கெட்டேன்’[41] என்று அப்பர் அடிகள் மனம் வருந்தினார். குறிக்கோள் யாதும் இல்லாத இளைஞர்கள், ‘கண்டதே காட்சி; கொண்டேதே கோலம்’ என்று வாழும் இளைஞர்கள், வாழ்க்கையில் எளிதில் தும்பு அறுந்த காளைகளாக மாறி எதிர்கால வாழ்க்கைக்கு ஊறு விளைவித்துக் கொள்ளுகின்றனர். இதை,

> இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரு பொழுதுபோக்கு இருக்க வேண்டும். ஒரு வெறி – கட்சி வெறி அல்லது சமயவெறி இருந்தாலும் மேலானதே. வெளியுலகத்தில் ஒரு போராட்டம் இருக்க வேண்டும். இல்லையானால், இளமை எண்ணங்கள் சும்மா இருக்க முடியாது. நாடி நரம்புகளின் ஆசையைப் பற்றி அலைத்து, உடலைக் கெடுத்துவிடும். அந்த ஆசைக்கு இடமில்லாமல் இருபது இருபத்தைந்து வயது இளைஞன் இருக்க வேண்டுமானால், ஒரு குறிக்கோள், ஒரு வெறி இருந்து வெளியுலகம் அவனைக் கவர வேண்டும்.[42]

என்று இளைஞர் சமுதாயத்திற்கு ‘அல்லி’யின் மூலம், அறிவுரை கூறுகிறார் பேராசிரியர் மு.வரதராசனார். இத்தகைய குறிக்கோள் யாதும் இல்லாமல் வாழ்ந்ததனால்தான் அல்லியின் அண்ணன் சோமசுந்தரம், இளம் வயதிலேயே எலும்புருக்கி நோயாளி ஆகி இறந்து போகின்றான் என்பதைக் கதையின் போக்கிலேயே ஆசிரியர் உணர்த்திவிடுகிறார்.

சாதியை ஒழிக்கக் கலப்புமணமே சிறந்த வழி என்பதைப் பேராசிரியர் 'பாவை'யின் மூலம் அறிவித்துள்ளார். ஆனால், அவர் புதியதாக இரண்டு சாதிகளைப் படைத்துள்ளார். அவை மனப்போக்கினால் உண்டான சாதிகளாகும். ஒன்று 'இப்படித்தான் வாழ வேண்டும்' எனும் குறிக்கோளாடு வாழ முயலும் இலட்சியவாதிகளைக் கொண்ட சாதி, 'வாழ்க்கைக்கு இன்பம்தான் தேவை. அதை அடைய எப்படி வேண்டுமானாலும் வாழலாம்' எனும் எண்ணத்தோடு வாழ முயலும் இன்பநலக் கோட்பாட்டினரைக் (Hedonists) கொண்ட சாதி மற்றொன்றாகும். இவ்விரு சாதியினர் இடையே கலப்பு மணம் உண்டானால், அது பெருந்துன்பம் விளைக்கும் என்பதை 'அல்லி' அறிவிக்கிறது.

'இப்படித்தான் வாழ வேண்டும்' எனும் இலட்சிய நோக்கு உடையவள் டாக்டர் அல்லி. 'எப்படியும் வாழலாம்' எனும் எண்ணப்போக்கு உடையவன் சுப்புரத்தினம் எனும் பொறியியல் வல்லுநன். இவர்கள் இருவருக்கும் படிப்பு, பதவி, பணம் எனும் மூன்றின் அடிப்படையில் திருமணம் பெற்றோர்களால் முடிவு செய்யப்படுகிறது. இதன் விளைவாகப் பொருந்தா மனம் பொருமுகிறது; குமுறுகிறது. பொதுமையாகத் திருத்த முயன்று, தன் முயற்சியில் அல்லி தோல்வியுறுகிறாள். கணவன் மனைவியரிடையே போராட்டம் முற்றுகிறது. கணவன் பல நாட்கள் தொடர்ந்து வீட்டுக்கு வருவதில்லை.

அல்லி அப்பாவிடம் அடைக்கலம் அடைகிறாள். மனநோய்க்கு மருந்து தேடிப் பெங்களூருக்குச் சென்று, மருத்துவப் பணியில் அல்லி ஈடுபடுகிறாள். அங்குப்பாலியல் வாழ்க்கையில் – ஆண் பெண் உறவில்உண்டாகும் சீர்கேடுகளுக்குரிய காரணத்தை அறிய விரும்பி, திட்டமிட்ட ஆராய்ச்சியை அவள்மேற்கொள்ளுகிறாள். அவளுடைய அன்றாடப்பணியில் சந்திக்கும் நோயாளிகளிடம் பல கேள்விகளைக் கேட்டு, குறிப்புகள் எடுத்து வைக்கிறாள். மற்றும் அறவாழி, இன்பவல்லி, டாக்டர் பரமேசுவரி, அண்ணன் '(சோமசுந்தரத்தின் நாட்குறிப்பு) அவளுடைய ஆராய்ச்சிப்பணிக்கு உதவுகின்றனர். அவள், பாலியல் சிக்கலை விளக்கும் 'எது குற்றம்?' என்னும் நூலை எழுதி, அத்துறையில் வல்லுநராகிறாள். புனைப்பெயருடன் வெளியிடப்பட்ட அந்த நூலைப் படித்து, அவளுடைய கணவன் கழிவிரக்கம் கொள்ளுகிறான். ஆனால், அல்லி அவனைத் திரும்பச் சந்திப்பதற்குள், அவன் இறந்து போகிறான். தொடக்கம் முதல், முடிவு வரையில் இப்புதினம் டாக்டர் அல்லியின் கதையாகவே அமைந்திருக்கிறது.

அல்லியின் வாழ்க்கையில், நிகழ்ச்சிகள் குறைவானமையால் கதைப்பின்னலில் செறிவு இல்லை. நெறியோடும் முறையோடும்

வாழ்வதற்கு வழிவகுப்பது திருமணம். திருமணத்திற்க முன்பே புலனடக்கம் இல்லாமல் 'இன்பவேட்டையில்' ஈடுபடுவோர், எத்துணை அழகான, அன்பான, பண்பான மனைவி வாய்த்தாலும் இல்வாழ்க்கையில் இன்பம் காண மாட்டார்கள்; 'எதையெதையோ' தேடி அலைவார்கள்; மனைவியை மதித்துப் போற்ற மாட்டார்கள். 'குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை' போல, அவர்களுடைய மனைவியர் அல்லலுறுவர். 'மலரினும் மெல்லிது காமம்' எனும் வள்ளுவரின் வாய்மொழி, அவர்களுக்குப் புரியாத பொன்மொழியாகும் என்பதைப் பேராசிரியர் அல்லியினுடைய வாழ்க்கையின் மூலம் தெளிவுறுத்தியுள்ளார்.

கதைப்பாத்திரப் படைப்பில், அல்லியும், அறவாழியும் வளர்ச்சியுற்ற பண்புகளின் முழுநிறை வடிவமாகக் காணப்படுகின்றனர். ஒரே அச்சில் வடிக்கப்பட்ட இரண்டு வார்ப்புகளாக இவர்கள் உள்ளனர். ஒரே ஒரு வேறுபாடு. ஒருவர் ஆண்; மற்றொருவர் பெண். இதைத் தவிரப் படிநிலை வளர்ச்சியோ, உணர்ச்சிப் பெருக்கோ உடையவர்களாக இவர்கள் தோன்றவில்லை. எனினும், ஒருவகையான உயிர்க்கலை இவர்களுடைய பாத்திரப்படைப்பில் ஒளிவீச்சாக அமைந்துள்ளமை கருத்தைக் கவருகிறது. இன்பவல்லி எனும் துணைப்பாத்திரம் உயிரும் தசையும் கொண்ட உணர்ச்சிமிகு மனிதப் பிறவியாகப் படைக்கப்பட்டுள்ளாள். அவளுடைய பண்புகள், வாழ்க்கைப் போராட்டத்தில் பண்பட்டு, பதப்பட்டு, செம்மையுற்று, சிறப்புறுகின்றன. அப்பாத்திரத்தை மணிமேகலையின் மறுபதிப்பு' என்பர்.[43]

அமைப்பாலும், பாத்திரப் படைப்பாலும், கதைப்பின்னாலும் சிறப்புமிகு புதினங்களைப் படைத்த பிறகே, இதனைப் பேராசிரியர் மு.வ.படைத்துள்ளார். எனினும், அல்லியின் அமைப்போ, பாத்திரப்படைப்போ, கதைப்பின்னலோ இறுக்கமும், நெருக்கமும், சிறப்பும் உடையனவாக அமையவில்லை.

கதை முழுவதுமே, அல்லி கூறுவதைப் போன்ற அகநோக்கு நிலையில் (Internal View Point) அமைக்கப்பட்டுள்ளது. ஒருவரே கதையைச் சொல்லுவதனால் உண்டாகும் கவர்ச்சியின்மையைப் போக்குவதற்கு 18 பக்கங்கள் கொண்ட நாட்குறிப்பும், அல்லி நோயாளிகளைக் கேட்டு அறிந்த 8 பக்கங்கள் அடங்கிய குறிப்பும், அல்லியின் 'எது குற்றம்? எனும் நூலினைப் படித்தவர்கள் அல்லிக்கு எழுதிய 11 பக்கங்கள் கொண்ட கடிதக் குறிப்புகளும், அவளுடைய கணவன் பிற்கால வாழ்க்கையில் ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தில் (Note-Book) எழுதி வைத்திருந்த குறிப்புகளில் சிலவும் இடையிடையே பயன்படுத்தப்படுகின்றன. இவை கதைக்கருவிற்கு

வலுவூட்டாவிட்டாலும், கதையின் போக்கினைச் சுவையுடைய தாக்கியுள்ளன.

அல்லி என்னும் புதினத்தின் கதைக்கரு, ஆசிரியர் வாழ்க்கையில் கண்டு பழகிய ஓர் அம்மையாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளாகும். டாக்டர் (திருமதி) லில்லி தாமஸ் எனும் மலையாளிப் பெண். பேராசிரியர் மு.வ.குடியிருந்த தெருவில், அவருடைய வீட்டிற்குக் கீழண்டைப் பக்கத்து வீட்டில் குடியிருந்தவராவர் அப்பெண்மணி, தம் கணவரிடம் மணமுறிவு பெற இயலாமல், சில ஆண்டுகள் சென்னையில் இருந்து பணிபுரிந்தார். பின்னர், அந்தப் பெண் வெளிநாட்டிற்குப் போய்விட்டார். அந்தப் பெண் 'டாக்டர்' குடியிருந்த வீட்டினை, பேராசிரியர் வாங்கிப் புதுப்பித்து, அதிலேயே வாழத் தலைப்பட்டார். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவ்வீட்டிலேயே அவருடைய குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[44]

ஆண் – பெண் உறவு பற்றிய பாலியல் குறிப்புகளைப் பேராசிரியர் டாக்டர் மேரி ஸ்டோப்ஸ் (Dr.Marie Stopes) எனும் உலகப்புகழ் பெற்ற மருத்தவ மேதையின் 'திருமணத்திற்குப் பின் காதல்' (Married Love), 'நீடித்த பாலுறவு வேட்கை' (Enduring Passion), 'ஒளிமிகு தாய்மை' (Radiant Motherhood), 'ஆண் பெண் வாழ்க்கையில் உண்டாகும் மாற்றம்' (Change of life in Men and Women) எனும் நூல்களிலிருந்து திரட்டியுள்ளார்.[45] இப்புதினத்தை 'டாக்டர் அல்லி' எனும் நாடகமாக மாற்றியமைத்துள்ளார் டி.கே.கணபதி.

8. கரித்துண்டு

(1953).

கலையுள்ளத்தின் மென்மையான உணர்வுகளை, நுட்பமாகப் பகுத்தக் காட்டும் பணியினைக் கரித்துண்டு செம்மையாகச் செய்திருக்கிறது. கலையுணர்வால் கெட்டழிந்த காஞ்சனையை, 'மலர்விழி'யில் காட்டிய ஆசிரியர், 'கலையை' வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவும் கருவியாகவே' கொள்ள வேண்டும் என்னும் குறிக்கோளினைக் 'கரித்துண்டின்' மூலம் அறிவுறுத்துகிறார்.

தம்முடைய படைப்புகளில் பேராசிரியர் மு.வரதராசனாருக்கு மிகவும் பிடித்தமான புதினங்கள் 'அந்த நாள்', 'கரித்துண்டு' என்பன.[46] 'அந்த நாள்' அவருடைய நண்பர் ஒருவர் பட்ட அல்லல்களைக் கலை வடிவில் தந்துள்ளதைக் கண்டோம். அதைப்போன்றே, கால் முடமான ஓர் ஓவியர், 1950ஆம் ஆண்டு அளவில் சென்னை நகரத்தில் சிறப்புற்று விளங்கினார். பேராசிரியர் மு.வ.அவர்களுக்கு எப்படியோ அவர் நண்பரானார்.[47] லயோலா கல்லூரிக்கு மேற்குப்

பக்கத்தில் சூளைமேட்டுப் பகுதியில் அவ்வோவியர் வாழ்ந்து வந்தார். இரண்டு நாட்கள், பாரிமுனைக்கு அருகில் நடைபாதையில் அவருடைய கைவண்ணத்தைக் காணலாம். ஓரிரு நாட்கள் 'சென்ட்ரல்' புகைவண்டி நிலையத்திற்கு அருகில், அவர் ஓவியங்கள் தீட்டிக் கொண்டிருப்பார்; பெரும்பாலும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களில், திருவல்லிக்கேணி 'பைக்கிராப்ட்ஸ்' சாலையில், கடற்கரைக்குச் செல்லுவோரின் கருத்தைக்கவரும் வகையில் ஓவியம் வரைவார்; அவருடைய கையில் கரித்துண்டுகள் களிநடம் புரிந்தன. சிறியதும் பெரியதுமான பல ஓவியங்களை அவர் வரைவார். அவருடைய ஓவியங்களில் தெய்வத் திருவுருவங்களைக் காணலாம்; அரசியல் தலைவர்களைக் காணலாம்; நம் பாரதத் தலைவர்களை மட்டும் அல்லாமல், சர்ச்சில், ஸ்டாலின், மாசேதுங் போன்றோரின் பெருமித வடிவங்களை அவர் மிக விரைவாக வரைவார்; தாஜ்மகாலைக் காணலாம்; தஞ்சைப் பெரிய கோயிலைக் காணலாம்; அஜந்தா ஓவியங்களைக் காணலாம்; அழகுமிகு குற்றாலத்து அருவிகளைக் காணலாம்; சென்னை நகரில் உயர்நீதிமன்றத்தையும் கலங்கரை விளக்கத்தையும் காணலாம். இவ்வாறு சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில், தன் ஓவியப் புலமையால், எளியமுறையில் நடைபாதைகளில் மக்களுக்கு அவர் அரிய கலைவிருந்து அளித்து வந்தார்.

1952ஆம் ஆண்டு இறுதியில் அவரைக் காண முடியாமல் போயிற்று. எங்கோ அவர் மாயமாக மறைந்துவிட்டார். பொங்கல் விடுமுறையின் பொழுதுதான் மின்சார ரயிலில் அடிபட்டு, அவர் இறந்துபோனார் என்பது பேராசிரியருக்குத் தெரிய வந்தது. அச்செய்தி கேட்டு, அவருடைய கண்கள் கலங்கின; மனம் நைந்து உருகினார். அவருடைய நெருங்கிய நண்பர்களிடத்தும், மாணவர்களிடத்தும் பல நாட்கள், அந்த ஓவியரைப் பற்றி வியந்து அவர் பேசியுள்ளார்; 'சிறந்த கலைஞர் ஒருவரை நல்லமுறையில் இந்தச் சமுதாயம் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது. அதனால் வறுமையின் வாடி, விபத்துக்குள்ளாகி அவர் இறக்க நேரிட்டதாகக் கூறுவார்.

அந்த ஓவியரின் வாழ்க்கையைத் தம்முடைய கற்பனைத் திறத்தால், கலை ஓவியமாகப் பேராசிரியர் படைத்துள்ளார். அவ்வோவியர் இறந்த ஓராண்டிற்குள், 'கரித்துண்டு' எனும் புதினம் வெளிவந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது.[49]

தேவையற்றவை என்று பெரும்பாலான குடும்பங்களில், குப்பையில் கொட்டப்படும் பொருள் கரித்துண்டுகள், கலையுணர்வு மிக்க ஓவியர் ஒருவருடைய அன்றாட வயிற்றுப்பிழைப்பிற்கு, அவை எவ்வாறு உதவின என்பதை உணர்ந்து போற்றும் வகையில், இப்புதினத்திற்கு

மு.வ.அவர்கள் 'கரித்துண்டு' என்று பெயரிட்டுள்ளார். புதினத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் பெயராலோ, உணர்த்தப்படும் அரும்பெரும் கருத்துகளின் பெயராலோ நூலிற்குப் பெயரிடுவது வழக்கம். கலைஞர்களுக்குப் புகழைத் தேடித்தரும் அவர்களுடைய கலைக்கருவிகளை அடைமொழியாகக் கொடுத்து 'நாதசுர வித்துவான் ராஜரத்தினம்', 'வீணை தனம்மாள்', 'தெருக்கூத்து தாண்டவராயன்' என்று கூறுவதைப்போன்று, 'கரித்துண்டுக் கலைஞர்...' என்று பெயரிட்டு இருக்கலாம். அவ்வாறு பெயர் இடுவதில் புதுமையும் இல்லை; சிறப்பும் இல்லை; அந்தக் கலைஞனின் உயிர் வாழ்க்கைக்கு உற்ற துணையாக – ஒரே துணையாக – இருந்தது கரித்துண்டு. அதுவே அவருடைய தொழிலுக்கு மூலதனம். அம்முதலீட்டைக் கொண்டு தம்முடைய கலைத்திறனை வெளிப்படுத்தி, அவர் அன்றாடத் தேவைக்கு வேண்டிய பொருளை ஈட்டினார். எனவே, அவருடைய உயிர் வாழ்க்கைக்குத் தேவையான சிறப்புமிகு பொருளாகக் கரித்துண்டு உதவியது. அதனுடைய இன்றியமையாமையையும், சிறப்பையும் கருத்தில் கொண்டு, அப்புதினத்திற்குக் 'கரித்துண்டு' என்று பேராசிரியர் பெயரிட்டுள்ளார் எனக் கொள்ளுதல் பொருந்தும். மற்றும் சமுதாயத்தின் புறக்கணிப்பால், கவர்ச்சியற்ற 'கரித்துண்டாக' கலைஞர்கள் பலர் உள்ளனர் என்பதைக் குறிப்பாக இப்பெயர் புலப்படுத்துவதாகவும் கொள்ளலாம்.

வங்காள நாட்டு ஓவியக் கலைஞர் ஒருவருடைய வாழ்க்கையைப் பின்வீச்சாலும் (Flash-back), முன்நிழலீட்டாலும் (Foreshadow) அவர் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுகிறார். கலை ஆர்வலராக விளங்கும் நிர்மலா, கைதேர்ந்த கலைவல்லானாக விளங்கும் மோகன் ஆகிய இருவரிடையே காதல் அரும்பியது; திருமணம் செய்து கொள்ளுகின்றனர். ஆனால், ஆடம்பர ஆரவாரத்திற்கு நிர்மலா அடிமையாகி விடுகிறாள்; அதற்கேற்ற பகட்டு வாழ்க்கைக்குத் தேவையான பொருள் சுரக்கும் 'அமுத சுரபி' மோகனிடம் இல்லை. இதனால் நிர்மலாவின் மனம் எங்கெங்கோ அலைகிறது; வெறுப்பும் சலிப்பும் அடைகிறது. இந்நிலையில் விபத்துக்குள்ளாகிய மோகன் மருத்துவமனையில் கிடக்கிறார். அவரைச் சென்று பார்க்கவும் விரும்பாது, கல்கத்தா நகரை விட்டே நிர்மலா வெளியேறுகிறாள். கால்களை இழந்த மோகன் வீடு திரும்புகிறார்; மனைவியைக் காணோம். அவர்களுடைய காதல் 'கருகிய மொட்டாக'ப் போனதை ஆசிரியர் அழகுறக் காட்டுகிறார்.

சென்னை நகரின், பரபரப்பான நெரிசல் மிகுந்த பகுதிகளின் கரடுமுர'டான நடைபாதைகளில், ஓவியக்கோலும் உயர்ந்த வண்ணக்கலவைகளும் இல்லாமல், வெறும் கரித்துண்டுகளால் கைகடுக்க அழகுமிகு ஓவியங்களை முட ஓவியர் வரைகிறார்.

அதைக்கண்டு ஏழை, எளிய மக்கள் மகிழ்ந்து, அவருக்குச் சில்லறைக் காசுகளைக் கொடுத்து, உதவும் திருப்பணியில் ஈடுபடுகின்றனர். அவரோடு ஒரு விதவை சேர்ந்து வாழுகிறாள். அவள் முன்னரே பெற்ற மகன் ஒருத்தனை உடையவள். அவள் அன்பே வடிவான கூலி வேலைக்காரி. அவள் பெயர் பொன்னி. அவருடைய வாழ்க்கைத் துணைவியாகச் சென்னையில் அவள் விளங்குகிறாள்.

அதே சென்னை நகரில், பேராசிரியர் கமலக்கண்ணரின் திருமணம் செய்து கொள்ளாத அன்பு மனைவியாக,[49] எளிமையை விரும்பும், அறத்தைப் போற்றும் திருந்திய பெண்மணியாக நிர்மலா வாழ்கிறாள். எதிர்பாராவகையில் தன் காதற்கணவன், கால்களை இழந்து முடவனாகச் சென்னை நகர்ப்புறத்து, ஓர் ஏழைப்பெண்ணோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருப்பதை அவள் கண்டு விடுகிறாள்; மன அதிர்ச்சி அடைகிறாள்; மனப்போராட்டம் முற்றுகிறது; மனவமைதியைத் தேடித் தன் இரண்டாவது கணவரான பேராசிரியர் கமலக்கண்ணரிடம் தெரிவிக்காமல், சென்னையைவிட்டு அவள் வெளியேறுகிறாள். ஆனால், அவருக்கு ஒரு நீண்ட கடிதத்தை வைத்து விட்டுச் செல்லுகிறாள்.

மனைவியைக் காணாமல், வீடு எங்கும் தேடிய பேராசிரியரிடம் அந்தக் கடிதம் கிடைக்கிறது. முதன்முதலாக அக்கடிதத்தின் மூலம்தான், அவளுடைய முற்கால வாழ்க்கையைப் பற்றிப் பேராசிரியர் அறிந்து கொள்ளுகிறார்; அவளுக்காக இரக்கப்படுகிறார். முன்னரே 'அவளுடைய கணவன் முட ஓவியராய்ச் சென்னையில் வாழ்வது தெரியாமல் போய்விட்டதே' என்று அவர் வருந்துகிறார்; தன்னிடம் அவளுடைய மனப்போராட்டத்தைக் கூறியிருந்தால், 'மனமாற்றத்துக்காக அவளுடன் ஆறு வாரம் தானும் உடன் சென்று, மலைகளையும் அருவிகளையும் ஆறுகளையும் காட்டித் துணையாக இருந்திருப்பேன்' என்று அவருடைய மாணவ நண்பர் ஒருவரிடம் கூறி, அவளுக்காக அவர் வருந்துகிறார்.

இந்தப் புதினத்தின் மூலம் பேராசிரியர் மு.வரதராசனார், உலகிற்கு உணர்த்தும் முதன்மையான செய்தி கற்பைப் பற்றியதாகும்.

> **உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்**
> **செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்**
> **தொல்லோர் கிளவி**[50]

என்பது தொல்காப்பியம். மகளிர்க்கு உயிரினும் சிறந்தது, உயர்ந்தது அவர்களுடைய கற்பு என்பது மரபுவழிப்பட்ட தமிழருடைய கொள்கையாகும்.[51] காலப்போக்கில் உள்ளத்தூய்மையைப் புறக்கணித்து, உடல் தூய்மையே 'கற்பு' எனப்போற்றும் அவலநிலை உண்டாகிவிட்டதை, பேராசிரியர் மு.வரதராசனார் நன்குணர்ந்துள்ளார்.

‘பெண்கள் கல்வி கற்று, தொழில்களில் ஈடுபட்டுப் பலரோடு பழகுவதற்கு வாய்ப்பு மிகுந்த இன்றைய சமுதாயத்தில் – வாழ்க்கையே இயந்திரமாக மாறிவரும் இக்காலத்தில் – வாழ்க்கைப் போராட்டம் நிறைந்த, சிக்கல் மிகுந்த இக்காலத்தில் – உடல் தூய்மையாகிய கற்பினை மகளிரிடத்தில் எதிர்பார்ப்பது பொருந்துமா? அறிவுடைமையாகுமா?’ எனும் ஆராய்ச்சியில் பேராசிரியர் மு.வ.ஈடுபடுகிறார். ‘பண்டைக்காலத்துக் கொள்கையை இன்று பொன்னேபோல் போற்றுவதால் பயனில்லை; அது தமிழ்ச்சமுதாயத்தின் வளர்ச்சிக்கு – முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும்[52] என்பதை அவர் உணர்த்த விரும்புகிறார். இரண்டு பெண்களைப் படைத்து, அவர்கள் எவ்வாறு வாழ்க்கையில் மரபுவழிப்பட்ட கற்புநெறியிலிருந்து தவற நேரிடுகிறது என்பதை அவர் சித்திரித்துக் காட்டுகிறார்.

படித்த பெண்கள், போலி நாகரிகத்திற்கு இரையாகி, தங்கள் பெண்மையின் சிறப்பை எவ்வாறு இழக்கின்றனர் என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக ‘நிர்மலா’வை மு.வ.படைத்துள்ளார். வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கிச் சீரழியும் எளிய குடும்பத்துப் பெண்கள் விதவையான பிறகு, ஓர் ஆணோடு சேர்ந்து வாழ்க்கை நடத்த வேண்டிய நெருக்கடிக்கு எவ்வாறு ஆளாகிறார்கள் என்பதைப் பொன்னி எனும் கூலிவேலை செய்யும் பெண்ணின் மூலம் அவர் தெரிவிக்கிறார். இவர்களிருவரும் ஓவியக் கலைஞர் மோகனின் மனைவியர். அவர் வளமாக வாழ்ந்த காலத்தில் அவரைக் காதலித்து, திருமணம் செய்து கொண்ட நிர்மலா, அவர் அடிபட்டு மருத்துவமனையில் கிடந்தபொழுது, துன்பத்திற்குத் துணையாக உடனிருக்காமல், அவரைப் புறக்கணிக்கின்றாள்.

வறுமையில் வாடும் பொன்னி, கால்வயிற்றுக் கஞ்சிக்கு வழி செய்து கொடுக்கும் முட ஓவியரிடத்து அன்பு செலுத்துகிறாள்; அவருக்காகத் தன் உயிரையும் கொடுக்கத் தயங்காத மனைவியாகத் தோன்றுகிறாள். முரண்பட்ட போக்கினையுடைய இவ்விரு பெண்களும் பழைமை, புதுமை ஆகியவற்றின் பிரதிநிதிகளாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வளவுதான் படித்து இருந்தாலும், தனித்த நிலையில் பொருளீட்டி உரிமையுடன் வாழ்ந்தாலும், தனக்கு ஓர் ஆணின் துணை தேவை என்பதைப் பம்பாயில் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்ட நிர்மலா உணருகிறாள். ஒருநாள் பம்பாய்க்குப் புதிதாக வந்த பேராசிரியர் கமலக்கண்ணரின் அறிவுநலங் கனிந்த திருக்குறள் சொற்பொழிவை நிர்மலா கேட்கிறாள்; அவரைத் துணைவராக அடைய வேண்டும் என்று நினைக்கிறாள். செந்தாமரை எனும் அம்மையாரின் உதவியால் அவளுடைய எண்ணம் நிறைவேறுகிறது.

ஆணின் அனுபவம் நிர்மலாவிற்கு உண்டு என்பதை உணர்ந்தும்,[53] பேராசிரியர் கமலக்கண்ணர், அவளைத் தன் மனைவியாக மதித்துப் போற்றும் முற்போக்குச் சிந்தனையாளராகக் காணப்படுகிறார்.

இத்தகைய காட்சிகளுக்கு இடையே, 'கொண்டானை அல்லால் அறியாள் குலமகள்' எனும் மரபுவழிப்பட்ட வாழ்க்கையில் ஈடுபட்ட செந்தாமரைத் தன் கணவன் இளங்கோவோடு கருத்தொருமித்து காதல் வாழ்க்கை நடத்தி வருவதையும் ஆசிரியர் நினைவுபடுத்துகிறார்.[54]

செந்தாமரை எனும் இல்லத்தரசி தமிழ்நாட்டு ஆண்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தை,

> தமிழ்நாட்டு ஆண்களின் மனப்பான்மை வேறு. மற்ற நாட்டு ஆண்களைப்போல அவர்களை எண்ணிவிடாதே. பொதுவாகவே ஆண்கள் மனைவி தேடும்போது, தூய்மை கெடாத கன்னிப் பெண் வேண்டும் என்று தேடுவார்கள். தமிழ்நாட்டு ஆண்கள் இந்த வகையில் மட்டும் மற்றவர்களைவிட மிகவும் பிற்போக்கானவர்கள் என்பது என்னுடைய எண்ணம்.[55]

என்று வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு பல்வேறு கோணங்களில் பேராசிரியர் வாழ்க்கைச் சிக்கலைக் காட்டுகிறார்; இன்றைய தமிழ்நாட்டு ஆடவரின் மனப்போக்கையும் சுட்டி, இன்றைய சமுதாயத்திற்குக் கற்பைப் பற்றிய 'பத்தாம் பசலி'க் கருத்து பொருந்தாது என்பதைப் படிப்பவர் உணரும் வண்ணம் அவர் செய்கிறார். கடைசியாகப் பேராசிரியர் கமலக்கண்ணர் வாயிலாக,

> கற்பு என்றால் வாழ்நாள் முழுதும் ஒருவன் ஒருத்தியாக உண்மையோடு வாழ்வது என்று சொல்லுவார்கள். அது பழங்காலத்திற்கு மிகப்பொருத்தம். பழங்காலத்தில் கைத்தொழில் வளர்ச்சி மட்டும் இருந்தது; அப்போது ஒரு நெறியும், அதில் நம்பிக்கையும் உறுதியாக இருந்தபடியால், ஒருவன் ஒருத்தி என்று வாழ்வது எளிதாக இருந்தது. இந்தக் காலத்தில் யந்திரத் தொழில் வேகமாக வளர்ந்து வருகின்றது; ஆராய்தலும் அனுபவித்தலும் மிகுதியாக உள்ள காலம் இது. ஆகவே, ஒருவனைவிட்டு இன்னொருவனுடன் வாழும்படியாக நேரும். ஒருவனைவிடாமல் இன்னொருவனுடன் வாழ்வதுதான் தவறு. எப்போது எவனுடன் வாழ்கிறாளோ அவனுக்குத்துரோகம் செய்யாமலிருந்தால் போதும். அதுதான் கற்பு. நம் நாட்டில் ஆண்களைப் பொறுத்தவரை இதை ஒத்துக் கொள்ளுகிறார்கள். பெண்களைப் பற்றி மட்டும் உடன்படுவதில்லை. பெண்ணடிமை இந்த நாட்டில் உள்ளது என்பதற்கு இதுவே சான்று.[56]

என்று கற்பிற்குப் புதிய இலக்கணத்தை மு.வ.வரையறுத்துள்ளார்.

கரித்துண்டு எனும் இப்புதினத்தில், கதை நிகழ்ச்சிகள் யாவுமே நெகிழ்ச்சியுடைய நிலையில் பின்னப்பட்டுள்ளன. கதைக்கரு, ஓவியர் மோகனுடைய வாழ்க்கை. சென்னையில் பாரிமுனையருகே கரித்துண்டைக் கொண்டு ஓவியம் வரைந்து பிழைகின்ற ஓவியரைத் திருவேங்கடம் என்பவர் காணுகிறார்; தம் நண்பர் குமரேசனிடமும், பேராசிரியர் கமலக்கண்ணரிடமும் அந்த ஓவியரைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகிறார். இவ்வாறு கதை தொடங்குகிறது. கதையின் இறுதிப்பகுதி வரையில் பேராசிரியர் கமலக்கண்ணரின் மனைவியைப் பற்றி வேறொன்றும் தெரியாது. ஓவியர் மோகனுடைய முற்கால வாழ்க்கை, கதைப்போக்கின் இடையே பின்வீச்சு முறையில் 'திடு'மெனக் காட்டப்படுகிறது. இவ்வாறு கதை கூறும் உத்தியில் புதுமையும் கவர்ச்சியும் இருந்தாலும், கதைப்பின்னலில் செறிவு இல்லை.

பாத்திரப் படைப்பில் பொன்னியும், முட ஓவியரும் உயிர்த்துடிப்பு வாய்ந்த உண்மை மனிதர்களாகவே தோன்றுகின்றனர். நிர்மலா படிப்படியாக வளர்ச்சியுற்று முழுநிறைவு பெறும் முழுநிலைப் பெண் பாத்திரமாகும்.

துணைப்பாத்திரமாக உள்ள திருவேங்கடம், கதையினை நயமுற எடுத்துச் சொல்லுகிறார். இடையிடையே நாடகப் பாணியில் உரையாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. கதையின் உச்சநிலையைக் கடிதத்தின் மூலமே ஆசிரியர் விளக்கிச் செல்லுகிறார்.

இந்தப் புதினத்தில் பேராசிரியர் மு.வரதராசனார், முதிர்ச்சியும் தேர்ச்சியும் பெற்ற படைப்பு இலக்கிய ஆசிரியராகத் தோன்றுகிறார். வெறும் கருத்து விளக்கப் புதினமாக மட்டும் இது அமையவில்லை; கலையழகும் கற்பனைப் பெருக்கும் இணைந்த கருத்து வளமிக்க புதினமாகப் பொலிவுறுகிறது. இந்தப் படைப்பில்தான், படைப்பாளர் மு.வ.வின் கலைத்திறனை முழுமையாகக் காண முடிகிறது. இவ்வரிய பண்புகளால்தான் மு.வ.வின் படைப்புகளிலே, 'கரித்துண்டு' கவின்மிகு கலைப்படைப்பாக, தலைசிறந்த புதினமாகப் புகழ்ப் பூத்து விளங்குகிறது. 'வெற்றிமிகு புதினப்படைப்பாளர் மு.வ.' என்பதை உலகிற்கு உணர்த்தும் வெற்றி முரசாக வீறுடன் விளங்குகிறது.

9. கயமை

(1956)

பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களுள், ஒரு பண்பினையே, பெயராகக் கொண்டது இப்புதினமாகும். கயமை என்பது என்ன? இதற்கு ஆசிரியர் தரும் விளக்கம் திருக்குறளின் நூற்றெட்டாவது

அதிகாரமான ‘கயமை’ என்பதில் உள்ள கருத்துகளாகும். திருவள்ளுவரின் கருத்துகளே இப்புதினத்திற்கு முன்னுரையாக அமைக்கப்பட்டுள்ளன.

பேராசிரியருடைய புதினங்களில், இதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இக்காலத்திய அரசியல், சமுதாய நிலைகளை இப்புதினத்தின் சூழலமைவாக ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். பிற புதினங்களில் காண இயலாத ஒரு புதுமையை, ஆசிரியர் இதில் புகுத்தியுள்ளார். மற்றப் புதினங்களின் பாத்திரங்கள் எல்லோரும் சமுதாயத்தில் உறுப்பினர்களாகத் தோன்றுவர். இப்புதினத்தின் தலைமைப் பாத்திரங்களை, இன்றைய சமுதாயத்தில் முனைப்பாகத் தோன்றும் தீய சக்திகளையே, பாத்திரங்களாகப் பேராசிரியர் உருவகப்படுத்தியுள்ளார். ஆன்மாவின் கடைத்தேற்றத்திற்கு – மெய்யுணர்வு பெறுவதற்குத் தடையாக – இடையூறாக இருப்பன. ‘மும்மலங்கள்’ என்று சைவ சித்தாந்த சாத்திரங்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றுள் முனைப்பானது, பேராற்றல் வாய்ந்தது ‘ஆணவம்’ என்பர். அவ்வாணவத்தை அழித்தொழிக்க இயலாது; அடக்கியொடுக்கவே இயலும். இறைவனின் திருவருள் நோக்கால், அது ஆற்றல் இழந்து, அடங்கியொடுங்கும் என்பது சித்தாந்திகள் கண்ட முடிவு.[57]

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த ஆணவத்திற்கு, முதன்முதல் தமிழ்ப்புதினத்தில் மனித வடிவம் கொடுத்த பெருமை மு.வரதராசனாருக்கே உரியதாகும். இதைப்போன்றே, ஆன்மாக்களின் அறிவை மயக்குவது மாயை.[58] அதனை, ஆணவரின் ஆசைநாயகியான ‘வசீகரமாகப் பேராசிரியர் படைத்துள்ளார். இவர்களுக்கு நேர்மாறான காதலர் இருவரை, அதே அலுவலகத்தில் பணி புரிவதாக ஆசிரியர் படைத்துள்ளார். அறத்தில் நம்பிக்கையுடைய ஆண்மகனை ‘நல்லய்யன்’ எனவும், அன்பும் அறனும் அணியெனப் பூண்ட பெண்ணை ‘மென்மொழி’ என்றும் உருவகப்படுத்தியுள்ளார். இவ்வாறு பண்புகளை உருவகப்படுத்திக் கூறும் மரபு, தத்துவ உலகில் பெருவழக்கு.[59] அவ்வழகினைத் தமிழ்ப் புதின உலகில் முதன்முதல் புகுத்தியவர் பேராசிரியர் மு.வ.எனில், அது தவறாகாது. எனவே, இந்தப் புதினத்தை, ஒரு ‘குறியீட்டுப் புதினம்’ (Symbolic Novel) எனக் குறிப்பிடுவது ஓரளவிற்குப் பொருந்தும்.

துணிச்சலான போக்கிரிகளின் கதையைக் கூறும் புனைகதைக்குப் ‘பிக்காரெஸ்கு’ (Picaresque Novel) புதினம் எனும் பெயர் மேற்கு நாடுகளில் வழங்கி வருகிறது. அதனைத் தமிழில் ‘இரணியம்’ என்று டாக்டர் ம.ரா.போ.குருசாமி அவர்கள் வழங்குவார்.[60] மனித வடிவில் அசுரனாக – அரக்கனாக – கொடியவனாக விளங்கும் ஆணவரைத்

தலைமைப் பாத்திரமாகக் கொண்ட இப்புதினத்தை 'இரணியம்' எனும் பெயரால் சுட்டலாம்.

தீயவர்களைக் காப்பியத் தலைவர்களாகக் கொண்டு இலக்கியம் படைப்பது பண்டைய மரபு அன்று. இராவணனுக்குக் காவியமும், இரணியனுக்கு, 'இணையற்ற வீரன்' என்று பட்டம் அளித்து நாடகமும் இயற்றுவது இருபதாம் நூற்றாண்டின் புத்திலக்கியப் போக்காகும். இதனை 'வீறுணர்ச்சி இலக்கியத்தின்' (Romantic Literature) சிறப்பியல்பு என மேற்குநாட்டுத் திறனாய்வாளர் கூறுவர். இந்தப் போக்கைப் புதினப் படைப்பில் புகுத்தியவர் மு.வ.என்பதனை, "இந்த உத்தியை 'நாவல்' உலகிலே தமிழைப் பொறுத்தவரையில் கையாண்டிருப்பவர் மு.வ.ஒருவரே என்று எண்ணுகிறேன்"[61] எனும் திறனாய்வாளர் கருத்த ஏற்புடைத்தேயாகும்.

அரசு அலுவலகம் ஒன்றில் தலைமைக் கணக்கராக இருந்த ஆணவர், அவருடைய நண்பர் கனகலிங்கம் ஆகிய இருவரும் சேர்ந்து, தங்கசாமி என்ற செல்வருக்கு அரசியலில் குறுக்கு வழியில் முன்னேற வழிவகைகளைச் சொல்லிக் கொடுக்கின்றனர்; அதன் மூலம் அவருக்குச் செல்வமும் செல்வாக்கும் தேடித் தருகின்றனர்; ஓரளவிற்கு வளர்ந்த பின், தங்கசாமி இவர்களைப் புறக்கணித்து விடுகிறார். அலுவலகத்தில் இதற்கிடையில் கொந்தளிப்பு உண்டாகிறது. இதுவரை தன்னுடைய ஆசைநாயகியாக இருந்துவந்த பெண் எழுத்தரான வசீகரம், அவரால் வெளி ஊருக்கு மாற்றப்பட்ட, ஆனால் விடுப்பில் உள்ள பழைய எழுத்தர் ஒருவனோடு கூடிக் குலாவுவதை ஆணவர் கண்டுவிடுகிறார்; சீற்றம் பொங்கி எழுகிறது. நயவஞ்சகமாக அவளைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று கொலை செய்து விடுகிறார்; பழியைத் தன் அலுவலகத்தில் வேலை செய்யும் காதலர்களான நல்லய்யன் – மென்மொழி ஆகியோர் மேல் அவர் சுமத்துகிறார்; நல்லய்யனுக்குத் தூக்கும், மென்மொழிக்கு ஆறாண்டுகள் சிறைத்தண்டனையும் கிடைக்குமாறு செய்கிறார். சில நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் தூக்குத்தண்டனை தொடர்பாகப் புதிய சட்டம் நிறைவேற்றப்படுகிறது. அதையொட்டி, மேற்கண்ட வழக்கு மறுவிசாரணை செய்யப்படுகிறது. நல்லய்யன் மென்மொழி விடுதலையடைகின்றனர். ஆணவரைச் சிறைப்படுத்துகின்றனர். அவர் சிறையிலே, நஞ்சுண்டு இறக்கிறார். இது தான் 'கயமை'யின் கதைப் பின்னலாகும்.

இப்புதினத்தில், இன்றைய சமுதாயத்திலும் அரசியலிலும் காணப்படும் கயமைத் தனத்தின் திரண்ட உருவமாக, ஆணவர் படைக்கப்பட்டுள்ளார். இரக்கமின்மை, மற்றவர்களுடைய குறைபாடுகளையும் தேவைகளையும் அறிந்து, அவர்களைத் தன் வலையில் சிக்குமாறு செய்தல், மேலதிகாரிகளை மயங்குமாறு

செய்தல், துணிந்து பொய் பேசுதல், கையூட்டு வாங்குதல், தன் கீழ்ப் பணிபுரிவோரைத் தன் அதிகாரத்திமிரால் நடுங்க வைத்தல், எத்தகைய கொடுஞ்செயலையும் செய்வதற்குரிய துணிவு, நட்புக்கு வஞ்சனை செய்தல், நன்றி கெட்ட நடத்தை, ஆடம்பர ஆரவாரம், போலிப்பக்தி, எதேச்சாதிகார மனப்போக்கு முதலிய பல்வேறு சமுதாயத் தீமைகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஆணவர் எனும் பாத்திரமாகப் படைத்து, அப்பாத்திரத்துக்கு அழியாப் பெருவாழ்வை ஆசிரியர் அளித்துள்ளார். ஆணவருடைய பாத்திரப் படைப்பில் வளர்ச்சியோ, மாற்றமோ காணப்படவில்லை. இக்காரணத்தால், இப்பாத்திரம் ஒருநிலைப் பாத்திரமாகத் தோன்றுகிறது.

வசீகரம் 'எப்படியாகிலும் வாழலாம்' எனும் நோக்கம் உடையவள். அவள் ஒரு சொகுசு சுந்தரி; ஆடவரைத் தன்வலையில் வீழ்த்தி, இன்பக்களியாட்டத்தில் ஈடுபடத் துடிக்கும் 'மயக்கும் மோகினி' அவள். இயற்கை அழகு இல்லாவிட்டாலும், செயற்கையாக ஒப்பனை செய்து கொள்ளுவதில் அவள் தேர்ச்சி பெற்றவள்; தன் அசட்டுச்சிரிப்பால் அலுவலகத்தை நடுங்க வைப்பவள்; தனக்குப் பிடிக்காதவரை, தன் வழிக்கு வர மறுப்பவரை ஆணவரிடம் சொல்லி, துன்புறுத்துவதும், வெளியூருக்கு மாற்றுமாறு செய்வதும் அவளுடைய பொழுதுபோக்கு. இத்தகைய இயல்புடைய வசீகரம், தன் கொடுமைக்கு ஆளாகி அல்லற்படும் சகாயன் தனக்கு எதிர்பாராவகையில் வீடு பார்த்துக் கொடுத்து உதவி செய்த பொழுது, அவனிடம் மையல் கொள்கிறாள்; அவனோடு எதிர்காலத்தைப் பிணைத்துக் கொள்ள முயலுகிறாள். இதைக்கண்டு, கொதிப்புற்ற ஆணவர் மிரட்டியபொழுதும், அவள் அதற்கு அஞ்சவில்லை. அதனால், அவள் ஆணவருடைய கைகளினாலேயே கொலை செய்யப்படுகிறாள். இப்பெண் பாத்திரத்தின் படைப்பிலே வளர்ச்சி நிலைகளைக் காணுகின்றோம். ஒருகால், அவள் உயிருடன் இருந்திருந்தால் திருந்திய பெண்மணியாக வாழ்ந்திருக்கக்கூடும். இந்த வகையில் அவள் ஒரு முழுநிலைப் பாத்திரமாகக் காட்சி தருகிறாள்.

இப்புதினத்தில் இடம்பெறும் மற்ற துணைப்பாத்திரங்கள் நல்லியல்புகள் வாய்ந்த பாத்திரங்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். வேங்கடேசன் எனும் பாத்திரம் வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை நன்கு புரிந்து கொண்ட பாத்திரம்; எதிலும் பட்டும் படாமல் பழகுவதானால், பிறருடைய பகையைத் தேடிக் கொள்ளாமல், வாழும் பாத்திரம். அலுவலகத்தில் உள்ள மற்றவர்கள் எல்லாம் ஆணவரின் கொடுமைகளைப் பொறுத்துக்கொள்ள இயலாது வெளிப்படையாகத் தங்கள் எதிர்ப்பைக் காட்ட நினைக்கின்ற பொழுது, வேங்கடேசன், "மனிதன் தனக்கு உரிமை தேடுகிறான்; ஆனால், உரிமை இழந்து தன்னிடம் பழகுகிறவர்களையே நாடுகிறான். பொதுவான மனித

இயல்பு இது. இது கொஞ்சம் மிகுதியாக ஆணவரிடத்தில் காணப்படுகிறது"[62] என்று கூறி, அவர்கள் வேகத்தைத் தவிர்க்க முயலுகிறான்.

இந்தப் பாத்திரத்தைப் பற்றி மு.வ.அவர்களோடு பழகிய டாக்டர் ஈ.ச.விசுவநாதன்,

> 'கயமை' என்னும் நாவலில் வரும் வேங்கடேசன் போல வாழக் கற்க வேண்டும். அந்த வேங்கடேசன் வேறு யாருமல்ல; நாவலாசிரியரே ஆவார். அவருடைய பல பண்புகளைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களுள் வேங்கடேசன் மிக முக்கியமானவன். இந்தக் 'கயமை' என்னும் நாவலில் வரும் ஆணவர் என்ற பாத்திரமும், மு.வ. தம் வாழ்வில் கண்ட உண்மையான ஒருவரின் மறுபதிப்பே ஆகும்.[63]

என்று மொழிந்துள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

மென்மொழியும் நல்லய்யனும் முதன்முதல் கல்வி கற்று வேலை தேடி, அரசுப்பணியில் அமரும், நடுத்தர வகுப்பினரின் முதல் தலைமுறையினர் ஆவர். தங்கள் குடும்பத்தொழிலான உழவை விட்டு, நகரத்தில் மண்படாத மதிப்பான எழுத்தர் தொழிலுக்கு அவர்கள் வந்துள்ளனர். அவர்களுக்கு 'உலகப்போக்கு எத்தகையது? என்பது தெரியாது; சில 'உயர்ந்த இலட்சியங்களுக்காக வாழ்வதே வாழ்க்கை' என்பது அவர்களுடைய வாழ்க்கைப் பற்றிய நோக்கமாகும். மாறிவரும் சமுதாயச் சூழல்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அவர்களுக்குத் தெரியாது. இந்த வகையில், இருவரும் ஒரே 'சாதியைச்' சேர்ந்தவர்கள். இதனால்தான், அவர்கள் ஒருவரையொருவர் துணைவராகத் தேர்ந்து எடுத்துக்கொண்டனர். சுருங்கச் சொல்லுவதானால், மென்மொழியைக் 'கண்ணகி'யின் மறுப்பதிப்பாகவே ஆசிரியர் படைத்துள்ளார் எனலாம்.

இப்புதினத்தின் கதையினை, ஆசிரியரே கூறும் முறையில் அமைத்துள்ளதில் சிறப்பு வெளிப்படுகிறது. அலுவலகத்துத் தலைமைக் கணக்கர் வாழ்க்கையை மையமாகக் கொண்டு, இக்கதை சுற்றிச் சுழலுவதால் அவரைப் பற்றியும், அவருடைய அகவாழ்வு, புறவாழ்வு நிகழ்ச்சிகளை வேறு எப்பாத்திரமும் எடுத்துரைக்க இயலாது. ஆணவரே தன் வரலாற்றைக் கூறுவதாக அமைத்தால், அது அவருடைய பாத்திரப் படைப்பின் நோக்கத்தை முழு நிறைவுடையதாகச் செய்யாமல் போய்விடும். எனவே, இப்புதினத்தில் ஆசிரியரைத் தவிர வேறு யாரும் கதையை எடுத்துரைப்பதற்குப் பொருத்தம் அற்றவர்களாக உள்ளனர். இவ்வாறு, மு.வ.அவர்களின் புதினப்படைப்புகளுள் இப்புதினம் பல்வேறு வகைப்பட்ட

புதுமைப் போக்குகளையுடையதாக வடிவ அமைப்பிலும், பாத்திரப்படைப்பிலும், கதைப்பின்னலிலும் சிறந்து விளங்குகின்றது.

10. நெஞ்சில் ஒரு முள்

(1956)

'நெஞ்சில் ஒரு முள்' பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களுள் மிக நீண்ட நெடுங்கதையாகும். கதையை முடிக்காமலே, ஆசிரியர் அதை நூலாக வெளியிட்டு விட்டார்.[64] இப்புதினத்தின் தலைவி வடிவு. அவளுடைய உள்ளத்தில், ஒரு முள் ஆழப் பாய்ந்துவிட்டது. "நான் குற்றவாளி. அவர்கள் உடன் பிறந்தவர்கள் போன்றவர்கள்" எனும் எண்ணம்,[65] "என் நெஞ்சில் ஏதோ ஒரு முள் தைத்துக் கிடப்பது போல்" இருக்கிறது[66] என்று அவள் வாழ்நாள் முழுவதும் வருந்த நேரிடுகிறது. அந்த வருத்தம், அவருடைய மகன் விரும்பிய பெண்ணை (அன்பரசியை) மணப்பதற்குத் தடையாக அமைகிறது. அந்த முள்ளினை, அவள் உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்தி, தொண்டு எனும் களிம்பைப் பூசி மனப்புண்ணை மாற்ற – ஆற்ற – ஆசிரியர் அறவாழி முயலுகிறார். இதுதான் இப்புதினத்தின் கதைக்கரு.

வடிவு கல்லூரியில் பி.ஏ.வரை படித்துப் பட்டம் பெற்ற நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவள். அதனால் அவளுக்கு ஏற்ற நிலையில் மாப்பிள்ளை கிடைப்பது அரிதாகிறது. தப்பித்தவறி வருகிறவர்களோ 'வரதட்சிணை' கேட்கின்றனர். இதனால், வடிவின் பெற்றோர் தவிக்கின்றனர். திருமணம் ஏற்பாடாகிற வரையிலாவது, அவள் வேலைக்குப் போய் வரட்டுமே என்று அவர்கள் எண்ணுகின்றனர். செல்வமும் செல்வாக்கும் வாய்ந்த விஜயா அம்மையாரின் வீட்டிற்குச் செயலராக', வடிவு வேலை செய்யத் தொடங்குகிறாள். அந்தப் பெரியஇடத்துப் பெண்மணியின் முயற்சியால், அகோர் எனும் நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருந்த நிலக்கிழாரின் இரண்டாவது மனைவியாக, வடிவு வாழ்க்கைப்படுகிறாள். கணவனுடைய தீயப் பழக்கவழக்கங்களைக் கண்டு, அருவருப்பு அடைகிறாள்; விரைவில் அது வெறுப்பாக மாறுகிறது; தன் 'தலைவிதி'யை நினைத்து அவள் உள்ளம் பொருமுகிறாள். ஒருநாள், குடிபோதையில் வேறொருத்தியுடன் அகோர் வீட்டிற்குள் நுழைகிறான். அதைக்கண்டு வடிவு ஆத்திரம் அடைகிறாள்; கணவனிடம் சொல்லாமல், அவள் தாய் வீட்டிற்குப் புறப்படுகிறாள்.

'சென்ட்ரல்' புகைவண்டி நிலையத்தில், தான் கல்லூரியில் படித்தபொழுது காதலித்த பலராமனை, வடிவு சந்திக்க நேருகிறது. ஒருசில மணித்துளிகள் இருவரும் உணர்ச்சி வயப்படுகின்றனர். தன் பெண்மையின் தூய்மையை அவள் இழந்து விடுகிறாள். இதற்குப்பிறகு, அவள் நெஞ்சில், ஒரு முள் உறுத்திக் கொண்டே

இருக்கிறது; கணவனுடன் அமைதியாக வாழ அவள் முயலுகிறாள். ஆனால், அந்த ஒருநாள் 'கூத்தின்' நினைவுச்சின்னம் அவள் வயிற்றில் வளருகிறது; வெளியில் சொல்ல இயலாது வேதனைப்படுகிறாள். மகனும் பிறக்கிறான்; வளர்கிறான். சென்னையில் கல்லூரி ஒன்றில் படிக்கிறான்; அன்பரசி எனும் பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால், அவர்கள் திருமணத்திற்குத் தடையாக வடிவு நிற்கிறாள். அன்பரசி, தன் காதலனுடைய மகள் என்பதை அறிந்து கொண்ட வடிவு, தனக்கே தெரியும் காரணத்தை வெளியில் சொல்ல முடியாமல், மகனுடைய இன்ப வாழ்க்கைக்கு எதிரியாகிறாள்; தன்னால் இயன்றவரையில் தடுக்க முயலுகிறாள். அவளுடைய உள்ளத்தைத் திறந்து, அறிஞர் அறவாழியிடம் 'பாவ மன்னிப்பு'க் கோருகிறாள்; கணவனை இழந்த நிலையில், தனியே அவள் கிராமத்திலிருந்து துன்பப்படுவதை மாற்றுவதற்காக, அவளைத் தொண்டு நெறியில் ஈடுபடுத்த அறவாழி முயலுகிறார். அதன் விளைவாகத் திருநின்றவூருக்கு அவள் குடியேறுகிறாள்; அங்குத் தன் வீட்டையே அனாதைக் குழந்தைகளின் காப்பகமாக மாற்றி, மூன்று அனாதைக் குழந்தைகளை வடிவு வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுகிறாள். இத்தகைய 'கதைப்பின்னலை'க் கொண்டது. 'நெஞ்சில் ஒரு முள்', இவ்வாறு செறிவான கதைப்பின்னலோடு, கலையழகு வாய்ந்த கட்டுக்கோப்பும் இப்புதினத்திற்கு அமைந்துள்ளதைக் காணுகின்றோம்.

உலகில், பல்வேறு வகையான இயல்புகளையுடைய மனிதர்கள் வாழுகின்றனர். அவர்களுடைய மனநலத்திற்கேற்பப் பண்புநலனும் வேறுபடுகிறது. உலக மக்களின் பல்வேறு வகையான இயல்புகள் அனைத்தையும் பண்போவியமாகப் படைத்துக் காட்டியவர் என்பதனால், ஆங்கில நாடகப் பேராசிரியரான சேக்ஷ்பியரை உலகம் போற்றி வருகிறது. அவரைப் போன்ற நிலையில், பேராசிரியர் மு.வரதராசனார், இந்தப் புதினத்தில் பல்வேறு வகைப்பட்ட, பண்புநலன் வாய்க்கப்பெற்ற மனிதர்களைப் படைத்துள்ளார். இந்தப் புதினம் வடிவால் மட்டும் நீண்டது அன்று; பாத்திரப்படைப்பாலும் பெரிய புதினம். முப்பத்தேழு பாத்திரங்களைக் கொண்ட புதினம் இது. மூன்று தலைமுறையினரின் மனப்போக்கையும் வாழ்க்கைப் போராட்டத்தையும் ஆசிரியர் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுகிறார்.[67] சமுதாய வாழ்க்கையில் பல்வேறு தட்டுகளைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு வாழ்க்கைப் புயலில் சிக்கி, சீரழிகின்றனர் என்பதை அவர் தொட்டுக் காட்டிச் செல்லுகிறார்.

'கள்ளோ காவியமோ'வின் தலைவர் அருளப்பரின் தந்தையான மாணிக்கவாசகரைப் பற்றிய குறிப்பும், பேராசிரியர் அருளப்பர், வேலூரில் வாழ்ந்த அவருடைய மகளான தேமொழி (பெற்றமனத்தின்

தலைவி) ஆகியோரைப் பற்றிய செய்திகளையும்[68] ஆசிரியர் குறிப்பிடுகிறார். இதைப்போன்றே, டாக்டர் அல்லியும், அவளுடைய கணவன் சுப்புரத்தினம், அவளுடைய தோழி டாக்டர் பரமேசுவரி ஆகியோரைப் பற்றிய செய்திகளையும், அவர்கள் வடிவின் சமகாலத்தில் வாழும் மக்களாகவும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.[69] அன்பரசியும் கண்ணழகனும் இளந்தலைமுறையினர். இவை யாவும், தாம் படைத்த பாத்திரங்கள் வெறும் கற்பனை மாந்தர் அல்லர்; மூன்று தலைமுறைகள் தொடர்ந்து இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்களே என்பதைப் பேராசிரியர் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார்.

இப்புதினத்தில் இடம்பெறும் பாத்திரங்களுள் வடிவும், விஜயாவும், அன்பரசியும் சிறப்புமிகு பாத்திரங்கள். வடிவின் பாத்திரப்படைப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. படித்த பெண்ணிற்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்காத கொடுமையும், அதனால் இருபத்தெட்டு வயது ஆகியும்[70] திருமணம் நடைபெறாமல் தனிமையில் வாடும் வடிவின் வாழ்க்கையும் சித்திரிக்கப்பட்டுள்ளன. கல்லூரிக் காதலில் ஏமாற்றம் அடைந்த பெண், வறுமை காரணமாக வயதுப் பொருத்தம் இல்லா ஒருவனை மணக்க, அவனுடைய தீயப் பழக்கங்களால் உள்ளம் வெம்புகிறாள்; கணவனுடைய எதிர்பாராத செயலினால், தாய் வீட்டிற்கு வரும்பொழுது, பழைய காதலனைச் சந்திக்கிறாள்; பழைய உணர்வுகள் உள்ளத்தில் துளிர்க்கின்றன. அதனால், அவள் தவறி விடுகிறாள்.

ஆனால், அது அவளுக்கு ‘அதிர்ச்சி’ மருந்தாக அமைகிறது; தவறுக்குத் தண்டனையும் கிடைக்கிறது. மனப்போராட்டத்தை மாற்றி, கணவனிடம் அன்புடையவளாக மாறுகிறாள்; தான் செய்த தவறு, தன் மகனுடைய இன்ப வாழக்கைக்கு இடையூறாகின்றபொழுது, புழுவாகத் துடிக்கின்றாள்; அறவாழியிடம், தான் குற்றவாளி என்பதை வெளிப்படுத்தும் பொழுது அவள் அடையும் துன்பம், ஒரு ‘தீக்குளிப்பாக’ அமைகிறது; பிறகு, ‘புதிய வடிவாக’த் தோன்றுகிறாள்; தொண்டு நெறியில் வாழ்க்கையை ஈடுபடுத்திக் கொள்ளுகிறாள். படிப்படியான பண்பாட்டு வளர்ச்சியுடைய பாத்திரமாக வடிவு, வலிவும் வனப்பும் பெறுகிறாள். வடிவு நடுத்தர வகுப்பில் தோன்றிய ‘பட்டதாரிப் பெண்’ என்பதைக்கூட, சில நிலைகளில் படிப்போரை மறந்து விடுமாறு ஆசிரியர் செய்து விடுகிறார். அந்த அளவிற்கு உயிர்க்கலை உடைய முழுநிலைப் பாத்திரமாக வடிவு படைக்கப்பட்டிருக்கிறாள்.

விஜயா அம்மையாரும், அவருடைய பெண்களும் மேட்டுக்குடி மக்களின் பிரதிநிதிகளாகப் படைக்கப்பட்டுள்ளனர். செல்வம் இருந்தால், பெருமிதமும் பேரழகும் தாமே வாய்க்கும் என்பதையும், வாழ்க்கை வளமிக்கதாகவும் இன்பம் பயப்பதாகவும் அமைவதற்கு

‘இலட்சியக் கனவுகள், தேவையில்லை என்பதையும் நல்ல பெண்மணியான விஜயாவின் பாத்திரப்படைப்பால் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். இவ்விரு பாத்திரங்களும் படிப்போரின் நெஞ் சத்தில் நிலைத்த இடத்தைப் பெறுகின்றனர்.

மற்றொரு சிறப்புமிக்க பாத்திரம் ஆசிரியர் அறவாழி ‘அல்லி’யில் அறிமுகப்படுத்தப்பட்ட அறவோர் அறவாழி, அவர் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில், அன்புத்தொண்டும், அறிவுத்தொண்டும் புரியும் அறவேராகப் படைக்கப்பட்டுள்ளார். அவருடைய அறிவின் தெளிவையும், சான்றாண்மையையும் கண்டு, இளைஞர்கள் தேன் பிலிற்றும் மலரைச் சூழ்ந்த வண்டுகளாக அவரைச் சுற்றி வருகின்றனர்.

> அப்படி ஒரு பெரியவர் சென்னையில் இருக்கிறார். மிகவும் நல்லவர்; தெளிவான அறிவு உள்ளவர். இளைஞர்களாகிய நாங்கள் எல்லாம் ஒழுக்கத்தோடு நெறியாக வாழ்கிறோம் என்றால், அவர்தான் காரணம் என்று சொல்லவேண்டும். .... சாமியார்க்கு ஆள் அல்ல அவர். இந்த உலகத்தில் பிறரையும் வாழவைத்துத் தானும் வாழ்வதே சமயநெறி என்று சொல்கிறவர் அவர். அவர் மிக முற்போக்கான அறிஞர்.[71]

என்று திருமலையும், வடிவுமே அறவாழியின் அருமை பெருமைகளைப் போற்றுவதாக ஆசிரியர் அறிமுகப்படுத்துகின்றார். பின்னர், வடிவிற்கு மனஆறுதல் அளிக்கத்தக்க புதிய வாழ்க்கைக்கு – உள்ளத்து அளவில் திருந்திய – குற்றத்தை மறந்து – தொண்டு செய்யும் வாழ்க்கைக்கு அவர் வழிகாட்டுகிறார்.

> தடைகளுக்கு இடையே, இடர்களுக்கு இடையே வளரும் வளர்ச்சியே படைப்பின் நோக்கமாக இருக்கிறது. ஆகவே தவறுகளும் தடைகளும் இயற்கை என்று எண்ணும் மனம் வேண்டும். நெருக்கடி நேரும்போது இரண்டு வழி உண்டு. ஒன்று, அச்சத்தால் அடங்குதல்; இதுவே மற்ற உயிர்களிடத்தில் காணப்படுவது; மனிதரிடத்தில் பெரும்பாலும் காணப்படுவது. மற்றொன்று, அன்பால் இணங்குதல்; இதுவே அறவோரிடம் காணப்படுவது; அன்பு மிகுந்த தாய்மையில் காணப்படுவதும் அதுவே.[72]

என்பது அறவாழி உலகிற்கு வழங்கும் நற்செய்தியாகும்.

இந்த அறவாழி எனும் பாத்திரத்தைப் பேராசிரியர் யாருடைய உருவகமாகப் படைத்துள்ளார் என்பதைப் பற்றி அவருடைய வாசகர்களும், ஆராய்ச்சியாளர்களும் சிந்தித்துள்ளனர். திரு.வி.க. அவர்களின் மறுபதிப்பே அறவாழி. என்றும், பேராசிரியர்

மு.வ.அவர்களை நினைவுபடுத்தும் பாத்திரமே அறவாழி என்றும் இருவகையாகக் கருதுகின்றனர்.[73]

திரு.வி.க அவர்களிடம் பேரீடுபாடும் பெருமதிப்பும் கொண்டவர் மு.வரதராசனார். வணக்கத்திற்குரிய ஆசானாக, தலைவராகத் திரு.வி.க.அவர்களைப் பேராசிரியர் போற்றியுள்ளார். இதனால்தான், தம்முடைய புதினங்கள் மூன்றில், அவரை அறங்கூறும் அறவோராகக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார். ‘அந்த நாள்’, ‘நெஞ்சில் ஒரு முள்’, ‘வாடாமலர்’ எனும் மூன்று புதினங்களில், திரு.வி.க. ஒரு சான்றோராகத் தோன்றி, கதைப்பாத்திரங்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளுவதாகக் காட்டப்பட்டுள்ளார்.

‘அந்த நாள்’ எனும் புதினத்தில், சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற தொழிலாளர்கூட்டத்தில், திரு.வி.க. சொற்பொழிவாற்றிக் கொண்டு இருந்ததைப் பற்றிய குறிப்பு வருகிறது.[74] ‘நெஞ்சில் ஒரு முள், எனும் இப்புதினத்தில், கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்குத் திரு.வி.க. தலைமை தாங்குகிறார். அவ்விழாவில் கண்ணழகனும், அன்பரசியும் திரு.வி.க. அவர்களின் வாழ்த்துதலோடு பரிசுகள் பெறுகின்றனர். கண்ணழகனுக்கு “அறத்தை நம்பு திருக்குறளைப் படி; வாழ்க்கையில் பின்பற்று” என்று அவர் மேடையிலேயே, தனிப்பட்ட வகையில் அறிவுரை வழங்கி, அனுப்புகிறார்.[75]

‘வாடாமலர்’ எனும் புதினத்தில், குடியேற்றம் (குடியாத்தம்) எனும் ஊரில், ‘அருட்பா மன்றத்தில்’ திரு.வி.க. ‘புதிய சமுதாயத்தை’ உருவாக்குவதற்குரிய வழி வகைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றுகிறார். ‘வாடாமலரின்’ கதைத் தலைவன் தானப்பன், அவன் நண்பன் குழந்தைவேல், தானப்பனின் மைத்துனரான ஆசிரியர் முருகய்யா ஆகிய மூவரும் அந்தக் கூட்டத்திற்குச் சென்று, சொற்பொழிவைக் கேட்டு, சிந்தனையில் ஆழ்கின்றனர்.[76]

இந்த மூன்று இடங்களில் திரு.வி.க.ஒரு கதைமாந்தராகவே காட்டப்பட்டுள்ளார். மற்றப் புதினங்களில் அவருடைய நூல்களைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், தொண்டைப் பற்றியும் பல குறிப்புகள் வந்துள்ளன.[77]

இவை யாவற்றையும் ஒருங்கிணைத்து நோக்குகின்ற பொழுது, திருவள்ளுவருக்கும், காந்தியடிகளுக்கும் அடுத்தநிலையில் திரு.வி.க.வைப் பேராசிரியர் மு.வ., ஒரு மாபெருஞ் சான்றோராக மதித்துப் போற்றுவது புலனாகின்றது. இத்தகைய அறவோரை, ஒரு பாத்திரமாக பேராசிரியர் மு.வரதராசனார் படைத்திருப்பாரா, எனும் ஐயம் எழுகிறது.

மற்றும் 'நெஞ்சில் ஒரு முள்' எனும் புதினத்தில், சென்னை நகரில் வாழும் சிறப்புமிகு சான்றோராகத் திரு.வி.க. அவர்களையும், இளைஞர்களுடைய நல்வாழ்விற்கு வழிகாட்டும் அறிஞராக அறவாழியையும் பேராசிரியர் படைத்துள்ளார் என்பதை முன்னரே கண்டோம். 'திரு.வி.க. அவர்களின் நிழலோவியம்தான் அறவாழி' என்றால், ஒரே புதினத்தில் அவர்கள் இருவரையும் வெவ்வேறு பாத்திரங்களாகப் படைக்க வேண்டிய தேவை யாது?' எனும் எண்ணம் உண்டாகிறது. இருவரும் ஒருவரே என்பது உண்மையானால் பரிசளிப்பு விழாவின் தலைமையுரையை அறவாழியைக் கொண்டே நடத்தி இருக்கலாம். இவ்வாறு செய்யாமல், இருவேறு பாத்திரங்களாக அவர்களைப் படைத்துள்ளமையே, அவர்கள் இருவரும் வெவ்வேறானவர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றது.

திரு.வி.க. அவர்களுக்கும், ஆசிரியர் அறவாழிக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. அரசியல் சூறாவளியில் சிக்கி, பிறகு மீண்டவர் திரு.வி.க. அரசியலில் – சிறப்பாகக் கட்சி அரசியலில் – காலெடுத்து வைக்காதவர் அறவாழி இது மு.வ. அவர்களுக்கே முற்றிலும் பொருந்தும். திரு.வி.க. தொழிலாளர்களின் தோழர். அறவாழியோ கல்வியறிவு பெற்ற நடுத்தர வகுப்பினரின் நண்பர். ஒரு சமயம் "நான் உடலால் என் தந்தையின் மகன்; உள்ளத்தால் திருவள்ளுவரின் மகனாக இருக்கிறேன்"[78] என்று வடிவிடம் அறவாழி கூறுவதைக் காணுகின்றோம். இங்கு, ஓர் உண்மையை நினைவுகூர்தல் வேண்டும். 'திரு.வி.க. இவ்வாறு கூறியிருப்பாரா?' என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திருவள்ளுவரிடம் திரு.வி.க. கொண்ட ஈடுபாட்டைவிட, சமயச் சான்றோர்களிடமும் அருளாளர்களிடமும் அவர் கொண்டிருந்த பற்றும், மதிப்பும் மிகுதியானது. எனவே, அவரைத் திருவள்ளுவரின் மகனாகக் கூறுதல், முற்றிலும் பொருந்தாது.

ஆனால், டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு, இது முற்றிலும் பொருந்தக் கூடியதாகத் தோன்றுகிறது. திருவள்ளுவரிடத்தும், திருக்குறளிடத்தும் பேரீடுபாடு கொண்டவர் மு.வ. – வள்ளுவர் வகுத்த அறநெறியில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் மு.வ. 'அறமும் அரசியலும்', தழைக்க நூல் எழுதியவர் மு.வ. தம்முடைய புதினங்கள் அனைத்திலும், 'அறம் பாடும் அறவோராக' மு.வ. விளங்குகிறார்.

திரு.வி.க. பல பழம்பெரும் நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவற்றுள் திருக்குறளின் பாயிரத்திற்கும், இல்லறவியலின் முதற் பகுதிக்கும் புத்துரை கண்டமை ஒரு பகுதி. பேராசிரியர் மு.வரதராசனார் திருக்குறள் ஒன்றுக்கே, 'தெளிவுரை' எழுதியுள்ளார். திருவள்ளுவருடைய திருமறையை 'வாழ்க்கை விளக்கமாக'

மக்களுக்குத் தந்தவர் மு.வ.இவ்வகையில் நோக்குகின்றபொழுது, சமயச் சார்பற்ற நிலையில், திருவள்ளுவரின் நற்செய்தியை உலகெங்கும் பரப்ப எண்ணிய மு.வரதராசனாருக்கே, அறவாழியின் கூற்று, முற்றிலும் பொருந்துவதாகும்.

அறிஞர் அறவாழியின் வாழ்க்கைத் தத்துவத்தில் திருவள்ளுவருடைய கருத்துக்களுக்கு அடுத்த நிலையில் மிகுதியாக இராமதீர்த்தருடைய கருத்துகளின் எதிரொலியைக் கேட்கின்றோம்.

> மேற்கு நாட்டு அறிஞர்களின் கருத்துகளையும், திருவள்ளுவரின் மணிமொழிகளையும் விவேகானந்தர், இராமதீர்த்தர் கருத்துகளையும் ஒப்பிட்டுக் காட்டுவார். தன்னைக் கடந்து பெரிய வட்டம்போல் மனம் விரிவு அடையும் அளவிற்கு வாழ்க்கை உயரும் என்றும், தன்னையே சுற்றிக் குறுகும் அளவிற்கு வாழ்க்கை தாழும் என்றும், ஆய்வுக்களத்தில் விஞ்ஞானப் பாடத்தை விளக்குதல் போல் விளக்குவார். குழந்தை வளர்ப்பு, தோட்ட வேலை, கலைப்பயிற்சி, மெய்யுணர்வு இந்த நான்கும் வாழ்க்கைக்குத் தேவை என்றும் அடிக்கடிச் சொல்லுவார். அவருடைய பேச்சில் கண்மூடித்தன்மையே காணமுடிகிறது.[79]

என்பது அறவாழியைப் பற்றிக் கண்ணழகன், தன் தாயாருக்குக் கூறும் செய்தி. இதனை அமைதியாக ஆராய்ந்து பார்ப்போமானால், மேலே குறிப்பிடப்பட்ட பண்புகள் அனைத்தும் மு.வ.அவர்களிடம் காணப்பட்டவை என்பதை எளிதில் உணரலாம்.

இவற்றிற்கு மேலாக, ஆற்றல்மிக்க அகச்சான்று ஒன்று 'நெஞ்சில் ஒரு முள்' எனும் புதினத்தில் காணப்படுகிறது. கல்லூரி மாணவர்கள் அறவாழியைப் பற்றிப் பேசும் கட்டம் ஒன்றில்,

> அவர் (அறவாழி) பெயரால், ஒரு நூல் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்து யாரோ வந்து இசைவு கேட்டார்கள். நானாக இருந்தால், அதைக்கேட்டதும் பூரித்து, அவர்களுக்குப் பணம் கொடுத்து, அவ்வாறு செய்யச் சொல்லியிருப்பேன். அவர் அந்த ஏற்பாடு கூடவே கூடாது என்று மறுத்துவிட்டார். இறந்துபோனவர்களின் யார் பெயராவது வைக்கும்படியாகச் சொல்லியனுப்பினார். உயிரோடு இருப்பவர்களின் பெயரை வைத்தால், அது அவர்களுடைய உள்ளத்தில் அடங்கியிருக்கும் தன்முனைப்பைத் தூண்டுமாம்; யான் எனது என்னும் செருக்குவளருமாம் அதனால் தம் நன்மையைக் கருதி அவ்வாறு செய்ய வேண்டா.[80]

என்று அறவாழி மறுத்து விட்டாராம். மாணவர்கள் இதனைப் பல்வேறு கோணங்களில் அலசி, ஆராய்கின்றனர்.

பேராசிரியர் மு.வரதராசனார், இதைப்போன்றே 1955ஆம் ஆண்டில், தம் பெயரால் நூல் நிலையம் நிறுவவேண்டா என்று மறுத்துவிட்டார். செனாய் நகரில், மாநகராட்சி நிறுவிய பூங்காவிற்குச் செனாய்ப் பூங்கா' என்று பெயரிட்டனர். அப்பெயரை மாற்றி, 'திரு.வி.க. பூங்கா' என்று பெயரிட, டாக்டர் மு.வ.அவர்கள் அயராது முயன்றார்; இறுதியில் வெற்றியும் பெற்றார். அதே சமயத்தில், அப்பகுதியில் திரு.வி.க.பள்ளியைத் தொடங்குவதற்குப் பலவகையான முயற்சிகளை அவர் மேற்கொண்டார். பள்ளியைத் தொடங்கிய பிறகு, அதன் நிர்வாகக் குழுவில் அவர் பொறுப்பு ஏற்றார்.

இந்நிலையில், அப்பகுதியில் வாழ்ந்தவரும், தமிழன் என்று உணர்வோடு மாநகராட்சி ஆணையராகச் சிறப்புற்று விளங்கியவருமான கே.பாலசுந்தரம், ஐ.ஏ.எஸ்., எனும் அதிகாரி மு.வ.அவர்களை வீட்டில் சந்தித்து, 'திரு.வி.க.' பூங்காவை' சென்னையில் சிறப்புமிகு பூங்காவாக்கப் போவதாகவும், அங்கே மாநகராட்சி நூல் நிலையம் ஒன்றை நிறுவி, அதற்குப் பேராசிரியர் மு.வரதராசனாரின் பெயரைச் சூட்ட மாநகராட்சி உறுப்பினர்கள் பலர் விரும்புவதாகவும் சொன்னார். அதற்குப் 'பேராசிரியரின் ஒப்புதலைத் தருமாறும், அவர் கேட்டார். அப்பொழுது, டாக்டர் மு.வரதராசனார் 'அத்தகைய முயற்சி வேண்டா' என்று உறுதியாக மறுத்து விட்டார். இச்செய்தியை மாநகராட்சி வட்டார வளர்ச்சிக்குழுவின் கூட்டத்தில், மாநகராட்சியின் ஆணையர் தெரிவித்தார். உடனே, மாநகராட்சி முன்னாள் 'மேயர்கள்' சிலரும், உறுப்பினர்கள் பலரும் மு.வ. அவர்களைச் சந்தித்து, அவருடைய கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு வேண்டினர். ஆனால் அவர்களுக்கு மு.வ.இசையவே இல்லை. இந்த நிகழ்ச்சியையே, பேராசிரியர் மு.வ., தம் புதினங்களில், தம்மைப் பிரதிபலிக்கும் பாத்திரமான அறவாழியின் வாய்மொழியாக வெளிப்படுத்தியுள்ளார்[81] எனக் கருத இடம் உண்டு. இக்காரணங்களால் அறிஞர் அறவாழி, புதினப் படைப்பாளர் மு.வரதராசனாரின், மாற்று வடிவமே எனக் கருதுவது பொருந்தும்.

'புதின ஆசிரியர்கள், தங்களையே ஒரு பாத்திரமாகத் தம் நூல்களில் படைப்பது உண்டா?' எனும் ஐயம் எழலாம். நாடகங்களிலும் புதினங்களிலும் அவற்றின் படைப்பாளர்கள் தங்களையே ஒரு கதைப்பாத்திரமாகப் படைத்துக் கொள்ளுவது உண்டு. பெர்னாட்ஷாவின் நாடகங்களிலும், சாமர்செட் மாமுடைய புதினங்களிலும் இத்தகைய பாத்திரங்களைக் காணலாம்.

ஷாவினுடைய பாத்திரங்கள் எல்லாம், அவருடைய கருத்துகளின் உருவகங்களைப்போல் தோன்றினாலும், சில பாத்திரங்கள் அவரை

உரித்து வைத்ததைப்போலவே தோன்றுகின்றன. ‘மனிதனும் மாமனிதனும்’ (Man and Superman) எனும் நாடகத்தில் வரும் ரோபக் ராம்ஸ்டன் (Roebuck Ramsden) எனும் பாத்திரமும், ‘மேஜர் பார்பாராவில்’ வரும் மேஜர் பார்பாராவும், ‘மருத்துவரின் மலைப்பு’ (Doctor’s Dilemma) எனும் நாடகத்தில் வரும் ரெட்பென்னி (Redpenny) எனும் பாத்திரமும் ஷாவினைப் பிரதிபலிப்பதாகக் கூறுவர்.[82]

மாம் (Maugham) பலமுறை, தன்னையே ஒரு பாத்திரமாகத் தம்முடைய புதினங்களில் படைத்துள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளார்.[83] அவற்றுள், ‘மனிதத் தன்மையின் அடிமைத்தளையைப் பற்றி’ (Of Human Bondage) எனும் புதினத்தில் வரும் தலைமைப் பாத்திரமான பிலிப்பு சாமர்செட் மாமுடைய மறுபதிப்பாகவே இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.[84]

இவ்வாறு கதையாசிரியர்கள் தங்களையே ஒரு பாத்திரமாகப் படைப்பது, தங்கள் கொள்கைகளை விளக்குவதற்காகக் கையாளும் ஒருவகை உத்தியாகவும் போற்றப்படுகிறது.[85]

ஒரு புதினத்தில், ஆசிரியரின் பல குரல்கள் ஒலிப்பது இயற்கை. அவற்றில் ஒரு குரல் உரத்த குரலாக மேலோங்கி நிற்கும். அக்குரலுக்கு உரிய பாத்திரம், பெரிதும் ஆசிரியரின் பிரதிநிதியாகப் படைக்கப்பட்டு இருக்கும். இவ்வாறு, ‘தம்மையே ஒரு பாத்திரமாகக் கதை ஆசிரியர் படைக்கலாமா? அது கலைப்படைப்பிற்குச் சிறப்பைத் தருமா?’ என்பன போன்ற வினாக்களுக்கு விடை கூறுவது எளிய செயலன்று. ஆயினும் “ஆசிரியர் ஓர் அளவிற்கு, மாறுவேடத்தில் வருவது வரவேற்கத்தக்கது; ஆனால், தம் படைப்பிலிருந்து ஒருகாலும் அவர் மறைந்துவிடக்கூடாது”[86] என்பது புனைகதைத் திறனாய்வாளரின் துணிவாகும்.

எனவே, பேராசிரியர் மு.வ.தம்முடைய புதினங்களில், அறவாழியாக ‘மாறுவேடம் பூண்டு’ வருவது குறையன்று; நிறையே எனத் துணியலாம்.

11. அகல்விளக்கு

(1958)

வேலய்யன், சந்திரன் எனும் இருவரும் சிறுவர்களாக இருந்த பொழுது, மிக நெருங்கிய நண்பர்களாவர். இளமையில் சந்திரன் அறிவுச் சுடராகவும், காண்பவர் உள்ளத்தைக் கவரும் அழகனாகவும் விளங்குகிறான். ஊரைவிட்டு, சென்னைக்குச் சென்று கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கிய பிறகு, தீய பழக்கவழக்கங்களால் அவன் கெட்டுப்போகிறான்; திருமணம் செய்த பிறகும், மனைவியோடு ஒழுங்காக வாழாமல், அலைந்து திரிந்து, தொழுநோயாளியாகி

விடுகிறான். தன் கடைசி நாட்களைத் தன் இளமைக்கால நண்பனான வேலய்யனொடு கழிக்கிறான். அப்பொழுது ஒருநாள், வேலய்யனைப் பார்த்து,

> நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிது காலம் பளபள என்று மின்னினேன். என் அறிவையும் அழகையும் அப்போது எல்லோரும் விரும்பினார்கள்; பாராட்டினார்கள். என்ன பயன்? வர வர, எண்ணெயும் கெட்டது; திரியும் கெட்டது; சிட்டமும் பிடித்தது. ஒளி மங்கியது. மங்கிவிட்டேன். நீதான் நேராகச் சுடர்விட்டு அமைதியாக எரியும் ஒளிவிளக்கு.[87]

என்று சந்திரன் போற்றிப் பாராட்டுகிறான். இப்புதினத்தின் தலைப்பிற்குரிய விளக்கத்தை இங்குக் காணுகின்றோம். கதையின் கருவும் ஈதேயாகும்.

அகல்விளக்கின் கதைப்பின்னல், நிகழ்ச்சிகள் நிறைந்ததாகும். அது சந்திரனின் நான்கு வகை வாழ்க்கைநிலைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. சிற்றூரிலிருந்து உயர்நிலைப்பள்ளியில் சேர்க்க அவனை, அவனுடைய அப்பா வாலாசாபேட்டைக்கு அழைத்துச் செல்கின்றார். அவனுக்காகத் தனிக்குடும்பம் ஒன்றை அவ்வூரில் அமைக்கின்றார். அங்கு அவன் வேலய்யனோடு நண்பனாகின்றான்; படிப்பில் முதன்மை இடம் பெறுகிறான். அத்தெருவில் வாழும் இளம் விதவையான பாக்கியம் அம்மையாரோடு அவன் நெருங்கிப் பழகுகிறான். சிறிது காலத்திற்குள் அந்த அம்மாவோடு பழகுவதை நிறுத்திக் கொள்ளுகிறான். பள்ளி இறுதித் தேர்வில் அவன் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறுகிறான். வேலய்யன் தோல்வியுறுகிறான். இது ஒரு கட்டம்.

சென்னை நகரில் அவன் கல்லூரியில் சேர்க்கப்படுகிறான். அழகும், பணமும் சேர்ந்து அவனுக்குச்சில வாய்ப்புகளைத் தேடித் தருகின்றன. இமாவதி எனும் கல்லூரி மாணவியோடு சந்திரன் பழகத் தொடங்குகிறான். அவள், மனத்தில் களங்கம் இன்றிப் பழகுகிறாள். ஆனால், தன்னை அவள் காதலிப்பதாக சந்திரன் தவறாக நினைத்துக் கொண்டு, கற்பனையுலகில் மிதக்கிறான். இதற்கு இடையில் வேலய்யன் அந்தக் கல்லூரியில் சேருகிறான். பழைய நண்பனிடம், சந்திரன் சரியாகப் பழகுவதில்லை. அவனுடைய போக்கில் புதுமையைக் கண்டு, வேலய்யன் திகைப்பு அடைகிறான். அச்சமயத்தில் மூடநம்பிக்கைகளின் மொத்த உருவமான மாலன் என்பவனுடைய நட்பை வேலய்யன் பெறுகிறான். பட்டப்படிப்பின் இறுதித்தேர்வு வருகிறது. அந்நிலையில் இமாவதியின் திருமண அழைப்பு கிடைக்கிறது. அதைக்கண்டு சந்திரன் மனம் உடைந்து போகிறான்; தன்னை அவள் ஏமாற்றிவிட்டதாக எண்ணுகிறான்;

மற்றத் தேர்வுகளை எழுதாமல், யாருக்கும் சொல்லாமல் எங்கோ ஓடிவிடுகிறான். இது அவனுடைய வாழ்க்கையின் இரண்டாவது காலகட்டமாகும்.

வேலய்யன் தேர்வில் வெற்றிப் பெற்ற பின்னர், வேலையில் அமர்கிறான். மாலனுக்குச் சந்திரனின் தங்கையை (வேலய்யன் திருமணம் செய்து கொள்ள விரும்பிய பெண்ணை)த் திருமணம் செய்து வைக்கின்றனர். மனத்தைத் தேற்றிக் கொண்ட வேலய்யன், அவனுடைய அத்தை மகளை மணந்து, வாழ்க்கை நடத்துகிறான். இச்சமயத்தில், சந்திரன் நீலகிரி மலைப்பகுதியில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறான் எனும் செய்தி கிடைக்கிறது. வேலய்யன், சந்திரனுடைய அப்பா முதலியோர் நீலகிரிக்குச் சென்று அவனைக் கண்டுபிடிக்கின்றனர். தன்னைவிட வயதில் மூத்த ஒருத்தியோடு, அவன் வாழ்க்கை நடத்தி வருவதை அவர்கள் அறிகின்றனர். அவனை அழைத்து வந்து, திருமணம் செய்து வைத்து, அவனிடம் குடும்பப் பொறுப்பு முழுவதையும் அவனுடைய தகப்பனார் ஒப்படைக்கின்றார். அவன் மனைவியோடு ஒழுங்காக வாழவில்லை. கொடுமைப்படுத்துகிறான். ஊரில் பல பெண்களோடு தொடர்பு கொண்டு அவன் அலைகிறான். அதன் விளைவாக, அவன் தொழுநோயாளி யாகிறான். அவனுடைய கொடுமைகளைப் பொறுக்க இயலாது. அவனுடைய மனைவி தற்கொலை செய்து கொள்ளுகிறாள். இது அவனுடைய வாழ்க்கையின் மூன்றாவது கால கட்டமாகும்.

உடனே, சந்திரன் ஊரைவிட்டு வெளியேறுகிறான்; பெருநோயாளியாகிப் பழைய நண்பனைத் தேடி, அவனைக் கண்டு பிடிக்கின்றான். அவன் வீட்டிற்குச் சென்று சில நாட்கள் அவன் தங்குகிறான். அப்பொழுது, நண்பன் வேலய்யனிடம் மனந்திறந்து, தன்னுடைய கடந்த கால வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைச் சொல்லுகிறான். நண்பன் வீட்டிலேயே, அவன் இறந்துவிடுகிறான். இவ்வாறு செறிவான கதைப்பின்னலைக் கொண்டதாக ‘அகல்விளக்கை’ ஆசிரியர் படைத்துள்ளார்.

இந்நூலின் பாத்திரப் படைப்பு தனித்தன்மை வாய்ந்தது. வேலய்யனையும் சந்திரனையும் போன்ற கல்லூரி மாணவர்கள் பலரை, இன்றும் கல்லூரி மாணவரிடையே காணலாம். புற அழகும், அறிவுக்கூர்மையும் வாய்ந்த சந்திரனுக்கு, அகவழகு இல்லை; நெறியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எதிலும் அவன் துடிப்புமிக்கவனாகவே தோன்றுகின்றான்; பொறுமை கிடையாது எப்பொழுதும் புதுமையை நாடும் மனப்போக்கு உடையவனாக விளங்குகிறான்; எதையும் தீர ஆராய்ந்து முடிவிற்கு வாராமல், உணர்ச்சிகளின் உந்துதலால் கற்பனைக்கோட்டை

கட்டுவதில் முனைகிறான். பிறரிடம், தன் மனம் திறந்து பேசிக் கவலைகளைக் குறைத்துக் கொள்ளத் தெரியாதவனாக இருக்கிறான். இதனால், அகவய நோக்காளனாக (Introvert) மாறுகிறான். சுருங்கச் சொல்லுவதானால் ‘உணர்ச்சியின் பிண்டமாக’ அவன் வாழ்கிறான்; அவனுடைய மனநிலை விரைவாக மாறிக்கொண்டே போகிறது.

இத்தகைய இயல்புகளுடைய சந்திரனுக்கு, யாரிடத்திலும் நம்பிக்கை கிடையாது; எந்த அறவோரிடத்திலும் பிடிப்பு ஏற்படவில்லை; நெறியோடும் முறையோடும் வாழும் வழியைக் கற்காமல் போய்விட்டான். கடைசி நாட்களில்தான், நட்பின் சிறப்பை உணருகிறான்; வேலய்யனைப் போற்றுகிறான். இறப்பின் குகைக்குள் கால் எடுத்து வைத்த பிறகே, அவன் தாயுமானவர், இராமலிங்கர், மாணிக்கவாசகர் முதலியோருடைய பாடல்களை ஓதியோதிக் கண்ணீர்விட்டு, மனவமைதியைப் பெற முயலுகிறான். ‘அழுதால் உன்னைப் பெறலாமே!’ எனும் அருளாளரின் வாய்மொழியை நினைந்து, நினைந்து அவன் உருகுகிறான். புதிய சந்திரனாக மாற இயலாதவாறு, அவனை இறப்புத் தழுவிக் கொள்ளுகிறது.

‘இப்படித்தான் வாழ வேண்டும்’ என்பதைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல், மனம் போன போக்கில் வாழ முயன்ற சந்திரன், நோயாளியாகின்றான். நோய் முற்றிய நிலையில், ‘இனிமேல் தனக்கு வாழ்வில்லை’ என்பதை அவன் உணருகிறான்; தான் செய்த தவறுகளை எண்ணி மனம் வருந்துகிறான். இது அவனுடைய எண்ணப் போக்கில் உண்டான பெருமாற்றம் ஆகும். மக்களுடைய வாழ்க்கையை அரளிப்பூவிற்கும் துளசிக்கும் ஆசிரியர் ஒப்பிட்டுக் காட்டுகிறார். வேலய்யன் வாழ்க்கைத் துளசிச் செடியாகப் பொலிவுறுகிறது; சந்திரன் வாழ்க்கை அரளிப் பூவாகப் பயனின்றிக் கெடுகிறது.[88] அவர்களுடைய பண்பு நலன்களைப் புரிந்து கொள்ள இவ்வுவமைகள் உதவுகின்றன. இந்த வகையில் சந்திரன், ஒரு முழுநிலைப் பாத்திரமாகத் தோன்றுகிறான்.

வேலய்யன் ஆரவாரம் இல்லாதவன்; எதிலும் இடைப்பட்ட நிலையிலே இருப்பவன்; செய்வனவற்றை நெறியோடும் முறையோடும் செய்பவன். இதனால், அவனுடைய வாழ்க்கையில் அன்பு தழைக்கிறது; அமைதி நிலவுகிறது. பேரளவிற்குச் சராசரி மனித இயல்புகளையுடையவனாக விளங்கும் வேலய்யன், ஒருநிலைப் பாத்திரமாகத் தோன்றுவதில் வியப்பு இல்லை.

இப்புதினத்தில் வரும் பெண் பாத்திரங்களுள் கருத்தைக் கவருவது பாக்கியம் அம்மையார் எனும் பாத்திரமாகும். இளம் கைம்பெண்ணான அவ்வம்மையார், கட்டான உடலும் இயற்கையழகும் உடையவர்; மகப்பேறு வாய்க்கப்பெறாதவர்; அன்போடு பழகும் இயல்புடையவர்; வேலய்யன் குடும்பத்தோடு

நெருக்கமாகப் பழகுபவர்; குழந்தைப் பேறில்லாமையால், அக்கம்பக்கத்து குழந்தைகளிடமும் சிறுவர்களிடமும் பேரன்பு காட்டுபவர். இதைப் புரிந்து கொள்ளாமல், சந்திரன் அந்தப் பெண்ணிடம் தவறாக நடக்க முயன்று, தடம்புரண்டு போகிறான்.

தன் துன்பத்தை மறக்கச் சான்றோர்களின் நூல்களைக் கற்று, அறிவில் தெளிவும், உள்ளத்தில் உறுதியும் அந்த அம்மையார் பெறுகிறார். சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுத் தன் வாழ்க்கைத் துன்பத்தை அவர் மறக்க முயலுகிறார்.

அனுபவ அறிவும், சிந்தனைத் திறனும் பெற்று அந்த அம்மையார் சிறக்கிறார். வேலய்யன் தங்கையின் குடும்ப வாழ்க்கைச் சிக்கல்களைப் போக்க அவர் நடைமுறைக்குகந்த அறிவுரைகளைக் கூறுகிறார். அந்நிலையில் ஔவையாரும் மணிமேகலையும் ஒன்றாகச் சேர்த்து மறுபிறவி எடுத்தனரோ எனும் எண்ணம், அவ்வம்மையாரைப் பற்றி அறியும்பொழுது தோன்றுகிறது. பாக்கியம் அம்மையார், தமிழகத்தில் வாழ்ந்துவரும் கைம்பெண்களை நினைவூட்டும் இலட்சியப் பெண்பாத்திரப் படைப்பாகும்.

‘அகல்விளக்கு’ எனும் புதினத்தின் கதை முழுவதையும் வேலய்யனுடைய நினைவோட்டமாகவே, பேராசிரியர் படைத்துள்ளார். அந்த நினைவோட்டம் கடந்தகால நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. குடும்ப வாழ்க்கையின் சிறப்பு, காதலின் இயல்பு, இளைய சமுதாயத்தின் கட்டற்ற மனப்போக்கு, ‘உலகம் உய்வதற்கு’ வழிகாட்டும் காந்தியத்தின் கொள்கைகள் போன்றவை இப்புதினத்தில் முதன்மையிடம் பெற்றுள்ளன.

அகல்விளக்கின் தலைமைப் பாத்திரமான சந்திரனுடைய வாழ்க்கை, மு.வ.வின் இளமைப்பருவ நண்பன் ஒருவனுடைய வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு புனையப்பெற்றதாகும்.[89]

இந்தப் பாத்திரப் படைப்பைப் பற்றிப் பேராசிரியர்,

பல ஆண்டுகள் ஆசிரியனாக இருந்து அப்படிப்பட்டவர்களைப் பார்த்திருக்கிறேன். அறிவுக்கூர்மை மட்டும் பெற்ற நெறியும் நம்பிக்கையும் இல்லாமல் வளர்ந்து பாழ்பட்டுப் போன இளைஞர்கள் சிலர் என் நினைவில் நின்றார்கள். அவர்களில் சிலருக்காக நான் நைந்து உருகியிருக்கிறேன்; கண்ணீர் விட்டிருக்கிறேன். அவர்கள் எல்லாரும் சேர்ந்து சந்திரனாக வளர்ந்துவிட்டார்கள்; இளைஞர்களாய்ப் படிக்கும்போது இரண்டாந்தர மாணவர்களாக இருந்தவர்கள். நெறியோடும் நம்பிக்கையோடும் அடக்கமாக வாழ்ந்து, பொறுமையோடு உழைத்து முன்னேறியதைப் பலகாலும்

பார்த்திருக்கிறேன். அவர்களை விளக்கும் வகையிலே வேலய்யன் என் கற்பனையில் வளர்ந்தான்.[90]

என்று ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து நெடுங்காலமாக, அவர் உள்ளத்தில் இடம்பெற்றிருந்த, தன் நண்பனுடைய அவல வாழ்க்கையைக் கல்லூரி மாணவர்களின் வாழ்க்கையோடு இணைத்து, மனக்கட்டுப்பாடு இல்லாத இளைஞர்கள் எவ்வாறு கெட்டழிகின்றனர் என்பதைச் சொல்லோவியமாகப் பேராசிரியர் தீட்டியுள்ளார் என்பது தெரிகிறது.

இந்தப் புதினத்தின் அமைப்பில் ஒருவகை அழகும் கதையைக் கூறுவதில் ஒருவகைப் புதுமைப் போக்கும் பாத்திரப் படைப்பில் கலைத் திறனில் முதிர்ச்சியும் வெளிப்படுகின்றன. புதினப் படைப்பாளர் மு.வ.வின் கற்பனைத் திறனும், சிந்தனை வளர்ச்சியும் படைப்புக்கலையின் கொடுமுடியை எட்டிப் பிடித்ததை இப்புதினத்தால் அறியமுடிகிறது.

பிற புதினங்களுக்கு வாய்க்காத சிறப்பு. அகல்விளக்கிற்குக் கிடைத்திருக்கிறது. சாகித்திய அக்காதமி, 1962இல் இந்நூலிற்குப் பரிசளித்து, பேராசிரியர் மு.வரதராசனாரைப் பாராட்டியது. இவ்வகையில் அவருக்குப் புகழைத் தேடித்தந்த பெருமை 'அகல்விளக்கிற்கே' உண்டு.

12. வாடாமலர்

(1960)

இப்புதினத்தின் தலைவன் தானப்பன். அவன் வேகமான வாழ்க்கையுடையவன்; தாறுமாறாகப் போனபோக்கிலும் வேகம்; உயர்ந்த நிலைக்குந் திருந்தியதிலும் வேகம்[91] உடையவன். அவனை 'வேகங்கெடுத்தாண்டது' இறப்பு. அவனுடைய வாழ்க்கை பிறருக்குப் பயன்படாமல் போய்விட்டது. வாடா மல்லிகைச் செடிகளால் மக்களுக்குப் பயன் உண்டாவதில்லை. ஆனால், அவற்றின் வாழ்க்கை ஒரு நல்ல அறிவுரையாக அமைகிறது. அந்த வாடாமலர்களைப் போன்றே, தானப்பனுடைய வாழ்க்கையும் மற்றவர்களுக்கு ஓர் அறிவுரையாக அமையும் என்பது ஆசிரியரின் கருத்து.[93] இக்காரணத்தினாலேயே, இப்புதினத்திற்கு 'வாடாமலர்' எனும் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

பேராசிரியரின் புதினங்களுள் மூன்று, மலர்களுடைய பெயரைக் கொண்டுள்ள 'செந்தாமரை', 'அல்லி' என்பன கதைத் தலைவியரின் பெயர்களாகும். 'வாடா மலர்' என்னும் இப்புதினப் பெயர், குறியீட்டுப் (Symbolic) பொருளில், கதைத் தலைவனுடைய வாழ்க்கையைச் சுட்டுகிறது.

சித்தியின் கொடுமைகளைப் பொறுக்கமாட்டாத சிறுவன் தானப்பன், வீட்டைவிட்டு ஓடி விடுகிறான். சென்னை நகரில் சுற்றி அலைந்து, வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற, தீய வழிகளை அவன் நாடுகிறான். அவனுடைய தந்தை இறந்த பிறகு, அவன் ஊருக்குத் திரும்புகிறான்; குடும்பப் பொறுப்பு அனைத்தையும் ஏற்றுக்கொள்கிறான். அவன் சென்னையில் பெற்ற கசப்பான அனுபவங்கள், தொழில் முறையில் முன்னேற்றம் காண உதவுகின்றன; படிப்படியாக உயர்ந்து, நகர் மன்றத் துணைத் தலைவனாகப் பொது வாழ்க்கையில் சிறப்புறுகிறான். நிறையப் பணம் கிடைக்கும் என்னும் காரணத்திற்காகவே, முப்பது வயதைக் கடந்துவிட்ட கனகம் என்னும் பெண்ணை அவன் மணக்கிறான். அவளோ கட்டிய கணவனோடு மட்டும் வாழாமல், பழைய நண்பன் ஒருவனோடும் வாழ முற்படுகிறாள். மனைவி, தனக்கு வஞ்சனை செய்வதை அறிந்தும், அவன் அறியாதவன் போல் பெருந்தன்மையாக நடந்து கொள்ளுகிறான்.

ஒருமுறை திரு.வி.க.வின் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு, தானப்பனுக்குக் கிடைக்கிறது. அந்தப் பேச்சைக்கேட்ட பிறகு, தன்னுடைய வாழ்க்கையின் போக்கை, அவன் விரைவாக மாற்றியமைத்துக் கொள்கிறான்; மனைவியைச் சட்டப்படி மணமுறிவு செய்து விடுகிறான். ஆனால், அவள் விரும்பினால், தன்னுடன் வந்து இருக்கலாம் என்று தெரிவிக்கிறான். இதற்கு இடையில், வாழ்க்கையில் ஒருவகையான பற்றற்றப் போக்கினை வளர்த்துக் கொள்ளுகின்றான்; சான்றோர்களின் நூல்களைப் படித்து, வாழ்க்கையின் உட்பொருளைப் புரிந்து கொள்ள அவன் முயலுகிறான்.

தானப்பன் மனைவி, திரும்பி வந்து அவனுடன் வாழுகிறாள். அவனுடைய வருவாயில் பங்கு தருமாறு அவள் வேண்டுகிறாள். தானப்பன் பங்கு அளிக்க மறுத்து விடுகிறான். ஏமாற்றம் அடைந்த கனகம், பாலில் நஞ்சினைக் கலந்து அவனுக்குக் கொடுத்ததோடு, தானும் அதைக் குடித்து மடிகிறாள். இருவரும் இறந்த செய்தி, ஊரில் காட்டுத்தீ போல் பரவுகிறது. தானுப்பனுடைய தங்கையின் கணவர், அவனுடைய பெயரில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவுகிறார்; அப்பள்ளிக்கு ‘வாடாமலர்’ எனும் பெயரிடுகிறார். இது ‘வாடாமலரின்’ கதைப் பின்னலாகும்.

பாத்திரப் படைப்பில் தானப்பன் சிறந்து விளங்குகிறான். குறையும் நிறையும் கலந்த உண்மை மனிதரைப் போல, அவன் இரண்டும் கலந்தவனாகவே படைக்கப்பட்டுள்ளான். ‘எப்படியாவது முன்னேற வேண்டும்’ எனும் துடிப்பினால் குறுக்கு வழிகளை அவன் நாடுகிறான். மனைவியின் போக்கு, அவன் மனத்தைத் தாக்குகிறது;

திரு.வி.க.வின் பேச்சு அவனுடைய சிந்தனையைத் தூண்டுகிறது. 'வாழ்க்கை என்பது என்ன? அதை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும்? என்பதை அவன் புரிந்து கொள்கிறான். இளமையில் தாயின் அன்பையோ, தந்தையின் அரவணைப்பையோ பெறாத காரணத்தினால், முரடனாக வளர்ந்தவன் தானப்பன். ஆனால், பிற்கால வாழ்க்கையில் திருந்திய மனிதனாக, 'அன்பு நெறியே சிறந்த நெறி' என்பதை உணர்ந்து, வாழ்க்கையில் அதை, அவன் கடைப்பிடிக்கிறான் அவ்வாழ்க்கையில், அவன் வெற்றி பெறுவதற்குள், நயவஞ்சகியின் கொடுஞ்செயலால், அவனுடைய வாழ்க்கை முடிந்து விடுகிறது. அவன் 'வாடாமலராக'ப் பிறருடைய வாழ்க்கைக்கு வழி காட்டுகிறான். இந்த வகையில், அவனுடைய பாத்திரப்படைப்புச் செம்மை நலம் வாய்ந்ததாக உயிர்க்கலையுடன் விளங்குகிறது.

வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்கள் இப்புதினத்தில் விளக்கப்படுகின்றன. பொதுவாழ்வில் ஈடுபடுவோரின் 'பதவி' ஆசை முதல், பகட்டாக வாழ விரும்பும் பெண்களின் கயமைத்தனம் வரையிலான மனித இயல்புகள் பல சுட்டிக்காட்டப்படுகின்றன. மனித மனம் செம்மைப்படுவதற்குச் சான்றோர்களின் நூல்கள் உறுதுணையாக உள்ள திறத்தை இப்புதினம் சிறப்பாகத் தெளிவுறுத்துகிறது.

வடிவ அமைப்பாலும், உணர்த்தும் முறையாலும் இப்புதினம் சிறந்து விளங்குகிறது. படைப்பாளர் மு.வ.வின் படைப்புத்திறன், இப்புதினத்தில் புதுப்பொலிவு பெற்றுள்ளதைக் காணலாம்.

13. மண் குடிசை

(1960)

இன்றைய 'சமுதாயம் மண்குடிசையாக இருக்கும்' நிலையைச் சித்திரிப்பதே இப்புதினப் படைப்பின் நோக்கமாகும். பேராசிரியரின் 'நீண்ட கனவிலிருந்து முளைத்து வளர்ந்த கதை இது'[93] "அறிஞர் எச்.ஜி.வெல்சின் 'உருத்தெரியா மனிதன்' என்னும் படைப்பில் அறிவியல் பயன்பட்டதை உணர்ந்த"[94] ஆசிரியர், அவ்வுத்தியைப் பயன்படுத்தி இப்புதினத்தைப் படைத்துள்ளார்.

கடந்த சில நூற்றாண்டுகளில் உண்டான அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தை இலக்கியத் துறையிலும் காணமுடிகிறது. அறிவியல் வளர்ச்சியால் உண்டான மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கற்பனை வண்ணத்தில் குழைத்து, சுவைமிகு கதைகளாகப் படைத்து, மக்களை மகிழ்விக்க முன்வந்த எழுத்தாளர்கள் பலராவர். தொழில் நுட்பத்துறையில் உண்டான புதிய கண்டுபிடிப்புகளை, வாழ்க்கையோடு இணைத்துப் பல கற்பனைக் கதைகளைச் சிலர்

எழுதினர். மற்றும் சிலர், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அறிவியல் சாதனைகளைத் தங்கள் கற்பனையாற்றலால் படைத்துத் தந்தனர். அத்தகைய புனைகதைகளுள் ‘கால இயந்திரம்’ (The Time Machine), ‘சந்திரனில் முதல் மனிதர்’ (The First Men in the Moon), ‘உருத்தெரியா மனிதன்’ (The Invisible Man) என்பன சிறப்புமிக்கனவாகும். இவற்றைப் படைத்தவர் எச்.ஜி.வெல்சு.[95] இவற்றைப் போன்ற புதுவகைப் புனைகதைகளை ‘அறிவியல் சார்புடைய புனைகதை’ (Science Fiction) என்று போற்றும் வழக்கம் உண்டாயிற்று.[96]

அறிவியல் சார்புடைய புனைகதைகள் பெரிதும் உணர்ச்சிக் கிளுகிளுப்பை ஊட்டக்கூடியன; படிப்போரை வியப்புக் கடலுள் ஆழ்த்துவன. இவற்றைப் படைக்கும் ஆசிரியர் இன்றைய சமுதாயத்தை விரைவாகத் திருத்தவோ, மாற்றவோ இயலாத நிலையில் ‘அதற்கு யாதாகிலும் புது வழியைக் காண இயலாதா?’ என்று ஏங்கும் நிலையில், பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவு’ காணுகின்றனர்.[97] அக்கனவு, ஓர் அளவிற்கு அறிவியல் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகவும், அறிவியல் ஆராய்ச்சிகளின் போக்கை ஒட்டியும் அமைகின்றது. இந்த அடிப்படையில் கவர்ச்சிமிகு ‘கற்பனைக் கதைகள்’ உருவாகின்றன. அவற்றையே ‘அறிவியல் சார்புடைய புனைகதை’ என்பர் அவற்றில் கதைக்கரு வலிவுடையதாக இருக்குமானால், அவற்றை ‘அறிவியல் சார்புடைய புதினம்’ எனச் சுட்டுவர்.

பேராசிரியர் மு.வரதராசனார் படைத்த புதினங்களுள், கடைசியாக வெளிவந்த புதினமே ‘மண்குடிசை’,[98] இம்மண்குடிசையில் ஓரளவிற்கு அறிவியலும், பேரளவிற்கு ஆன்மிகவியலும் இணைந்தும் இழைத்தும் காணப்படுகின்றன. இப்புதினத்தின் பேராசிரியர் நரேந்திரர் அறிவியலறிஞர் ஆவர். ஆனால், அதே சமயத்தில் ஓரளவிற்கு ஆன்மிகப் பண்பாட்டில் ஊறித்திளைத்தவராகவும் அவர் தோன்றுகிறார். அவருடைய நண்பராகவும் குருவாகவும் விளங்குபவர் மெய்கண்டார் எனும் சான்றோராவார். அவர் ஆன்மிகப் பண்பாட்டின் முழு நிறை வடிவமாகத் தோன்றுகிறார் . எனினும், அறிவியல் மனப்போக்குடையவராகக் காட்சித் தருகிறார். இவ்விருவரும் இல்லறத்தை இனிது நடத்தி மனைவியை இழந்த பிறகு, அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். பேராசிரியர் நரேந்திரர் வங்காளியாவார். மெய்கண்டார் தமிழ்ச் சான்றோராவார். இருவரும் இணைந்து, அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடும் இடம் காஷ்மீரில் குல்மார்க்கு[99] நகரமாகும். இந்திய ஒருமைப்பாட்டிற்குப் பேராசிரியர் மு.வ.படைத்துத் தந்த புதினம் ‘மண்குடிசை’ எனக்கூறலாம்.

சித்தர்கள் நிறைந்த நாடு இந்திய நாடு. அவர்கள் பெரிதும் இமய (கயிலாய) மலையில் வாழ்ந்ததாகக் கூறுவர். திருமூலர் முதல்

பாரதியார் வரையில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்கள், தாங்கள் சித்தர் மரபில் வந்ததாகக் கூறுவது மரபு.

எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்தநாட்டில்[100]

என்பது பாரதியின் வாய்மொழி.

அச்சித்தர்கள் 'இரசவாதத்தில்' வல்லவர்கள்; கூடுவிட்டுக் கூடு பாயும் கலையில் தேர்ந்தவர்கள்; மரணமிலாப் பெருவாழ்வு கைக்கூடும் என்று நம்பியவர்கள்.[101]

'மண்குடிசையில்' வரும் நரேந்திரரும், மெய்கண்டாரும் புத்துலகச் சித்தர்களாவர்; அவர்களுக்கு அற்புதங்களிலே நம்பிக்கை கிடையாது; இரும்பைப் பொன்னாக்கும் எண்ணமும் இல்லை; மரணமிலாப் பெருவாழ்வை அடைய விரும்பாதவர்கள். ஆனால், இறைவனுடைய படைப்பின் நோக்கத்தை உணர்ந்து, 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல், மதித்துப் போற்றும் பண்பாளர்களாக அவர்கள் விளங்குகின்றனர். அறவோர்களாக வாழும் அவர்களுக்கு 'மனிதரை உருத்தெரியாமல் மாற்றுவது பற்றிய ஆராய்ச்சியில் ஏன் ஆர்வம் உண்டாயிற்று?' என்னும் எண்ணம் எழலாம்.

இந்தக் கேள்வியை அச்சான்றோர்களோடு தங்கி வாழும் பேறு பெற்ற மெய்யப்பனே, பேராசிரியர் நரேந்திரரைக் கேட்கின்றான். அவர்,

> முதலில் இந்த முயற்சியில் மெய்கண்டார்க்கு ஊக்கமே இல்லை. இயற்கையை எதிர்த்து இவ்வளவு தொலைவு நீந்தக்கூடாது என்பது அவருடைய எண்ணம். இயற்கையைப் பயன்படுத்தலாம்; எதிர்க்கக்கூடாது; நெடுங்காலம் எதிர்த்துச் சென்றால், இயற்கை அழித்துவிடும் என்பது அவருடைய கொள்கை. ஆனாலும் இதை மட்டும் செய்து பார்த்து விடுவோம் என்று நான்தான் வற்புறுத்தினேன். அவர் படித்ததும் ரசாயணம். நான் படித்த படிப்பும் அதுவே. இந்த வகையில் ஒற்றுமை இருந்ததால், இதைச் செய்ய முடிந்தது.[102]

என்று தாங்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுகிறார். பிறகு அவர்கள் மெய்யப்பனை உருத்தெரியாத மனிதனாக மாற்றுகின்றனர். ஏழு வாரங்களுக்கு மேல் அவனைச் சொந்த ஊரில், அந்நிலையில் இயங்க விடுகின்றனர். பின்னர், மீண்டும் அவனை 'மனித வடிவு உடையவனாக மாற்றும் சோதனையில்' அவர்கள் வெற்றி பெறுகின்றனர்.

இதற்குப் பிறகு, மெய்யப்பனிடம் பேராசிரியர் நரேந்திரர்.

உலகப்போர்கள் இரண்டு நடந்தன. இரண்டும் கொடுமையான அழிவுகளை ஏற்படுத்தின. அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்திய காரணத்தால், அந்தப் போர்கள் இரண்டும் பெரிய அளவில் நடந்தன. அறிவியல் அறிஞர்கள் அவற்றிற்குத் துணையாக இருந்தார்கள். என் ஆசை இதுதான். ஒரு சிறந்த கருவி கண்டுபிடிக்க வேண்டும். அந்தக் கருவி பட்டால், அப்படியே உணர்ச்சி இழந்து மரமாக நிற்க வேண்டும். அதைக் கொண்டு போர்களுக்குக் காரணமான தொழிற்சாலைகளுக்கும் ஆய்வுக் கூடங்களுக்கும் சென்று, அங்குள்ளவர்களை எல்லாம் அசைவு இல்லாமல் மரமாக நிற்கச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால், அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து அழுவார்கள். அறிவியல் அறிஞர்கள் பொல்லாத கருவிகளைக் கண்டு பிடிக்க முன்வரமாட்டார்கள். அதன் பிறகு அந்தத் தொழில்களைத் தொடர்ந்து செய்ய மாட்டார்கள். போர்கள் அடியோடு தொலையும். இப்படி உலக நன்மைக்கு வேண்டிய கனாக்கண்டு ஆசைப்பட்டேன்.[103]

என்று கூறி, அவ்வாய்வுக்கு முதற்படியாக இந்த உருத்தெரியாமல் மனிதரை மாற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டதைத் தெரிவித்தார். ‘மண்குடிசை’ எனும் இப்புதினத்தின் கதைக்கருவாக, இந்த அறிவியலாய்வு அமைந்திருக்கிறது.

இப்புதினத்தின் தலைவன் மெய்யப்பன். யாரோ செய்த தவறுக்காக, சிறையில் வாடி, பின்னர் அவன் விடுதலை பெறுகிறான்; தன் சொந்த ஊருக்குத் திரும்புகிறான்; அவனுடைய மனைவி ரேவதி அவனைப் புறக்கணிக்கிறாள்; குழந்தைகளையும் அப்பாவிடம் நெருங்கவிடாமல் தடுக்கிறாள். அதனால், வெறுப்படைந்த மெய்யப்பன், தன் பழைய நண்பனான குமரவேலுவின் வீட்டிற்கு நள்ளிரவில் போகிறான்; நண்பன் விடுதலையாகி வந்ததற்கு மகிழும் குமரவேல், அவனுடைய மனைவியின் போக்கை அறிந்து வருந்துகிறான். மறுநாள், தானும் தன் மனைவியும் வட இந்தியாவிற்குப் பயணமாகப் புறப்படப் போவதைக் குமரவேலு சொல்லுகிறான். மெய்யப்பனும் உடன் வருவதாகச் சொல்லி அவர்களோடு வடநாட்டிற்குப் புறப்பட்டு விடுகிறான். காசி, அரித்துவார் முதலிய இடங்களுக்குச் சென்று விட்டு, தில்லியில் அவர்கள் சில நாட்கள் தங்குகின்றனர். அங்குள்ள குமரவேலுடைய நண்பர் ஒருவரின் முயற்சியால், ஆலையில் மெய்யப்பனுக்கு வேலை கிடைக்கிறது. எனவே, அவன் ஊருக்குத் திரும்பாமல், அங்கே வேலையில் சேர்ந்து விடுகிறான். பதினொரு மாதங்கள் முடிவதற்குள், அந்த ஆலையில் வேலை நிறுத்தம் தொடங்கியது; ஆலை மூடப்பட்டது.

இனி, அங்குத் தங்குவதில் பயனில்லை என்பதை உணர்ந்த மெய்யப்பன் காஷ்மீரைப் போய்ப் பார்த்து விட்டுச் சொந்த ஊருக்குத் திரும்பத் திட்டமிட்டான். காஷ்மீரில், பல்காம் நகரில் தனிமையில் அமர்ந்து தாயுமானவர் பாடல்களையும், திருவாசகப் பாடல்களையும் அவன் பாடிக் கொண்டிருந்தான். அதை எதிரே மரத்தடியில் இருந்த சான்றோர் கேட்டு மகிழ்ந்தார்; அவருடைய பெயர் மெய்கண்டார். பேசா நோன்பினரான அப்பெரியர், மெய்யப்பனைக் கைகளையாட்டி அழைத்தார். அவன் அருகில் சென்றான். மறுபடியும் பாடுமாறு அவனுக்குத் தெரிவித்தார். அவன் திருவருட்பாவிலிருந்து சில பாடல்களைப் பாடினான். அவன் வந்திருந்த பேருந்து, திரும்பி விடுமே எனும் அச்சத்தால், அவரிடம் அவன் விடைபெற்றான். மறுநாள் குல்மார்க் எனும் ஊரில் மெய்கண்டாரையும், நரேந்திரரையும் அவன் சந்திக்கின்றான். அவனை, அவர்கள் தங்களோடு அழைத்துச் செல்லுகின்றனர். அங்கு அவர்களுடைய ஆய்வுக்கு உதவியாக அவன் பயன்படுகிறான். அவனுடைய மனித வடிவத்தை மாற்றி உருத்தெரியா மனிதனாக அவர்கள் செய்து விடுகின்றனர். அந்நிலையில் தன்னுடைய ஊருக்குப் போய்வர அவன் விரும்புகிறான். சில நெறிமுறைகளைக் கூறி, ஆறு வாரங்களுக்குள் திரும்பி வருமாறு அவனை அவர்கள் அனுப்பி வைக்கின்றனர்.

சொந்த ஊருக்குச் சென்றவுடனே, அநீதிகளை அடக்குமுறைகளை, சமுதாயக் கொடுமைகளை ஒழிப்பதற்கு மெய்யப்பன் முயலுகிறான். தன் மீது பழியைப் போட்டு, சிறைக்கு அனுப்பிய கேசவராயன் எனும் செல்வருக்கு நல்ல பாடம் கற்பிக்க முயலுகிறான் கேசவராயன் வீட்டில் நுழைந்து, யாருக்கும் புலப்படாமல், அவர்கள் குடும்ப நிலையைக் கண்டறிகிறான்; தன் நண்பன் பாண்டியனுடைய மாமனார் வீட்டிற்குச் சென்று, வாழவிடாமல் வீட்டிலே வைத்திருக்கும் மகளை, கணவன் வீட்டிற்கு அனுப்புமாறு செய்கிறான்; தன் வீட்டிற்குச் சென்று, தன் மனைவி மக்களைப் பார்க்கிறான்; தன் மனைவியின் மனப்போக்கில் மாற்றத்தைக் காணுகின்றான்; பன்னிரண்டு அற்புதச் செயல்களைச் செய்கிறான். அவன் திருடரைப் பயமுறுத்துகிறான்; நீதிமன்றத்தில் பொய்ச்சான்று உரைக்க வருகின்றவர்களைத் தண்டிக்கின்றான். ஊரை ஏமாற்றும் எத்தர்களை, போலி பக்திமான்களை ஊர் சிரிக்க வைக்கின்றான்; கேசவராயனுடைய ஆணவத்தை அழிக்கிறான். கண்ணுக்குப் புலனாகாத சக்தி ஒன்று இவ்வாறு செயல்படுவதைப் புரிந்து கொள்ள இயலாத மக்கள் வெவ்வேறு காரணங்களைக் கற்பித்து, கதைகள் கட்டுகின்றனர்.

உலகக் கொடுமைகளைப் போக்குவதற்கு மக்களைத் திரட்டத் துண்டுப் பிரசுரங்களை அவன் வெளியிடுகிறான். 'பொய்யர், லஞ்சம் வாங்குவோர், செல்வர் செருக்குடையோர், பதவிச் செருக்குடையோர், பொல்லாதவர், ஒழுக்கம் கெட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள்; கடவுள் ஆணையால் அவர்கள் தண்டிக்கப்படுவதை நேரில் காண்பீர்கள்"[104] என்று பொதுமக்களுக்கு அவன் அத்துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவுறுத்துகிறான். இதைக் கண்டு அந்த வட்டாரமே அஞ்சி நடுங்குகிறது. தன் மகள் முன்னிலையில், தாளில் அவன் சில செய்திகளை எழுதுகிறான். தன்னுடைய பேனா தானே எழுதுவதைக் கண்டு, அவள் அதிர்ச்சியடைகிறாள்; நோய்வாய்ப்படுகிறாள்; அதைக்கண்டு அவன் வருந்துகிறான்.

செய்தித்தாள்களில் மெய்யப்பனுடைய அறச்செயல்களைப் பற்றிய செய்திகள் வெளிவருகின்றன; மக்கள் மனத்தில் அறத்தில் நம்பிக்கை உண்டாகிறது. சட்டத்தால் திருத்த முடியாதவர்களை, அற்புத நிகழ்ச்சிகளால் உண்டாகும் அச்சத்தால் திருத்த முடிவதை நினைத்து அவன் சிரிக்கிறான். இதற்குள் ஏழு வாரங்கள் ஆகிவிடுகின்றன. மெய்கண்டாரின் விருப்பத்திற்கு மேல் கூடுதலாக ஒருவாரம் தங்கிவிட்டதை அவன் உணருகிறான். தன் மனைவி திருந்தி வருகிறாள் எனும் மனநிறைவோடு அவன் காஷ்மீருக்குத் திரும்புகிறான்.

அவனுடைய வருகையை எதிர்பார்த்திருந்த பெரியார்கள் இருவரும், அவனை வரவேற்கின்றனர். தங்கள் பரிசோதனைக் களத்திற்குக் கொண்டுபோய், அவனை மனித வடிவினனாக மாற்றுகின்றனர். சில நாட்கள் அங்குத் தங்கி இருக்கின்றான். பிறகு நிதியுதவியோடும், மெய்கண்டார் கொடுக்கும் கடிதத்தோடும் தன் வீட்டிற்கு அவன் வருகிறான்; வரும்பொழுது, தன் வீட்டில் திருடு போனதால் ஒரே கூட்டம் கூடியிருப்பதைக் காணுகின்றான். அவனுடைய மனைவி, அன்போடு வரவேற்கிறாள்; மெய்கண்டாரின் கட்டளைப்படி, முழுநிலா நாளன்று, அவருடைய கடிதத்தைப் படிக்கின்றான். அதிலிருந்து கேசவராயனுடைய மனைவி, மெய்கண்டாரின், அண்ணன் மகள் என்பது தெரிகிறது. அச்சான்றோர்,

உலகத்தைத் திருத்த நம் பங்கு முயற்சி செய்வோம். பண வேட்டையும், புகழ் வேட்டையும் அவற்றால் ஆகிய பலவகை ஏக்கங்களும் கவலைகளும் இல்லாமல் சமுதாயம் சீராக அமைவதற்குரிய வகையில் அறிவை வளர்ப்போம்; அறநெறியைப் பரப்புவோம். உடனே பயன் காண முடியாமல் போகலாம். கவலை வேண்டாம். எதிர்கால நன்மையைக் கருதிக் கடமையைச் செய்வோம். அங்கங்கே நல்ல விதைகளைத் தூவிச்செல்வோம். அதுவும் இயலாத நிலையானால் இயன்றவரையில் நிலத்தைப்

பண்படுத்தி விட்டுச் செல்வோம் அது நம் கடமை; நல்ல கடமையை உணர்ந்து செய்வதே நல்வாழ்க்கை[105]

என்று அறிவுரை கூறுகின்ற முறையில், அக்கடிதம் முடிகிறது. புதினப்படைப்பாளர் மு.வரதராசனார், தமிழ்ச் சமுதாயத்திற்கு வழங்கும் நற்செய்தியாகவும் அது அமைகிறது. மண்குடிசையின் கதைப்பின்னலில் இவ்வாறு பருப்பொருளாகிய மனித வடிவில் தோன்றும் பாத்திரங்களும் கட்புலனாகா நுண்பொருளான உருத்தெரியாப் பாத்திரமும் கலந்து உறவாடுகின்றன.

பாத்திரப் படைப்பில் மெய்யப்பன் மனைவியான ரேவதி, ஒரு பண்போவியமாகக் காட்சி தருகிறாள். நடுத்தர வகுப்பின் கீழ்மட்டப் பிரிவைச் சேர்ந்த, சமுதாய மதிப்பிற்கு முதன்மை கொடுக்கும் பெண்ணாக முதலில் அவள் காட்சித் தருகிறாள்; பட்டறிவால் மனம் திருந்தி, கணவனிடம் அன்பு செலுத்தும் நல்ல பெண்மணியாகப் படிப்படியாக மாற்றமுறுகிறாள்.

கேசவராயனுடைய பாத்திரப் படைப்பு. ‘கொடியவன்’ (Villain) ஒருவனை நம் முன்னே கொண்டு வந்து நிறுத்துவதைப்போன்ற சிறந்த கலைப்படைப்பாகும். ‘கயமை’ எனும் புதினத்தில் இடம்பெறும் ‘கொடியவ’னாகிய ஆணவர், தம் அலுவலகத்திலேயே கொடுங்கோலோச்சுகிறார்; இந்தக் கேசவராயனோ, தன் ஊர் முழுவதையும் அடக்கியாள முயலுகிறான்; கொடுமைகள் பல செய்கிறான்; இறுதியில் ‘அவன் யார்?’ என்பதை உணருகின்றபொழுது, தன் இளைய மாமனாருக்கே – தன் மனைவியின் வளர்ப்புத்தந்தையான மெய்கண்டாருக்கே கொடுமைகள் பல புரிந்தவன் என்பதை அறிகின்றபொழுது – நெஞ்சம் கொதிப்பேறுகிறது. ஆனால் “இறைவனுடைய படைப்பின் நன்மையும் தீமையும் கலந்து தான் இருக்கும்; நல்லவர்களும் தீயவர்களும் வாழத்தான் வேண்டும்; அவர்களுக்கும் சமுதாயத்தில் இடம் உண்டு. நல்லவர்களே விழிப்பாக, நெறியுடன் வாழ முயல வேண்டும்” எனும் கருத்தமைய மெய்கண்டார் வழங்கும் அறிவுரை,[106] இறைவனுடைய படைப்பின் நோக்கத்தை உணர்ந்து, வாழத் தூண்டுகிறது.

சான்றோராக வரும் மெய்கண்டாரின் பெயரே, ஒரு குறியீட்டுப் (Symbolic) பொருளை உணர்த்துகிறது. ‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’[107] என்பது வள்ளுவர் வாய்மொழி, ‘கற்றீண்டு மெய்ப்பொருள் கண்ட’ மெய்யுணர்வாளராக, ‘செம்பொருள் கண்ட’ சான்றோராக, ‘மருள்நீங்கிய மாசறு காட்சிய’ராக, ‘காமம், வெகுளி, மயக்கம்’ நீங்கிய மாசற்றோராக, ‘பிறப்பென்னும் பேதைமை நீங்க’, ‘பேரா இயற்கைப் பெருநிலையை’ அடையத் துடிக்கும் அறவோராக மெய்கண்டார் படைக்கப்பட்டுள்ளார். அவர் ஒரு பண்பாளர்; சான்றாண்மைக்கு ஆழி எனத்தக்க சான்றோர், அவருடைய பாத்திரப்படைப்பில்

வளர்ச்சி நிலைகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், மனிதப் பிறவியில் சமயப் பொதுமையும் சான்றாண்மைச் சிறப்பும், அறிவியல் தெளிவும் ஆன்மிகப் பண்பாடும் வாய்ந்த ஒரு முழுநிறையான மனிதரை (Perfect man) - நல்ல தமிழ் மகனை – பேராசிரியர் மு.வ.மெய்கண்டாராகப் படைத்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில், இயந்திர மயமாக வாழ்க்கை மாறி வரும் இன்னல் நிறைந்த காலத்தில், அமைதியை நாடி, அன்பைப் போற்றி, பண்பைப் பாதுகாத்து வாழ்ந்தால்தான், வாழ்க்கையில் மனிதன் வெற்றி பெற இயலும்; இல்லையென்றால், மனிதனுடைய வாழ்வு அவல வாழ்வாக முடிந்துவிடும் என்பதை எச்சரிக்கை செய்யும் வகையில் பேராசிரியர் மு.வ.இப்பாத்திரத்தைப் படைத்துள்ளார். டாக்டர் மு.வரதராசனார் வருங்காலத் தமிழகத்தில் – இந்தியாவில் – உலகில் – காண விரும்பிய ‘இலட்சியக் குடிமகனே மெய்கண்டார்’ எனக் கூறினால், அது தவறாகாது.

மெய்கண்டார், கிரேக்கப் பேரறிஞன் பிளேட்டோ காண விரும்பிய இலட்சியக் குடிமகனாகிய மெய்யுணர்வாளராகவும், (Contemplative Man), அரிஸ்டாடில் காண விழைந்த பெருந்தகையாளராகவும் (Magnanimous Man), சீனப் பேரறிஞன் கன்பூசியஸ் காணத்துடித்த ஒழுக்க நெறியாளராகவும் (Chun - tse) வேதகால இந்தியர்கள் போற்றிய அறவோராகவும், உபநிடத காலத்திய சனகர் கண்ட தத்துவ ஞானியாகவும், புத்தர் பெருமான் உருவாக்கிய அறநெறியாளராகவும், திருவள்ளுவர் கண்ட சான்றோராகவும், நீட்சே காணத்துடித்த பேராற்றல் உடைய பெருமனிதனாகவும், காந்தியடிகள் காண விரும்பிய அறப்போர் வீரனாக (சத்தியாக்கிரகியாகவும், அரவிந்தர் கண்ட கலையுணர்வு மிக்க கருமயோகியாகவும் காட்சித் தருகிறார். அவரைப் போன்ற மனிதர்கள் தோன்றினால் மண்ணக வாழ்வே, விண்ணக வாழ்வாக மாறிவிடும்; மலர்ந்து விடும் என்பது பேராசிரியருடைய எண்ணமாக இருத்தல் கூடும்.

இத்தகைய சிறப்புமிகு பாத்தரத்திற்கு முன்மாதிரியாக, தமக்குத் தெரிந்தவர்களையே கருத்தில் கொண்டு இப்பாத்திரத்தை மு.வ. படைத்துள்ளதாகத் தோன்றுகிறது. மெய்கண்டார் பேசா நோன்பினர். அவரைப் போன்ற ஒருவர், மு.வ.வின் குருநாதராக விளங்கினார். அவரை மௌனசாமிகள்’ என்றே வட ஆர்க்காட்டு மாவட்ட மக்கள் அறிந்துள்ளனர். அவரைப் பற்றிப் பேராசிரியர் மு.வ.,

> எங்கோ பிறந்தார். எங்கோ வளர்ந்தார். இங்கே கரிகேரியில் (வேலூருக்கு அருகில்) மறைந்தார். அவருடைய பிறப்பு வளர்ப்புப்பற்றி அறிந்தவர் ஒருவரும் இல்லை. “ஊருமிலார் பேருமிலார் உற்றார் பெற்றாருடனே யாருமிலார்” என்று நாம்

சொல்லத்தக்க வகையில் அவருடைய வாழ்க்கை இருந்தது... மௌனசாமி என்று அவரை நாங்கள் குறிப்போம்... தமிழ் படிக்கவும் எழுதவும் தெரிந்திருந்த காரணத்தால் இளமையில் தமிழ்ப் படித்தவர் என்றும், ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றும் (அவரைக்) கருதினோம்.[108]

என்று குறிப்பிட்டுள்ளார். இவை யாவும், மு.வ.அவர்கள் படைத்துள்ள பாத்திரமான மெய்கண்டாருக்குப் பொருந்தும். கதைக்குச் சுவையும் வலிவும் ஊட்டுவதற்காக, மெய்கண்டார், மெய்யப்பனிடம் கொடுத்தனுப்பிய கடிதத்தில், தம்முடைய வாழ்க்கை வரலாற்றின் ஒரு சிறுபகுதியை வெளிப்படுத்தியதாகப் பேராசிரியர் கோடிகாட்டி இருப்பதாகக் கொள்ளலாம். இரண்டாவது உலகப்போரின் பொழுது 'சாது' ஒருவர் சென்னையில் சிறப்புமிகு தமிழறிஞராகத் திகழ்ந்தார். அவரைப் பரஞ்சோதி முனிவர் என்று சுட்டுவர். அவர் இந்திய விடுதலைக்குப் பிறகு, மலேயாவிற்குச் சென்று விட்டார். மு.வ.அவர்களுக்குப் பரஞ்சோதியார் மிக நெருங்கிய நண்பர். அவரிடம், சில யோக நெறிமுறைகளைப் பேராசிரியர் கற்றுக் கொண்டதாகச் சொல்லுவர். அப்பரஞ் சோதியார் சிறந்த தமிழறிஞர்; சைவ சமய நூல்களில் வல்லுநர். தம் சொல்லுக்கும் செயலுக்கும் அதிகமான இடைவெளி இல்லாமல் அவர் வாழ்க்கையை நடத்தினார்.

1966இல், முதலாவது உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடந்தது. அம்மாநாட்டில் கலந்து கொள்வதற்குப் பேராசிரியர் மு.வ.அவர்கள், மலேசியா சென்றிருந்தார். அப்பொழுது, அங்கே துறவி பரஞ்சோதியாரை, சந்தித்து, அவர் அளவளாவினார். அதற்குப் பிறகு, கோலாலம்பூர்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய, தம் மாணவர் டாக்டர் ஈ.சா.விசுவநாதன் அவர்கட்கு எழுதியுள்ள கடிதங்களில் பரஞ்சோதியாரின் யோகதீட்சையின் பயனைப் பற்றி அறிய விரும்புவதாக மு.வ. குறிப்பிட்டுள்ளார்.[109]

இவற்றால் டாக்டர் மு.வரதராசனாருக்குத் துறவி பரஞ் சோதியாரிடத்து, ஒருவகை ஈடுபாடு இருந்து வந்ததை அறிகிறோம். அப்பரஞ்சோதியார் சைவ சமயச் சாத்திரங்களிலும் தோத்திரங்களிலும் கொண்டுள்ள ஈடுபாட்டையும், புலமையையும் மெய்கண்டாரிடம் காணலாம்.

இவற்றிற்கு மேலாக, அறிவியல் அடிப்படையில் சமயத்திற்கும், இறைவனுக்கும் விளக்கம் தருவதில் மெய்கண்டார் தலைசிறந்தவராக விளங்குகிறார். ஐந்து வகை வழிபாடு[110] அறிவியலும் வாழ்க்கையும்,[111] இறைவனுடைய படைப்பின் உட்பொருள்,[112] இறைவனுடைய ஆட்சி[113] பற்றிய மெய்கண்டாரின் கருத்துகள் போன்றவை அனைத்தும், பேராசிரியரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவரும்,

பழைய பஞ்சாப்பு மாநிலத்தில் கணிதப் பேராசிரியராக விளங்கிய வருமான இராமதீர்த்தரின் அறிவுரைகள் ஆகும். இராம தீர்த்தரின் 'கடவுளைக் காண விரும்பும் காட்டில்' (In woods of God Realisation) எனும் நூலின் ஐந்தாவது தொகுதியான 'சமய உணர்வு' (The Spirit of Religion) எனும் நூலில் இத்தகைய எழுச்சிமிகு எண்ணங்கள் நிறைந்து காணப்படுகின்றன.[114] இராமதீர்த்தரின் கொள்கைகளை மெய்கண்டாரின் வாயிலாக உணர்த்துவதற்குரிய காரணத்தைப் பேராசிரியர்,

> தாயுமானவர் பாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு நமக்கு வேண்டியவை. பத்து, இந்தக் காலத்துக் கருத்துக்கு ஒட்டி வருதல் அருமை. இராமதீர்த்தரில் நூற்றுக்குத் தொண்ணூறு நம்மால் போற்றி நடக்க முடியும் பத்து, நம்மைப் போன்றவர்களால் முடியாதவை. பாடுபட்டால், துறவு மனம் வந்தால், அந்தப் பத்தும் முடியும்.[115]

என்று வேறோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளமையால் அறியலாம்.

இவ்வாறு மெய்கண்டார் உடலால் மௌனசாமியாகவும் உள்ளத்தால் பரஞ்சோதி முனிவராகவும், ஆன்மிகச்சிந்தனையால் இராமதீர்த்தராகவும் தோன்றுகிறார்.

பேராசிரியர் மு.வ.வின் 'மண்குடிசை' எனும் இப்புதினத்தை, எச்.ஜி.வெல்சினுடைய 'உருத்தெரியா மனிதன்' எனும் புதினத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்த அறிஞர் ஒருவர், மெய்யப்பனுடைய நோக்கம் உயர்ந்தது ஆகும். அவன், சமுதாயத்தைத் திருத்த வேண்டும்; உலகில் அன்பும் அறமும் தழைக்க வேண்டும்' எனும் விழுமிய நோக்கத்தோடு உருத்தெரியா நிலையில், சில சீர்திருத்தச் செயல்களில் ஈடுபடுகிறான். ஆனால் எச்.ஜி.வெல்சின் படைப்பான கிரிப்பின் (Criffin) மற்றவர்களைக் கொலை செய்வதும், ஊனமாக்குவதும் ஒழுக்கக்கேடான தன்னல உணர்ச்சித் துடிப்பால் செய்வனவாகும். மெய்யப்பனின் செயல்களினால் வன்முறையோ, குருதியைக் கொட்டுதலோ இடம்பெறவில்லை[116] என்று அறிவிக்கிறார்.

இது பேராசிரியர் மு.வ.அவர்களுக்குச் சூட்டப்படும் புகழ் மாலையாகும். இதனால், டாக்டர் மு.வரதராசனார், வாழ்க்கைச் சிக்கல்களைச் சமுதாய நோக்கோடு அணுகினார் என்பது வெளிப்படுகிறது. மற்றும் காந்தியத்தில் நம்பிக்கை கொண்ட மு.வ.

அகிம்சை வழியில், 'கத்தியின்றி, இரத்தமின்றி'ப் புதியதோர் உலகத்தை உருவாக்க விரும்புகிறார் என்பதும் எளிதிற் புலனாகின்றது.

குறிப்புகள்

1. Arnold Kettle (ed.), The Nineteenth - Century Novel, pp.30-31.
2. Rubie Macaulay and George Lanning, (eds), Technique of Fiction, P.186.
3. Miriam Allott, Novelists on the Novel, p.235.
4. R.M.Forster, Aspects of the Novel, pp.116-117.
5. அ.அ.மணவாளன், (மொ.), அரிஸ்டாடிலின் கவிதை இயல், பக்.50.
6. மேற்படி.
7. William Henry Hudson, An Introduction Layto the Study of Literature, p.139.
8. Rubie Macaulay and George Lanning (eds.), op.Cit., pp.190-191.
9. Joseph T.Shipley, Dictionary of World Literary Terms, p.333.
10. Ibid; p.41.
11. Marjorie Boulton, The Anatomy of the Novel, pp.76-78.
12. E.M.Forster, op.cit., p.75
13. Rubie Macaulay and George Lanning, op.cit., p.63.
14. ம.ரா.போ.குருசாமி, மு.வ.முப்பால், பக்.136.
15. பேராசிரியர் செ.யோகசுந்தரம், 12–6–1978 அன்று, இவ்வாய்வாளருக்கு அளித்த நேர்முகப் பேட்டியில் கூறியது.
16. ம.ரா.போ.குருசாமி, முன்.கு.நூல், பக்.137.
17. இரா.மோகன், டாக்டர் மு.வ.வின் நாவல்கள், பக்.3.
18. கள்ளோ? காவியமோ? பக்.XII
19. மேற்படி பக்.xii.
20. மேற்படி, பக்.46, 93.
21. பெற்ற மனம், பக்.148–150; தங்கைக்கு, பக்.64.
22. பேராசிரியர் செ.யோகசுந்தரம் அளித்த பேட்டியில் கூறியது.
23. கள்ளோ? காவியமோ? பக்.147.

24. செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1941, சிலம்பு 19, பரல் 3; பக்.121–126.

25. பாவை, பக்.3.

26. மேற்படி, பக்.3.

27. மேற்படி, பக்.19, 62.

28. பாரி நிலைய உரிமையாளர் திரு.க.அ.செல்லப்பன் அவர்கள், 8–6–1978 அன்று, இவ்வாய்வாளருக்கு வழங்கிய நேர்முகப்பேட்டியில் கூறியது.

29. ம.ரா.போ.குருசாமி, முன்.கு.நூல், பக்.142.

30. தொல்.1224.

31. மலர்விழி, பக்.195.

32. நா.பார்த்தசாரதி, (பதி.), தீபம், மார்ச்சு, 1971; பக்.53.

33. மலர்விழி, பக்.9.

34. V.Sachithanandan, ‘Dr.M.Varadarajan and Somerset Maugham As Novelists: A Sample Study’ in Dr.Mu.Va.(ed.), S.V.subramanina and AA.Manavalan, International Institute of Tamil Studies, Madras, 1975, pp.19-21.

35. வெட்டுவானம் தமிழ் அறிஞர், பெரியவர் திரு.தி.சண்முகசுந்தரம் அவர்கள் 10–6–1968 அன்று இவ்வாய்வாளருக்கு அளித்த நேர்முகப் பேட்டியில் இச்செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்; பேராசிரியர் செ.யோகசுந்தரம் அவர்கள் அளித்த பேட்டியிலும் இதைப்பற்றிய விளக்கம் தந்துள்ளார்.

36. நா.பார்த்தசாரதி (பதி.) முன்.இ.பக்.53.

37. Somerset Maugham, ‘Virtue’, the sixth story in the six storie written in the First Person Singular, London, 1931, pp.102-125.

38. திரைப்பட விளம்பரம்.

39. பேராசிரியர் அன்பு கணபதி அவர்கள், 30–6–1978 அன்று இவ்வாய்வாளருக்கு அளித்த நேர்முகப் பேட்டியில் வெளியிட்ட கருத்து இது.

40. செந்தாமரை, பாவை, மலர்விழி, அல்லி என்னும் நான்கு புதினங்களும் பெண்களின் பெயர்களைக் கொண்டனவாகும்.

41. தேவாரம் அடங்கன் முறை. செ.4815.

42. அல்லி, பக்.118.

43. ம.ரா.போ.குருசாமி, முன்.கு.நூல்., பக்.152.

44. பேராசிரியர் அன்பு கணபதி அவர்கள் அளித்த பேட்டியில் குறிப்பிட்ட செய்தி இது. இதைப்பற்றி இவ்வாய்வாளருக்கும் ஓரளவு தெரியும்.

45. திருமணத்திற்குப் பிறகு (1957) இவ்வாய்வாளரைப் படிக்குமாறு பேராசிரியர் குறிப்பிட்ட சில நூல்கள் இவை. இந்நூல்களைப் பற்றிப் பேசுகின்றபொழுது, " 'அல்லி'யில் உள்ள பாலியல் பற்றிய கருத்துகள் பல, இந்நூல்களில் விளக்கப்பட்டவையே" என்று அவர் சொன்னார். ஆய்வாளரின் நாட்குறிப்பில் 26–9–57ல் குறிக்கப்பட்டுள்ள செய்தி.

காண்க: Dr.Marie Stopes, 1.Change of Life in Men and Women 2/ Enduring Passion, 3. Married Love, 4. Radiant Motherhood.

46. நா.பார்த்தசாரதி (பதி.), முன்.இ.பக்.52.

47. சி.பாலசுப்பிரமணியன், பெருந்தகை மு.வ.,பக்.110.

48. இவ்வாய்வாளர், பேராசிரியரின் மாணவராகப் பச்சையப்பன் கல்லூரியில் கலைஇளவல் (சிறப்பு) வகுப்பில் (1951–1954) படித்துக் கொண்டிருந்தபொழுது, கண்ட காட்சியும் அறிந்த செய்தியுமாகும்.

49. கரித்துண்டு, பக்.226.

50. தொல்.1059.

51. "பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்" (திருக்.54)

என்பது திருவள்ளுவர் கருத்து.

52. பெண்மை வாழ்க, பக்.17–21.

53. மேற்படி, பக்.257.

54. மேற்படி பக்.257.

55. மேற்படி, பக்.232.

56. மேற்படி, பக்.234–235.

57. சிவஞானபோதம் சிற்றுரை, பன்னிரண்டாம் சூத்திரம், முதலதிகரணம்.

சிவஞான சித்தியார், சுபக்கம், சூ.2; அதிகரணம், 3; செய்.170–176.

58. சிவஞான போதம் சிற்றுரை, சூ.2; அதிகரணம் 2; பக்.60;

சூ.4; அதிகரணம் 2; பக்.130

சிவஞான சித்தியார், சுபக்கம், சூ.1; அதிகரணம் 1; செய்.35.

அதிகரணம் 2; செய்.61.

59. கி.பி.பதினேழாம் நூற்றாண்டில், திருவேங்கடநாத ஐயர் இயற்றிய பிரபோத சந்திரோதயம் என்னும் நூலைக் காண்க.

60. ம.ரா.போ.குருசாமி, முன்.கு.நூல், பக்.158.

61. மேற்படி

62. கயமை, பக்.215.

63. மு.வ.வின் கடிதங்கள், பக்.25.

64. இவ்வாய்வாளர், ‘கதை முடிவுறவில்லையே, இரண்டாம் பகுதி யாதாகிலும் வெளிவருமா?’ என்று 1956இல் பேராசிரியரைக் கேட்டார். “வெளியூரிலிருந்து இக்கதையை எழுதிக்கொண்டிருந்தபொழுது திடுமென அதை நிறுத்திவிட்டுச் சென்னைக்கு வரவேண்டிய நெருக்கடி எனக்கு உண்டாயிற்று. பிறகு அதைத் தொடர்ந்து முடிக்கக் கூடிய சூழ்நிலை வாய்க்கவில்லை. ஆனால் வாலாசாபாத் ‘இந்துமத பாடசாலையைப் போன்ற சிறப்புமிகு அமைப்பாக, வடிவு தொடங்கிய குழந்தைகள் காப்பகம் தொடர்ந்து நாடு போற்றும் நன்னிலை அடையும். அந்நிலையில் அந்தக் காப்பகத்தில் அறவாழி தலைமையில் ‘கண்ணழகன் அன்பரசி’யின் திருமணம் நடப்பதாக முடிக்க நினைத்திருந்தேன்” என்று பேராசிரியர் தெரிவித்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

65. நெஞ்சில் ஒரு முள், பக்.436.

66. மேற்படி, பக்.399.

67. வடிவின் தாய்தந்தையர், அருளப்பரின் தந்தை மாணிக்கவாசகம் போன்றோர் பாட்டனார் நிலையில் காணப்படும் மூத்த தலைமுறையினர் ஆவர். இதைப் போன்றனவே விஜயா அம்மையாரின் பெற்றோர்களைப் பற்றிய செய்திகளுமாகும்.

வடிவு – அகோர், பலராமன் – அன்பரசியின் தாய் ஆகியோர் இடைப்பட்ட தலைமுறையினர். விஜயா அம்மையார் மூத்த தலைமுறையில் கன்னிப்பெண்; இத்தலைமுறையில்

கணவனை இழந்தவள். அவளுடைய பெண்கள் கிந்திரா, சந்திரா போன்றோர் வடிவின் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இத்தலைமுறையினருடைய காலத்தைச் சேர்ந்தவர் டாக்டர் அல்லி, பரமேஸ்வரி போன்றோர்.

இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் கண்ணழகன் – அன்பரசி எனும் காதலர், திருமலை, பரிமளம், கிந்திராவின் மகள் கீதா முதலியோராவர். இந்த மூன்று தலைமுறைகளையும் கண்ட (முதல் தலைமுறையில் தோன்றி, இரண்டாம் தலைமுறையில் பணிபுரிந்து, மூன்றாம் தலைமுறையில் ஓய்வு பெற்ற) 'பீஷ்மராக' அறிஞர் அறவாழி வாழ்ந்து வருவதாகப் படைக்கப்பட்டுள்ளார்.

68. நெஞ்சில் ஒருமுள், பக்.470.

69. மேற்படி, பக்.248, 322.

70. மேற்படி, பக்.25.

71. மேற்படி, பக்.323.

72. மேற்படி, பக்.536.

73. T.P.Meenakshisundaran, A History of Tamil Literature, p.183.

74. மு.வரதராசனார், அந்த நாள், பக்.107.

75. மேற்படி, நெஞ்சில் ஒரு முள், பக்.315.

76. மேற்படி, வாடாமலர், பக்.221–225.

77. மேற்படி, அகல்விளக்கு, பக்.269, 274, கயமை, பக்.231.

78. மேற்படி, நெஞ்சில் ஒரு முள், பக்.443.

79. மேற்படி, பக்.335.

80. மேற்படி, பக்.320.

81. திருமதி. ராதா வரதராசனார் ஆய்வாளரிடம் 1955இல் தெரிவித்த செய்தி.

82. A.W.England, Man and Superman, A Study, pp.16-17; Leon Hugo, Bernardshaw, Play wright and Preacher, pp.233-234.

83. Somerset Maugham, The Summing Up, p.120.

Richard Cordell, Somerset Maugham, A Biographical and Critical Study, p.93.

84. Laurence Brander, Somerset Maugham, A Guide, p.35.

85. Rubie Macaulay and George Lanning, op.cit., pp.102-103.

86. Wayne C.Booth, The Rhetoric of Fiction, p.20.

87. மு.வரதராசன், அகல்விளக்கு, பக்.407-408.

88. மேற்படி, பக்.127, 143.

89. சி.பாலசுப்பிரமணியன், பெருந்தகை மு.வ., பக்.112.

90. தி.பாக்கியமுத்து (பதி.), விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், பக்.38.

91. மு.வரதராசன், வாடாமலர், பக்.342.

92. மேற்படி பக்.344.

93. மண்குடிசை, குறிப்பு.

94. மேற்படி "

95. H.G,Wells, The Time Machine, The Island of Dr.Moreau, The Invisible Man, The First Men in the Moon, The Food of the Gods, In the Days of the Comet, The War of the Worlds (in one Volume), Heinemann / Octopus, London:1977.

96. J.Buchanan Brown (ed.), cassel's Encyclopaedia of World Literature, Vol.I, p.525.

97. சி.சுப்பிரமணிய பாரதி, குயில்பாட்டு, 1, 23-25.

98. மு.வ.வின் புதினங்களுள் கடைசியாக வெளிவந்தது மண்குடிசை எனும் புதினமாகும். ஆனால் டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் (பெருந்தகை மு.வ., பக்.113) "மு.வ. எழுதிய இறுதி நாவல் 'வாடாமலர்' ஆகும்" என்று கருதுகிறார். இவருக்கு முன்னர், 'டாக்டர் மு.வ.வின் நாவல்கள்' (பக்.24) எனும் நூலில் இதே கருத்தினை இரா.மோகன் தெரிவித்துள்ளார். ஆனால் மண்குடிசையின் முன்னுரைப் பகுதியாகிய 'குறிப்பினை' நோக்குகின்றபொழுது, அந்நூலுக்கு ஆசிரியர் எழுதியுள்ள குறிப்புரை 7-10-1969இல் வரையப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் வாடாமலரில் முதற்பதிப்பு, மார்ச்சு 1969 அளவில் வெளிவந்துள்ளமை வாடாமலரின் முதற்பதிப்பால் அறியப்படுகிறது. எனவே, மண்குடிசையைப் பேராசிரியரின் கடைசிப் புதினமாகக் கொள்ளுவதே பொருந்தும்.

99. மு.வரதராசனார், மண்குடிசை, பக்.144.

100. திருமந்.100, 125;

சி.சுப்பிரமணிய பாரதி, பாரதி நூல்கள், கவிதை, பக்.323.

101. திரு.வி.கலியாணசுந்தரனார், சித்தமார்க்கம், பக்.21.

A.V.Subramania Aiyar, The Poetry and Philosophy of the Tamil Siddhars, pp.12-16.

102. மண்குடிசை, பக்.209.

103. மேற்படி, பக்.410–411.

104. மேற்படி, பக்.347–348.

105. மேற்படி, பக்.477–478.

106. மேற்படி, பக்.476–477.

107. திருக்குறள், 350.

108. மு.வரதராசன், 'ஒரு பெரிய வாழ்க்கை', தினமணி, சித்திரைச் சிறப்பு மலர் (14–4–1967), பக்.6.

109. ஈ.சா.விசுவநாதன், மு.வ.வின் கடிதங்கள், பக்.52–54.

110. மண்குடிசை, பக்.217.

111. மேற்படி, பக்.211–212.

112. மேற்படி, பக்.405.

113. மேற்படி, பக்.406.

114. Swami Ramatirtha, In Woods of God Realisation, Vol.V., The Spirit of Religion, pp.261-262; 265; 310; 346.

115. கயமை, பக்.268.

116. V.Sachithanandan, 'H.G.Wells' 'The Invisible Man' and Mr.Varadarajan's Mankuticaid: A Thematic Comparison, in the Journal of Tamil Studies, No.12: p.93.

இயல் - 5
புனைகதைகளின் நோக்கும் போக்கும்

பேராசிரியர் மு.வரதராசனாருடைய புதினங்களின் வடிவும், வனப்பும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கண்டோம். அவற்றின் கதைக்கருவும், கதைப்பின்னலும் (கதைக்கோப்பு) எவ்வாறு இணைந்தும் இழைந்தும் விளங்குகின்றன என்பதையும் பார்த்தோம். இவற்றையடுத்து, புதினங்களின் முதுகெலும்பான கதை மாந்தர்களின் பண்புகள் விளக்கப்பட்டன.

புனைகதைகள்

மேற்கண்ட கலைத்திறன்கள் இடம்பெறாத, புதினத்திற்குச் சுவையூட்டும் கதைக்கூறு இடம்பெறாத, புதினத்திற்குப் பொலிவூட்டும் எடுத்துரைக்குந்திறன் சிறப்பாக அமையாத இரண்டு புனைகதைகள் பேராசிரியர் மு.வரதராசனாரால் படைக்கப்பட்டுள்ளன. அவை 'கி.பி.2000', 'பழியும் பாவமும்' என்பன.

அவற்றில் புதினங்களுக்குரிய கதைக்கருவோ, நிகழ்ச்சிச் சிக்கலோ, சிறப்புமிகு பாத்திரப்படைப்போ, அழகிய கட்டுக்கோப்போ அமையவில்லை. ஆனால், ஆசிரியரின் கற்பனைத்திறம் இங்குமங்கும் பளிச்சிடுகிறது. எனினும், அது கதை நுகர்வுக்கு - இலக்கிய இன்பத்தைச் சுவைப்பதற்கு - உறுதுணையாக அமையவில்லை. இயைபுக் கற்பனை (Associative Imagination), படைப்புக் கற்பனை (Creative Imagination), கருத்து விளக்கக் கற்பனை (Interpretative Imagination) எனும் மூவகைக் கற்பனைத்திறன்களுள்[1] மூன்றாவதான கருத்து விளக்கக் கற்பனைத்திறனே அவற்றில் தனியாட்சி செலுத்துகிறது. எனவே, அவற்றில் ஆர்வம் ஊட்டும் திறனோ, கற்பனையுணர்வைத் தூண்டுந்திறனோ, கலையழகின் மகிழ்வூட்டும் ஆற்றலோ இடம் பெறவில்லை. இவை யாவற்றையும் விட, கதையைச் சொல்லுவது புதினத்தின் தலைமைப் பண்பு என்பதைக் கண்டோம். அப்பண்பு, மருந்துக்குக் கூட இந்நூல்களில் காண இயலவில்லை. இக்காரணங்களால் அவற்றைப் 'புனைகதை' எனப் போற்றுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

14. கி.பி.2000

(1947)

புத்துலகச் சிந்தனை

தீவிரமான சமுதாயப் பார்வை உடையவராக மு.வ. விளங்கினார். மக்கள் 'மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு இன்றைய சமுதாயத்தில் உண்டாகும் இடையூறுகள் எண்ணற்றனவாக உள்ளன. அவற்றை எதிர்த்துப் போராடும் ஆற்றல் உடையவர் சிலராகவே உள்ளனர். பலர் அவற்றின் கொடுமைக்கு ஆளாகி, பிழைக்கும் வழி தெரியாமல் அல்லற்பட்டு, ஆற்றாது, அழுது, கண்ணீர் வடிக்கின்றனர். பசியும் பஞ்சமும், நோயும் நொடியும், கொலையும் கொடுமையும் சமுதாயத்தைச் சீரழிக்கின்றன. இதனால், 'மனிதம்' எனும் மலர், ஆதிக்கவாதிகளின் அட்டூழியங்களால் வாடி, வதங்கி, உலர்ந்து, உதிர்ந்து போகின்றது. இதைக் கண்டு மனம் கொதிக்கும் கவிஞர்கள், "புதியதோர் உலகு செய்வோம்! மிகப் போரிடும் இவ்வுலகினை வேரொடு சாய்ப்போம்!" என்று முழங்குகின்றனர். சிந்தனையாளர்கள். ஆழ்ந்து சிந்தித்துப் புதிய சமுதாயத்தை உருவாக்க, வழிவகைகள் என்ன என்பதை எடுத்துரைக்கின்றனர்.

> நம்பிக்கையும் தெளிவும் பெற்று உணர்ந்து எண்ணத் தொடங்கிவிட்டால், படிப்படியாக உலகம் சீர்ப்படுவது உறுதி. எண்ணமே வாழ்வு. எண்ணம் சீர்ப்பட்டால் உலகம் சீர்ப்படுவது திண்ணம். ஒருவர் இருவர் எண்ணிப் பயன் இல்லை. மக்கள் பெரும்பாலோர் எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும் நாள் என்று வருமோ, அன்றே புத்துலகம் பிறந்துவிடும்.[2]

என்று புத்துலகை உருவாக்க, பெரும்பாலோர் உண்மையான உணர்வுடையவர்களாக எண்ணுமாறு அவர் வேண்டுகிறார்.

இவ்வாறு அறிஞர் சிலர் எண்ணிய எண்ணங்களே, 'புதிய உலகம்' பற்றிய நூல்களாக வடிவம் பெறுகின்றன. அப்புதிய உலகைக் 'கற்பனை உலகம்' அல்லது 'இலட்சியபுரி' எனக் குறிப்பிடலாம். ஆங்கிலத்தில், அதனை, 'உடோபியா' (Utopia) எனச் சுட்டுவர். இத்தகைய புத்துலகைப் பற்றிய கற்பனை நூல்களை, 'கற்பனையுலக இலக்கியம்' (Utopian Literature) என்பர்.

'எங்குமே இல்லாதது' எனும் பொருளுடைய 'உடோபியா' எனும் சொல்லை, வருங்கால உலகில், புதியதாக உருவாகக்கூடிய, 'புத்துலக அமைப்பைக் குறிக்கும் கலைச்சொல்லாக அறிஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.[3]

கற்பனையுலகம் பற்றிய உணர்வு

'கற்பனையுலகம்' பற்றிய நூல்களை இலக்கிய உலகில் தோன்றும் தனிப்பிறவிகளாக – விந்தைப் பொருள்களாகப் பலர் நினைக்கின்றனர். புனைகதையாக அது வளர்ச்சியுற்றமைக்கு, மனித உள்ளத்தில் நெடுங்காலமாக உறைந்து கிடக்கும் தொன்மப் (Myth) படைப்பு உணர்வே காரணம் என்பர்.[4] இவ்வுணர்வு பல தலைமுறைகளாக வளர்ச்சியுற்று, 'கற்பனையுலகப் புனைகதை'யாக வடிவெடுத்துள்ளது எனும் கருத்து, இங்குச் சிந்திக்கத்தக்கதாகும். இக் 'கற்பனைப் புனைகதைகள்', கருத்து விளக்கப் புதினங்களைப் போன்றே காணப்படுகின்றன.

இருவகைக் கற்பனையுலகக் கதைகள்

கற்பனையுலகப் புனைகதைகளை, இருவகையாகப் பாகுபாடு செய்வர். 'கூர்தலறக் கற்பனையுலகப்' புனைகதைகள் (Evolutionary Utopias) எனவும், 'சமுதாயப் புத்தமைப்புக் கற்பனையுலகப் புனைகதைகள், (Utopias of Social Reconstruction) எனவும் வகைப்படுத்துவர்.[5] 'சந்திரனில் முதன் மனிதர்கள்' எனும் எச்.ஜி.வெல்சின் புனைகதை, 'கூர்தலறக் கற்பனையுலகப் புனைகதை' யாகும். நெடுங்காலமாக வளர்ந்து வரும் அறிவியல் சிந்தனை, படிப்படியாக உயர்ந்து சிறந்ததன் பயனாக, மனிதன் விண்வெளி ஆராய்ச்சியில் வெற்றி பெறுகிறான். மனிதன் சந்திரனில் காலெடுத்து வைப்பதாகச் சென்ற நூற்றாண்டின் இறுதியில் எய்ச்.ஜி.வெல்சு கனவு கண்டார். அக்கனவு, 'கற்பனைப் புதினமாக' வடிவெடுத்தது. அக்கனவு வெறுங்கற்பனை அன்று என்பதை இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில், அறிவியல் அறிஞர்கள் மனிதனைச் சந்திர மண்டலத்திற்கு அனுப்பி, மெய்ப்பித்தனர். இதைப்போன்ற படிப்படியான அறிவியல் வளர்ச்சியால் உண்டாகும் புதுவகையான சாதனைகளைச் சித்திரிப்பதையே, 'கூர்தலறக் கற்பனையுலகப்' புனைகதையாகப் போற்றுகின்றனர்.

பேராசிரியர் மு.வரதராசனாருடைய 'கி.பி.2000' சமுதாயப் புத்தமைப்புக் கற்பனையுலகப் புனைகதைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இவ்வகைப் புனைகதையை, 'அறிவியல் – சமயச் சார்புடைக் கற்பனையுலகக் கதை' எனவும், 'கற்பனையுலக சோசலிசம்' எனவும் இருவகையாகப் பாகுபடுத்துவதும் உண்டு.[6] இவற்றுள் 'கி.பி.2000' இரண்டாவது வகையைச் சேர்ந்ததாகும்.

தமிழில் கற்பனையுலகச் சிந்தனை

திருவள்ளுவர் கண்ட 'நாடு'ம், கம்பன் கண்ட 'கோசலமும்' புதிய சமுதாயத்தைப் பற்றிய சிந்தனையோட்டமாகக் காணப்படுகின்றன. காப்பியங்களிலும் புராணங்களிலும் இடம்பெற்றுள்ள 'நாட்டுப் படலம்' 'நகரப் படலம்' போன்றவை அறவியல் – சமயச் சார்புடையன. 'சுவர்க்கத்தைப்' பற்றிய விளக்கங்கள் கூடப் பேரளவிற்கு இத்தகைய கற்பனையுலகக் கதையாகவே தோன்றுகின்றன. அண்ணல் காந்தியடிகள், இந்தியாவில் மீண்டும் 'இராமராச்சியத்தை' நிறுவப் போவதாக அறிவுறுத்தி வந்தார். அந்த 'இராம இராச்சியமும்' ஒருவகை அறவியல் – சமயச் சார்புடைய கற்பனையுலகமாகவே காட்சி தருகிறது.[7]

பாரதியாரின் 'கற்பனையூர்' எனும் கவிதை, ஓரளவிற்குச் சமுதாயப் புத்தமைப்புக் கற்பனை யுலகையே சொல்லோவியமாகக் காட்டுகிறது. பேராசிரியர் மு.வ.அவர்கள் கி.பி. 2000'த்தைப் படைத்த அதே காலகட்டத்தில் வ.ரா.வின் 'கோதைத்தீவு' வெளிவந்தது. இது பெண்ணுரிமை வேட்கையை வெளிப்படுத்தும் கற்பனை உலகக் கதையாகும்.[7அ] இது, கிரேக்க அறிஞன் அரிஸ்தோபனீசுடைய (Aristophanes), 'எக்லிசியாசுசே' (Ecclecizusac) எனும் பெண்ணுரிமை பற்றிய கற்பனையுலகக் கதையைத் தழுவியதாகும்.

அதே காலத்தில், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, 'மோகினித்தீவு' எனும் புனைகதையைப் படைத்தார்.[8] ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற, ஒரு வரலாற்று நிகழ்ச்சிபோல 'மோகினித்தீவை', கல்கி படைத்துள்ளார். இவ்விருவகைக் கற்பனையுலகக் கதைகளின் நோக்கும் போக்கும் வெவ்வேறானவை. "நம் நாட்டுப் பெண்களுக்கு நாம் உரிமைகள் வழங்க மறுக்கிறோம். கோதைத் தீவில் வாழும் பெண்களோ 'ஆண்களோ சரிநிகர் சமானமாக' வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய உரிமைகளைப் பெண்களுக்கு நாம் வழங்கினால், பெண்ணினம் முன்னேறும் அல்லவா?"[9] எனும் வகையில் சிந்தனையை வ.ரா. தூண்டுகிறார்; புதியதோர் சமுதாய அமைப்பை உருவாக்கிக் காட்டுகிறார்.

கல்கியின் 'மோகினித் தீவு', 'அந்தக் காலம் பொற்காலம், அத்தகைய பொற்காலத்தைத் திரும்பவும் உருவாக்க முயலுவோம்' எனும் கருத்தை வலியுறுத்துகிறது.[10] இந்தியப் புராணங்கள் கூறும் நால்வகை யுகங்களில், முதலாவதாகக் கருதப்படும் கிரேதாயுகத்தைப் பொற்காலமாகப் போற்றுவது மரபு. இதனால்தான், 'சார் மன்னன் சடசடவெனச் சரிந்து வீழ்ந்தான்' என்று ருஷியப் புரட்சியைப் போற்றிப்பாடும் சுப்பிரமணிய பாரதியார், 'புதிய உலகத் தோற்றத்தைக்' குறிப்பிடும் பொழுது, 'கிருதயுகம் எழுக மாதோ!'[11]

எனக் குறிப்பிடுகிறார். இங்குக் கடந்த காலத்திய கிருதயுகமே, புதிய புரட்சி உலகமாகப் புத்துயிர் பெற்று வர வேண்டுமென்று அவர் நினைப்பதைக் காணலாம். இவ்வாறு பின்னோக்கிச் சென்று, எப்பொழுதோ இருந்ததாக நம்பப்படும் 'பொற்காலம்' மீண்டும் தோன்ற வேண்டும் எனக் கருதுவது, 'அந்த நாளும் வந்திடாதோ!' என ஏங்குவது, தன்னம்பிக்கை குறைந்த நிலையில், இந்த உலகத் துன்பத்தை மறக்க முயலும் மனப்போக்கால் தோன்றுவது.

வ.ரா.வின் 'கோதைத்தீவு' முற்போக்கு எண்ணம் கொண்ட எழுச்சிமிகு சமுதாயத்தைப் படைக்க முனைவது' பேராசிரியர் மு.வரதராசனாரின் 'கி.பி.2000', 'புதியதோர் உலகை எப்படிப் படைப்பது? அந்தப் புதிய சமுதாயத்தை எப்படி அமைக்க வேண்டும்? அதனை நிருவகிப்பதற்குரிய நெறிமுறைகள் யாவை?' என்பன போன்ற நடைமுறைச் சிக்கல்களையெல்லாம் சீர்தூக்கி, ஆராய்ந்து, ஒரு புத்துலக அமைப்புத் திட்டத்தைத் தருகிறது. வீட்டைக் கட்டுவதற்கு முன்னால், 'வீட்டின் அமைப்பு எப்படி இருக்க வேண்டும்? நமக்குத் தேவைப்படும் அறைகள் எத்தனை? அவை எவ்வாறு அமைந்தால் நமக்குப் பயனுடையனவாக இருக்கும்?' என்பனவற்றை எண்ணிப்பார்த்து, கட்டடக் கலைஞரைக் கலந்து சிந்தித்து வரைபடம் (Plan) தயாரிப்பதைப் போன்று, மு.வ.அவர்கள், 'கி.பி.2000த்தைப் படைத்துள்ளார்.

மனித சமுதாயத்தினிடத்து நம்பிக்கையும், எதிர்காலம் கடந்தகாலத்தைவிட நன்றாக – சிறப்பாக – அமையும் எனும் எண்ணமும் உடையவர்களே, இத்தகைய கற்பனையுலகக் கதைகளைப் படைக்கின்றனர். புதிய சமுதாயச் சிற்பியான மு.வரதராசனார், இத்தகைய முற்போக்கு எண்ணங்கொண்டவராவர். அதனால்தான், 'சங்ககாலமே பொற்காலம்' எனக் கருதி, 'அத்தகைய சமுதாயமே எதிர்காலத் தமிழகத்தில் உருவாக வேண்டும்' எனும் எண்ணத்தின் அடிப்படையில் அவர் 'கி.பி.2000'த்தைப் படைக்கவில்லை.

பொதுவாகப் 'பொற்காலமே' ஒரு தொன்மையப் படைப்பு (Mythological Creation) ஆகும்; புத்துலகம் ஒரு சிந்தனைத் திட்டம். இரண்டும் மனிதனுடைய விழைவார்ந்த கற்பனையின் அடிப்படையில் எழுவன. ஆனால், பொற்காலம் மனித சிந்தனையைப் பின்னோக்கி இழுத்துச் செல்லுகிறது; மயக்கும் வெறியூட்டுகிறது; கற்பனை யுலகமோ புதிய உலகைக் காண, முன்னோக்கி அழைத்துச் செல்லுகிறது; தன்னம்பிக்கையோடு செயல்படத் தூண்டுகிறது.[12] இவ்வகையில் பேராசிரியர் மு.வ.வின், 'கி.பி.2000' புதிய உலகைக் காண, நம்மை முன்னோக்கி நடக்குமாறு நமக்கு முன்னே வழிகாட்டிச் செல்லுகிறது.

கற்பனையுலகச் சிந்தனையின் வரலாறு

மேற்கு நாட்டுக் கல்வியின் பயனாகக் கிடைத்த இலக்கிய வகைகளுள், இந்தக் கற்பனையுலகப் புனைகதையும் ஒன்றாகும். சமயச் சார்பற்ற நிலையில் கிரேக்க நாட்டுப் பேரறிவாளன் பிளேட்டோ (கி.மு.427–347), 'புதியதோர் உலகைப் படைக்க விரும்பினார். அவ்விருப்பத்தைக் 'குடியரசு' (Republic) என்னும் தம் நூலின் வாயிலாக, அவர் உலகிற்கு உணர்த்தினார். அவருடைய காலத்தில் வாழ்ந்த (கி.மு.444–385) அரிஸ்தோபனிசு, 'எக்லிசியாசுசே' எனும் கற்பனையுலகைப் படைத்துள்ளார். சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னர், இங்கிலாந்தில் வாழ்ந்தவர் சர் தாமஸ் மூர் (கி.பி.1478–1536). அவர் 'பொதுவுடைமைப் பொது நல நாடு' ஒன்றைப் பற்றிக் கனவு கண்டார். அந்நாட்டிற்கு 'உடோபியா' (Utopia) என்று அவர் பெயரிட்டார். பிற்காலத்தில், புதிய உலகைப் பற்றிய கனவைக் குறிக்கும் சொல்லாக, இச்சொல் பெருவழக்கிற்கு வந்துள்ளது.

அவருக்குப் பிறகு, பலர் இத்தகைய இலக்கியப் படைப்பில் மேற்கு நாடுகளில் ஈடுபட்டனர். அப்படைப்புகளில், தோமசோ கேம்பனெல்லா (Tommaso Campanella) படைத்த 'சூரியனுடைய நகரம்' (Civitas Solis) எனும் நூலும் (1623), பிரான்சிசு பேகன் படைத்த 'புதிய அட்லாண்டிஸ்' (New Atlantis) எனும் நூலும், (1627) சாமூவல் பட்லர் இயற்றிய 'எரிவோன்' (Erewhon) எனும் நூலும் (1872), எட்வர்ட் பெல்லாமி (Edward Bellamy) யின், 'பின்நோக்கிப் பார்த்தல்' (Looking Backward) எனும் நூலும் (1888), வில்லியம் மாரிசின் (William Morris) 'எவ்விடத்துமின்றி வரும் செய்திகள்' (News from No where) எனும் நூலும் (1890) சிறப்பு மிக்கன.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எய்ச்.ஜி.வெல்சு, 'ஒரு புதிய கற்பனையுலகம்' (A Modern Utopia) எனும் நூலினை (1905) வெளியிட்டார். இதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே 'கால இயந்திரம்' (The Time Machine) எனும் கற்பனையுலகக் கதையினை அவர் வெளியிட்டுள்ளார். இவ்விரு நூல்களும் அறிவியல் வளர்ச்சியால், உலகிற்குக் கிடைத்துள்ள அரும்பெரும் நன்மைகளை மையமாகக் கொண்டு, கற்பனை செய்யப்பட்டனவாகும். இவ்விரு நூல்களின் தாக்கம், ஓரளவிற்கு மு.வரதராசனாருடைய 'கி.பி.2000' எனும் நூலில் காணப்படுகிறது.

உலகிலேயே முதன்முதலாக, உலக அரசு (World State) எனும் கோட்பாட்டை எய்ச்.ஜி.வெல்சு, தம்முடைய 'ஒரு புதிய கற்பனை உலகம்' எனும் நூலில் வெளியிட்டுள்ளார். மற்றும், அனைத்துலக ஆட்சியமைப்பு (International Government), மையக் குவிமுக ஆட்சி

(Central Bureaucracy), அரசுடைமையாக்கப்பட்ட நிலம், முதலீடு, தொழிற்சாலைகள், மக்கள்தொகைக் கட்டுப்பாடு போன்ற, உலகிற்குப் புதுமையான செய்திகள் பலவற்றை, அவர் முதன்முதலாக விளக்கியுள்ளார். இத்தகைய அமைப்புகளாலும், செயல்களாலும் அந்தப் 'புதிய உலகம்' போரற்ற அமைதியுலகாக விளங்கும் என்பதை, அவர் எடுத்துரைத்துள்ளார். அப்புதிய உலகில் ஆட்சிப் பொறுப்பேற்பார். 'சாமுராய்' எனப்படும் பெருந்தகையாளராவார்; தாங்களாகவே பொறுப்பு ஏற்பர்; சுரண்டலிலும் கொடுஞ் செயல்களிலும் ஈடுபடாமல், 'உலகக் குடியரசை'ச் சிறப்பாக ஆட்சி புரிவர் என்பதும் எய்ச். ஜி. வெல்சின் கருத்தாகும். இச்சிறப்பு இயல்புகளுள் 'உலக அரசு'[13] 'அனைத்துலக ஆட்சியமைப்பு'[14] அரசுடைமையாக்கப்பட்ட நிலம், முதலீடு, தொழிற்சாலைகள்[15] போன்ற புத்துலகக் கூறுகளும், ஆட்சிப் பொறுப்பை ஏற்போரின் தகுதி, திறமைகள் பற்றிய செய்திகளும்[16] சிற்சில மாற்றங்களோடு, கி.பி.2000த்தில் இடம்பெற்றுள்ளன.

ஆல்டவுஸ் அக்சிலியின் 'துணிவுமிகு புது உலகம்' (Brave New World) எனும் நூலும் (1932), 'துணிவுமிகு புது உலகிற்கு மறுமுறை செல்லுதல்' (Brave New World - Revisited) எனும் நூலும் (1965), 'தீவு' (Island) எனும் நூலும் (1962) கற்பனையுலகைப் பற்றியனவே ஆகும். 'துணிவுமிகு புது உலக'த்தில் காணப்படும் மக்களாட்சி, கொடுங்கோன்மை மக்கள் மனத்தை மாற்றுதல், சமுதாயத்தில் பிரச்சாரம், உரிமை வாழ்விற்குத் தேவையான கல்வி போன்ற செய்திகளுள், மக்களாட்சி, புதிய கல்வி முறை முதலியன' கி.பி.2000த்தில் விளக்கம் பெற்றுள்ளன.[17]

இவை யாவற்றையும் விட, டாக்டர் மு.வரதராசனாரைக் கவர்ந்த கற்பனையுலகைப் பற்றிய நூல் ஒன்று உண்டு. அது பெர்னாட்ஷாவினால் இயற்றப்பட்ட நாடகமாகும்.[18] 'மெதுசெலாவிற்குத் திரும்புதல்' (Back to Methuselah) எனும் நாடகம், ஆதாமும் ஏவாளும், இயற்கையோடு இயற்கையாக 'ஈடன்' (Eden) இன்பப் பூங்காவில் வாழ்ந்தது முதல், கி.பி.3000த்தில் மனிதர் எவ்வாறு வாழ்வார்கள் என்பதும், கி.பி.31920–இல் எவ்வாறு வாழ்வார்கள் என்பதும் போன்ற, கற்பனையில் எழும் தீவிர நினைவோட்டங்களைக் கொண்டதுமாகும். (1923) மனிதன் நெடுங்காலம் வாழக் கற்றால்தான், மனித வாழ்கை சிறப்பாக அமைய இயலும் என்பதே இந்த நாடகத்தின் மையக் கருத்தாகும். இந்நாடகத்தில் இடம்பெறும் சோசலிச சமுதாய அமைப்பைப் பற்றிய கருத்து மட்டும்தான் மு.வ.வின் 'கி.பி.2000'த்தில் இடம்பெற்றுள்ளது.

பேராசிரியர் மு.வ. அவர்கள், கி.பி.2000த்தைப் படைத்த காலத்தில் (1947), ஜார்ஜ் ஆர்வெல்சு (George Or Wells) என்பர் '1984'

எனும் கற்பனையுலகு பற்றிய புனைகதையைப் படைத்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவையாவும், சமுதாயப் புத்தமைப்பைப் பற்றிய சிந்தனைகளையே வெளிப்படுத்துகின்றன. ஓரளவிற்குச் சமுதாய குறிக்கோளியலை இவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனினும், இவை சமுதாய நோய்களுக்குத் தேவையான மருந்துகளை அளிக்கின்றன; அஞ்சாமை உணர்வை ஊட்டுகின்றன; சமவுடைமைச் சமுதாயத்தைக் காண உதவுகின்றன; மானிடப் பயன்மதிப்புகளுக்குப் (Human Values) புதிய சூழ்நிலைக்கேற்ப புது வாழ்வு அளிக்கின்றன.

மு.வ.கண்ட கற்பனை உலகம்

பேராசிரியர் மு.வ.அவர்கள் 'புதியதோர் உலகை'க் காண விரும்பியதற்குரிய உந்துதல் சக்திகள் பல. எழுத்தாளராக அவர் மலர்ச்சியுறத் தொடங்கிய காலத்தின் இந்திய அரசியல், சமூக, பொருளாதார சூழல்களே அச்சக்திகளாகும். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டு, அடிமை நாடாய் இந்தியா விளங்கியது. அவ்வடிமைத்தளையை உடைத்து எறிய இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில், வாழ்க்கையைத் தொடங்கியவர் மு.வ.என்பதை முன்னரே கண்டோம். அவ்விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை, அவர் 1947இல் இந்திய விடுதலையாகக் கண்டார். 'விடுதலை பெற்ற இந்தியா, எதிர்காலத்தில் எவ்வாறு விளங்க வேண்டும்?' என்பதைப் பற்றி இலக்கியப் படைப்பாளரான மு.வ.அவர்கள், எண்ணிய எண்ணங்களின் திரண்ட வடிவமே 'கி.பி.2000' எனும் நூலாகும். கி.பி.2000த்தில் இந்தியா மட்டும் அல்லாமல், உலகமே தாம் காணும் காலத்தில் பொலிவுற வேண்டும் என்று அவர் விரும்பியதை இந்நூல் எடுத்துரைக்கின்றது.

அரசியல் விடுதலை மட்டும் போதாது. பொருளாதார விடுதலையே இந்தியருடைய வாழ்க்கையை வளமுறச் செய்யும் என்னும் நம்பிக்கையும், இந்தியாவில் தொழிற்புரட்சி தோன்ற வேண்டும் என்னும் எண்ணமும், சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயம் உருவாகவேண்டும் என்னும் ஆர்வமும் டாக்டர் மு.வ.அவர்களைக் கற்பனையில் ஆழ்த்தியதாகத் தெரிகிறது. அதன் விளைவாக, 'கி.பி.2000' எனும் புத்துலகப் புதுவாழ்வுப் பொன்னேட்டைப் பெற்றுள்ளோம்.

இந்நூலின் நோக்கையும் போக்கையும்,

> இந்த நூலின் நனவும் உள்ளது; கனவும் உள்ளது. நனவு நிகழ்காலம்; கனவு எதிர்காலம். நனவு கனவு என்பவற்றை மறந்து

நோயும் மருந்துமாகக் காணலாம். நோய்கள் எல்லோருக்கும் அனுபவமாகத் தெரிந்தவை, மருந்துகளோ எண்ணத்தால் உன்னத்தக்கவை. இந்த நோய்களை இந்த மருந்துகள் தீர்க்குமா என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும்...

இந்தக் கனவில் காண்பது ஒருவகை அரசியல், பொருளியல் சமூக அமைப்பின் உருவெளியே; சட்டவிளக்கங்களும் அல்ல; புள்ளி விவரங்களும் அல்ல. எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொண்டு உணர்வதற்கும், தெளிவு கொண்டு எண்ணுவதற்கும் ஒரு தூண்டுகோலாக அமைவதே இந்தக் கனவின் பயன்.[19]

என்று ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

தொழிற்சாலையிலிருந்து மாலையில் வீடு திரும்பும் போது மனச்சோர்வும் உடல் சோர்வும் கதைத் தலைவனுக்கு மிகுதியாக இருந்தது. மனச்சோர்வுக்குக் காரணம், நாட்டில் எங்கும் வறுமையின் கொடிய தாண்டவத்தைக் கண்டு, உண்டான மனவருத்தமாகும். நெருங்கிய நண்பன் ஒருவனின் கடிதம், அவனுடைய அல்லல்களை உருக்கமாகத் தெரிவித்தது. 'எல்லாவற்றிற்கும் வறுமையல்லவா காரணம்? எனும் எண்ணத்தோடு, அந்தக் கதைத் தலைவன் உறங்கிவிடுகிறான். உடனே அவன், 'புதிய உல'கிற்குச் சென்று விடுகிறான். இதுதான் கி.பி.2000த்தின் கதைப்பகுதி.

அங்கு அவன் கண்ட காட்சிகளுள் சிறப்புமிக்கவை (1) அங்கு வாழுகின்ற மக்கள் எல்லாரும் வீட்டைவிட்டு வெளி வருகின்றபொழுது பொதுவான ஓர் உடையை அணிந்துள்ளனர்.[20] அந்த உலகிற்குச் செல்லுகின்ற புதியவர்களையும் அவ்வுடையை அணியுமாறு வற்புறுத்துகின்றனர்.[21] (2) சமயப் பொதுமை,[22] (3) மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வழங்கும் காப்பு இல்லம்,[23] (4) தனிமனிதன் ஓரளவிற்குத்தான் செல்வத்தையும் புகழையும் அங்குத் தேட இயலும்,[24] (5) அன்புமயமான இல்வாழ்க்கை – பெண்களுக்குச் சமவுரிமை, 'உடன்படிக்கை ஒழிப்புச் (மணமுறிவு) சட்டம்', தெருக்கள்தோறும் கூட்டுறவுச் சமையல் அமைப்புகள், இதனால் சமையலறை அடிமைகளாக அந்நாட்டுப் பெண்கள் இல்லை என்பன புதுமைமிகு குடும்ப வாழ்க்கைக் காட்சிகள்.[25] (6) பேரின்பம் எனும் விடுதியில் முதியோரைப் போற்றுதல்,[26] (7) நான்கு வகையான உணவுக்கூடங்கள்,[27] (8) ஒரு நாளைக்கு ஒவ்வொருவரும் மூன்று மணி நேரமே உழைத்தல்,[28] (9) கல்வி இலவசம், பள்ளிக்கூடங்கள் பண்ணையை அடுத்து அமைக்கப்படுதல், மேற்படிப்புப் படிக்க விரும்புவோர் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு ஐந்து ஆண்டுகள் தொழிற்சாலையில் வேலை செய்தல்,[29] (10) நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் அற்ற அனைத்துலகச் சமுதாயம்,[30] (11) அரசியல் கட்சிகளோ, கட்சிப் பத்திரிகைகளோ இல்லாமை,[31] (12)

சோழர் காலத்திய ஊராட்சித் தேர்தல் முறையான குடவோலை முறையே நாட்டாட்சித் தேர்தல் முறையாகப் பின்பற்றப்படுதல்,[32] (13) உலகப்பேரவை – உலக நாடுகளின் ஆட்சி நிறுவனம்,[33] (14) எல்லாம் அரசுடைமை,[34] (15) சாதிசமய வேறுபாடற்ற வாழ்க்கை, தனி வாழ்க்கைக்குத் தேவையான தனியுரிமைகள் மனிதனுக்கு வழங்கப்படுதல்,[35] (16) பிச்சைக்காரர்கள் இல்லாத, ஏழை பணக்காரரற்ற சமவுடைமைச் சமுதாயம்[36] என்பன மு.வரதராசனார் படைத்துள்ள 'புதிய உலகின்' சிறப்பியல்புகளாகும்.

பேராசிரியர் காண விரும்பிய புதிய உலகமாகிய கி.பி.2000த்தில் மனிதன் மனிதனாக மாண்புற்று வாழ்வதற்கு ஏற்ற சமுதாய அமைப்பும், வாய்ப்பு வசதிகளும் உண்டு இவ்வாறு அமையும் 'புதிய உலகம்' பொதுவுடைமைச் சமுதாயமும் அன்று; சமவுடைமைச் சமுதாயமும் அன்று. இந்திய வாழ்க்கைத் தத்துவமும் மார்க்சியமும் இணைந்த புதியதோர் சமவுடைமைச் சமுதாயமாகும்.

மு.வ.அவர்களின் 'கற்பனையுலகம்' வெறும் சிந்தனைக்கு உரிய, நடைமுறைக்கு உதவாத 'இலட்சியபுரி'யன்று; சீர்திருத்தத் திட்டங்கள் வகுப்பதற்கு உரிய திட்டவரைவும் அன்று. நடைமுறைக்கு உகந்தவகையில் சமுதாயத்தை – உலகை – மாற்றியமைப்பதற்குப் பயன்படும் நெறிமுறைகளைக் கண்டு உணரத் தூண்டுவதாகும்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் நோக்கத்தோடு, அனைத்துலக – ஒருலக–க்குடிமக்களைக் கொண்ட புதிய உலகமாகப் பொலிவுறும் சிறப்புடையதாகும்.

15. பழியும் பாவமும்

(1950)

கள்ளுண்ணுவதால் உண்டாகும் தீமைகளை எடுத்துரைக்கும் திருவள்ளுவரின் கருத்துகளை முகப்பில் கொண்டது 'பழியும் பாவமும்' எனும் நூலாகும். 'குறிப்பு' எனும் பகுதியில், நூலாசிரியர் 'கதை கற்பனை' எனக் குறிப்பிடுகிறார்.[37] இதனால், நூலாசிரியர், இந்நூலையும் ஒரு கதைநூலாகக் கருதினார் என்பது புலனாகின்றது.

'பழியும் பாவமும்' தமிழ்ச் சமுதாயத்தின் உண்மையான நிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. நண்பர்கள் இருவர் சென்னையிலிருந்து, காஞ்சிபுரம் அருகிலுள்ள ஓர் ஊரில் நடைபெறும் திருமணத்திற்காகப் புகைவண்டியில் செல்லுகின்றனர். அவ்வண்டியில் அவர்கள் கண்ட காட்சிகள் வழியில் பார்த்த காட்சிகள், மணமகள் வீட்டு நிலை, திருமணம் நடைபெறும் ஊரான நத்தப்பேட்டையில் கண்ட காட்சிகள். கேள்வியுற்ற செய்திகள், திரும்புகையில் கண்டதும் கேட்டதும் போன்ற பல

செய்திகளின் கோவையாக இப்புனைகதை அமைந்திருக்கிறது. இதில் கற்பனை வளமோ, கதைக்கூறோ இடம்பெறவில்லை. அடுத்தடுத்துப் பல்வேறு காட்சிகளைக் காட்டி, 'இதற்கெல்லாம் காரணம் என்ன? யாரைக்குற்றம் கூற முடியும்?' என்று எண்ணுமாறு படிப்போரின் சிந்தனையைத் தூண்டுகிறார் ஆசிரியர்.

'ஒரு தவறும் செய்யாதவர்கள் பழிக்கு ஆளாவதும், பல கொடிய குற்றங்களைச் செய்தவர்கள் தண்டனைக்கு ஆளாகாமல் சட்டத்தையும் சமுதாயத்தையும் ஏமாற்றி வாழ்வதும் எதனால்?' என்பதைக் கண்டறியும், 'இத்தீமைகளைப் போக்குவதற்கு வழியே கிடையாதா?' என்பதை ஆராய்ந்தறியவும் ஆசிரியர் ஒரு களத்தை, இப்புனைகதை வாயிலாக அமைத்துத் தந்துள்ளார்.

குடிப்பழக்கம், கள்ளச்சாராயம் காய்ச்சும் கொடுமை, இத்தொழிலில் ஈடுபடும் ஏழைகள் துன்புறுதல், ஆனால் வசதிபடைத்தோர் பணக்காரராக ஏற்றமுறுதல், போலீசாரின் கெடுபிடி, உழவுத்தொழிலின் அவலநிலை, தேர்தல் அரசியல் போன்ற செய்திகள் இந்நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் மையக்கருத்து 'மதுவிலக்கு நடைமுறையில் வெற்றி பெறவில்லை' என்பதாகும். இதைக் 'கதைக்கரு எனக்கொண்டாலும், கதைப்பின்னலோ, பாத்திரப்படைப்போ இப்புனைகதையில் இடம்பெறவில்லை; கட்டுக்கோப்பு மிகவும் நெகிழ்ச்சியுடையதாகத் தோன்றுகிறது.

பேராசிரியரின் முற்போக்கு எண்ணங்கள், சீர்த்திருத்தக் கொள்கைகள் பல, இங்குமங்கும் ஒளிர்கின்றன. அவற்றுள் எளிமையாகவும் சிக்கனமாகவும் திருமணம் செய்தல் பற்றிய எண்ணங்கள்,[38] குறிப்பிட்ட மாதங்களிலும், நாட்களிலுமே திருமணத்தை நடத்தும் மூட நம்பிக்கையை ஒழித்தல்[39] போன்ற சிந்தனைகள் சிறப்பாக அமைந்துள்ளன.

கி.பி.2000த்தில், சிறப்புமிகு தேர்தல் முறையாகக் காட்டப்படும். 'குடவோலைத் தேர்தல் முறையே சிறந்தது; தேவையானது' என்பதை இந்நூலிலும் மு.வ.அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்.[40]

சமுதாயத்தின் நோய்களை, ஓடும் திரைப்படமாக்கிக் காட்டும் ஆசிரியர், 'நோய்நாடி, நோயின் முதலைநாடி', அது தணிக்கும் முறைகளைக் கண்டு அறிந்து, அதற்கேற்ற சமுதாய மருத்துவத்தைச் செய்ய வேண்டும் என்பதை, "உள்ளே ஏற்பட்ட காய்ச்சலுக்கு மருந்து தராமல் மேல் சூட்டை மட்டும் தணிப்பதற்குத் தண்ணீர் தடவக்கூடாது"[41] என்னும் கருத்தினை அறிவுறுத்துந் திறன் அனைவரையும் உண்மையை எளிதில் புரிந்து கொள்ளச் செய்கிறது.

குறிப்புகள்

1. C.T.Winchester, Some Principles of Literary Criticism, pp.123-130.
2. மு.வரதராசன், கி.பி.2000, பக்.4.
3. H.W.Donner, Introduction to Utopia, p.6.
4. Joyce Oramel Hertzler, The History of Utopian Thought, p.2 F.N.
5. Richard Gerber, Utopian Fantasy P.112.
6. Joyce Oramel Hertzler, op.cit., pp.2-98
7. அ) வ.ராமசாமி, கோதைத்தீவு, சென்னை, 1945.

7அ, M.K.Gandhi, Sarvodaya, P.75.

8. ஆர்.கிருஷ்ணமூர்த்தி, மோகினித்தீவு, சென்னை, 1945.
9. வ.ராமசாமி, முன்.நூல்., முன்னுரை.
10. ஆர்.கிருஷ்ணமூர்த்தி, முன்.நூல்., பக்.1.
11. சி.சுப்பிரமணிய பாரதி, பாரதி நூல்கள், கவிதை, பக்.99.
12. Robert C.Elliott, The Shape of Utopia, pp.7-8.
13. கி.பி.2000, பக்.76, 96.
14. கி.பி.2000, பக்.95.
15. கி.பி.2000, பக்.94–95.
16. கி.பி.2000, பக்.86–90.
17. கி.பி.2000, பக்.36.
18. G.Bernard Shaw, Back to Methuseiah, pp.18-140.
19. கி.பி.2000, பக்.4.
20. கி.பி.2000, பக்.29.
21. கி.பி.2000, பக்.28–29.
22. கி.பி.2000, பக்.28–29.
23. கி.பி.2000, பக்.41–42.
24. கி.பி.2000, பக்.70.
25. கி.பி.2000, பக்.38, 39, 92.
26. கி.பி.2000, பக்.78–81.

27. கி.பி.2000, பக்.35–36.

28. கி.பி.2000, பக்.98.

29. கி.பி.2000, பக்.36–37.

30. கி.பி.2000, பக்.90–91.

31. கி.பி.2000, பக்.76.

32. கி.பி.2000, பக்.69–70; 72.

33. கி.பி.2000, பக்.96.

34. கி.பி.2000, பக்.32–36.

35. கி.பி.2000, பக்.33.

36. கி.பி.2000, பக்.31.

37. மு.வரதராசன், பழியும் பாவமும், குறிப்பு

38. மு.வரதராசன், பழியும் பாவமும், பக்.13.

39. மு.வரதராசன், பழியும் பாவமும், பக்.97–98.

40. மு.வரதராசன், பழியும் பாவமும், பக்.70, 79.

41. மு.வரதராசன், பழியும் பாவமும், பக்.13.

இயல் - 6
கலைத்திறன்

பல்வேறு வகையான வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது படைப்பிலக்கியம். காலந்தோறும் சமுதாயத்திலே அரும்பும் அரசியல், பொருளியல், சமூக, பண்பாட்டு, ஆன்மிக இயக்கங்கள் இலக்கியப் படைப்பின் நோக்கையும் போக்கையும் பாதிக்கின்றன. இதனால் அவற்றில் மாற்றங்களும் வேறுபாடுகளும் உண்டாகின்றன. அவ்வப்போது சமுதாயத்திலே மேலோங்கி நிற்கும் வாழ்க்கை முறைகளும் நோக்கங்களும் அனுபவங்களும் எவ்வாறு எழுச்சிமிகு எண்ணங்களாகப் படைப்பு இலக்கிய ஆசிரியர்களிடம் கனிகின்றன என்பதை இலக்கியம் புலப்படுத்துகிறது.

படைப்பு இலக்கிய ஆசிரியன், பச்சையான வாழ்க்கை அனுபவங்களைப் பதப்படுத்திக் கலையுணர்வு ஊட்டுகிறான்; கற்பனை வண்ணத்தில் குழைத்துச் சுவையுணர்வு மிக்க செழும்பாகாக மாற்றித் தருகிறான். இத்தகைய 'இரசவாத' முறையால், இலக்கியம் கலையழகும் கற்பனைவளமும் பெறுகிறது. தம்முடைய படைப்புகள் கலைப்பெட்டகமாகப் பொலிவுறுவதற்குப் படைப்பு இலக்கிய ஆசிரியன், சில நெறிமுறைகளைக் கையாளுகிறான். இவற்றைக் 'கலைத்திறன்' எனும் பொதுப் பெயரால் சுட்டுவது மரபு. 'உத்திகள்' (Technique) எனக் குறிப்பிடுவதும் வழக்கம். அவனுடைய படைப்புகளின் வெற்றிக்கும் தோல்விக்கும் இக்கலைத்திறன்களே காரணமாக அமைகின்றன. இவற்றின் வாயிலாகவோ, ஆசிரியரின் அனுபவங்கள் செம்மையாகவும், சிறப்பாகவும், ஆழமாகவும், அழுத்தமாகவும் கற்பவர் உள்ளத்தைத் தொடும் வகையில் உணர்த்தப்படுகின்றன.

அவை பாத்திரப்படைப்பு, கதைப்பின்னல், கதை கூறும் முறை (நோக்குநிலை), முன் நிழலாட்டம், பின்வீச்சு, அகத்துறு தனிமொழி முதலியனவாகும்.

பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் நோக்குகின்றவர்கள், அவருடைய படைப்புகளில் சிறந்து விளங்கும் கலைத்திறன்களை எளிதில் இனங்கண்டு

கொள்ளுவர்; அவை எவ்வாறு அவருடைய புதினங்களுக்கு வலிவும் பொலிவும் அளிக்கின்றன என்பதையும் உணர்ந்து போற்றுவர்.

கதை மாந்தர் படைப்பு

கதைமாந்தர் படைப்பு ஓர் அரிய கலை. படைப்பு இலக்கிய ஆசிரியர்கள் பலர், இத்திறனைக் கையாளுவதில் தோல்வி கண்டுள்ளனர். ஒரே ஆசிரியன் ஒரு படைப்பில் சிறந்ததொரு பாத்திரத்தைப் படைத்து இருக்கலாம். ஆனால் மற்றொரு படைப்பில் அவரே, நல்லதொரு கதைமாந்தரைப் படைக்க இயலாமல் தோல்வியுறுவதும் உண்டு.

நெடுங்காலம் மு.வரதராசனார் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்; அக்காலத்தில் எண்ணற்ற இளைஞர்களையும், பல்வேறு வகையான பண்புடைய மக்களையும் நேரில் கண்டு பழகும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார். அவர்களுடைய மனப்போக்குகளையும், குறையும் நிறையும் கலந்த நடத்தைகளையும் பார்த்துப் பார்த்து, அவர் அவற்றிடையே புலப்படும் வேற்றுமைகளை எளிதில் கண்டுணரும் ஆற்றல் கைவரப் பெற்றவரானார்.

விரும்பிய கதைமாந்தர்

இதனால், சிறப்புமிகு சமுதாயத்தை அமைக்க எத்தகைய மக்கள் தேவைப்படுகின்றனர் என்பதை ஆழ்ந்து அவர் சிந்தித்துள்ளார். "சமுதாயத்திற்கு இயன்ற நன்மை செய்யும் குறிக்கோளுடன் நெறிவகுத்துக் கொண்டு, அதனால் ஏற்படும் போராட்டங்களில் பின்வாங்காமல் ஈடுபட்டு வெற்றியோ தோல்வியோ ஏற்று"[1] வாழும் மனிதரையே பாத்திரங்களாகப் படைக்க, அவர் பெரிதும் விரும்பினார். இந்த வகையில் இப்பாத்திரங்கள் 'சமுதாய உணர்வு' உடையவர்களாகத் தோன்றுகின்றனர். உலக அமைப்பில் நன்மையும் தீமையும் கலந்து இருப்பதைப்போல, மனிதர்களிலும் நல்லவரும் தீயவரும் கலந்து காணப்படுவதால், அவ்விரு சாராரையுமே ஆசிரியர் படைத்துள்ளார். அப்பொழுதுதான் புதினம் மெய்ம்மை இயல்புடையதாகத் தோன்றும் என்பதை அவர் நன்குணர்ந்துள்ளார்.[2]

எனவே, பாத்திரப்படைப்பில், அவர் கருத்தைச் சிறப்பாக செலுத்தியிருக்கிறார். கதைப்பாத்திரங்களின் சிறப்பாலேயே, கதையின் தரமும் சுவையும் உயருகிறது. அவர் படைத்துள்ள பாத்திரங்கள் மொத்தம் இருநூற்று ஐம்பத்து நான்கு.[3] அவற்றுள் ஆண்பாத்திரங்கள் நூற்று நாற்பத்து மூன்று; பெண் பாத்திரங்கள் நூற்று பதினொன்று[4] இப்பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மைகள் வாய்ந்தன; அவற்றிற்கு என்று சில சிறப்பியல்புகள் பளிச்சிடுகின்றன. அவற்றால் அவை வலிவும் பொலிவும் பெறுகின்றன.

டாக்டர் மு.வ.அவர்கள் படைத்துள்ள கதைமாந்தருள் தலைசிறந்தவர் என்று 'கள்ளோ காவியமோ'வில் வரும் 'மங்கை', மலர்விழியில் வரும் 'காஞ்சனை', கரித்துண்டில் இடம்பெற்றுள்ள 'நிர்மலா', அகல்விளக்கில் வரும் 'பாக்கியம் அம்மாள்' எனும் பெண் பாத்திரங்களையும், மலர்விழியில் இடம்பெறும் 'கலக்டர் செல்வநாயகம்', கரித்துண்டில் வரும் ஓவியக் கலைஞர் 'மோகன்', கயமையில் வரும் 'ஆணவர்', வாடாமலரில் வரும் 'தானப்பன்', மண்குடிசையில் வரும் 'கேசவராயன்' ஆகிய ஆண் பாத்திரங்களையும் கூறலாம். இப்பாத்திரங்கள் உயிர்க்கலையுடையன; நம்மிடையே வாழும் மக்கள் சிலரை நினைவூட்டுவன. பேராசிரியர் மு.வரதராசனாரின் பாத்திரப்படைப்புத் திறமைக்கு' இப்பாத்திரங்கள் சிறப்புமிகு சான்றாக என்றும் விளங்குவர் எனலாம்.

கதைமாந்தரின் பெயர்கள்

பல்வேறு வகையான பாத்திரங்களுக்குப் பேராசிரியர் பெயரிட்டுள்ள முறை சிறப்புடையதாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் ஆசிரியருடைய உள்ளத்தைக் கவர்ந்த திருவாய்மொழியையும், திருமந்திரத்தையும் இரண்டு ஆண் பாத்திரங்களுக்குரிய பெயராக அவர் அமைத்துள்ளார். அகல்விளக்கு எனும் புதினத்தில் வரும் இரண்டு கிளைப்பாத்திரங்களைத் 'திருவாய்மொழி', 'திருமந்திரம்' என்று அவர் பெயரிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

பழந்தமிழ்ப் புலவர்கள் சிலருடைய பெயர்களையே, தம் பாத்திரங்களுக்குரிய பெயராகவும் அவர் சூட்டியுள்ளார். புறநானூற்றில் 'ஈன்று புறந்தருதல்' எனத் தொடங்கும் பாடலைப் (312) பாடியவர் 'பொன்முடியார்' எனும் புலவர் பெருமாட்டியாவார். அவருடைய பெயரைப் 'பொன்முடி' எனச்சுருக்கி, 'அந்த நாளி'ன் கதைத் தலைவிக்குப் பேராசிரியர் பெயரிட்டுள்ளார். சிந்தைக்கினிய சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகளிடத்து, பேராசிரியருக்கு மிகுதியான ஈடுபாடுண்டு. இவ்வீடுபாட்டை, 'இளங்கோ' எனும் பெயருடைய பாத்திரங்கள் மூவரை அல்லி, கரித்துண்டு, செந்தாமரை ஆகிய புதினங்களில் படைத்துள்ளமையால் நன்கு உணரலாம். திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகரின் பெயரை, 'கள்ளோ காவியமோ'வின் அருளப்பருடைய தகப்பனாருக்கு அவர் சூட்டியுள்ளார்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் 'பெருமாள் திருமொழி'யைப் பாடியவர் குலசேகராழ்வார். அவருடைய பெயரைக் 'கயமை'யில் ஒரு பாத்திரத்தின் பெயராக அவர் படைத்துள்ளார். ஆழ்வார்களுள் சிறப்புமிகு பெண்பாற் புலவர் ஆண்டாளாவர். அவரைக் 'கோதை நாச்சியார்' எனப் போற்றுவது வைணவ சமயத்தாரிடையே

பெருவழக்கு. அவ்வம்மையாரின், 'கோதை' எனும் திருப்பெயரைக் 'கள்ளோ காவியமோ'வில் வரும் ஒரு துணைப்பாத்திரத்தின் பெயராக அவர் அமைத்துள்ளார். திருக்குறளுக்குப் 'பொய்யாமொழி' எனும் பெயரும் உண்டு. இடைக்காலத் தமிழகத்தில் (கி.பி.பதிமூன்றாம் நூற்றாண்டில்) 'பொய்யாமொழி' எனும் புலவர் சிறப்புற்று விளங்கினார். அவருடைய பெயரைக் கொண்ட பாத்திரம் ஒன்றை, 'அகல்விளக்கில்' காணலாம். சைவ சித்தாந்த சாத்திரங்களுள் தலையாயது சிவஞானபோதம். அதை இயற்றிய சான்றோர் மெய்கண்டார் ஆவர். அவருடைய திருப்பெயரை, 'மண்குடிசை'யில் வரும் பெரியார்க்கு, ஆசிரியர் அமைத்துள்ளமை 'நினைவுகூர்தற்குரியதாகும். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் சாந்தலிங்க சுவாமிகள் வாழ்ந்தார். அவர் 'அவிரோத உந்தியார்', 'கொலை மறுத்தல்' போன்ற நூல்களை இயற்றியுள்ளார். அவருடைய பெயரை, அகல்விளக்கில் வரும் காந்தியவாதியான, இளைஞர் ஒருவருக்கு மு.வ.சூட்டியுள்ளார். விவேகானந்தரிடம் பேரீடுபாடு கொண்டிருந்த பேராசிரியர், விவேகானந்தரின் பிள்ளைப் பருவப் பெயரான 'நரேந்திரர்' என்பதை 'மண்குடிசை'யில் வரும் அறிவியல் பேராசிரியரும், பிறப்பால் வங்காளியுமான அறிஞர் ஒருவரின் பெயராக அமைத்துள்ளமை சிந்திக்கத்தக்கது.

பழந்தமிழ் இலக்கியங்களுள் சிறப்புற்று விளங்கும் கதைப்பாத்திரங்கள் அல்லது தமிழ்நாட்டு அரசியல்வானில் ஒளிரும் விண்மீன்களான அரச குடும்பத்தினர் முதலியோருடைய பெயர்களைச் சில கதை மாந்தரின் பெயர்களாகப் பேராசிரியர் அமைத்துள்ளார்.

கண்ணப்பர், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இத்தகைய சிறப்புக்குரியவர் சிறுத்தொண்டர். அவருடைய மகன் சீராளன். மு.வ.வின் புதினங்களுள் கண்ணப்பர் ('பாவை') சீராளர் ('பெற்ற மனம்') போன்ற அரசர்களுடைய பெயர்களைக் கொண்ட கதை மாந்தரும் மு.வ.அவர்களின் புதினங்களில் இடம் பெற்றுள்ளனர்.

இவற்றைப் போன்றே, சில பெண் பாத்திரங்களின் பெயர்களும் தமிழ் இலக்கியத்தில் புகழ் பெற்றுள்ள பெண்களின் பெயர்களாக உள்ளன. சிலப்பதிகாரத்தில் சிறப்புற்றிலங்கும் மாதவி ('அகல்விளக்கு'), 'மணிமேகலை' எனும் காப்பியத் தலைவியான 'மணிமேகலை' ('அகல்விளக்கு', அல்லி').

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்,
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி[5]

என்று சேக்கிழாரால் பாராட்டப்படும் 'மங்கையர்க்கரசி' எனும் பாண்டிமாதேவியின் பெயர், 'மங்கையர்க்கரசி' ('பாவை', 'நெஞ்சில் ஒருமுள்') எனவும், மங்கை ('கள்ளோ காவியமோ?') மங்கை நல்லாள் ('மண்குடிசை') எனவும் குறைத்தும் கூட்டியும் பெயரிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்துள் சிறப்பாகப் பேசப்படுவது 'கொல்லிப்பாவை' அப்பெயரின் பிற்பகுதியை பாவை) அழகிய இளம்பெண்களைச் சுட்டப் பயன்படுத்துவது வழக்கமாகும். இவ்வழக்கப்படி ஒரு புதினத்துத் தலைவியின் பெயரே 'பாவை' எனச் சூட்டப்பட்டுள்ளது. அந்நூலிற்கும் அப்பெண்ணின் பெயரையே ஆசிரியர் அமைத்துள்ளார்.

பேராசிரியர் மு.வரதராசனார் அவர்கட்கு, இயற்கை அழகில் பேரீடுபாடு உண்டு. மலர்களிலும், செங்கதிர், தண்கதிர் போன்றவற்றிடத்தும் மனத்தை அவர் பறிகொடுத்தவராவர். எனவே, தாம் படைத்த பெண் பாத்திரங்கள் சிலவற்றிற்கு இயற்கைப் பொருள்களின் இனிய பெயர்களை அவர் சூட்டியுள்ளார். அவற்றை 'மலரோடு' தொடர்புடையன', 'விலங்கோடு' தொடர்புடையன, இயற்கைச் சுடர்களான 'திங்கள், கதிரவன்' ஆகியவற்றோடு தொடர்புடையன என்று மூவகையாகப் பாகுபடுத்தலாம். அரும்பு ('நெஞ்சில் ஒரு முள்'), நறுமலர் ('வாடாமலர்'), அல்லி ('அல்லி'), செந்தாமரை' (செந்தாமரை), தாமரை ('நெஞ்சில் ஒரு முள்'), மலர்விழி ('மலர்விழி'), பூங்கொடி ('செந்தாமரை', 'வாடாமலர்') என்பன மலர்களின் பெயர்களாக அல்லது மலர்களோடு தொடர்புடைய பெயர்களாக இடப்பட்டவையாகும்.

மான் எனும் விலங்கு, விலங்குகளில் அழகுடையது; பெண்களின் துள்ளுநடைக்கும், அழகிய விழிக்கும் உவமையாகக் கூறப்படும் சிறப்பும் வாய்ந்தது. 'மான்விழி' (பெற்ற மனம்) எனும் பெயர் மானின் அழகிய நோக்கினைச் சுட்டுவதாகும். உலகிற்கு ஒளி தந்து உதவுவன கதிரவனும், திங்களுமாகும். அவற்றை நினைவூட்டும் வகையில், செங்கதிர் ('வாடாமலர்'), சுடர்விழி (வாடாமலர்), நிலா ('நெஞ்சில் ஒரு முள்'), வெண்ணிலா ('மண்குடிசை'), எனும் பாத்திரப் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்துள் இயற்கையன்னையின் ('பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை') புன்முறுவலைக் கண்டு மகிழ்ந்தவர் மு.வரதராசனார். எனவே, ஆண் பாத்திரங்களுள் ஒருவருக்கு 'மழைக்கண்ணர்.. ('மலர்விழி') என்று அவர் பெயரிட்டுள்ளதில் வியப்பு இல்லை.

தம் புதினங்களில் வரும் பாத்திரங்களுள் சிலவற்றைக் குறிப்பிட்ட பண்புகளின் உருவகமாக விளங்குமாறு மு.வ.படைத்துள்ளார். அப்பெயர்கள் பெரும்பாலும் குறியீட்டுப் (Symbolic) பெயர்களாகவே அமைந்துள்ளன. அன்பரசி ('நெஞ்சில் ஒரு முள்'), இன்பவல்லி

('அல்லி'), கலைவல்லி ('மலர்விழி'), குணமாலை ('அந்த நாள்'), தேமொழி ('கள்ளோ காவியமோ', 'பெற்ற மனம்"), மணிமொழி ('நெஞ்சில் ஒரு முள்'), மென்மொழி ('கயமை) வசீகரம் ('கயமை') என்பன பெண் கதை மாந்தரின் பண்புகளை உணர்த்தும் பெயர்களாகும்.

இவற்றைப் போன்றே, அருளப்பர் ('கள்ளோ காவியமோ', 'பெற்ற மனம்'), அறவாழி ('அல்லி', 'நெஞ்சில் ஒரு முள்'), அழகன் ('பாவை') ஆணவர் ('கயமை'), நல்லய்யன் ('கயமை') என்னும் பண்புணர்த்தும் பெயர்களை ஆண் பாத்திரங்கள் சிலவற்றிற்கு அவர் சூட்டியுள்ளார்.

ஆடவருக்குரிய பெயர்களுள் 'அருளப்பர்' என்பதும் பெண்களுக்குரிய பெயர்களுள் 'வசீகரம்' என்பதும் கிறித்துவ சமயத்துத் தமிழ்ப் பெருமக்களிடையே வழங்கிவரும் பெயர்களாகும். 'அறவாழி' என்பது திருவள்ளுவர் இறைவனைச் சுட்டுவதற்குப் பயன்படுத்திய அடையாகும். ('அறவாழி அந்தணன்' – திருக்.8) இப்பெயர் புத்தர் பெருமானுக்குரியதாக,

'ஆதி முதல்வன் அறவாழி யாள்வோன்'

என்று மணிமேகலை குறிப்பிடுவதால் அறிகிறோம்.[6] 'அழகன்' எனும் பெயர் முருகனுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவரும் பெயராகும். 'ஆணவர்' எனும் பெயரே ஆசிரியர் சிறப்பாகப் படைத்துக் கொண்ட பெயராகும். இப்பெயர் அப்பாத்திரத்திற்குப் பொருத்தமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

பொதுவாக நோக்குமிடத்து, பேராசிரியர் மு.வரதராசனார் பயன்படுத்தியுள்ள ஆடவர் பெயர்களுள் சிறப்புடையன அறவாழி, ஆணவர், கண்ணழகன், மழைக்கண்ணர் என்பனவாகும். இவற்றுள் 'அறவாழி' எனும் பெயர், மறுமலர்ச்சி இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட தமிழ் மக்கள் சிலர், தங்கள் ஆண்பிள்ளைகளுக்குப் பெயராகச் சூட்டியுள்ளார். இப்பெயரை, எழுத்தாளர் சிலர், தம் 'புனைபெய'ராகப் போற்றியும் வருகின்றனர்.[7]

பேராசிரியர் புதியதாகப் படைத்து வழங்கிய பெண்பாற் பெயர்கள் அன்பரசி, இன்பவல்லி, தேமொழி, நிலா, பூங்கொடி, மலர்விழி, மான்விழி, மென்மொழி, வெண்ணிலா என்பன. இவற்றுள் அன்பரசி, இன்பவல்லி, தேமொழி, நிலா, மலர்விழி, மான்விழி, வெண்ணிலா எனும் பெயர்கள், தமிழகத்தின் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் வாழும், நாற்பது வயதிற்குக் குறைந்த மகளிர்க்குரிய பெயர்களாக வழங்கி வருவதை இன்று காணலாம். மறுமலர்ச்சி இயக்கத்தின் அலைகள் நடுத்தர வகுப்பினரையும், ஓரளவிற்குச் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் உள்ள மக்களையும், முட்டிமோதியபொழுது, இப்பெயர்கள் அவர்களுடைய குழந்தைகளின் பெயர்களாக, அவர்கள் வாழ்வோடு ஒன்றிப் போய்விட்டன. இவை தனித்தமிழ்ப்

பெயர்களாக இருப்பதோடு, மு.வ.அவர்கள் படைத்த சிறப்புமிகு பாத்திரங்களை நினைவூட்டுவனவாகவும் உள்ளன. இவற்றால் மக்களிடையே வளர்ச்சிக்குப் பேராசிரியர் ஆற்றியுள்ள பணிகள் பல. அவற்றுள் அவர் படைத்த கதை மாந்தரின் பெயர்கள் இன்று தமிழ் மக்களின் இதழ்களில் தவழும் இனிய பெயர்களாக விளங்குவதும் ஒன்றாகும்.

குறையும் நிறையும்

மனிதன் குறையுடையவன். எனவே, அவனுடைய செயல்களிலும், அவன் அறிந்தோ, அறியாமலோ சில குறைபாடுகள் இடம்பெற்று விடுகின்றன. அவற்றைப் பெரிதுபடுத்துவதால் யாதொரு பயனும் உண்டாகப் போவது இல்லை. எனினும், அவற்றைப் பற்றிச் சிந்திப்பது, மற்றவர்களுடைய எதிர்கால வளர்ச்சிக்கு உரமாக அமையும். இவ்வகையில் பேராசிரியர் மு.வ.அவர்களின் புதினங்களைப் பற்றி இதுவரை வெளியிடப்பட்டுள்ள கருத்துகள் சிலவற்றின் வன்மை மென்மைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டின் இலக்கியப் படைப்புகளில், நீதி புகட்டும் எண்ணங்கள் வலிமையுடையனவாகத் தோன்றுகின்றன. அறத்தின் ஆட்சியையும் மாட்சியையும் போற்றுவதில் இன்றைய எழுத்தாளர்கள் முனைப்பாக உள்ளனர். இவ்வாறு அறத்தைப் போற்றும் படைப்பாளர்களுள் முதன்மையானவர் மு.வரதராசனார். அவருடைய புதினப்படைப்புகள் முதல், ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரையில் உள்ள எல்லா வகையான படைப்புகளிலும் இப்பண்பு மேலோங்கி நிற்கிறது[8] என்பர்.

டாக்டர் மு.வரதராசனார் எழுத்துப்பணியில் ஈடுபட்டிருந்த காலம், இந்திய வரலாற்றில் ‘ஜவகர்லால் நேருவின் யுகம்’ எனப் போற்றத்தக்கதாகும். அக்காலத்தில் பண்டை இந்தியப் பண்பாடும், தமிழ்ப்பண்பாடும் இலட்சிய நோக்குடன் போற்றப்பட்டன. இந்தியப் பண்பாட்டின் உயிர்நாடி அறத்தின் வழிப்பட்ட சமூக வாழ்க்கையே யாகும். எனவே, பேராசிரியர், ‘அறத்தின் மாட்சியை’ப் போற்றுவதில் வியப்பு இல்லை.

ஆங்கில இலக்கிய வரலாற்றில் “விக்டோரியா பேரரசியினுடைய காலத்தின்” இயல்புகளாக நடுத்தர வகுப்பினரின் அறவேட்கையும், இலட்சிய நோக்கும் மேலோங்கி நின்றன. அவற்றின் தாக்கம் ஆங்கிலக் கல்வியைப் பயின்ற இந்தியரிடையே இந்நூற்றாண்டின் முற்பகுதியில் சிறப்பிடம் பெற்றிருந்தமை மற்றொரு காரணமாகும். இத்தகைய காலச்சூழலும் மு.வ.வின் படைப்புகளுக்குப் பின்னணியாக அமைந்திருந்தன என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.[9]

பேராசிரியர் மு.வரதராசனார், புதிய இலக்கியப்படைப்பினை மேற்கொண்டதற்குரிய காரணத்தை, நாம் முன்னரே (இரண்டாவது இயலில்) கண்டோம். மனிதனுக்கு மகிழ்வூட்டுவதோடு, அவனுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதாக – உயர்த்துவதாக இலக்கியம் அமைய வேண்டும் எனும் எண்ணப்போக்குடையவர் அவர். ‘கலை கலைக்காகவே’ எனும் கொள்கையை அவர் என்றும் போற்றியது இல்லை. எந்தக் கலையாக இருப்பினும், அது மனித இனத்திற்குப் பயன்படுவதாக இருந்தால்தான் – அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்தவும், சிறப்புறச் செய்யவும் பயன்படுவதாக இருந்தால்தான் அது வாழும்; இல்லையென்றால் அது விரைவில் அழிந்து போய்விடும் என்பது அவருடைய துணிவாகும்.[10]

> நாவல் என்பது பொழுதுபோக்கிற்கான வெறும் நூலாகவும் அமையலாம்; வாழ்க்கையின் உண்மைகளை உணர்த்திக் கற்பவரின் உள்ளங்களை உயர்த்தவல்ல இலக்கியமாகவும் அமையலாம். அவ்வாறு விழுப்பம் உடையதாக அமையும்போது அது பழங்காலத்துக் காவியத்திற்கு நிகர் ஆகின்றது. காவியம் என்பது உரைநடை வளராத காலத்தில் செய்யுள் வடிவில் அமைந்த கலைச்செல்வம்; நாவல் என்பது உரைநடை வளர்ச்சியால், இவ்வடிவில் அமையும் கலைச்செல்வம்.[11]

என்பது பேராசிரியர் மு.வ.அவர்கள், புதினத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தாகும். ‘பொழுதுபோக்குப் புதினங்களை’ அவர் படைக்கவில்லை. எனவே, அவருடைய புதினங்களில் வாழ்க்கைக்குத் தேவையான உயரிய உண்மைகள், அறத்தை அறிவுறுத்தும் சிறப்புமிகு கருத்துகள் இடம்பெற்றிருப்பது இயல்பேயாகும்.

> வெறும் பொழுதுபோக்குக்காக என்று நான் எதையும் எழுதுவது இல்லை. இடையிடையே பொழுதுபோக்கு அம்சங்களை நான் வாசகர்களைக் கவருவதற்கான ஒரு கருவியாகவே பயன்படுத்துகிறேன்.[12]

என்று அவரே கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

புதினம் என்பது சமுதாயச் சார்புடையது. சமுதாயம் மக்களைக் கொண்ட ஒரு நிறுவனம். அந்நிறுவனத்தின் உறுப்பினர்களான மக்களுக்கு விருப்பு, வெறுப்புகள், நோக்கங்கள் போன்ற பல உணர்ச்சி உந்துதல்கள் இல்லாமல் போகாது. நடப்பியல் நிலையில், சமுதாய வாழ்க்கையைச் சிந்திக்க முயலும் புதின ஆசிரியர் யாராக இருந்தாலும், சமுதாயத்தைச் சீர்குலைக்கும் கொடிய நோய்களுக்கு மருந்தாகக் கருத்துகள் சிலவற்றை வெளிப்படுத்தாமல் இருக்க இயலாது.[13] இவ்வகையில், தம் படைப்பிற்கு ஓர் அடிப்படை நோக்கம் (purpose) ஒன்று உண்டு என்பதை வெளிப்படையாகவே

மு.வரதராசனார் கூறுகிறார்.[14] எனவே, அவருடைய புதினங்கள், நீதி புகட்டுவனவாக உள்ளன என்று குறை கூறுவதில் பொருளே இல்லை. டி.எச்.லாரன்சு.

> புதினப் படைப்பாளன் வீறுமிக்க கருத்துகளைக் கொண்டிருப்பதாலும், சிறப்புமிகு நோக்கங்களை வெளிப்படுத்து வதாலும், ஒழுக்கக்கேட்டை விளக்கும் படைப்பாகப் புதினங்கள் தரங்குன்றிப் போவது இல்லை.[15]

என்று மொழிந்துள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது. இக்காரணங்களால், அறநெறிக் கருத்துகளையோ, வாழ்க்கையின் உயரிய உண்மைகளையோ எடுத்துரைப்பதனால், ‘மு.வ.வின் புதினங்களைச் சிறப்பற்றவை’ எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

பேராசிரியர் மு.வ.வின் புதினங்களில் இடம்பெற்றுள்ள கதைக்கருக்களும், கதைப்பின்னல்களும், பிறமொழி ஆசிரியருடைய கருத்துக்களைக் கடன் வாங்கி அமைக்கப்பட்டவை என்பது சிலருடைய குற்றச்சாட்டாகும்.[16] முந்திய இயலில் மு.வ. அவர்களுடைய புதினங்களின் கதைக்கருக்கள், வாழ்க்கையில் அவர் கண்டதும், கேட்டதுமான பிறருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை என்பது விரித்துரைக்கப்பட்டன. அக்கதைக் கருக்களுக்குக் கற்பனை வடிவம் தரும்பொழுது, பிறமொழி ஆசிரியர்களின் உத்திகளையும், போக்குகளையும் மு.வ., தழுவியிருக்கலாம். அவருக்கு மிகவும் பிடித்தமான புதின ஆசிரியர்கள் “டிக்கன்ஸ், டால்ஸ்டாய், சாமர்செட் மாம், ஹெமிங்வே, தாகூர், காண்டேகர் ஆகியோர்”[17] என்று அவரே ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆசிரியர்களுடைய தாக்கம், அவருடைய நூல்களில் காணப்படலாம்; ஒருசில சமயங்களில், அவர்களுடைய கதைக் கருக்களைத் தழுவியும், தமிழில் புதினங்களை அவர் படைத்தும் இருக்கலாம். ஆனால், எல்லாப் புதினங்களுமே, அவ்வாறு அமைந்தவை என்றோ, ஒரு புதினத்தில் இடம்பெற்றுள்ள எல்லாக் கூறுகளுமே அவ்வாறு அமைந்தவை என்றோ கூறப்படுவது ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் செய்யப்பட்ட முடிவாகத் தோன்றவில்லை.

பேராசிரியர் மு.வ.அவர்களின் பாத்திரப் படைப்பினைப் பற்றி ஆராய்ந்த, அறிஞர் சிலர் தெரிவிக்கும் கருத்துகள் ஈண்டு எண்ணுவதற்குரியன.

> மனிதனைவிட மனித சிந்தனை மு.வ.வின் நாவல்களில் முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது... பல சிந்தனைகளை மனித உருவில்லாமல், சிந்தனை உருவமாக நமக்குச் செய்து தந்திருக்கிறார் வரதராசனார். திருக்குறள் பண்புகள் பலவற்றை அவர் இப்படித்தான் நமக்கு உருவகப்படுத்தித் தந்திருக்கிறார்.[18]

என்பது ஒரு திறனாய்வாளரின் கருத்தாகும். அதே திறனாய்வாளர், "கரித்துண்டில் பேராசிரியர் வரதராசன் திருக்குறளையே கதாநாயகனாகவும், கதாநாயகியாகவும் வைத்துக் கதையை நடத்தியிருக்கிறார் என்று சொல்ல வேண்டும்"[19] என்னும் கருத்தைத் தக்க அடிப்படை இல்லாமல் தெரிவித்திருக்கிறார்.

இவ்விரு கருத்துகளில் இரண்டாவது கருத்தை முதலில் காண்போம். 'கரித்துண்டில்' வரும் மோகன் கதைத்தலைவன்; நிர்மலா கதைத்தலைவி. இருவரும் வங்காள நாட்டைச் சேர்ந்தவர்கள். மோகன் நெறியோடும் முறையோடும் வாழ முயலுகிறான்; சென்னை நகரில் முட ஓவியராகப் பொன்னியோடு வாழும்பொழுதும், எளிமையும் வறுமையும் கலந்த வாழ்க்கை வாழுகிறான்; மனச்சான்றை மதித்துப் போற்றும் மனிதனாக அவன் படைக்கப்பட்டுள்ளான். இக்காரணத்தால், அவனைத் திருக்குறளின் திருவுருவம் என்று கூறுவது பொருந்தாது.

நிர்மலாவின் வாழ்க்கை தடம்புரண்டபொழுது, அவளை நெறிப்படுத்த – புதுவாழ்வைப் பெற – திருக்குறளின் கருத்துகள் அவளுக்கு உதவுகின்றன. அவள் உணர்ச்சியின் பிண்டமாகவே படைக்கப்பட்டிருக்கிறாள். தன் பழைய கணவரான முட ஓவியரைக் கண்ட பிறகு, அவளுடைய மனப்போராட்டம் வலுக்கிறது; இரண்டாவது கணவரான பேராசிரியர் கமலக்கண்ணனிடம் சொல்லாமல், அவள் வீட்டைவிட்டு ஓடிவிடுகிறாள். இத்தகையவளை, திருவள்ளுவர் படைத்துக் காட்டும் இலட்சியப் பெண்மணியாகக் கூற இயலுமா?

தற்காத்துக் கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

எனும் திருக்குறளுக்கு (56) அவளை இலக்கியமாகக் காட்ட இயலுமா?

இத்தகைய பெண்ணை, 'திருக்குறளே கதாநாயகியாக வடிவெடுத்தவள்' என்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்? தமிழ்ச் சான்றோராகிய மு.வ.வரதராசனார் தமிழ் மறையாகிய திருக்குறளின் கருத்துக்களை மக்களிடையே பரப்ப விரும்பினார்; அதற்குப் புதினங்களை நல்லதொரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார். மற்றும், தமிழருடைய அறிவுச் செல்வமாகிய திருக்குறளின் சிறப்பை, உலகம் உணர்ந்து போற்ற வேண்டும் என்று அவருடைய தமிழ் நெஞ்சம் துடித்தது. அதனால், அருளப்பர், அறவாழி போன்ற அறிஞர்களைப் படைத்து, திருக்குறளின் கருத்துகளை, இன்றைய வாழ்க்கையோடு இயைத்துக் காட்டும் திருப்பணியை அவர்கள் செய்வதாகக் காட்டுகிறார். அருளப்பர் தம் மகளுக்கு எழுதிய கடிதத்தில்,

இந்திய நாட்டுக்கலையில் அவ்வளவு அன்புகொண்ட அவர்களுக்குத் (அமெரிக்கர்) திருக்குறள், திருவள்ளுவர் என்ற பெயர்களும் தெரியவில்லை. திருக்குறளின் ஆழ்ந்த உண்மைகளையும் பொதுமையான அடிப்படைகளையும் விளக்கிக் கூறியபோது, அவர்கள் வியப்போடு கேட்டார்கள்; 'இதுவரையில் யாரும் இந்த நூலைப் பற்றி எடுத்துக் கூறாதது ஏன்? இது இந்த நூற்றாண்டில் தோன்றிய நூலா?' என்று சிலர் கேட்டார்கள்.[20]

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு 1950 அளவில், அமெரிக்கர்கள் திருக்குறள் என்பது என்னவென்பதை அறியாமல் இருந்த செய்தியைப் பேராசிரியர் சுட்டுகிறார். இக்கருத்தை உள்ளத்தில் கொண்டுதான், முதலில், திருக்குறளின் பெருமையை – அதன் நற்செய்தியைத் தமிழ் மக்களிடம் பரப்புவதற்காகத் தம் புதினங்களில் எல்லாம், திருக்குறளின் கருத்துகளை அவர் விரித்துரைத்துள்ளார். இதைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள், திருக்குறளையே கதாநாயகனாகவும், கதாநாயகியாகவும் மு.வ.படைத்துள்ளார் என்று குறை கூறுவது உண்மைக்கு மாறான செய்தி ஆகும்.

மற்றும், நல்லியல்புகள் வாய்ந்த பாத்திரங்களைப் படைக்கின்றபொழுது, அறநூல்கள் கூறும் சிறந்த பண்புகளின் நிலைக்களனாக அவற்றைப் படைப்பது உலகெங்கும், எழுத்தாளரிடையே காணக்கூடிய பண்பேயாகும். முற்போக்குச் சிந்தனையாளரான மு.வரதராசனார், 'மனிதப் பண்பு நல்வியல்புகளும் தீயபண்புகளும் கலந்த ஒன்றே' எனும் கருத்துடையவர். அவருடைய பாத்திரங்களுள் ஆணவரும், கேசவராயனுமே முழுமையாகத் தீய பண்புகளுடைய 'கொடியவர்களாக'ப் படைக்கப்பட்டுள்ளனர் என்பதை முன்னரே கண்டோம். மற்றப் புதினங்களில் எல்லாம், இருவகைப் பண்புகளும் இணைந்தவர்களே பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

சிலப்பதிகாரத்தில் எதிர்நிலைத் தலைவன் – கொடியவன் – (Villain) கிடையாது என்பது பேராசிரியர் மு.வ.அவர்களுடைய துணிவு.[21] அதைப்போன்றே, அவருடைய படைப்புகளில் 'கயமை', 'மண்குடிசை', எனும் இரு புதினங்களைத் தவிர, பிறவற்றுள் 'கொடியவரை'க் காண இயலவில்லை. 'அவ்வாறானால், அவருடைய பிற புதினங்களில் போராட்டமே கிடையாதா?' எனும் ஐயம் எழலாம். போராட்டம் நிறைய உண்டு. ஆனால், அது மனப்போராட்டமாகக் காட்சி தருகிறது. நுட்பமான உணர்வுகளுக்கிடையே, ஒவ்வொரு பாத்திரத்தின் உள்ளத்திலும் போராட்டம் நடைபெறுவதை ஆசிரியர் சித்திரித்துள்ளார். ஒவ்வொரு பாத்திரத்தின் உள்ள இயல்புகளுக்கேற்ப, அப்போராட்டம் வேறுபட்ட விளங்குவதாகப்

புதினங்கள் படைக்கப்பட்டுள்ளன. எனவே, திருக்குறளையே கதாநாயகனாகவும், கதாநாயகியாகவும் கொண்டு ‘கரித்துண்டு’ எனும் புதினத்தைப் படைத்துள்ளார் மு.வ.என்று துணிவது ஒரு தலைச்சார்பான முடிவாகும்.

அடுத்து, ‘பல சிந்தனைகளை மனித உருவில்லாமல் சிந்தனை உருவமாக’ப் பேராசிரியர் படைத்துத் தந்துள்ளார் என்பது இங்குச் சிந்திக்கத் தக்கதாகும். பேராசிரியர் மு.வரதராசனார், பெர்னாட்ஷாவின் பாத்திரப் படைப்பு முறையைப் பின்பற்றி, இவ்வாறு தம்மடைய பாத்திரங்களைப் படைத்துள்ளார் என்பது உண்மை.[22] ஆனால், இத்தகைய பாத்திரங்களைப் படைப்பதனால் என்ன குறையுண்டாகிவிடும் என்பதைப் பார்ப்போம்.

> வாழ்க்கையுண்மைகளையும் நீதிகளையும் கதை உணர்த்துகிறதே என்றால், நானாக முன்வந்து அவற்றைப் பிரச்சாரம் செய்யவில்லை என்பதை எண்ணிப் பார்க்கக் கோருகிறேன். என் கதைமாந்தர்கள் என்ன என்னவோ பேசிக்கொள்கிறார்கள். பேச அவர்களுக்கு உரிமை இருக்கிறது. தம்தம் வாழ்க்கைக்கு ஏற்றபடி அவர்கள் பேசிக் கொள்கிறார்கள். பேச்சில் நில நெறிகளும் உண்மைகளும் வருகின்றன. கொலைகாரன் அகிம்சையைப் பற்றி அன்புநெறியைப் பற்றி – பிரச்சாரம் செய்தால், அது பொருந்தாது. முட்டாள் ஒருவன் உயர்ந்த தத்துவம் பற்றிப் பேசினால், அது பொருந்தாது. கதை மாந்தர்களுள் ஆசிரியர் ஒருவர் வந்தால், அறவாழி போன்ற சான்றோர் ஒருவர் வந்தால், அவர் அறத்தைப் பற்றிப் பேசுவதில் தவறு என்ன?[23]

என்று ஆசிரியர் மு.வ.வினவுகிறார். ஆய்வாளர்கள்,

> மாந்தர்கள் தனித்தனிப் பண்புகளோடு படைக்கப் பட்டிருக்கிறார்களா? கதை நிகழ்ச்சிகள் உள்ளனவா கதைவளர்ந்து முடிகிறதா? கலைக்கு உரிய வடிவம் இருக்கிறதா? – உள்ளீடும் வடிவும் உண்டா? என்று ஆராய்வதே கடமையாகும்.[24]

என்னும் முறையில் புதினத்தை மதிப்பிட வேண்டுமேயொழிய, ‘பாத்திரங்கள் மனிதர்களா? சிந்தனைகளா?’ எனும் ஆராய்ச்சியில் ஈடுபடுவது பயனற்ற முயற்சியாகும். ஒவ்வொரு படைப்பாளனுக்கும் ஒவ்வொரு தனிப்பண்பு உண்டு. சிந்தனைகளைப் பாத்திரங்களாகப் படைக்கும் பண்பு மு.வ.விடம் மேலோங்கி நிற்கிறது என்பதை உணர்ந்தால் போதும். யாரோ சிலர் வகுத்த விதிகளுக்குள், பேராசிரியரின் படைப்பு அடங்கவில்லை என்பதற்காக, அதை ஒரு குறையாகக் கூறுவது பொருத்தமில்லை. ‘கலையுலகில்

கருத்தை உணர்த்த ஒரேவொரு வழிதான் உண்டு’ என்று வாதிடுவது அறிவுடைமையாகாது. அவரவர்களுடைய தேவைக்கும் பண்பிற்கும் ஏற்பப் பல்வேறு வழிகளை எழுத்தாளர்கள் படைத்துக் கொள்ளுகின்றனர். ‘அவ்வழிகள் கலைப்படைப்பின் அழகைக் குலைக்காமல் இருக்கிறதா?’ என்பதைத்தான் திறனாய்வாளர் முதன்மையாகக் கருத வேண்டும். இக்காரணங்களால், மு.வ. அவர்களின் பாத்திரப்படைப்பு ‘குறைமாத மகப்பேறு’ அன்று என்பது புலனாகும்.

இத்தகைய கருத்து ஒன்றையே,

> வரதராசனாரின் நாவல்களிலே பாத்திரங்கள் எலும்பும் தசையும் கொண்டு ஆக்கப்படுவன அல்ல. மனிதர்’ சிந்தனையின் பிரதிநிதிகளாகவே உள்ளனர். அதன் காரணமாகக் ‘கரித்துண்டு’, ‘கயமை’ முதலிய நாவல்களிலே வள்ளுவம் ஈடிணையற்ற தத்துவ நூலாகக் காட்டப்பட்டு, அதன் ஒளியில் அமைதி நிலைநாட்டப்படுகிறது.[25]

என்று டாக்டர் க.கைலாசயும் எடுத்தியம்பியுள்ளார். இக்கருத்தின் முதற்பகுதியை முதலில் காண்போம். ‘பாத்திரங்கள் எலும்பும் தசையும் கொண்டு ஆக்கப்படவில்லை’ என்பதன் பொருள் என்ன? உணர்ச்சித் துடிப்பால், தவறு செய்பவர்களாக அமைய வேண்டும் என்பதுதான் கருத்தானால், கள்ளோ காவியமோவின் தலைவி மங்கை முதற்கொண்டு, மண்குடிசையில் வரும் ரேவதி வரையில் உள்ள பாத்திரங்கள் உணர்ச்சியின் பிண்டங்களாகத்தானே காட்சி தருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வகையான தவறுகளைச் செய்கின்றனர். அதனால் உள்ளத்தோடு போராடித்தானே அவர்கள் அல்லல்படுகின்றனர். ‘மலர்விழியின்’ காஞ்சனை, ‘கரித்துண்டின்’ நிர்மலா, ‘பெற்ற மனத்தின்’ முனியம்மா, ‘வாடாமலரின்’ கனகம் முதலியோர் நம்மிடையே உயிருடன் உலவுகின்ற மக்களின் பிரதிநிதிகளாகவே தோன்றுகின்றனர்.

‘பெற்ற மனத்தின்’ முத்தன், ‘கயமையின்’ ஆணவர், ‘அகல் விளக்கின்’ சந்திரன், ‘வாடாமலரின்’ தானப்பன் போன்றோர் இன்றைய உலகின் நாம் காண முடியாதவர்கள் எனக்கூற இயலுமா? அல்லியின் கணவன் ‘சுப்புரத்தினம்’, மலர்விழியின் கணவன் ‘நாகநாதன்’ போன்றோர் பலர், இன்றைய சமுதாயத்தில் இல்லாமலா போய்விட்டார்கள்? இப்பாத்திரங்கள் உயிர்க்கலையுடையனவாகவே படைக்கப்பட்டுள்ளன என்பதைச் சொல்ல வேண்டுமோ?

எத்தகைய உள்நோக்கமும் இல்லாமல், மு.வ.அவர்களுடைய பாத்திரப் படைப்பினை ஆராய்வோர்க்கு, அப்பாத்திரங்கள்,

‘உயிருடையவர்கள் போல’ மட்டும் அல்லாமல் ‘உயிருடன் வாழ்பவராக’வே தோன்றுவர்.

‘கரித்துண்டு’, ‘கயமை’ ஆகிய இரு புதினங்களில் மட்டும், வள்ளுவம் சிறப்புமிகு தத்துவ நூலாகக் காட்டப்படவில்லை. மு.வ.அவர்களின் எல்லாப் புதினங்களிலுமே, திருக்குறளின் கருத்துகள் விளக்கப்படுகின்றன. ‘கயமை’ எனும் புதினத்தின் முன்னுரையாக, ‘கயமையை’ப் பற்றிய திருவள்ளுவர் கருத்துகள் தரப்பட்டுள்ளன. “கயவர் எப்படி இருப்பர்?” என்பதை எளிதில் புரிந்து கொள்ள அவை உதவுகின்றன. இதை ஒரு குறையாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

‘காந்திய’த்தில் நம்பிக்கை உடையவர், அண்ணல் காந்தியின் கருத்துகளைத் தம் புதினத்தின் கதைப்போக்கில் உணர்த்துவதைப்போல, பொதுவுடைமைவாதி மார்க்சின் கொள்கைகளைத் தம் புதினத்தின் கதைப்போக்கில் வெளிப்படுத்துவதைப்போல, சாதி சமய வேறுபாடற்ற நிலையில் தமிழரிடையே ஒற்றுமையை வளர்க்க முயன்ற மு.வரதராசனார், தமிழரின் பொதுமறையாகிய திருக்குறளின் கருத்துகளை வாய்ப்புக் கிடைக்கும் இடமெல்லாம் எடுத்து விளக்கியுள்ளார் எனக் கொள்ளுவதே பொருந்தும். எனவே, மு.வ. அவர்களுடைய படைப்பில் கலையழகை விட, சிந்தனைத் திறனே மேலோங்கி நிற்கிறது எனக் கூறலாமேயொழிய, கலையழகைப் பற்றிய கவலையே அவருக்கு இருந்தது இல்லை எனக் கூறுவது அறமாகாது.

பேராசிரியர் மு.வ.படைத்துள்ள பாத்திரங்களைத் (254) தொகைவகைப்படுத்தினால், அவற்றைச் சில வகையாக எளிதில் அடக்கிக் காட்டிவிடலாம். இதை ஒரு குறையாகக் கூற இயலாது. பேராசிரியருடைய அனுபவமும், சிந்தனைத் திறனும், காலச்சூழலும் இத்தகைய குறுகிய வரம்புக்கு உட்பட்ட பாத்திரங்களைப் படைப்பதற்குரிய உந்துதல் சக்திகளாக அமைந்தன எனக்கூறலாம். இந்நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில், நடுத்தர வகுப்பினரே இந்திய சமுதாயத்தில் பேரளவிற்குச் சிந்தனைத் திறனும், செயலாற்றலும் உடைய ‘பண்பாட்டின் காவலர்களாக’ விளங்கினர்.[26] எனவே, இந்திய சமுதாயத்தின் ‘நடுத்தட்டைச்’ சேர்ந்தவர்களின் ‘வாழ்க்கைப் போராட்டத்தையே’ தம் புதினங்களின் கருவாகப் பேராசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

கதைப்பின்னல்

இதனைக் ‘கதைக்கோப்பு’ எனவும் கூறுவர். கதைப்பின்னலுக்கு நிகழ்ச்சிகள் இன்றியமையாதன. நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் கொண்டே புதினம் இயற்றப்படுகிறது. புதினத்திற்கு வடிவ அழகைத் தருவது கதைப்பின்னல். கதைக் கருவும், கதைமாந்தரும்

கதைப்பின்னலுக்கு ஊடும் பாவுமாக உள்ளன. கதைப்பின்னல் புதினங்களில் எவ்வாறு அமைகிறது? கற்போரின் மனத்தில், தான் பதிய வைக்க விரும்பும் உணர்வைத் தோற்றுவிக்கும் வகையில், கதை நிகழ்ச்சிகளை முறை மாற்றிக் கலைஞன் அமைக்கின்றான். இவ்வாறு கதைக்கருவையும் நிகழ்ச்சிகளையும் கதைமாந்தரின் செயல்களைக் கொண்டு பின்னுகிற பொழுது, கதை முழுவடிவம் பெறுகிறது. முழுவடிவம் பெற்ற புதினத்தில் நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ள நிரல்முறை அமைப்பினையே 'கதைப்பின்னல்' என்பர்.[26]

நிகழ்ச்சிகளைக் கோவையாக்கி, இடையறவு படாமல் நடத்திச் செல்லும் இயல்புடையது கதைப்பின்னல். இது நிகழ்ச்சிகளைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. கதைப்பின்னல் செம்மையாக அமையாத புதினம், உப்பில்லா உணவாகிவிடும். அறிவிற்கும் உணர்ச்சிக்கும் விருந்தளிக்கும் ஆற்றல் கதைப்பின்னலுக்கு உண்டு. அது உச்சகட்டத்தை நோக்கி அழைத்துச் செல்லுதல் வேண்டும். ஆனால், வியப்பூட்ட வேண்டிய கட்டாயம் அதற்கு இல்லை.

ஆசிரியர் தங்குதடையின்றிக் கதை சொல்லும் ஆற்றலுக்கு உரமூட்டுவது கதைப்பின்னலாகும். கதையின் கட்டுக்கோப்பிற்கு இது இன்றியமையாது தேவைப்படுகிறது. முன்னுக்குப்பின் நிகழ்ச்சிகள் முரணின்றி அமையவும், இடையில் கதையமைப்பு துவண்டுவிடாமல் காக்கவும், கதையின் முடிவு நிகழ்ச்சிகளின் இயல்பான விளைவு எனத் தோன்றுமாறு செய்யவும் கதைப்பின்னல் செறிவுடையதாக அமைக்கப்படவேண்டும்,[27] கதைப்பின்னலைப் பலவாறு பாகுபடுத்துவர்.

(1) செறிவுப் பின்னல்

புதினத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மற்றொன்றைத் தழுவி வரவேண்டும்; ஒன்றன் முடிவு மற்றொன்றின் தொடக்கமாக அமைய வேண்டும். நிகழ்ச்சிகளுக்குத் தக்க இடத்தில் வாய்ப்பளித்து, ஆசிரியர் கதையை அமைக்க வேண்டும். கதையில் வரும் பாத்திரத்துடன் நிகழ்ச்சிகள் இணையும் வகையில் கால இடச்சூழல்கள் உருவாக வேண்டும்.[28]

பேராசிரியர் மு.வரதராசனாரின் 'மலர்விழி' எனும் புதினம் செறிவான கதைப்பின்னல் உடையதாகும். கதைமாந்தரின் செயல்களான நிகழ்ச்சிகள் யாவும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. எடுத்துக்காட்டாக இந்தப் புதினத்தின் பிற்பகுதியைக் காட்டலாம். 'கலக்டர்' செல்வநாயகத்தின் மறைவு, மலர்விழியின் ஆசிரியப்பயிற்சி, நாகநாதன் காஞ்சனையைத் தனியே விட்டுச் செல்லுதல், காஞ்சனையின் தற்கொலை, போரில் நாகநாதனின் மறைவு பற்றிய செய்தி வருதல் ஆகிய யாவும்

ஒன்றையொன்றைத் தழுவிய வண்ணம், கதையின் முடிவினை விரைவு படுத்துவதைக் காணலாம்.

(2) நெகிழ்ச்சிப் பின்னல்

கதை நிகழ்ச்கிகள் ஒன்றுக்கொன்று தம்முள் தொடர்புடையனவாக அமையாமல், தலைமைப் பாத்திரத்தையோ, முதன்மை நிகழ்ச்சியையோ சுற்றிச் சுழல்வது நெகிழ்ச்சிப் பின்னலாகும்.

இரண்டாவது, உலகப்போரின் கொடுமைகளை எடுத்துரைக்கும் ‘அந்தநாள்’ எனும் புதினத்தில், கதைப்பின்னல் இறுக்கமாக அமையவில்லை. பர்மாவிலிருந்து, போரின் கொடுமைக்கு அஞ்சித் தாயகம் திரும்பிய தமிழ்மக்கள் பட்ட அல்லல்களைப் படிப்பவர் மனம் கசிந்துருகுமாறு பேராசிரியர் சித்திரித்துள்ளார். ஒரு சில நிகழ்ச்சிகளே இடம்பெற்றுள்ள இப்புதினத்தில், வருணனைகளே மிகுதியாக உள்ளன.

கதைப்பின்னலை மற்றொருவகையாகவும் பாகுபடுத்துவர். மரபுவழிப்பின்னல், புதுமைப்பின்னல், முடிவிலாக் கதைப்பின்னல் என்பன அவை.

(3) மரபுவழிப்பின்னல்

அன்றாட வாழ்க்கையில் ஆசிரியர் பல நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்குகின்றார். அவற்றுள், சில அவர் மனத்தில் ஆழப்பதிகின்றன; ஆர்வத்தைத் தூண்டுகின்றன; காலப்போக்கில் அவை ஒரு கதைக்குரிய கருவை அவர் உள்ளத்தில் உருவாக்கிவிடுகின்றன. அதனோடு, அவர் உள்ளத்தில் பதிந்துள்ள அறவுணர்வுகளும், அறவோரின் சிந்தனைகளும் இணைந்து இயங்குகின்ற பொழுது கற்பனையாற்றலின் வேகத்தால் ஒரு கதைக்கோப்பு வெளிப்படும். இவ்வாறு இயல்பாக, ஆற்றொழுக்குப் போல அமையும் பின்னலே ‘மரபுவழிப் பின்னலா’கும்.[29]

மு.வரதராசனாருடைய புதினங்களுள் ‘பாவை’, ‘பெற்ற மனம்’ எனும் இரண்டும் இத்தகைய கதைப்பின்னலைக் கொண்டனவாகும். அகப்பொருள் இலக்கியம் சிறப்பித்துப் பேசும் காதலருடைய வாழ்க்கை, எவ்வாறு இன்றும் பொருந்திவரக் கூடியதாக உள்ளது என்பதைப் ‘பாவை’ வாயிலாக ஆசிரியர் அறிவுறுத்துகிறார்.

காலம் மாறலாம்: வாழ்க்கை முறைகள் மாறலாம். ஆனால், மனிதனின் அடிப்படை உணர்வுகள் மாறுவது இல்லை. இதனைத் ‘தாயின் பாசத்தின்’ மூலம், பேராசிரியர் ‘பெற்ற மனத்தில்’ எண்பித்துள்ளார். இவை இரண்டிலும், காதலும், தாய் அன்பும் கதைக்கருக்களாக அமைந்துள்ளன. இவ்விரு அடிப்படை

உணர்வுகளின் ஆற்றலையும் மாட்சிமையயும் புலப்படுத்தும் வகையில், மரபுவழிப்பட்ட – பழகிப்போன – நிகழ்ச்சிகள் சில பின்னப்பட்டுள்ளன. அவை நெகிழ்ச்சிப் பின்னலாகவே அமைந்துள்ளன. இவற்றில் புதுமையோ, கவர்ச்சியோ, கலைநயமோ காணப்பெறவில்லை. எனவே, இப்புதினங்கள் இரண்டும் ‘மரபுவழிப் பின்னலுக்குச்’ சிறந்த காட்டுகளாகத் திகழுகின்றன. இவை ஒரே குறிக்கோளை, எளிய சிக்கல்கள் சிலவற்றைக் கொண்டு அறிவுறுத்துவதால், கதைப்பின்னலும் கவர்ச்சியாக அமையவில்லை; பாத்திரப்படைப்பும் சிறப்புறவில்லை.

(4) புதுமைப்பின்னல்

கதையின் வடிவம் எவ்வாறு அமைய வேண்டும் எனும் எண்ணத்தால் உந்தப்பட்டு, முன்கூட்டியே கதையின் போக்கினை மனத்தகத்தே செம்மையாகத் திட்டமிட்டுக் கொண்டு அதற்குத் தேவையான காரணங்களையும் நிகழ்ச்சிகளையும் ஆசிரியர் அமைக்கும் முறையே ‘புதுமைப் பின்னலாக’ அமையும். இத்தகைய கதைகள் பெரிதும் உய்த்துணர் நிலையில் ‘குறியீட்டு’ உருவங்களாக அமைந்து உள்ளார்ந்த கருத்துகளைப் புலப்படுத்தும்.[30]

இத்தகைய ‘புதுமைப்பின்னலை’ ஓரளவிற்கு மு.வ.வின் கரித்துண்டு, அகல்விளக்கு, ‘கயமை’ வாடாமலர், மண்குடிசை எனும் புதினங்களில் காணலாம். இப்புதினங்களின் பெயர்களே, குறியீட்டு உருவங்களாக உள்ளதை நாம் முன்னரே கண்டோம். ‘கரித்துண்டில்’ ஓவியக்கலைஞர் ஒருவரின் அவல வாழ்வோடு கற்பு நிலை பற்றிய புதுமைக்கருத்தை இணைத்துக் கதையின் போக்கினை ஆசிரியர் முதலிலேயே திட்டம் வகுத்துக் கொண்டுள்ளார். பிறகு, இக்கதைக் கருவிற்கு ஒளியூட்டத்தக்க நிகழ்ச்சிகள் சிலவற்றை, இதனோடு சேர்த்துப் பின்னியுள்ளார். இதன் விளைவாகக் கலைநயம் வாய்ந்த கதையொன்று புதுமைப் பின்னலையுடைய புதினமாக மலர்ந்துள்ளது.

கயமை, அகல்விளக்கு, வாடாமலர், மண்குடிசை எனும் புதினங்களிலும் இத்தகைய கதைப்பின்னலைக் காணலாம். இவற்றை விரிவாக முன்னரே கண்டோம். இக்கதைகள் யாவும் புதுமையான முறையில் முடிவுறுகின்றன. இவற்றில் சுட்டிக்காட்டப்படும் சமுதாயச்சீர்கேடுகள் தூங்குபவனையும் விழித்தெழுமாறு செய்யும் ஆற்றல் வாய்ந்தனவாக உள்ளன.

இவற்றுள் ‘கயமை’ எனும் புதினம் மனிதனுடைய கீழ்த்தரமான உணர்வை வெளிப்படுத்துகிறது. இப்பெயரே, ஒரு பண்புப் பெயராக உள்ளது. ‘கரித்துண்டு’, ‘அகல்விளக்கு’, ‘வாடாமலர்’ என்பன அஃறிணைப் பெயர்கள் ஆயினும், குறியீட்டுப் பெயர்களாக அமைந்து

அரிய உண்மைகளை, உயர்ந்த கருத்துகளை உணர்த்துகின்றன. இவற்றின் 'கதைப்பின்னல்', 'இப்படியும் நடக்க இயலுமா?' எனும் வியப்பையும் திகைப்பையும் ஊட்டுவனவாய் உள்ளன.

(5) முடிவிலாக் கதைப்பின்னல்

புதினங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் மூலம் சிக்கலை உருவாக்குவது கதைக்கோப்பிற்கு ஊற்றம் அளிக்கும் முறையாகும். புதினத்தில் எழுப்பப்படும் சிக்கல்களுக்குச் சில சமயங்களில் ஆசிரியர் தீர்வுகாண்பது உண்டு. பல சமயங்களில் தீர்வினைத் தெளிவாக எடுத்துரைக்காமல் கதையை முடிப்பதும் உண்டு. இவ்வாறு பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லாமல் செல்லும் முறையே, 'முடிவிலாக் கதைப்பின்னல்' எனப்படும். இத்தகைய புதினங்களை, 'தீர்வாய்வுப் புதினம்' (Problem Novel) என்பர்.[31]

இன்றைய சமுதாயத்தின் சீர்கேடுகளையும், பயன்மதிப்புகளில் பற்றும், மதிப்பும் கொள்ளாமல் தன்னல வேட்கையோடு இன்றைய சமுதாயம் இயங்கி வருவதையும் தம்முடைய புதினங்களில் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

> இன்று உள்ள சமுதாயம் மண்குடிசை போன்றது. அதில் எலிகள் வளை தோண்டமுடிகிறது பெருச்சாளிகள் கடைக்காலையே தோண்டுகின்றன. பலவகைப் பூச்சிகளும் குடிபுகுகின்றன. எல்லாம் சேர்ந்து குடிசையைப் பாழாக்க முடிகிறது. மண்குடிசையாக உள்ளவரையில் இவைகளைத் தடுக்க முடியாது. ஒன்று குடிசையைவிட்டு, இயற்கையோடு இயற்கையாய்க் குகையில் தங்கி வெட்ட வெளியில் திரிய வேண்டும். அல்லது, ஒழுங்கான வீடுகட்டி வாழ வேண்டும்; அப்போது எலிகள் முதலியன தோன்றிய வளர முடியாது.[32]

என்று அவர் அறிவிக்கிறார். ஆனால், 'மண்குடிசையாக' உள்ள சமுதாயத்தை, கல்வீடாக' மாற்றுவதற்குரிய வழி வகைகளைப் பேராசிரியர் வகுத்துரைக்கவில்லை. இதற்கு மாறாக, அறிவை வளர்ப்போம்; அறநெறியைப் பரப்புவோம் அங்கங்கே நல்ல விதைகளைத் தூவிச் செல்வோம்! என்னும் அறவுரை கூறுவதோடு கதையினை ஆசிரியர் முடித்துவிடுகிறார். இவ்வாறு தீர்வு காண வேண்டியவற்றிற்குத் திட்டவட்டமாக வழிமுறைகளைக் காட்டாது, கதையை முடித்துவிடும் புதினங்களில் 'முடிவிலாக் கதைப்பின்னல்' இடம்பெறுவதைக் காணுகின்றோம்.

அலுவலகங்களில் நடைபெறும் முறைகேடுகளையும், அதிகாரிகளின் நயவஞ்சகத் தன்மை நிறைந்த கொடுங்கோன்மையைச் சித்திரிக்கும் வகையில் பேராசிரியர் மு.வரதராசனார் 'கயமை'

எனும் புதினத்தைப் படைத்துள்ளார். ஆனால், இக்குறைபாடுகளை நீக்குவதற்கும் போக்குவதற்கும் உரிய வழிமுறைகளை அவர் கோடி காட்டாமலேயே, கதையை முடித்துவிடுகிறார். வெங்கடேசன் எனும் கிளைப்பாத்திரத்தின் மூலம், 'இந்த உலகம் இப்படித்தான் இருக்கும். இறைவனின் படைப்பிலேயே நன்மையும் தீமையும் கலந்துள்ளன' எனும் கருத்தினை அறவுரையாக ஆசிரியர் அருளியுள்ளார்.

இதைப்போன்றே, 'பழியும் பாவமும்' எனும் புனைகதை அமைந்துள்ளது. மதுவிலக்கில் அசைக்க முடியாத நம்பிக்கை ஆசிரியருக்கு உண்டு. ஆனால், அதை நடைமுறைப்படுத்தும் பொழுது உண்டாகும் சீர்கேடுகளையும், கொடுமைகளையும் ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார். அவற்றைத் தவிர்ப்பது எப்படி என்பதையோ, திருட்டுத்தனமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சும் 'குடிசைத் தொழில்' பெருகிக் கொண்டே வருவதனால், 'மதுவிலக்குக் கொள்கையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தலாமா அல்லது கைவிடலாமா என்பதையோ துணிந்து ஆசிரியர் கூறவில்லை; படிப்போரின் 'தீர்வாய்வுக்கே' அதனை விட்டுவிடுகிறார் சமுதாய நிகழ்ச்சிகளை ஆசிரியர் காட்டுகிறார். அவற்றின் பின்னணியைப் புரிந்து கொள்ளுமாறு செய்கிறார்; பிறகு அவற்றிற்குரிய காரணங்களை அறிந்து கொள்ளுமாறு தூண்டுகிறார். ஆனால், அக்கொடுமைகளுக்கு, தீமைகளுக்கு, அநீதிகளுக்கு முடிவு காண்பதற்குரிய வழிவகைகளை, நெறிமுறைகளை அவர் வகுத்துத் தரவில்லை; கோடிகாட்டவும் இல்லை! எனவே, நடப்பியலை எதிரொலிக்கும் மெய்ம்மையப் போக்குடைய புதினங்களாகவே இவை தோன்றுகின்றன. நாமே அவற்றிற்குரிய 'தீர்வுகளை'க் காணவேண்டியவர்களாக உள்ளோம். இத்தகைய புதினங்களில் 'முடிவிலாக் கதைப்பின்னல்' சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

ஆர்வநிலை

கதைப்பின்னல் செறிவாகவும் செம்மையாகவும் அமையுமானால், அதில் 'ஆர்வநிலை' நன்கு இடம்பெறும். படிப்போருடைய ஆர்வத்தைத் தூண்டி, 'அடுத்து என்ன நிகழப்போகிறது?' என்பதை அறியத் துடிக்கும் மனப்போக்கை உருவாக்குவதே 'ஆர்வநிலை' எனப்படும். மு.வரதராசனாரின் புதினங்களில் பொதுவாக 'ஆர்வநிலை', 'கள்ளோ காவியமோ?' 'மலர்விழி', 'கரித்துண்டு', 'அகல்விளக்கு', 'வாடாமலர்' போன்றவற்றுள் முனைப்பாக இடம்பெற்றிருக்கிறது. இதனால், இப்புதினங்கள் கற்பவர் உள்ளத்தைத் தொடுவனவாகவும், கருத்தைக் கவருவனவாகவும் உள்ளன.

பலதிறப்பட்ட கதைக் கருக்களைக் கொண்ட பல்வேறு நிலையிலும், 'கதைப்பின்னலை' எவ்வாறு ஆசிரியர் அமைத்துள்ளார்

என்பதைக் கண்டோம். தம்முடைய உள்ளவுணர்வுகளையும், விழைவார்ந்த கருத்துகளையும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் 'கதைப்பின்னலை' ஆசிரியர் அமைத்துள்ள திறம், கருத்து விளக்கப் புதினங்களுக்கு ஊற்றம் அளிப்பனவாக உள்ளன. இனி, பேராசிரியரின் கதைகூறும் முறைகளைக் காண முயலுவோம்.

கதை கூறும் முறை

கதை கூறும் முறை பலவகைப்படும். நிகழ்ச்சிகளை – கதையின் போக்கினை எடுத்துரைக்கும் முறையிலேயே படைப்பாசிரியரின் கலைத்திறன் வெளிப்படும். தம்முடைய கதையைப் புதின ஆசிரியன் எடுத்துரைக்கும் முறையை "நோக்கு நிலை" (Point of View) எனத் திறனாய்வாளர் கூறுவர். புதினத்தைத் தொடங்கும் நிலையிலிருந்து முடிக்கும்வரை கதையாசிரியர் எவ்வெவ்வாறு கதையை எடுத்துரைக்கிறாரோ அதற்கு ஏற்ப 'நோக்கு நிலையும்' மாறுபடும். புதினப்படைப்புக் கலையில் 'நோக்கு நிலை' சிறப்பிடம் பெறுகிறது. அது ஒரு சிக்கலான முறையாகவும் கருதப்படுகிறது. கதைக்கும், கதையை எடுத்துரைப்பவருக்கும் இடையே நிலவும் உறவுமுறையைப் புலப்படுத்துவதே 'நோக்கு நிலை' என்று விளக்கம் தருவர். இதனால், கதையை எடுத்துரைக்கும் கலையே – கதை நிகழ்ச்சிகளை நிரல்படத் தெரிவிக்கும் முறையே, நோக்குநிலை என்பது தெளிவாகிறது.

நோக்கு நிலைகள் பலவகைப்படும். பொதுவாக 'எல்லாம் அறிந்த நோக்கு நிலை' (Omniscient Point of View), 'எல்லைக்குட்பட்ட நோக்கு நிலை' (Limited Point of View) என இருவகையாகப் பகுப்பது மரபு.[33] கதை கூறுபவர் எல்லாவற்றையும் அறிந்தவராகவும் தெரிந்தவராகவும் இருப்பவராகத் தோன்றினால், அதற்காகப் பயன்படுத்தப்படும் நோக்கு நிலையே 'எல்லாம் அறிந்த நோக்கு நிலை, எனப்படும். படிப்பவர், இம்முறையில் கதை கூறுபவருடைய ஆளுமையைப் பற்றிய உணர்வு அற்றவராக இருப்பர். மற்றும், பல்வேறு பாத்திரங்களின் தனிப்பட்ட எண்ணப் போக்குகளைப் படம்பிடித்துக் காட்டுவதில் ஆசிரியர் ஈடுபடும் பொழுது, அம்முயற்சியால் சிறிதும் வாசகர் பாதிக்கப்படுவது இல்லை. இம்முறை ஒருவகை வழக்காற்று உடன்பாட்டால் கதையுலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 'எல்லாம் அறிந்த நோக்கு நிலை' பதிப்புமுறையாகவோ, புறவயமாகவோ அமையும். பாத்திரங்களின் நடத்தையை மதிப்பிடுவதன் மூலம் அவற்றின் செயல்களின் சிறப்பியல்புகளைச் சுட்டிக்காட்டி, கதையாசிரியர் விளக்கவுரை கூறிச்சென்றால், அதனைப் 'பதிப்புமுறை – எல்லாம் அறிந்த நோக்கு நிலை' என்பர். நாடக நலமிகு பாத்திரப் படைப்புடன் விளக்கவியல் பண்பினை இணைத்து இந்த நோக்குநிலையை உருவாக்கலாம்.

பதிப்புமுறை நோக்குநிலை

பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களில், ‘பாவை’யிலும் ‘கயமை’யிலும் ‘பதிப்புமுறை – எல்லாம் அறிந்த நோக்கு நிலை’ இடம்பெற்றுள்ளதைக் காணுகின்றோம். (கயமையின்) ‘கொடிய பாத்திரம்’ ஆணவர். அவரை ஆசிரியரே அறிமுகப்படுத்துகிறார். அலுவலகத்தில், தம் கீழ் வேலை செய்யும் எழுத்தர்களிடம் அவர் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார் என்பதைச் சித்திரித்துள்ள முறை, நம்கருத்தைக் கவருவதாகும். இந்த நோக்குநிலையின் மூலம் ஆசிரியர் விளக்குகின்ற பொழுது, ஆணவரின் அடிமனத்து எண்ணவோட்டத்தையும், மறைமுகமாக அவர் செய்யும் சதித்திட்டங்களும் நமக்கு எளிதில் புலனாகின்றன. தம்முடைய பாத்திரங்களின் பண்புகளைப் பற்றற்ற முறையில் ஆசிரியர், இந்நோக்கு நிலையில் படம்பிடித்துக் காட்டுகிறார். அவர்களுடைய உணர்வுகளையும் எண்ணங்களையும், புலன்நுகர் வெறியையும் தீய நோக்குடைய செயல் திட்டங்களையும் ஆசிரியர் பகுத்துப் பகுத்துக் காட்டுகிறார். அடிக்கடி ஆணவர், கனகலிங்கம், வசீகரம், மென்மொழி, நல்லய்யன் போன்றோரைக் குறித்து, நம்பத்தகுந்த நடத்தை இயல்புகளை அவர் அறிவுறுத்துகிறார்.

> கனகலிங்கம் ஆணவருக்கு இளமை முதல் நண்பர். ஆணவரைப் போலவே உடம்பும் உள்ளமும் தடித்து வளரப் பெற்றவர். கொள்கையும் ஏறக்குறைய ஆணவரைப்போலவே உடையவர். அதாவது கொள்கை என்று ஒன்றைப் போற்றாமல், வாழ்க்கையில் எப்படியாவது முன்னேறுவதையே கொள்கையாகக் கொண்டவர்.[34]

என்பது ஆணவரைப் பற்றிய சொல்லோவியமாகும். இங்கே விளக்கவியல் பாத்திரப்படைப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கனகலிங்கத்தையும் ஆணவரையும் ஒப்பிட்டுக் காட்டும் பொழுது, ஆசிரியர் நாடக நலமிகு வருணனை முறையையும் கையாண்டுள்ளார்.

பேச்சு, செயல்கள் மூலம் தங்களுடைய பண்புநலனை வெளிப்படுத்துமாறு இப்பாத்திரங்களை ஆசிரியர் படைத்துள்ளார். ஆசிரியர் எட்டிநின்று அவர்களை இயங்க வைக்கின்றார். மற்றும், புதினத்தில் வரும் பிற பாத்திரங்களின் கதையளப்புகளாலும், துணிவுரைகளாலும் அப்பாத்திரங்களின் பண்புகளைப் பிறகதைமாந்தரே வெளிப்படுத்துமாறும் செய்துள்ளார். கனகலிங்கத்திற்கும் ஆணவருக்கும் இடையே நடக்கும் உரையாடல், அவர்களுடைய பண்புநலனை வெளிப்படுத்துகிறது. இவற்றோடு, வெங்கடேசன் ஆணவரைப் பற்றிச் சொல்லும் செய்திகள், அவருடைய பண்பு நலனை வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டுகின்றன.

இதைப்போன்றே, ‘பாவை’ எனும் புதினத்தின் முதல்மூன்று இயல்களில், ஆசிரியரே கதையைக் கூறிச் செல்லுகிறார். பிறகு, பழனிக்கும் ஏகாம்பர செட்டியாருக்கும் இடையே நடைபெறும் உரையாடல்களை அவர் விளக்கமாக எடுத்துரைக்கும் முறையைப் புகுத்தியுள்ளார். இதன்பிறகு, உரையாடல் முறையிலேயே கதையைக் கொண்டு செலுத்துகிறார். இறுதியில் மீண்டும் ஆசிரியரே கதையைக் கூறி முடிக்கிறார். இந்த நோக்கு நிலையால் பாத்திரங்களின் பண்புகளை முழுமையாக நம் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த ஆசிரியரால் முடிகிறது.

படர்க்கைக் கூற்றுமுறை

இந்த முறையைப் ‘படர்க்கை கூற்று நோக்கு நிலை’ (Third Person Point of View) எனவும் சுட்டுவர். ஆசிரியரே படர்க்கை இடத்தில் நின்று, கதையைக் கூறிச் செல்லுவதால் இப்பெயரும் இதற்குப் பொருந்துவதாகும்.[35]

‘பெற்ற மனத்’தில் ஆசிரியர் மு.வ.புறவய, எல்லாம் அறிந்த நோக்கு நிலையைப் பயன்படுத்தியுள்ளார். பாத்திரங்களின் செய்திகளைப் பற்றி எத்தகைய கருத்தையும் தெரிவிக்காமல், ஆசிரியர் ஒதுங்கி நின்று பாத்திரங்களை மட்டும் காட்டும் முறையையே ‘புறவய நோக்கு நிலை’ என்பர். ‘பெற்ற மனத்தில்’ தேமொழியும் சீராளரும், தேமொழியும் கந்தனும் உரையாடும் பகுதிகள் பல உள்ளன. எனினும் படர்க்கைக் கூற்று நோக்கு நிலையே இப்புதினத்தில் முதன்மை இடம் பெறுகிறது. எனவே, இப்புதினம் ‘புறவயப் படர்க்கைக் கூற்று நோக்கு நிலையில்’ அமைந்ததாகக் கூறலாம். முனியம்மாள் எனும் பாத்திரத்தைப் பற்றி ஆசிரியர் ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால், அவளுடைய செயலையும் பேச்சையும் சித்திரிப்பதன் மூலம், ஆசிரியர் பல்வேறு செய்திகளை அறிவுறுத்தியுள்ளார். இத்தகைய படர்க்கைக் கூற்றுமுறை, படிப்போரைப் பற்றற்ற முறையில் நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் சீர்த்தூக்கிப் பார்த்து உண்மையை அறிய உதவுகிறது.

முதன்மைக் கதைமாந்தர் கதையைச் சொல்லுதல்

இனி, ‘எல்லைக்குட்பட்ட நோக்கு நிலை’ எவ்வாறு மு.வரதராசனாரால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்போம். முதன்மையான கதைமாந்தரே, கதை கூறும் நோக்கு நிலை (Protagonist narrator Point of View) என்னும் முறை ‘எல்லைக்குட்பட்ட நோக்குநிலையில்’ சிறப்புடையதாகும்.[36] ‘அல்லி’, ‘நெஞ்சில் ஒரு முள்’, ‘மண்குடிசை’ எனும் மு.வ.வின் புதினங்கள் இவ்வாறு அமைந்தனவாகும். இவற்றில் முதன்மைப் பாத்திரங்களின் உள்ளப்போராட்டமே சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

முதன்மைக் கதைமாந்தரின் மென்மையான உள்ளவுணர்ச்சிகளையும், அவற்றால் உண்டாகும் போராட்டத்தையும் படம்பிடித்துக் காட்ட மிகவும் பொருத்தமாகவும் வசதியாகவும் அமைவது, இந்த நோக்குநிலையே யாகும். ‘நெஞ்சில் ஒரு முள்’ எனும் புதினத்தின் தலைவியான ‘வடிவு’ எனும் பெண்ணின் உள்ளப் போராட்டத்தை ஆசிரியர் சித்திரிக்குந் திறனைக் காண்போம்:

> என் உள்ளத்தில் புதிய போராட்டம் இப்படித் தொடங்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. என் வாழ்க்கைத் தவறு என்னோடு நிற்காமல், வயிற்றில் பிறந்த மகனையும் தாக்குமளவிற்கு வளர்ந்ததே என்று கவலைப்பட்டேன். என்னென்னவோ எண்ணினேன். எண்ணி எண்ணிக் குழம்பினேன். அதன்பிறகு யாரோடும் வாய்விட்டுப் பேச முடியவில்லை. உள்ளம் வேதனையில் ஆழ்ந்தது. அண்ணனும் தங்கையும் மணந்து கொள்வதாக முடிகிறதே! இதை எப்படிச் சொல்லித் தடுப்பது என்று அலமந்தேன்... என் மனம்பட்ட துன்பத்திற்கு அளவு இல்லை. எரிமலையிலிருந்து நெருப்புக் குழம்பு அடுத்தடுத்து வெளிவருவது போல், பொல்லாத துன்ப நினைவுகள் கிளம்பிக்கொண்டே இருந்தன. மனத்தில் ஆழத்தில் குமுறல் இருந்து வந்தது.[37]

வடிவின் இம் மனப்போராட்டத்தை வேறெந்தக் கதை மாந்தராலும் இவ்வளவு நுட்பமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்க இயலுமா? இயலாது என்பது வெளிப்படை. ஒருவருடைய உள்ளப் பொருமலையும், உணர்ச்சிக் கொந்தளிப்பையும், மனப்போராட்டத்தையும், புறத்தே உள்ளவர்கள் யாராலும் எடுத்துரைக்க இயலாது என்பது நாடறிந்த உண்மை. மனப்போராட்டத்தால் துன்பப்படுபவர்தான், தன்னுடைய மனப்போராட்டத்தை – உணர்ச்சிக் கொந்தளிப்பை முழுமையாக எடுத்துரைக்க இயலும். சிறந்த சிந்தனையாளரும், கூர்ந்த மதியுடைய திறனாய்வாளருமான பேராசிரியர் மு.வரதராசனார், இந்த உண்மையை நன்கு உணர்ந்து இருந்தார். எனவே, உள்ளப் போராட்டத்தையே மையமாகக் கொண்ட இந்த மூன்று புதினங்களையும், அவர் ‘முதன்மை மாந்தர் – கதை கூறும் நோக்கு நிலையில்’ அமைந்துள்ளதில் வியப்பிற்கு இடமில்லை.

‘அல்லி’ எனும் புதினத்தைப் பார்ப்போம். அதன் கதைத்தலைவி அல்லி. அவளே, தன்னுடைய கதையைப் பல்வேறு கோணங்களில் நின்று, எடுத்துரைக்கிறாள். நாம் நேராக அல்லியைப் புரிந்து கொள்ளுகின்ற அளவிற்குச் சுப்புரத்தினத்தையோ, இன்பவல்லியையோ, சோமுவையோ, டாக்டர் பரமேசுவரியையோ புரிந்து கொள்ள இயலவில்லை. இதற்குக் காரணம், நாம் அவர்களுடைய மனப்போராட்டங்களை, அவர்களுடைய

வாயிலாக அறிந்து கொள்ள இயலாதவர்களாக உள்ளோம். அவர்களுடைய உள்ள உணர்வுகளை, முழுமையாக அல்லியால் அறிந்து கூற இயலாமையே இதற்குரிய காரணமாகும். எனவேதான், இப்புதினத்தில் ஆசிரியர் மு.வ. 'கடிதங்கள்', 'நாட்குறிப்பு', திறந்த உள்ளத்தோடு கூடிய உரையாடல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தி, அந்தப் பாத்திரங்களின் மனக்குகையில் மறைந்து கிடக்கும் 'மறைபொருள்களை – உணர்வுகளை' வெளிக்கொணர முயலுகிறார்.

சோமுவின் மனவேதனை, அவனுடைய நாட்குறிப்பில் இடம்பெற்றுள்ள 'பாவ மன்னிப்பு வேண்டுதல்களின்' மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இன்பவல்லி எனும் மங்கை நல்லாள் அறவாழியிடம் கொண்டிருந்த காதலை, அல்லிக்கு அவள் எழுதியுள்ள கடிதம் ஒன்றினாலேயே அறிய முடிகிறது. கதையைக் கூறுகிற அல்லிக்கே, இன்பவல்லியின் கடிதம் கிடைக்கும் வரை இந்தச் செய்தி தெரியாது. ஓரளவிற்குத்தான், அவனுடைய செயல்களால் சுப்புரத்தினத்தின் பண்பு நலன் வெளிப்படுகிறது. ஆனால், அவன் சுலோசனாவிற்கு எழுதிய கடிதத்தினாலேயே அவனுடைய 'பரமரகசியங்கள்' பல வெளிப்படுகின்றன. வாழ்வின் எல்லையை எட்டிய சமயத்தில் தான் செய்த குற்றங்களுக்காக சுப்புரத்தினம் வருந்திக் கண்ணீர் விடுதலும், அதன்பிறகு மாறிய புதுமனிதனாக வாழ முயல்வதும் அவனுடைய நாட்குறிப்பேட்டில் இடம்பெற்றுள்ள வாழ்க்கைக் குறிப்புகளாலேயே தெரியவருகின்றன. மற்றும், பிற கதைமாந்தர் அவ்வப்போது வெளியிடும் கருத்துகளாலும் ஓரளவிற்கு அவனைப் புரிந்து கொள்ள முடிகிறது.

'மண்குடிசை' எனும் புதினத்திலும் மனப்போராட்டம் முக்கிய இடம் பெறுகிறது. இப்புதினத்தின் தலைவனான மெய்யப்பனுடைய உளப்போராட்டமே கதையாக உருவெடுக்கிறது. அவனே கதையைச் சொல்லுவதால் பிறருடைய உள்ளப் போராட்டங்களை நாம் அறிய இயலவில்லை. சிறப்பாகக் கேசவராயன், அவனுடைய நண்பர்கள் ஆகியோரின் அடிமனத்தில் உறையும் உணர்வுகள் வெளிப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமலே போய்விடுகிறது. உருத்தெரியா மனிதனாக மெய்யப்பன் உலவுகிறபொழுது, அவர்களுடைய உரையாடல்களை அவன் ஒட்டுக் கேட்கின்றான். அந்நிலையிலேயே ஓரளவிற்கு நாம், அவர்களுடைய எண்ணங்களை அறிய இயலுகிறது.

இந்த 'முதன்மையான கதைமாந்தரே கதைகூறும் நோக்குநிலையில்' மேற்கண்ட சில குறைகள் இடம்பெற்று விடுகின்றன. தலைமைக் கதை மாந்தர், எண்ணுவதையும், செய்வதையும், சொல்லுவதையும், கதைப்போக்கில் எடுத்துக் கூற இயலுகிறது. மற்றவர்கள் செய்வதைப் பார்த்தும், சொல்லுவதைக்கேட்டும் அத்தலைமைக் கதை

மாந்தர் கதையை எடுத்துரைக்க இயலும். ஆனால், நீண்டதும் சிக்கலானதுமான புதினங்களில் இம்முறை விறுவிறுப்பாகவும் அமையாது; சுவையும் பயக்காது. எனவே, அத்தகைய புதினங்களில், ஆசிரியர் பல்வேறு முறைகளைக் கையாள வேண்டியுள்ளது. இதனால், பல்வேறு நோக்குநிலைகளில், இந்த முறையும் ஒன்றாக அமையுமேயொழிய, முதன்மை இடத்தைப் பெற இயலாது. எனினும், குறிப்பிட்ட சில கதைமாந்தரின் உள்ளப் போராட்டத்தை உணர்த்த – வெளிப்படுத்த – இதைவிடச் சிறந்த நோக்குநிலை இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறு கதைத் தலைவரே – முதன்மைக் கதைமாந்தரே, தங்கள் வாழ்க்கையைக் கூறுவதுபோல் அமைந்த புதினங்களைத் 'தன்மைக் கூற்றுத் தலைமை நோக்குநிலை' (First Person Central or Participant Point of View) யுடையன[38] என்பர்.

தன்மைக்கூற்று.. நோக்குநிலை

கதைத் தலைவனும் தலைவியும் மாறிமாறிக் கதையைக் கூறுவதுபோல் அமைந்த புதினமும் இந்த வகையைச் சேர்ந்ததேயாகும். புதினத்தின் சிக்கலைப் புரிந்து கொள்ளுவதற்கும், கதையின் கருவினைப் படிப்போர் எளிதில் அறிந்து கொள்ளுமாறு செய்வதற்கு ஏற்றது 'தன்மைக்கூற்றுத் தலைமை நோக்குநிலையே' யாகும்.

இதை நன்குணர்ந்தவர் பேராசிரியர் மு.வரதராசனார் என்பதைக் 'கள்ளோ? காவியமோ?' எனும் புதினத்தின் அமைப்பினால் அறிகிறோம். இந்தப் புதினத்தில் 'குடும்பச் சிக்கல்' ஒன்று இடம்பெறுகிறது. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே எழும் 'போராட்டத்தை' அருளப்பரும், மங்கையும் மாறிமாறி எடுத்துரைக்கின்றனர். பெண்ணின் மென்மையான மன உணர்வுகளை அவளால்தான் உருக்கமாக வெளிப்படுத்த இயலும். பெருமிதமும் உள்ளவுரனும் வாய்ந்த ஆடவனுடைய உள்ளவுணர்வுகளை, ஓர் ஆடவனாலாயே எடுத்துரைக்க இயலும். இதனால்தான் புதின ஆசிரியர் 'அருளப்பர்' எனும் கதைத்தலைவனும், 'மங்கை' எனும் கதைத் தலைவியும் மாறிமாறிப் பேசுவதாகக் கதையை அமைத்துள்ளார்.

மற்றும் காதலருடைய தனிவாழ்க்கையை – காதல் வாழ்க்கையின் கூடலையும் ஊடலையும் – மூன்றாவது மனிதர் அறிந்ததாகக் காட்டுவது அகப்பொருள் இலக்கண மரபாகாது. புதின ஆசிரியரான டாக்டர் மு.வ.அவர்கள், பண்டைத் தமிழ் அகப்பொருள் இலக்கியத்தின் மூழ்கித் திளைத்தவர்; அகப்பொருள் மரபுகளின் நயத்தினை நுட்பமாக உணர்ந்தவராவர்.

இதனைக் கதைத்தலைவன் அருளப்பன் வாயிலாக “நானும் அவளும் வேறுதான். எங்கள் உறவிலும் உள்ளன்பிலும் தலையிட வேறு எவருக்கும் உரிமை இல்லை” என்று ஆசிரியர் அறிவிக்கிறார். இக்காரணத்தாலேயே, ஆசிரியர் இப்புதினத்தைத் தலைமை மாந்தர் கூற்றாகவே அமைத்துள்ளார் எனக் கருதத் தோன்றுகிறது. ‘ஒருவர் பொறை இருவர் நட்பு’ (நாலடி.222) எனும் முதுமொழியைக் கருவாகக் கொண்டே இக்கதை அமைக்கப்பட்டுள்ளது. ‘காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட’ இன்ப வாழ்க்கையில் கருத்துவேற்றுமை தோன்றுகிறது; ஒருவர் மற்றொருவரைத் தவறாகப் புரிந்து கொள்ளுகின்றனர். இதனை,

> நான் ஆத்திரக்காரன்தான். வருமுன் காக்கும் அறிவு எனக்கு இல்லை. அதனால்தான் பொல்லாத குற்றம் செய்தேன். ‘குற்றம் செய்தேன்’ என்று அவள் எழுதினாள்; குற்றவாளி நான்தானே! ஆசிரியர் சொல்லியும் கேளாமல் அவள் அன்பாக நெருங்கி வந்ததையும் பொருட்படுத்தாமல், அவளுடைய மனத்தைப் புண்படுத்தியவன் நான்தான்.[39]

என்று அருளப்பர், தன் தவறை உணர்ந்து வருந்தும் நிலை அவருடைய குறைபாட்டையும், குற்றத்தை ஒப்புக்கொள்ளும் உயர்ந்த பண்பையும் வெளிப்படுத்துகிறது.

இவ்வாறே, கதைத் தலைவி மங்கையும்

எவ்வளவோ எண்ணினேன். முருகையாவின் அன்புமொழி என் மனத்தை உடனே மாற்றிவிட்டது. ஆனால், அவருடைய மனத்தைச் சிறிதும் மாற்ற முடியவில்லை...

> எனக்கு அறிவு வளர்ந்தது பெரிய தவறு ஆயிற்று. அறிவு நுட்பமாக இருந்ததால், இப்படி நேருமே அப்படி ஆகுமே என்று என்ன என்னவோ எண்ணலானேன். அந்த அறிவு இல்லாதிருந்தால், கண்ணீர் விட்டுக் கொண்டு ஒரே எண்ணத்தை எண்ணிக் கொண்டு, கவலை இல்லாமல் இருந்திருப்பேன். நுட்பமான அறிவு தான் – அவருடைய தந்தையாலும் அவராலும் தூண்டப்பட்டு வளர்ந்த அறிவுதான் – என் மனத்தில் பல புதிய சிக்கல்களை ஏற்படுத்தியது.[40]

என்று எண்ணியெண்ணி ஏங்குவது, அவளுடைய பண்பு நலனை அறிய உதவுகிறது. இவ்வாறு சிக்கலான உள்ளப் போராட்டத்தை உணர்த்த ஆசிரியர், ‘தன்மைக்கூற்றுத் தலைமை நோக்குநிலை’யை நேர்த்தியாகப் பயன்படுத்தியுள்ளார்.

பன்முக நோக்குநிலை

புதினத்தில் இடம்பெறும் பல்வேறு கதைமாந்தரும், மாறிமாறிக் கதையைச் சொல்லுவதைப்போல அமைப்பது மற்றொரு கதைகூறும் முறையாகும். இதனைப் ‘பன்முக நோக்குநிலை’ என்பர். இத்தகைய கதைகூறும் முறை, தொடக்ககால ஆங்கிலப் புதினங்களில் காணப்பட்டன. பேராசிரியர் மு.வரதராசனாரின் தொடக்ககாலப் புதினங்களான ‘செந்தாமரை’யிலும், ‘அந்த நாளி’லும் இந்தக் கதை கூறும் உத்தி கையாளப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். இப்புதினங்களில், ஒரேவொரு கதைக்கரு சிறப்புற்று விளங்குமாறு படைக்கப்பட்டுள்ளது. ‘பல்வகைக் காதல்’ நிலைகளைச் ‘செந்தாமரை’யிலும், ‘போரின் கொடுமையை’, ‘அந்த நாளிலும்‘ ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். இதனால், ஒரே கருத்தை, உணர்வைப் பல்வேறு கதைமாந்தர்கள் (உலகில் ஒரு சிக்கலைப் பல வகையாகப் பலர் அணுகுவதைப் போல) எவ்வாறு பெற்றுள்ளனர் என்பதை ஆசிரியர் காட்ட முயன்றுள்ளார் என்பது புலனாகிறது. ‘இதனால் என்ன பயன்?’ எனும் எண்ணம் தோன்றலாம். கருத்துக்கனிவும், உணர்ச்சிச் செறிவும் படிப்பவருடைய சிந்தனைக்கு நல்விருந்தாக அமையும். மற்றும் அப்பாத்திரங்களின் மனப்போக்கையும் பண்பு நலனையும் எளிதில் அறிய இயலுவதால், அவர்களுள் பலர் நம்மோடு வாழ்வதைப்போன்ற உணர்வும் உண்டாகும்.

இவ்விருபதாம் நூற்றாண்டின் சிறப்புமிகு மேற்கு நாட்டுப் புதின ஆசிரியர்களுள் விர்ஜீனியா உல்ப் (Virginia Woolf) என்பவர் இந்தப் ‘பன்முக நோக்கு நிலை’யையே. பெரிதும் போற்றிப் பின்பற்றியுள்ளார்; இக்கதை கூறும் முறையில் அவர் பெருவெற்றியும் பெற்றுள்ளார். பேராசிரியர் மு.வரதராசனார் இந்த நோக்கு நிலையைச் செம்மையாகவும் சிறப்பாகவும் கையாண்டுள்ளார். இதனைச் ‘செந்தாமரை’ எனும் புதினம் நன்கு மெய்ப்பிக்கிறது.

துணை மாந்தர் நோக்கு நிலை

தன்மைக்கூற்று நோக்கு நிலையின் மற்றொரு வகையாகக் கதையில் வரும் துணைமாந்தர், தாங்கள் சான்றுபகருகின்ற முறையில் கதையை விளக்கிக் கூறுவதாகும். இதனைத் ‘துணைமாந்தர் சான்றுபகர் நோக்குநிலை’ (Minor Participant-Witness Point of View) எனக்கூறுவர்.[41]

கதைத் தலைவன், தலைவியரோடு நெருக்கமான தொடர்பு உடைய கிளைப்பாத்திரங்கள், தாம் நேரில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எடுத்துரைக்கும் முறையில் செயல்படுவர். இந்த நோக்குநிலை சிறந்ததொரு விளக்கவுரையாகவும் மதிப்பீடாகவும் அமைவதால், மற்ற நோக்குநிலைகளைக் காட்டிலும் இம்முறையே, சிறந்தது எனக்கூறுவோரும் உண்டு. இந்த முறையில், கதையைக்

கூறும் துணைமாந்தர், படிப்பவருக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைகின்றனர். மற்றும், கதையின் போக்கில் உண்டாகும் முடிச்சினை (சிக்கலை) முறுக்கேற்றவும், அதன் மூலம் கதையின் கலைநயத்தை மிகுதிப்படுத்தவும் இந்த உத்தியைப் புதின ஆசிரியர் பலர் ஆர்வத்தோடு பயன்படுத்தி வருகின்றனர்.

டாக்டர் மு.வ. அவர்களுடைய புதினங்களுள் 'அகல் விளக்கு'ம், 'வாடாமல'ரும் இந்தக் கலைத்திறனை அடிப்படையாகக் கொண்டனவாகும். 'சந்திரன்' எனும் கதைத் தலைவனுடைய நெருங்கிய நண்பரான வேலய்யன், கதையைக் கூறும் முறையில் 'அகல்விளக்கு' எனும் புதினம் படைக்கப்பட்டுள்ளது. நாடகப் பாங்கில் பிற கதைமாந்தர்களையும் இடையிடையே கதைகூறுமாறு ஆசிரியர் அமைத்து இருந்தாலும், அவர்கள் யாவரையும்விட சந்திரனைப்பற்றி வேலய்யன் கூறும் செய்திகளும், கொள்ளும் முடிவுகளுமே முதன்மை இடம்பெறத்தக்க வகையில் ஆசிரியரால் சித்திரிக்கப்பட்டுள்ளன.

> எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவனை விட்டுச் சென்றால், எங்காவது ஓடிவிடுவானோ என்று அஞ்சினேன். எப்படி நம்புவது? கேட்கவும் முடியவில்லை. தயங்கித் தயங்கி நின்றேன்.
>
> இரண்டு அடி எடுத்து வைத்து மறுபடியும் நின்றேன்.
>
> 'எங்காவது ஓடிவிடுவேன் என்று எண்ணுகிறாயா? இங்கேயே இருப்பேன். போய் அழைத்து வந்துவிடு. என் மானத்தைக் காப்பாற்று, வேலு" என்றான்.
>
> அவனுடைய குரல் நம்பலாம் போல் இருந்தது.[42]

எனும் பகுதியில், கதையைக்கூறும் வேலய்யனே, வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்ட தன் நண்பன் சந்திரனுடைய மொழியை, 'நம்பலாம்' என்று தெரிவிக்கிறான். இதன் மூலம் சந்திரன் எனும் தலைமைப் பாத்திரத்தின் பண்பு நலனை, ஆசிரியர் குறிப்பாகப் புலப்படுத்துகிறார். இவ்வாறு உடனுக்குடன், தன் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளையும் எண்ணங்களையும் வேலய்யன் வெளியிடுவதில் வல்லவனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவனுடைய எண்ண வெளிப்பாடு பிற பாத்திரங்களின் பண்புநலனைப் பளிச்செனக் காட்டுவதற்கு நல்லதொரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இந்த நோக்குநிலை எல்லாவகையிலும் சிறந்தது என்றோ, பெரும்பயன் தரத்தக்கது என்றோ கூறுவதற்கு இல்லை. ஒரு கதைமாந்தனின் எல்லாவகையான பண்புகளையும்,

மளிகைக்கடையில் சரக்குகள் உள்ளதைப்போல காட்டுவதற்குத்தான் இந்தக் கதைகூறும் முறை பயன்படுகிறது. 'சிறப்புமிக்க பண்புகள் யாவை?' என்பதை எளிதில் கண்டறிய இந்த நோக்குநிலையில் இயலவில்லை. மற்றும் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் விடாமல் சுட்டிச்செல்லும் கதைமாந்தரின் விருப்பு வெறுப்புகளுக்குக் கட்டுப்பட்ட முடிவுகளையே, நாம் நம்ப வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பள்ளியில் படிக்கின்ற பொழுதே, பார்க்கின்ற பெண்களிடம் எல்லாம் தவறான தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் எனும் துடிப்புமிக்கவன் சந்திரன். இளம் விதவையும், குழந்தைகளிடத்து அன்புடையவளுமான பாக்கியத்து அம்மாளிடம் சந்திரன் வாலாட்டினான்.[43] என்பதை வேறொருவர் வாயிலாக வேலய்யன் அறிகிறான். இந்த அம்மாவிடம் சந்திரன் பழகிய முறையைக் கதையில் தொடக்கத்தில் வேலய்யன் கூறியுள்ள கூற்றுக்கு முரணாக இச்செய்தி உள்ளது.[44] எனவே, இவற்றுள் எது சரி என்பதை அறிய இயலாதவர்களாக உள்ளோம்.

துணைமாந்தர் நோக்கு நிலை

இந்த நோக்கு நிலையின் மற்றொரு வகை 'கேள்வியின் மூலம் துணைமாந்தர் கதைகூறுவது' (Minor Participant - Commentator Through hearsay-Narration) என்பதாகும். கதையில் வரும் எந்தப்பாத்திரம் வேண்டுமானலும் கதையைக் கூறுவது இந்த 'நோக்குநிலை'யின் சிறப்பியல்பாகும். இம்மாந்தருக்குத் தலைமைப் பாத்திரங்களோடு நெருக்கமான தொடர்பும் இருக்க வேண்டும் எனும் நியதி இல்லை.[45]

பேராசிரியர் மு.வரதராசனாரின் புதினங்களுள் 'மலர்விழியும்', 'கரித்துண்டும்' இந்த வகையைச் சேர்ந்தவை. 'மலர்விழி'யில் முத்தையன் கதையைக் கூறிச் செல்லுகிறான். 'கரித்துண்டிலோ' திருவேங்கடம் எனும் துணைமாந்தன் கதையைச் சொல்லிக்கொண்டு போவதைக் காணுகின்றோம். தலைமை மாந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றை இவர்கள் கூறிச் செல்லுகின்றனர். ஆனால், அவற்றை இவர்கள் நேரில் கண்டதாகத் தெரியவில்லை. எனினும், சில கலைநயத் திறன்களைக் கொண்டு இத்துணைமாந்தர்களைத் தலைமை மாந்தரோடு தொடர்பு உடையவர்களாக டாக்டர் மு.வ.அவர்கள் காட்டியுள்ளார். 'கலக்டர் செல்வநாயகத்தின் உதவியால் 'இரயில்வே'யில் வேலை பெற்றவன் முத்தையன் எனும் துணைமாந்தன். இவனே செல்வநாயகத்தின் குடும்ப நிலையினை 'மலர்விழி'யில் கதையாகக் கூறிச் செல்லுகிறான். கலக்டரிடம் பற்றும் மதிப்பும் கொண்ட முத்தையன் பிறர்வாயிலாகவும் அவருடைய குடும்பச் செய்திகளை அறிய முயலுகிறான். இதனால் கதையில் வேறுசில நோக்குநிலைகளும் ஊடாடிச் செல்லுகின்றன.

'கரித்துண்டில்' பேராசிரியராகக் காட்சி தருபவர் கமலக்கண்ணர். அவரிடம் எப்பொழுதோ படித்தவன் 'திருவேங்கடம்' எனும் துணைமாந்தனாவான். அவன் அடிக்கடி, தன்னுடைய பேராசிரியரைச் சந்தித்து, கலந்து உரையாடுவது வழக்கம். இதனால், அவருடைய குடும்பச் செய்திகளைத் திருவேங்கடம் நன்கறிந்தவனாகத் தோன்றுகிறான். இந்தப் புதின ஆசிரியர், இத்திருவேங்கடத்தையே கதையைக் கூறுமாறு செய்துள்ளார்.

இத்தகைய கதைமாந்தர், யாதோ சில சமயங்களில் தலைமைப் பாத்திரங்களோடு தொடர்பு கொள்ளுபவராவர் இதனால், முழுமையாக அப்பாத்திரங்களின் உள்ளப் போராட்டங்களை உணர்ந்தவர் எனக்கூற இயலாது. மற்றும் எல்லாச் செய்திகளையும் இவர்கள் வாயிலாக இந்த நோக்குநிலையிலும் அறிய வேண்டி இருக்கிறது. தலைமைப் பாத்திரங்களைப்போல, எல்லாவகையான நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் இவர்கள் அறிந்தவர்களாக இருக்க இயலாது. இதனால், ஆசிரியர், சில புதிய உத்திகளைக் கையாண்டுள்ளார். 'கரித்துண்டில்', கடிதங்கள், இந்தக் குறையைப் போக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்றும், தலைமைப் பாத்திரமான மோகனே, தன் கடந்தகால வரலாற்றைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளதும், இக்குறைபாட்டை நீக்குவதற்காக இந்த உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார் எனத் தோன்றுகிறது. இத்தகைய 'நோக்குநிலையால்' எளிதில் கதையின் போக்கினைப் படிப்பவர் அறிய இயலுகிறது.

புதினங்களைப் படைப்பதற்குத் தேவைப்படும் முக்கியமான கலைத்திறன்கள் இரண்டு. ஒன்று பாத்திரப் படைப்புத்திறன்; மற்றொன்று கதையை எடுத்துரைக்கும் திறனாகும். இவ்விரண்டும் மு.வரதராசனாருடைய புதினப் படைப்புகளில் வலிவும் பொலிவும் பெற்றுள்ளன. இவற்றுள் 'கதையைக் கூறுந்திறன்' மு.வ. அவர்களுக்கு நன்கு கைவரப்பெற்ற கலையாகத் தோன்றுகிறது.

முன் நிழலாட்டமும் பின்வீச்சும்

புதின ஆசிரியர்கள் பயன்படுத்தும் கலைத்திறன்களும் முன்நிழலாட்டமும் (Foreshadowing), பின்வீச்சும் (Flash Back) கதையினைப் படிப்போரின் ஆர்வ நிலையை மிகுதிப்படுத்துவன. நாடக மாந்தரின் சிறுசிறு சொற்களைக் கொண்டும் குறிப்பு மொழிகளைக் கொண்டும், குறியீட்டு முறைகளால் உணர்த்துவதைக் கொண்டும் பின்னால் என்ன நடக்கப்போகிறது என்பதைப்பற்றியோ, எழக்கூடிய போராட்டத்தைப் பற்றியோ, முன்கூட்டியே ஒருவாறு உய்த்துணருமாறு செய்யும் உத்தியே 'முன் நிழலாட்டம்' எனப்படும். படிப்போரின் ஆர்வத்தைப் பெருக்குவதற்கும் 'அடுத்து என்ன

நிகழப்போகிறதோ என்பதை அறியத்துடிக்கும் ஒருவகைத் தவிப்பை உண்டாக்குவதற்கும் இம் 'முன் நிழலாட்டம்' ஒரு கருவியாகப் புதின ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகிறது.[46]

'வாடாமலரில்' தானப்பன் எனும் தலைவன் கனகம் என்னும் பெண்ணை மணந்து கொள்கிறான். அதையொட்டி, தன் நண்பன் குழந்தைவேலின் குடும்பத்திற்கு அவன் விருந்து நடத்துகிறான். அப்பொழுது கனகத்தை முதன்முதல் குழந்தைவேலின் பெற்றோர்கள் சந்திக்கின்றனர். விருந்து முடிந்து, வீடு திரும்பியவுடன் தன்னுடைய தாயிடம் 'புதுமணப்பெண் எப்படி இருக்கிறாள்?' என்று குழந்தைவேல் கேட்கிறான்.

'கொஞ்சம் கிறுக்குப் பிடித்தவளாக இருப்பாள் என்று தெரிகிறது'

அதே தான் கிறுக்குப் பிடித்தவளே[47]

என்று தாயும் மகனும் முடிவிற்கு வருகின்றனர். கதையின் இறுதியில் கணவனுக்கு நஞ்சினைக் கொடுத்துவிட்டுத் தானும், அந்த நஞ் சினையே உண்டு கனகம் இறந்து கிடக்கிறாள். கணவனைக் கொலை செய்யத் துணியும் கிறுக்குத்தனமும் அவளுக்கு இயல்பானவை என்பதை, ஆசிரியர் முன்கூட்டியே மேற்கண்ட உரையாடலில் உணர்த்திவிடுகிறார். 'கிறுக்குப் பிடித்தவள் எதையும் செய்ய அஞ் சமாட்டாள்' என்பதை முன்நிழலாட்டமாகத் திருமணம் நடந்த சில நாட்களுக்குள்ளேயே ஆசிரியர் குறிப்பாக அறிவித்துவிடுகிறார்.

இதைப்போன்ற முன்நிழலாட்டம், 'நெஞ்சில் ஒரு முள்ளி'லும் 'மலர்விழி'யிலும் சிறப்பிடம் பெற்றுள்ளன. கதைத் தலைவி வடிவு, தன் பழைய காதலனைக் கனவில் கண்டு மகிழ்கிறாள்; இருவரும் ஆற்றில் விழுந்து விடுகின்றனர். அவனால் நீந்திக் கரையேற இயலுகிறது ஆனால், இவளோ ஆற்றில் விழுந்தவள் வெளியேற இயலாது தத்தளிக்கிறாள். இதற்குள் கனவு கலைந்துவிடுகிறது. இதன்மூலம், பலராமனால் வடிவுக்கு யாதோ தீராத் துன்பம் உண்டாகப்போகிறது என்பதை ஆசிரியர் குறிப்பாகப் புலப்படுத்துகிறார். வடிவு, பின்னர் ஒருநாள் பலராமனால் மாசுபடுத்தப்படுகிறாள். அது, அவள் உள்ளத்தில் 'நெஞ்சில் ஒரு முள்ளாக' உறுத்திக் கொண்டே இருப்பதைப் பார்க்கிறோம். இவ்வாறு நிகழப்போவதை முன்கூட்டியே குறிப்பாகப் புலப்படுத்தும் திறனையே 'முன்நிழலாட்டம்' என்பர். மு.வ.இப்புதினத்தில் நன்கு இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார்.

நிகழ்ச்சிகள் நிறைந்தது கதை. ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறபொழுது, அதற்குக் காரணமான கடந்த கால நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கதைக்கு வலிவூட்டும் கலைத்திறனையே, 'பின்வீச்சு' என்பர். சுருங்கச் சொல்லுவதானால், நிகழ்காலத்தில் இறந்த காலம் இடம்பெறுவது 'பின்வீச்சு' எனலாம்.[48] புதினங்கள்

கதையைக் காலவரன் முறைப்படி கூறுவது இல்லை. இவ்வாறு கூறினால், அது வரலாறாகவோ, புராணமாகவோ அமைந்துவிடும்; சுவையும் கலைநயமும் மருந்திற்குக்கூட இடம்பெற இயலாது.

எனவேதான், கதையாசிரியர்கள் 'திடுமெனக்' கதையைத் தொடங்கி, அதில் போராட்டச் சூழலை உருவாக்கிய பிறகு, 'பின்வீச்சு' உத்திமுறையில் கடந்த கால நிகழ்ச்சிகளையோ, வரலாற்றையோ கூறுவர். இவ்வுத்தியின் மூலம் வாசகரின் கருத்தை எளிதில் கவர இயலும்; மற்றும், ஆற்றல் வாய்ந்த ஆர்வத்தை ஊட்டவும் முடியும். இந்தத்திறன் 'தன்மை நோக்கு நிலையில்', எல்லாம் அறிந்த ஆசிரியரே கதை கூறுகின்ற முறையில் சிறப்பாகப் பயன்படுத்தப் படுவதைக் காணுகின்றோம்.

தம்முடைய புதினங்கள் சிலவற்றில், டாக்டர் மு.வரதராசனார், இந்தப் 'பின்வீச்சு' உத்தியைக் கையாண்டுள்ளார். 'மண்குடிசை', 'பெற்ற மனம்', 'கயமை', 'கரித்துண்டு' எனும் புதினங்களில் இத்தகைய கலைத்திறன் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'பெற்ற மனத்'தின் கதைத்தலைவி தேமொழியா?' என்பதை ஆசிரியர் ஒரு புதிராகவே கடைசிவரை கொண்டு செல்கிறார். அவளுடைய வளர்ப்பு மகன் மணிவண்ணன், 'தான் தேமொழியின் மகன் அல்லன் முனியம்மாள் எனும் ஒரு வேலைக்காரியின் மகன்' என்பதை அறியும்பொழுது திகைப்புறுகிறான்; கண்கலங்குகிறான்; வாழ்க்கையே பறிபோய்விட்டதைப்போல் பொருமுகிறான்; அந்நிலையில்,

> அதோ படத்தில் பார்க்கிறாயே, உன்பாட்டி, அவளும் ஒரு வேலைக்காரிதான். நான் அந்த வேலைக்காரியின் வயிற்றில் பிறந்தவள் தான்...
>
> நீயும் வேலைக்காரியின் வயிற்றில் பிறந்தவன், நானும் ஒரு வேலைக்காரியின் வயிற்றில் பிறந்தவள்.. பெற்ற வயிற்றை வாழ வைத்தாய் நீ... பெற்ற வயிற்றை வேதனைப்படுத்தினேன் நான்...[49]

என்று தேமொழி, தன்னுடைய தாயைப்பற்றிக் கூறுகிறாள். கதையின் இடையில் அவளுடைய தகப்பனான அருளப்பர் அமெரிக்காவிலிருந்து மகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளதைக் காணுகிறோம். இவற்றை எல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கின்றபொழுது, 'கள்ளோ காவியமோ?' எனும் புதினத்தில் வரும் அருளப்பர் – மங்கையாகிய கதைத் தலைவருக்குப் பிறந்து, ஏழெட்டு வயது சிறுமியாக இருந்தவளே 'பெற்ற மனத்தின்' தலைவியாகிய தேமொழி என்பதை அறிகிறோம்.

இவ்வாறு, கதைத் தலைவியின் கடந்தகால வரலாற்றை ஆசிரியர் கதையை முடிக்கும் நிலையில் 'பின் வீச்சு' முறையில் "இவள்

வேறுயாரும் இல்லை! இவளும் ஒரு வேலைக்காரியின் மகளே" என்பதை நாடகப்பாங்கில் நயமுற நினைவுபடுத்துகிறார்.

'கயமை' எனும் புதினத்தில் 'வசீகரம்' எனும் 'தீவினையாட்டி'யின் வாழ்க்கையை, பின்னும் முன்னுமாக மாற்றி மாற்றித் திரைப்படம் போல உணர்ச்சிச் செறிவும், கலைநயமும் தோன்றுமாறு ஆசிரியர் காட்டுகிறார்.

'கரித்துண்டில்' முட ஓவியரான கரித்துண்டுக் கலைஞனின் முற்கால வரலாறும், நிர்மலாவின் வரலாறும் ஆசிரியரால் 'பின்வீச்சு' உத்திமுறையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. போலீஸ் 'லாக் அப்பில்' அடைபட்ட நிலையில், உடனுள்ள தம் நண்பர் திருவேங்கடத்திற்கு முட ஓவியர், வங்காளத்தின் புகழ்மிகு ஓவியர் மோகனின் வரலாற்றைக் கூறி இறுதியில் தானே அந்த மோகன் என்பதை வெளிப்படுத்துந்திறன் கதையில் ஒருவகை விறுவிறுப்பை உண்டாக்குகிறது.

தம்முடைய இரண்டாவது கணவரான பேராசிரியர் கமலக்கண்ணரிடம் சொல்லிக்கொள்ளாமல், நிர்மலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். அப்பொழுது நீண்ட நெடுங்கடிதம் ஒன்றை, அவருக்கு அவள் எழுதிவைத்து விட்டுச் செல்லுகிறாள். அந்தக் கடிதத்தின் மூலமே இப்பொழுது முடவோவியராக உள்ள மோகனே நிர்மலாவின் முதல் கணவர் எனும் செய்தியும் அவர்களைப்பற்றிய வரலாறும் படிப்பவருக்குத் தெரியவருகிறது. இங்குக் கடிதம், 'பின்வீச்சு' உத்திக்கு நல்லதொரு கருவியாகப் பயன்பட்டுள்ளது.

'மண்குடிசையில்' மெய்யப்பனின் வரலாறு, 183ஆம் பக்கத்திலேயே தொடங்குகிறது. முதல் 182 பக்கங்களில் ஆசிரியர் வடஇந்தியச் சுற்றுப்பயணத்தைப்பற்றியே விரிவாக விளக்கியுள்ளார். 'சிறையிலிருந்து வெளிவந்தவன்' மெய்யப்பன். அவனை, அவன் மனைவி விரும்பவில்லை எனும் அளவிற்கே அவனுடைய வரலாறு தொடக்கத்தில் கூறப்படுகிறது. ஆனால், 'அவன் யார்? அவன் ஏன் நண்பனோடு வட இந்தியப் பயணத்திற்குப் புறப்பட்டுவிடுகிறான் என்பன போன்ற ஐயங்கள் எழுகின்றன. அவற்றைப் 'பின்வீச்சு' முறையால் ஆசிரியர் கதையின் நடுப்பகுதியில் தெளிவிக்கின்றார்.

இந்த முறையில் பேராசிரியர் படைத்துள்ள புதினங்கள், கதையை எடுத்துரைக்குந் திறனில் ஒரு வகைப் புதுமைப் பொலிவினைப் பெற்றுள்ளதோடு, கருத்தைக் கவரும் கவர்ச்சியுள்ளனவாகவும் விளங்குகின்றன.

அகத்துறு தனிமொழி

அகத்துறுதனிமொழி (Interior Monologue) என்பது நனவோடை உத்தியின் (Stream of Consciousness) ஒரு பகுதியாகும். ஒரு கதை மாந்தரின் நினைவோட்டத்தில், எழும் எண்ணங்களையோ, உணர்வுகளையோ படைத்துக் காட்டும் பொழுது பாத்திரங்களின் மனத்திற்குள்ளே ஒலிக்கும் அகமனக்குரலே 'அகத்துறு தனிமொழி' எனப்படும். இந்நூற்றாண்டின் புதின ஆசிரியர்கள் இதனைப் பெரிதும் போற்றிப் பயன்படுத்தியுள்ளனர். கதை மாந்தரின் மனப்போராட்டத்தைச் சித்திரிப்பதற்கு இந்த உத்தி, சிறந்ததொரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.[50]

டாக்டர் மு.வ.வின் புதினங்களில், 'அகத்துறு தனிமொழி' புதைவடிவமாகத் தோன்றுகிறது. 'கள்ளோ காவியத்'தின் மங்கை, 'நெஞ்சில் ஒரு முள்ளின்' வடிவு, டாக்டர் அல்லி ஆகிய பெண்பாத்திரங்களுடைய உள்ளப் போராட்டம் 'மெலிந்த குரலில்' அகத்துறு தனிமொழியாக வெளிப்படுகிறது. இங்கு 'அகத்துறு தனிமொழியின்' கூறுகள் சிலவற்றையே காணமுடிகிறது. இதனால், இந்தத் திறனை ஆசிரியர் திட்டமிட்டுப் பயன்படுத்தியுள்ளார் எனச் சொல்ல இயலாது.

படிப்பாளியான மு.வரதராசனார், படைப்பாளியாக நம் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவதற்கு இந்தக் கலைத்திறன்களே அடிப்படைக் காரணங்களாகும். பல்வேறு புதினங்களைப் படைக்கின்ற பொழுது, படிப்போரின் உள்ளத்தைக் கவரத்தக்க வகையில் வெவ்வேறான கலைத்திறன்களை ஆசிரியர் கையாண்டுள்ளார். பாத்திரப்படைப்பில் அழுத்தமும், கதைப்பின்னலில் செறிவும், நோக்குநிலையில் பல்வகைப்போக்கும், உள்ளவுணர்வுகளை நுட்பமாகச் சித்திரிப்பதில் சீர்மையும் அவருடைய புதினங்களில் சிறந்து விளங்குகின்றன. ஆசிரியர் வரதராசனாருக்குப் 'புதினப் படைப்பாளர் அணியில்' நிலையான ஓரிடத்தை, இவை தேடித் தந்துள்ளன எனில், அது மிகையாகாது.

வழித்தோன்றல்கள்

தமிழ் இலக்கிய உலகில் டாக்டர் மு.வ.அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு, புதினம் படைப்பதில் இடுபட்டவர்கள் பலர். அம்முயற்சியில் வெற்றி பெற்றவர் சிலர். டாக்டர் கு.ராஜவேலு, டாக்டர் ரா.சீனிவாசன், டாக்டர் க.ரத்னம், திரு.மா.கி.தசரதன், திரு.பழநிசாமி, திரு.இல.கந்தசாமி முதலியோர் கருத்துவிளக்கப் புதினங்களைப் பேராசிரியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இயற்றி வருகின்றவர்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவராவர்.[51]

தொகுப்புரை

பேராசிரியர் மு.வ.அவர்களுடைய படைப்பு இலக்கியங்களுள், 'புதினங்களின்' சிறப்பு இயல்புகளும், 'புனைகதை'களின் பண்புகளும் இம்மூன்று இயல்களிலும் சுட்டிக்காட்டப்பட்டன; அவற்றின் அமைப்பும் அழகும், நோக்கும் போக்கும் கோடிகாட்டப்பட்டன. பேராசிரியருடைய புதினங்கள் பதின்மூன்றும் சிதைந்துவரும் குடும்ப வாழ்க்கையைக் காலத்திற்கேற்ற முறையில் செப்பனிடுவதற்கு வழிகாட்டுகின்றன. புனைகதைகள் இரண்டும், சமுதாயத்தின் நோயினை அறிந்து, அதனைப் போக்குவதற்குரிய மருந்தினைக் கொடுத்துப் புதிய சமுதாயத்தை – புதிய உலகினை – உருவாக்க, 'வித்தகம் பேசவேண்டா! பணிசெயவாரும்!' என மக்களை அழைக்கின்றன.

"தான் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஒவ்வோர் எழுத்தாளனும், சிறப்பாக ஒவ்வொரு புதினப் படைப்பாளனும், சமுதாயத்திற்கு ஒரு 'நற்செய்தி'யை வழங்கி வருகின்றான். அவனுடைய படைப்பின் நுட்பமான கூறுகளில் எல்லாம், அந்நற்செய்தியின் தாக்கத்தைக் காணலாம்"[52] எனும் திறனாய்வாளர் ஒருவரின் கருத்து, மு.வரதராசனாரின் புதினங்களின் உயிர்நாடியான கருத்தோட்டத்திற்கு நல்லதொரு விளக்கமாக அமைவதைக் காணலாம்.

மு.வ.அவர்களுடைய புதினங்கள் ஒருவகைத் தனிப்போக்கினை உடையன. அதனை, 'அவருடைய படைப்பு இலக்கியத்திறனின் தனிச்சிறப்பு' என்பர் ஒருசாரார். 'இல்லை அப்போக்கே தலைசிறந்த இலக்கியப் படைப்புகளாக அவற்றை வீறுடன் விளங்கவொட்டாமல் செய்கிறது' என்பர் மற்றொரு சாரார். நடுவுநிலையில் நின்று நோக்குகின்றபொழுது, தமிழில், புதினப் படைப்பு முறையில், புது நெறி ஒன்றை அவர் புகுத்தியுள்ளார் என்பது புலனாகின்றது. அப்புது நெறியின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை இப்பொழுது கணித்துக் கூற இயலாது.

> சில நூல்களைப் படித்து முடித்த பிறகு அவற்றின் ஆசிரியர்களைப் பற்றி எண்ணுவதே இல்லை. அவர்கள் யாராக இருந்தால் நமக்கு என்ன என்று பொருட்படுத்தாமல் விடுகிறோம். ஆனால், வேறு சில நூல்களைப் படித்து முடித்த பிறகு, அவற்றின் ஆசிரியர்களைப் பற்றித் திரும்பத் திரும்ப எண்ணுகிறோம். மேன்மேலும் அவர்களைப் பற்றி அறிய விரும்புகிறோம். அந்த ஆசிரியர்களின் அனுபவச் சிறப்பை நினைந்து வியப்படைகிறோம். அந்த நூல்களால் பெற்ற கலைப்பயனும் அதனை நினைந்து உணரும் நன்றியுணர்வுமே

இதற்குக் காரணங்கள். அத்தகைய நூல்களே உயர்ந்த நூல்கள்; நின்று வாழ வல்ல நூல்கள்.[53]

என்னும் பேராசிரியரின் கருத்து, அவருடைய புதினங்களுள் ‘கள்ளோ காவியமோ’, ‘அகல் விளக்கு’, ‘கரித்துண்டு’, ‘வாடாமலர்’ என்பனவற்றிற்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

குறிப்புகள்

1. தி.பாக்கியமுத்து (பதி.), இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன், பக்.9.
2. மு.வரதராசனார், இலக்கிய மரபு, பக்.144.
3. பிற்சேர்க்கை : 4.
4. பிற்சேர்க்கை : 4
5. திருத்.புரா.66:1
6. மணி.10:61.
7. தமிழ் எழுத்தாளர், யார் – எவர்? 1966, பக்.244.
8. Kamil V.Zvelebil, Tamil Literature, p.276.
9. Long, William J, English Literature Its History and Significance, P.455.
10. மு.வரதராசன், குறுந்தொகை விருந்து, பக்.4.
11. நா.பார்த்தசாரதி, குறிஞ்சி மலர், முன்னுரை.
12. நா.பார்த்தசாரதி, (பதி.), தீபம், மார்ச்சு 19–1, பக்.54.
13. Diana Laurenson and Alan Swingewood, The Sociology of Literature, p.68.
14. குறிப்பு எண்.52.
15. Miriam Allott, Novelists on the Novel, p.102.
16. நா.காமராசன், நாவல் பழம், பக்.11.
17. நா.பார்த்தசாரதி (பதி.), தீபம், முன், இ,, பக்.54.
18. க.நா.சுப்ரமண்யம், இலக்கிய விசாரம், பக்.38.
19. க.நா.சுப்ரமணியம், படித்திருக்கிறீர்களா? பகுதி – 1, பக்.104.
20. பெற்ற மனம், பக்.149.
21. M.Varadarajan, Ilango Adigal, P.54.

22. R.E.Asher, 'Social Comment in 'South Indian Prose Fiction' in South Asian Review, Vol.5; No.3; (April 1972); p.212.

23. தி.பாக்கியமுத்து; 'விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள்' பக்.39–40.

24. தி.பாக்கியமுத்து; பக்.40.

25. தமிழ் நாவல் இலக்கியம், பக்.231.

26. குறிப்பு.9.

27. Robie Macaulay, Technique in Fiction, pp.158-59.

28. Robie Macaulay, Technique in Fiction, p.160.

29. Marjorie Boulton, The Anatomy of the Novel, p.45.

30. Marjorie Boulton, The Anatomy of the Novel, p.48.

31. Marjorie Boulton, The Anatomy of the Novel, p.45.

32. மண்குடிசை, பக்.477.

33. Perey Lubbock, The craft of Fiction, p.268.

34. கயமை, பக்.45.

35. Percy Lubbock op.cit.p.270.

36. Percy Lubbock op.cit.p.272.

37. நெஞ்சில் ஒரு முள், பக்.356–357.

38. Marjorie Boulton, op.cit.p.48.

39. கள்ளோ காவியமோ, பக்.127.

40. மேற்படி, பக்.106.

41. Percy Lubbock, op.cit.p.274.

42. அகல் விளக்கு, பக்.254.

43. மேற்படி, பக்.223.

44. மேற்படி, பக்.49–52.

45. Robie Macaulay, op.cit.pp.102-104.

46. மேற்படி, ப.105.

47. வாடாமலர், பக்.187.

48. Robie Macaulay, op.cit., pp.160-62.

49. அகல் விளக்கு, பக்.403–405.

50. Marjoric Boulton, op.cit., pp.160-62.

51. கு.ராஜவேலு, 'காதல் தூங்குகிறது', 'காந்தமுள்' மு–ன; ரா.சீனிவாசன், 'தங்கம்' 'வழுக்கு நிலம்' மு–ன; க.ரத்னம், 'கனவுமாலை', 'நினைவின் நிழல்' மு–ன; மா.கி.தசரதன், 'தணலிலே தங்கம்' பழநிசாமி, 'முதலா? முடிவா?' இல.கந்தசாமி, 'ஓ அன்றில் பறவைகளே!'

52. Geroge Orwell, Critical Essays, p.45.

53. கு.ராஜவேலு, முன் கு.நூல். அணிந்துரை.

இயல் - 7
சிறு கதைகள்

வாழ்க்கையின் பொருளைச் சொல்லுவது மெய்ப்பொருள். வாழ்க்கையைச் சொல்லுவது இலக்கியம். வாழ்க்கையின் சுவையைக் கவர்ச்சியுடையதாக எடுத்துரைப்பது படைப்பு இலக்கியம் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் படம்பிடித்துக் காட்டுவது புனைகதை. வாழ்க்கையினை ஒவ்வொரு கோணத்தில் சிறுபடமாகக் காட்டுவது சிறுகதை. பெரிய நிழற்படம் போன்றது புதினம் எனலாம். இந்த வேறுபாட்டைச் "சிறுகதை வாழ்க்கையின் சாளரம் என்றால், நாவல் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நிலைக்கண்ணாடி" என்று தெளிவுபடுத்திக் காட்டுவார் புதுமைப்பித்தன்.[1] புதினமும் சிறுகதையும் கதையைச் சுவைபட எடுத்துரைப்பனவேயாகும். ஆனால், வடிவாலும் உள்ளீட்டாலும் அவை வேறுபடுகின்றன. எனவே, அவற்றை இருவகையான இலக்கிய வடிவங்களாக உலகம் போற்றி வருகிறது.

புதினத்தைப் போன்றே, மேற்கு நாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்தால், சிறுகதை தமிழில் தோன்றியது. உரைநடையில் சிறுசிறு கதைகளைச் சொல்லுவது உலகெங்கும் நெடுங்காலமாக இருந்துவரும் வழக்கமாகும். ஆனால், அக்கதைகளுக்குக் கலைமெருகு கொடுத்து, இலக்கிய மதிப்பைத் தந்து போற்றும் வழக்கம். அண்மைக் காலத்தில் தோன்றியதேயாகும். இந்திய மண்ணில், இந்த இலக்கியவகை இந்த நூற்றாண்டில்தான், செழித்து வளரத் தொடங்கியது.

1. சிறுகதை - ஒருவரையறை

சிறுகதைக்கு நல்லதொரு வரையறுக்கப்பட்ட இலக்கணம் கூறுவது எளிய செயலன்று. 'சிறிய கதையே சிறுகதை' என மேற்போக்காக ஒரு வரையறையைக் கூறலாம். ஆனால், 'சிறிது' எனும் அடை, எப்பொருளை உணர்த்துகிறது என்பதைப் பற்றி அறிஞரிடையே ஒருமித்த கருத்து இல்லை. சிறுமை, கதையின் அளவைச் சுட்டுவதாகப் பொதுவாகக் கூறுவர். ஆயினும், சிறந்த சிறுகதை ஆசிரியர்கள், இதை ஒப்புக்கொள்வதில்லை. கதையின் அளவை முதன்மையான நோக்கமாகக் கொள்ளாது, சிறப்புப்

பொருள் அதற்குக் கற்பிக்கப்படுகிறது என்பது அவர்களுடைய கருத்தாகும்.[2]

'நல்ல சிறுகதை எப்படி இருக்கும்?' என்பதையே சிறுகதைப் படைப்பாளர்களும், திறனாய்வாளர்களும் இனங்கண்டு கொள்ளுமாறு விளக்கியுள்ளனர்.

> சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு; கவர்ச்சியான ஒரு காட்சி; நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள்; ஒருவரின் தனிப்பண்பு; ஒரு சிறு அனுபவம்; வாழ்கையின் ஒரு வெற்றி; அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல் – இவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இவைபோன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்.[3]

என்பது பேராசிரியர் மு.வரதராசனார், சிறுகதைக்குத் தரும் விளக்கமாகும். இவ்விளக்கத்தின் ஒளியில், அவருடைய படைப்புகளை நாம் எளிதில் இனங்கண்டு கொள்ளலாம்.

இக்கதைக்கலை, மேற்கு நாட்டிலே முதலில் தோன்றி வளர்ந்தமையால், அந்நாட்டு அறிஞர்கள், எத்தகைய விளக்கத்தைச் சிறுகதைக்குத் தருகிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ளுதல் நல்லது.

> சிறுகதை, புனைகதையின் ஒரு சிறுதுண்டு. அதனுடைய வடிவ அமைப்பை ஒட்டி, பத்து நிமிடங்களிலிருந்து ஒரு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்; நன்கு வரையறுக்கப்பட்ட ஒரே கதைக்கருவையுடையது; அது ஒரு நிகழ்ச்சியாகவோ, நெருக்கமான சில நிகழ்ச்சிகளின் கதைப்பின்னலாகவோ இருக்கலாம். அப்பின்னல் முழுநிறைவான வடிவதைத்தருவதாக அமைய வேண்டும்.[4]

என்பது எட்கர் அலன்போ என்பவருடைய விளக்கமாகும். இவ்விருவகை விளக்கத்தாலும் சிறுகதையின் பொது இயல்புகளை எளிதில் தெளியலாம்.

சிறுகதையின் சிறப்பு

தமிழில் சிறுகதை, கி.பி.1930க்கும், கி.பி.1950க்கும் இடையே தனியரசு செலுத்தியது.[5] அக்காலத்தில்தான், பேராசிரியர் மு.வரதராசனாரும் சிறுகதைகளைப் படைத்துள்ளார். "கலையின் பயன் இரண்டு. ஒன்று காலத்தை இன்பமாகக் கழிக்கச் செய்வது; மற்றொன்று நம்மை அறியாமல் வாழ்க்கையைத் திருத்தி உயர்த்துவது, இந்த இரண்டும் ஒரு சேர அமையும் சிறப்பு, சிறுகதைகளில் மிகுதியாகக் காணலாம். இதனால்தான் சிறுகதை இலக்கியம்

உலகமெல்லாம் செழித்து வளர்ந்து வருகிறது"[6] என்னும் கூற்றால், சிறுகதையின் தனிச்சிறப்புப் புலனாகின்றது.

மு.வரதராசனாரின் பதினேழு சிறுகதைகள், இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. 'விடுதலையா?' எனும் முதல் சிறுகதைத் தொகுப்பு முதன்முதல் 1948ஆம் ஆண்டு வெளிவந்தது. அதில், ஆறு கருத்துவளமிக்க கதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஆறாவது கதையான 'எவர்குற்றம்?' என்பதே ஆடவர், மகளிரிடையே உண்டாகும் காதலை மையமாகக் கொண்டது. மற்றவை யாவும், சமுதாயப் பார்வையோடு ஆசிரியர் உலகை நோக்குந்திறத்தை வெளிப்படுத்துகின்றன.

2. விடுதலையா?

(1948)

முதல் கதை, ஆசிரியருடைய தன் வரலாற்றைக் கூறுவது, மு.வரதராசனாருடைய இளமைப் பெயர் திருவேங்கடம், அவருடைய பாட்டியார் பெயர் நரசம்மாள்.[7] இவ்விரு பெயர்களோடு கூடிய கதைப்பாத்திரங்கள், இச்சிறுகதையில் முக்கியப் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். மற்றும், பள்ளிச்சிறுவன் வீட்டிற்குத் திரும்ப வழி தெரியாமல் மாலை மயங்கும் நேரத்தில், வேறோர் ஊருக்குச் சென்று அல்லல்படுவது, இக்கதையின் முதன்மை நிகழ்ச்சியாகும். சுவையான ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட இக்கதை, பிற்பகுதியில் அந்தப் பாட்டியார், பைத்தியம் பிடித்து, துன்பப்பட்ட செய்திகளை விரித்துரைக்கின்றது. இதனால் சிறுகதையின் வடிவம் குலைந்து, ஒரு குறுங்கதையைப்போல, 'விடுதலையா?' எனும் கதை நீண்டு விடுகிறது.

'தேங்காய்த் துண்டுகள்' எனும் இரண்டாவது கதையில் வறுமையின் கொடுமையால் பட்டணம் வந்து, திருடனாக மாறிய ஒருவனுடைய கடைசி நேரத்தை உயிர்த்துடிப்புடன் ஆசிரியர் சித்திரித்துள்ளார். 'கவர்ச்சியான ஒரு காட்சியை' இச்சிறுகதை காட்டுகிறது.

இரண்டாவது உலகப்போரின் நெருக்கடி நிலையில் பங்கீட்டு அரிசி வழங்கிய காலத்தில் கொள்ளை ஆதாயம் பெற முயன்ற வாணிகருக்காக, அவனுடைய வேலையாள் சிறைப்பட்ட கதையே, 'வாய் திறக்க மாட்டேன்' என்பதாகும். பண நாயகத்தின் கொடுமையை இக்கதை சித்திரிக்கிறது 'அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கலே' இதனுடைய கதைக்கருவாகும்.

பணம் சேர்ப்பதையே கருத்தாகக் கொண்டவர்கள், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய முன்வராதவர்கள் பக்திமான்களாக

வேடம் போட்டு, 'வாழ்க்கையே மாயம்' என்று உதட்டளவில் பேசி, ஊரை ஏமாற்றுகின்றனர். இத்தகைய ஒருவரைப் படம்பிடித்துக் காட்டுவது 'எதையோ பேசினார்' எனும் கதையாகும். 'ஒருவருடைய தனிப்பண்பு' இக்கதையின் மூலம் வெளிப்படுகிறது.

வறுமையால் வாடும் ஏழைச்சிறுவன் வேலை கேட்டு அலைந்து வேலை கிடைக்காமல் போக, பிச்சையெடுத்தும் வாழ முடியாமல், தற்கொலை செய்து கொள்ளுகிறான். இது 'கட்டாயம் வேண்டும்' எனும் கதையின் கருவாகும். 'ஒரு சிறு அனுபவம்' இக்கதையின் வாயிலாக வெளிப்படுகிறது.

காதலிக்கத் தெரிந்த ஒருத்தித் துணிச்சல் இல்லாமையால், காதல் பயணத்தில் பின்தங்கி, வாழ்க்கையில் தோல்வியுறுகிறாள் என்பதை 'எவர் குற்றம்?' எனும் கதை எடுத்துரைக்கின்றது. 'வாழ்க்கையின் ஒரு வெற்றி' இதனால் புலப்படுகிறது. இந்த ஆறு கதைகளிலும் ஆசிரியர் யாதாகிலும் ஒரு பாத்திரமாகத் தோன்றுகிறார். பேராசிரியர் மு.வரதராசனார், தம் வாழ்க்கை அனுபவத்தினையும், தாம் கண்டதையும், கேட்டதையும் கற்பனை வண்ணத்தில் குழைத்து இச்சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

இக்கதைகளுள் சில, முன்னரே இதழ்கள் சிலவற்றில் வெளிவந்தவை ஆகும்.

3. குறட்டை ஒலி

(1953)

இந்நூல் டாக்டர் மு.வரதராசனார் அவ்வப்போது எழுதிய சிறுகதைகள் பதினொன்றின் தொகுப்பாகும். இக்கதைத் தொகுதியைப் பற்றி ஆசிரியரே,

> இவற்றுள் பல கதைகள் அவ்வப்போது மலர்களிலும் இதழ்களிலும் வெளிவந்தவை; சில இப்போது சேர்த்தவை. இவை பலதிறத்தன; பலபொருள் பற்றியன; வெவ்வேறு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை.[8]

என்று குறிப்பிட்டுள்ளமையால் இதனை அறிகிறோம்.

இத்தொகுப்பில் உள்ள முதல் கதை 'அந்த மனம் வருமா?' என்பதாகும். சிற்றூரில் வாழும் நண்பனைக் காணச்சென்ற ஒருவர், அந்த நண்பனுடைய வறுமையில் செம்மையோடு வாழும் தந்தையைக் கண்டு வியப்புறுகிறார். சில மாதங்களுக்குப் பிறகு அந்தப் பெரியவர் இறந்த செய்தி கிடைக்கிறது. 'எதையும் தனக்கு வேண்டும் என்று சேர்த்துக் குவிக்காது, பிறருக்குக் கொடுத்து வாழ்ந்த 'அந்தப் (பெரியவரின்) மனம் வருமா?' என்று ஆசிரியர்

கதையைப் படைத்துள்ளார். இக்கதை, தனிமனிதர் ஒருவரின் பண்பைப் பாராட்டுவதாக அமைந்துள்ளது.

நண்பரின் குழந்தை இறந்ததைப் பற்றிய நடைச்சித்திரமே 'சுடரின் நகைப்பு' எனும் கதையாகும். இதில் 'வாழ்க்கையின் ஒரு பெற்றியை' ஆசிரியர் சிறுகதையாக்கியுள்ளார்.

பேராசிரியர் மு.வரதராசனார் இலங்கைக்குச் சென்றிருந்த பொழுது, தமிழ்நாட்டிலிருந்து தோட்டத் தொழிலாளர்களாகச் சென்றவர்கள், அங்கே படும் துன்பத்தைக் கண்டு மனம் வருந்தினார். அவ்வருத்தத்தின் வெளிப்பாடே 'இறந்த சிற்றப்பா' எனும் சிறுகதை. தாய்நாட்டில் பிழைக்க வழியில்லாமல் அயல்நாட்டிற்குச் சென்று கூலிகளாகத் தமிழர்கள் அல்லல்படுவதை ஆசிரியர், இச்சிறுகதையின் மூலம் தெரிவிக்கிறார். இக்கதையில், ஆசிரியரின் தன் வரலாற்றுக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. 'யான் கண்ட இலங்கை' எனும் நூலில் ஆசிரியர் குறிப்பிடும் செய்திகளில் சிலவற்றை இதில் காணலாம். 'ஒரு சிறு அனுபவத்தை' இக்கதை உணர்த்துகிறது.

மு.வ. அவர்களின் சிறுகதைகளிலே தனிச்சிறப்பு வாய்ந்தது. 'அமாவாசையார்' எனும் சிறுகதையாகும். நிலமானிய அமைப்பு முறைச் சமுதாயம் பையப்பையத் தமிழகத்தில் மாறிவரும் நிலையை, இச்சிறுகதை சித்திரிக்கிறது. அமாவாசையாரின் மகன், வயிற்றுப் பிழைப்பிற்காக நகரத்திற்குச் சென்றுவிட்டான். வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர், தன் வீட்டையும், நிலபுலங்களையும் விட்டுப்பிரிய மனமில்லாமல், சொந்த ஊரில் தனிமையாக வாழ்க்கை நடத்துகிறார்.

அவருக்கு ஊரில் உள்ள சில இளைஞர்கள் வைத்த பெயரே 'அமாவாசையார்' என்பதாகும். மாதந்தோறும் வரும் அமாவாசையை ஆவலோடு எதிர்பார்த்தவர் அவர், அதைப்பற்றி அதிகமாகப் பேசியவர் அவர். மற்றும், அவருடைய வாய் வேதாந்தம் பேசியது; ஆனால் அவருடைய உள்ளமோ 'அமாவாசை'போல் இருண்டு கிடந்தது. அவர் பணத்தைச் சேர்க்கத் தெரிந்தவர்; அதை அனுபவிக்கத் தெரியாதவர்; பிறருக்குக் காசு கொடுத்து உதவாதவர்; தன்னுடைய வீட்டுத் திண்ணையினை விட்டு நகராமலேயே, ஊர்க்கதைகளையெல்லாம், அவர் இலவசமாக ஊர் மக்களுக்கு ஒலி பரப்பிக் கொண்டிருந்தார். அவர் திடுமென இறந்து விடுகிறார். அவருடைய பிள்ளைகளும் பெண்களும், வாயையும் வயிற்றையும் கட்டி அவர் சேர்த்து வைத்த பணத்திற்காகப் பூசலிடுகின்றனர் என்பதுதான் கதை. 'ஒரு தனிமனிதரின் பண்பு' இக்கதையால் வெளிப்படுகிறது.

பேருந்தில் பயணம் செய்கின்றபொழுது, ஏழைத் தமிழ்ப் பெண் ஒருத்தி உட்கார இடம் கொடுத்ததைப் பார்த்து இருவர் ஏளனமாகப்

பேசிக் கொள்ளுகின்றனர். வழியில் நடைபாதையில் வெயிலில் நடந்து செல்லும் ஆங்கிலோ இந்தியப்பெண் ஒருத்திக்காக அவர்கள் இரக்கப்படுகின்றனர். 'எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு' எனும் பாட்டை 'சென்ட்ரல்' புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள பேருந்து நிறுத்தத்தில், ஒரு பிச்சைக்காரன் பாடுகிறான். அதைக்கேட்ட ஆசிரியரின் உள்ளத்தில்," 'எல்லோரும் சமம் என்பது எங்கே? எப்பொழுது?" எனும் கேள்விகள் எழுகின்றன.

பெண்ணிற்கு மதிப்பைத் தரத் தெரியாத மக்கள் வாழும் சமுதாயத்தில், 'எல்லோரும் சமம்' என்பது உண்மையாகுமா? என்று சிந்திக்குமாறு அவர் தூண்டுகிறார். இக்கதை 'அற உணர்வால் விளைந்த சிக்கலைப்' புலப்படுத்துகிறது.

இரயில் பயணத்தின் நெருக்கடி நிலையையும், பெண்கள் அதில் சிக்கிக் கொண்டு படும் துன்பத்தையும் ஆசிரியர், 'யாரோ தெரியாது' எனும் கதையின் வாயிலாகத் தெளிவுறுத்துகிறார். 'கவர்ச்சியான ஒரு காட்சியை'க் காட்டி, அதன் மூலம் சிந்திக்குமாறு ஆசிரியர் தூண்டுகிறார்.

'உலகம் பொய்' என்று வாய் வேதாந்தம் பேசுகின்றவர்கள், எவ்வாறு உலகியலில் மிகுந்தப் பற்றுள்ளவர்களாக உள்ளனர் என்பதை இப்பெயருடைய கதை தெரிவிக்கிறது. 'வாழ்க்கையின் ஒரு வெற்றியை' இக்கதை உணர்த்துகிறது.

இக்கதைத் தொகுதியில் எட்டாவதாக உள்ள கதை 'குறட்டை ஒலி' ஆசிரியரின் சிறுகதை படைக்குங் கலைத்திறனுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குவது இக்கதை. இக்கதையின் பெயரே, இக்கதைத் தொகுதிக்கும் பெயராகச் சூட்டப்பட்டிருக்கிறது. வடிவாலும் உள்ளீட்டாலும் தலைசிறந்த படைப்பாகக் 'குறட்டை ஒலி' தோன்றுகிறது.

மூன்று குடும்பங்கள் ஒரே வீட்டில் ஒட்டுக்குடிகளாக வாழுகின்றன. மாடியில் ஒருவர்; கீழே வடபகுதியில் ஒருவர்; தென்பகுதியில் மற்றொருவர் குடியிருக்கின்றார். வடபகுதியில் வாழ்வோர் செல்வர்; மகப்பேறு வாய்க்காதவர்; மனத்தில் இரக்கம் இல்லாதவர்; தென்பகுதியார் பெரிய குடும்பத்தினர்; வறுமையில் வாடுகின்றவர். அவர்கள் ஒருநாயையும் வளர்க்கிறார்கள். இருபகுதியினருக்கும் எப்போதும் பிடிப்பதில்லை; ஏழைக் குடும்பத்தின் தாய், பிள்ளை பெறுகிறாள்; அவளுடைய நாயும் குட்டிகள் போடுகின்றது. மூன்றாம்நாள், தாய் நாயை 'உரிமம்' வாங்காத காரணத்திற்காக மாநகராட்சி ஊழியர் பிடித்துக் கொண்டு சென்று விடுகிறார்கள். தாய் இல்லாமல், குடிக்கப் பாலில்லாமல் அந்தக் குட்டிகள் குரைத்துக் கொண்டே இருக்கின்றன. இரவில் அவற்றின் குரல் கேட்காமல் இருக்க, சன்னல் கதவுகளை எல்லாம்

அடைத்துக்கொண்டு வடபகுதியில் வாழும் கணவனும் மனைவியும் குறட்டை விட்டுக் கொண்டு தூங்குகின்றனர்.

நாய்க்குட்டிகளுக்குப் பால் வாங்கி ஊற்றுவதற்கு வழியற்ற இளம் பிள்ளைக்காரி, எல்லோரும் தூங்கி விட்டபிறகு, அந்த நாய்க்குட்டிகள் இருக்கும் இடத்திற்கு வந்து, தன் முலைப்பாலை, அந்தச் சிறுகுட்டிகளின் வாயில் பீச்சுகிறாள்; பசி தணிந்த உடனே அக்குட்டிகள் தூங்கத் தொடங்குகின்றன. அவள் எழுந்து செல்லும்பொழுது, வடக்குப்பகுதியில் இருந்து 'குறட்டை ஒலி' வருவதைக் கேட்கிறாள். 'வாழ்க்கையின் ஒரு சிறு அனுபவம்' இக்கதையில் வெளிப்படுகிறது.

இச்சிறுகதையில் முரண்பட்ட இரண்டு காட்சிகளைப் படைத்து, மனித மனப்போக்கு எப்படி அமைகிறது என்பதை ஆசிரியர் காட்டுகிறார். ஏழைக்குத்தான் பிறருடைய துன்பத்தை – பிற உயிர்களுடைய துன்பத்தை உணரும் இரக்க உள்ளம் இருப்பதை ஆசிரியர் நன்கு சித்திரித்துள்ளார். இக்கதையில் மெய்ம்மையப் (Realism) பாங்கு மேலோங்கி நிற்கிறது.

பெண் ஒருத்தி உடலில் சுற்றியுள்ள அழகிய புடவையின் ஒரு பகுதியை மரத்தில் சுற்றிவிட்டு, அதைக் காயவிடுகிறாள். அப்போது ஒருவன் சேலையைத் திருட முயல்கிறான். அவனைக் கையும் களவுமாகப் பிடித்து, விசாரிக்கிறார்கள். அந்தப் பெண்ணின் கணவரிடம் 'தன் மகளுக்கு அழகான சேலை இல்லையே என்பதற்காகத் திருட முயன்றதாக'ச் சொல்லுகிறான். அவனிடம் இரக்கம் கொண்டு, அந்தக்கணவர் சேலை ஒன்றை வாங்கிக் கொடுத்து உதவ முன் வருகிறார். அவருடைய செயலை, 'வாழும் வழியா?' என்று பார்த்தவர்கள் கேட்கின்றனர். 'வாழ்க்கையின் ஒரு வெற்றி' இக்கதையால் புலப்படுகிறது.

மனிதன் ஒருவன்தான் இறப்பிலிருந்து தப்ப முடியவில்லை; தவறு செய்தால் தண்டனையும் பெறுகிறான் என்பதைக் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்ட பெண் ஒருத்தியின் நிலையைக் கொண்டு விளக்கும் கதை 'இயற்கை பொல்லாதது' என்பதாகும். 'வாழ்க்கையின் ஒரு வெற்றி' இக்கதையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

அலுவலகத்தில் பணிபுரியும் இரு ஆண்களின் வாழ்க்கையில் அன்பு இருக்கிறதா? இல்லையா? என்பதைச் சித்திரிக்கும் சிறுகதையே 'அக்கரை பச்சை' யாகும். இக்கதைகள் அனைத்தும் வாழ்க்கைச் சிக்கல்களை வறுமையின் கொடுமைகளை, சமுதாயச் சீர்கேடுகளை நம் மனக்கண் முன்னால் நிறுத்துகின்றன; அவற்றிற்கு மருந்து என்னவென்பதைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. 'நெருக்கமாகப் பின்னப்பட்ட சில நிகழ்ச்சிகளால்' வாழ்க்கை அனுபவத்தை,

ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். புதினப் படைப்புகளில் சமுதாயச் சிந்தனைகளை வாரி வழங்கியதைப் போன்றே, இச்சிறுகதைகளிலும் பேராசிரியர் மு.வரதராசனார் சிந்தனையாளராகவே சிறப்புற்று விளங்குகிறார்.

இவ்விரு கதைத் தொகுப்புகளுள், 'குறட்டை ஒலி' ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை, அதன் சிறப்பிற்குரிய சான்றாக அமைகிறது.

4. சிறுகதைகளின் கலைநயம்

சிறுகதை என்பது கதைப் பாத்திரம் ஒன்றின் பண்பு, பாத்திரங்களின் ஓர் உணர்வுச் சுழிப்பு, ஒரு நிகழ்ச்சி, ஒரு குறிப்பிட்ட சூழலமைவு என்பனவற்றுள், யாதாகிலும் ஒன்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, கலைவடிவம் பெறுவது என்பதை மேற்கண்ட பொதுக் கண்ணோட்டத்தால் அறிகிறோம்.

சிலவற்றைக்கூறி, அவற்றால் பலவற்றை எண்ணத் தூண்டுவதாகச் சிறுகதையை அமைக்க வேண்டும் என்பர். கதையின் தலைப்பு, தொடக்கம், முடிவு என்ற ஒவ்வொரு நிலையிலுமே, மிகச்சிறிய சொற்களால் ஆழமான பொருள்களைப் புலப்படுத்துதல் வேண்டும். கதையில் இடப்படும் காற்புள்ளி, அரைப்புள்ளி என்ற நிறுத்தக் குறிகளும், புள்ளியிடாமல் விடப்படும் வெற்றிடங்களும் பேசாதன பேசி, காட்டாதன காட்டும் ஆற்றல் உடையனவாக விளங்குகின்றன.[9] கதையில் இடம்பெறும் கருப்பொருளிற்கு ஏற்ற கலைவடிவம் தந்து, அதன் ஒவ்வொரு கலைத்திறனிலும், படைப்பாளர் கூர்மையாகக் கருத்தைச் செலுத்திப் படைத்தால், அக்கலை கலைநயத்துடன் சிறப்புற அமையும்.

சிறுகதையின் இலக்கணத்தை வடிவம் பற்றியன என்றும், உள்ளீடு பற்றியன என்றும், உத்திகளைப் பற்றியன என்றும் மூவகையாகப் பாகுபடுத்தலாம். சிறுகதையின் நீளம், கதைத்தலைப்பு ஆகியவை வடிவம் பற்றியவை; கதையின் தொடக்கம், முடிவு முதலியன உத்திகளைப் பற்றியன; நிகழ்ச்சி, பண்பு. அனுபவம் என்பன உள்ளீடு பற்றியன. இவையாவும் ஒன்றாக இணைந்தும் இழைந்தும் ஒரேவொரு பயன் அல்லது விளைவைத் தருவதாக அமைய வேண்டும்[10] என்பர். இத்தகைய பண்புகள் பேராசிரியர் மு.வரதராசனாரின் சிறுகதைகளுள் நிறைந்துள்ளன. அவற்றில் பொதிந்துள்ள கலை நயத்தைக் காண்போம்.

(1) கதையின் தொக்கம்

சிறுகதையின் தொடக்கம் என்பது மிகவும் சிறப்பாக அமைய வேண்டும். படிப்பவரின் உள்ளத்தைக் கவரக்கூடியதாய். அதே

சமயத்தில் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அமைய வேண்டும். "ஒரு சிறுகதை ஆசிரியன், படிப்பவரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டக்கூடிய வகையில் தம் கதையைத் தொடங்குதல் வேண்டும். கதையின் தொடக்க வரி, நெஞ்சை அள்ளும் வகையில் அமைந்து கதையின் முழுப் பொருளையுமே குறிப்பால் புலப்படுத்துதல் வேண்டும்"[11] என்பது அனுபவத்தால் பெற்ற அறிவாகும்.

பேராசிரியர் மு.வ.அவர்களுடைய சிறுகதைகளின் தொடக்க இயல்புகளைக் கொண்டு அவற்றை அறிமுகத் தொடக்கம், உரையாடல் தொடக்கம், கூற்றுமுறைத் தொடக்கம், நினைவு ஓட்டம் பற்றிய குறிப்புநிலைத் தொடக்கம், வருணனைத் தொடக்கம் என வகைப்படுத்தலாம், ஒவ்வொன்றிற்கும் ஒரு சில காட்டுகளைக் காண்போம்.

அ. அறிமுகத் தொடக்கம்

கதையில் கூறப்படும் சிக்கல் பற்றியோ, கதை நிகழ்ச்சி நடைபெறும் இடம்பற்றியோ, நிகழ்ச்சி பற்றியோ, கதைப்பாத்திரம் பற்றியோ அறிமுகம் செய்யப்படுவதாக அமையும் தொடக்கம், அறிமுகத் தொடக்கமாகும். மு.வ.வின் கதைகளுள், 'எவர் குற்றம்'[12] எனும் கதை, 'விடுதலையா?' எனும் கதைத் தொகுப்பைச் சேர்ந்ததாகும்.

'எவர் குற்றம்?' எனும் சிறுகதை, "வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்கள் வந்துவந்து போகின்றன. ஆனால் இத்தகைய கொடிய ஏமாற்றத்தை – எதிர்த்து நின்று என்னோடு போராடும் ஏமாற்றத்தை – இதுவரையில் கண்டதில்லை"[13] எனத் தொடங்குகிறது. 'வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்கள்' எனும் தொடக்கத்திலுள்ள மூன்று சொற்களே, 'ஏதோவொரு வகை வாழ்க்கைச் சிக்கலை' இக்கதை எடுத்துரைக்கப் போகிறது என்பதைத் தெரிவிக்கின்றன.

> "அமாவாசையார்" என்று நாங்கள் அவரைக் குறிப்பிடுவது வழக்கம். எங்களுக்குள் பேசிக் கொள்ளும்போது அவ்வாறு சொல்லலாமே தவிர, அவர் எதிரிலோ, அவர் செவியில் கேட்கும்படியாகவோ சொல்ல மாட்டோம்"[14]

என்று தொடங்குவது 'அமாவாசையார்' எனும் சிறுகதை, கதைப்பாத்திரத்தின் பண்பை வெளிப்படுத்துவதாக இத்தொடக்கம் அமைந்து இருக்கிறது.

ஆ. உரையாடல் தொடக்கம்

கதைப் பாத்திரங்கள் உரையாடிக் கொண்டிருப்பது போலத் தொடங்குவது இரண்டாவது வகை. நாடகம் போல் அமைவது

இத்தொடக்கம். இரு பாத்திரங்களினுடைய பேச்சின் மூலம் கதையின் போக்குச் சுட்டிக்காட்டப்படுகிறது.

"நீங்கள் எப்படி சாமி, இங்கே வந்து சேர்ந்தீர்கள்?" என்று திகைப்புடன் கேட்டான் அவன்.

"இப்படித்தான், உன்னைப்போல்தான் என்று அக்கரை இல்லாதவன் போல் பதில் சொல்லி முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டேன்"[15] என்று தொடங்குகிறது. 'வாய் திறக்க மாட்டேன்' எனும் சிறுகதை, இவ்வாறு உரையாடல் பாணியில் தொடங்கி, பெரிதும் உரையாடல் மூலமாகவே, வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றை இது சித்திரிக்கிறது.

இ. கூற்றுமுறைத் தொடக்கம்

கதையைச் சொல்லும் நோக்கு நிலையோடு (Point of View) தொடங்குவது கூற்றுமுறைத் தொடக்கம் எனப்படும். 'விடுதலையா?', 'அந்த மனம் வருமா?', 'குறட்டை ஒலி', போன்ற பல கதைகள் தன்மைக் கூற்று நிலையில், சிறப்பாகத் தொடங்குகின்றன.

"ஒருநாள் விடுமுறையாக இருந்தால் சென்னையைவிட்டு வெளியூர்க்குப் போய்வர மனம் வராது"[16] என்பது, 'அந்த மனம் வருமா?' என்னும் சிறுகதையின் தொடக்கமாகும்.

ஈ. நினைவு ஓட்டமுறைத் தொடக்கம்

கதைப் பாத்திரத்தின் எண்ணம் யாதோவொரு சிக்கலைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதாக அமைவது நினைவு ஓட்டமுறைத் தொடக்கமாகும்.

"இந்தப் பாரதியார் நல்ல வேதாந்தி என்று எல்லாரும் சொல்கிறார்கள். ஆனால், இவர் என்ன என்றால், இந்த உலகம் மித்தை, பொய் என்று ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறாரே"[19] எனத் தொடங்குகிறது.

உ. வருணனை முறைத் தொடக்கம்

கதையில் இடம்பெறும் நிகழ்ச்சி அல்லது கருத்திற்குத் தொடர்புடைய ஒன்று பற்றிய வருணனையுடன் தொடங்கும் கதை, 'வருணனை முறைத் தொடக்க'க் கதையாகும். 'தேங்காய்த் துண்டுகள்', 'கட்டாயம் வேண்டும்' எனும் சிறுகதைகள் இத்தகைய தொடக்கத்தை உடையன.

"மாலை நேரத்தில் குடித்துவிட்டுச் சாலை ஓரத்தில் விழுந்து கிடப்பவர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இது என்ன கொடுமை? பகல் ஒரு மணிக்கு நல்ல வெயிலில் தார் வெந்து உருகும்

வெப்பத்தில், இந்தச் சாலை ஓரத்தில் இப்படி ஒருவன் விழுந்து கிடக்கிறானே"[18] என்பது 'தேங்காய்த் துண்டுகள்' எனும் கதையின் தொடக்கமாகும்.

இவ்வாறு மு.வ.வின் சிறுகதைகளுள் சில, படிப்போரின் கருத்தைக் கவரும் வகையில் தொடக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளன.

(2) கதையின் முடிவு

சிறுகதை எனும் கலைவடிவத்திற்குச் சிறப்பு அளிப்பது அதன் முடிவாகும். அம்முடிவு பொருத்தமானதாக, நயமானதாக, அமைந்து படிப்பவரின் எண்ணத்தைத் தூண்டும் ஆற்றல் உடையதாகத் தோன்ற வேண்டும். இந்த ஆற்றலை, அழகைப் பெரிதும் முடிவுச் சொற்றொடர் அளிக்கிறது. ஒரு சிறந்த ஆசிரியர், தம் கதைக்குத் தரும் முடிவு கதையை முடித்து வைப்பதோடு அமையாது. படிப்பவர் உள்ளத்தில் கதை பற்றிய எண்ணத்தை என்றும் முடிவு இல்லாமல் எழுப்பிக் கொண்டே இருக்கும் என்று திறனாய்வாளர் கூறுவர்.[19]

இத்தகைய 'முடிவுகள்' ஐந்து வகைப்படும். அவை செயல் பற்றிய கூற்றுடன் முடிவு, கதைப் பாத்திரங்களின் கூற்றுடன் முடிவு, கதைப் பாத்திரங்களின் எண்ணவோட்டத்தோடு கூடிய முடிவு, கூற்றுமுறை முடிவு, வருணனை முடிவு என்பனவாகும்.

அ. செயல் பற்றிய கூற்றுடன் முடிவு

கதையின் உச்சநிலையுடன் தொடர்புடைய முறையில், 'முடிவில்' செயலைக் காட்டுவதாக மு.வ.வின் கதைகள் சில அமைந்துள்ளன. 'கட்டாயம் வேண்டும்', 'இயற்கை பொல்லாதது' என்பன செயல் பற்றிய கூற்றுடன் முடிகின்றன.

> அந்தோ! 'இரந்து வாழ எண்ணவில்லையே' அந்தத் தமிழன்! கூலி வேலை வேண்டும், 'கட்டாயம் வேண்டும்' என்றுதானே கேட்டான்?[20]

என்பது 'கட்டாயம் வேண்டும்' எனும் கதையின் முடிவாகும். செத்துப்போன இளைஞன் செயலை', 'கூலி வேலை கொடுங்கள்! கொடுங்கள்!' என்று கேட்ட செயலை, நினைவுபடுத்தும் நிலையில் கதை முடிவுறுகிறது. 'அந்த வேலை கிடைக்காததனால் அல்லவா, வாழ வழியின்றி அவன் செத்து மடிந்தான்' எனும் எண்ணத்தைப் படிப்பவருடைய உள்ளத்தில் இது எழச் செய்கிறது.

ஆ. கதை மாந்தர்களின் கூற்றுடன் முடிவு

கதையில் இடம்பெறும் கதைப் பாத்திரம் ஒன்று, மற்றொரு பாத்திரத்துடன் உரையாடும் முறையில் முடியும் கதைகள் சில

உள்ளன. படிப்பவரைச் சிந்திக்க வைக்கும் ஆற்றலுடன் இவ்வகை முடிவு அமைகிறது. இம்முறை கதைக்கருவிற்கு வலுவூட்டுகிறது.

'எதையோ பேசினார்', 'இறந்த சிற்றப்பா', 'குறட்டை ஒலி', 'உலகம் பொய்' எனும் கதைகள் இம்முறையில் முடிகின்றன.

"என்ன போங்க. நூறு ரூபாய் என்றால் கொஞ்சமா? அதைச் சம்பாதிக்க எத்தனை நாள் உழைக்க வேண்டும்" என்று பெருமூச்சுவிட்ட வருத்தத்தோடு என்னைப் பார்த்தார் நண்பர்"[24] என்பது 'உலகம் பொய்' எனும் கதையின் முடிவாகும். 'உலகம் பொய்' என்று சொல்லிக் கொண்டிருப்பவர், பணம் சேர்ப்பதிலேயே கருத்தாக இருக்கிறாரே! அவர் சொல்லுகிறபடி 'உலகம் பொய்யா? அல்லது அவர் சொற்கள் பொய்யா?' என்பதை, 'நண்பரின்' கூற்று, படிப்போரைச் சிந்திக்குமாறு தூண்டுகிறது.

இ. கதை மாந்தரின் எண்ணவோட்டத்தோடு கூடிய முடிவு

கதை மாந்தர் எண்ணிக் கொண்டிருக்கும் சூழலமைவைக் காட்டி, அந்த உணர்வுச் சூழலமைவுடன் முடிந்துவிடும் சிறுகதைகள் சிலவற்றை மு.வ.அவர்கள் படைத்துள்ளார். 'எவர் குற்றம்?', 'அந்த மனம் வருமா?', 'அமாவாசையார்' 'வாழும் வழி' என்னும் கதைகள் இத்தகைய முடிவினைக் கொண்டுள்ளன.

இரண்டையும் கேட்டபடியே அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் நண்பர்களிடமிருந்து விடைபெற்று என் வீட்டுப்பக்கம் திரும்பினேன்.

எட்டடிக் குச்சிக்குள்ளே - முருகா
எத்தனை நாள் இருப்பேன்

என்ற காவடிச்சிந்து என் செவியில் ஒலித்தது[22] என்று முடிகிறது. 'அமாவாசையார்' எனும் கதை, 'காவடிச்சிந்து என் செவியில் ஒலித்தது!' என்று முடியும் கதை, அதற்கு மேல் பாத்திரத்தின் ஆழ்ந்த சிந்தனையோட்டத்தைக் காட்டவில்லை. அதன்மூலம், படிப்பவரின் எண்ணவோட்டத்தை அவரவர் எண்ணப்போக்கிற்கேற்ப அமையுமாறு செய்கிறது.

ஈ.கூற்றுமுறை முடிவு

கதையினை எந்த நோக்கு நிலையில் (Point of View) நின்று, எவ்வகையான கூற்றில் ஆசிரியர் கதையை முடிக்கின்றாரோ அதைக் 'கூற்றுநிலை முடிவு' என்பர்.

பேராசிரியர் மு.வ.அவர்களுடைய சிறுகதைகளில் ஆசிரியரே, ஒரு கதைப் பாத்திரமாக அமைந்துள்ளார் என்பதை முன்னரே கண்டோம். இதனால் பெரும்பாலான கதைகளில் 'தன்மைக் கூற்று

நோக்கு நிலையே' இடம் பெற்றிருக்கிறது. 'விடுதலையா?', 'வாய் திறக்க மாட்டேன்', 'இறந்த சிற்றப்பா', 'யாரோ தெரியாது' என்பன இத்தகைய நோக்கு நிலையில் அமைந்தன.

"பணத் தெய்வமே! உனக்குக் கண் இல்லையா?"

என்று சொல்லிக் கொண்டே நான் கொட்டாவி விட்டேன்.[23]

என்னும் 'வாய் திறக்க மாட்டேன்' எனும் கதையின் முடிவு, இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

உ. வருணனை முடிவு

கதையில் இடம்பெறும் செயல், கதைப்பாத்திரங்களின் பண்பு, வெளிப்பாடு என்பன புலனாகுமாறு உதவுவன இடவருணனை, கதைப்பாத்திரத்தின் வருணனை, அப்பாத்திரங்களின் மனநிலை வருணனை என்ற நிலையில் கதைகளின் முடிவு அமையுமாயின், அவற்றை வருணனை முடிவு எனலாம். 'தேங்காய்த் துண்டுகள்', 'எதையோ பேசினார்', 'சுடரின் நகைப்பு' 'அக்கரை பச்சை' என்னும் கதைகள் வருணனை முடிவினைக் கொண்டவையாகும்.

"புது சினிமாவின் பெயர்?"

"அக்கரை பச்சை"[24]

என்று முடிகிறது. 'அக்கரை பச்சை' எனும் கதை. இவ்விரு சொற்கள், கதைப்பாத்திரத்தின் மனநிலையை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. மேலும், அந்தப் பாத்திரத்தின் பண்புநலனும் வெளிப்படுகிறது.

(3) கதைத் தலைப்புகள்

கதைக்குத் தலைப்பு கொடுப்பதே ஒரு தனிக்கலை! சிறுகதையின் வெற்றி, அதன் தலைப்பைப் பொறுத்தே அமைகிறது. பொருத்தமான தலைப்பைத் தேர்ந்தெடுத்து வழங்குவதிலேயே, சிறுகதை ஆசிரியனுடைய கலையுணர்வு நன்கு வெளிப்படும். எதைச் சுற்றிக் கதை சொல்லப்படுகிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ள உதவுவது கதையின் தலைப்பேயாகும் கதையின் தலைப்பு, கதையின் உள்ளீட்டை ஒருவாறு சுருக்கித் தருவதாக இருக்க வேண்டும்[25] என்பர்.

அ. கதைமாந்தரின் பெயரைத் தலைப்பாக அமைத்தல்

சிறுகதைகள் பொதுவாக ஒரு பாத்திரத்தின் பண்பையோ, அவர் வாழ்க்கையின் முதன்மையான நிகழ்ச்சியையோ சுற்றிச் சுழலுமானால், அப்பாத்திரத்தின் பெயரே, தலைப்பாக இடப்படும், கதைப்பாத்திரத்தின் இயற்பெயர் மட்டுமன்றி, அவருக்கு என்று

அமைந்த சிறப்புப் பெயரும் தலைப்பாக இடம்பெறுவது உண்டு. தொழிலால், இனத்தால், காரணத்தால் இடப்படும் பெயர்களே, சிறப்புப் பெயர்களாகும்.

மு.வ.வின் பதினேழு சிறுகதைகளுள் இயற்பெயராலோ, சிறப்புப் பெயராலோ தலைப்பினைப் பெற்ற சிறுகதை ஒன்று கூட இல்லை.

ஆ.கதைமாந்தரின் பண்பை வெளிப்படுத்தும் தலைப்பு

'அமாவாசையார்' எனும் கதை, பண்புப் பெயரால் அமைந்ததாகும். கதைத் தலைவரான பெரியவரின் உடல் நிறத்தைச் சுட்டுவதற்கும், 'எப்பொழுதும், அமாவாசை எப்பொழுது வருகிறது?' என்று வருவார் போவாரையெல்லாம் விடாமல் கேட்டுக் கொண்டிருக்கும் அவருடைமை இயல்பைப் புலப்படுத்துவதற்கும் ஏற்றதொரு தலைப்பாக இது அமைந்திருக்கிறது. இத்தலைப்பு, கதைப்பாத்திரத்தின் பண்பை எளிதில் புரிந்து கொள்ளச் செய்கிறது.

இ. கதையில் எழும் சிக்கலைத் தலைப்பாக அமைத்தல்

கதையின் சிக்கலாகத் தோன்றுவதையே, தலைப்பாக அமைப்பதும் ஒருவகைப் பெயரிடும் கலையாகும். இரண்டு பிரச்சினைகளுக்கு இடையே மோதலின் அடிப்படையில் கதை அமையுமாயின், அதனையே தலைப்பாக அமைத்தல் பெருவழக்கு.

'எவர் குற்றம்?' எனும் கதை, காதலன் காதலியர் இருவரிடையே, 'காதலின் தோல்விக்கு யார் காரணம்?' என்பதை விளக்கும் வகையில் அமைந்திருக்கிறது. 'எல்லோரும் சமம்', 'உலகம் பொய்', 'யாரோ தெரியாது', 'இயற்கை பொல்லாதது' என்பன, கதையில் இரண்டு சிக்கல்களுக்கு இடையே உண்டாகும் மோதலைப் புலப்படுத்தும் வகையில் அமைந்த தலைப்புகளாகும்.

ஈ. நிகழ்ச்சியைத் தலைப்பாக அமைத்தல்

கதையில் இடம்பெறும் முதன்மையான ஒரு நிகழ்ச்சியைக் கதைக்குத் தலைப்பாக இடுவதும் உண்டு. இத்தகைய கதைகளில் கதையைப் படித்த பின்னர், அந்நிகழ்ச்சியோடு தொடர்புடைய வேறொன்றை எண்ணி, அதைப்பற்றியே சிந்திக்கத் தூண்டும் வகையில் கதை அமைவது இவற்றின் இயல்பாகும்.

'எதையோ பேசினார்', 'இறந்த சிற்றப்பா', 'குறட்டை ஒலி' போன்ற கதைகள் இத்தகையன. இத்தலைப்புகள் ஒவ்வொன்றும் கதையோடு தொடர்புடைய வேறொன்றை எண்ணி, அதைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

உ. சூழலமைவைத் தலைப்பாக அமைத்தல்

கதை நடைபெறும் இடத்தையோ, காலத்தையோ கதையில், முக்கிய இடத்தைப் பெறுமாறு அமைக்கப்படும் கதைகள் உண்டு. அவற்றிற்கு, அக்கதை நடைபெறும் சூழலமைவினை – பின்னணியினையே – தலைப்பாக அமைப்பர். இத்தகைய தலைப்பினைக் கொண்ட கதை ஒன்று கூட மு.வ.வின் சிறுகதைகளுள் காணப்பெறவில்லை.

ஊ. வினா வடிவில் தலைப்பு அமைத்தல்

கதையில் உண்டாகும் சிக்கலையோ, கதைக் கருப்பொருளுடன் தொடர்புடைய ஒன்றையோ, வினாவாக அமைத்து, அதற்குரிய விடையைப் படிப்பவர் சிந்திக்குமாறு கதைத் தலைப்பை ஆசிரியர் அமைப்பர். பேராசிரியர் மு.வ.அவர்களுடைய முதல் கதைத்தொகுப்பில் முதன்மையிடம் பெறுவது 'விடுதலையா?' எனும் கதையாகும். இக்கதையின் பெயரே நூலுக்குரிய பெயராக அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தொகுப்பில் 'எவர் குற்றம்?' எனும் மற்றொரு கதையும் வினா வடிவில் அமைந்ததே. மற்றும், 'குறட்டை ஒலி' எனும் கதைத் தொகுப்பில் உள்ள 'அந்த மனம் வருமா?' எனும் கதையும் இத்தகைய வினா வடிவத் தலைப்பினைக் கொண்டதாகும்.

எ. மறைமுகமாகக் கூறுதல்

சிறுகதை ஆசிரியர், தாம் கூற வேண்டிய கருத்தை நேரடியாக அல்லாமல், வேறுவகையில் கூறுவதையே பெரிதும் பின்பற்றி வருகின்றனர். இதனால், தலைப்பிலும் இவ்வியல்பு புலப்படுமாறு தலைப்பினை அமைப்பர். பேராசிரியர் மு.வ.அவர்களின் சிறுகதைகளுள், 'தேங்காய்த் துண்டுகள்', 'கட்டாயம் வேண்டும்' 'எல்லோரும் சமம்', 'உலகம் பொய்', 'இயற்கை பொல்லாதது' என்பன இத்தகைய முறையில் அமைந்தனவாகும்.

> அந்த இடத்தில் தேங்காய்த் துண்டுகள் விழுந்து கிடந்தன; வாடிக் கிடந்தன; எறும்பு மொய்த்துக் கிடந்தன; எடுப்பாரின்றிக் கிடந்தன; கண்ணீரால் நனைந்து கிடந்தன.[26]

என்பது 'தேங்காய்த் துண்டுகள்' எனும் கதையின் இறுதியிலுள்ள சொற்களாகும்.

நாள்தோறும் அந்தத் தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துத் தின்று, தன் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொண்டிருந்த அவன், பல நாட்களாக வருவதில்லை. அதனால், தேங்காய்த் துண்டுகள் எறும்பு மொய்த்துக் கொண்டு சீந்துவாரற்றுக் கிடந்தன என்பதை ஆசிரியர் அறிவிக்கிறார். இதன் மூலம், 'அவன் இறந்து

விட்டான்; அதனாலேயே அவன் வருவது இல்லை' எனும் கருத்தை மறைமுகமாக இந்தத் தலைப்பின் மூலம் ஆசிரியர் உணர்த்துகிறார்.

ஏ. முடிவுகளிலிருந்து தலைப்பு அமைத்தல்

கதை முடிகின்றபொழுது பயன்படுத்தப்படும் சொற்களையோ, தொடர்களையோ கதைக்குரிய தலைப்பாக அமைப்பதும் உண்டு. 'குறட்டை ஒலி' எனும் கதைத் தொகுப்பில் கடைசியாக உள்ளது. 'அக்கரை பச்சை' எனும் கதையாகும். இக்கதையினை நிறைவுறுமாறு செய்யும் சொற்கள் 'அக்கரை பச்சை' என்பனவாகும். இச்சொற்கள் ஒரு பழமொழியாகும். அப்பழமொழியே கதையின் தலைப்பாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணுகின்றோம்.

முப்பதாண்டுகளுக்கு முன்னர் மு.வ.சிறுகதைகள் எழுதினார். அக்காலத்திலேயே, இன்று வளர்ந்து, சிறந்துள்ள கலைநுட்பங்களைக் கருத்தில் கொண்டு தம்முடைய சிறுகதைகளுக்குப் பெயரிட்டுள்ளார். இது அவருடைய கலைநலங்கனிந்த படைப்புத் திறமைக்குச் சிறந்ததொரு சான்றாக அமைகிறது.

(4) சிறுகதையின் கூறுகள்

சிறுகதையின் கூறுகளுள் (Elements) சிறப்புடையன ஆறு. அவை *(1)* கதைக்கரு (Theme), *(2)* கதைப்பின்னல் (Plot), *(3)* கதைமாந்தரின் படைப்பு (Characterisation), *(4)* நோக்குநிலை (Point of View), *(5)* சூழலமைவு (Setting), *(6)* குறியீடு (Symbol) என்பன. இக்கூறுகள் ஒன்றோடு மற்றொன்று இணைந்து இயங்குகின்றபொழுது, சிறுகதைக்கு ஒரு வடிவத்தையும் (Form), அமைப்பினையும் (Structure) தருகின்றன. இவையெல்லாம் சேர்ந்து ஒருமுக இயைபி (Unity of Effect) னைக் கதைக்கு அளிக்கின்றன.[27]

அ. கதைக்கரு

ஒரு கதையின் மையக் கருத்தைச் சுருக்கமாகவும் முழுமையாகவும் வெளியிடும் கூறு கதைக் கருவாகும். இதனைக் கதையின் உயிர்நாடி என்பர்.[28]

பாட்டி பேரனிடத்துக் கொண்ட அன்பே, 'விடுதலையா?' எனும் கதையின் கருவாகும் வறுமையின் கொடுமையே 'தேங்காய்த் துண்டுகள்', 'வாய் திறக்க மாட்டேன்', 'எதையோ பேசினார்', 'கட்டாயம் வேண்டும்' 'இறந்த சிற்றப்பா', 'வாழும் வழி', 'எல்லோரும் சமம்', குறட்டை ஒலி' போன்ற கதைகளின் கருவாக அமைக்கப்பட்டுள்ளன. 'எவர் குற்றம்?' எனும் கதையில் ஆண் – பெண் உறவு கருவாக இடம் பெற்றுள்ளது. 'சுடரின் நகைப்பு', 'இயற்கை பொல்லாதது' எனும் கதைகளுக்கு 'இறப்பு' கருவாக

அமைக்கப்பட்டுள்ளது. உணர்ச்சியின் பிண்டம் மனிதன் என்பதே, 'அக்கரை பச்சை'யின் கதைக்கருவாகும். இவையாவும் சமுதாய நிலையினைப் படம்பிடித்துக் காட்டும் சமூகச் சிறுகதைகளாகவே உள்ளன.

ஆ. கதைப்பின்னல்

கதை என்பது வேறு; கதைப்பின்னல் (Plot) என்பது வேறு என்பதைப் 'புதினங்கள்' பற்றிய ஆய்வில் கண்டோம். கதைப்பின்னல் என்பது கதை நிகழ்ச்சிகள் இடையே வெளிப்படும் காரணகாரியத் தொடர்பாகும். சிறுகதை அளவில் சிறியதானாலும், அதனுள்ளே கதைப்பின்னல் அமைகிற பொழுதுதான் அது சிறந்த கதையாக அமைகிறது. சிறுகதையின் கதைப்பின்னலில் அமையும் சிறப்புக்கூறு போராட்டம் (Conflict) ஆகும். போராட்டம் இருவகைப்படும். அவை புறப்போராட்டம், அகப்போராட்டம் என்பன.[29]

'தேங்காய்த் துண்டுகள்' எனும் கதையில் மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டம் சித்திரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதைப்போன்றே 'கட்டாயம் வேண்டும்', 'இறந்த சிற்றப்பா', 'எல்லோரும் சமம்', 'யாரோ தெரியாது', 'குறட்டை ஒலி', 'வாழும் வழி என்பன மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. 'வாய்திறக்கமாட்டேன்' என்பது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை உணர்த்துகிறது. 'சுடரின் நகைப்பு', 'இயற்கை பொல்லாதது' எனும் சிறுகதைகளில், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே நடைபெறும் போராட்டம் இடம்பெற்றிருக்கிறது. இம்மூவகைப் போராட்டங்களும், புறப்போராட்டத்தின் (External Conflict) மூன்று நிலைகளாகும்.

அகப்போராட்டம் (Internal Conflict) என்பது மனிதனுடைய உள்ளத்தில், உணர்ச்சிகளுக்கு இடையே நடைபெறம் போராட்டம் ஆகும். மு.வ.அவர்களுடைய 'எவர் குற்றம்?', 'எதையோ பேசினார்', 'உலகம் பொய்' போன்றவை அகப்போராட்டத்தைச் சித்திரிக்கின்றன. ஓரளவிற்குக் 'குறட்டை ஒலி'யிலும் இப்போராட்டத்தைக் காணலாம்.

இ) கதைமாந்தரின் படைப்பு

கதைமாந்தரின் படைப்பு முறையில் இரு வகைகள் உண்டு. ஆசிரியரே கதைமாந்தரைப் படைத்துக் காட்டுவது ஒருமுறை. இதனை நேரடிமுறை (Expository Method) என்பர்.[30] மற்றொன்று நாடக முறை (Dramatic Method), இம்முறை மிகவும் நுட்பமானதாகும்.இதில் கதைப்பாத்திரங்களின் சிந்தனைகளிலிருந்தும் செயல்களிலிருந்தும் அவர்களுடைய பண்புநலன்கள் புலப்படுமாறு அப்பாத்திரங்களை

ஆசிரியர் படைப்பார்; படிப்போரே கதைப்பாத்திரங்களைப் பற்றி உய்த்துணருமாறு சித்திரிப்பார்.[31]

'விடுதலையா' எனும் கதையில் வரும் திருவேங்கடம் எனும் சிறுவனின் பாத்திரப்படைப்பும், அவனுடைய பாட்டி நரசம்மாளுடைய பாத்திரப் படைப்பும், 'கட்டாயம் வேண்டும்' எனும் சிறுகதையில் வரும் சிறுவனுடைய பாத்திரப்படைப்பும், 'இறந்த சிற்றப்பா'வில் வரும் பையன் படைப்பும், 'அமாவாசையாரின்' பாத்திரப்படைப்பும் நேரடி முறையில் படைக்கப்பட்டனவாக உள்ளன.

'அமாவாசையார்' எனும் கதைமாந்தரின் பண்புநலன்களில் ஒன்று கஞ்சத்தனம் அதை,

> அவரிடம் ஒரு குறை சொல்லலாம் என்றால் அது இதுதான். கையில் கிடைத்த காசை இறுகப் பிடிக்கும் குணம் அவரிடம் உண்டு. அவருடைய ஒட்டிய வயிறும், வறண்ட கன்னங்களும் வறுமையைக் காட்டுவனவாக வெளியார் எண்ணக்கூடும். உள்ளூரராகிய எங்களுக்கு உண்மை தெரியும். அவருடைய அளவு மீறிய சிக்கனத்தை – உலோபத் தன்மையை – அவைகள் எங்களுக்குக் காட்டிக் கொடுத்தன.[32]

என்பது ஆசிரியர் காட்டும் அமாவாசையாரின் பண்போவியமாகும்.

கதைமாந்தரின் வடிவ வருணனை

கதைமாந்தரின் தோற்றம், நடை, உடை, பாவனை, வயது முதலியவற்றை – நிழற்படம்போல் அப்படியே படிப்பவர்மனக்கண் முன்னால் நிற்குமாறு படைப்பதில் மு.வ.நன்கு தேர்ச்சி பெற்றுள்ளார். பாட்டி 'நரசம்மாள்' 'அமாவாசையார்', 'எதையோ பேசினார்' எனும் கதையில் வரும் தலைவர், 'அக்கரை பச்சை'யில் வரும் இரண்டு பெண்டாட்டிக்காரன் போன்றவர்களின் வடிவ வருணனை உயிர்க்கலையுடன் காணப்படுகிறது.

> அப்போது முதிய அம்மையார் ஒருவர் தம் பேரனை அழைத்துக் கொண்டு அணிவகுப்பில் நுழைந்தார். அம்மையார்க்கு நரை வந்துவிட்டதே அல்லாமல், இன்னும் திரை வரவில்லை. மூப்பு என்று சொல்லிவிட இயலாது. ஆனாலும், அவர் நிலையினைக் கூற வேறு சொல் இல்லையாகையால், மூப்பின் தொடக்கம் எனலாம். வயது ஐம்பதுக்கு மேற்பட்டிருக்கலாம். சிவந்த மேனியும், கட்டுத்தளரா யாக்கையும், எளிய உடையும் ஒருவகை வீறு அளித்தன; கண்களின் கலக்கமற்ற ஒளி, உள்ளத்தின் தெளிவை வெளியாக்கிற்று. நடையில் பெண்மையும் வீரமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. பிரான்சு நாட்டில் வாழ்ந்து

வீரப்போர் புரிந்து தீக்கு இரையாகிய ஜோன் என்னும் அம்மையார் இன்னும் 30 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தால், அவரை இந்த அம்மையாருக்கு உவமையாக்கிக் கூறலாம்.[35]

என்று பேராசிரியர் மு.வரதராசனார், நரசம்மாவைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். கதைமாந்தரின் வடிவ நலனைப் புலப்படுத்த சிறப்புமிகு உவமையைக் கையாண்டுள்ள திறம், கதைப்பாத்திர அமைப்பிற்கு வலிவும் பொலிவும் அளிக்கிறது.

மு.வ.வின் படைப்புலகம்

பேராசிரியர் மு.வரதராசனார், தம் சிறுகதைகளில் பலவகையான கதைமாதர்களைப் படைத்து வெற்றிப் பெற்றார் எனக்கூற இயலாது. குறிப்பிட்ட சிலவகை மாந்தர்களையே, அவர் படைத்துள்ளார். எல்லாக் கதைகளிலும் அறவேட்கையும் சமுதாயச் சிந்தனையும் கொண்ட தம்மையே, ஒரு பாத்திரமாக – பெரிதும் பெயரில்லாப் பாத்திரமாக – அவர் படைத்துள்ளார். ஏழை எளிய மக்கள், தொழிலாளிகள், கிராமத்துப் பெரியவர், பிச்சைக்காரர், ஆடம்பர ஆரவாரமிக்க செல்வர், எளிய வாழ்க்கை வாழும் எழுத்தர்கள், நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஆடவர், மகளிர் போன்றவர்களே பாத்திரங்களாக வருகின்றனர். இப்பாத்திரங்களிடையே அதிகமான வேற்றுமை இருப்பதாகத் தோன்றவில்லை. தமிழ்நாட்டின் பல்வேறு சிவன் கோயில்களில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிலை, ஏறக்குறைய ஒரே வார்ப்பில் செய்தன போல் உள்ளன. அவற்றைப் போன்றே, மு.வ.அவர்களின் பாத்திரப்படைப்பும் அமைந்துள்ளது எனலாம். இதனால், டாக்டர் மு.வரதராசனாரின் ‘படைப்பு உலகம்’ விரிந்ததாகக் காட்சித் தரவில்லை; குறுகிய ஒன்றாகவே தோன்றுகிறது. ஆனால், அந்த உலகம் அழகாகவும் ஆழமாகவும் படைக்கப்பட்டிருக்கிறது.

ஈ) நோக்குநிலை

கதைமாந்தருள் யாரேனும் ஒருவர் கதை முழுவதையும் கூறுவதாகக் கதையை எடுதுரைப்பது ஒருமுறை. அது தன்மைக் கூற்றில் அமையும். இதனால், இதனைத் ‘தன்மைக் கூற்று நோக்குநிலை’ என்பர். கதைப்பாத்திரம் ஒருவரே, கதையைக் கூறுவோராக அமையும்போது, படிப்பவருக்கு அவரோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. அதனால் சுவை மிகுதியாகிறது. கதைப் பாத்திரம் கதை கூறுவோராக அமையும் நோக்கு நிலையில் இரு வகைகள் உள்ளன. தலைமைப் பாத்திரம் கதையைச் சொல்வது ஒருமுறை இதில் கதையின் முக்கியமான நிகழ்ச்சிகள் யாவும் கதை கூறுவோரின்வாழ்வில் நிகழும். எனவே, இதனைத் ‘தலைமை மாந்தர் தன்மைக் கூற்று நோக்கு நிலை’ (First Person Central Point of

View) என்பர் கதையில் வரும் துணைமாந்தர் ஒருவர், கதையைச் சொல்லுவதாக அமைப்பது இரண்டாம் வகை. தலைமைப் பாத்திரத்தின் வாழ்க்கையைத் தொலைவில் நின்று பார்த்து, கதையைத் துணைமாந்தர் கூறுவர். இம்முறையைத் 'துணைமாந்தர் தன்மைக்கூற்று நோக்கு நிலை' (First Person Peripheral Point of View) என்பர்.[34] மு.வ.வின் சிறுகதைகளில் இவ்விரு வகைக்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன.

'எதையோ பேசினார்', 'எவர் குற்றம்?', 'அந்த மனம் வருமா?', 'சுடரின் நகைப்பு', 'இறந்த சிற்றப்பா', 'எல்லோரும் சமம்', 'யாரோ தெரியாது', 'உலகம் பொய்', 'குறட்டை ஒலி', 'இயற்கை பொல்லாதது', 'அக்கரை பச்சை' எனும் கதைகள், 'தலைமைப் பாத்திரத் தன்மைக்கூற்று நோக்கு நிலையில் அமைந்துள்ளன. 'தேங்காய்த்துண்டுகள்', 'வாய் திறக்க மாட்டேன்', 'கட்டாயம் வேண்டும்', 'அமாவாசையார்', 'வாழும் வழி' என்னும் கதைகள், 'துணைப்பாத்திரத் தன்மைக்கூற்று நோக்குநிலை'யில் கதையைக் கூறிச் செல்லுகின்றன.

ஆசிரியரே கதை கூறுவதுபோல அமைவது மற்றொரு வகை நோக்கு நிலை. இம்முறை பெரும்பான்மையான கதைகளில் காணப்படுவதாகும். இம்முறை படர்க்கைக் கூற்றில் அமையும். இதனால், இதனைப் 'படர்க்கைக் கூற்று நோக்கு நிலை' (Third Person Point of View) என்பர். இம்முறையில் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. தாம் விரும்பும் கருத்துகளை எல்லாம் ஆசிரியர் இடையிடையே கூறலாம். பாத்திரங்களின் பண்பு நலன்களை எளிதில் அவர் வெளிப்படுத்த இயலும்; அவர்களுடைய உள்ள உணர்வுகளை அறிந்து வெளிப்படுத்தலாம்; கதை நிகழ்ச்சிகளையும், தம் விருப்பம் போல் ஆசிரியர் எடுத்துரைக்கலாம். படர்க்கைக் கூற்று நோக்குநிலையில் ஆசிரியர், 'எல்லாம் அறிந்தவராய், எல்லாம் உணர்ந்தவராய்' இருப்பார். இதனால், 'எல்லாம் அறிந்த நோக்கு நிலை' (Omniscient Point of View) எனவும்[35] இதனைச் சுட்டுவர்.

பேராசிரியர் மு.வரதராசனார், இம்முறையை மிகவும் அருகிய வழக்காகவே பயன்படுத்தியுள்ளார். 'விடுதலையா?' எனும் கதையே இந்நோக்கு நிலைக்கு மிகச்சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

(உ) முழு உரையாடல் முறை

கதை முழுவதையும் உரையாடலாகவே அமைப்பது கதை கூறும் உத்திகளுள் ஒன்றாகும். 'வாய் திறக்க மாட்டேன்' எனும் கதை ஓரளவிற்கு இம்முறையில் அமைந்திருக்கிறது. ஆனால், உரையாடல், பல கதைகளில் இடம்பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

(ஊ) பின்வீச்சு

பின்வீச்சு (Flash - back) முறையில், கதையைக் கூறுவதும் உண்டு. சிறுகதையில் இம்முறையைக் கையாளுவது எளிய செயல் அன்று. 'விடுதலையா' எனும் கதையில் இந்த உத்தி, ஓரளவிற்கு இடம் பெற்றிருக்கிறது.

(எ) சூழலமைவு

சூழலமைவு அல்லது பின்னணி (Setting) என்னும் சொல்லால், கதை நிகழும் இடத்தையும், கதை நிகழும் காலத்தையும் கதைகளைத் திறனாய்வோர் சுட்டுவது வழக்கமாகும்.[36] இடமும் காலமும் ஒரு நிகழ்ச்சிக்கு இன்றியமையாது தேவைப்படுகின்றன. இதனால், இலக்கியத்தில் இடம்பெறும் 'பாடுபொருளுக்கு', இன்றியமையாது வேண்டப்படும் இடத்தையும் காலத்தையும் தொல்காப்பியனார், 'முதற்பொருள்' என்பதனுள் அடக்கியுள்ளார்.[37] இம்முறையைச் சிறுகதைத் திறனாய்வாளர் 'சூழலமைவு' எனப் போற்றுகின்றனர்.

(எ) இடச்சூழல்

படைப்புக் கலைஞர்கள், தாங்கள் நன்கு அறிந்த ஊர்களையும் இடங்களையுமே, தங்கள் கதைக்குரிய சூழலமைவாகப் பயன்படுத்துவர். மு.வ.வின் சிறுகதைகளில் இரண்டுவகைச் சூழலமைவினைக் காணலாம். ஒன்று கிராமப்புறச் சூழல்; மற்றொன்று நெடுங்காலம் அவர் வாழ்ந்த சென்னை நகரச்சூழல்.

'விடுதலையா?' எனும் கதையில், அவர் வாழ்ந்த திருப்பத்தூர், குடியிருந்த முத்துக்காரன் தெரு, சுற்றுப்புற ஊர்கள் இக்கதைக்குப் பின்னணியாக அமைக்கப்பட்டுள்ளன.[38] 'அந்த மனம் வருமா?' எனும் கதையில் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த வேலத்து மலைகள் சூழலமைவாகத் தோன்றுகின்றன.39 'சுடரின் நகைப்பு', 'அமாவாசையார்' எனும் கதைகளிலும் கிராமப்புறச் சூழலமைவே இடம்பெற்றுள்ளன.

சென்னைக்கு முதன்முதல் பேராசிரியர் வந்தபொழுது, குடும்பத்தோடு வாழ்ந்த பகுதி 'ஜார்ஜ் டவுன்' எனப்படுவதாகும். சிறப்பாக ஏழு கிணறு, மண்ணடி இரண்டும் சந்திக்கும் பகுதியாகும். இந்தப் பகுதிகள் இரண்டும் 'தேங்காய்த் துண்டுகள்', 'கட்டாயம் வேண்டும்' எனும் கதைகளில் இடம் பெற்றுள்ளன.

பிறகு அவர் வாழ்ந்த செனாய் நகர்ப் (அமைந்தகரை) பகுதியும், அங்கிருந்து பாரிமுனைக்குப் பேருந்தில் செல்லும் வழியும் 'எதையோ பேசினார்', 'எல்லோரும் சமம்', 'உலகம் பொய்', 'அக்கரை பச்சை' போன்ற கதைகளில் காணப்படுகின்றன. சென்னை நகர ஒட்டுக் குடியிருப்பு வாழ்க்கை, 'குறட்டை ஒலி'யில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

(ஐ) காலச்சூழல்

மு.வ.அவர்களுடைய சிறுகதைகளுள் 'வாய் திறக்க மாட்டேன்', 'எல்லோரும் சமம்' என்பவற்றைத் தவிர, மற்றெல்லாம், அடிமை இந்தியாவில் மக்கள் வாழ்ந்த காலத்தையே, படம்பிடித்துக் காட்டுகின்றன. 'வாய் திறக்கமாட்டேன்' எனும் கதை, பங்கீட்டுக் காலக்கொடுமையையும், தமிழகத்தின் வடஎல்லைப் போராட்டத்தைப் பற்றியும் குறிப்பிடுகிறது. எனவே, இக்கதையில் காட்டப்படும் காலம் 1950க்கு முற்பட்டதாகும். 'எல்லோரும் சமம்' எனும் கதையும், சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தையே சூழலமைவாகக் கொண்டுள்ளமைப் புலனாகின்றது.

(ஒ) குறியீடு

குறியீடுகளைப் பேராசிரியர், தம்முடைய கதைகளில் மிகக் குறைவாகவே பயன்படுத்தியுள்ளார். 'அமாவாசையார்', 'குறட்டை ஒலி' என்னும் கதைகளின் தலைப்புகளே குறியீடுகளாக அமைந்துள்ளன. இவ்விரு குறியீடுகளும் வழக்கில் உள்ளனவேயாகும். நெடுங்காலமாக மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களே 'அமாவாசை', 'குறட்டை ஒலி' என்பன 'அமாவாசை போல இருக்கிறது' என்பது நாட்டுமக்கள் வழக்கு. காரிருளைக் குறிப்பிடுவதற்கும், நிறத்தைச் சுட்டுவதற்கும் இச்சொல்லைப் பயன்படுத்துவது வழக்கமாகும். பேராசிரியர் மு.வரதராசனார், உள்ளத்தில் அருள் ஒளி இல்லாத ஒரு பெரியவரையே 'அமாவாசையார்' எனும் பெயரால் சுட்டுவதைக் காணுகின்றோம். அவருடைய பேச்சில், அடிக்கடி 'அமாவாசை' எனும் சொல் வழங்கப்பட்டாலும், அவருடைய உள்ள இயல்பைச் சுட்டும் குறியீடாகவே அது தோன்றுகிறது.

'குறட்டை ஒலி' என்பது ஒரு கதையின் பெயர் என்பதை முன்னரே கண்டோம். பொதுவாக, இவ்விரு தொகுப்புகளிலும் உள்ள சிறுகதைகள் மனிதருடைய அருளுணர்வை உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. இக்கதைகளுள் 'குறட்டை ஒலி' வாயில்லா விலங்கினத்தைச் சேர்ந்த நாய்க்குட்டிகளிடத்து, நான்கு குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண், தன் தாய்மையுணர்வுப் பெருக்கால், தன் முலைப்பாலை ஊட்டுவதைக் காட்டுகிறது. 'எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி', அருள் நெறிப்பட்ட வாழ்க்கையினை ஏழை எளிய மக்கள் இயல்பாகவே நடத்தும் நிலை இக்கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தின் பெரும்பகுதியினர், அன்றாட வயிற்றுக்கஞ்சிக்கு வழியில்லாமல் அல்லல்படுகின்றபொழுது செல்வமும் செல்வாக்கும் உடைய ஒருசிலர், எத்தகைய கவலையுமின்றி வாழுகின்றனர்; அவர்களுடைய அலட்சிய மனப்போக்கையும், செருக்கையும்,

அவர்கள் விடும் 'குறட்டையின் ஒலி' வெளிப்படுத்துகிறது. எனவே, மனித இனத்தின் துன்பத்தை மதித்துப் போற்றாத மேட்டுக்குடி மக்களின் இரக்கமற்ற மனப்போக்கின் குறியீடாக, 'குறட்டை ஒலி' எழுகிறது என்பதை இக்கதையால் ஆசிரியர் அறிவுறுத்த விரும்புகிறார்.

(ஒ) அவலவுணர்வும் எள்ளலும்

மு.வ.வின் புதினங்களில் காணப்படாத இரண்டு சிறப்பு இயல்புகளை, இச்சிறுகதைகளில் காண முடிகிறது. ஒருவகையான அவலச்சுவையும் இலேசான எள்ளலும், கிண்டலும் இக்கதைகளில் ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன. 'விடுதலையா?', 'தேங்காய்த் துண்டுகள்', 'வாய் திறக்கமாட்டேன்', 'எல்லோரும் சமம்', 'யாரோ தெரியாது', 'குறட்டை ஒலி', 'சுடரின் நகைப்பு', 'இறந்த சிற்றப்பா' எனும் கதைகளில் அவலத்தின் மெல்லிய குரலைக் கேட்கின்றோம். அதே சமயத்தில் 'எதையோ பேசினார்', 'எவர் குற்றம்', 'அமாவாசையார்', 'உலகம் பொய்', 'வாழும் வழி' 'இயற்கை பொல்லாதது', 'அக்கரை பச்சை' எனும் கதைகளில் எள்ளலும், கிண்டலும் ஏறுநடை போடுகின்றன.

பேராசிரியர் மு.வரதராசனாரின் சிறுகதைகள் அனைத்தும் ஆழ்ந்த பொருளுடையன; இந்திய விடுதலைக்கு முன்னர் இருந்த தமிழ்ச் சமுதாயத்தின் நிலையையும், விடுதலைக்குப் பின்னர் மாற்றமுறாத போக்குடன் காணப்பட்ட அச்சமுதாயத்தையும் இச்சிறுகதைகள் மூலம் அவர் படம் பிடித்துக் காட்டுகிறார். அருளுணர்வுடைய மெய்யுணர்வாளரான மு.வ.அன்றைய சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கியுள்ளார்; அதன் அவலக்கேட்டை அனைவரும் உணரத்தக்க வகையில் சிறுசிறு கதைகளாகப் படைத்துள்ளார். இச்சிறுகதைகளால் சமுதாயச் சிந்தனையாளரான மு.வரதராசனார் சிறப்புமிகு கதையாசிரியராகவும் காட்சியளிக்கிறார். அவருடைய சிறுகதைகளுள் 'தேங்காய்த்துண்டுகள்', 'அமாவாசையார்', 'குறட்டை ஒலி' என்பன உலகத்துச் சிறுகதைத் தொகுதியுள் இடம்பெறத் தக்கனவாகும்.

குறிப்புகள்

1. புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் கட்டுரைகள், பக்.37.
2. மேற்படி, பக்.30.
3. இலக்கிய மரபு, பக்.164.
4. Edgar Allan Poe, 'Review of Twice Told Tales' in Literary Criticism in America, p.49.
5. புதுமைப்பித்தன், முன்நூல், பக்.33.
6. மு.வரதராசன், விடுதலையா? முன்னுரை.

7. சி.பாலசுப்பிரமணியன், பெருந்தகை மு.வ., பக்.15.
8. குறட்டை ஒலி, முன்னுரை.
9. H.E.Bates, The Modern Story, p.20.
10. Peter Westland, Literary Appreciation, p.241.
11. Philip Stevick, The Chapter in Fiction, p.75.
12. விடுதலையா?, பக்.89.
13. மேற்படி, பக்.89.
14. குறட்டை ஒலி, பக்.34.
15. விடுதலையா? பக்.67.
16. குறட்டை ஒலி, பக்.5.
17. மேற்படி பக்.69.
18. விடுதலையா? பக்.52.
19. Philip Stevick, op.cit.p.55.
20. விடுதலையா, பக்.88.
21. குறட்டை ஒலி, பக்.78.
22. மேற்படி, பக்.50.
23. விடுதலையா?, பக்.74.
24. குறட்டை ஒலி, பக்.132.
25. சாலை இளந்திரையன், தமிழில் சிறுகதைகள், பக்.75.
26. விடுதலையா?, பக்.66.
27. H.E.Bates op.cit.p.126.
28. E.M.Forster, Aspects of the Novel, p.94.
29. R.F.Dietrich and Roger H.Sundell, (ed.), The Art of Fiction P.48.
30. Douglas A.Hughes, (ed.), Studies in Short Fiction, p.596.
31. மேற்படி
32. குறட்டை ஒலி, பக்.38.
33. மேற்படி, பக்.12–13.
34. R.F.Dietrich and Roger H.Sundell, op.cit., pp.111-114.
35. R.F.Dietrich and Roger H.Sundell, op.cit., p.112.
36. Dougles A.Hughes, op.cit.p.611.
37. தொல்.950.
38. விடுதலையா?, பக்.23.
39. குறட்டை ஒலி, பக்.6.

இயல் - 8
நாடகங்கள்

புதிய தமிழ் இலக்கியங்களைப் படைப்பதில் பேரார்வம் காட்டியவர் பேராசிரியர் மு.வரதராசனாராவர். அவருடைய ஆளுமை பன்முக நோக்கு உடையது. அதைப்போன்றே, அவருடைய படைப்புகளும் பல திறப்பட்டனவாகும்.

படைப்பாளரான மு.வரதராசனார் அவர்களுக்கு இளமையிலிருந்து, தெருக்கூத்துகளைப் பார்ப்பதிலும், நாடகங்களைக் காண்பதிலும் பேரார்வம் உண்டு. இத்தகைய ஈடுபாடுடைய பேராசிரியர் நாடகத்தைப் படைப்பதில் ஆர்வம் காட்டியதில் வியப்பில்லை. நாடகக் கலை வளர்ந்துள்ள அளவிற்கு, நாடக இலக்கியம் வளரவில்லை என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார்.

> நாடகம் என்னும் நுண்கலை நாட்டில் வளர்ந்து வருகிறது. ஆயின், நாடகம் என்னும் இலக்கிய வகை அவ்வளவு வளர்ச்சியுடன் காணப்படவில்லை. காரணம் நாடகம் பார்த்து மகிழ விரும்புவோர் பலர்; படித்து மகிழ விரும்புவோர் ஒருசிலரே. காவியம், தொடர்கதை, சிறுகதை, கட்டுரை முதலியன போல, நாடகம் என்னும் இலக்கிய வகையும் வளர்ச்சி பெற்றால், ஒரு மொழியின் ஆக்கத்திற்கு உறுதுணையாகும்.[1]

என்று அவர் குறிப்பிட்டுள்ளமையால், இதனை அறிகிறோம் நாடக வளர்ச்சியால், தமிழ்மொழி ஆக்கம் பெறும் எனும் நம்பிக்கையுடையவராக அவர் இருந்தார். இதனால், நாடகங்களை இயற்றுவதில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பது புலனாகின்றது.

> நாடகம் இயற்றுவது எளிய செயல் அன்று. அதற்குப் பெருமுயற்சியும் கற்பனை வளமும் தேவை. ஏன் எனில், ஒருபுறம் அது காவியம்போல் உணர்ச்சியோடு கதை சொல்லும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். இன்னொரு புறம், கதையைப் புலவர் கூறாமல், நாடகமாந்தரே (பாத்திரங்களே) கூற வேண்டியிருத்தலின், தன்னுணர்ச்சிப் பாட்டுக்களைப்போல் உணர்ச்சிகளை நேரே வடிக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.[2]

என்பது அவருடைய அனுபவத்தை வெளிப்படுத்துகிறது.

1. நாடகக் கூறுகள்

ஒரு நாடகத்திற்கு இன்றியமையாத கூறுகள் ஆறு என்பர். அவை நாடகத்தின் இயல்பினை அல்லது தரத்தினை உறுதி செய்ய உதவுகின்றன. அக்கூறுகளாவன: (1) கதைப்பின்னல், (2) கதைமாந்தர், (3) நடைநலம், (4) கருத்து, (5) காட்சி அமைப்பு, (6) இசை அல்லது பாடல். இவற்றுள் நடைநலனும் இசையும் படைப்பு வாயில்கள்; காட்சி அமைப்பு, படைப்பு முறை; கதைப்பின்னல், கதைமாந்தர், கருத்துப் படைப்பு முறை; கதைப்பின்னல், கதைமாந்தர், கருத்து ஆகியன படைப்புப் பொருள்கள். இவற்றை அரிஸ்டாட்டில் அவல நாடகத்திற்கேயுரிய உறுப்புகள் என்று கருதினார். ஆனால், இக்காலத்திய நாடகங்களிற் காணப்படுவனவும் இவையே; சிறப்புமிகு நாடகாசிரியர்கள் நடைமுறையில் பயன்படுத்தி வருவனவும் இவ்வறுவகை உறுப்புகளேயாகும்.[3]

வடிவம்

கதைப்பின்னல் என்பது நாடகத்தின் உயிர்நாடியாகும். இதை அடிப்படையாகக் கொண்டே, பல்வேறு நிகழ்ச்சிகளும் சுற்றிச் சுழலுகின்றன. 'கருத்து' என்பது நாடக ஆசிரியனுடைய ஆழ்ந்த அனுபவங்களையும், உள்ளத்து உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் பொருள் பொதிந்த சொற்களாகும். நாடகத்தைக் கண்டு களிப்பருவடைய உள்ளத்தைத் திருத்திச் செம்மைப் படுத்துவதாகவும், அப்பொருள் அமைய வேண்டும். அவ்வாறு அமையுமானால், அது கருத்துள்ள நாடகம் என்று போற்றப்பெறும். அதாவது, நாடகம் காண்பவருடைய கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தளிப்பதோடு அமையாமல், சிந்தனைக்கும் விருந்து அளிக்க வேண்டும். அச்சிந்தனை விருந்தே, கருத்துகளாக அமைகின்றன. ஆகவே, கருத்துவளமிக்க நாடகம் இன்புறுத்துவதோடு அறிவுறுத்துவதாகவும் அமையும் என்பது இதனால் பெறப்படுகிறது.

நாடக ஆசிரியன், கருத்தைத் தானே எடுத்துரைக்கக்கூடாது அவ்வாறு எடுத்துரைத்தால், அது கலையழகற்ற அறிவுரைகளாக அமைந்துவிடும். எனவே, பலவகையான இயல்புகளையுடைய நாடகப் பாத்திரங்களைப் படைத்து, அவர்களுடைய மனவியல்பையும் போக்கையும் சித்திரிப்பதன் மூலம், நாடக ஆசிரியன் தன் கருத்துகளை எடுத்துரைக்கலாம். மேலும், நாடகப் பாத்திரங்களினுடைய உரையாடல்களின் மூலம் பல கருத்துகளைத் தெரிவிக்கலாம். இவ்வாறு நாடக ஆசிரியன் தன் கருத்துகளை வெளிப்படுத்தலாம். அப்பொழுது கலையழகு குன்றாது, நாடகம் கவர்ச்சியுடையதாக விளங்கும்.

'நடைநலம்' என்பது நாடகம் எழுதப்பட்டுள்ள மொழியின் இனிமையான நடையினைப் பொதுவாகக் குறிப்பதாகும். நாடகத்தின் நடை, நயமிக்கதாக அமைவதற்குப் பயன்படுத்தப்பெறும் சொற்கள் எளிமையும், இனிமையும், ஓசைநயமும், கருத்துச் செறிவும் உடையனவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான், சொல் நயமும், பொருள் நயமும் ஒருங்கே இணைந்த நயமிகு நடை அமையும்.

சுவைக்கூறு

'இசை' அல்லது 'பாடல்' என்பது இன்றைய நாடகங்களுக்குத் தேவையான கூறாகக் கருதப்படுவது இல்லை. ஆனால், பொருத்தமான இடங்களில் அளவாக அமைக்கப்பெறும் இசைப்பாடல்களாக நாடகம் ஏற்றம் பெறுகிறது என்பது உண்மை.

'காட்சி அமைப்பு' என்பது அரங்கு அமைப்பு. கண்கவர் வண்ணப் பின்னணிக் காட்சி, ஆடையலங்காரம் முதலியவற்றைக் குறிப்பதாகும். இவ்விரு இயல்புகளும் நடிக்கப்பெறும் நாடகங்களுக்குத் தேவைப்படும் பண்புகளாகும்.

இசையும், கண்ணுக்கு இனிய காட்சியும் சுவையுணர்ச்சியை ஊட்டுவதற்குப் பேரளவு பயன்படுவனவாகும். இவற்றோடு கருத்துகளை உணர்த்தும் முறையும் சுவையுணர்வினை ஊட்ட வல்லதாகும்.

இந்நாடகப் பண்புகள் அனைத்தும் பொருத்தமான அளவிற்கு இணைந்தும், இழைந்தும் விளங்க வேண்டும். இவை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டனவாக வெளிப்பட வேண்டும். இவை அனைத்தும் சேர்ந்து நாடகத்தைக் கலையழகு உடையதாக விளங்கச் செய்யும்.

2. தமிழ் நாடக மரபு

நாடகத்தைக் கதை தழுவி வரும் கூத்தாகவே நம் முன்னோர்கள் போற்றி வளர்த்தனர். அதைச் 'சாந்திக்கூத்தின்' ஒரு வகையாக அவர்கள் கருதினர். உள்ளிருந்து எழும் உணர்ச்சியைப் பிறருக்குப் புலப்படுத்துவதற்கு அபிநயம், இசை, மொழிப்பொருள் என்னும் மூன்றையும் அவர்கள் பயன்படுத்தினர். இம்மூன்றையும் தழுவி நிற்பதால் நாடகக்கலை சிறப்புடையதாகப் போற்றப்பெறுகிறது.

> மொழிக்கு இயற்கையாகவமைந்த பொருள் கருவியாக, உள்ளத்து நிகழ்ந்த மனக்குறிப்பினைப் பிறர்க்குப் புலப்படுத்துவது இயற்றமிழின் தன்மை. மொழிப்பொருளோடு இசையுஞ் சேர்ந்து நிற்க மனக்குறிப்பினை வெளிப்படுக்ததுவது இசைத்தமிழின் தன்மை. மொழிப்பொருள், இசையென்னும் இரண்டினொடு

அபிநயமுஞ் சத்துவமும் சேர வைத்து உள்ளத்து எழுந்த மனக்குறிப்பினைப் பிறருக்குப் புலப்படுத்துவது நாடகத் தமிழின் தன்மை. அங்ஙனமாதலின் குறிப்பு, சத்துவம், அபிநயம் என்னும் இவற்றோடு கூடி நின்ற ஒன்பது வகைச் சுவையும் நாடகத்துக்கே சிறப்பியல்பாக உரியனவென்பது பெறப்படுகின்றது.[4]

என்று விபுலாநந்தர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

கதைப்பின்னலின் செறிவு

இவ்வாறு அமைக்கப்படும் நாடகத்தில், கதைப்பின்னல் செறிவாக அமையும். கதைப்பின்னல் நாடக நிகழ்ச்சிகளின் நிலைக்களன் ஆகும். கதையின் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி அமைக்கும் முறையின் மூலம், நாடகாசிரியர் கதையின் முதலும் முடிவும் கலையழகு பெற்று, பொலிவுறச் செய்கின்றனர். சிறந்த நாடக ஆசிரியர், கதைப்பின்னலின் கட்டமைப்பிலேயே தம் கருத்தைச் செலுத்துகின்றனர்.

பண்டைக் காலத்தில் கதைப்பின்னலின் கட்டமைப்பினை ஐந்து வகையாகப் பாகுபடுத்திக் கூறும் மரபு இருந்து வந்தது. இது மேற்கு நாட்டு மரபுகளிலும் காணப்படுகிறது. கதைப்பின்னலில், ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சியோடு தொடர்பு கொள்ளுவது 'சந்தி' எனப்படும். இது ஐந்து வகைப்படும். இவை 'முகம்', 'பிரதிமுகம்', 'கருப்பம்', 'விளைவு', 'துய்த்தல்' என்பனவாகும்.[5]

இந்த ஐவகைச் சக்திகளும் நாடகக் கதையின் கட்டு அமைப்பிற்கு இன்றியமையாதன என்பதை,

இடைப்பொருளுடனே யெடுத்த கதையின்
தலைப்பொருள் சார்ந்து தழைத்து முதிர்வது
நாட்டியக் கட்டுரைச் சந்தியா மதுதான்
முகமே, பிரதிமுகமே, கருப்பம்,
விளைவு, துய்த்தலோ டைவகை யாகும்[6]

என்று நாடகவியல் நூலார் தெளிவுறுத்துவர்.

3. மேற்கு நாட்டு நாடக அமைப்பு

இவற்றை மேற்கு நாட்டு நாடக நூலார், பண்டைக் கிரேக்க நாடகங்கள் அறிமுகம் அல்லது நாடகத் தொடக்கம், திருப்புமையம், போராட்டம், உச்சநிலை, முடிவு என்ற ஐவகைப் பகுப்புகளைக் கொண்டு இருந்தன; ஆனால், 'அங்கம்' அல்லது 'களம்' எனும் பகுப்பு அவற்றில் இடம் பெறவில்லை என்பர்.[7] இவ்விருபதாம் நூற்றாண்டின் நாடகங்கள் அறிமுகம், குழப்பம், திருப்புமையம், வீழ்ச்சி என்னும் நான்கு பகுதிகளையுடையனவாக இயற்றப்படுகின்றன.[8]

ஓரங்க நாடகம்

இக்காலத்தில், வாழ்க்கையில் ஓய்வு குறைந்துவிட்டது; விரைவில் வேறு பணிகளில் ஈடுபட வேண்டிய நெருக்கடி மிக்க இயந்திரமயமான வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. இந்நிலையில் நாடகத்தை நெடுநேரம் படிக்கவோ, பார்க்கவோ பலருக்கு ஓய்வு கிடைப்பது இல்லை. இதனால், ஆறு, ஏழு அங்கங்களைக் கொண்ட நாடகங்களுக்கு மாற்றாக, குறுகிய வடிவினையுடைய நாடகங்களையே மக்கள் விரும்பத் தொடங்கினர். இதன் விளைவாக, ஏழெட்டுக் காட்சிகளைக் கொண்டதாக, ஒருமணி நேரத்திற்குள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் உரியனவாக நாடகங்கள் உலகெங்கும் இந்நூற்றாண்டின் முதற்பகுதியில் (முதல் உலகப்போருக்குப் பிறகு) தோன்றலாயின. இவற்றை 'ஓரங்க நாடகம்' (One Act - Play) என்று போற்றலாயினர்.

முழுமையான பண்டைக்கால நாடகத்தின் ஒரு பகுதியளவினதாக (சில சமயங்களில் கால் கூறாக) இப்புதிய நாடகம் படைக்கப்பட்டது. இதனை 'நாடகம்' எனும் பெயரால்கூட, இக்காலத்தில் சுட்டுவதில்லை. 'நடிக்கப் படுவது' எனும் பொருள் தரும் 'பிளே' (Play) எனும் சொல்லால் இப்புதிய நாடகவகைப் பெருவாழ்வு பெறலாயிற்று.[9]

இப்புதுவகை நாடகத்தில் 'அங்கப்'பிரிவுகள் (Acts) கிடையாது. ஆனால், 'காட்சிகள்' இடம்பெறும். ஒவ்வொரு நாடகமும், மூன்று முதல் எட்டுக் காட்சிகளை அல்லது பத்துக் காட்சிகளைக் கொண்டதாக இருக்கும். புதினத்தோடு (Novel) சிறுகதையை ஒப்பிடுகின்றபொழுது, எத்துணை வேற்றுமை புலப்படுமோ, அத்துணை வேற்றுமை இவற்றிடையேயும் இடம்பெறும். ஓரங்க நாடகத்தில் கதை மாந்தர்களின் ஒரேவொரு வகையான பண்பு சித்திரிக்கப்படும். செயல் இயக்கத்தின் (Action) ஒரு பகுதியே வெளிப்படுத்தப்படும்; சூழலமைவின் (பின்னணி) ஒரு கூறே காட்டப்படும்; உணர்ச்சியால் வெளிப்படும் சுவைகளுள் ஒன்றே புலப்படும். ஆனால் இந்த 'ஓர் இயல்பு, ஒரு பகுதி, ஒரு கூறு' இந்நாடகங்களுக்கு மிகுந்த நெகிழ்ச்சித் தன்மையைக் கொடுத்துள்ளன; பல்வகையாகப் பெருகும் வாய்ப்பையும் தந்துள்ளன. இத்தகைய நாடகங்கள், மக்களிடையே பேரளவில் கருத்தைப் பரப்பும் கருவிகளான வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றால், மேற்கு நாடுகளில் பெருவாழ்வு பெற்றுள்ளன. நம்நாட்டில் அண்மைக்காலம் வரையில் வானொலியே, ஓரங்கநாடகத்தின் வளர்ப்புப் பண்ணையாக இருந்து வந்தது.

4. மு.வ.வின் நாடகங்கள்

பேராசிரியர் மு.வரதராசனார் படைத்துள்ள நாடகங்கள் பதினொன்று. அவை நான்கு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. முதன்முதலில் நூலாக வெளிவந்தது ‘பச்சையப்பர்’ எனும் நாடகமாகும். (1951). இதையடுத்து ‘மனச்சான்று’, ‘கிம்பளம்’, ‘ஏமாற்றம்’, ‘பொதுநலம்’ எனும் நான்கு நாடகங்களைக் கொண்ட ‘மனச்சான்று’ எனும் நாடக நூல் (1952) வெளியிடப்பெற்றது. இதே ஆண்டில் ‘இளங்கோ’ எனும் நாடகம், தனி நூலாகச் சிறிய வடிவில் வெளியிடப்பட்டது. பின்னர், 1954ல் ‘காதல் எங்கே?’, ‘கடமை எங்கே?’, ‘நன்மை எங்கே?’ எனும் மூன்று நாடகங்களைக் கொண்ட ‘காதல் எங்கே?’ எனும் நாடகத் தொகுப்பு வெளிவந்தது.

1956ஆம் ஆண்டு ‘திலகவதியார்’, ‘வீண் கனவு’ வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. இவற்றோடு, முன் வெளியிடப்பட்ட இளங்கோவையும் சேர்த்து ‘மூன்று நாடகங்கள்’ எனும் நூல் வெளியிடப்பட்டது.

இவை அல்லாமல், மு.வ. அவர்களுடைய ‘அல்லி’ எனும் புதினத்தை, டி.கே.கணபதி என்பவர் ‘டாக்டர் அல்லி’ எனும் நாடகமாக 1955இல் அமைத்தார்: அதே ஆண்டில் திருநெல்வேலி, அருணகிரி இசைக் கழகத்தார் இந்நாடகத்தை, மேடையில் நடித்துக் காட்டினர். ஆனால், இந்நாடகத்தின் மூலக்கதைக்குத்தான் மு.வரதராசனார் உரியவர் என்பதனால், அந்நாடகத்தைச் சிறப்பு நிலை ஆய்விற்கு, இவ்வாய்வாளர் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும், மு.வ.அவர்கள் செந்தமிழ்ச்செல்வியில் 1941–42இல் வெளியிட்ட ‘நனவே கனவு’ எனும் தலைப்புடைய நாடகம்,[10] இதுவரை, எந்த நாடகத்தொகுப்பிலும் சேர்க்கப்படவில்லை என்பதும் நினைவுகூர்தற்குரியதாகும்.

5. நாடகங்களின் அமைப்பும் அழகும்

(அ) பொது இயல்புகள்

மு.வரதராசனார் இயற்றியுள்ள நாடங்கள் அனைத்துமே, ஓரங்க நாடகங்களாக உள்ளன. இதற்குப் ‘பச்சையப்பர்’ எனும் நாடகத்தை விதிவிலக்காகச் சொல்லலாம். அதில் 21 காட்சிகள் இடம் பெற்றுள்ளன. மற்றவை அனைத்தும் பத்துக் காட்சிகளுக்குக் குறைவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியரின் நான்கு நாடகங்களையும், அவை எத்தகைய கதைக்கருவைக் (Theme) கொண்டன என்பதை ஆராய்கின்றபொழுது,

அவை இருவகையான உள்ளீட்டை உடையன என்பது புலனாகின்றது. ‘மனச்சான்று’, ‘காதல் எங்கே’ எனும் இரு நாடகத் தொகுதிகளும் இன்றைய சமுதாயச் சிக்கல்களை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட நாடகங்களைக் கொண்டனவாக உள்ளன. எனவே, அவற்றைச் ‘சமூக நாடகங்கள்’ எனும் வகையைச் சேர்ந்தவையாகப் பாகுபடுத்தலாம்.

‘பச்சையப்பர்’ எனும் நாடகம், வள்ளல் பச்சையப்பரின் வாழ்க்கை வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுவது ஆதலினால், அதனை ‘வாழ்க்கை வரலாற்றை’ உணர்த்தும் வரலாற்று நாடகம்’ எனலாம்.

எஞ்சியுள்ளது மூன்று நாடகங்கள்’ எனும் தொகுதி. அத்தொகுதியுள் இளங்கோ, திலகவதியார், வீண் கனவு எனும் மூன்று நாடகங்கள் அடங்கியுள்ளன. கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் சிறப்புற்று விளங்கிய சேரவேந்தன் செங்குட்டுவன்; அவனுடைய தம்பி இளங்கோவடிகள், இளமையிலே துறவு பூண்ட அவ்வறவோரின் வாழ்க்கையைக் கற்பனை வண்ணத்தில் குழைத்துத் தருகிறார் மு.வ.. எனவே இந்நாடகத்தை ‘வரலாற்று நாடகம்’ எனக் கொள்ளுவதே பொருந்தும்.

இந்நூலில் இரண்டாவதாக உள்ள நாடகம், சைவ சமய நாயன்மார்களுள் ஒருவரான, திருநாவுக்கரசருடைய (கி.பி.ஏழாம் நூற்றாண்டு) தமக்கையர் (திலகவதியா)ரின் வரலாற்றைக் கூறுவது; ‘அம்பொன் மணிநூல் தாங்காது. அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி’த் தொண்டு நெறியில் அவ்வம்மையார் ஈடுபட்ட வரலாற்றைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுவது.

இந்நூலில் மூன்றாவதாக உள்ளது ‘வீண் கனவு’ எனும் நாடகம் ஆகும். கி.பி.பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த, சோழப்பேரரசன் முதலாம் இராசேந்திரனுடைய (கி.பி.1012–1044), ‘உலகில் போரே வேண்டா’ எனும் இலட்சியக் கனவை, ‘வீண் கனவாக’ ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார். இவன் சிறப்புமிகு ‘வரலாற்று நாயகன்’ எனவே, இந்த நாடகமும், ‘வரலாற்று நாடகமே’ என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க இயலா.

இந்த மூன்று நாடகங்களையும் கொண்ட ‘மூன்று நாடகங்கள்’ எனும் நூலை ‘வரலாற்று நாடகம்’ எனக் கொள்ளுவதே மிகவும் பொருத்தமாகும்.

(ஆ) அமைப்பும் அழகும்

இந்த நான்கு நாடகங்களின் அமைப்பைக் காண்போம்:

1. பச்சையப்பர்

இன்று தமிழகத்தில் சிறப்புற்று விளங்கும் பச்சையப்பர் அறநிலையத்திற்குக் காரண முதல்வர், காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார், அவருடைய வரலாற்றைக் கூறுவது இந்நூல். தமிழகத்தின் மக்களுக்குச் சாதிவேறுபாடற்ற வகையில் கல்விக்கண் கொடுத்த சிறப்பு பச்சையப்பருக்கு உண்டு. அவருடைய இருநூறாவது பிறந்த நாள் விழாவை 1954இல் கொண்டாட, பச்சையப்பர் அறநிலையத்தினர் 1950 அளவிலேயே திட்டமிட்டனர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் மு.வரதராசனார், பச்சையப்பருக்குத் தாம் ஆற்றக்கூடிய நன்றிக்கடன் என்னவென்பதைச் சிந்தித்தார்.

அக்காலம் வரையில், பச்சையப்பரின் வரலாற்றைக் கூறும் நூல்கள் தமிழில் நல்ல முறையில் எழுதப்படவில்லை. ஆங்கிலத்தில் இரண்டு மூன்று நூல்கள் பச்சையப்பரைப் பற்றிப் புகழ்பாடிக் கொண்டிருந்தன. தமிழில் இருந்த நூல்களோ, அந்த அளவிற்கு முழுமையும், செம்மையும் உடையவனாக இல்லை மற்றும், பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது நம்மையறியாமலே நம் மனம் அப்பெரியார்கள் நடந்த நெறியிலே ஈடுபட்டு நிற்கும் என்றும், நம்மையறியாமலே நம்முடைய வாழ்க்கை செம்மையடைய அது உதவும் என்றும் அவர் நம்பினார்.[11]

இவ்விரு நோக்கங்களையும் கருத்தில் கொண்டு, பலரும் படித்து அறிந்து கொள்ளுவதோடு, பார்த்துத் தெரிந்து கொள்ளவும் உதவும் வகையில், ‘பச்சையப்பர்’ எனும் இந்நாடகத்தை 1951இல் அவர் படைத்தார்.[12]

இந்நாடகம் எளிய நடையில், பாத்திரங்களின் வாழ்க்கை நிலைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இருபதுக்கு மேற்பட்ட (21) காட்சிகளைக் கொண்ட இந்நாடகத்தினைக் கவர்ச்சியுடையதாக்க, இசைப் பாடல்களை, ஆசிரியர் நாடகத்தில், இடையிடையே பயன்படுத்தியுள்ளார். அவை சான்றோர்களின் அருட்பாடல்களாகவும், பச்சையப்பரின் அருள் உள்ளத்தைப் போற்றும் ‘போற்றிப் பாடல்களாக’வும் உள்ளன.

2. மனச்சான்று

சமூக நாடகங்களுக்குரிய பண்புகள் நிறைந்த நாடகங்கள் நான்கு, இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அவை மனச்சான்று, கிம்பளம், ஏமாற்றம், பொதுநலம் என்பன.

இந்நான்கு நாடகங்களும் கல்லூரிக் கழகங்களிலும் மன்றங்களிலும் நடிப்பதற்கென்று ஆசிரியரால் அவ்வப்பொழுது எழுதப்பட்டு, மாணவர்களால் அரங்கேற்றம் செய்யப்பட்டனவாகும்.[13] எனவே, இந்நாடகங்கள் நடிப்பதற்கு உரிய வகையில் இயற்றப்பட்டவை

என்பதும், ஆனால் அவை படிப்பதற்கும் பயன்படுகின்றன என்பதும் தெரிய வருகின்றன.

(அ) மனச்சான்று

"மனச்சான்று" எனும் நாடகம் 'இந்திய விடுதலையை ஒட்டி எழுந்த ஓரங்க நாடகம். இரண்டாம் உலகப்போருக்குப் பின் இந்தியாவில் தலைவிரித்தாடிய கள்ளவாணிகம் – கொள்ளை லாபப் பின்னணியில்"[14] பேராசிரியரின் முதல் நாடகம் இயற்றப்பட்டுள்ளது. "அதிலும் சிறப்பாக, 'அறமும் அரசியலும்' போற்றும் சமூக உணர்வு மிக்க சான்றோராகிய டாக்டர் மு.வ.வின் மனச்சான்று கொதித்தெழுந்து, சிந்திய முதல் தீப்பொறியே இந்நாடகம்" என்பர்.[15]

காந்தி பக்தர் போல் நடித்து, கள்ள வாணிகத்தில் ஈடுபட்ட செங்கொழுந்து முதலியார், அதிகாரிகளையும் மக்களையும் ஏமாற்றப்பார்க்கிறார். அவருடைய மகன் திருவேங்கடத்துக்கு இது பிடிக்கவில்லை. கல்லூரியில் முதுகலை வகுப்பில் படிக்கும் மாணவன் திருவேங்கடம். அவன் உண்மையான காந்தியவாதியாக வாழ முயலுகிறான். இதனால், தந்தைக்கும் மகனுக்கும் பிணக்கு உண்டாகிறது; மகன் வீட்டைவிட்டு வெளியேறுகிறான்; கல்லூரி விடுதியிலேயே தங்கி வாழ முயலுகிறான். மகனுடைய பிரிவு, தந்தையை வாட்டுகிறது. இதற்கு இடையில் அதிகாரிகளிடத்தில் பிடிபடும் நெருக்கடி நிலை உண்டாகிறது; மனநோய்க்கு ஆளான தந்தை மனச்சான்றோடு தொடர்ந்து போராடுகிறார். பிறகு, 'இனிமேல் இத்தகைய தவறுகளைச் செய்வதில்லை' எனும் முடிவிற்கு அவர் வருகிறார். தந்தை நோய்வாய்ப்பட்ட நிலையில் மகன், தன் மனச்சான்றோடு போராடுகிறான். 'குறை சொல்லுவது எளிது; கூட இருந்து குற்றவாளிகளைத் திருத்த முயல்வதே சிறந்த நெறி, எனும் காந்தியடிகளின் அறவுரை, அவனுடைய மனப்போராட்டத்தைத் தணிக்கிறது. 'வீட்டுக்குத் திரும்புவதே முறை' எனும் அவனுடைய மனச்சான்றின் குரலுக்கு இசைந்து, திருவேங்கடம் வீடு திரும்புகிறான்.

இந்நாடகத்தில் இவனுடைய மனச்சான்று இருவகையாக இயங்குவதையும், தந்தையின் மனச்சான்று, அவரை வாட்டி வதைப்பதையும் ஆசிரியர் நாடக முரணாக அமைத்து ஏழு காட்சிகளில் விளக்கியுள்ளார்.

(ஆ) கிம்பளம்

அரசாங்க அலுவலகங்களில் 'கிம்பளம்' கொடுப்பதும், வாங்குவதும் எவ்வாறு பொதுவழக்காகிவிட்டது என்பதைச் சித்திரிப்பது 'கிம்பளம்' எனும் நாடகமாகும். வியாபாரிகள், பணம் கொடுத்து அதிகாரிகளை எவ்வாறு விலைக்கு வாங்கி விடுகின்றனர் என்பதையும், நேர்மையும்

உண்மையும், கொள்கையில் உறுதியும் வாய்ந்த அலுவலர்கள் எவ்வாறு மேலதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே சிக்கிக் கொண்டு அல்லல்படுகின்றனர் என்பதையும் ஒன்பது பாத்திரங்களைக் கொண்டு, எட்டே காட்சிகளில் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

பணப்பேயால் ஆட்கொள்ளப்பட்ட திருமலை, தன்னுடைய ஆருயிர் நண்பன் முத்துச்சாமிக்குத் துரோகம் செய்து, கொள்ளை கொள்ளையாகக் கையூட்டு வாங்குகிறான். ஆனால், அவனே கடைசியில், மனப்போராட்டத்திற்கு ஆளாகித் தான் செய்த தவறுக்காக வருந்துகிறான்; திருந்த முயலுகிறான்.

இந்நாடகத்தின் மூலம், 'நம் தேவைகளை உடனடியாக முடித்துக் கொள்ளக் 'கிம்பளம்' கொடுப்பதில் தவறில்லை" என்று ஆசிரியர் உணர்த்துவதாகச் சிலர் தவறான முடிவிற்கு வந்துள்ளனர்.[16] அவர்கள் கதையின் நாடித்துடிப்பைப் பிடித்துப் பார்க்க இயலாதவர்களாகவே தோன்றுகின்றனர்.

நாடெங்கும் ஊழல் மலிந்து கிடக்கிறது: சிறப்பாக அரசாங்க அலுவலகங்களில் கையூட்டுக் கொடுப்பதும் வாங்குவதும் களிநடம் புரிகின்றன. இந்த நிலை நீடித்தால் என்ன ஆகும்? நட்பு, அன்பு உண்மை போன்ற பயன்மதிப்புகளுக்கு வாழ்க்கையில் இடம் இல்லாமல் போய்விடும். மனிதன் 'இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கனாக' மாறிவிடுவான் என்பதே இந்நாடகத்தின் நோக்கும் போக்குமாகும். இந்நாடகத்தின் இறுதிக்காட்சியில் (8), திருமலை என்னும் கிம்பளம் வாங்குவதில் கைதேர்ந்த கயவனுடைய 'மனச்சான்றாகிய குரல்' அவனோடு போரிடுவதைக் காட்டுகிறார் ஆசிரியர். இறுதியில், அவன் அக்குரலுக்கு அடிபணிந்து, நேர்மையாக வாழ விரும்புவதாக நாடகத்தை ஆசிரியர் முடித்துக் காட்டுகிறார். இதன் மூலம், 'கிம்பளம்' கொடுப்பதும் வாங்குவதும் ஒரு கொடிய 'சமூகக் குற்றம்' என்பதும் நிலைநாட்டப்படுகிறது.

(இ) ஏமாற்றம்

கல்லூரி மாணவ மாணவியரிடையே காதல் அரும்புவது இயற்கை. ஆனால், பலருடைய வாழ்க்கையில், அது வாழ்வாக மலருவதே இல்லை; கருகி மொட்டாகி விடுவதே பெருவழக்கு. இதற்குரிய காரணங்கள் பல. அவற்றுள் பணத்தின் செல்வாக்கே பெரிது. இதனை 'ஏமாற்றம்' எனும் நாடகம் தெளிவுறுத்துகிறது.

வடமலை, மங்களம் ஆகிய இருவரும் 'இருதலைப் புள்ளின் ஒருயிர்' போன்று கல்லூரி வாழ்க்கையின் கடைசி நாட்களில் காட்சித் தருகின்றனர். ஆனால், தேர்விற்குப் பிறகு, அவளுக்கு ஒரு பெரிய பதவியில் இருக்கும் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட ஒருவரைப்

பெற்றோர்கள் மணம் முடிக்கின்றனர். அந்தத் திருமண அழைப்பு இதழை அச்சகத்தில் வடமலையின் நண்பன் கண்டான். அத்துன்பச் செய்தியை, வடமலை பல்கலைக்கழகத் தேர்வில் முதல்வனாகத் தேறிய சமயத்தில், அந்த நண்பன் வடமலையிடம் தெரிவிக்கின்றான்.

இந்நாடகத்தின் மூலம், 'பணக்காரக் குடும்பங்களில் பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும் அவர்களுக்குப் பணம் தான் முக்கியம். மற்றதை எல்லாம் கொஞ்ச நாளில் மறந்து விடுவார்கள்.. ஏழைகளுக்குத் தான் பண்பு, கொள்கை, குறிக்கோள் எல்லாம். மானத்துக்காக உயிரை விடுவதும் இந்தக் குடும்பங்களில்தான்"[17] என்பதை ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

(ஈ) பொதுநலம்

"பணத்திற்குள்ள இத்தகைய அரக்கத்தனமான ஆற்றல் குறைவதற்குக் கடவுள் நெறி பயன்படாதா" என்று டாக்டர் மு.வ.எண்ணிப் பார்த்திருக்கிறார். அதன் விளைவே 'பொதுநலம்' என்னும் நாடகம்"[18] என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும்.

ஆராவமுதன் எனும் நாடகமாந்தன், 'நம் நாட்டில் அரசியல், சமுதாயம், வாணிகம் முதலியன பெரிதும் சீர்கெட்டிருந்தாலும், ஊழலும், கையூட்டும், கள்ளவாணிகமும் எவ்வளவு பெருகியிருந்தாலும், இந்த நாட்டு மக்களிடையே சமய நம்பிக்கையும் பற்றும் இன்னும் சீர்குலையவில்லை. எனவே, அதைக்கொண்டு இந்த நாட்டைச் சீரமைக்க இயலும்; காந்தியடிகள் இந்த உண்மையை உணர்ந்தவர். அதனால், அவர் வெற்றி கண்டார். ஆகவே, நாமும் சமயப் பிரச்சாரத்தின் மூலம் நாட்டைத் திருத்த முயலுவோம்"[19] என்று தெரிவிக்கிறான். பொதுநலக் கழகத்து உறுப்பினர்களுள் பெரும்பாலோர் இதற்கு ஆதரவு தருகின்றனர்.

ஆனால், உண்மையப்பன் எனும் உறுப்பினன், முதலிலேயே இதைக் கடுமையாக எதிர்க்கிறான். 'உடலில் இரத்தம் கெட்டிருப்பதை அறியாமல், மேல் தோலுக்கு மருந்து பூசுவது போன்ற முயற்சி இது' என்பது அவன் கருத்து.[20] "மனித இனம் பண்பாட்டை நம்பி வாழ வேண்டியது; ஆனால் இன்று பணத்தையே நம்பி வாழும் கதி நேர்ந்திருக்கிறது. உழைப்புக்கு அடையாளமாக, அளவு கருவியாகத் தோன்றியது பணம்; இன்று அதுவே உழைப்பை விழுங்கும் பேயாக வளர்ந்துவிட்டது. பேய் சாதாரண வளர்ச்சியில் நிற்கவில்லை அரசு செய்யும் அளவிற்கு வளர்ந்துவிட்டது"[21] என்று, இரத்தம் கெட்டுப் போனதற்குரிய காரணத்தையும் அவன் கூறினான்.

எனினும், ஆராவமுதன் கருத்தை ஏற்றுச் செயல்பட மற்ற உறுப்பினர்கள் துடித்தனர்; பொதுப்பணிகளில் இறங்கினர். ஆனால், விரைவில் அவர்கள் உண்மையை உணர்கின்றனர்; 'கடவுள் நம்பிக்கை

என்பது இன்று பணப்பூசையாக'வே இருப்பதைக் கண்டு மனச்சோர்வு அடைகின்றனர். கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டு சிலர், அதை ஒரு கவசமாக அணிந்துகொண்டு நாட்டைச் சுரண்டும் நயவஞ்சகர்களாக வாழ்வதை அவர்கள் காணுகின்றனர்; அதிர்ச்சி அடைகின்றனர். எவ்வாறு சமயமும், சிலருடைய 'சுரண்டல் கருவி'யாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பேராசிரியர், ஆறு காட்சிகளில் உள்ளத்தில் பதியுமாறு காட்டுகிறார்.

நான்கு நாடகங்களைக் கொண்ட மனச்சான்று' எனும் இக்கதைத் தொகுப்பு, மனிதன் மனச்சான்றினைப் பணநாயகம் எனும் தெய்வத்தின் முன்னர், பலியிட்டுவிட்டுப் பொய் வாழ்க்கை – போலி வாழ்க்கை வாழ முயலுவதையே அறிவிக்கிறது. இதன்மூலம், படிப்போருடைய, காண்போருடைய சிந்தனையைத் தூண்டி, 'நல்லதொரு சமுதாயத்தைப் படைப்பதற்கு வழிவகைகள் யாவை?' என்பதைக் கண்டு, உலகிற்கு உதவுமாறு ஆசிரியர் வேண்டுகிறார்.

3. காதல் எங்கே?

இந்நாடகத் தொகுப்பில் மூன்று நாடகங்கள் உள்ளன. 'காதல் எங்கே?' 'கடமை எங்கே?', 'உண்மை எங்கே?' என்னும் மூன்று நாடகங்களும், பணத்தின் செல்வாக்கால் உண்டாகும் திருமணச் சிக்கல்களைத் தெளிவுறுத்துகின்றன. 'காதல்' என்னும் நுட்பமான மனவுணர்வு, பணத்தின் 'முன்னால் படுதோல்வி அடைந்து விடுவதையே இம்மூன்று நாடகங்களும் சித்திரிக்கின்றன. பணத்திற்காகப் பறிபோகும் காதல், பணத்திற்காகக் கைவிடப்படும் கடமையுணர்ச்சி, பணத்திற்காகப் புறக்கணிக்கப்படும் நன்மை ஆகிய மூன்றும், இந்நாடகங்களில் சிறப்பிடம் பெறுகின்றன.

இம்மூன்று நாடகங்களும் கல்லூரியில் படிக்கும் இளைஞர்கள், 'காதல்! காதல்! இன்றேல் சாதல்! சாதல்! சாதல்!" என்று வீர முழக்கம் செய்வதும், பின்னர் உலகில் இன்பமான வாழ்க்கையைத் தேடுகின்றபொழுது பணத்திற்காகவும் பதவிக்காகவும் காதலைக் காற்றிலே பறக்க விடுவதையும் ஆசிரியர் நகைச்சுவை தோன்ற, எள்ளலும் நையாண்டித் தனமும் புலப்படுமாறு படைத்துக் காட்டுகிறார்.

கல்லூரியை விட்டுச் செல்லும் இளம் மாணவர்கள் பணத்தின் கொடுமைக்கு இரையாகித் தங்கள் உயர்ந்த குறிக்கோள்களை விட்டுவிடக்கூடாது எனும் உண்மையை அவர்களுடைய உள்ளத்தில் ஆழப் பதியுமாறு செய்யவே, இத்தகைய நாடகங்களை ஆசிரியர் படைத்துள்ளார். மேடையில் நடிக்கப்பட்டபொழுது, மாணவர்கள் பேராரவாரம் செய்து, இந்நாடகங்களை வரவேற்றனர்.

‘காதல் எங்கே?’ எனும் நாடகத்தில் வரும் குணசாகரர் குடும்ப வரலாறு, பேராசிரியர் மு.வ.வின் நண்பரான குலசேகரன் என்பவருடைய வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதியாகும். இதைப்போன்றே, ஐந்து பெண்களைப் பெற்று, அதனால் பெரிதும் வறுமையில் வாடிய சிவஞானம் எனும் பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலகத்து அன்பர் ஒருவரின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது ‘கடமை எங்கே?’ எனும் நாடகமாகும். உற்ற பருவத்தில் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க இயலாது, அவர் பட்ட அல்லலை நன்கறிந்தவர் மு.வ.என்பது பலருக்குத் தெரிந்த உண்மையாகும்.[22]

புரசைவாக்கம் வேளாளர் தெருவில் இருந்த செல்வாக்கு மிக்க முதலியார் ஒருவர், ‘என் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுகிறவருக்கு ‘இம்பீரியல்’ பாங்கில் வேலை வாங்கித் தருவேன்’ என்று கூறி, தம்முடைய மூன்று பெண்களுக்கு மணமக்களைத் தேடிப்பிடித்த வரலாற்றையே ஆசிரியர் ‘நன்மை எங்கே?’ எனும் நாடகத்திற்குரிய கதைக்கருவாக அமைத்துள்ளார்.[23]

1950 அளவில் இருந்த அதே நிலைதான், மனிதன் திங்களை எட்டிப்பிடிக்கும் இக்காலத்திலும் நீடித்து வருவதைக் காணுகின்றபொழுது, ‘மனித இயற்கையை மாற்ற முடியாது’ எனும் எண்ணம் தோன்றுகிறது.

பேராசிரியர் மு.வ.அவர்களுடைய புதினங்களில், நகைச்சுவையை மருந்திற்குக் கூடக் காண இயலாது; சிறுகதைகளில் எள்ளலோடு இயைந்த நகைச்சுவையின் மெல்லிய குரலைக் கேட்க முடிகிறது. இச்சமூக நாடகங்களில் உரையாடல்களின் இடையிடையே நகைச்சுவை, நல்ல மருந்தாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

4. மூன்று நாடகங்கள்

இத்தொகுதியில் உள்ள மூன்று நாடகங்களும், தமிழக வரலாற்றில் புகழ்ப்பூத்து விளங்கிய மூன்று பெரியார்களுடைய வாழ்க்கையின் ஒளிமிக்க பகுதிகளாகும்.

பொதுவாகப் பேராசிரியர் மு.வரதராசனார் அவர்களுக்கு, வரலாற்றில் ஈடுபாடு கிடையாது. அதற்குரிய காரணங்களுள் ஒன்று பழம்பெருமை பாராட்டிப் பாராட்டியே, தமிழன் கெட்டான் என்பதாகும். தனிமனிதன் ஒருவனுடைய அரும்பெருஞ் செயல்களைப் போற்றிப் போற்றி, அவனை உயர்த்துகின்றபொழுது, மற்றவர்களுக்கு அழுக்காறு உண்டாகி, அத்தனிமனிதனை – நல்லவனாகவும் சிறந்தவனாகவும் இருந்தாலும் – தூற்றவும் பழிக்கவும்

தொடங்கி விடுகின்றனர் என்பது மற்றொரு காரணமாகும். இதனால்தான் அவர் காண விரும்பிய கி.பி.2000த்தில், பள்ளிகளில், தனிமனிதனுடைய வரலாற்றிற்குப் பதிலாக, உலக வரலாறு – மனித இனத்தின் வரலாறு பயிற்றுவிக்கப் படுவதாகக் காட்டியுள்ளார்.[24] இத்தகைய உணர்வுடைய பேராசிரியர், மூன்று தமிழ்ப் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றை மூன்று நாடகங்களாகச் சித்திரித்துள்ளமை வியப்பில் ஆழ்த்துவதாகும். இதற்குரிய காரணங்களை அந்தந்த நாடகங்களைப் பற்றிய திறனாய்வின் காண்போம்'

(அ) இளங்கோ

'குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த' இளங்கோவடிகளின் வாழ்க்கையைச் சித்திரிப்பது இந்நாடகம். இந்நாடகம் 1952ஆம் ஆண்டில் சிறுநூலாக வெளியிடப்பட்டது. இதற்கு முன்பு (1950) இலங்கைக்குச் சென்று பல்வேறு வகையான வாழ்க்கையையுடைய தமிழ் மக்களைப் பேராசிரியர் நேரில் கண்டு வந்தார். 1952ஆம் ஆண்டில், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், ஐந்தாவது தமிழ் மாநாடு, சென்னைத் தேனாம்பேட்டையில் நடைபெற்றது. அதில் பேராசிரியர் கலந்து கொண்டார்.[25] பல நாடுகளில் இருந்து தமிழறிஞர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களோடு பேராசிரியர் பழகியபொழுது, அனைவர் இடத்திலும் ஒரே வகையான குறை இருப்பதை அவர் கண்டார். அக்குறையைப் பற்றி நினைவோட்டம் சங்ககாலம் முதல் இக்காலம் வரையில் முன்வீச்சும், பின்வீச்சுமாக அவர் உள்ளத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதன் விளைவாகத் தமிழினத்தின் தனிப்பெரும் குறையை, கற்றோரும் மற்றோரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில், அவர் நாடகமாக்க முனைந்தார்.[26] ஒன்றுபட்ட தமிழகத்தை முதன்முதல் காணத் துடித்தவர் இளங்கோவடிகள். சோழன் கரிகாலனைக் குறை கூறினாலும், அது தமிழனாகிய செங்குட்டுவனைக் கூறியதாகவே இளங்கோவடிகள் கருதினார். தனிமானத்தைவிட, பொது வகையான தமிழினத்தின் மானத்தைக் காப்பாற்றுவதே சிறப்பு என்று இளங்கோவடிகள் கருதியதாகப் பேராசிரியர் விளக்கம் தருவது வழக்கம்.

இவ்விரு கருத்துகளுக்கும் கலை வடிவம் கொடுக்கும் வகையில், பேராசிரியர் மு.வரதராசனார், 'இளங்கோ' நாடகத்தைப் படைத்தார். முற்றும் துறந்த முனிவர் இளங்கோவைக் கண்டு, 'ஐந்தவித்தானடிகள்' போன்றோர் பொறாமைப்படுகின்றனர்; கேடு சூழ நினைக்கின்றனர். இந்நிலையில், தன்னுடைய சீடனான இளந்துறவிக்கு "எதிர்த்துச் செல்வது எப்போதும் எளிமை; இயைந்து செல்வதே அருமை"[27] என்று இளங்கோவடிகள் அறிவுரை கூறுகிறார். மற்றொரு சமயம்.

> ஒருநாட்டில் வழிகாட்டும் அறிஞர்களிடமும் தலைவர்களிடமும் பொறாமை வாழ்ந்தால், அந்த நாடு வாழாது. ஐந்தவித்தானடிகள் போன்ற அறிஞர்களிடமும் தமிழகத்தை ஆளும் தலைவர்களிடமும் பொறாமை காணும்போதெல்லாம் எனக்கு அந்த வருத்தம்தான் தோன்றுகிறது. நம்மை எல்லாம் வளர்த்துப் பண்படுத்திவரும் தமிழ்மொழியும், தமிழகமும் எப்படி ஓங்கி வாழப்போகின்றன என்று கவலைப்படுகின்றேன். பொறாமை ஒரு நச்சுப்பாம்பு. அதன் நஞ்சு ஏறினால் நாடும் மொழியும் நலிந்து போகுமே![28]

என்று அறிஞர்களையும், ஆட்சித்தலைவர்களையும் நினைந்து, இளங்கோ அடிகளின் மனம் பொருமுவதாகப் பேராசிரியர் காட்டியுள்ளார்.

'வெளிநாடுகளைப் போரில் வென்ற தமிழகத்து வேந்தர்கள் அந்நாடுகளைத் தம் அரசோடு இணைத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டனர். அங்குத் தங்கள் ஆட்சியை நிறுவி, தமிழ்மக்களைக் குடியேற்றி இருந்தால், இன்று அங்கெல்லாம் தமிழ்ப் பண்பாடு தழைத்து வளர்ந்து வந்திருக்கும் அல்லவா?' என்று நினைந்து மு.வ.அவர்கள் வருந்தியது உண்டு. இந்தக் கருத்தினை, இளங்கோவடிகள் வாயிலாக, அவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார்.[29]

பாண்டியன் அவைக்களத்தில், இளங்கோவடிகளைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து காவலர்கள் நிறுத்துகின்றனர். பாண்டிய அரசன், தன் குடியின் மீது பழியைச் சுமத்தி, சேரனுக்குச் சிறப்பைத் தேடிக் கொடுத்து விட்டதாக அடிகள் மீது குற்றம் சாட்டுகிறான். ஆனால், அடிகள் பொறுமையாகத் தாம் 'சிலப்பதிகாரம்' இயற்றியதன் நோக்கத்தையும், அதில் பாண்டி வேந்தரின் மாட்சியையே மிகுதியாகச் சிறப்பித்திருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார். அவருடைய 'ஒன்றுபட்ட தமிழகம், தமிழினம்' எனும் கொள்கைகள் அவனுக்கு வேம்பாகக் கசக்கின்றன. அவரை விரைவில் பாண்டிய நாட்டு எல்லையைக் கடந்து போகுமாறு பாண்டியன் கட்டளையிடுகிறான்.

> தமிழகத் தலைவரே! தமிழரே! ஒன்றுபடுவீர்! தமிழ் வாழ, தமிழகம் விளங்க ஒன்றுபடுவீர்! யான் போகிறேன்; மறைகிறேன்; தமிழ் போகாதிருக்க, தமிழ் மறையாதிருக்க! தமிழரே! வேண்டுவது ஒன்றுதான்! அதுதான் ஒற்றுமை! ஒற்றுமை! ஒற்றுமை![30]

என்று அறிவுறுத்தி, இளங்கோவடிகள் பாண்டியன் நாட்டைவிட்டு நீங்குகிறார். இத்துடன் ஏழு காட்சிகளைக் கொண்ட 'இளங்கோ' நாடகமும் நிறைவுறுகிறது.

கடந்த ஈராயிரம் ஆண்டுக்காலமாகத் தமிழரிடம், தமிழருடைய தலைவர்களிடம் இருந்து வரும் குறைபாடுகளை எல்லாம் "இளங்கோவின்" மூலமாக, இன்றைய தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் பேராசிரியர் மு.வ. அறிவுறுத்துகிறார். 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையு'மற்ற புதியதொரு தமிழ்ச் சமுதாயத்தைப் படைக்க விரும்பிய மு.வரதராசனார், 'இளங்கோ' எனும் கதைமாந்தரின் வடிவில் உணர்ச்சிச் செறிவோடு, இன்றைய தமிழ்ச்சமுதாயத்தின் ஏற்றத்திற்குரிய வழிவகைகளை எடுத்தியம்பியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகம், 1957ஆம் ஆண்டு, சனவரி மாதம், கடைசி வாரத்தில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. அப்பொழுது திருச்சி, இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, காரைக்குடி டாக்டர் அழகப்பர் கல்லூரிகள் வாளகத்தில் பேராசிரியர் அலக்சாண்டர் ஞானமுத்து அவர்கள் தலைமையின் கீழ் (ஆட்சிக்குழு உறுப்பினர்) ஒருவாரம் அவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடின. விழாவின் கடைசி மூன்று நாட்களில், நாடகங்கள் நடத்தப்பட்டன. புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த இவ்வாய்வாளர், பேராசிரியரின் இசைவினைப் பெற்று,[31] 'இளங்கோ' நாடகத்தைப் புதுக்கோட்டை மன்னர் அழகப்பர் கலையரங்கில் முதன்முதல், 29.1.1957–ஆம் நாள் இந்நாடகத்தை அரங்கேற்றம் செய்தார். அங்கு நாடகப் பொறுப்புகளை ஏற்று, கலைவிழா இயக்குநராக விளங்கியவர் அழக்கப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆவார். இந்நாடகத்திற்கு, அங்கு நல்ல பாராட்டுக் கிடைத்தது. அப்பொழுது அரங்கில் எடுத்த நிழற்படம் ஒன்று இவ்வாய்வுரையில் சேர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இன்று தமிழக அரசில், திட்டக்குழுவின் செயலாளராக உள்ள இரா.நாகராசன், ஐ.ஏ.எஸ். அவர்களே, இளங்கோவடிகளாக நடித்து, அங்கிருந்த மக்களுடைய பாராட்டுதலைப் பெற்றார். பின்னர், புதுக்கோட்டை மன்னர் கல்லூரியின் ஆண்டு விழாவில் (9.3.1957) 'இளங்கோ' நாடகம் இரண்டாவது முறையாக அரங்கேறியது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

(ஆ) திலகவதியார்

இந்நூலில் இரண்டாவதாக உள்ள நாடகம் திலகவதியாரின் வாழ்க்கையைப் பற்றியது; தொண்டு நெறியின் சிறப்பைக் காட்டுவது அக்காலத்தில் சமயச் சார்பான சேவையே, சமுதாயத் தொண்டாகக் கருதப்பட்டது. உலகவரலாற்றிலே, முதுன்முதல் சமுதாயத் தொண்டில் ஈடுபட்ட பெண்மணிகள் தமிழ்நாட்டைச்

சேர்ந்தவர்களாகக் காட்சியளிக்கின்றனர். முதலாவது பெண்மணி மணிமேகலை, அடுத்த நிலையில் திலகவதியார் திகழுகிறார். கணவனாக வரிக்கப்பட்டவன் போரில் இறந்தான். பிறகு வேறொருவனையும் மணக்க விரும்பாமல், 'இல்லறத் துறவியாக'ப் புதிய வரலாற்றைப் படைத்துவிட்டார் திலகவதி. 'அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி'த் திருக்கோயில் திருத்தொண்டில் அவர் ஈடுபடுகிறார். அவருடைய வாழ்வு, தம்பிக்காக – தரும சேனருக்காக (அப்பருக்காக) அமைந்த தியாக வாழ்வு மட்டும் அன்று. தமக்கையின் தூயவாழ்வு சமயச்செருக்கு வாய்ந்த தருமசேனராகிய தம்பியை, அப்பராக – நாவுக்கரசராக மலரச் செய்கிறது. திலகவதியாரின் தியாகவாழ்வே, தூயவாழ்வே 'திருநாவுக்கரசர்' எனும் அருளாளரை உலகிற்கு அளித்துள்ளது. இதனை மு.வ.அவர்கள், இந்நாடகத்தைப் படிப்பவர், பார்ப்பவர்கள் உய்த்துணருமாறு செய்துள்ளார்.

(இ) வீண் கனவு

'உலகில் போரே நடைபெறக்கூடாது; அதை அடியோடு ஒழித்துவிட வேண்டும்' என்பது மேற்கு நாடுகளில் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு எழுந்த எண்ணமாகும். அறிவியல் அறிஞர்களும், மெய்யுணர்வாளர்களும், கலைஞர்களும் கூடி மாநாடுகள் நடத்தி, 'போர் மூளாமல் தடுக்க' வழிவகைகளைக் காண முயன்றனர்' இக்கருத்தை இந்தியாவில், கங்கை முதல் குமரி வரையில் பல போர்களைப் புரிந்து பெருவெற்றி பெற்றவனும், தன் கடற்படையைக் கொண்டு ஜாவா, மத்திராவில் சிறப்புற்றிருந்த சைலேந்திரப் பேரரசைப் படுதோல்வி அடையச் செய்தவனும், சிங்கள மன்னரைச் சிதைந்தோடச் செய்தவனுமான சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரன் கனவாகக் காட்டுகிறார். தன் வாழ்க்கையின் 'கடைசி நாட்களில்', போரின் கொடுமையை நினைந்து, நினைந்து வருந்தி தமிழகத்தில் – உலகில் – 'போர்' எனும் பூதத்தின் நிழலே படக்கூடாது என்று அவன் கனவு காணுகின்றான்.

அதைப்பற்றி அமைச்சரிடமும் படைத்தலைவரிடமும் அவன் கலந்து பேசுகிறான். இளவரசருக்குப் போரில், ஆவல் உண்டாகாமல் வளர்க்க வேண்டும் என்று அவன் திட்டமிடுகிறான். தன்னல நோக்கும் புகழ் ஆசையும் ஒழிந்தால், போரில்லா உலகத்தை உருவாக்க இயலும் என்றும் அவன் நினைக்கின்றான். 'நடைமுறையில், இது இயலுமா? "வீண் கனவாக'ப் போய்விடுமோ?" என்று அவன் ஐயுறுகிறான்.

இந்நாடகத்தின் 'கதைக்கரு', 'போரில்லா உலகைப் படைக்க விரும்புதல்' ஆகும். இது புத்துலகக் கருத்து. இதைப்போய், போர்வெறி கொண்ட இராசேந்திர சோழனுடைய சிந்தனையாக

அமைத்து, பேராசிரியர் நாடகத்தைப் படைத்திருப்பது வரலாற்று வழுவிற்கு (Anachronism) இடம் தந்துவிட்டது[32] என்று திறனாய்வாளர் கருதுகின்றனர்.

போர்க்களங்களில் தொடர்ந்து வாகை சூடிய மௌரியப் பேரரசன் அசோகன், கலிங்கப் போருக்குப் பின்னர், போரை வெறுத்து ஒதுக்கி, போதிமாதவரின் அருளற நெறியை உலகெலாம் பரப்ப முயன்றதைச் சரித்திரம் பேசுகிறது. எனவே, இத்தகைய எண்ணம், மரணப்படுக்கையில் கிடந்த இராசேந்திர சோழனுக்குத் தோன்றியிருக்க இயலாது என்று சொல்லுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

சங்ககாலச் சான்றோர்கள், இத்தகைய போரற்ற உலகைப் பற்றிக் கனவு கண்டதைப் பேராசிரியர் மு.வ.அவர்கள் 'தமிழ் நெஞ்சம்' எனும் நூலில் தெளிவுறுத்தியுள்ளமையும்[33] இங்கு நினைகூர்தற்குரியதாகும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, 'வீண் கனவு' எனும் நாடகத்தைப் படிப்போமானால், அதில் வரலாற்று வழுவிற்கு இடமில்லை என்பது எளிதில் புலனாகும்.

5. நாடகக் கலைநலம்

இதுவரை மு.வ.வின் நாடகங்களில் அமைந்த கதைக்கரு, கதைப்பின்னல், காட்சி அமைப்பு போன்றவை விளக்கப்பட்டன. இங்கு நாடகத்திற்கு முக்கியமான நாடகமாந்தரின் படைப்புத் திறனைக் காண்போம்.

நாடகமாந்தர் படைப்பு

பச்சையப்பரில் வரும் பச்சையப்ப முதலியார் மாறத் தொடங்கியுள்ள நிலவுடைமைச் சமுதாயத்திலிருந்து, 'வளங்கொழிக்கும் வாணிகத் தொழில்மய சமுதாயத்திற்கேற்ற வகையில், தம்மை மாற்றிக் கொண்டவராவர். அறிவுத்திறனும், வினைத்திட்பமும், அருளுள்ளமும் வாய்ந்த ஒரு பாத்திரமாக அவர் படைக்கப்பட்டுள்ளார். அவரை, ஒரு 'வடித்தெடுக்கப்பட்ட பாத்திரம்' (Type Character) எனச் சொல்ல இயலாது.

நெடுங்காலமாக வழக்கில் இருந்துவரும் சமுதாய நெறிமுறைகளால் உருவாக்கப்பட்டவர்களே வடித்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாவர். படிப்படியாக வளர்ந்தும் காலத்திற்கேற்பவும், சூழ்நிலைக்களுக்கேற்பவும் வளைந்து கொடுத்து வாழ்க்கையில் முன்னேறும் மனிதராகப் பச்சையப்பர் காட்சித் தருகிறார். எனவே, இவரைத் தனிமைப்பண்பு வாய்ந்த (Individuals) பாத்திரப்படைப்பாகக் கொள்ளலாம்.[34] ஆனால், பவுனி நாராயணப் பிள்ளை, பச்சையப்பரின் தாயார்

பூச்சியம்மாள் போன்றோர் வடித்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாகவே தோன்றுகின்றனர்.

‘மனச்சான்று’ எனும் நாடகத்தில் வரும் செங்கொழுந்து முதலியார், ‘கிம்பளத்தில்’ இடம்பெறும் திருமலை, ‘ஏமாற்றத்தில்’ வரும் வடமலை, ‘காதல் எங்கே?’ எனும் நாடகத் தலைவன் மன்னப்பன் போன்றோர் தனிமைப்பண்புடைய தலைமைப் பாத்திரங்களாகச் சிறந்து விளங்குகின்றனர். மனச்சான்றில் வரும் ‘பிரகஸ்பதி’ எனும் வேலையாள், வடித்தெடுக்கப்பட்ட நாடகமாந்தனாவான். ஆயினும், அவனிடத்தில் உயிர்க்கலை ஒளி வீசுமாறு ஆசிரியர் படைத்துள்ளார். இதனால்தான், படிப்பவர் பார்ப்பவர் நெஞ்சில் அவன் நிலைத்ததோர் இடத்தைப் பெற முடிகிறது.

வரலாற்று நாடகங்களில், திலகவதியாரின் பாத்திரப்படைப்பு ஓர் ஒப்பற்ற சிறந்த படைப்பு. தனிமைப் பண்பின் வளர்நிலையில் அறிமுகப்படுத்தப்படும் பாத்திரமாக முதலில் அவர் தோன்றுகிறார்; இறுதியில் முழுநிறைவான பண்புகளின் உறைவிடமாக விளங்குகிறார்.

இளங்கோ நாடகத்தில் வரும் ‘ஐந்தவித்தானடிகள்’ வடித்தெடுக்கப்பட்ட பாத்திரமேயாகும். எனினும், அவரைக் காணுகின்ற பொழுதும், அவருடைய பேச்சைக் கேட்கின்றபொழுதும் இக்காலத் தமிழ்ப் புலவர்களிடையே வாழும் ‘ஒரு புலவரே’ நம் நினைவிற்கு வருகிறார்.

இளங்கோவடிகளின் பாத்திரப் படைப்பில் புதுமை இருக்கிறது. ‘தம்பிக்கு, நண்பர்க்கு, தங்கைக்கு, அன்னைக்கு’ எனும் நூல்களில், தமிழர் இடத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்ட தீய பண்புகள் அனைத்தும் நீங்கப்பெற்ற, ஒரு குறிக்கோளியல்புடைய பாத்திரமாக இளங்கோ விளங்குகிறார். இவ்வகையில், ‘அல்லி’, ‘நெஞ்சில் ஒரு முள்’ போன்ற புதினங்களில் வரும் ‘அறவாழி’யின், மறுபதிப்பாகவே அவர் தோன்றுகிறார். வேறுவகையாகச் சொல்லுவதானால், நாட ஆசிரியரின் மாற்று வடிவமே, ‘இளங்கோ’ எனலாம்.

ஓரங்க நாடகங்களாக உண்மையால், இந்நாடகங்களின் வடிவ அமைதியைப் பற்றிச் சிறப்பாக ஒன்று சொல்லுவதற்கு இல்லை. நாடகத் திறன்களுள் ‘தனிமொழிக்குப்’ பதிலாகப் பேராசிரியர், ‘மனச்சான்றின்’ குரலை ‘மனச்சான்று’, ‘கிம்பளம்’ எனும் நாடகங்களில் புகுத்தியுள்ளார்.

நாடகத்திற்கு உயிரூட்டுவது உரையாடல் பாத்திரத்தின் தன்மைக்கும், தகுதிக்கும் ஏற்றவகையில் உரையாடல்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. கல்லூரி மாணவரின் உரையாடல்களும், பச்சையப்பர் நாடகத்தில் வரும் வேலையாட்களின் உரையாடல்களும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இலக்கியப் பேராசிரியரான மு.வ.படைத்துள்ள நாடக உரையாடல்கள், ஓரளவிற்குப் பேச்சுத் தமிழின் இயல்புகளைத் தழுவியே அமைக்கப்பட்டுள்ளன. இதனால், நாடகப் பாங்கு நயமுற அமைய வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சிறுசிறுசொற்கள், சிறுசிறு சொற்றொடர்கள், கருத்தாழமிக்க பழமொழிகள் போன்றவை உரையாடல்களுக்கு வலிவும், பொலிவும் ஊட்டுவனவாக உள்ளன.

பெர்னாட்ஷாவின் நாடகங்களுக்குச் சொல்லப்படுகின்ற குறை, 'அறிமுகம் – சூழலமைவு – கலந்துரையாடல்' என்பனவற்றைத் தவிர, வேறொன்றையும் அவருடைய நாடகங்களில் காண இயலாது என்பர்.[35] இக்குறை, பேராசிரியர் மு.வரதராசனார் நாடகங்களிலும் இடம்பெற்றிருக்கிறது. சமுதாயச் சிந்தனையாளர்கள் படைக்கும் இலக்கியப் படைப்புகள் யாவுமே, இப்படித்தான் இருக்கும் என்னும் அமைதியைக் கூறுவதைத் தவிர, வேறு காரணம் காட்ட இயலவில்லை. உலகம் போற்றும் சிறப்புமிகு நாடக ஆசிரியன் இப்சனுடைய (H.Ibsen) நாடகங்களில் கூட இக்குறை வெளிப்படையாகத் தோன்றுவதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது.

குறிப்புகள்

1. மு.வரதராசன், 'அணிந்துரை', பனிமொழி (ஆசி.), ஏ.என். பெருமாள், நாகர்கோவில், 1969.
2. இலக்கிய மரபு, பக்.6.
3. அ.அ.மணவாளன், அரிஸ்டாடிலின் கவிதை இயல், பக்.38.
4. விபுலாநந்தர், மதங்க சூளாமணி, பக்.2.
5. சிலப்.அடி.உரை.பக்.58.
6. வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், நாடகவியல், 32.
7. Tennyson, G.B., An Introduction to Drama, P.23.
8. மேற்படி P.24.
9. Joseph T.Shipley, Dictionary of World Literary Terms, P.225.
10. செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 19, பரல் 9 (1941–42), பக்.426–432..
11. தங்கைக்கு, பக்.12.
12. பச்சையப்பர், பக்.3.
13. மனச்சான்று, நன்றியுரை.
14. ந.சஞ்சீவி, 'பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் நாடகங்கள்', தமிழாய்வு, தொகுதி – 3, பக்.4.
15. ந.சஞ்சீவி, 'பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் நாடகங்கள்', தமிழாய்வு, தொகுதி – 3, பக்.5.

16. R.Srinivasna, ‘Dr.Mu.Va.as a Dramatist’ in Dr.Mu.va., (ed), S.V.Subramanian, P.119.

17. மனச்சான்று, பக்.100.

18. இரா.தண்டாயுதம், மு.வ.வின் இலக்கியங்கள், பக்.78.

19. மனச்சான்று, பக்.111.

20. மனச்சான்று, பக்.110.

21. மனச்சான்று, பக்.110.

22. பச்சையப்பன் கல்லூரியில் முப்பது ஆண்டுகள் நூலகராகப் பணியாற்றிய சிறப்பிற்குரியவர் திரு.என்.செங்கல்வராயன், பி.ஏ., என்பவராவர். இவ்வாய்வாளருக்கு, அவர் 14.3.78 அன்று அளித்த நேர்முகப் பேட்டியில் தெரிவித்த செய்தியாகும்.

23. மேற்படி

24. கி.பி.2000, பக்.56.

25. சி.பாலசுப்பிரமணியன், பெருந்தகை மு.வ., பக்.94.

26. இந்நாடகம் எழுதும்பொழுது, இவ்வாய்வாளர் பேராசிரியரின் மாணவனாக இருந்தார். நெருக்கமான மாணவர்களிடம் சிக்கலான செய்திகளை, உணர்ச்சிக் கொந்தளிப்பை மூட்டும் செய்திகளைக் கலந்து பேசிய பிறகே, நூல்களில் அவற்றைப் பேராசிரியர் விளக்குவார். அவ்வழக்கப்படி, இவ்வாய்வாளரிடம் கலந்து, அதைப்பற்றிப் பேசியுள்ளார். நாடகத்தை முடித்தபிறகு, ‘உன்னையே (இளந்துறவி) ஒரு கதைமாந்தராகப் படைத்துள்ளேன்’ என்று பேராசிரியர் தெரிவித்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

27. மூன்று நாடகங்கள், பக்.14.

28. மேற்படி, பக்.15.

29. மேற்படி, பக்.18–19:24.

30. மேற்படி, பக்.45.

31. முத்துச்சண்முகன்,

    இரா.மோகன், டாக்டர் மு.வ.வின் கடிதங்கள், 1946–1974, கடித எண்.34.

32. இரா.தண்டாயுதம், முன்.கு.நூல், பக்.80–81.

33. தமிழ் நெஞ்சம், பக்.57–58.

34. Tennyson, G.B., op.cit.,p.54.

35. மேற்படி, ப.24.

இயல் - 9
கட்டுரைகள்

படைப்பு இலக்கியத்துள் 'கட்டுரை' கவர்ச்சி குறைந்த ஒன்றாகக் கருதப்படுவதை முன்னரே கண்டோம். 'கவிதை, புதினம், சிறுகதை, நாடகம்' எனும் சிறப்புமிகு இலக்கிய வகைகளுக்கு அடுத்த, 'கட்டுரை' ஐந்தாவது நிலையினதாக எண்ணப்படுவது, உலகெங்கும் காணப்படும் மரபாகும். இம்மரபுவழி, பேராசிரியர் மு.வ.அவர்களின் கட்டுரை நூல்களுள் சிறப்புமிக்க சில, இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தமிழில் 'கட்டுரை'

உரைநடையில், ஒரு கருத்தை அல்லது பொருளை விளக்கும் வகையில் எழுதப்படும் சொற்கோவையே கட்டுரை. தமிழில் 'கட்டுரை' எனும் சொல், பல பொருள்களில் வழங்கி வருகிறது. காலந்தோறும் இதனுடைய பொருளில் சிறிது மாற்றமும், திரிபும் உண்டாகி இருக்கின்றன. இச்சொல்லை, இரண்டு சொற்களாகப் பகுத்து விளக்கம் கூறுவர். 'கட்டு' எனும் பகுதியோடு, 'உரை' எனும் விகுதி சேர்ந்து, 'கட்டுரை, எனும் சொல் அமைகிறது. 'கட்டு' எனும் சொல்லிற்குப் பத்து வகையான பொருள்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் கட்டப்படுவது – செய்யப்படுவது – எனும் பொருளே, இவ்வாய்வின் நோக்கிற்கு உறுதுணையாகிறது.[1] 'உரை' எனும் சொல், பல பொருளையுடையது. அவற்றுள், 'உரைத்தல்' என்னும் பொருள் இங்குப் பொருத்தமாக இருக்கிறது. இவ்விளக்கத்திலிருந்து, '(சிந்தனையால்) கட்டப்பட்டு, உரைக்கப்படும் சொல்' என்பதே, 'கட்டுரை' என்பதன் பொருளாகத் தோன்றுகிறது. அதாவது, மனிதனுடைய சிந்தனைகளைப் பொருத்தமான முறையில் சேர்த்து, ஒரு வடிவமாக அமைப்பதன் மூலம், கருத்துகள் சொற்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய முறையில் அமைந்த கருத்து வெளிப்பாட்டையே 'கட்டுரை' என்கிறோம்.

கட்டு, உரை எனும் இரு சொற்களும் புணர்ந்து ஒரு சொல்லாக அமைகின்றபொழுது, புதியதொரு பொருண்மையும், சிறப்பும் அதற்கு உண்டாகிறது. இந்நிலையில், 'உறுதிச்சொல், பொருள்

பொதிந்த சொல், பழமொழி, புனைந்துரை, பொய், வியாசம்"[2] என்னும் அறுவகைப் பொருள்களை இச்சொல் உணர்த்துகிறது. இவ்வறுவகைப் பொருள்களுள் 'பொருள் பொதிந்த சொல்' எனும் பொருளே, கட்டுரைக்குரிய முதன்மைப் பொருளாகும். 'வியாசம்' என்பது வடசொல். இச்சொல்லும் இதே பொருளையுடையது; கட்டுரை, பாட்டால் அமையாது, உரைநடையால் அமைவது எனும் கருத்தினை இளம்பூரணர் கொண்டிருந்தார்.

கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து[3]

எனும் தொல்காப்பிய நூற்பாவில் பயிலும் 'கட்டுரை' எனும் சொல்லிற்கு, "கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்படுவது"[4] என்று அவர் விளக்கம் தந்துள்ளார். அவருடைய கருத்து, 'உரைநடையான் இயற்றப்பெறுவது கட்டுரை' எனத்தோன்றுகிறது. இக்காலத்தில் 'கட்டுரை' பெற்றுள்ள சிறப்புப்பொருளையே, அக்காலத்தில் இந்த உரையாசிரியர் சுட்டியுள்ளதாகத் தோன்றுகிறது,

இதே பொருளில், பேராசிரியர், "இவை கட்டுரைக்கண் சொல்லுமாறு போல எண்ணினமையிற் கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தன"[5] என்று குறிப்பிட்டுள்ளார். இளங்கோவடிகள்,

தீராக் காதலின் திருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை[6]

என்னும் பாடற்பகுதியில் 'கட்டுரை' எனும் சொல்லை வழங்கியுள்ளார். இவ்வடிகளுக்கு,

> கோவலன் திருமகளைப் போல்வாளுடைய முகத்தை நோக்கித் தனது அறிவு முதலியவற்றைக் குறியாத நலம் பாராட்டலென்னும் பொருள் பொதிந்த உரையைக் கூறுமென்க[7]

என்று அடியார்க்கு நல்லார் விளக்கம் தந்துள்ளார். இவ்விலக்கிய வழக்குகளைக் காலவரன்முறைப்படுத்தி நோக்குகின்ற பொழுது, 'கட்டுரை' எனும் சொல் பொருள் ஆழமிக்க சொற்களைக் கொண்ட அடிகளையும், தொடர்களையும் தொடக்கக் காலத்தில் உணர்த்தியமையும், நாளடைவில் அதனுடைய பொருள் விரிவுபட்டபொழுது, கி.பி.பத்தாம் நூற்றாண்டு அளவில், 'பாட்டு இல்லாமல் தொடுக்கப்' படுவதாகிய உரை எனும் பொருள் வழக்கிற்கு வந்தமையும் புலனாகின்றன.

இதனால், மேற்கு நாட்டு இலக்கிய வகைகளுள் ஒன்றான கட்டுரை' (Essay) தமிழருக்குப் புதியது அன்று என்பது பேரால் தருகிறது.

கட்டுரை என்பதை வரையறுத்துக் கூற இயலாது என்பர்.[8] ஆயினும், அதை, 'ஒருவன், ஒரு பொருளை அல்லது சிக்கலான

கருத்தைத் தன் ஆளுமையின் அல்லது தனித்தன்மையின் நோக்கில் ஆராய்ந்து, சுருக்கமாக உரைநடையில் வெளியிடுவதற்குரிய ஒரு முயற்சியே' என ஒருவாறு விளக்கலாம். அதன் மையக்கருத்து, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளைப் பற்றி, ஆசிரியர் கொண்டுள்ள எண்ணங்களின் வெளிப்பாடாக அமையும்.

கட்டுரையின் பண்புகள்

'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' கட்டுரையின் தலையாய பண்பாகும். ஆசிரியரின் ஒருவகை மனநிலையை உணர்த்துவதாக அது அமையும். அது திட்டமிட்ட, ஒருமைப்பாடுடையதாக இருக்க வேண்டும். ஒரு கருத்தையோ, ஒரு தலைப்பின் ஓர் இயல்பையோ எடுத்துரைக்கின்றபொழுது, அதில் ஒருவகை இயைபும், இழைவும் இணைந்து இருக்கும்; படிப்பவர்க்கு மகிழ்வூட்டுவதாகவும் அமையும்; பரந்த சிந்தனை உலகைக் கொண்டு வந்து அவர்கள் முன் நிறுத்தவும் செய்யும். இத்தகைய பண்புகளைக் கொண்ட கட்டுரை, படைப்பு இலக்கிய நயமும், நலமும் வாய்ந்ததாக விளங்கும்.

கட்டுரை வகை

கட்டுரையை முறைப்படி (Formal) அமைந்த கட்டுரை, முறைப்படி அமையாத (Informal) கட்டுரை என இருபிரிவாகப் பிரிப்பர்.[10] முறைப்படி அமைந்த கட்டுரை புறவயப்பண்பு (Objective) உடையதாயும், அறிவுநல ஆர்வம் வாய்ந்ததாயும் இருக்கும். முறைப்படி அமையாத கட்டுரை அகவயப் பண்பு (Subjective) உடையதாகவும் கற்பனை அனுபவத்தில் ஆர்வம் கொண்டதாகவும் இருக்கும்.

புறவயப் பண்புடைய கட்டுரை, (1) ஆய்வுக் கட்டுரை, (2) தெளிபொருள் கட்டுரை, (3) (செய்திப்) பதிப்பு முறைக்கட்டுரை (Editorial), (4) நூல் மதிப்புரை என நால்வகைப்படும். இவற்றுள் இரண்டாவதான 'தெளிபொருள் கட்டுரை' ஐவகைப்படும். அவை, (1) வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை, (2) அறிவியல் கட்டுரை, (3) வரலாற்றுக் கட்டுரை, (4) விளக்கவியல் கட்டுரை, (5) திறனாய்வுக் கட்டுரை என்பனவாகும்.

(1) பொதுக்கட்டுரை, (2) பாத்திரப் பண்புநலன் கட்டுரை, (3) மனப்பதிவு இயல்புக் கட்டுரை (Impressionistic), (4) தனிமனிதர் இயல்பு விளையாட்டுச் சித்திரக் கட்டுரை என்பன அகவயப் பண்புடைய கட்டுரையின் வகையாகும்.[11]

இவற்றின் அமைப்பினை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையில் கண்டு, தெளியலாம்.


கட்டுரை
முறைப்படி அமைந்தவை
முறைப்படி அமையாதவை
I. புறவயப் பண்பும் அறிவுநல ஆர்வமும் உடையவை
II. அகவயப் பண்பும் கற்பனை அனுபவ ஆர்வமும் உடையவை
ஆய்வுக் கட்டுரை
(செய்திப் பதிப்பு முறைக் கட்டுரை
நூல் மதிப்புரை
பொதுக் கட்டுரை
பாத்திரப் பண்பு நலக் கட்டுரை
மனப்பதிவு இயல்புக் கட்டுரை
தெளி பொருள் கட்டுரை
தனிமனிதர் இயல்பு, விளையா ட்டுச் சித்திரம்
வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை
அறிவியல் கட்டுரை
வரலாற்றுக் கட்டுரை
விளக்கவியல் கட்டுரை
திறனாய்வுக் கட்டுரை

கட்டுரையாளர் மு.வரதராசனார்

பேராசிரியர் மு.வரதராசனாரைச் சிறப்புமிகு கட்டுரை ஆசிரியராக அறிஞர் பலர் போற்றுகின்றனர்.[12] அவருடைய கட்டுரைகளில் கருத்துச் செறிவும், சிக்கலான கருத்துரைகளை எளிமையாக எடுத்துரைக்கும் இயல்பும், கலை பயில் தெளிவும், ஆழ்ந்த நினைவோட்டமும் அழகுற அமைந்துள்ளன. இதனால், அவர் (வேலத்து) மலையின் மாட்சியை விளக்கினாலும், மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கத்தைப் படம்பிடித்துக் காட்டினாலும், மெய்யுணர்வுக் கருத்துகளை எடுத்தியம்பினாலும், அவற்றில் ஒரு தனிப்பொலிவும், தனிச்சிறப்பும், தனிநயமும் இழைந்தோடுவதைக் காணலாம்.

ஐம்பதிற்கு மேற்பட்ட கட்டுரை நூல்களைப் பேராசிரியர் படைத்துள்ளார். அவற்றுள் பெரும்பாலான கட்டுரைகள், அவ்வப்போது நாள், வார, திங்கள் இதழ்களிலும், சிறப்பு மலர்களிலும் வெளிவந்தவை ஆகும். ஆழ்ந்த சிந்தனைக் கட்டுரைகளான கடித இலக்கியங்கள், ஆய்வு நூல்கள், இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு நூல்கள், மெய்யுணர்வுக் கட்டுரைகள், மொழியியல் கட்டுரைகள் போன்றவை நூல்களாகவே எழுதப்பெற்று, வெளியிடப்பட்டவையாகும். பேராசிரியரின் கட்டுரை நூல்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம். புறவயப் பண்புடைய கட்டுரை நூல்கள் 34; அகவயக் கட்டுரைகள் 21. இவையிரண்டும் சேர்ந்து கட்டுரை நூல்கள் 55 ஆகும். இவையே அல்லாமல் ஏறத்தாழ 200 கட்டுரைகள் உதிரிப்பூக்களாக நூல் வடிவம் பெறாமல் விளங்குகின்றன.

பேராசிரியர் மு.வ.அவர்களின் கட்டுரை நூல்களைப் பின்வருமாறு அடைவுபடுத்தலாம்.

I. மு.வ.வின் அகவயப் பண்புடைய கட்டுரைகள்

பொதுக்கட்டுரை	பாத்திரப் பண்புநலக் கட்டுரை	மனப்பதிவு இயல்புக் கட்டுரை	தனிமனிதர் இயல்பு, விளையாட்டுச் சித்திரம்
1) அரசியல் அலைகள்	1) கண்ணகி	1) அன்னைக்கு	
2) அரசியல் தொண்டு	2) மாதவி	2) கண்ணுடைய வாழ்வு	
3) அறமும் அரசியலும்		3) தங்கைக்கு	
4) உலகப் பேரேடு		4) தம்பிக்கு	
5) உலகம் உய்ய		5) நண்பர்க்கு	
6) கல்வி		6) படியாதவர் படும்பாடு	
7) குருவிப்போர்		7) யான் கண்ட இலங்கை	
8) நல்வாழ்வு			
9) நாட்டுப்பற்று			
10) பெண்மை வாழ்க			
11) மண்ணின் மதிப்பு			
12) மொழிப்பற்று			

II. மு.வ.வின் புறவயப் பண்புடைய கட்டுரைகள்

- **ஆய்வு நூல்கள்**
  1) ஓவச்செய்தி
  2) கொங்குதேர் வாழ்க்கை
  3) முல்லைத்திணை
  4) பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை
  5) புலவர் கண்ணீர்
- **தெளிபொருள்**
  - **வாழ்க்கை வரலாறு**
    1) அறிஞர் பெர்னாட்ஷா
    2) கவிஞர் தாகூர்
  - **அறிவியல்**
    1) குழந்தை
  - **வரலாறு**
    1) எழுத்தின் கதை
    2) சொல்லின் கதை
  - **விளக்கவியல்**
    1) இலக்கியக் காட்சிகள்
    2) குறள் காட்டும் காதலர்
  - **திறனாய்வு**
    1) இலக்கிய ஆராய்ச்சி
    2) இலக்கியத் திறன்
- **பதிப்பு முறை**
  1) திருக்குறள் தெளிவுரை
- **நூல் மதிப்புரை**

3) காந்தி அண்ணல்	3) மொழியின் கதை	3) குறுந்தொகைச் செல்வம்	3) இலக்கிய மரபு
4) திரு.வி.க.	4) மொழி வரலாறு	4) குறுந்தை விருந்து	4) இளங்கோவடிகள்
	5) தமிழ் இலக்கிய வரலாறு	5) தமிழ் நெஞ்சம்	
		6) திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்	
		7) நடைவண்டி	
		8) நற்றிணைச் செல்வம்	
		9) நற்றிணை விருந்து	
		10) நெடுந்தொகைச் செல்வம்	
		11) நெடுந்தொகை விருந்து	
		12) மணல் வீடு	
		13) மொழி நூல்	
		14) மொழியியல் கட்டுரைகள்	

சிறப்புமிகு கட்டுரை நூல்கள்

பேராசிரியரின் நூல்களுள் பெரும்பகுதி. கட்டுரைகளாக உள்ளமை இப்பகுப்பாய்வால் புலனாகின்றது. இக்கட்டுரை நூல்களுள் 'கடித இலக்கியங்கள்' (மனப்பதிவு இயல்பு), தமிழில் முதன்முதலாகப் பேராசிரியர் மு.வரதராசனார் அவர்களால் படைக்கப்பட்டவையாகும். தமிழ்க் கடித இலக்கியத்திற்கு மு.வ.அவர்களே முன்னோடியாவார். கலைஞன், தான் பெற்ற அனுபவத்தையும், மன உணர்வுகளையும் படிப்போர்தம் உள்ளங்களில் மீண்டும் படைத்துணருமாறு செய்வதே 'மனப்பதிவு முறை'யின் இயல்பாகும். கடிதங்களும், பயண இலக்கியமும் இத்தகைய இயல்புடையன.

மு.வ.வின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், தமிழில் தனிச்சிறப்புடையனவாக விளங்குகின்றன. அவை யாவும் வெறும் வரலாற்று நூல்களாக அமையாமல், நான்கு சான்றோர்களின் 'வாழ்வையும் தொண்டையும்' திறனாய்வு முறையில் மதிப்பீடு செய்வனவாக உள்ளன. இந்த நோக்கில் முதன்முதல் மு.வ.அவர்களே வாழ்க்கை வரலாற்று நூல்களைத் தமிழில் படைத்தவர்.

தமிழில் பயண நூல்கள் மிகமிகக் குறைவாக உள்ளன. பேராசிரியர் மு.வரதராசனாரின் 'யான் கண்ட இலங்கை' இத்துறையில் ஒரு சிறந்த படைப்பாகும்.

படைப்பு இலக்கியத்துள் கட்டுரையும் ஒருவகை இலக்கியமாகப் போற்றப்படுகிறது. பேராசிரியர் மு.வ.அவர்களுடைய 'கட்டுரை இலக்கியத்துள்' மேற்கண்ட 'கடித இலக்கியமும்', 'வாழ்க்கை வரலாற்று இலக்கியமும்' தனிச்சிறப்பு வாய்ந்தனவாக உள்ளன.

கட்டுரைகளில் கருத்துச் செறிவு உண்டு, அதைவிட கருத்துத் தெளிவிற்கு ஆசிரியர் முதலிடம் கொடுத்துள்ளார். எளிமையும் இனிமையும் அவருடைய நடையின் தனிச்சிறப்பியல்புகளாகும்.

டாக்டர் மு.வ.அவர்களின் 'கட்டுரை' நூல்கள் தனிப்பட்ட ஆய்விற்கு உரியன. எனவே, இவ்வாய்வில் அவற்றின் சிறப்பியல்புகளே சுட்டப்பட்டுள்ளன.

குறிப்புகள்

1. தமிழ் லெக்சிகன், தொ,2; பக்.650.
2. தமிழ் லெக்சிகன், தொ.2; பக்.654.
3. தொல்.1380.
4. மேற்படி.பொருள்.இளம்.உரை.

5. மேற்படி.பொருள்.435, பேரா.உரை.
6. சிலப்.2.36,37.
7. மேற்படி அடி.உரை.
8. Peter Westland, Literary Appreciation, P.201.
9. மேற்படி ப.206.
10. John T.Shipley, Dictionary of World Literary Terms, p.106.
11. V.K.Gokak, Literature in Modern Indian Languages P.256.

இயல் - 10
இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சிக்கு மு.வ.வின் கொடை

எழுத்தராக வாழ்க்கையைப் பேராசிரியர் மு.வரதராசனார் தொடங்கினார்; புலவராகப் பொலிவுற்றார்; திறமைமிகு தமிழாசிரியராகச் சிறப்புற்றார். அக்காலத்தில், படைப்பாளர் மு.வரதராசனாராகச் சிறப்புறுவதற்குரிய பண்புகள் அவர் உள்ளத்தே உள்ளார்ந்த உணர்வுகளாக இருந்தன.

பேராசிரியராகப் பீடுநடை போடத் தொடங்கிய காலத்தில், அவருடைய சிந்தனை ஆழ்ந்தும் அகன்றும் விளங்கத் தொடங்கியது. இதற்கிடையே அவரிடம் உறங்கிக் கொண்டிருந்த படைப்பு இலக்கியத்திறன், பொங்கி வழியத் தொடங்கியது. உணர்ச்சியின் பொங்கலே இலக்கியப் படைப்பிற்குத் தூண்டுகோலாக அமைகின்றதைக் காணுகின்றோம். அறிவுத்திறனோடு ஆராய்ச்சி வன்மையும் பெற்ற மு.வரதராசனார், அதே சமயத்தில் படைப்பாளராகவும் புகழ்பெற்றது வியப்பூட்டுகிறது. ஆராய்ச்சித் திறன் உடையவர்கள், உலகில் படைப்பாளர்களாக மலர்வது மிகவும் அரிய காட்சியாகும். பகுத்துப் பகுத்து அறியும் ஆராய்ச்சி மனப்பான்மை வாய்ந்தவர்களுக்கு, இலக்கியப் படைப்புகளுக்குத் தேவையான கற்பனையுள்ளம் வாய்ப்பது அருமை. இவ்வகையில் மு.வ.ஒரு தனிப்பிறவி. இருவகைத் திறன்களும் ஒருங்கே கைவரப்பெற்ற கலைஞராக – அறிஞராக – அவர் காட்சித் தருகிறார்.

மு.வ.வின் ஆளுமை

இவை யாவற்றிற்கும் மேலாக, 'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக' அவர் தோன்றுகிறார். அவருடைய ஆளுமை, ஆழமும், அழுத்தமும் வாய்ந்தது. அவருடைய படைப்புகளில், இலைமறைக் காய்போல், அது இனிது வெளிப்பட்டுள்ளது.

அவருடைய படைப்புகளாகிய பன்மணிமாலையை 'மனித நலம்' எனும் இழை – சரடு – இணைத்து நிற்கிறது. 'மனிதன் மனிதனாக வாழ வேண்டும்' எனும் நோக்கொடு, அவர் மானிடப் பயன்மதிப்பு (Human Values) களை மதித்துப் போற்றினார்; மற்றவர்களும் உணர்ந்து பின்பற்றத்தக்க வகையில் அதை எடுத்துரைத்துமுள்ளார்.

சிறப்புமிகு கலைக்குரிய பண்புகள் இரண்டு. சமநிலைப் பண்பும் (Balance), அளவொத்திருத்தலும் (Proportion) கலைப் படைப்புகளைக் கவின்பெறச் செய்வன. மு.வ.அவர்களின் படைப்புகள் அனைத்திலும் இவை வீறுடன் விளங்குகின்றன. எதிலும், எப்பொழுதும் இரண்டு எல்லைகளுக்கும் போகாத இயல்புடையவர் மு.வ. எனவே இவ்வியல்பு அவருடைய ஆராய்ச்சி நூல்களிலும், படைப்பு இலக்கியங்களிலும், சிறிதும் வேற்றுமைக்கு இடமின்றி ஒரே அளவாக அமைந்திருக்கிறது. இந்தப் பண்பினைப் போற்றுவதன் விளைவாக வெளிப்படுவதே ‘அளவொத்திருத்தல்’ என்பதாகும். அவருடைய செம்மையான மனப்போக்கினால்’ அவருடைய படைப்புகள் வடிவத்திலும், உணர்த்தும் முறையிலும் அளவொத்துள்ளன ஒன்று மட்டும் சிறந்தோ வீறுடையதாகவோ அமையாமல், வடிவமும் உணர்த்தும் முறையும் இணைத்தும் இழைந்தும் இனிய காட்சியை நல்குகின்றன.

கற்பனையுலகில் மிதக்கும் கலைஞர்கள் வினைத்திட்பம் – செயல் திறன் – கற்றவர்களாக வாழ்வதே உலக இயல்பாக இருந்து வருகிறது.

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு[1]

என்பது வான்மறை தந்த வள்ளுவரின் வாய்மொழியாகும். பேராசிரியர் மு.வரதராசனார் இதை நன்குணர்ந்தவர். எனவே, அவர் கலைஞராக மட்டும் வாழாமல், செயல் வீரராகவும் வாழ்ந்து காட்ட முயன்றார். இதனால்தான் அவரிடத்து, கலையுணர்வோடு ஆராய்ச்சித் திறனும் ஒன்றாகச் சேர்ந்து விளங்கியது போலும். குறிக்கோளியல்புகள் கொண்ட படைப்பாளர் வரதராசனார், மாறிவரும் காலச்சூழலுக்கும், வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்ப, ‘தமிழன் வாழக் கற்க வேண்டும்’ எனும் கருத்திற்கு இலக்கிய வடிவம் கொடுத்துள்ள இடங்களில் எல்லாம் பயன்பாட்டு நெறியாளராகத் (Pragmatist) தோன்றுகின்றார்.

செம்மை இலக்கிய நலமும் (Classical Spirit), வீறுணர்ச்சி இலக்கியப் பண்பும் (Romantic Spirit) இணைந்த இலக்கியங்களை மு.வரதராசனார் படைத்துள்ளார். அவருடைய படைப்புகளில் இயற்கை ஈடுபாடு முனைப்புடையதாகத் தோன்றுகிறது. இப்பண்பு, மேற்கண்ட இரு இலக்கிய நெறிகளின் இணைவினால் ஒருவகைப் புதுப்பொலிவினைப் பெற்று இருக்கிறது.

சிறப்புமிகு சிந்தனையாளர்களுள் பலர், புகழ்மிகு கலைஞர்களுள் சிலர், துன்பியல் நோக்கொடு (Pessimistic) உலகைக் கண்டுள்ளனர். பேராசிரியர் மு.வரதராசனார் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், நிலைகளிலும் ‘குணம்நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி,

மிக்கவற்றையே கொள்ள' முயன்றவராவர். இதனால், மகிழ்ச்சியோடு அவரால் வாழ முடிந்தது. இந்த மகிழ்ச்சியுணர்வு, எதிர்காலத்தைப் பற்றி அசைக்க முடியாத நம்பிக்கையை உடையவராக அவரை வாழத் தூண்டியது. தமிழினத்தின், தமிழின் எதிர்காலத்தைப் பற்றியும், மனித இனத்தின் எதிர்காலத்தைப் பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்து ஒளிமிக்கதாகவே ஒளிர்கிறது. 'தம்பிக்கு' எனும் கடித இலக்கியத்தில் நடப்பு நிலையையும், சமுதாயத்தை நலிவுறுத்தும் நோய்களையும் சுட்டிக்காட்டி, இவற்றைப் போக்கவும் நீக்கவும் ஒவ்வொரு தமிழ் மகனும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பத்தினை வகுத்தத் தந்துள்ளார்.[2] அவை தமிழ்வாழ, தமிழினம் சிறக்க, உலகம் தழைக்க வழிகாட்டும் ஒளிவிளக்கின் சுடர்களாக விளங்குகின்றன. இவற்றால் அவர் மகிழ்வுநல நோக்காளராகவே (Optimistic) தோன்றுகிறார்.

நடைநலம்

பேராசிரியர் மு.வரதராசனார், 'எளிய' வாழ்க்கையைப் போற்றியவர்; தெளிந்த சிந்தனையோடு வாழ்ந்தவர். அவருடைய ஆளுமையின் இவ்விரு பண்புகளும், அவருடைய பலதிறப்பட்ட இலக்கியப் படைப்புகளில் நன்கு வெளிப்படுகின்றன. இவ்விரு பண்புகளும் அவருடைய எழுத்து 'நடை'யின் தனிச்சிறப்பியல்புகளாகும்.

> ஒரு காவியத்தையோ, கதையையோ படிக்கும்போது, யாரோ ஒருவர் நமக்கு எடுத்துச் சொல்வது போல் உணர்கிறோம். காவியத்திலும் கதையிலும் வரும் மாந்தர்கள் (பாத்திரங்கள்) சொல்வன அல்லாமல் அவர்களுக்குப் பின்னே இருந்தவாறு, அவர்களின் வாயிலாக ஒருவர் பேசுவதுபோல் உணர்கிறோம். அவ்வாறு பேசும் குரல் நூலாசிரியரின் குரலானால், அந்தக் குரலின் சிறப்பியல்புதான் அவருடைய நடை என்று கூறப்படும்.[3]

என்பது பேராசிரியர் அவர்கள், நடைக்குத் (Style) தந்துள்ள விளக்கமாகும்.

'மு.வ.அவர்களின், படைப்புகளுக்குரிய தனிச்சிறப்பு இயல்புயாது?' எனும் வினாவினை எழுப்பினால், உடனே நம் மனத்தில் தோன்றக்கூடிய எண்ணம் அவருடைய 'நடை நலத்தை'ப் பற்றியதாகவே இருக்கும். ஒரு புலவருடைய – எழுத்தாளருடைய – நடை, அவருடைய உள்ளத்தில் இயல்பை ஒட்டி அமைவதாகும். வாழ்க்கையில் எளிமையைப் போற்றிய மு.வ.அவர்களுடைய நடையில், எளிமைப்பண்பு ஏறுநடை போடுவதும், தெளிந்த சிந்தனையாளராக வாழ்ந்த மு.வ. அவர்களுடைய நடையில், தெளிவு உயிர்மூச்சாக விளங்குவதும் இயல்பே ஆகும்.

படைப்பு இலக்கியத்தின் உயிர்நிலை, உணர்த்தும் திறனே. அழகிய செஞ்சொற்களால், இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் உணர்த்துவதே 'நல்ல நடை' என்பர்.[4] மு.வ.அவர்களுடைய நடை, இவ்விலக்கணத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

நல்ல நடையினை உருவாக்க உதவுவன சொல்நயம், உவமை உருவங்கள், ஒலிநயம் என்பன.[5] இவற்றை நல்லமுறையில் பயன்படுத்தும் கலையில் வல்லமை பெற்ற ஆசிரியனுக்கு, 'நல்ல நடை' எளிதாக அமையும். மு.வ. அவர்களுடைய நூல்களில் இம்மூன்று இயல்புகளும் சமநிலையில் இடம்பெற்றுள்ளன. கதைப்பாத்திரத்தின் பண்புநலனை விளக்கும் இடத்தும்,[6] சங்ககாலச் சான்றோர்களின் எண்ணப்போக்கை எடுத்தியம்பும் இடத்தும்,[7] சிக்கலான வாழ்வியல் கருத்துகளை விளக்கும் இடத்தும்[8] அவருடைய நடையின் சிறப்புமிகு பண்புகள் செம்மையாகவும் செறிவாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

ஓர் ஆசிரியர் படைக்கும் நூல்களின் அமைப்பிற்கும் நோக்கிற்கும் ஏற்ப அவருடைய நடையில் வேறுபாடு இடம்பெறுவது உண்டு. பேராசிரியர் மு.வ.அவர்களுடைய இலக்கிய ஆராய்ச்சி – விளக்க நூல்களில் 'செந்தமிழ் நடை' இடம் பெற்றிருக்கிறது. 'செஞ்சொற் கவியின்பம்' பயக்கும் இலக்கிய நயம் பொருந்திய தூயதமிழ்ச் சொற்களைத் தக்க முறையில், இந்நடையில் அவர் பயன்படுத்தியுள்ளார். 'ஓவச்செய்தி' எனும் இலக்கிய ஆராய்ச்சி நூலின் தொடக்கம் இதற்குச் சிறந்ததொரு சான்றாகும்.[9]

சிக்கலான கருத்துகளை, ஆழ்ந்து சிந்தித்து, ஓரளவிற்குக் கல்வி கற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் எனும் எண்ணத்தோடு எழுதப்பட்டுள்ள கடித நூல்கள், கட்டுரை நூல்கள் போன்றவற்றில் தெளிவிற்கு முதலிடம் கொடுத்து, சிறுசிறு சொற்றொடர்களில் 'பழகுதமிழ்ச்' சொற்களை அவர் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். 'உலகப் பேரேடு' எனும் நூலின் தொடக்கம் இவ்வாறு அமைந்துள்ளதைக் காணலாம். 'உலகம் யாரைப் புகழ்கிறது?'[10] எனத் தொடங்கும் அப்பகுதி, பலமுறைப் படித்து இன்புறத்தக்கதாகும்.

அவருடைய புதினங்களிலும், சிறுகதைகளிலும், நாடகங்களிலும் இடம்பெற்றுள்ள நடை, தனிவகையானது. அது பேச்சு வழக்கு நடையும் அன்று; இலக்கிய வழக்கு நடையும் அன்று. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு புதுவகையான நடையைப் படைக்க இந்நூல்களில் பேராசிரியர் முயன்றுள்ளார். கருத்தை எளிதில் புரிந்து கொள்ளுமாறு செய்யவேண்டும்; உரையாடல் பாணியிலும் அது அமைய வேண்டும்; அதே சமயத்தில் ஆசிரியர் எடுத்துரைக்க

விரும்புவனவற்றை உணர்த்தியாக வேண்டும். இதற்காக, அவர் ஒரு புதிய நடையைத் தமக்கென்று வகுத்துக் கொண்டுள்ளார்.

பேச்சுத் தமிழில் இடம்பெறும் 'வேண்டாம்' என்பதை 'வேண்டா' எனவும், 'ஏங்க, போங்க, ஏமா' என்பனவற்றை 'ஏன்'ங்க?' 'போ'ங்க, 'ஏம்'மா, 'வா'ருங்க எனும் வகையில் நிறுத்தக் குறியீடுகளையே, சொல்லின் இடையிடையே பயன்படுத்தி[11] ஒருவகை அழுத்தத்தை அச்சொற்களிடையே அவர் பெய்துள்ளார். நேர்க்கூற்று, அயல்கூற்றுச் சொற்றொடர்களைத் தனித்தனியாகவும், இரண்டும் கலந்த 'கலவைச் சொற்றொடர்'களாகவும் பயன்படுத்துகின்றபொழுது அவற்றைச் சிறுசிறு சொற்றொடர்களாக – ஆறு அல்லது ஏழு சொற்களுக்கு மிகாத முறையில் – அவர் அமைத்துள்ளார்.

உரையாடல்கள் இடையே, கருத்து விளக்கத்திற்காக யாவருக்கும் தெரிந்த பொருள்களையும், செய்திகளையும் உவமைகள் ஆக்கிக் கூறுவதில் அவர் தேர்ச்சி மிக்கவராகத் தோன்றுகிறார். மற்றும், யாவரும் நன்கு அறிந்த, தமிழரின் எண்ணப்போக்கையும் பண்பாட்டையும் எளிதில் உணர்த்தக்கூடிய பழமொழிகள் பலவற்றைப் பொருத்தமாக அமைத்துள்ளதால், அவருடைய நடை பெருமிதப் பண்போடு விளங்குகிறது.

அவருக்கு முற்பட்ட காலத்தில் புதினப் படைப்பாளர்கள் 'சாதி வழக்குப் பேச்சு முறையையும்', 'கொச்சைத் தமிழையும்', 'மாவட்ட வழக்கையும்' பெரிதும் பயன்படுத்திக் கதைகள் எழுதி வந்தனர். மு.வ.அவர்கள் கதை இலக்கியத் தமிழிற்கு ஒரு புதுநடையை வகுத்தளித்தார். இன்று அகிலன், நா.பார்த்தசாரதி, கோவி. மணிசேகரன் போன்ற கதையாசிரியர்கள், மு.வ.அவர்களின் தமிழ்நடையைச் சிற்சில மாற்றங்களோடு பயன்படுத்தி வருவதைக் காணலாம்.

திரு.வி.க.அவர்கள், 'இலக்கிய நடை, பத்திரிகை நடை, சொற்பொழிவு நடை'[12] என்று மூவகை நடைகளைப் பின்பற்றியதாக மு.வ.அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மு.வரதராசனாரின் நூல்களை ஆழ்ந்து படிப்போர், ஆராய்வோர், அவருடைய நடையிலும் மூவகையான வேறுபாட்டு நிலைகளைக் காண்பர். இயன்றவரை தூயதமிழ்ச் சொற்களையே பயன்படுத்தும் இலக்கிய ஆய்வுக்குரிய செந்தமிழ் நடை ஒன்று. கருத்து விளக்கத்திற்காக வருணனைகளும், வினாவிடைகளும் அமைந்த 'பழகு தமிழ்' நடை மற்றொன்று. இன்றைய பேச்சுத்தமிழ் நடையைச் செப்பம் செய்து, ஓரளவிற்கு இலக்கிய மெருகேற்றி, எளிமையும் தெளிவும் வாய்ந்த 'உரையாடல் நடை' மூன்றாவதாகும். இம்மூவகை நடைகளாலும் பேச்சுத் தமிழிற்கும், எழுத்துத் தமிழிற்கும் இடையேயுள்ள (நடை)

வேறுபாட்டின் இடைவெளியைக் குறைக்கப் பேராசிரியர் மு.வ.அவர்கள் அரும்பாடு பட்டுள்ளார்.

> ஓர் எழுத்தாளனை, அவனுடைய நடையைக் கொண்டுதான் 'சிறப்புமிகு எழுத்தாளன்' என மதிப்பிடுவது மரபாகும்; நல்ல நடையில் எழுதப்பட்டுள்ள நூல்களையே உலகம் 'சிறந்த நூல்கள்' எனப் போற்றி வருகிறது; எழுத்தாளனுடைய நடையைக் கொண்டே, அவனைச் 'சிறப்புமிகு எழுத்தாளன்' என உலகம் போற்றிப் பாராட்டுகிறது.[13]

எனும் திறனாய்வாளர் கருத்து, பேராசிரியர் மு.வ.அவர்களுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

கொடை

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பேராசிரியர் மு.வ.அவர்கள் வழங்கியுள்ள 'கொடை' பல திறத்தன.

மறுமலர்ச்சி இயக்கத்தின் உந்துதலால், இக்காலத்தின் தேவைக்கேற்ற – தமிழருடைய பண்பாட்டிற்குப் புத்தொளி தரத்தக்க புதிய சிந்தனை இயல்புகளை ஏற்று, பழைய இலக்கியங்களுக்கு அவர் புதுமெருகு கொடுத்துள்ளார்.

புதுமைப்பாங்கின் (Modernism) போக்கையும் நோக்கையும் உணர்ந்து, அதற்கேற்ற வகையில், தமிழ் மக்களுடைய எண்ணப்போக்கை உருவாக்கவும், தலைமுறை இடைவெளியைக் குறைக்கவும் சிந்தனையைத் தூண்டும் சிறப்புமிகு படைப்பு இலக்கியங்களைப் பேராசிரியர் படைத்துள்ளார்; வாழ்க்கையின் வழிகாட்டியாக விளங்கத்தக்க வகையில் சமூகப் புதினங்களையே படைத்த பெருமைக்குரியவர் மு.வ.எனில், அது மிகையாகாது. பொழுதுபோக்கிற்காக அல்லாமல், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வகையில், 'கருத்து விளக்க'ப் புதினங்களைத் தமிழில் முதன்முதல் சிறப்பாக மு.வ.படைத்தளித்துள்ளார். பல்வேறு 'நோக்கு நிலைகளில்' கதையைச் சொல்லும் முறையினை, இதுவரை அவரைப்போல, எந்தப் புதின ஆசிரியரும் பயன்படுத்தவில்லை.

தமிழில் 'கடித இலக்கிய' மரபினைத் தொடங்கி வைத்தவர் மு.வரதராசனாரே ஆவார். படிப்போருடன் நெருக்கமாக நின்று, பரிவோடு சிக்கல்களை அலசி, ஆராய்வதற்கு இந்த இலக்கிய வகை பேருதவியாக இருக்கிறது. இந்த இலக்கியப் படைப்பில் டாக்டர் மு.வரதராசனார் 1950அளவிலேயே பெருவெற்றி பெற்றார். இதைக்கண்ட அறிஞர் அண்ணா, 1955இல் தம்முடைய 'திராவிட நாடு' இதழில், 'தம்பிக்கு' எனும் கடிதப் பகுதியைப் புகுத்தியமை,

மு.வ.வே இத்துறையின் 'முன்னோடி' என்பதை உலகிற்கு உணர்த்துகிறது.

ஆராய்ச்சி உலகில், ஒரு புதுநெறியை மு.வரதராசனார் புகுத்தியுள்ளார். அதுதான் உண்மையை நாடும் ஆராய்ச்சி; நடுவுநிலையிலிருந்து பிறழாமல் 'உண்மையை உண்மை'யென எடுத்துரைக்கும் ஆராய்ச்சி நெறி. பல்வேறு வகையான ஆராய்ச்சி நூல்களை எழுதி, ஆராய்ச்சித் தமிழிற்கு ஒருவகையான புதிய ஆற்றலை அவர் ஊட்டியுள்ளார்.

தமிழில் திறனாய்வு கலையைச், சிறப்பாகப் 'பண்பு நலன் மதிப்பீட்டு'த் திறனாய்வுக் கலையை, வளர்ப்பதற்குத் தம்முடைய 'கண்ணகி', 'மாதவி', 'இளங்கோவடிகள்' எனும் நூல்களின் வாயிலாகப் பேராசிரியர் வழிகாட்டியுள்ளார்.

சங்க இலக்கியத்தை மக்களிடையே பரப்புவதற்குத் திட்டமிட்டு, 'விருந்தும்', 'செல்வமும்' முதன்முதல் படைத்து வழங்கியவர் மு.வ.அவர்களேயாவர். இதன் மூலம், 'தமிழ் இலக்கியத்துள், 'சங்க இலக்கியம் தனிச்சிறப்பு வாய்ந்தது' என்பதை உலகிற்கு உணர்த்தியதோடு, 'சங்க இலக்கியக் கல்வி'யை ஓரளவிற்குக் கவர்ச்சியுடையதாகவும் அவர் செய்துள்ளார்.

உலகப் பேரிலக்கியங்களுள் 'திருக்குறள் சிறப்புமிகு நீதி இலக்கியம்' என்பதையும், உலகப்பெரும் காப்பியங்களுள் 'சிலப்பதிகாரம்' கொடியவன் (Villain) இல்லாத தனிச்சிறப்பு வாய்ந்த காப்பியம் என்பதையும் அவர் நிலைநாட்டியுள்ளார்.

தமிழில் புதியதோர் உரைநடையை, சிக்கலான செய்திகளை எடுத்துரைப்பதற்குரிய ஆற்றல்மிகு உரை நடையை, நல்ல தமிழில் அமையக்கூடிய எளிய, இனிய உரைநடையை உருவாக்கிய சிறப்பு மு.வ.அவர்களுக்கு உண்டு.

தம்முடைய மூவகையான 'நடைகளின்' மூலம், பேச்சுத் தமிழிற்கும் இலக்கியத் தமிழிற்கும் இடையே இருந்து வந்த இடைவெளியைக் குறைத்து, எல்லாவகையான அறிவுத்துறைகளுக்கும் பயன்படக்கூடிய நல்ல மொழி நடையை (Standard Style) உருவாக்க அவர் வழிகாட்டியுள்ளார்.

மக்கள் வாழ்க்கையோடு தொடர்பு கொள்ளாத எந்தமொழியும், எதிர்காலத்தில் செழித்து வளர இயலாது என்பதை உணர்ந்து, கற்றோரும் மற்றோரும் விரும்பத்தக்க வகையில், தம் படைப்பு இலக்கியங்கள் மூலம் தமிழ்மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைக்கப் பேராசிரியர் மு.வரதராசனார் முயன்றுள்ளார்.

பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம் கருத்துக் கருவூலம்! கலைப் பெட்டகம்! சிந்தனைச் சுரங்கம்! வாழ்வின் விளக்கம்! உலக இலக்கியத்துள் பொலிவுமிக்க ஒரு பேரேடு! தமிழ் இலக்கிய வானில் 'பொங்கிவரும் பெருநிலவு! வருங்காலத் தமிழகத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு!

குறிப்புக்கள்

1. திருக்.670.
2. தம்பிக்கு, பக்.53–56.
3. இலக்கியத் திறன், பக்.237.
4. J.Middleton Murry, The Problem of Style, p.7.
5. S.H.Burton, The Criticism of Prose, p.17.
6. மலர்விழி, பக்.158.
7. தமிழ் நெஞ்சம், பக்.69.
8. அறமும் அரசியலும், பக்.43.
9. ஓவச்செய்தி, பக்.5.
10. உலகப் பேரேடு, பக்.5.
11. மலர்விழி, பக்.34, 108;
    காதல் எங்கே? பக்.64, 84;
    மனச்சான்று, பக்.55, 117.
12. திரு.வி.க., பக்.80–81.
13. Bonamy Dobree, Modern Prose Style P.4.

ஆய்விற்குதவிய நூல்கள்

I.தமிழ்

1. பேராசிரியர் மு.வரதராசனாரின் நூல்கள்

(1) புதினங்கள்

1. கரித்துண்டு, (1953), 2. அல்லி, (1955), 3. நெஞ்சில் ஒரு முள், (1956), 4. கயமை, (1956), 5.அந்த நாள், (1964), 6.செந்தாமரை, (1964), 7. பாவை, (1967), 8. பெற்ற மனம், (1970), 9.வாடாமலர், (1972), 10. மண்குடிசை, (1975), 11.மலர்விழி, (1975), 12. அகல் விளக்கு, பாரி நிலையம், சென்னை, 1977, 13. கள்ளோ? காவியமோ? (1977).

(2) புனைகதைகள்

14. கி.பி.2000, (1973) 15. பழியும் பாவமும், (1973)

(3) சிறுகதைகள்

16. விடுதலையா? (1956) 17. குறட்டை ஒலி, (1967)

(4) நாடகங்கள்

18. பச்சையப்பர், (1957), 19. மனச்சான்று, (1963), 20. மூன்று நாடகங்கள், (1968), 21. டாக்டர் அல்லி, (1973), 22. காதல் எங்கே?, (1976).

(5) கடித இலக்கியம்

23. நண்பர்க்கு, (1954), 24. தம்பிக்கு, (1972), 25. அன்னைக்கு, (1973), 26. தங்கைக்கு, (1976).

(6) பயண இலக்கியம்

27. யான் கண்ட இலங்கை, (1971).

(7) வாழ்க்கை வரலாறு

28. அறிஞர் பெர்னார்ட்ஷா (1957), 29. காந்தி அண்ணல் (1967), 30. திரு.வி.க. (1968), 31. கவிஞர் தாகூர் (1976).

(8) ஆராய்ச்சி நூல்கள்

(அ) இலக்கிய ஆராய்ச்சி

32. கொங்குதேர் வாழ்க்கை (1955), 33. ஓவச்செய்தி (1963), 34. புலவர் கண்ணீர், (1963), 35. முல்லைத்திணை (1964), 36.பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (மொ.பெ.) (1964).

(ஆ) இலக்கிய விளக்கம்

37. மணல் வீடு, (1950), 38. தமிழ் நெஞ்சம் (1952), 39.திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (1956), 40.நடைவண்டி, (1956), 41. இலக்கியக் காட்சிகள் (1968), 42.குறள் காட்டும் காதலர், (1968).

(இ) இலக்கிய அறிமுகம்

43. நெடுந்தொகை விருந்து, (1952), 44. நெடுந்தொகைச் செல்வம், (1954), 45. குறுந்தொகைச் செல்வம் (1955), 46. குறுந்தொகை விருந்து, (1956) 47. நற்றிணை விருந்து, (1956), 48. நற்றிணைச் செல்வம், (1958).

(9) திறனாய்வு நூல்கள்

(அ) பண்புநலன் பாராட்டல்

49. கண்ணகி, (1950) 50. மாதவி, (1951).

(ஆ) புலவரின் கவித்திறனை மதிப்பிடுதல்

51. இளங்கோ அடிகள், (1960).

(இ) திறனாய்வுக் கட்டுரைகள்

52. இலக்கிய ஆராய்ச்சி, (1953), 53. இலக்கியத்திறன், (1959) 54. இலக்கிய மரபு, (1668).

(10) கட்டுரைகள்

(அ) அரசியல் சிந்தனை

55. அறமும் அரசியலும், (1957), 56. அரசியல் அலைகள், (1962) 57. அரசியல் தொண்டு, (1970).

(ஆ) உளவியல் சிந்தனை

58. குழந்தை, (1954).

(இ) கல்விச் சிந்தனை

59. கல்வி, (1967).

(ஈ) சமுதாயச் சிந்தனை

60. உலகப் பேரேடு, (1962), 61. குருவிப்போர் (1965), 62.மண்ணின் மதிப்பு, (1965), 63. பெண்மை வாழ்க, (1966), 64. உலகம் உய்ய, (1971), 65. நல்வாழ்வு, (1973).

(உ) நாடு, மொழி பற்றிய சிந்தனை

66. நாட்டுப்பற்று, (1956) 67. மொழிப்பற்று, (1956)

(11) மொழியியல் நூல்கள்

68. மொழி வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1954.

69. மொழிநூல், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (1958).

70. மொழியியற் கட்டுரைகள் (முதற்பகுதி), பாரிநிலையம், சென்னை, 1964.

(12) உரை விளக்கம்

71. திருக்குறள் தெளிவுரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1972.

(13) சிறுவர் நூல்கள்

(அ) இலக்கணம்

72. கழகத் தமிழ் இலக்கணம் I.சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1939.

73. மேற்படி II, (1939), 74. மேற்படி III (1941).

(ஆ) தமிழாக்கக் கதைகள்

75. ஷேக்ஸ்பியர் கதைகள் I (1939), 76. II, (1940).

(இ) பாட்டு

77. குழந்தைப் பாட்டுக்கள், (1939)

(ஈ) மொழியியல்

78. மொழியின் கதை, (1951), 79. சொல்லின் கதை, (1952), 80. எழுத்தின் கதை, பாரிநிலையம், சென்னை, (1966)

(உ) கட்டுரைகள்

81. படியாதவர் படும்பாடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1940.

82. கண்ணுடைய வாழ்வு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1945.

(14) இலக்கிய வரலாறு

83. தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதமி, புதுதில்லி, 1972.

(15) ஆங்கில நூல்கள்

84. The Treatment of Nature in Sangam Literature, S.S.S.P.Works, Madras, 1957.

85. IIango Adigal, Sahitya Academy, New Delhi 1967.

2. இலக்கணம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1951.

2. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1953.

3. தொல்காப்பியம் (மூலம்), (பதி.), தி.ச.பாலசுந்தரம்பிள்ளை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1954.

3. இலக்கியம்

4. மனோன்மணீயம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1933.

5. சிலப்பதிகாரம், அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1950.

6. திருக்குறள், பரிமேலழகர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1951.

7. திருமந்திரம், காசிமடம், திருப்பனந்தாள், 1951.

8. மணிமேகலை, உரையுடன், சைவ சித்தாந்த நுற்பதிப்புக் கழகம், சென்னை, 1951.

9. சிவஞான போதம் மூலமும் சிற்றுரையும், (பதி.) ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1953.

10. தேவாரம் (அடங்கன் முறை), (பதி.), மயிலை இளமுருகனார், திருவருளகம், சென்னை, 1953.

11. பாரதியார் நூல்கள்; கவிதைகள், தமிழக அரசு, சென்னை, 1954.

12. திருத்தொண்டர் புராணம், காசிமடம், திருப்பனந்தாள், 1964.

13. தாயுமான சுவாமிகள் பாடல், தருமையாதீனம், தருமபுரம், 1965.

14. சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), 2 தொகுதிகள், (பதி.) எஸ்.வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை, 1967.

15. பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1967.

16. சிவஞான சித்தியார் (சுபக்கம்), திருவிளங்கம் புத்துரை, கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம், 1971.

17. திருவாசகம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1971.

4. புதினங்கள்

18. கந்தசாமி, இல., ஓ..அன்றில் பறவைகளே, உழவன் அச்சகம், கோயம்புத்தூர், 1977.

19. கிருஷ்ணமூர்த்தி, ஆர்., மோகினித்தீவு, சென்னை 1945.

20. சீனிவாசன், ரா., (1) வழுக்கு நிலம், அணியகம், சென்னை, 1969.

21. சீனிவாசன் ரா. (2) வெறுந்தாள், அணியகம், சென்னை, 1977.

22. தசரதன், மா.கி., தணலிலே தங்கம், பாரிநிலையம், சென்னை, 1972.

23. பழநிசாமி, அ.,முதலா? முடிவா? மெர்க்குரி வெளியீடு, கோயம்புத்தூர், 1970.

24. பார்த்தசாரதி, நா., குறிஞ்சி மலர், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1964.

25. ரத்னம், க., கனவு மாலை, மெர்க்குரி வெளியீடு, கோயம்புத்தூர், 1967.

26. ராமசாமி, வ., கோதைத் தீவு, நவயுகப் பிரசுராலயம், சென்னை, 1943.

27. ராஜவேலு, கு., காதல் தூங்குகிறது, பாரிநிலையம், சென்னை, 1950.

28. ” மகிழம்பூ, ... 1697.

29. ” சாலையோரம், ... 1952.

30. ” காந்தமுள், ... 1967.

5. ஆராய்ச்சி, திறனாய்வு நூல்கள்

31. அகிலன், (1) கதைக்கலை, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, 1972.

32. அகிலன் (2) சிறுகதைக்கலை, ... 1972.

33. அகிலன், ராஜதுரை, ரா. (பதி.), வளரும் தமிழ் இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1970.

34. அண்ணாதுரை, சி.என்., தமிழரின் மறுமலர்ச்சி, முத்தமிழ் நிலையம், சென்னை, 1947.

35. அவினாசிலிங்கம், தி.சு.(மொழி.) விவேகானந்த சுவாமிகள் இந்தியப் பிரசங்கங்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1972.

36. இராமசாமி, அ.தமிழ்நாட்டில் காந்தி, காந்தி வெளியீட்டுக் கழகம், சென்னை, 1969.

37. இராமலிங்கம், மா., (1) இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

38. இராமலிங்கம், மா., (2) நாவல் இலக்கியம் 1972.

39. இராமலிங்கம், மா., (3) புதிய உரைநடை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

40. இராமலிங்கம், மா., (4) புனைகதை வளம், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1973.

41. இராஜசேகரன், இரா. (பதி.), தமிழ் நாவல் 50 பார்வை, பத்தினிக் கோட்டப் பதிப்பகம், மேலையூர், 1978.

42. இளந்திரையன், சாலை, (1) சிறுகதைச் செல்வம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1966.

43. இளந்திரையன், சாலை (2) தமிழில் சிறுகதைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1966.

44. இளந்திரையன், சாலை (3) புதுத்தமிழ் முன்னோடிகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1969.

45. கலியாணசுந்தரனார், திரு.வி., (1) இந்தியாவும் விடுதலையும், சாது அச்சுக்கூடம் சென்னை, 1940.

46. கலியாணசுந்தரனார், திரு.வி., (2) சமரச தீபம், சாது அச்சுக்கூடம், சென்னை, 1932.

47. கலியாணசுந்தரனார், திரு.வி., (3) சித்தமார்க்கம், சாது அச்சுக்கூடம் 1954.

48. கலியாணசுந்தரனார், திரு.வி., (4) சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, சாது அச்சுக்கூடம், 1956.

49. கலியாணசுந்தரனார், திரு.வி., (5) தமிழ்த்தென்றல், சாது அச்சுக்கூடம், 1928.

50. கலியாணசுந்தரனார், திரு.வி., (6) திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புக்கள், 2 தொகுதிகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.

51. கலியாணசுந்தரனார், திரு.வி., (7) மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், அரசி புக் டிப்போ, சென்னை, 1969.

52. கலியாணசுந்தரனார், திரு.வி., (8) பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும், காந்தியமும் சாது அச்சுக்கூடம், சென்னை, 1951.

53. காந்தி, மகாத்மா (மொ.), சர்வோதயம், சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர், 1967.

54. காமராசன், நா.நாவல்பழம், அணியகம், சென்னை, 1978.

55. குருசாமி, ம.ரா.போ.(பதி.), தற்கால(த்தமிழ்) இலக்கியம் புலப்படுத்தும் சமுதாய உணர்வு, (கருத்தரங்கக் கட்டுரைகள் – மையொற்றுப்படி), பூ.சா.கோ.கலைக்கல்லூரி, கோயம்புத்தூர், 1975.

56. குருசாமி, ம.ரா.போ., மு.வ.முப்பால், நரேந்திரசிவம் பதிப்பகம், கோயம்புத்தூர்,1977.

57. கைலாசபதி, சு., (1) இலக்கியமும் திறனாய்வும், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1976.

58. கைலாசபதி, க., (2) தமிழ் நாவல் இலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1977.

59. கோதண்டராமன், ப., (1) இலக்கிய விமர்சனம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1962.

60. கோதண்டராமன், ப., (2) சிறுகதை ஒரு கலை, பழனியப்பா பிரதர்ஸ் சென்னை, 1958.

61. சஞ்சீவி, ந.(பதி.), இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும், சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை, 1974.

62. சண்முகம், தா.ஏ, சூழ்நிலையும் மனிதனும், சிந்தனைப் பதிப்பகம், சென்னை, 1957.

63. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1974.

64. சிதம்பரநாத செட்டியார், அ., (பதி.), சிறுகதைக்களஞ்சியம், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1959.

65. சிவஞானம், ம.பொ., விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, இன்ப நிலையம், சென்னை, 1970.

66. சிவத்தம்பி, கா., (1) தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், பாரிநிலையம், சென்னை, 1967.

67. சிவத்தம்பி, கா., (2) நாவலும் வாழ்க்கையும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

68. சுந்தரமூர்த்தி, இ., நடையின் வகைகள், தமிழாய்வு, தொகுதி – 3, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1974.

69. சுந்தரமூர்த்தி, கோ.பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கைகள், தி.ரா.தாமோதரன் (தமிழா.) சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை 1977.

70. சுந்தரராஜன், பெ.கோ., சிவபாதசுந்தரம், சோ., தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1977.

71. சுப்ரமண்யம், க.நா., (1) இலக்கிய விசாரம், அமுத நிலையம், சென்னை, 1959.

72. சுப்ரமண்யம், க.நா., (2) படித்திருக்கிறீர்களா? பகுதி 1, 2 அமுதநிலையம், சென்னை, 1957.

73. சுப்ரமண்யம், க.நா., (3) விமரிசனக் கலை, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1959.

74. சுப்பிரமணியன், ச.வே.(பதி.), (1) திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை, 1977.

75. சுப்பிரமணியன், ச.வே.(பதி.), (2) மாந்தர் சிறப்பு, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1974.

76. சூரியநாராயண சாஸ்திரியார், வி.கோ., நாடகவியல், வி.சூ.சுவாமிநாதன் கோ., சென்னை, 1956.

77. செந்தில்நாதன், ச., தமிழ்ச்சிறுகதைகள், ஒரு மதிப்பீடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1967.

78. செல்லப்பா, சி.சு., (1) தமிழில் இலக்கிய விமர்சனம், எழுத்து பிரசுரம், சென்னை, 1974.

79. செல்லப்பா, சி.சு., (2) தமிழில் சிறுகதை பிறக்கிறது, எழுத்து பிரசுரம், சென்னை, 1974.

80. சோமசுந்தரம், மீ.ப, சிறுகதை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1972.

81. செல்வக்கேசவராய முதலியார், தி.தமிழ்வியாசங்கள், டயோசிகன் பிரஸ், சென்னை, 1926.

82. ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக் கலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

83. தண்டாயுதம், இரா., (1) டாக்டர் மு.வ., தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975.

84. தண்டாயுதம், இரா., (2) தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

85. தண்டாயுதம், இரா., (3) நாவல் வளம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1975.

86. தண்டாயுதம், இரா., (4) மு.வ.வின் இலக்கியங்கள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1975.

87. திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1974.

88. பரமசிவானந்தம், அ.மு., தமிழ் உரைநடை, தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1967.

89. பாக்கியமுத்து, தி.(பதி.), (1) இலக்கியத்தில் பெண்கள், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1977.

90. பாக்கியமுத்து, தி.(பதி.), (2) இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1972.

91. பாக்கியமுத்து, தி.(பதி.), (3) தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி சமுதாய மாற்றம், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1978.

92. பாக்கியமுத்து, தி.(பதி.), (4) விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், கிறிஸ்தவ இலக்கிய சங்கம் சென்னை, 1974.

93. பாரதியார், மகாகவி., கட்டுரைகள், அருணா பதிப்பகம், மதுரை, 1962.

94. பாலசுப்பிரமணியன், சி., பெருந்தகை மு.வ., சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1976.

95. ‘பியூலா மெர்சி, தா.ஏ., இருபதில் சிறுகதைகள், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1974.

96. புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் கட்டுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், சென்னை, 1968.

97. மணவாளன், அ.அ., அரிஸ்டாடிலின் கவிதை இயல், திறனாய்வு நூலகம், சென்னை, 1976.

98. மணி, பி.எஸ்., இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1973.

99. மஷ்ரூவாலா (மொ.), காந்தியும் மார்க்ஸும், சர்வோதயம் பிரசுரம், தஞ்சாவூர், 1974.

100. முத்துச்சண்முகம், தமிழ் இலக்கியக் கோட்பாடுகள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1974.

101. முத்துச்சண்முகம், தே.ஆண்டியப்பன் (பதி.) வையை, மலர் 3; மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.

102. முத்துச்சண்முகம், இரா.மோகன் (பதி.), டாக்டர் மு.வ.வின் கடிதங்கள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977.

103. முத்துச்சண்முகம், சு.வேங்கடராமன், மு.வ.நினைவு மலர், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.

104. மோகன், இரா., (1) டாக்டர் மு.வ.கலைக்களஞ்சியம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1974.

105. மோகன், இரா., (2) டாக்டர் மு.வ.வின் நாவல்கள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1972.

106. மோகன், இரா., (3) டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1974.

107. மோகன், இரா., (4) கு.பா.இராஜகோபாலன் சிறுகதைகள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978.

108. மோகன், இரா., (5) யான் கண்ட மு.வ., வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை, 1975.

109. மோகனரங்கன், ஆலந்தூர்., வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை, வசந்தா பதிப்பகம், சென்னை, 1978.

110. ரகுநாதன், சிதம்பரம்., (1) அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1977.

111. ரகுநாதன், சிதம்பரம்., (2) இலக்கிய விமர்சனம், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1951.

112. ரவீந்திரநாத் தாகூர், (1) அனைத்துலக மனிதனை நோக்கி, (தமிழா) அ.ச.ஞானசம்பந்தன், பாரிநிலையம், சென்னை, 1961.

113. ரவீந்திரநாத் தாகூர், (2) கீதாஞ்சலி, (தமிழா) வி.ஆர்.எம். செட்டியார், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1964.

114. ரவீந்திரநாத் தாகூர் (3) மனிதனின் சமயம், (தமிழா) த.நா.சேனாபதி, கலைமகள் வெளியீடு, சென்னை, 1959.

115. விசுவநாதன், ஈ.சா., மு.வ.வின் கடிதங்கள், பாரிநிலையம், சென்னை, 1976.

116. விபுலாநந்தர், சுவாமி., மதங்க சூளாமணி, செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, 1926.

117. வீராசாமி, தா.வே., தமிழ்நாவல் முன்னோட்டம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர், 1972.

118. வெல்லாக், ரெனி., ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, (தமிழா) குளோறியா சுந்தரமதி, பாரிநிலையம், சென்னை, 1966.

119. வேங்கடராமன், சு., அகிலன் சிறுகதைகள், ஒரு திறனாய்வு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1977.

120. வேங்கடராமன், சு., மு.வ. ஆய்வடங்கல் மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.

121. வேங்கடராஜுலு, ரா., (தமிழா) மகாத்மாகாந்தியின் சுயசரிதை, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை, 1960.

122. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1969.

123. வையாபுரிப்பிள்ளை, எஸ்., (1) தமிழின் மறுமலர்ச்சி, பாரிநிலையம், சென்னை, 1953.

124. வையாபுரிப்பிள்ளை, எஸ்., (2) இலக்கியச் சிந்தனைகள், நவபாரதி பிரசுரம், சென்னை, 1947.

125. ஜகந்நாதன், கி.வா., தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1966.

126. பேராசிரியர் மு.வ.

பேராசிரியர் அ.மு.ப.

கருத்தரங்கக் கட்டுரைகள், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் முதுகலை மாணவர்மன்றம், சென்னை, 1974.

127. கதையின் கதை, கலைமகள் காரியாலயம், சென்னை, 1957.

6. அகராதி முதலியன

128. தமிழ் ‘லெக்சிகன்’ தொகுதி 1, 2, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1937, 1939.

7. இதழ், நாளிதழ், மலர்கள் முதலியன

129. ஆய்வுக்கோவை, தொகுதிகள் 5, 6, 7, 8, 9, 10, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1973, 1974, 1975, 1976, 1977, 1978.

130. கலைக்கதிர், கோவை, 1953, 1954, 1962, 1965, 1972, 1973, 1974.

131. கலைமகள், மார்ச்சு, சென்னை, 1973.

132. சுடர் – வளர்தமிழ் மலர், தில்லித் தமிழ்ச்சங்கம், தில்லி, 1972.

133. செந்தமிழ்ச் செல்வி, பரல்–4, சிலம்பு 50 சென்னை, 1975.

134. தமிழ் எழுத்தாளர் யார் எவர்? தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1966.

135. தினமணி, 14.4.1967, சித்திரை சிறப்பு மலர், சென்னை, 1967.

136. தீபம், மார்ச்சு, 1971.

137. மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்க ஆண்டு மலர், மதுரை,1957.

II. ENGLISH

(1) Literary Works

1. Huxley, Aldous., (1) Brave New World, Chatto & Windus, London, 1965.

2. ” (2) Brave New World - Revisited Chatto & Windus, London, 1965.

3. Magill, Frank N., Masterpieces of World Literature, Harper & Row, New York, 1952. 4 Vols.

4. Maugham, W.Somerset, (1) Points of View, William, Heinemann Ltd., London, 1969.

5. ” (2) The Summing Up. Mentor Series, U.S.A., 1958.

6. ” (3) Six Short Stories, (Points of View), Penguin, Great Britain, 1952.

7. Mu.Va.(1) The Sound of Snore, (Tr.) Meena Krishnaswamy, Makkal Nalvalvu Manram, Madurai, 1976.

8. ” (2) Voice of Conscience, ”

9. Ramatirtha, Swami, In Woods of God Realisation, 5 Vols; Ramatirtha's Publication League Lucknow, 1930, 1931, 1934, 1935.

10. Shaw, George Bernard, (1) Everybody's Political What's What? Penguin Books, Great Britain, 1944)

11. ” (2) Major Barbara, Penguin Books, Great Britain, 1949.

12. ” (3) Socialism: Principles. and Outlook, Shawian Tract No.4; The Shaw, Society, London, 1956.

13. Shaw, George Bernard (4) The Doctor's Dilemma, Penguin Books, Great Britain. 1951.

14. ” (5) The Intelligent Women's Guide to Socialism, Capitalism, Sovietism and Fascism, Penguin Books, Great Britain, 1951.

15. Wells, H.G., (1) The Time Machine,

(2) The Island of Dr.Moreau,

(3) The Invisible Man,

(4) The First Men in the Moon,

(5) The Food of the Gods,

(6) In the Days of the Comet,

(7) The War of the Worlds

in one Volume, Heinemann, / Octopus, London, 1977.

16. ” (8) The Modern Utopia, Penguin, Great Britain, 1962.

17. Selections From Shaw - A Fearless Champion of the Truth, Progress Publishers, Moscow, 1977.

(2) Literary Criticism and Studies in Literature

18. Allen, Walter., (1) The English Novel, Penguin Books, Great Britain, 1970.

19. ” (2) Reading A Novel., J.M.Dent & Co., London, 1963.

20. ” (3) Writers on Writing, Phoenix House, London, 1965.

21. Altick, Richard D., The Art of Literary Research, Heinemann, New York, 1963.

22. Anderson, Jonathan, Borry H.Durston & Millian Poole, Thesis and Assignment writing, Wiley Eastern Ltd., Bangalore, 1977.

23. Asher, R.E., Some Landmarks in the History of Tamil Prose, University of Madras, Madras, 1973.

24. Atkins, John, Aldous Huxley: A Literary Study-John Calder, London, 1957.

25. Bates, HE., The Modern Short Story, Massachusetts The Writer, Inc., 1961.

26. Benediks, B.S., (ed.), On the Novel, J.M.Dent & Sons Lted., London, 1971.

27. Bergonzi, Bernard., H.G.Wells, A Collection of Critical Essays. Prentice Hall, Inc; U.S.A., 1976.

28. Booth, Wayne, C., The Rhetoric of Fiction, University of Chicago Press, Chicago, 1963.

29. Boulton, Marjorie., the Anatomy of the Novel Routledge & Kegan Paul. London, 1975.

30. Brander, Lawrence, Somerset Maugham; A Guide, Oliver & Boyd, Edinburgh, 1965.

31. Burton, S.H., The Criticism of Prose, Longmans, London, 1972.

32. Campbell, William G., Form and Style in Thesis Writing, Houghton Miffin Co., Boston, 1969.

33. Canby, Henry

Roberson Bailey (eds.), The Book of Short Stroy Appleton Century, New York, 1948.

34. Casty, Alan., The Shape of Fiction, Heatly & Co., Massachusetts, D.C., 1967.

35. Chatman, Seymom (Jr.), Literary Style: A Symposium, Oxford University Press, New York, 1971.

36. Clark, T.W., (ed.), The Novel in India, Its Birth And Development, George Allen & Unwin Ltd., London, 1970.

37. Cordell, Richard., Somerset Maugham A Biography & Critical Study, Heinemann, London, 1962.

38. Daiches, David, (1) Critical Approaches in Literature, Orient Longmans, Calcutta, 1967.

39. ” (2) The Novel and the Modern World, Univ. of Chicago Press, Chicago, 1960.

40. Dawson, S.W., Drama and the Dramatic, Methuen & Co., Ltd., U.S.A., 1970.

41. Dhandayudham, R., A Study of the Sociological Novels in Tamil, University of Madras, Madras, 1977.

42. Dietrich, R.F.& R.M.Sundell., The Art of Fiction, Holt Rinehart & Winston, Inc; New York, 1967.

43. Dobree, Bonamy, Modern Prose Stlye, Claredon Press, Oxford, 1964.

44. Donnor, H.W., Introduction to Utopia, Sidgwick, London, 1945.

45. Eliot, T.S., (1) Selected Essays, Faber & Faber, London, 1932.

46. ” (2) The Sacred Wood, Methuen & Co., London, 1969.

47. ” (3) The Use of Poetry and the Use of Criticism, Faber & Faber, London. 1964.

48. Elliott, Robert C., The Shape of Utopia, Univ.of Chicago Press, Chicago. 1970.

49. Elizabeth & Burns Tern, (ed). Sociology of Literature and Drama, Penguin books, Great Britain, 1973.

50. Forster, E.M., Aspects of the Novel, Penguin Books, Great Britain, 1974.

51. Fowler, R.(ed.), Essays on Style and Language, oxford University Press, oxford, 1966.

52. Fuller, Edmund., Man in the Modern Fiction, Random House Pte. Ltd., New york, 1958.

53. Fumento, Rocco., Introduction to the Short Story, The Ronald Press Co., New York, 1962.

54. Govindan, M.(ed.), Poetry and Renaissance, Kumaran Asan Birth Centenary Volume, Sameksha, Madras, 1974.

55. Grahan, Kenneth, English Criticism of the Novel, Clarendon Press, oxford, 1965.

56. Graig, David, Marxists on Literature - An Anthology Penguin Books, Great Britain, 1977.

57. Halperin, John (ed.), The Theory of the Novel, oxford University Press, New york, 1974.

58. Hertzler, Joyce Oramel, The History of Utopian thought, Cooper Square Publishers, New york, 1965.

59. Hildick, Wallace, Thirteen Types of the Narrative Macmillan, London, 1968.

60. Hough, Graham, Style and Stylistics, Routledge & kegan Paul, London, 1960.

61. Hudson, William Henry, An Introduction to the Study of Literature George G.Harraps Co.Ltd. London, 1949.

62. Hughes, Dougles, A. (ed.), Studies in Short Fiction, Holt Rinehart and Winston, New york, 1971.

63. Hugo, Leon, Bernard Shaw, Play wright and preacher, Methuen & Co., London, 1971.

64. Howe, Irwins (ed.), Literary Modernism, Fawcott premises Book, New york, 1967.

65. Joan, Rockwel, Fact in Fiction, Routledge & Kegan Paul, London, 1974.

66. Jones, Williams M., Fiction, Form and Experience D.C.Heath & Co., Massachusetters, 1969.

67. Kaplau, Charles., Critical Approaches to Short Story, Holt. Rinehart & Winston, Inct NewYork, 1969.

68. Kettle, Arnold, (1) Introduction to the English Novel, 2 Vol.s Hutchinson University Library, London, 1974.

69. Kettle, Arnold., (2) The Ninete enth century Novel, Educational Books, New Haver, 1972.

70. Knight, Everett., The Theory of the Classical Novel, Routledge & Kegan Paul, London, 1969.

71. Koestler, Arthur., The Art of Creation, A Lawrel Edition, New York, 1967.

72. Kholi, Suresh., Aspects of Indian Literature: the changing Pattern, Vikas Publishing House Delhi, 1975.

73. Kumar, Shiv K., &

Keith Maclean, Critical Approaches to Fiction, Mc Graw Hill Book Co., New York, 1968.

74. Legouis, Emile &

Louis Cazamian., A History of English Literature, J.M.Dent & Sons, Great Britian, 1971.

75. Liddell, Robert, Some Principles of Fiction, Jonathan Cape, London, 1953.

76. Lodge, David, Language of Fiction, Routledge, Kegan Paul, London, 1970.

77. Lubbock, Percy., The Craft of Fiction, Jonathan Cape, London, 1965.

78. Lucas, El., Tragedy, The Hogarth Press, London, 1949.

79. Macaulay, Rubie &

Lanning, George., Technique of Fiction, Harper & Row, U.S.A.. 1964.

80. Manuel, Frank (ed.), Utopia and Utopian Thoughti Houghton Mifflin, Boston, 1966.

81. Meenakshisundaram, K., The Contribution of European Scholars to Tamil, Univ. of Madras, Madras, 1974.

82. Meenakshisundaran, T.P., A History of Tamil Literature, Annamalai University, Annamalai nagar, 1965.

83. Mirriam, Allott., Novelitsts on the Novel, Routledge & Kegan Paul, London, 1959.

84. Mizener, Arthur., Modern Short - Stories, W.W.Norton & Co., Inc: New York, 1967.

85. Maugham, W.Somerset., On Literature, The New English Library, London, 1967.

86. Muir, Edwin., The Structure of the Novel, Allied Publishers, Bombay, 1966.

87. Murry, J.Middleton., The Problem of Style, oxford University Press, London, 1967.

88. Nortrand, Albert D.Van., Literary Criticism in America, Forum Books, New York, 1948.

89. Peacock, Ronald., The Art of the Drama, Routledge & Kegan Paul, London, 1957.

90. Priestly, J.B., The Art of the Dramatist, Heinsmann, Great Britain, 1957.

91. Una-Ellis, Permour., The Frontiers of Drama, Methuen, Great Britain, 1964.

92. Shaw, Herry &

Dougles Bernet, Reading the Short Story, Harper & Brothers, New York, 1954.

93. Spearman, Diana., The Novel and Society, Routledge & Kegan Paul, London, 1966.

94. Srinivasa Iyengar, K.R.(Ed.), Indian Literature, Since Independence, Sahitya Akademt, New Delhi, 1973.

95. Stephens, John., Seven Approaches to the Novel, Harrar London, 1972.

96. Stewick, Philip, The Theory of the Novel, The Free Press, New York, 1967.

97. Subramania Aiyar, A.V.The Poetry and Philosophy of the Tamil Siddhas, S.Mahadevan, Thirunelveli, 1957.

98. Subramanian Ka.Na., The Tamil Novel - Symptoms of a Stalemate, Quest, Vol.III, No.1, Bombay, 1957.

99. Subramanian, S.V.,

Manavalan, A.A., (eds.) Dr.Mu.Va.International Institute of Tamil Studies, Madras, 1975.

100. Summers, Richard, Craft of the Short Story, Rinehart & Co., New York, 1957.

101. Tennyson, G.B., An Introduction to Drama, Holt; Rinehart & winston Inc; U.S.A., 1967.

102. Visswanathan, E.Sa., Puthumaipiththan's Contribution to Modern Tamil literature, Proceedings of the Second International Tamil Conference Seminar of Tamil Studies, Vol.2; Madras, 1971.

103. Wageknecht., (1) Cavalcade of the American Novel, Oxford & IBH Publishing Co., Delhi, 1952.

104. " (2) Cavaleade of the English Novel Holt, Rinehart and Winston, New York, 1954.

105. Watson, George, (1) The Study of Literature, Orient Longmans, London, 1969.

106. " (2) The Literary Thesis - A Guide to Research Longmans. London, 1970.

107. Matt, Ian., The Rise of the Novel, Penguin Books, Great Britain, 1967.

108. Wellek, Rene &

Austin Warren, Theory of Literature, Jonathan Cape, London, 1966.

109. Wellek, Rene, (1) Discriminations, Vikas Publications, Delhi, 1970.

110. Wellek Rene (2) Concept of Literature, (ed), Stephen G.Nicholas, Yale Univ. Press. New York, 1971.

111. West, Paul, The Modern Novel, 2 Vols. Hutchin Son & Co., London. 1967.

112. Westland, Peter., Literary Appreciation, The English University Press, London, 1966.

113. Winchester, C.T., Some Principles of Literary Criticism, London, 1950.

114. Ziolkowski, Theodore., Dimensions of the Modern Novel, Princeton University Press, New Jersey, 1969.

115. Zvelebil, Kamil V.Tamil Literature, Otto Harrassowitz. Weisbaden, 1974.

116. Modernity and Contemporaneity in Indian Literature, Indian Institute of Advanced Study, Simla, 1968.

117. Problems of Modern Indian Literature, Indian Statistical Institute, Calcutta, 1975.

3) Sociology

118. Aiyar, S.P., Modernization of Traditional Society, Macmillan India, Madras, 1972.

119. Bottomore, T.B., Sociology, Blackie & Sons. Bombay, 1975.

120. Chakravarthy, Amiya., Modern Humanism, Univ of Madras, Madras, 1968.

121. Daiches, David, Literature and Society, Victor Gellancz Ltd., London, 1938.

122. Desai, A., Social Background of Indian Nationalism, Popular Prakashan, Bombay, 1976.

123. Edwards, Michael, British India, (1772-1947), Sidgwick & Jackson, London, 1967.

124. Eliot, T.S., Notes towards the Definition of Culture Faber & Faber, London,. 1967.

125. Gandhi, M.K., (1) Sarvodaya, Navajivan Publishing House, Ahmedabad, 1969.

126. ” (2) Socialism of My Conception, Bharatiya Vidya Bhavan, Bombay, 1966.

127. Ghose, Sanker., The Renaissance to Militant Nationalism In India, Allied Publishers, Bombay, 1969.

128. Ginsberg, morris, The Psychology of Society, Methuen & Co., Great Britain, 1964.

129. Gupta, Giri Raj. (ed.) Main Currents in Indian Socioloty, Vikas Publishing House, Delhi, 1976.

130. Joad, C.E.M., (1) Introduction to Modern Philosophy, Clarendon Press, oxford, 1964.

131. ” (2) Guide to Modern Thought, Faber & Faber, London, 1968.

132. Kabir, Humayan,, The Indian Heritage, Asia Publishing House, Bombay, 1960.

133. Kuppuswamy, B., Social Change in India, Vikas Publishing House, Delhi. 1975.

134. Laugbaum, Robert., the Modern Spirit, oxford University Press, New York, 1970.

135. Laurenson, Diana & Swingewood, Alan,, The Sociology of Literature, Mac Gibbon, London, 1971.

136. Mannheim, Karl., Man and Society, Routledge & Kegan Paul, London, 1954.

137. Nehru, Jawaharlal, India's Quest, Asia Publishing House, London, 1963.

138. Powys John Cowper., The Meaning of Culture Rupa Paperback, Culcutta, 1960.

139. Prasad, Mahadeva, Social Philosphy of Mahatma Gandhi, Vishwa Vidyalaya Prakashan, Gorakpur, 1958.

140. Russell, Bertrand., (1) Marriage and Morals, George Allen & Unwin, London, 1976.

141. " (2) On Education 1976.

142. " (3) Philosophical Essays, 1968.

143. " (4) Principles of Social Philosophy 1960.

144. " (5) The Impact of Science on, Society. 1967.

145. " (6) Philosophy of Social Reconstruction, 1968.

146. Radhakamal Mukarjee, The way of Humanism, East and West, Academic Books, New Delhi, 1968.

147. Sacchidananda Murthy &

Frank Moraes (eds)., Science, Philosophy & Culture, Asia Publishing House, Bombay, 1968.

148. Sinha, Sasadhar., Social Thinking of Rabindranath Tagore, Asia Publishing House, Bombay, 1962.

149. Sorokim, Pitrim, A., (1) Sane Sex Order, Bharatiya Vidya Bhavan, Bombay, 1961.

150. " (2) The Reconstruction of Humanity, Bharatiya Vidya Bhavan, Bombay 1958.

151. Srinivas, M.N., Social Change in Modern India, Orient Longmans, Bombay, 1977.

152. Stevenson, Leslie, Seven Theories of Human Nature, Clarendon Press, Oxford, 1974.

153. Stopes, Marie, (1) Married Love, The Hogarth Press, London, 1957.

154. ” Enduring Passion, 1957.
155. ” (3) Change of Life in Men and Women, 1958.
156. ” (4) Radiant Motherhood, 1958.
157. Tagore, Rabindranath, Man, Andhra University, Waltair, 1937.
158. Thani Nayagam, Xavier., Aspects of Tamil Humanism, Univ. of Madras, Madras, 1960-61.
159. Toynbee, Arnold, J.A. Study of History, 2 vols., Abridged, Dell Publishing House, New York, 1969.
160. Varadarajan, M., ‘History of Tamil Drama’, Bharatiya Natya Sahitya, Govindas Commemoration Volume, Delhi, 1956.
161. Zecharias, H.C.E., Renascent India, George Allen & Unwin Ltd., London, 1933.

(4) Dictionaries & Encyclopaedias

162. Current Literary Terms, (ed.), A.P.scott, Macmillan London, 1971.
163. Dictionary of Literary Terms, (ed.), J.A.Cuddon, India Book Co., New Delhi, 1977.
164. Dictionary of World Literary Terms, (ed.), Joseph T.Shipley, George Allen & Unwin, London, 1970.
165. Encyclopaedia of World Literature (Cassell’s) 3 Vols., (ed.) J.Buchaman Brown, Cassell & Co., London, 1973.

5) Journals & Souvenirs

166. Indian Literature, Vol.21; No.4., Sahithya Akademi, New Delhi, 1978.
167. Journal of Tamil Studies, Nos. 7 & 12; (ed.) S.V.Subramanian, International Institute of Tamil Studies, Madras, 1975, 1977.
168. Light of Truth or Siddhanta Deepika, Vol.XIV, No.1., (ed.), V.V.Ramanan, Tiruchi, 1913.
169. Proceedings of the Third International Conference Seminar (in Tamil Studies) Paris; (eds.) X.S.Thaninayagam, Francois Gros; French Institute of Indology, Pondicherry, 1973.
170. (Dr.R.P.) Sethu Pillai Silver Jubilee Commemoration Volume, Palaniappa Brothers, Madras - 1961.
171. South Asian Review, Vol.5; No.9; U.S.A. 1972.
172. Tamil Culture, Vol.4; No.3;
Vol.10; No.2; Academy of Tamil Culture, Madras, 1956, 1963.

பிற்சேர்க்கை - 1
பேராசிரியர் மு.வரதராசனார் வாழ்க்கைக் குறிப்பு

கி.பி. 1912 ஏப்ரல் 25 (பரிதாபி ஆண்டு, சித்திரை 13), பிறப்பு.

கி.பி. 1928 பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெறுதல்.

கி.பி. 1928–30 எழுத்தராகப் பணிபுரிதல்.

கி.பி. 1931 முதன்முதல் திரு.வி.க. அவர்களைச் சந்தித்தல்.

கி.பி. 1934 வித்துவான் முதனிலைத் தேர்வில் வெற்றி பெறுதல்; தான் படித்த திருப்பத்தூர் நகராட்சிப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்குதல்.

கி.பி. 1935 பிப்ரவரியில் திருமணம்.

கி.பி. 1935 மே மாதத்தில் வித்துவான் நிறைநிலைத் தேர்வில், முதல் வகுப்பில், மாநில முதல்வராக வெற்றி பெறுதல்.

கி.பி. 1935 ஜூன் மாதத்தில் தலைமைத் தமிழாசிரியராகப் பதவியேற்றல்.

கி.பி. 1935 நவம்பர் 11ஆம் நாள், திருப்பனந்தாள் காசிமடத்தின் ரூ.1000/– பரிசினைப் பெறுதல்.

கி.பி. 1935–1938 திருப்பத்தூர் 'கிறித்து குல ஆசிரமத்தில், திருக்குறள் வகுப்பு நடத்துதல்; தீனபந்து ஆண்ட்ரூஸ் அவர்களை அந்த ஆசிரமத்தில் சந்தித்தல்.

கி.பி. 1938 பி.ஓ.எல். பட்டம் பெறுதல்.

கி.பி. 1939 சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், 'பயிற்றாசிரியராக'ப் பணிபுரியத் தொடங்குதல்.

கி.பி. 1942 பச்சையப்பன் கல்லூரியில் பி.ஓ.எல்.பட்டப்படிப்பைத் தொடங்குதல்.

கி.பி. 1943 பி.ஓ.எல். பட்டப்படிப்பை, B.O.L. (Hons.) பட்டப் படிப்பாக மாற்றுதல்.

கி.பி. 1944 பழைய பி.ஓ.எல் பட்டம் எம்.ஏ.ஆக மாற்றப்படுதல்; பேராசிரியர் எம்.ஏ. பட்டதாரியாதல்.

கி.பி. 1944 எம்.ஓ.எல் பட்டம் பெறுதல்.

கி.பி. 1945 பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் ஆதல்.

கி.பி. 1945–46 சென்னைப் பல்கலைக்கழகத்தில் மதிப்புறு இணைப்பேராசிரியராகப் (Honorary Reader) பணிபுரிதல்.

கி.பி. 1946 'செந்தாமரை' எனும் புதினம் வெளிவருதல்.

கி.பி. 1947 பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக முழுநேரப் பணிபுரிதல்.

கி.பி. 1948 பல்கலைக்கழகப் பணியை விட்டு விலகி, மீண்டும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராதல்.

கி.பி.1948 டாக்டர் பட்டம் (பிஎச்.டி) பெறுதல்.

கி.பி.1949 திருக்குறள் தெளிவுரை வெளியிடப் பெறுதல்.

கி.பி.1950 இலங்கைப் பயணம்.

கி.பி. 1953 திரு.வி.க மறைவு.

கி.பி. 1953–55 'திரு.வி.க. நினைவு நிதி' திரட்ட, தமிழகம் முழுவதிலும் சொற்பொழிவுச் சுற்றுப்பயணம் செய்தல்.

கி.பி. 1955 சென்னை, செனாய் நகரில் திரு.வி.க. பள்ளியைத் தொடங்குதல்.

கி.பி. 1957 முதல் இந்திய விடுதலைப்போரின் நூற்றாண்டு விழாவில், சென்னை அரசு 'முத்தமிழிற்காக' மூன்று கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பித்தது. 'இயற்றமிழ்'க் கலைஞருக்குரிய பாராட்டைப் பேராசிரியர் பெறுதல்.

கி.பி. 1961 சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்றல்.

கி.பி. 1962 ருஷியப் பயணம்:

'அகல் விளக்கு' எனும் புதினத்திற்குச் சாகித்திய அக்காதமி பரிசு வழங்குதல்.

கி.பி. 1965 கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளுதல்.

கி.பி. 1967 பாரத அரசு கொடுக்க முன்வந்த 'பத்மஸ்ரீ' பட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தல்.

கி.பி. 1968 சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழாவில் பாவேந்தர் பாரதிதாசனாரின் சிலையைத் திறந்து வைத்தல்.

கி.பி. 1968 கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல்.

கி.பி. 1968 தமிழக அரசின் சட்டத் தமிழாக்கக் குழுவின் தலைவராதல்.

கி.பி. 1968 முதன்முறையாக உண்டான நெஞ்சு வலியினால் துன்புறுதல்.

கி.பி. 1970 'தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு'விற்குத் தலைவராதல்.

கி.பி. 1970 பாரீசு மாநகரில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளுதல்.

கி.பி. 1971 மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்றல் சென்னையில் தொடங்கப் பெற்ற 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவன'த்தின் மதிப்புறு இயக்குநராகப் பொறுப்பேற்றல்.

கி.பி. 1972 அமெரிக்காவில் உள்ள பாஸ்டர் கல்லூரி, டி.லிட்., பட்டம் அளித்துப் பாராட்டல்.

கி.பி. 1973 எடின்பரோவில், காமன்வெல்த் துணைவேந்தர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுதல்.

கி.பி. 1974 பிப்ரவரியில், இரண்டாவது முறையாகத் துணைவேந்தர் பதவியில் அமர்த்தப்படுதல்.

கி.பி. 1974 செப்டம்பர் 29ல், நடுவண் அரசின் கல்வி அமைச்சர் பேராசிரியர் நூருல் ஆசன் அவர்களுக்கு மதுரைப் பல்கலைக்கழகம் டாக்டர் (டி.லிட்) பட்டம் அளித்துப் பாராட்டுதல்.

கி.பி. 1974 இரண்டாவது முறையாக நெஞ்சுவலி உண்டாதல்.

கி.பி. 1974 அக்டோபர் 10ல் இயற்கையெய்துதல்.

பிற்சேர்க்கை - 2
பேராசிரியர் மு.வரதராசனாரின் நூல்கள்
(கால வரன்முறை)

1939

1. குழந்தைப் பாட்டுக்கள் – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. கழகத் தமிழ் இலக்கணம் – 1 ”
3. கழகத் தமிழ் இலக்கணம் – 2 ”
4. ஷேக்ஸ்பியர் கதைகள் – 1 ”

1940

5. படியாதவர் படும்பாடு ”
6. ஷேக்ஸ்பியர் கதைகள் – 2 ”

1941

7. கழகத் தமிழ் இலக்கணம் – 3 ”

1945

8. கண்ணுடைய வாழ்வு ”

1946

9. செந்தாமரை பாரிநிலையம், சென்னை
10. ஓவச்செய்தி ”

1947

11. தமிழ் நெஞ்சம் ”
12. கள்ளோ? காவியமோ? – பாரிநிலையம், சென்னை.
13. கி.பி.2000 திரு.மா.சு.சம்பந்தன் வெளியீடு, சென்னை.
14. மொழிநூல் – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

1948

15. மணல் வீடு பாரிநிலையம், சென்னை.
16. அரசியல் அலைகள் ”
17. காந்தி அண்ணல் ”
18. அன்னைக்கு ”
19. பாவை ”
20. அறிஞர் பெர்னார்ட் ஷா ”

21. அந்த நாள் பாரிநிலையம், சென்னை.

22. விடுதலையா? ”

23. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பொதிகைப் பதிப்பகம், கடலூர்.

1949

24. அறமும் அரசியலும் பாரிநிலையம், சென்னை,

25. திருக்குறள் தெளிவுரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

26. கவிஞர் தாகூர் பாரிநிலையம், சென்னை

27. தம்பிக்கு பாரிநிலையம், சென்னை

1950

28. தங்கைக்கு பாரிநிலையம், சென்னை

29. கண்ணகி ”

30. மாதவி ”

31. யான் கண்ட இலங்கை ”

32. பழியும் பாவமும் ”

33. மலர்விழி ”

34. பெற்ற மனம் ”

1951

35. பச்சையப்பர் ”

36. மொழியின் கதை ”

1952

37. அல்லி ”

38. மனச்சான்று ”

39. இளங்கோ (நாடகம்) ”

40. எழுத்தின் கதை ”

41. சொல்லின் கதை ”

42. நெடுந்தொகை விருந்து ”

43. முல்லைத்திணை ”

44. காதல் எங்கே? ”

1953

45. நற்றிணை விருந்து ”

46. குறுந்தொகை விருந்து ”

47. இலக்கிய ஆராய்ச்சி பாரிநிலையம், சென்னை.

48. கரித்துண்டு ”

49. குறட்டை ஒலி ”

1954

50. நண்பர்க்கு ”

51. நெடுந்தொகைச் செல்வம் ”

52. குழந்தை ”

53. மொழியியல் கட்டுரைகள்–1 ”

54. மொழி வரலாறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

55. குறுந்தொகைச் செல்வம் பாரிநிலையம், சென்னை.

56. கொங்குதேர் வாழ்க்கை பாரிநிலையம், சென்னை.

57. டாக்டர் அல்லி (நாடகம்) ”

1956

58. நடைவண்டி ”

59. கல்வி ”

60. மொழிப்பற்று ”

61. நாட்டுப்பற்று ”

62. கயமை ”

63. நெஞ்சில் ஒரு முள் ”

1957

64. Treatment of Nature in S.S.S.P. Works, Sangam Literature Madras.

1958

65. நற்றிணைச் செல்வம் பாரிநிலையம், சென்னை.

66. அகல் விளக்கு ”

67. குருவிப்போர் ”

1959

68. மூன்று நாடகங்கள் ”
(1952இல் வெளியிடப்பட்ட ‘இளங்கோ’
எனும் நாடகம் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டது).

69. உலகப்பேரேடு ”

70. பெண்மை வாழ்க ”

71. இலக்கியத் திறன் ”

1960

72. இலக்கிய மரபு — பாரிநிலையம், சென்னை.

73. வாடா மலர் — ”

74. இளங்கோவடிகள் — அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

75. மண்குடிசை — பாரிநிலையம், சென்னை.

1961

76. மண்ணின் மதிப்பு — பாரிநிலையம், சென்னை.

77. திரு.வி.க. — ”

1962

78. இலக்கியக் காட்சிகள் — ”

1964

79. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (மொ.பெ) — ”

1967

80. Ilngo Adigal — Sahita Akademi Publications, New Delhi.

1968

81. குறள்காட்டும் காதலர், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு, சென்னை.

1970

82. அரசியல் தொண்டு, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை.

1971

83. உலகம் உய்ய, ”

1972

84. தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி வெளியீடு, புதுதில்லி.

1973

85. நல்வாழ்வு — பாரிநிலையம், சென்னை.

குறிப்பு

1939 முதல் 1945 வரை வெளிவந்த சிறுவர் இலக்கியம் – 8

1955இல் வெளிவந்த டி.கே.கணபதி எழுதிய டாக்டர் அல்லி எனும் நாடகம் – 1

1952இல் வெளிவந்த இளங்கோ நாடகம், பின்னர் 'மூன்று நாடகங்கள்' எனும் தொகுப்பில் சேர்க்கப்பட்டது. – 1

1970இல் வெளிவந்த 'அரசியல் தொண்டு', அறமும் அரசியலும், உலகப்பேரேடு, மண்ணின் மதிப்பு, எனும் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட கட்டுரைத்தொகுப்பு – 1

1964 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்பது ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு – 1

நீக்கத்தக்க மொத்த நூல்கள் – 12

பேராசிரியரின் மொத்த நூல்கள் – 85

நீக்கத்தக்கன – 12

சிறப்புமிகு இலக்கியப் படைப்புகள் – 73

ஆங்கில நூல்கள் – 2

தமிழில் சிறப்புமிகு இலக்கியப் படைப்புகள் – 71

பிற்சேர்க்கை 3
டாக்டர் மு.வரதராசனாரைப் பற்றிய நூல்கள்

1. அசோகன், மா., மு.வ. காட்டிய வாழ்வு, மீனா பதிப்பகம், தஞ்சை, 1976.
2. குருசாமி, ம.ரா.போ., மு.வ.முப்பால் நரேந்திர சிவம் பதிப்பகம், சென்னை, 1977.
3. சீனிவாசன், மின்னூர், நான் கண்ட மு.வ., பாரிநிலையம், சென்னை, 1974.
4. தண்டாயுதம், இரா., டாக்டர் மு.வ., தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975.
5. தண்டாயுதம், இரா., மு.வ.வின் இலக்கியங்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975.
6. திருநாவுக்கரசு, க.த., அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
7. பாலசுப்பிரமணியன், சி.பெருந்தகை மு.வ. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1976.
8. முத்துச்சண்முகம்,

   சு.வேங்கடராமன், மு.வ. நினைவுமலர், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.
9. மோகன், இரா., டாக்டர் மு.வ.வின் நாவல்கள், சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1972.
10. மேற்படி மு.வ.கலைக்களஞ்சியம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1974.
11. மேற்படி, யான் கண்ட மு.வ., சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1975.
12. மோகனரங்கன், ஆலந்தூர், கோ., வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை, வசந்தா பதிப்பகம், சென்னை, 1978.
13. விசுவாசம், மரிய (தொ.ஆ.), முயற்சியின் வழிகாட்டி மு.வ. (கவிதைத் தொகுப்பு) ஜான்சன் ராஜா பதிப்பகம், ஈரோடு, 1975.

14. வேங்கடராமன், சு.மு.வ. ஆய்வடங்கல், மதுரை பல்கலைக்கழகம், மதுரை, 1976.

15. பேராசிரியர் மு.வ.பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்கக் கட்டுரைகள், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் முதுகலை மாணவர் மன்றம், சென்னை, 1974.

16. Subramanian, S.V., Manavalan, A.A.(Eds.) Dr.Mu.Va., International Institute of Tamil Studies, Madras, 1975.

பிற்சேர்க்கை 4
புதினங்களில் இடம் பெற்றுள்ள கதைமாந்தர்

1. கதைமாந்தர் - ஆடவர்

(அ) அகல்விளக்கு

1. குழந்தைவேல்
2. சந்திரகுப்தன்
3. சந்திரன்
4. சாந்தலிங்கம்
5. சாமண்ணா
6. திருமந்திரம்
7. திருவாய்மொழி
8. பச்சைமலை
9. பொய்யாமொழி
10. மாசன்
11. மாயன்
12. விநாயகன்
13. வேலய்யன்

ஆ) அந்த நாள்

14. ஆறுமுகம்
15. நாகப்பன்
16. நீலமேகம்
17. திரு.வி.க.

இ) அல்லி

18. அலெக்சாண்டர்
19. அறவாழி
20. இளங்கோ
21. கும்பேஸ்வரர்
22. குள்ளன்
23. சிவக்கொழுந்து
24. சுப்புரத்தினம்
25. சோமசுந்தரம்
26. தங்கவேலு
27. நித்தியானந்தன்
28. மாதவராவ்
29. வடிவேலு

ஈ) கயமை

30. ஆணவர்
31. கந்தன்
32. கனகலிங்கம்
33. கிரிதரசாமி

பொருட் குறிப்பு அகராதி

1. சிறப்புப் பெயர்

அகப்பொருள் 71, 154, 163
'அகல் விளக்கு' 40, 42, 166, 174, 175, 176, 240, 263, 267
அசோகன் 218
அடியார்க்கு நல்லார் 223, 243
அண்ணா, அறிஞர் 237
'அந்தநாள்' 6–7, 60, 72–73, 96, 98, 165
அப்பர் 217
அமெரிக்கா 79
அரவிந்தர் 116
அரிஷ்டாட்டில் 64, 116
அரிஸ்தோபனீசு 129, 131
அரேலியஸ், மார்க்கஸ் 59
'அல்லி' 79, 80, 83, 95, 107, 143, 161, 162, 219
அலன்போ, எட்கர் 178
'அன்னைக்கு' 34
ஆர்வெல்சு, ஜார்ஜ் 133
ஆஷெர், 33, 38
இந்தி 70
இந்தியா 2, 25, 198
இப்சன் 221
இயேசு 2, 10
இராசாராம் மோகன்ராய் 1
இராசேந்திரன் 218, 219
இராமகிருஷ்ணர் 2, 6, 7
இராமதீர்த்தர் 5, 99, 118
இராமலிங்கர் 2, 5, 6, 20, 105
இராவணன் 91
'இலக்கிய ஆராய்ச்சி' 34, 35
'இலக்கியத் திறன்' 34
'இலக்கிய மரபு' 34

‘இளங்கோ’ 206, 217, 220
‘இளங்கோவடிகள்’ 34, 215, 216, 219, 224, 238
‘உடோபியா’ 131
‘உலகம் உய்ய’ 34
எலியட், எஸ் 14
‘எழுத்தின் கதை’ 34
ஐரோப்பியர் 3, 46
‘ஓவச்செய்தி’ 33
ஔவையார் 106
‘கண்ணகி’ 34, 238
கபிலர் 69, 71
கம்பன் 129
‘கயமை’ 59, 89, 92, 170, 171
கரிகாலன் 215
‘கரித்துண்டு’ 83, 84, 85, 89, 167, 168, 170, 171, 173
கல்கி 17, 129
‘கள்ளோ காவியமோ?’ 12, 13, 69, 71, 78, 96, 163, 170, 172, 173
கன்பூசியசு 116
காண்டேகர் 14
‘காந்தி, அண்ணல்’ 34
காந்தியம் 15, 16, 106
காந்தியடிகள் 1, 10, 10, 20, 59, 98, 116, 129, 211, 212
‘காதல் எங்கே? 207, 212, 227
காரல்மார்க்சு 21
கால்டுவெல் 4, 5
‘கி.பி. 2000’ – 15, 63, 126, 127, 129, 133, 134, 136, 215
கீதாஞ்சலி 12
குருசாமி, ம.ரா.போ. 67, 91
‘குறட்டை ஒலி’ 180, 182, 183, 197, 199
‘குறள் காட்டும் காதலர்’ 34
‘குறுந்தொகைச் செல்வம், 33
‘கொங்குதேர் வாழ்க்கை’ 33
‘சச்சிதானந்தம் வி.77

சமநிலைப் பண்பு 233
சாந்திக்கூத்து 205
சிதம்பரனார், வ.உ. 5, 20
சித்தர் 141, 142
சிலப்பதிகாரம் 76, 216, 238.
சுந்தரம்பிள்ளை, பெ. 4, 5
சுப்பிரமணிய சிவா 5, 6
செங்குட்டுவன் 215
'செந்தாமரை' 67, 68, 73, 80, 108, 164, 165
ஷேக்ஸ்பியர் 95
'சொல்லின் கதை' 34
சோசலிசம் 17, 129
டிக்கன்சு 14
'தங்கைக்கு' 33
தசரதன் மா.கி. 172
'தம்பிக்கு' 33, 238
தமிழ் 4–6, 9, 14, 16, 17, 20, 26, 33, 34, 35, 49, 51, 53, 57, 70, 76, 173, 202, 235, 239
தமிழகம் 2, 3, 8, 16, 19, 20, 27, 31, 72, 215
தமிழர் 2, 8, 15, 16, 18, 35, 216, 218, 220
தமிழினம் 16, 215, 234, 235
தமிழ்நாடு 14, 15, 16, 35, 88
'தமிழ் நெஞ்சம்' 20, 33, 219
தமிழ் முரசு 73
தனிநாயகம் 57
தாகூர் 11, 12, 34
தாயுமானவர் 6, 7, 19, 105, 112, 118
திராவிட நாடு 238
திருக்குறள் 11, 70, 99, 239
'திருக்குறள் தெளிவுரை' 10, 35
திருநாவுக்கரசர் 10, 218
திருவருட்பா 6, 7, 113
திருவள்ளுவர் 10, 11, 15, 19, 20, 59, 90, 98–100, 116, 128, 135

'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' 10, 14, 34
திருவாசகம் 6, 113
திருவாய்மொழி 5
திரு.வி.க. 8–10, 15, 19, 20, 30, 34, 53, 55, 56, 59, 97, 99, 101, 108
திலகவதியார் 217, 218, 219
தினமணி 7
தேவாரம் 6
தொல்காப்பியனார் 54, 86, 197
'நடைவண்டி' 34
'நண்பர்க்கு' 34
நபி 10
நம்மாழ்வார் 6
'நல்வாழ்வு' 34
'நற்றிணைச் செல்வம்' 34
'நற்றிணை விருந்து' 34
நனவோடை 172
நாகரத்தினம் அம்மையார், சாது 7, 9
நாகராசன், இரா.217
நாகரிகம் 70
நாடகவியல் 205
நீட்சே 75
'நெஞ்சில் ஒரு முள்' 94, 95, 98, 99, 100, 162, 169, 172, 220
'நெடுந்தொகைச் செல்வம்' 34
'நெடுந்தொகை விருந்து' 34
நெல்லையப்பர், பரலி சு.60.
பட்லர், சாமுவேல் 131
'பச்சையப்பர்' 34, 207, 208, 209, 220
பரஞ்சோதி 117, 118
'பழியும் பாவமும்' 63, 126, 135, 136
பாரதியார் 3, 4, 20, 110, 129, 130
பாரி 69
'பாவை' 58, 72, 73, 80, 160
பிளேட்டோ 116, 129

பிரகத்தன் 71
பிரதாப முதலியார் சரித்திரம் 3
பிரமசமாஜம் 2
புதுமைப்பித்தன் 20
புத்தர் 10, 116
'புலவர் கண்ணீர்' 34
'பெர்னாட்ஷா – அறிஞர்' 34
பெர்னாட்ஷா 11, 14, 52, 101, 131, 221
பெல்லாமி 129
'பெற்றமனம்' 7, 70, 78, 96, 159, 170
பேகன் 131
பேராசிரியர் 224
பொதுவுடைமை 16, 135
போதிமாதவர் 219
மகிழ்நலநோக்கு 235
'மணல்வீடு' 34
மணிமேகலை 82, 106, 217
'மண்குடிசை' 54, 58, 109, 110, 111, 112, 114, 118, 161, 162, 170, 171
'மலர்விழி' 73, 74, 80, 167, 169
'மனச்சான்று' 207, 209, 211, 213, 220, 220
மனோன்மணீயம் 4
மாணிக்கவாசகர் 177
மாதவி 34, 237
மாம், சாமர்செட் 14, 59, 76, 101, 102
மாரிசு, வில்லியம் 131
மார்க்சியம் 15, 15
மீனாட்சி சுந்தரனார், தெ.பொ.37
மூர், சர்தாமஸ் 131
'மூன்று நாடகங்கள்' 34
மேரி ஸ்டோப்ஸ் 82
'மொழியியல் கட்டுரைகள்' 34
'மொழியின் கதை' 34
'மொழி நூல்' 34

‘மொழி வரலாறு’ 34
‘மோகினித் தீவு 129
மௌன சுவாமிகள் 7, 8, 116, 118
‘யான் கண்ட இலங்கை’ 34, 181
ரத்னம், க 172
ராஜவேலு, கு.172
லாரன்சு டி.எச். 50
லோகோபகாரி 72
வ.ரா. 129
வள்ளுவர் 82
‘வாடாமலர்’ 98, 99, 107, 168, 173
வாயுறை வாழ்த்து 54
வாழ்க்கை வரலாறு 36, 38, 215, 231
விசுவநாதன் 93
‘விடுதலையா’ 178, 179, 197
விபுலாநந்தர் 205
விர்ஜீனியா உல்ப் 165
விவேகானந்தர் 6, 142
‘வீண் கனவு’ 218, 219
வீறுணர்ச்சி 91, 234
வெல்சு, எச் ஜி. 52, 109, 128, 131
வேதநாயகம் பிள்ளை 3
வையாபுரிப்பிள்ளை 3
ஷா 101
ஹக்ஸ்லி 14, 132
ஹார்டி, தாமஸ் 14
ஹெமிங்வே 14

2. கருத்து

அகவய நோக்கு 105, 226
அருளாளர் 6, 19, 23, 50, 99, 105
அவலம் 199, 199
அளவொத்திருத்தல் 234
அறம் 10, 32, 75, 75

அறவோர் 10, 30, 20
அறிவாளி 20
அறிவியல் 18
ஆராய்ச்சி 19
ஆன்மிகம் 38
இயக்கம் 206
இயற்கை 34
இலக்கியம் 34, 38, 45, 47
இலக்கியம்,
அறிவு 47
ஆற்றல் 47
கடித 16, 53, 53, 231, 235
கற்பனை 47
செம்மை 234
நீதி 239
படைப்பு 47, 48, 49, 56, 58, 223
இளைஞர் 51, 80, 81
இன்பநலம் 80
உணர்ச்சி 47
உருத்தெரியா மனிதர் 110
உரை 223
உரைநடை 36, 36, 46, 47, 51, 238
உரையாடல் 197, 220
உலகப்போர் 72, 73, 116, 179
உலகம்,
புதிய 1, 15, 118, 127, 128, 129, 130, 131, 133, 135, 218
எழுத்தாளர் 49, 237
கட்டுரை 19, 32, 36, 37, 46, 48, 54, 223, 227, 231
கதைக்கரு 66, 208, 219
கதைப்பாத்திரம் 33, 48, 69, 82, 126, 194
கதைப்பின்னல் 48, 94, 114, 204, 205
கதைமாந்தர் 162, 192, 193
கலப்புமணம் 81

கற்பனை *126–127*

கற்பு *86, 88*

காட்சி *203, 206*

கொடியவன் *115*

கொடை *238*

சமயம் *2, 7, 17, 18, 26, 29, 81*

சமவுடமை *20, 38, 150*

சமுதாயம் *13, 14, 15, 18, 25, 27, 28, 29, 29–32, 50, 52–56, 58, 70, 71, 75, 76, 80, 84, 85, 87, 88, 90, 91, 93, 96, 98, 109, 113, 126, 128, 132–134, 173, 182, 199, 199, 214, 234*

சமூகம் *4, 26, 30, 110, 212*

சாதி *19, 25, 28, 30, 72, 94, 209*

சிறுகதை *19, 33, 36, 46–48, 50, 166, 176–178, 182, 194, 202, 223*

சூழலமைவு *48, 197, 206*

தலைமுறை இடைவெளி *31, 72*

தனிமொழி, *172, 172, 220*

தீண்டாமை *2, 31*

துன்பியல் நோக்கு *233*

தேசியம் *4, 6, 8, 17, 20, 20*

தொடர்கதை *46, 59*

தொன்மம் *128*

தொன்மையம் *130*

நடப்பியல் *49*

நடுத்தர வகுப்பினர் *22, 56, 57, 75, 195*

நடைச்சித்திரம் *180*

நடைநலம் *203, 235, 236, 237, 238, 239*

நாடகம் *19, 33, 38, 45–47, 50, 83, 203, 203, 204, 206, 210, 216, 220, 239*

நாடகம்,

ஓரங்கம் *205, 206–208, 220*

சமூகம் *208*

வரலாற்று *208, 209, 210*

நாடகமாந்தர் *207*

நாவல் *51, 57, 60*

நிலமானியம் *25*
நோக்குநிலை *160–162, 163, 165, 167, 170, 195–96*
பகுத்தறிவு *26, 29*
பண்பாடு *21, 29, 30, 32, 34, 216*
பத்திரிகை *36*
பயணநூல் *231*
பழமை *18, 32, 34*
பாலியல் *81*
பின்வீச்சு *85, 89, 169, 170–171, 197, 215*
புதினம் *3, 7, 18, 19, 20, 33, 36, 38, 46, 47–48, 51, 52, 54, 55, 60*
63, 64, 64, 66, 67, 80, 82, 86, 90, 91, 95, 102, 107
159, 173, 177, 206, 223
புதினம் (கூறுகள்)
கதைக்கரு *63, 64, 73, 82, 94, 103, 126, 136*
கதைப்பின்னல் *63, 64, 66, 73, 82, 95.*
பாத்திரப்படைப்பு *48, 63, 65, 66, 69, 71, 73, 82, 93, 106, 107, 108, 114, 116, 136, 159, 194*
புதினம் (வகை)
கருத்து விளக்கம் *49, 58, 59, 89, 238*
கற்பனையுலகம், *48*
சமூகம் *48, 52, 58, 60, 72*
தீர்வாய்வு. *58*
துணிச்சல்மிகு. *48*
நிகழ்ச்சிமிகு. *48*
பொழுதுபோக்கு *49*
வரலாற்று *48, 52, 52*
புதுமை *18, 26, 27, 30*
புதுமைப்பாங்கு *28, 29, 31, 32, 37, 38, 238*
புதுமைப்போக்கு *28, 34, 93, 107*
புரட்சி *13*
புறவயம் *226*
புனைகதை *36, 46, 47, 50, 63, 110, 11, 126, 127, 128, 173, 178*
பெண்ணடிமை *2*

மரபு 18
மறுமலர்ச்சி 2–6; 16, 17, 18, 38, 19–20, 231, 238
மனித இனம் 2, 45
மனித நலம் 17, 18, 20, 31, 38, 102, 234
மனிதம் 1
மாமனிதன் 102, 116
முன் நிழலாட்டம் 85, 168–29
முன்வீச்சு 214
மெய்ம்மையம் 4, 184
மொழியியல் 38
வடிவம் 192, 203
வட்டாரமொழிகள் 2
வாழ்க்கை 34, 65, 81, 100, 108, 118
விருந்து 20, 238.

நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

1) தோற்றம் – மறைவு	20.11.1931 – 05.05.1989
2) பிறந்த ஊர்	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
3) கல்வி பள்ளிக்கல்வி	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (1943–1948), சென்னை.
4) புகுமுக வகுப்பு	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை 1949 – 1951
5) இளங்கலை (ஹானர்ஸ்) தமிழ் பின்னர் முதுகலை தமிழ்	பச்சையப்பன் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல் நிலை (1951 – 1954)
6) முதுகலை வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப் படிப்பு (1956)
7) முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	“பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்” (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)
8) மொழியியல் பெருஞ்சான்று	அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)

9) முனைவர் பட்டம்		பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1978.
10) ஆசிரியர் பணி	1.	6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959.
	2.	7 ஆண்டுகள், துணைப்பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை, 1962 – 1968
	3.	2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968 – 1969
	4)	3 ஆண்டுகள் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவர் சென்னை பல்கலைக்கழகம், 1962 – 1972.
	5)	19 ஆண்டுகள் இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியில்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தெரிந்த பிறமொழிகள்:		சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1.	சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம்
	2.	திரு.வி.க விருது 1985

ஆசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத்தில் https://www.tamil/digital/library.in புத்தகங்களைப் பார்க்கலாம் – படிக்கலாம் – பதிவிறக்கம் செய்யலாம்.

அ) வரலாற்று நூல்கள்

1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு – முதல் பகுதி – “விடிவெள்ளி”, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, சென்னை, 1975.
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப்பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு, சங்கக்காலம், பண்டை அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, The great, Madras Publications, 1984.
11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.
13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.

14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம் – வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.

15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.

17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)

19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.

20. வாழ்வும் இலக்கியமும், அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.

21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.

22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.

23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.

24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு) பாரிநிலையம், சென்னை, 1979.

25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் பாரிநிலையம், 1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை, 1984.

28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னைப் பல்கலைக்கழகம், 2001.

29. திரு.பூ.ஆலால சுந்தர செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி – 3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.

33. Histrorical Heritage of the Tamils, Vol.I.International Institute of Tamil Studies, Madras, 1988.

34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி – 1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு, கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பகுப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1972.

38. Tributes and Translations of Tirukkural, 1986.

39. Historical Heritage of the Tamils Dr.S.V.Subramaniyan & Dr.K.D. Thirunavakkarasu IITS, Tharamani, 1985.

ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம்.டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக்கழகம், சென்னை, 1965.

41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு – 3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

எ) இலக்கணம்:

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

கட்டுரைகள்

1950-51

1. பனைமரநிழலில், விவேகா, சென்னை, 1950
2. பசிப்பிணி விவேகா, சென்னை, 1951.

1952-53

3. முல்லை சிரித்து
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும்
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

கலைமன்றம், சென்னை, 1952–53

1953-54

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954.
17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954
18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி, 1954.
19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955-56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.
21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955.
22. புரட்சிக் கவிஞரின் “புரட்சிக் கவி” – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956.
23. தமிழ்த்தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956.

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்று கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகத்தில் ஒரு ஹோமர், கம்பன் மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்).

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959.

35. அறம்பிழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959.

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுஜரகள்), கலைஞன், 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணிமலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.

1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச்சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்? நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்), தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத், 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டும், 1961.

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு–1, முத்து 8 முதல் 12 வரை, 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை, 1963.

54. முருகனும் முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963 (நான்கு கட்டுரைகள்).

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி 5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964 (3 கட்டுரைகள்).

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, *1965*.
63. நெடுநல்வாடை – திறனாய்வு, தமிழ்ச்செல்வி, புதுவை, *1965*.
64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, *1965*.
65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, *1965*.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், *1966*.
67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞான சபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், *1966*.
68. இன்பம், கல்வி, சென்னை, *1966*.
69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, *1966*.
70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி *125*ஆவது விழா மலர், சென்னை, *1966*.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, *1967*.
72. சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, *1967*.
73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, *1967*.
74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, *1967*.

1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, *1968*
76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, *1968*.
77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, *1968*.
78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, *1968*.
79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை, *1968*.
80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, *1968*.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968.

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள், குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும் நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சித்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்).

96. குறளோவியம், திருவள்ளூர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி, கு.மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே.சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர், 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annal of Oriental Research), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறுள், கழகப் பொன்விழா மலர், கழகம், சென்னை–1, 1970.

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை – 7, 1970.

1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை, 1971.

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமுறை, மூன்றாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசயநகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971.

117. தமிழறிஞர் வி.கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பற்றி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

120. வள்ளுவர் கண்ட மனிதன்–1, தமிழியல் (JOTS), சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை, 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக் கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

1973

129. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

130. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழா மலர், சிதம்பரம், 1973.

131. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்க மலர், காஞ்சி, 1973.

132. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

134. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973.

135. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப.மலர், சென்னை, 1973.

136. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

137. வள்ளுவர் கண்ட மனிதன் – 2, தமிழியல், சென்னை, 1973.

138. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

139. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

140. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

1974

141. சும்மா, மலைச்சாரல், சோளிங்கபுரம், ஏப்ரல், 1974.

142. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

143. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

144. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

145. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு.பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார் நூலகம், சென்னை, 1974.

147. வரலாறும் பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

148. தாயா? தமக்கையா? ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

149. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

150. எழிலோவியம் காணவாரீர்

151. தமிழிற்கு ஓர் அரண்

152. அறிஞர் அறவாழி

153. சிலப்பதிகாரத்தின் மாண்பு

154. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1, பகுதி 1, சென்னை – 18, 1975.

1977

155. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை – *30, 1977.*

1978

156. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *4,* ஜனவரி *1978.*

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *5,* பிப்ரவரி *1978.*

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *6,* மார்ச் *1978.*

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *7,* ஏப்ரல் *1978.*

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *8,* மே *1978.*

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *9,* ஜூன் *1978.*

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *10,* ஜூலை *1978.*

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயிலை மாலை *20* மணி *11,* செப்டம்பர் *1979.*

164. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி *3,* உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – *20, 1978.*

165. நூல் அறிமுகம் – காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி – *4,* பகுதி *3,4,* சென்னை –*18, 1978.*

166. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி *10,* பகுதி *3,* இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், *1978.*

1979

167. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை *21,* மணி *11,* ஆண்டு *1979.*

168. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி *4,* உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை *20, 1979.*

169. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் *2010*–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் *42, 1979.*

1980

170. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.
171. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்
172. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.
173. மறுமலர்ச்சி
174. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.
175. தமிழ் உரைநடை
176. உவமை
177. பொற்காலம்
178. பாவியலில் கற்பனை
179. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.03.1978.
180. கல்லணையைக் கட்டியது யார்?
181. பசி
182. பகை பிறந்தெறிதல்
183. நான் கண்ட அடியாருக்கு நல்லார், தீ.க.நாராயணசாமி நாயுடு 80ஆம் ஆண்டு நிறைவுவிழா மலர்.
184. நன்னூல் உரை ஆசிரியர்கள்
185. சிறுநெறி
186. அறிவு என்பது என்ன?
187. ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம்
188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி
189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை
190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87
191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்
192. முடமோசியார் – யவனரா?
193. பழியும், பாவமும்
194. வினையின் பயன்
195. இருட்டறை
196. மதுராந்தகம்
197. குறவஞ்சி

198. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

199. வேளிர்

200. மனம்

201. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

202. தேசீயம்

203. வரலாற்றுக் காலம்

204. வள்ளலார் காட்டிய வழி

205. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

206. வேதங்கள்

207. வீரயுகப்பாடல்கள்

1988

208. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர் 1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர் 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல்1989

214. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

215. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

216. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

217. நான் கண்ட அடியார்க்கு நல்லார் தி.கி. நாராயணசாமி நாயுடு 80 ஆண்டு நிறைவு விழா மலர் 30.10.1985

218. திருநெறி

219. தமிழரின் கலைக் கோட்பாடு உ.த.ஆ. நிறுவனம் 09.02.1987

220. பழந்தமிழ்க்குடிகள், ‘முதன்மொழி” உலகத் தமிழக் கழக மாதிகை, சென்னை 16.

221. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை 4, நாள் 07.11.1971

222. A Tamil Savant From the City of Madras (08.01.1901 to 27.08.1988)

223. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

224. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் உ.த.ஆ நிறுவனம் *08.06.1977* *83*ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

225. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுக்கங்களும்

குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-74-5
9 789348 345745